141

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
(University with Potential for Excellence)
தொலைநிலைக் கல்வி இயக்கம்
www.mkudde.org



எம்.ஏ.
வரலாறு

இரண்டாம் ஆண்டு

தாள் - 6

ரஷ்ய வரலாறு

(1854 - 1964 வரை)

1069

141

தொலைநிலைக் கல்வி இயக்ககம்

முதுகலை – வரலாறு
இரண்டாமாண்டு

வ ர லா று

பகுதி – I (a)

ரஷ்ய வரலாறு
(1854 – 1964)

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை – 625 021.

பதிப்புரிமை : தொலைநிலைக் கல்வி இயக்ககம்

வரலாற்றுத்துறை அறிமுகம்

அன்புள்ள மாணவரே !

மதுரை காமராஜர் பல்கலைக்கழக தொலைநிலைக் கல்வி இயக்கத்தில் முதுகலை இரண்டாம் ஆண்டிற்கு உங்களை வரவேற்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம்.

இப்பாடத்துடன் ரஷ்ய வரலாறு (1854 - 1964) தொடங்குகிறது. கிரிமியப்போர் தொடங்கிய காலத்திலிருந்து குருசேவின் ஆட்சிக்காலம் வரையிலும் உள்ள ரஷ்ய வரலாற்றைக் கூறுவதே இப்பாடத்தின் முக்கிய நோக்கமாகும். பொருளாதாரத்துறையிலும், அரசியல் நிலையிலும் ஒரு சாதாரணப் பின்தங்கிய நாடாக இருந்த ரஷ்யா இன்று மாபெரும் வல்லரசாக - மலர்ந்திருப்பதே ஒரு விந்தையான செயல்தான். அத்தகைய வியத்தகு முன்னேற்றத்திற்கு அம்மக்களின் ஆக்கமும், ஊக்கமும், அயரா உழைப்புமே காரணமாகும். உலகின் முதல் சோஷலிச நாடான சோவியத் யூனியனிடமிருந்து இந்தியர்கள் படிக்க வேண்டிய பாடங்கள் பலவுள - குறிப்பாக வறுமையைப் போக்குவதற்கு ரஷ்யர்கள் எத்தகைய பொருளாதார வழிமுறைகளைக் கையாண்டுள்ளனர் என்பதை ஒவ்வொரு இந்தியரும் தெரிந்து கொண்டால் இந்நாட்டில் தலைவிரித்தாடும் வறுமையை ஒழிக்க முடியும். அது ஒன்றே இந்திய அரசின் முக்கியக் குறிக்கோளாக இருக்கமுடியும். அந்த வகையிலேயே நாம் இந்த ரஷ்ய வரலாற்றைப் பயில்கின்றோம்.

உங்கள் வசதிக்காக இத்தாள் முப்பது பாடங்களாக அல்லது பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதன் விளக்கமும் பகுப்பும் பின்னால் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த பாடங்களை நீங்கள் முறையாக படிப்பதோடு பரிந்துரை செய்யப்பட்ட நூற்களுள் சிலவற்றையாவது நீங்கள் படிக்க வேண்டுமென விரும்புகிறோம்.

வாழ்த்துக்கள்

வரலாற்றுத்துறை பேராசிரியர்கள்
தொலைநிலைக்கல்வி இயக்ககம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை - 625 021.

M.A. History
Second Year
Branch I (a) Syllabus
Paper VI - History of Russia, 1854 - 1964

Condition of Europe in 1854 - Nicholas I and the Crimean War - Condition of Russia during the accession of Tsar Alexander II - Reforms of Alexander II. Literary growth during the period of Tsar Alexander II - The Nihilist Movement - The Polish Crisis - The Russo - Turkish War (1877 - 1878) - Internal and External policies of Tsar Alexander III - Political and economic conditions during the period of Tsar Alexander III - Industrial Revolution during the period of Nicholas II - Russia's Far Eastern policy - Russo - Japanese War (1904 - 1905) - Social Democratic Workers Party and other parties - Revolution of 1905, its results - Revolution and Counter Revolution - The Duma - Siberion Revolution - The Fourth Duma - Foreign policy of Russia before World War I - Russia and World Wars - February Revolution 1917 - Early life of Lenin - Russian Revolution, October 1917 - The Civil War - The Rise of Soviet State - New Economic Policy - Stalin and the Five Year Plans - The Constitution of 1936 - Cult of Hero worship - Foreign policy of Russia under Stalin (1924 - 1953) - Russia and the second world war - Economic growth of Russia after 1945 - The Cold War - Khrushchev and his Domestic policy - Foreign policy under Khrushchev - Russia after Khrushchev.

Books for Reference

Andrew Rolwon Stein	—	A History of the U.S.S.R.
Basti Durytryshyn	—	A History of the Russia
Bernard Pares	—	History of Russia
Carr, E.H.	—	The Bolshevik Revolution (1917 - 1923)
Central Statistical Board of the U.S.S.R.	—	Forty years of Soviet Power
David J. Dallim	—	The New Soviet Empire
Deutsclier	—	History of Soviet Russia
Edward C. Thanden	—	Russia since 1801 - The making of a New Society.
Ivan Spector	—	Introduction to Russian History and Culture
John Gunther	—	Inside Russia To-day
Milinkov	—	A History of Russia
Molvil C. Wren	—	The Course of Russian History
Walsh	—	Russia and Soviet Union
West Wood	—	Russian History, 1812 - 1871

TSARS OF RUSSIA, 1547 - 1917



பாடப்பகுப்பு

1. 1854-ஆம் ஆண்டில் ஐரோப்பாவின் நிலை.
2. முதலாம் நிக்கோலஸும் கிருமியப் போரும்.
3. இரண்டாம் அலெக்ஸாந்தர் பட்டமேற்றபோது ரஷ்யாவின் நிலை.
4. இரண்டாம் அலெக்ஸாந்தரின் சீர்திருத்தங்கள்.
5. இரண்டாம் அலெக்ஸாந்தர் காலத்தில் இலக்கிய வளர்ச்சி.
6. நிகிலிச இயக்கம் அல்லது சூனியவாதம்.
7. போலந்துச் சிக்கல்.
8. ரஷ்ய - துருக்கியப்போர் (1877 - 1878).
9. மூன்றாம் அலெக்ஸாந்தரின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகள்.
10. ஸார் மூன்றாம் அலெக்ஸாந்தர் காலத்திய அரசியல் மற்றும் பொருளாதார நிலை.
11. இரண்டாம் நிக்கோலஸ் காலத்திய தொழிற்புரட்சி.
12. ரஷ்யாவின் தூரக்கிழக்குக் கொள்கை, ரஷ்ய - ஜப்பானியப் போர் 1904 - 05.
13. சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியும் பிறகட்சிகளும் - 1905-ஆம் ஆண்டுப் புரட்சியும் விளைவுகளும்.
14. புரட்சி எதிர்ப்புரட்சி - சட்டமன்றங்கள் Duma - ஸார் நிக்கோலஸின் சீர்திருத்தங்களும் சைபீரியப் புரட்சியும் - 4வது சட்டமன்றம்.
15. முதல் உலகப்போருக்குமுன் ரஷ்யாவின் வெளிநாட்டுக் கொள்கை.
16. முதல் உலகப்போரில் 1914 - 18 ரஷ்யாவின் பங்கு.
17. 1917-ஆம் ஆண்டின் பிப்ரவரிப் புரட்சி.
18. லெனினின் வாழ்க்கை வரலாறு.
19. 1917-இல் ஏற்பட்ட அக்டோபர் புரட்சி.
20. ரஷ்ய உள்நாட்டுப்போர்.

21. சோவியத் நாடு உருவாதலும், போர் பொதுவுடைமையும் புதிய பொருளாதாரக் கொள்கையும்.

23. ஜோசப் ஸ்டாலின் ஆட்சிக்கு வருதலும் ஐந்தாண்டுத் திட்டங்களும்.

23. 1936-ஆம் ஆண்டின் அரசியல் சட்டம் தனித்தலைவர் வழிபாட்டுக்கொள்கை.

24. ஸ்டாலினின் வெளிநாட்டுக் கொள்கை.

25. இரண்டாம் உலகப்போரில் (1939 - 45) ரஷ்யாவின் பங்கு.

26. இரண்டாம் உலகப்போருக்குப்பின் ரஷ்யாவின் பொருளாதார வளர்ச்சி.

27. கெடுபிடிப்போர் (Cold War).

28. குருசேவின் கொள்கையும், பொருளாதார வளர்ச்சியும்.

29. குருசேவின் வெளிநாட்டுக் கொள்கை.

30. குருசேவிற்குப்பின் ரஷ்யா.

1854–ஆம் ஆண்டில் ஐரோப்பாவின் நிலை

ரஷ்யாவின் புவியமைப்பு

ஆசியா ஐரோப்பாக் கண்டத்து நாடுகள் அனைத்திலும் மிகப்பெரியது ரஷ்யாவேயாகும். 8,600,870 சதுர மைல்கள் தீரமுடையது இந்நாடு. உலகப் பரப்பளவில் ஆறில் ஒரு பகுதியினைத் தன்னகத்தே அடக்கியுள்ளது. வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, சீனா, இந்தியா போன்ற நாடுகளைக் காட்டிலும் பல மடங்குப் பரந்து விரிந்துள்ள ரஷ்ய நாட்டில் 26,700 மைல் நீளம் கடற்கரைப்பகுதிகள் உள்ளன. ஐரோப்பாவில் 42 விழுக்காட்டுப் பகுதியையும், ஆசியாவில் 43 விழுக்காட்டுப் பகுதியையும் தன்னகத்தே கொண்டுள்ள ரஷ்யாவின் எல்லை நார்வே, பின்லாந்து, போலந்து, செக்கோஸ்லோவாக்கியா, ஹங்கேரி, ருமேனியா, துருக்கி, ஈரான், ஆப்கானிஸ்தான், சீனா, மங்கோலியா, வடகொரியா ஆகிய நாடுகளைத் தொட்டிருக் கின்றது. பன்னிரண்டு கடல்கள் இதன் கடற்கரையைத் தழுவுகின்றன. ரஷ்யாவையும் அமெரிக்காவையும் பிரிக்கும் பேரிங் நீர்வழி இங்குதான் அமைந்துள்ளது. இதன் காடுகளின் பரப்பளவு அமெரிக்காவின் மொத்த நிலப்பரப்பிற்குச் சமமாகும் என்று சொல்லப்படுகிறது. ரஷ்யாவின் கிழக்குப் பகுதியில் சூரியன் மறையத் தொடங்கும்போது மேற்குப் பகுதியில் அது உதிக்கத் தொடங்கும் என்று கூறப்படுகின்றது.

கிரிமியப் போர் மூளும் நிலையில் ஐரோப்பாவின் நிலை

பிரான்ஸ்

கிரிமியப் போர் மூள்வதற்கு மூலகாரணமாக விளங்கிய மூன்றாம் நெப்போலியன் (1852 - 1870) 1852-ஆம் ஆண்டுப் பிரான்சின் பேரரசரானார். 18-ஆண்டுகள் பிரான்சில் பேரரசராக ஆட்சி நடத்திய மூன்றாம் நெப்போலியன் தன் பெயரிலுள்ள கவர்ச்சியை நன்றாகப் பயன்படுத்தி ஐரோப்பிய மன்னர்களிடையே ஒரு மாபெரும் சக்தியாகத் திகழ்ந்தார். அவரது ஆட்சி மக்களது நன்மையைக் கோரும் சர்வாதிகார ஆட்சியாக இருந்தது. அவரது ஆட்சிக்காலத்தில் நாட்டில் பொருளாதார நிலை உயர்ந்தது, வங்கித் தொழில் உயர்நிலை அடைந்தது. வாணிபத்திலும் நாடு உயர்நிலை அடைந்தது. தடையிலா வாணிபத்தில் (Free Trade) நம்பிக்கை கொண்ட பேரரசர் இறக்குமதி வரிகளைக் குறைத்து அந்நியப் பொருட்கள் பிரெஞ்சுச் சந்தைகளில் தாராளமாகக் கிடைக்கும்படிச் செய்தார். பிரிட்டனோடும் வேறு பல நாடுகளோடும் வியாபார ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன. 'பாரீஸ் நகரம் ஐரோப்பாவின் அரசியல் விற்பன்னர்கள் கூடும் இடமாகக் காட்சியளித்தது'. பாரீஸ் நகரில் அனைத்துலகக் கண்காட்சி ஒன்று நடைபெற்றதன் காரணமாக பல்லாயிரக்கணக்கான வெளிநாட்டவர் பாரிஸுக்கு வருகை தந்தனர்.

வரலாற்றில் முதலாம் நெப்போலியன் அடைந்த இடத்தைத் தானும் அடைய வேண்டும் என்ற நோக்கில் அவர் பல போர்களில் ஈடுபடலானார். அல்ஜீரியாவைப் பிரான்சோடு சேர்த்துக் கொண்ட மூன்றாம் நெப்போலியன், 1851-ஆம் ஆண்டு இந்தோசீனாவையும் கைப்பற்றினார். இந்நிலையில் 1853-ஆம் ஆண்டு ஐரோப்பாவின் நோயாளியான துருக்கியப் பேரரசை ரஷ்யா, இங்கிலாந்து, ஆஸ்திரியா ஆகிய மூன்று நாடுகளும் கூட்டாகப் பகிர்ந்து கொள்ளலாம் என்று ரஷ்ய மன்னர் முதலாம் நிக்கோலஸ் அறிவித்தார். இது பிரான்சுக்குப் பேரதிர்ச்சியை அளித்தது. பிரான்சுக்கும் ரஷ்யாவுக்குமிடையே நீண்ட நாள் பகை இருந்து வந்தது. அதனைத் துரிதப்படுத்தும் அளவில் மேலும் ஒரு சம்பவம் நடந்தது.

பாலஸ்தீனத்திலிருந்த புனிதத் தலங்களை 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை கத்தோலிக்கர்கள் நிருவகித்து வந்தனர். அவற்றினை அவர்கள் சரிவர நிருவகிக்காததால் துருக்கியச் சுல்தான் கிரேக்க வைதீகத் திருச்சபையிடம் அப்பொறுப்பினை ஒப்படைத்தார். அப்பொறுப்பு மீண்டும் தங்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று கத்தோலிக்கத் துறவிகள் வற்புறுத்தி வந்தனர். மூன்றாம் நெப்போலியனும் கத்தோலிக்கர்கட்கு ஆதரவு அளிக்கமுன்வந்தார். மூன்றாம் நெப்போலியன், துருக்கியிலிருந்த பிரிட்டிஷ் தூதுவர் ரெட்கிளிப் ஆகியோரின் தூண்டுதலின் பேரில், துருக்கிய சுல்தான் ரஷ்யாவை எதிர்க்கத் தலைப்பட்டார். குட்சுக் கெய்னார்ட்ஜி உடன்படிக்கையின்படி துருக்கியிலிருந்த கிறித்துவ மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் உரிமைகளைப் பெற்றிருந்த ரஷியா 1853ஆம் ஆண்டு தன் படைகளை அனுப்பி ருமேனிய மாநிலங்களைக் கைப்பற்றியது. உடனே இங்கிலாந்து, பிரான்சு, ஆஸ்திரியா ஆகிய மூன்று நாடுகளும் வியன்னாவில் கலந்து பேசி ரஷ்யப் படைகள் ருமேனியாவை விட்டு உடனடியாக விலக வேண்டும் என்றும், அதன் பின்னரே சுல்தான் தம் கிறித்துவ மக்களுக்கு உரிமைகள் அளிப்பது பற்றி முடிவு எடுப்பார் என்றும் ஒரு கடிதத்தை அனுப்பின. ரஷ்யா இக்கடிதத்தை ஏற்றுக் கொண்டது. ஆனால், பிரிட்டிஷ் தூதரின் ரகசிய ஆலோசனையை ஏற்ற துருக்கி இவ்வேற்பாட்டை மறுத்து '1853-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் ரஷ்யா மீது போர் தொடுத்தது. துருக்கிக்கு ஆதரவாகப் பிரிட்டிஷ், பிரான்ஸ் போர்க் கப்பல்கள் பழைய உடன்படிக்கையொன்றை மீறி டார்டனல்ஸ் ஜலசந்தியில் புகுந்து போரிடச் சித்தமாயின. எனவே, கிரிமியப் போர் மூண்டது.

ரஷ்யா

கிரிமியப் போர் மூளும் தருவாயில் ரஷ்யாவின் மன்னராக முதலாம் நிக்கோலஸ் (1825-1855) ஆட்சிபுரிந்து வந்தார். இவரது வெளிநாட்டுக் கொள்கையின் முதுகெலும்பாக இருந்த பிரச்சினை கீழ்த்திசைப் பிரச்சினையாகும். ஐரோப்பாவில் துருக்கியர் படிப்படியாக விட்டுச் சென்ற இடங்களை நிரப்புவதற்கு ஐரோப்பிய அரசுகளிடையே ஏற்பட்ட நெருக்கடியே கீழ்த்திசைப் பிரச்சினை. இப்பிரச்சினைக்கு மூன்று காரணங்கள் அடிப்படையாக அமைந்தன. அவை முறையே (1) துருக்கியப் பேரரசு காலப்போக்கில் தனது வலிமையை இழந்தது. (2) பால்கன் தீபகற்பப் பகுதிகளில் நாட்டுப் பற்று மிக்க கிறித்தவ சமயத்தைச் சார்ந்தோர் ஆங்காங்கே வலிமை பெறத் தொடங்கியிருந்தனர். (3) ஐரோப்பிய வல்லரசுகள் கடைப்பிடித்த வெளிநாட்டுக் கொள்கையின் விளைவுகள்

முதலியன. பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து ரஷ்யா தனது ஆதிக்க எல்லையைக் கருங்கடல் பகுதியில் விஸ்தரிக்க விரும்பியது. அதேசமயம் இங்கிலாந்தும் மத்திய தரைக் கடலுக்குக் கிழக்கே தனது வணிக வளர்ச்சியை நிலை நிறுத்திக் கொள்ள விழைந்தது.. இத்தகைய சூழ்நிலையில் தான் பால்கன் பகுதி மக்கள் கிளர்ச்சி செய்த போது தங்களது வலிமையை நிலைநாட்டிக் கொள்ள விரும்பிய வல்லரசுகளும் அவற்றில் தலையிடலாயின. துருக்கியின் மேலாட்சியிலிருந்த பால்கன் மக்கள் விடுதலை பெறக் கிளர்ந்தெழுந்த போது படுகொலையின் மூலம் அவற்றை அடக்கத் துருக்கி துணிந்தது. துருக்கியின் நிலைமை மேலும் மோசமான போது, அதனைத் தொடர்ந்து அங்கு வன்முறைகளும் அதிகரிக்கலாயின.

செர்பியா

துருக்கியின் பிடியிலிருந்து விடுபட விழைந்த முதல் நாடு செர்பியாவாகும். 1804-ஆம் ஆண்டு செர்பியர்கள் காரா ஜார்ஜ் என்பாரின் தலைமையில் ஒன்றுகூடி துருக்கியரை எதிர்த்தனர். 1812-வரை செர்பியர்களுக்கு ஆதரவாக ரஷ்யா இருந்து வந்தது. ஆனால், முதலாம் நெப்போலியன் ரஷ்யாவைத் தாக்கவே ரஷ்யா துருக்கியோடு உடன்படிக்கை செய்துகொண்டது. 1812-ஆம் ஆண்டின் ரஷ்ய துருக்கிய உடன்பாட்டின்படி செர்பியாவுக்குச் சுயாட்சி வழங்க சுல்தான் ஒப்புக்கொண்டார். ஆனால், அது நடைமுறைக்கு வரவில்லை. விடுதலை வீரரான காரா ஜார்ஜ் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து 1815ஆம் ஆண்டு மிலோஸ் ஆப்ரினோவிச் என்பாரின் தலைமையில் செர்பியர்கள் மீண்டும் போர்க்கொடி உயர்த்தினர். 1820-இல் துருக்கிய சுல்தான், மிலோஸ் ஆப்ரினோவிச்சை "செர்பியர்களின் இளவரசன்" என்று கூறினார். 1830-க்கு பிறகு செர்பிய — துருக்கி உறவு பெயரளவு தான் இருந்தது. செர்பியா, ஆப்ரினோவிச் குடும்பத்தினரால் பரம்பரை உரிமையுடன் ஆளப்பட்டது.

கிரீஸ்

செர்பியர்களைத் தொடர்ந்து 1821-ஆம் ஆண்டு கிரேக்கர்கள் துருக்கியருக்கு எதிராகக் கலகம் செய்தனர். அதன் ஒப்பற்ற தலைவராக அலெக்சாண்டர் இப்சிலாண்டி திகழ்ந்தார். துருக்கியின் எதிரியாகவும் நசுக்கப்பட்ட தேசியவாதிகளின் ஆதரவாளராயும் கிறித்துவ சமயத்தின் பாதுகாவலராகவும் திகழ்ந்த ரஷ்யா தனக்கு உதவக்கூடும் என கிரேக்கத் தலைவர் கருதினார். ஆனால் ரஷ்யாவின் ஸார் முதலாம் நிக்கோலஸ் மெட்டர்னிக்கின் செல்வாக்கில் ஊறித்திளைத்திருந்ததால் கிரீசுக்கு உதவ மறுத்து விட்டார். ஆனால், இங்கிலாந்தின் புதிய அயல்நாட்டு அமைச்சரான கானிங்பிரபு கிரீஸின் விடுதலைக்கு ஐரோப்பா உதவ வேண்டும் என்று விரும்பினார். முதலாம் நிக்கோலஸ் கிழக்கில் முன்னேறும் பரம்பரைக் கொள்கையை ஆதரித்தார். எனவே, பல்வேறு காரணங்களின் பொருட்டு கிரீஸ் விவகாரத்தில் ஐரோப்பிய அரசுகள் கூட்டு நடவடிக்கை எடுக்க முற்பட்டன. இங்கிலாந்து, பிரான்சு, ரஷ்யா ஆகிய நாடுகளின் கடற்படை நவாரினோ வளைகுடாவை முற்றுகையிட்டுத் துருக்கிய எகிப்து கடற்படைகளை 1827-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முறியடித்தது. 1829-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் எட்ரியா நொபிள் உடன்படிக்கை ஏற்பட்டது. இதன்படி கிரீஸின் விடுதலையை துருக்கி ஏற்றது. பவேரிமன்னரின் இரண்டாம் புதல்வரான ஆட்சோவிற்கு கிரேக்க முடி வழங்கப்பட்டது. அவர் 1833-ஆம் ஆண்டு முடிசூடினார்.

ஜெர்மனி

கிரிமியப் போர் மூள்வதற்கு ஆறு ஆண்டுகட்கு முன்னர் வெடித்த 1848ஆம் ஆண்டின் பிப்ரவரிப் புரட்சி ஜெர்மனியிலும் பரவியது. ஜெர்மனியின் ஒவ்வொரு பகுதியும் இதில் பாதிக்கப்பட்டது. பிரஷ்ய மன்னர் நான்காம் பிரடரிக் வில்லியம் தம் மக்கட்கு ஓர் அரசியல் அமைப்பை அளித்தார் 1848-ஆம் ஆண்டில் பிராங்பர்ட்டில் ஒரு தேசிய மன்றம் கூடியது. இதில் அனைத்து ஜெர்மானிய நாடுகளும் அங்கம் வகித்தன. பிராங்பர்ட் பாராளுமன்றத்தில் துவக்கத்தில் 200 உறுப்பினர்கள் இருந்தனர். ஆனால், படிப்படியாக 550 ஆக உயர்ந்தது. பேராசிரியர்களும், பத்திரிகையாளர்களும் இதில் அதிகம் அங்கம் வகித்தனர். 1848 கிறிஸ்துமஸ் நேரத்தில் ஜெர்மன் மக்களின் அடிப்படை உரிமைகள் வரையறுக்கப்பட்டு ஏற்கப்பட்டது. மக்கள் முக்கியமாக சிவில், சமய உரிமைகள் பத்திரிகை சுதந்திரம் பெற்றனர். சிலர் மட்டும் அனுபவித்த சிறப்புரிமை மறுக்கப்பட்டது.

ஆஸ்திரியா

பால்கன் பிரச்சினையைப் பொறுத்த அளவில் ஆஸ்திரியா 1853-ஆம் ஆண்டு வரையிலும் நடுநிலையை வகித்து வந்தது. 1849ஆம் ஆண்டில் ஹங்கேரியில் மூண்ட கலகத்தை ஆஸ்திரியாவிற்கு ஆதரவாக ரஷ்யா ஒடுக்கியது, எனவே, பால்கன் பிரச்சினையில் தன்னை ஆஸ்திரியா ஆதரிக்கும் என்று ரஷ்யா நம்பியது. ஆனால் ஆஸ்திரியாவோ ஒரு 'கண்ணியமான தரகனாகவே' இருக்க விரும்பியது. இதன் மூலம் ஆஸ்திரியா ஐரோப்பாவில் பெரும்போர் எழுவதைத் தடுக்க இயலும் என்று கருதியது. இவ்வடிப்படையிலேயே ஆஸ்திரிய சான்ஸலர் கவுண்ட்பீயூயல், கிரேட் பிரிட்டன், பிரான்சு, ஆஸ்திரியா, பிரஷியா ஆகிய நாடுகள் அடங்கிய மாநாடு ஒன்றை வியன்னாவில் நடத்தினார். இம்மாநாடு குட்சுக்கயினார்ஜி உடன்படிக்கையை அங்கீகரித்தது. ஆனால், துருக்கிய சுல்தான் இதனை ஏற்க மறுத்துவிட்டார். இந்நிலையில் ரஷ்யாவுக்கும் துருக்கிக்கும் இடையே போர் நடைபெறுவது தவிர்க்க முடியாதவொன்றாயிற்று. இருப்பினும் பிரஷியாவும் ஆஸ்திரியாவும் இறுதி முயற்சி ஒன்று எடுத்தன. மீண்டும் ஒரு வியன்னா குறிப்பை அவை துருக்கிக்கு அனுப்பின. ஆனால், துரதிருஷ்டவசமாக இதற்குள் பிரிட்டிஷ் கடற்படைகளும் டார்டனல்ஸ் நீர் வழியைக் கடந்து வந்துவிட்டன. ரஷ்யா இதனைப் பிரிட்டனும், பிரான்சும் தன்மீது தொடுத்த போர்க்கணை என்று கருதியது.

இத்தாலி

1815-ஆம் ஆண்டில் நடந்த வியன்னா மாநாட்டில் இத்தாலி ஐரோப்பிய நாடுகளிடையே துண்டாடப்பட்டது. அம்மக்களிடையே தேசிய உணர்வு எழாத அளவிற்கு மெட்டர்னிக் ஏற்பாடு செய்திருந்தார். எடுத்துக்காட்டாக லம்பார்டி, வெனீஷியா ஆகிய பகுதிகள் ஆஸ்திரியாவுக்கும், பார்மா, மொடேனா, டஸ்கனி ஆகிய பகுதிகள் ஆஸ்திரிய இளவரசர்களுக்கும் கொடுக்கப்பட்டிருந்தன. இத்தாலிய மண்ணிலிருந்து வெளிநாட்டாரை குறிப்பாக ஆஸ்திரியாவை வெளியேற்ற பிறநாடுகளின் உதவி தேவை என்பதை உணர்ந்த கவுண்ட் கவூர், கிரிமியப்போரில் பங்கேற்று அத்துடன் பிரான்ஸின் மூன்றாம் நெப்போலியன் பிரிட்டன் ஆகிய நாடுகளின் ஆதரவையும்

பெற்றார். கிரிமியப்போரில் ரஷ்யா தோற்கடிக்கப்பட்ட பின்னர் நடந்த பாரிஸ் மாநாட்டில் (1856) கலந்து கொண்ட கவுண்ட் கவூர் இத்தாலிய ஐக்கியத்தைப் பற்றி வீரமுழக்கமிட்டார். இந்த வகையில் கிரிமியப் போர் 1870-ஆம் ஆண்டு இத்தாலி ஐக்கியமடைவதற்கு வழி வகுத்தது.

போலந்து

18-ஆம் நூற்றாண்டில் உருத்தெரியாமல் சிதைக்கப்பட்ட போலந்து, வியன்னா மாநாட்டால் புத்துயிர் பெறலாயிற்று. ரஷ்ய மன்னரின் கீழ் சிறிதளவு உரிமை பெற்ற நாடாகப் போலந்து திகழ்ந்தது. ஆனால் முழுஉரிமை பெறப் போலந்து மக்கள் புரட்சி செய்தனர். தீவிரப்புரட்சிக்குப்பின் போலந்து மக்கள் ரஷ்யாவின் ஆதிக்கத்தை உதறி எறிந்து விட்டு வார்சாவில் புதிய அரசை அமைத்தார்கள். ஆனால், சர்வாதிகார மனப்போக்குக் கொண்ட ரஷ்ய மன்னர் முதலாம் நிக்கோலஸ் தம் படைபலத்தால் போலந்துப் புரட்சியை நசுக்கிப் புதிய அரசைக் கலைத்தார். தேசியத்தை இழந்த போலந்து ரஷ்யாவின் ஒரு மாகாணமாக மாற்றப்பட்டது. ரஷ்ய மொழியும் ரஷ்ய ஆட்சியும் போலந்தின் மீது திணிக்கப்பட்டன.

பயிற்சி வினாக்கள்

1) ஐரோப்பாவில் கிரிமியப் போர் 1853-56 மூளும் நிலையிலிருந்த அரசியல் சூழ்நிலையைச் சுருக்கி வரைக.

2) கிரிமியப்போர் 1853-56 ஏற்படும்போது இருந்த ஐரோப்பிய சூழ்நிலைபற்றி விவரி.

பாடம் – 2 முதலாம் நிக்கோலஸும் (1825–55) கிரிமியப் போரும் (1853–56)

முதலாம் நிக்கோலஸ், பேரரசர் முதலாம் பால் என்பவருக்கும் அவர் மனைவி மரியா ஸடோரோவ்னா என்பவருக்கும் எட்டாவது குழந்தையாகப் பிறந்தார். இவர் ஐந்து வயதினராக இருக்கும்போது இவர் தந்தை கொலை செய்யப்பட்டார். எனவே இவருடைய மூத்த சகோதரன் முதலாம் அலெக்ஸாந்தர் பட்டமெய்தினார். இவர் இராணுவப் பயிற்சியில் அதிக நாட்டமுள்ளவர். 1814இல், நெப்போலியப் போரின் முடிவில் பிரான்சில் இருந்த ரஷ்ய இராணுவத்துடன் இருந்தார். 1816ஆம் ஆண்டு மாஸ்கோ, ரஷ்யாவின் மேற்கு மாநிலங்கள் மற்றும் பிரஸ்ஸியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். 1817ஆம் ஆண்டு இவர் பிரஷ்ய அரசரான மூன்றாம் பிரடெரிக் வில்லியத்தின் மகளைத் திருமணம் செய்தார். அதுமுதல் பிரஷ்ய, ரஷ்ய உறவு வலுப்பெற்றது. இவர் பட்டம் ஏற்பதற்கு முன்னர் கண்டிப்பான இராணுவ அதிகாரியாக இருந்தார்.

முதலாம் அலெக்ஸாந்தருக்கு குழந்தையில்லை. ஆகவே அவருடைய தம்பியும், முதலாம் நிக்கோலஸின் அண்ணனுமாகிய கான்ஸ்டான்டைன் என்பவர் அரசபதவிக்கு உரியவரானார். ஆனால் 1820இல் போலந்தில் தான் இருக்கும் போது இரகசியமாக தாம் ரஷ்ய அரசுரிமையை ஏற்றுக் கொள்வதில்லை எனப் பிரகடனம் செய்திருந்தார். முதலாம் அலெக்ஸாந்தர் 1825இல் இறந்தபோது, கான்ஸ்டான்டைனின் இரகசிய அறிவிப்பை தெரியாமலேயே, முதலாம் நிக்கோலஸ், கான்ஸ்டான்டைன்தான் ரஷ்யாவின் ஸார் என அறிவித்தார். கான்ஸ்டான்டைன் வெளிப்படையாக அறிவிப்பு செய்யாதிருந்தும் தான் பதவியையேற்க தயங்கினார். ஏனெனில் அவர் படைத்துறையில் காட்டிய கண்டிப்பின் காரணமாக எதிர்ப்புகள்வரும் என அஞ்சினார். இந்நிலையில் மூன்று வாரங்கள் கழிந்தன. நிக்கோலஸ் மீது அதிருப்தியுற்ற இராணுவ வீரர்கள் சதியில் இறங்கினர். கான்ஸ்டன்டைன்தான் ஸார் என்று உறுதிமொழி எடுத்தவர்கள் மீண்டும் நிக்கோலஸ் தான் ஸார் என்று உறுதிமொழி எடுக்க மறுத்தனர். பீட்டர்ஸ்பர்க்கில் இருந்த மாஸ்கோ பட்டாளம் 1825-இல் கான்ஸ்டன்டைனும், அரசியலமைப்பும் வேண்டும் என்று குரல் கொடுத்தது. ஆனால் ரஷ்ய மக்கள் மிகவும் அறியாமையில் மூழ்கி இருந்த காரணத்தால் கான்ஸ்டன்டைனின் மனைவியே அரசியலமைப்பு என்று கருதினர். இப்புரட்சியை நிக்கோலஸ் சமாதான முறையில் சமாளிக்க முடியாத காரணத்தால், துப்பாக்கியால் சுட உத்தரவிட்டார். இவ்வாறு படை கொண்டு புரட்சியை கடுமையான முறையில் அடக்கிய பின்னர் 1825ஆம் ஆண்டு டிசம்பர் 14ஆம் தேதி ரஷ்யாவின் அரசர் என முடிசூட்டிக்கொண்டார். நிக்கோலஸ் இறைமையில் அதிக நம்பிக்கையுடையவர். மன்னருக்கு மக்கள் கட்டுப்பட்டு இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தார். நிக்கோலஸ் முப்பது ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். தம் ஆட்சி காலத்தில் நாட்டில் தாராள கொள்கைகள் பரவாமல் இருக்க எல்லாவிதத்திலும் கடும் நடவடிக்கைகள் மேற்கொண்டார்.

முதலாம் நிக்கோலஸின் உள்நாட்டுக் கொள்கை

முதலாம் அலெக்ஸாந்தர் காலத்தில் முடிக்கப்படாத பல திட்டங்களை சீர்செய்யவும், இன்னும் பல சீர்திருத்தங்களை மேற்கொள்ளவும் பல குழுக்களை அமைத்தார். ஆனால் இக்குழுக்கள் கொடுத்த சிபாரிசுகள் ஐரோப்பாவில் 1830ஆம் ஆண்டு ஏற்பட்ட புரட்சியால் செயலிழந்தன. ஆகவே நிக்கோலஸ் ஆட்சியில் தூய்மையையும், திறமையையும் உருவாக்க இராணுவ கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்தார். பெரும்பாலும் படைத்தலைவர்களே அமைச்சர்களாக விளங்கினார்கள். சமயத்துறைக்கும் ராணுவ அதிகாரியே தலைவராவார். அரசு ஊழியர்கள், மாணவர்கள், பேராசிரியர்கள் ஆகியோரை சீருடை அணிய வேண்டும் என்று கட்டாயப் படுத்தினர். இவர்கள் சிறு தவறுகள் செய்தாலும் தண்டனை வழங்கினார். பல்கலைக் கழகங்களுக்கு தன்னாட்சி உரிமை ஓரளவு வழங்கியிருந்தாலும், பேராசிரியர் மாணவர்கள் ஆகியோர்களின் கருத்துக்கள் தணிக்கை செய்யப்பட்டன. வெளி நாடுகளில் பரவியிருந்த புரட்சி ரஷ்யாவில் ஊடுருவாமல் தடுக்க அனைத்து நடவடிக்கையும் எடுத்தார். தலைமை போலீஸ் அதிகாரி எவரையேனும் விசாரணையின்றி கைது செய்து சிறையில் அடைக்கவோ நாடு கடத்தவோ அதிகாரம் பெற்றிருந்தார். ரஷ்ய மாணவர்கள் ஐரோப்பாவிற்கு பயணம் செல்லவோ, கல்வி கற்கவோ செல்ல அனுமதிக்கப்படவில்லை. வெளிநாட்டு பத்திரிகைகளுக்கு ரஷ்யாவில் தடை விதிக்கப்பட்டிருந்தது. ரஷ்ய உளவுத்துறை ஒன்று உருவாக்கப்பட்டு நாட்டை ரஷ்ய மயமாக்க எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. வைதீகக் கிறிஸ்துவத்தையும், அரசரின் வல்லாட்சித்தன்மையையும் நிலைநிறுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. இவருடைய ஆட்சி அதிகாரிகளின் ஆட்சியாக விளங்கினாலும், அதிகாரங்களை பகிர்ந்தளிக்க மன்னர் முன்வரவில்லை. இவருடைய அரசியலமைப்பு சக்தி வாய்ந்தது, வேலைத் திறன் போற்றத்தக்கது. தினமும் எட்டு மணி முதல் ஒன்பது மணிவரை அரசாங்க பணிகளைக் கவனித்து வந்தார்.

முதலாம் நிக்கோலஸின் வெளிநாட்டுக் கொள்கை

தன்னுடைய ஆட்சிக் காலம் முழுவதும் ரஷ்யாவை கட்டுப்பாடுள்ள நாடாக ஆக்க முயற்சிகள் எடுத்தார். கட்டுப்பாடடைந்த ரஷ்யாவைக்கொண்டு உலகை ஒரு கட்டுப்பாடுடைய உலகமாக ஆக்க எண்ணினார். மேலைநாடுகளைப் பொறுத்தமட்டில் நியாயமான வல்லாட்சியைக் (Lagitimacy and Autocracy) காத்து புரட்சியை அடக்க விரும்பினார். கீழைநாடுகளைப் பொறுத்த மட்டில், ஐரோப்பிய நாடுகளின் ஆதரவைப் பெற்றோ பெறாமலோ கிரேக்க வைதீக கிறிஸ்துவத்தை, அழிந்து கொண்டிருக்கும் துருக்கியைப் பயன்படுத்திப் பரப்ப வேண்டும் என விரும்பினார். கிரேக்க வைதீக கிறிஸ்துவ மக்களைக் காக்கும் பொருட்டு, கிரேக்க விடுதலைப் போரில் துருக்கியர்களுக்கு எதிராக இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாடுகளுடன் சேர்ந்து கொண்டு துருக்கி, எகிப்து ஆகிய இரு நாடுகளின் படைகளை நவரினோ (Navarino) என்னும் இடத்தில் 1828-இல் நடந்த கடற்படை போரில் முழுதுமாக தோற்கடித்தார். 1828-இல் நடைபெற்ற ரஷ்ய - துருக்கியப் போரில் துருக்கியைத் தோற்கடித்து 1829 ஏட்ரியோனோப்பிள் உடன்படிக்கையைச் செய்து கொண்டார். அதன்படி கிரேக்க நாடு விடுதலை பெற்றது. ஆனால் ஆண்டுக்கு ஒரு சிறு தொகை கப்பம் கட்டவேண்டியதிருந்தது.

ஏட்ரியோனோப்பில் உடன்படிக்கையால் ரஷ்யாவின் செல்வாக்கு ஓங்கி விடும் என்று கருதி இங்கிலாந்து 1832ஆம் ஆண்டு இலண்டன் மாநாடு ஒன்றைக் கூட்டி, கிரேக்க நாட்டின் முழு சுதந்திரத்தை அங்கீகரித்தது. இந்த மாநாட்டில் ரஷ்யா கலந்து கொள்ளவில்லை.

கீழை நாடுகள் பிரச்சினை குறித்து இங்கிலாந்தும், ரஷ்யாவும் கிறிஸ்துவ மக்களைக் காக்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தாலும் இங்கிலாந்து, இப்பகுதியில் ரஷ்யாவின் செல்வாக்கு ஓங்கிவிடக்கூடாது என்றும் ரஷ்யா, இங்கிலாந்தின் செல்வாக்கு ஓங்கிவிடக்கூடாது என்றும் எண்ணம் கொண்டிருந்தன. இதன் அடிப்படையில்தான் ரஷ்யா துருக்கியச் சுல்தானுக்கும், இங்கிலாந்து எகிப்தின் முகமது அலிக்கும் உதவின. துருக்கிக்கும் ரஷ்யாவிற்கும் இடையில் இவ்வேளையில் 1833-இல் உன்கியார் கெலிசி (Unkiar Skelessi) உடன்படிக்கை ஏற்பட்டது. டார்டனல்ஸ், ரஷ்ய கடற்படைக்கு மட்டும் திறந்து விடப்பட்டது. பிற நாட்டு கடற்படைகளுக்கு டார்டனல்ஸ் வழி மறுக்கப்பட்டது. இதனால் கருங்கடல் பகுதி ரஷ்யாவின் செல்வாக்கிற்குள் வந்தது. இதன் மூலம் மத்திய தரைக் கடலுக்குள் செல்லவும் ரஷ்யாவிற்கு வழி ஏற்பட்டது. 1840-இல் ரஷ்யா, பிரிட்டன், ஆஸ்திரியா, பிரஸ்யா ஆகிய நாடுகள் ஒன்று சேர்ந்து துருக்கிய நலனை காக்க வேண்டியதின் முக்கியத்துவத்தையும் அதனை பேணி காக்க வேண்டியதன் அவசியத்தையும் உணர்ந்தன. எனவே நான்கு நாடுகளும் லண்டனில் கூடிபேசின. அதன்படி அவைகள் துருக்கிய சுல்தானுக்கு உதவ முன்வந்தன. இந்த கூட்டு பிரான்சிற்கு பெரும் அதிர்ச்சியைத் தந்ததால் புதியதோர் போருக்கான சூழ்நிலை உருவெடுத்தது. எனினும் இந்த நான்கு ஐரோப்பிய அரசுகளின் கூட்டு முயற்சியால், எகிப்தின் முகமது அலியின் மகனான இப்ராகிம் என்பவனை சிரியாவிலிருந்து விரட்டியடித்ததோடு அவனை 1841-இல் சரணடையவும் செய்தனர். அதே ஆண்டில் நடந்த உடன்படிக்கையின் படி, டார்டனல்ஸ் — போஸ்போரஸ் வழியாக கருங்கடலுக்குச் செல்லும் உரிமை வழங்க சுல்தானுக்கு உள்ள உரிமையை ஐரோப்பிய நாடுகள் ஏற்றுக் கொண்டன. ரஷ்யாவும் 1833 ஆண்டைய ஒப்பந்தத்தை ரத்து செய்தது.

முதலாம் நிக்கோலஸ் காலத்தில் நடைபெற்ற முக்கிய போர்களில் கிரிமியப் போரும் ஒன்று. துருக்கி குறித்து ரஷ்யாவும், இங்கிலாந்தும் வேறுபட்ட கொள்கைகளைக் கொண்டிருந்தன. ரஷ்யா துருக்கி அழிந்து கொண்டிருப்பதாக எண்ணியது. ரஷ்யாவின் ஸார், துருக்கியை ''ஐரோப்பாவின் நோயாளி'' என்றழைத்தார். எனவே துருக்கிச்சம்பந்தமாக போர் தொடுப்பதற்குப் பதில் துருக்கியைப் பங்கு போட்டுக் கொள்ளலாம் என்று இங்கிலாந்திடம் ரஷ்யா கருத்து தெரிவித்தது. பங்கிடுவது எப்படி என்ற தன்னுடைய கருத்தையும் 1844-இல் முதலாம் நிக்கோலஸ் தெரிவித்தார். அதன்படி வாலாச்சியா, மோல்டேவியா, பல்கேரியா, செர்பியா ஆகிய நாடுகளை சுதந்திர நாடுகளாக ஆக்கி ரஷ்யாவின் பாதுகாப்பின் கீழ் வைத்துக் கொள்வது என்றும் எகிப்தையும், கீரீட் (Crete) பகுதியையும் இங்கிலாந்துக்கு கொடுத்து விடுவது என்றும் ஆலோசனை கூறினார்.

ஆனால் இங்கிலாந்து முதலாம் நிக்கோலஸின் கருத்தினை மறுத்தது. காரணம் நிக்கோலஸ் கூறியதை ஒத்துக் கொண்டால் பால்கன் நாடுகளில் ரஷ்யாவின் செல்வாக்கு கூடிவிடும் என்று இங்கிலாந்து எண்ணியது. கான்ஸ்டாண்டிநோபிள் ரஷ்யாவின்

ஆதிக்கத்தின் கீழ் இருந்தது என்றால் மத்தியதரைக்கடலில் ரஷ்யாவின் போர்க் கப்பல்கள் எளிதில் செல்ல வாய்ப்பாக இருக்கும். மேலும் ரஷ்யா நினைத்ததைப் போன்று துருக்கி மிகவும் மோசமான சூழ்நிலையில் இருப்பதாக இங்கிலாந்து எண்ணவில்லை. இவ்வாறு துருக்கியின் மீது ரஷ்யா கொண்டிருந்த நோக்கத்தின் மீது கொண்ட ஐரோப்பிய நாடுகளின் ஐயமே கிருமியப் போருக்கு முக்கியக் காரணமாக இருந்தது.

1848ஆம் ஆண்டு பிரான்ஸ், ஆஸ்திரியா — ஹங்கேரி ஆகிய நாடுகளில் புரட்சி வெடித்தது. இப்புரட்சியின் விளைவாக பிரான்சில் லூயி பிலிப் பதவி துறந்தார். அங்கு ஒரு புரட்சி அரசு ஒன்று உருவாக்கப்பட்டது. இப்புரட்சி அரசுடன் உறவு கொள்ள விரும்பாத முதலாம் நிக்கோலஸ், பிரான்சுடன் இருந்த உறரை முறியடித்துக் கொண்டார். மெட்டர்னிக் ஆஸ்திரியாவைவிட்டு ஓடவே முதலாம் பெர்டினாண்டு பதவி துறந்தார். இதனால் பிரான்ஸிஸ் ஜோசப் ஆஸ்திரியாவின் அரியணையேறினார். பிரான்ஸிஸ் ஜோசப்பிற்கு நிக்கோலஸ் உதவ முன் வந்தார். ஹங்கேரியில் புரட்சி நடந்த போது ஆஸ்திரிய ரஷ்யப்படைகள் ஹங்கேரியப் புரட்சியாளர்களைத் தோற்கடித்தனர். புரட்சியாளர்கள், 'சோசுத்' உள்பட துருக்கிய நாட்டில் தஞ்சம் புகுந்தனர். ஆனால் அவர்களை ஒப்படைக்க துருக்கி மறுத்தது. எனவே கீழை நாடுகள் பிரச்சினை மீண்டும் எழுந்தது. இவ்வேளையில் இங்கிலாந்து மக்கள் ஹங்கேரியர்கள் மீது மிகுந்த அனுதாபம் காட்டினர். பலர் ஹங்கேரிய மக்களுக்காக போர் செய்யவும் தயாராக இருந்தனர். எனவே இப்பிரச்சினையும் இங்கிலாந்துக்கும், ரஷ்யாவுக்கும் இடையே இருந்த பகைமையை மேலும் அதிகரித்தது.

பிரான்ஸ் நாட்டில் புரட்சி அரசு நடத்திய தேர்தலின்படி மூன்றாம் நெப்போலியன் நாட்டின் தலைவரானார். இவர் பிரான்சு நாட்டில் தன் நிலையை உறுதிப்படுத்தவும், பிரான்சில் வாழும் கத்தோலிக்கர்களின் ஆதரவைப் பெறவும் எண்ணி துருக்கியில் வாழும் கிறித்துவர்களைக் காக்கும் பொறுப்பை ஏற்க விரும்பினார். அதாவது 16ஆம் நூற்றாண்டின் போது கிறித்தவர்கள் வாழும் பாலஸ்தீனம் போன்ற பல புண்ணிய இடங்களைக் காக்கின்ற பொறுப்பினை பிரான்சு நாடு ஏற்றிருந்தது. ஆனால் காலப்போக்கில் இப்பொறுப்பினை பிரான்சு நிராகரித்து விட்டது. இப்போது மூன்றாம் நெப்போலியன் மீண்டும் அதனை நிலை நிறுத்த விரும்பினார். துருக்கிய சுல்தானிடம் அப்பொறுப்பினைத் தனக்குள் கொடுக்குமாறு வேண்டினார். ஸ்டாபோர்டு டி ரெட்கிளிப் (Straford de Redcliffe) என்பவர் தான் துருக்கியில் இருந்த இங்கிலாந்தின் வெளிநாட்டுத் தூதுவர். இவர் துருக்கியருக்கு நண்பராகவும், நிக்கோலஸுக்கு விரோதமாகவும் இருந்தார். மேலும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி ரஷ்யாவின் பெருமையைக் குறைத்துவிட வேண்டும் என்றும் விரும்பினார். ஆகவே இவர் துருக்கிய சுல்தானிடம் கிறிஸ்துவர்களைப் பாதுகாக்கும் உரிமையை மூன்றாம் நெப்போலியனிடமே விட்டுவிடுமாறு ஆலோசனை கூறினார். இவர் ஆலோசனையைக் கேட்ட சுல்தான் அவ்வாறே செய்தார். அதன்படி பிரான்ஸுக்கும், துருக்கிக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன்படி பிரான்சு துருக்கி நாட்டில் இருக்கும் கிறிஸ்துவர்களின் புனிதத் தலங்களைக் காக்கும் பொறுப்பை ஏற்றது. இச்செயல் பீட்டர்ஸ் பர்க்கில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்திற்று. எனவே நிக்கோலஸ் பிரான்சுக்கு துருக்கி அளித்திருந்த உரிமையை மறுத்ததோடு அத்தகைய உரிமையைத் தமக்கே கொடுக்கவேண்டும் என்று

கேட்டார். இதனை வலியுறுத்த இளவரசர் மென்சிகாவ் என்பவர் தலைமையில் பெரும் படையொன்றை துருக்கிக்கு அனுப்பினார். இப்போதும் துருக்கிய சுல்தான் இங்கிலாந்து நாட்டு தூதுவர் ரெட்கிளிப்பின் ஆலோசனையின் பேரில் ரஷ்யாவிற்கு வைதீக கிறித்துவர்களின் புனித உரிமைகளைக் கொடுக்க மறுத்துவிட்டார். எனவே ரஷ்யா துருக்கி மீது போர் தொடுத்தது. துருக்கியும் போருக்கு ஆயத்தமாயிற்று. ரஷ்யா 1853ஆம் ஆண்டு ஜூலையில் மால்டோவியா, வாலாச்சியா போன்ற பகுதிகளைப் பிடித்தது. தன்னுடைய வேண்டுகோளைத் துருக்கியச் சுல்தான் நிறைவேற்றும் வரை இப்பகுதிகளை விடப்போவதில்லை என அறிவித்தது. போரைத் தடுக்க, இங்கிலாந்து, பிரான்சு, ஆஸ்திரியா — ஹங்கேரி, பிரஷ்யா ஆகிய நாட்டுப் பிரதிநிதிகள் வியன்னாவில் ஒன்றுகூடி ரஷ்யாவும், துருக்கியும் ஏற்கும் வகையில் ஒரு கருத்து தெரிவித்தனர். இக்கருத்தினை ரஷ்யா ஏற்றுக்கொண்டது. ஆனால் துருக்கி இக்கருத்தில் சில மாற்றங்கள் வேண்டும் என்று கோரியது. ஆகவே சமரச முயற்சி கைவிடப்பட்டது.

இதேவேளையில் ஓமர் பாஷா என்ற துருக்கியப் படைத்தளபதி ரஷ்யப் படைகளை வாலாச்சியா, மால்டேவியாவிலிருந்து பின்வாங்குமாறு எச்சரிக்கை செய்தார். பின்னர் துருக்கி 1853ஆம் ஆண்டு அக்டோபரில் போர்ப் பிரகடனம் செய்தது. ரஷ்யா 1853ஆம் ஆண்டு நவம்பரில், துருக்கிய கப்பலை கருங்கடலில் உள்ள சினோப் என்னுமிடத்தில் மூழ்கடித்தது. இதனைத் தொடர்ந்து இங்கிலாந்தும், பிரான்சும் துருக்கிக்கு ஆதரவாகப் போரில் இறங்கின. 1854 ஜனவரியில் இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாடுகளின் கூட்டுக் கடற்படையொன்று பாஸ்போரஸ் நீரிணைப்பு வழியாக கருங்கடலுக்குள் புகுந்தது. இப்படைகள் துருக்கிய படைகளையும் சேர்ந்துக்கொண்டு, டான்யூப் பகுதியிலிருந்து ரஷ்யப் படைகள் விலகவேண்டும் என்று இறுதி எச்சரிக்கையும் விடுத்தது. இவ்வேளையில் இத்தாலிய இணைவை அடைய ஐரோப்பிய நாடுகளில் ஏதேனும் ஒன்றின் ஆதரவைப் பெற எண்ணிய கவுண்ட் கவூர், சார்டீனியப் படையொன்றினையும் கூட்டணி நாடுகளுக்குத் துணையாக அனுப்பினார்.

1854 செப்டம்பரில் கிரிமியாவைச் சார்ந்த யூப்டோரியாவில் இறங்கிய 60,000 பேர் கொண்ட கூட்டணிப் படையினர் ரஷ்யர்களின் மிக முக்கியக் கடற்படைத் தளமான செபஸ்டர்போலைத் தாக்கி முற்றுகையிட்டனர். முதன் முதலாக ஆல்மா போர்க்களத்தில் ரஷ்யப்படைகளும், கூட்டு நாடுகள் படையினரும் போரிட்டதில் ரஷ்யர்கள் தோல்வி அடைந்தனர். இருப்பினும் எதிர் தரப்பினருக்கும் பெரும்சேதம் ஏற்பட்டது. இத்தோல்வியின் காரணமாக ரஷ்யப் படைகள் செபஸ்டோபலுக்குப் பின் வாங்கிற்று. கருங்கடல் பகுதியில் முற்றுகையிட்டிருந்த ரஷ்யப்படையும் நாசமாக்கப்பட்டிருந்தது. பெரும் சேதத்திற்குள்ளான கூட்டணி படைகள் புதிய படைகளும், நவீன ஆயுதங்களும் வரும் வரை போர் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்திருந்தது.

செபஸ்டோபல் வீழ்ச்சி

இந்த இடைக்காலத்தில் துறைமுகத்தை வலிமைப்படுத்தும் பல நடவடிக்கைகளை ரஷ்யர்கள் மேற்கொண்டனர். ரஷ்யர்களுடைய முற்றுகையை தளர்த்தும் நோக்குடன்

கூட்டணிப் படைகள் காகசஸ் பகுதியில், பலக்லாவா முனையிலும் இங்கர்மன் முனையிலும் ரஷ்யப் படைகளைத் தாக்கினர். போட்டி கடுமையாக இருந்தது. கூட்டணிப் படைகளுக்குத் தலைமையேற்ற தளபதிகளிடையே ஒற்றுமையில்லாமையாலும் போர்க்களத் தேவைகளை படைவீரர்களுக்குக் கொடுக்க முடியாமையாலும், போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவர விரும்பினர். மேலும் கிரிமியப் பகுதியில் இருந்த கடும் குளிரும் வீரர்களை வாட்டின. காலரா போன்ற நோய்களாலும் இரு புறமும் உள்ள படைவீரர்களில் பலர் மாண்டனர். இருப்பினும் 1855ஆம் ஆண்டு கூட்டணிப் படைகள் செபஸ்டோபலைக் கைப்பற்றின. ரஷ்யப் படைகள் செபஸ்டோபலின் விரிகுடாவிற்குப் பின்வாங்க வேண்டியதாயிற்று. இத்தகைய தோல்வியைக் கண்ணுற்ற நிக்கோலஸ் மனம் உடைந்த நிலையில், கிரிமியப்போர் நடந்து கொண்டிருக்கும் போதே கி.பி. 1855 பிப்ரவரியில் மரணமடைந்தார். கிரிமியாவில் உள்ள செபஸ்டர்போலில் இப்போர் நடந்ததால் இப்போர் கிரிமியப்போர் என்று வரலாற்றில் கூறப்படுகிறது.

நிக்கோலஸுக்குப் பின் அரசு எய்திய அவர் மகன் இரண்டாம் அலெக்ஸாந்தர் மேலும் போரிடுவதால் பயன் இல்லை என்று உணர்ந்து சமாதானம் செய்து கொள்ள விரும்பினார்.இப்போரில் கூட்டணி நாடுகள் தாங்கள் திட்டமிட்டபடி ரஷ்யாவை முற்றிலும் தோற்கடிக்க முடியவில்லை. மேலும் கூட்டணிப் படைகளும், மூன்று ஆண்டுகளாக கடும்போர் புரிந்ததால் தளர்ச்சி பெற்று இருந்தன. எனவே கூட்டணி நாடுகளும் சமாதானத்திற்கு இசைந்தன. இப்போரில்தான் வரலாற்றுப் புகழ் பெற்ற எழுத்தாளரான லியோ டால்ஸ்டாய், ரஷ்யப் படையில் துப்பாக்கி பிரிவில் ஓர் அதிகாரியாய் இருந்தார்.

பாரிஸ் ஒப்பந்தம் (1856)

இங்கிலாந்து, பிரான்சு, துருக்கி ஆகிய நாடுகள் போரில் வெற்றி பெற்றன. இந்நிலையில் இருதரப்பினரும் அமைதி விரும்பியமையின் 1856ஆம் ஆண்டு பாரிஸ் நகரில் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. இவ் உடன்படிக்கை ரஷ்யாவின் நலன்களுக்கு எதிராகவே அமைந்தன. அதன்படி, கூட்டணி நாடுகள் தாங்கள் பிடித்த கிரிமியப் பகுதிகளை ரஷ்யாவிற்கே கொடுத்தன. ஆனால் ரஷ்யா செபஸ்டோபல் என்னுமிடத்தில் கோட்டைத்தளம் அமைத்தல் கூடாது. டார்டனல்ஸ் நீரிணைப்பின் வழியாக அனைத்து நாட்டு வாணிகக் கப்பல்கள் மட்டும் செல்ல அனுமதிக்கப்பட்டன. கருங்கடல் பொதுவான ஒன்றாக ஆக்கப்பட்டது. அக்கடலின் போர்க்கப்பல்களை நிறுத்துதல் கூடாது. துருக்கியும் ரஷ்யாவும் அக்கடலின் எல்லைக்குள் போர்த்தளங்கள் அமைத்தல் கூடாது. மால்டோவியாவையும், வாலாச்சியாவையும் ஒன்றாக இணைத்து ருமேனியா எனும் பெயரில் செர்பியாவைப்போல் துருக்கியரின் ஆட்சியின் கீழ் இருக்க அனுமதிக்கப்பட்டது. துருக்கியப் பேரரசின் கீழ் வாழும் கிறிஸ்துவர்களைக் காக்கும் உரிமையை ரஷ்யா இழந்தது. துருக்கியச் சுல்தான் கிறிஸ்தவ மக்களையும், முஸ்லீம் மக்களையும் சமமாக நடத்துவதாக உறுதியளித்தார். டானூப் நதி அனைத்து நாடுகள் நதியாக ஆக்கப்பட்டது. எல்லா நாட்டுக் கப்பல்களும் டானூப் வழியாகச் செல்ல

அனுமதிக்கப்பட்டது. மேலும் கார்ஸ் (Kars) என்னும் பகுதியை துருக்கியரிடம் மீண்டும் ரஷ்யா ஒப்படைத்தது. துருக்கியின் வருங்காலத்தைப் பற்றி முடிவு செய்ய வேண்டியது ஐரோப்பாவே தவிர ரஷ்யாவல்ல என்பது இதன் மூலம் ஒப்புக்கொள்ளப்பட்டது.

1858இல் மால்டேவியா, வாலாச்சியா ஆகிய இருமாநிலங்களும் தனித்தனியே தங்கள் நாட்டு அரசர்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள துருக்கிய அரசர் இணங்கினார். இரு மாநிலங்களும் இளவரசர் அலெக்ஸாந்தர் குசா என்பவரையே தேர்ந்தெடுத்தன. 1862இல் இருநாடுகளும் ஒன்றாக இணைவதை மற்ற நாடுகள் ஏற்றன.

போரின் விளைவு

கிரிமியப் போரில் பங்கேற்ற நாடுகள் அப்போரை நடத்திய விதம் பற்றி கூர்ந்து நோக்கினால் உண்மையில் அப்போர் நடத்தப்பட்டது ஐரோப்பாவின் நலனுக்காக நடத்தப்பட்டதே அல்லாமல் கிழக்கத்தியப் பிரச்சனைகளுக்காக அல்ல. கிரிமியப் போர் ரஷ்யாவிற்கு எதிராக நடத்தப்பட்டது தவிர துருக்கியின் நலன்களுக்காக நடத்தப்படவில்லை. ரஷ்யா, போரில் பங்கேற்க காரணம் ரஷ்யாவின் பாதுகாப்பிற்கு வேண்டி இருந்தது. அதுபோலவே பிரான்சின் மூன்றாம் நெப்போலியன் தன் உள்நாட்டு நலன்களுக்காக வேண்டியே கிரிமியப்போரில் பங்கேற்றார். கிழக்கு மத்தியதரைக்கடல் பகுதிகளின் பாதுகாப்பிற்கு ஒரு வலிமை மிக்க துருக்கியின் அவசியத்தை பிரிட்டன் உணர்ந்திருந்தது.

கிருமியப் போரால் துருக்கிதான் அதிக லாபம் அடைந்தது. ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்பில் துருக்கி புது வாழ்வு தொடங்கியது. துருக்கியின் பகுதிகள் அதற்கு உறுதி செய்யப்பட்டன. "ஐரோப்பாவின் நோயாளி" என்று கூறப்பட்ட துருக்கி மீண்டும் சொந்த கால்களில் நிற்க ஆவன செய்யப்பட்டன. எனினும் இது நீண்ட காலம் நிலைக்கவில்லை. கிரிமியப் போர்களின் விளைவாக புதிய இத்தாலி உருவாக்கப்பட்டது. பிட்மாண்ட், சார்டினியா இவைகளின் பிரதம அமைச்சரான கவூர், இங்கிலாந்து, பிரான்சின் மூன்றாம் நெப்போலியன் போன்றோர்களது உதவியையும் பெற இப்போர் வழிகோலியது. கிரிமியப்போருக்கு முன்னால் ரஷ்யாவும் ஆஸ்திரியாவும் நட்பு நாடுகளாய் விளங்கின. ஆனால் கிரிமியப்போரின் போது ஆஸ்திரியா நடுவு நிலைமை வகித்ததால் ரஷ்யா ஆத்திரமடைந்தது. காரணம் 1849-ல் ஹங்கேரியில் ஏற்பட்ட புரட்சியை அடக்க ரஷ்யா ஆஸ்திரியாவிற்கு உதவியது. தற்போது ரஷ்யா — ஆஸ்திரிய நட்பு முறிந்தது. இந்த நிலைமையை பயன்படுத்தி ஜெர்மனியின் பிஸ்மார்க் ரஷ்யாவுடன் நட்பு பாராட்டினார். கிரிமியப்போர் பிஸ்மார்க், கவூர் போன்றோர்களின் எண்ணங்களை நிறைவேற்றியது. கிரிமியப் போருக்கு பின்னர் ரஷ்யாவின் ஸார் பெரும் சீர்திருத்தங்களை புகுத்த வேண்டி வந்தது. இதன் மூலம் ரஷ்ய (அடிமைகள்) செர்ப்கள் (serfs) விடுதலையடைந்தனர். கிரிமியப் போர் வரலாற்றிலே நடைபெற்ற பயனற்ற போர் எனக் கருதப்படுகிறது. இரு தரத்தினரும் போர் நடவடிக்கைகளை திறமையின்றி நடத்தினர். இக்கிரிமியப் போரின் போதுதான் பிளாரன்ஸ் நைட்டிங்கேல் என்ற பெண்மணி காயமுற்ற சிப்பாய்களுக்கு

மருத்துவ உதவிகள் செய்தார். செஞ்சிலுவை சங்கம் இப்போதுதான் உருவானது. ரஷ்யநாடு, பால்கன் நாடுகளையும் மத்திய தரைக் கடல்பகுதி நாடுகளையும் அச்சுறுத்துவது சிலகாலம் நிறுத்தப்பட்டது. கிரிமியப்போருக்கு பின் துருக்கிய பேரரசில் வாழ்ந்த கிறிஸ்தவமக்களின் நலனை காக்கும் பொறுப்பையும் ரஷ்யா இழக்க நேரிட்டது. ஆனால் இவ்வமைதி ஒப்பந்தம் முடிந்து 20 ஆண்டுகளுக்குள் பாரிஸ் ஒப்பந்தத்தின் உடன்படிக்கைகள் தூக்கி எறியப்பட்டன. 1870இல் ரஷ்யா, பிரஸ்ஸியாவுடன் உடன்படிக்கை செய்து கொண்டு கருங்கடல் பற்றிய சரத்துக்களை மீறி கப்பல்தளம் ஒன்று அமைத்தது. 1858ஆம் ஆண்டு மால்டேவியாவும், வாலாச்சியாவும் ஒரே அரசரைத் தேர்ந்தெடுத்து 1861இல் ருமேனியா என்ற பெயருடன் புதிய நாடாயிற்று. துருக்கியச் சுல்தான் கிறிஸ்துவர்களுக்குச் சமவாய்ப்புக் கொடுக்கவில்லை. அவர் கிறித்துவர்களை மரியாதைக் குறைவாக நடத்தியதால் புதிய பிரச்சனைகள் எழுந்தன.

பயிற்சி வினாக்கள்

1) முதலாம் ஸார் நிக்கோலஸின் குண நலன்களைக் கூறுக.

2) கிரிமியப் போருக்கான காரணங்களைக்கூறி, அப்போரில் ரஷ்யாவின் பங்கை விவரிக்க.

3) முதலாம் நிக்கோலஸின் வெளிநாட்டுக் கொள்கையின் மையக்கருத்தானது 'கிழக்கத்தியப் பிரச்னை'. இதனை கிரிமியப் போர் மூலம் ஆய்க.

பாடம் – 3 ஸார் இரண்டாம் அலெக்ஸாந்தர் பட்டமேற்ற போது ரஷ்யாவின் நிலை

இரண்டாம் அலெக்ஸாந்தர் (1855 – 1881)

இரண்டாம் அலெக்ஸாந்தர், ரஷ்யா கிரிமியப் போரில் தோல்வியைத் தழுவிக் கொண்டிருக்கும் நேரத்தில் 1855-ஆம் ஆண்டு பிப்ரவரியில், அவர் தந்தை முதலாம் நிக்கோலஸ் இறக்கவே அரியணையேறினார். முதலாம் நிக்கோலஸ் விஷம் அருந்தி தற்கொலை செய்தார் என்றும் கருதப்படுகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பிய வரலாற்றில் விடுதலை இயக்கங்களும், தேசிய மறுமலர்ச்சியும் மலர்ந்த வண்ணமாக இருந்தன. இக்காலப் பகுதியில்தான் இத்தாலிய ஒன்றியமும் ஜெர்மானிய ஒன்றியமும் உருவாயின. பிரான்சில் மூன்றாம் குடியரசு நிறுவப்பட்டது. அமெரிக்காவில் 1861-ஆம் ஆண்டு ஆபிரகாம் லிங்கன் ஜனாதிபதியானவுடன் அடிமை முறை ஒழிக்கப்பட்டது. ரஷ்யாவில் 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நிலமானிய அடிமை முறை ஓரளவு முடிவுக்குவந்தது. ஆனால் அதற்குப்பதில் முதலாளித்துவ முறை ஏற்படலாயிற்று. ஆயினும் அடிமைமுறை முற்றிலுமாக அழிந்து விட்டதாகக் கருதமுடியாது. மாறாக அம்முறையின் சிற்சில அம்சங்கள் இருக்கவே செய்தன. ரஷ்யா ஒரு வரம்பற்ற வல்லாட்சி நாடாக விளங்கியது. ஸார் மன்னர் தங்கு தடையின்றி எண்ணிய எண்ணியவாறு எய்தினார். ரஷ்யா, மக்களின் மாபெரும் சிறைக்கூடமாகவே விளங்கியது. உலக பிற்போக்கு தலைவர்களில் ஒருவராகவே ஸார் மன்னர் காணப்பட்டார். உலகின் கிழக்கிலும் மேற்கிலும் வாழ்ந்த பிற்போக்கு எண்ணங் கொண்டவர்களுடன் ஒருமித்த கருத்துக்கொண்டு காணப்பட்டார் ரஷ்ய ஸார் மன்னர். இச்சூழ்நிலையிலும் ரஷ்ய மண்ணில் ஜனநாயக கருத்துக்களும் இயக்கங்களும் பெரும் இடர்பாடுகளுக்கிடையில் நாளும் வளர்ந்த வண்ணமே இருந்தன. ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் பரவிய முற்போக்கு கருத்துக்கள், எண்ணங்கள் முதலியன ரஷ்யாவிலும் பிரதிபலித்தன. அறிஞர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் முதலானோர் தங்களை தாங்களாகவே காத்துக்கொள்ள மேற்கொண்ட செயல்முறைகளுக்கு வெளிநாடுகளில் வாழ்ந்த முற்போக்கு கருத்துக்களும் உயர்ந்த எண்ணங்களும் கொண்ட மக்களிடம் வரவேற்பு காணப்பட்டது. இவை மேற்கு ஐரோப்பாவில் நடந்த பல்வேறு ஜனநாயகபுரட்சி இயக்கங்களில் கூட பிரதிபலிக்கவே செய்தன. பின்னர் இவை ஐரோப்பிய நாடுகளிலும் அங்கிருந்து ஆசிய நாடுகளிலும் பிரதிபலிக்கலாயிற்று. ஆனால் 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் புரட்சியின் மைய களம் ஐரோப்பாவிலிருந்து ரஷ்யாவிற்கு மாறியது. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கலை, விஞ்ஞானம், இலக்கியம் முதலியன உன்னத நிலை அடையலாயிற்று. ரஷ்யாவின் முன்னேற்றங்களைக்கண்டு பிறநாடுகள் வியந்தன.

1818-ஆம் ஆண்டு பிறந்த இரண்டாம் அலெக்ஸாந்தர் தம் இளம் வயதிலேயே செனட் சதுக்கத்தில் நடைபெற்ற டிசம்பர் வாதிகளின் புரட்சியையும், தம் தந்தையாரின் தலைமையில் சென்ற துப்பாக்கிப் படையினர் குண்டுமாரி பொழிந்து புரட்சியாளர்களை

சாணடையச் செய்ததையும் நேரில் கண்ணுற்றார். அரியணையேறியதும் சைபீரியாவுக்கு நாடு கடத்தப்பட்டிருந்த டிசம்பர் புரட்சியாளர்களை மன்னித்து விடுதலை செய்தார். கவிஞர் சூகோவ்ஸ்கி போன்ற பெரிய மேதைகளிடம் அவர் கல்வி கற்றிருந்ததால் மனிதாபிமான இயல்புகளை அவர் பெரிதும் பெற்றிருந்தார். எனினும், தம் தந்தையின் அரசியல் கோட்பாடுகளையே தம் ஆட்சி முழுவதும் கடைப்பிடிக்கலானார். தேர்தல், மக்களாட்சி போன்ற அரசியல் முறைகளை அறவே வெறுத்தார். ஆனால் அதே நேரத்தில் வல்லாட்சியை ஆதரித்து நிற்கும் சமயத்துறை, மன்னரின் வழிநடக்கும் அரசுத்துறை, மேட்டுக்குடி மக்களின் ஆதரவு ஆகியவற்றை மிகவும் விரும்பினார். அவரது பதவியேற்பு வைபவத்தின் போது விக்டோரியா பேரரசியின் பிரதிநிதியாகச் சென்றிருந்த ஆங்கிலேய தூதுவர் அவரைப் பற்றிக் குறிப்பிடும் போது 'நல்லியல்புகளைக் கொண்டவராயினும் நீரைப் போன்று பலகீனமானவர்' என்றார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிற்போக்குவாதிகளின் தலைமைக் கூடாரமாகவும், மக்களின் மாபெரும் சிறைக்கூடமாகவும் இருந்த ரஷ்யாவில் கூட அரசியலில் சில மாற்றங்கள் ஏற்பட்டன. கிரிமியப்போர் பண்ணை அடிமைகளின் நிலையை மறுபரிசீலனை செய்தது எனலாம்.

பண்ணை அடிமைகள்

முதலாம் நிக்கோலஸ் (1825 - 55) தம் ஆட்சிக்காலம் முழுவதிலும் பண்ணை அடிமை முறையையும்., அரசரின் வல்லாட்சியையும் நிலை நிறுத்துவதில் முழு மூச்சுடன் செயல்பட்டார். அவரது 30 ஆண்டு ஆட்சிக் காலத்திலும் பண்ணைக் கூலிகளின் நிலை பயங்கரமாகவே இருந்தது. அரசின் அடித்தளத்தில் அவர்கள் வெடிமருந்தெனக் காட்சியளித்தனர். அடிக்கடி எழுந்த விவசாயிகளின் கிளர்ச்சி மிருக பலம் கொண்டு அடக்கப்பட்டாலும் அதுவே சமுதாயத்தின் கொதிப்பு நிலையை உணர்த்துவதாக இருந்தது. பண்ணை அடிமை முறையை ஒரு பாவமென மன்னர் கருதினாலும், அதை ஒழிப்பதாக இருந்ததால் தமக்குப் பேராபத்து ஏற்படக்கூடும் என்று அவர் அஞ்சினார். அவர் விவசாயிகளின் சிக்கலைத் தீர்ப்பதற்கு எடுத்த முயற்சிகள் அனைத்தும் அரைமனதோடு கூடியதாகவும், தற்காலிகமானதாகவும் இருந்தன. நிலப்பிரபுக்கள் பண்ணை அடிமைகளை நட்டாற்றில் கைவிட்டுவிட்டுத் தங்கள் நிலத்தை மட்டும் விற்றுவிடும் கொடிய வழக்கத்தைக் கொண்டிருந்தனர். 1826-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் கூடிய குழு அளித்த சிபாரிசின்படி விவசாயிகளைச் சுரங்கங்களுக்கு மாற்றுவது தடுக்கப்பட்டது. 1827-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சட்டமொன்று நிலச் சொந்தக்காரர்கள் தங்கள் பண்ணைகளைப் பண்ணைக் கூலிகளின்றித் தனியே விற்பனை செய்ததைத் தடை செய்தது. நடைமுறையிலிருந்த சட்டத்தின்படி பஞ்சம் நிலவும் காலங்களில் பண்ணைக் கூலிகளைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பும் நிலச் சொந்தக்காரர்கட்குக் கொடுக்கப்பட்டது. பஞ்ச நிவாரணத்திற்கென அரசு மானிய உதவியும் அளிக்க முன்வந்தது.

முதலாம் நிக்கோலசின் ஆட்சிக் காலத்தின் போதுதான் முதன்முறையாக 1851-ஆம் ஆண்டு மாபெரும் இருப்புப்பாதை மாஸ்கோ முதல் பீட்டர்ஸ்பர்க் வரை

அமைக்கப்பட்டது. நிக்கோலஸ் ஒரு தாளில் இரண்டு நகரங்களுக்கிடையே ஒரு சாலை அமைக்குமாறு ஒரு கோடிழுத்தார். அப்பொழுது அவரது பெருவிரல் தடுக்கவே பென்சில் கோடு ஓரிடத்தில் சிறிது வளையலாயிற்று. அரசரின் ஆணையை அவ்வாறே நிறைவேற்றக் கருதிய அவரது பொறியியல் அறிஞர்கள் சாலையையும் அவ்வாறே அமைத்தனர்.

இரண்டாம் அலெக்ஸாந்தர் அரியணை ஏறும் தருவாயில் ரஷ்யாவின் வெளிநாட்டு வியாபாரம் சற்று அதிகரித்தது. எடுத்துக்காட்டாக அவரது ஆட்சியின் தொடக்க காலத்தில் 85,000 ரூபிளாக (ரஷ்ய நாணயம்) இருந்த வெளி வியாபாரம் அவரது ஆட்சியின் இறுதிக்காலத்தில் 225,000 ரூபிளாக அதிகரித்தது. இதற்கு முக்கிய காரணம் விவசாயிகளே ஆவர். நாட்டில் நெசவு உற்பத்தி அதிகமாயிற்று. சர்க்கரை உற்பத்தியைப்போன்று உலோகப் பொருட்களின் உற்பத்தியும் அதிகரித்தது. மொத்த மக்கள் தொகையில் தொழிலாளராக இருந்தோர் ஒரு விழுக்காட்டினரே ஆகும். அவர்களுள் மூன்றில் ஒரு பகுதியினர் அடிமைகளாகவும், எஞ்சியோர் அன்றாடக் கூலிகளாகவும் இருந்தனர். தொழிற்சாலைகளில் பெண்களும், சிறுவர்களும் கடுமையாக உழைக்கக் கட்டாயப்படுத்தப்பட்டனர்.

அரசு நிருவாக நிலை

ரஷ்யா வெளியுலகுக்கு ஒரு வலிமை மிக்க நாடாகக் காட்சியளித்தாலும், உள்ளளவில் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளாலும், ஊழல் மலிந்த ஆட்சியமைப்பாலும் அது நலிவுற்றிருந்தது என்றே கூறலாம். கிரிமியப் போர் ரஷ்ய படைகளின் வலிமை இன்மையை வெளிப்படுத்தியது. ரயில் போக்குவரத்து தென்பகுதியில் சிறப்படையாததால் படைகளுக்கு வேண்டிய உணவு, உடை பிறபொருட்களை அனுப்ப முடியாமல் போயிற்று. முதலாம் நிக்கோலஸ் பிற்போக்குக் கொள்கைகளின் மொத்த உருவமாகவே காட்சியளித்தார். அவை நான்கு துறைகளில் மிகத் தெளிவாக வெளிப்பட்டன. பிரபுக்கள் சம்பந்தமாக மன்னரின் தனிநோக்கு, கல்வித்துறை, அதிகாரப்பூர்வமான தேசியம், அடக்குமுறை நடவடிக்கைகள் ஆகியவை அவரது ஆட்சியைப் படம் பிடித்துக் காட்டின. சமுதாய அமைப்பில் பிரபுக்களின் நிலை உயரச் சில முயற்சிகளை அரசு மேற்கொண்டாலும் அரசின் உண்மையான ஊழியர்களாக மட்டுமே இருக்க உயர்குடி மக்கள் அனுமதிக்கப்பட்டார்களே தவிர வேறு அரசியல் விவகாரங்களில் கலந்து கொள்ள அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. கல்வித்துறையிலும் சில மாற்றங்கள் புகுத்தப்பட்டன. உயர்குடி மக்களில் டிசம்பர் புரட்சியாளர்களாக மாறியோர் தனிக்கல்வி நிலையங்களில் தனி ஆசிரியர்களிடம் பயின்றவர்களாக இருந்த உண்மையைக் கண்டறிந்து, இனி அத்தகைய நிகழ்ச்சிகள் ஏற்படுவதைத் தடுக்க விரும்பி அத்தகைய தனிக்கல்வி நிலையங்கள் செயல்படுவதை நிறுத்தினார். 1830 முதல் மாநிலப் பள்ளிகளாகச் செயல் புரிந்து வந்த நிறுவனங்கள் படிப்படியாக உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றம் பெற்றன. பாட போதனைமுறை கூடப் பழைய இலக்கண மரபுகட்குட்பட்ட பாடங்களைக் கொண்ட வகுப்புக்களாகவும், அறிவியல் பாடங்களைப் போதிக்கும் வகுப்புக்களாகவும் இரண்டாகப் பிரிக்கப்பட்டன. பல்கலைக்கழகங்களின் சுயாதிக்கத்தைக் குறைக்க விரும்பி பேராசிரியர்களின் நடவடிக்கைகள் மீது கட்டுப்பாட்டினை ஏற்படுத்தும்

அதிகாரத்தைக் கல்வியமைச்சருக்கு அளித்தார். மாணவர்களின் நடவடிக்கைகளை கண்காணிக்கவென ஆய்வாளர்களும் நியமிக்கப்பட்டனர். இச்சூழ்நிலையிலும் கீழ்நிலையில் இருந்த மக்களிடையில் பல அறிஞர்கள் தோன்றியதால் புரட்சிக்கருத்துக்கள் வேகமாக பரவியது. மக்களின் விடுதலைக்கான வழிமுறைகளைப் பற்றி சிந்திக்கலாயினர்.

ரஷ்யாவின் அதிகாரப்பூர்வமான தேசியம்

புதிய கருத்துக்கள் ஏதேனும் முளைத்தால் அவற்றினை முளையிலேயே கிள்ளி எறிந்திட அதிகாரப்பூர்வமான தேசியம் என்னும் புதிய கோட்பாடு உருவாக்கப்பட்டது. இக்கோட்பாடு கல்வியமைச்சராக இருந்த உமரோவ் என்பவரால் 1833-இல் வெளியிடப்பட்டது. அவரது புதிய கோட்பாடு வைதீகத் திருச்சபையையும், மன்னரின் வல்லாட்சியையும், தேசியத்தையும் அடிப்படையாகக் கொண்டதென அறிவித்தபோது நிக்கோலஸ் மிகவும் மனம் மகிழ்ந்தார். இப்புதிய கோட்பாடு பள்ளிகளிலும், பல்கலைக் கழகங்களிலும், பத்திரிகைத் துறையிலும் கட்டாயமாகவும், உறுதியுடனும் புகுத்தப்பட்டது. இதனை உருவாக்கியவர் மன்னரின் வல்லாட்சியைப் பெற்றிருந்த ரஷ்யாவை மேலை நாடுகளுடன் ஒப்பிட்டு, மக்கள் மன்னரிடம் மதிப்புடன் கூடிய மரியாதையைக் காட்டுவதாகக் கூறினார்.

கிளர்ச்சிகள்

கடுமையான அடக்கு முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்ட போதும் புரட்சிகளும், கிளர்ச்சிகளும் ஆங்காங்கே எழத்தான் செய்தன. விவசாயிகளின் கிளர்ச்சிகளோடு படையினரின் கிளர்ச்சிகளும் மலரராயின. செவாஸ்டபோல், நோவ்காராடு ஆகிய நகரங்களிலிருந்த படைப்பிரிவினர் அப்பகுதிகளில் 1830-31ஆம் ஆண்டுகளில் தோன்றிப் பரவிய காலரா, பிளேக் போன்ற தொற்று வியாதிகளைத் தடுக்க அதிகாரிகள் மேற்கொண்ட சில நடவடிக்கைகளை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யலாயினர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலத்திற்குள் நாட்டின் பல பகுதிகளிலும் இருந்த தொழிற் கூடங்களில் எல்லாச் சட்டதிட்டங்களையும் தூக்கியெறிந்துவிட்டுத் தொழிலாளிகளை இன்னல்களுக்குள்ளாகிய முதலாளிகளின் ஆதிக்கத்தை எதிர்த்து 170க்கும் மேற்பட்ட சிறுகிளர்ச்சிகள் நடந்தேறின. பைலோ ரஷ்யாவின் கண் உள்ள உக்ரெயின் பகுதியில் கார்மல்யுக் என்பாரின் தலைமையில் விவசாயக் கிளர்ச்சி எழுந்தது. 1841-இல் ஜார்ஜியா, லாட்வியா, எஸ்தோனியா பகுதிகளிலும் இக்கிளர்ச்சிகள் தோன்றலாயின. மன்னரின் குடியேற்றக் கொள்கையை எதிர்த்தும் காகசஸ் பகுதியில் புரட்சித்தீ மூண்டது. இமாம்சாமில் என்னும் சமயத் தலைவரின் தலைமையில் ரஷ்ய மன்னருக்கெதிராகவும், துருக்கிய ஆதரவுக் கொள்கைக்காகவும் புரட்சியாளர்கள் போர் தொடங்கினர். முஸ்லீம்கள் அல்லாத ரஷ்யர்களை எதிர்த்து இவர் போரிட்டதால் பாரசீகம், துருக்கி ஆகியவற்றின் ஆதரவும் கிடைத்தது. ஆயினும் 1859-இல் மலைப்பகுதிகளில் மறைந்திருந்த இவர் ரஷ்யப்படையினரால் வளைத்துக் கொள்ளப்படவே சரணடைந்தார்.

ரஷ்ய இலக்கிய வளர்ச்சி

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பாதியில் ரஷ்யாவின் பண்ணை அடிமைமுறை, மன்னரின் பிற்போக்குக் கொள்கைகள், உயர் குடிமக்களின் சிறப்புரிமைகள் ஆகியவைகளுக்கெதிரான போராட்டங்களுக்கிடையே ரஷ்ய இலக்கியத்துறை பெரிதும் வளர்ச்சியுற்றது எனலாம். கற்றறிந்த மக்கள் எனக்குத் தேவையில்லை; நான் விரும்புவதெல்லாம் விசுவாசமான குடிமக்களே, என்று நிக்கோலஸ் கூறிய போதும் கற்றறிந்த பெருமக்கள் பலரின் பணியால் உன்னதமான நூல்கள் பல வெளிவந்தன. பழமைக்கு எதிரான புதுமைக் கருத்துக்களோடு இலக்கியப் பணியாற்ற முன்வந்த பலருள் மாஸ்கோ பல்கலைக் கழகத்தைச் சார்ந்த அலெக்ஸாந்தர், ஹெர்சன், பெலின்ஸ்கி ஆகியோர் சிறப்பிடம் பெற்றனர்.

நெப்போலியன் ரஷ்யா மீது படையெடுத்த ஆண்டான 1812-இல் பிறந்த ஹெர்சன் புரட்சிக் கருத்துக்கள் கைவரப்பெற்றவராக இருந்தார். வால்டேரின் எழுத்தோவியங் களான 'பதினான்காம் லூயியின் காலம்', 'பன்னிரண்டாம் சார்லஸின் வாழ்வு', 'இரு இந்தியத்தீவுகளில் அமைந்த ஐரோப்பிய வாணிபத்தின் தத்துவ, அரசியல் வரலாறு' போன்றவை அவரைப் பெரிதும் கவர்ந்தன. அவரது ஆசிரியர் பூசோ, ஒரு ஜாகோபின் கிளப் ஆதரவாளராக இருந்ததால் இளமையிலேயே புரட்சிக் கருத்துக்களைத் தன் இதயத்தில் பதித்துக் கொண்டார். மாஸ்கோ பல்கலைக்கழகத்தில் படிக்கும் போதே ஜெர்மானியரான ஹெகலின் தத்துவங்களையும், பிரான்சு நாட்டு செயின்ட் சைமனின் கற்பனை சமதர்மக் கருத்துக்களையும் விரும்பிக் கற்றார். இவரது புரட்சிப் போக்கினை விரும்பாத அரசு இவரை நாடு கடத்தியது. 1840-இல் பீட்டர்ஸ்பர்க் திரும்பியவர் மறு ஆண்டே நோவ்கோராடுக்குக் கடத்தப்பட்டார். 1842-இல் அவர் மாஸ்கோவுக்குத் திரும்ப அனுப்பப்பட்டாலும் 1847-இல் தானே நாட்டை விட்டு வெளியேறி லண்டனை அடைந்தார். அங்கு 'மணி' (The Bell) என்னும் பத்திரிகையை 1857-இல் தொடங்கி அதில் 'எனது கடந்த காலமும் நினைவுகளும்' (My past and thoughts) என்னும் தலைப்பில் ரஷ்ய மண்ணின் உண்மை நிலையைப் படம்பிடித்துக் காட்டினார். அவர் விதைத்த சமதர்மக் கருத்துக்கள் பின்னாளில் தோன்றிய புரட்சி இயக்கங்களுக்கு வித்திட்டன. அடிமைகள் விடுதலைக்காக வேண்டி பெரிதும்பாடுபட்டார். ஸாரை (பேரரசரை) நம்பி பயன் இல்லை என்றார். மக்களின் விடுதலைக்காக எல்லோரும் சேர்ந்து போராடியே ஆகவேண்டும் என்று வலியுறுத்தினார்.

பெலின்ஸ்கி (1811 - 1848) ஹெர்சரின் நெருங்கிய நண்பரும் நல்ல விமர்சகரும் ஆவார். இவர் தம் எழுத்து வன்மையால் பல உயர்ந்த எழுத்தாளர்களை தம்பால் இழுத்தார். நிலமானிய முறைக்கெதிரான 'தி மித்திரிகாலின்' என்ற நாடகமொன்றை எழுதியதற்காக மாஸ்கோ பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். அதன் பின்னர் பத்திரிகையுலகின் பக்கம் தன் பார்வையைத் திருப்பினார். அவரது முதலாவது வெளியீடு 'இலக்கியப் பிரதிபலிப்புகள்' (Literary Reflections) ஆகும். தொடக்கத்தில் அவர் இயல்புவாதக்கொள்கையைக் கொண்டிருந்தாலும், நாளடைவில் சமதர்மக் கருத்துக்களைக் கடைப்பிடித்தார். அவரது இடைவிடா பிரசாரத்தின் காரணமாக ஜனநாயகச் சிந்தனையாளர்கள் என்ற புதியதோர் போராட்டக் குழுவினரை உருவாக்க

முனைந்தார். மேற்கத்திய சமதர்மக் கருத்துக்களை விரும்பிய அதேநேரத்தில் ரஷ்ய சமுதாயத்தின் அடித்தளத்தில் இழிவுக்கும், பழிச்சொல்லுக்கும் ஆளான நிலையில் துன்பம் ஒன்றினையே துணையாகக் கொண்டிருந்த ஏழை எளிய மக்களின் நிலை உயரவும் எழுதினார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் இன்னும் பல புகழ் பெற்ற இலக்கியங்கள் உருவாகின. புரட்சிகரமான ஜனநாயகக் கோட்பாடுகளை உருவாக்குவதில் மைக்கேல் பெட்ரோ சேவ்ஸ்கி பெரிதும் வெற்றி கண்டார். மருத்துவர் ஒருவரின் மைந்தரான இவர் வெளிநாட்டுறவு அமைச்சகத்தில் மொழி பெயர்ப்பாளராகப் பணியாற்றினார். முற்போக்கு எண்ணம் கொண்ட உயர்குடிமக்களும், நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்த சிந்தனையாளர்களும், இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டோரும் இவரது இல்லத்தில்கூடி ஹெர்சன், பெலின்ஸ்கி ஆகியோரின் இலக்கியங்களை ஆய்ந்து அவற்றின் கொள்கைகளைப் பரப்பினர். இக்குழுவைச் சார்ந்த 39 பேர் புரட்சிக்கான சதித்திட்டங்களைத் தீட்டியதற்காகக் கைது செய்யப்பட்டு விசாரணைக்குப்பின் மரண தண்டனை விதிக்கப்பட்டனர். பின்னர் மன்னரின் தயவைப் பெற்றுச் சிறைவாழ்வை மேற்கொண்டனர்.

நவீன ரஷ்ய இலக்கிய உலகின் தந்தையெனப் போற்றப்படும் அலெக்ஸாந்தர் புஷ்கின் தோன்றிய காலமும் இதுவே. அவரது உரைநடை நூல்களான 'பெல்கின் கதைகள்', 'தளபதியின் மகள்', 'மண்வெட்டி ராணி' போன்றவையும், கவிதை நூல்களான 'போல்தாவா', 'பேராசை வீரன்', 'கல் விருந்தாளி', 'வெண்கலக் குதிரை வீரன்' போன்றவையும் புகழ்பெற்றவை. அவரது நூல்கள் அனைத்தும் கருத்தாழம் கொண்டவையாகவும், மிகவும் இனிமை கொண்டவையாகவும், செவிக்கு உணவளிப்பனவாகவும் அமைந்திருந்தன.

நிக்கோலாய் செரன் சேவ்ஸ்கி (1828 - 89) இவரும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திய மாபெரும் எழுத்தாளரும் அறிஞரும் ஆவார். ஹெகல் போன்றவர்களின் பெரும் கருத்துக்களை திறனாய்வுடன் கற்றார். ஆடம்ஸ்மித், ரிக்கார்டோ போன்றவர்களின் பொருளாதாரக் கொள்கைகளையும் அலசி ஆராய்ந்திருந்தார். ரஷ்ய விவசாயிகளின் நிலமையையும் அவர்களின் தேவைகளையும் நன்கு அறிந்து வைத்திருந்தார். வெளிநாடுகளில் உள்ள மக்கள் விடுதலை இயக்கங்களுடனும் தொடர்பு கொண்டிருந்தார். முதலாளித்துவம், நிலமானியம் போன்ற முறைகளுக்கு எதிரான கருத்துக்களைப் பரப்பினார். வரலாற்றுச் செய்திகளை குறிப்பிடும்போது வர்க்க போராட்டத்தையும் குறிப்பிடுவார். மக்களின் பொருளாதார நிலைமை பற்றியும் கூறுவார். உழைக்கும் மக்கள் போராடினால் ஓர் புதிய முறையை உருவாக்கலாம் என்று எடுத்துரைத்தார். விவசாயிகள் செய்யும் புரட்சியே விவசாயிகளை அடிமை முறை, வறுமை முதலியவற்றில் இருந்து விடுவிக்க முடியும் என்று திட்டமாக நம்பினார்.

அரசியல் நிலை

1848-ஆம் ஆண்டுப் பிரான்சில் புரட்சி மூண்டபோது பிரான்சின் மன்னர் பதவி துறந்தார். புரட்சி அரசுடன் உறவுகொள்ள விரும்பாத முதலாம் நிக்கோலஸ் பிரான்சுடன்

மேற்கொண்ட அரசியல் தொடர்புகளை முறித்துக் கொண்டார். பிரான்சினைத் தாக்கும் பொருட்டு மோல்டேவியா - வாலச்சியா ஆகிய பகுதிகளுக்குள் அனுப்பப்பட்ட படை 1851-ஆம் ஆண்டு திரும்ப அழைத்துக் கொள்ளப்பட்டது. ஆஸ்திரியாவை விட்டு மெட்டர்னிக் ஓடிவிடவே, முதலாம் பெர்டினண்டு பதவி துறந்தார். அதன் பின்னர் ஆஸ்திரிய மன்னராகப் பிரான்சிஸ் ஜோசப் என்பார் பதவியேற்றார். ஆஸ்திரிய - ரஷ்யக் கூட்டுப்படைகள் ஹங்கேரியப் புரட்சியாளர்களைத் தோற்கடித்தன. அதன் பின்னர் ஹங்கேரி தலைவர் கோசுத்தும் ஏனையப் புரட்சியாளர்களும் துருக்கியில் அடைக்கலம் புகுந்தனர். அவர்களைத் தங்களிடம் ஒப்படைக்குமாறு ரஷ்யாவும், ஆஸ்திரியாவும் கோரவே, துருக்கி மறுத்தது. இதனைத் தொடர்ந்து கீழ்த்திசைப் பிரச்சினை மீண்டும் சிக்கலுக்குள்ளாகியது. ஹங்கேரி மக்கட்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்ட ஆங்கிலேயர்கள் மனம் குமுறினர். அவர்களுக்கு ஆதரவாகப் போரிடவும் பலர் முன் வந்தனர். இதனால் இலண்டன் மாநாட்டு விதிகளையும் மீறி இங்கிலாந்தின் கப்பல்கள் சில டார்டனல்ஸ் நீரிணைப்புக்குள் சென்றன. இதற்குள் துருக்கியுடனிருந்த அரசியல் உறவினை முறித்துக் கொண்டிருந்த ரஷ்யா போருக்குத் தயாராக இருந்தாலும் இங்கிலாந்தின் போர் நடவடிக்கைகளால் உடனடியாகப் போர் நடவடிக்கைகள் மேற்கொள்ளுவதை நிறுத்தி வைக்க வேண்டியதாயிற்று. எனினும் போர் 1853-ஆம் ஆண்டு மூண்டது. 1855-ஆம் ஆண்டு முதலாம் நிக்கோலஸ் மரணமடைந்தார்.

கிரிமியப் போர் மேற்கத்திய நாடுகளின் முதலாளித்துவக் கோட்பாட்டிற்கும், ரஷ்யாவின் நிலமானிய அரசியல் முறைக்குமிடையே நடைபெற்ற போராகும். இப்போர் முதலாம் நிக்கோல்ஸின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளின் பலவீனத்தை மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டியது. இதன் மூலம் ரஷ்யாவின் பேரும் புகழும் மங்கின. இப்போரில் ஏற்பட்ட தோல்வி ரஷ்யாவின் மக்களிடையே சீர்திருத்தத்தின் அவசியத்தை வலியுறுத்திற்று. இரண்டாம் அலெக்ஸாந்தர் காலத்தில் அது நிறைவேறியது.

பயிற்சி வினாக்கள்

1) இரண்டாம் அலெக்ஸாந்தர் அரியணையேறிய போது ரஷ்யாவின் நிலையை வரைக.

2) இரண்டாம் அலெக்ஸாந்தர் பட்டமேற்கும் போதிருந்த அரசியல், இலக்கிய, பொருளாதார நிலைமையை ஆய்க.

பாடம் – 4

இரண்டாம் அலெக்ஸாந்தரின் (1855 – 1881) சீர்திருத்தங்கள்

ஸார் இரண்டாம் அலெக்ஸாந்தர் கி.பி. 1818-ஆம் ஆண்டு ஏப்ரல் 17-ஆம் நாள் மாஸ்கோவில் பிறந்தார். இவர் முதலாம் நிக்கோலஸின் மூத்த மகனாவார். இவர் இளமை வாழ்க்கையை கண்ணுற்ற யாவரும் இவரை ஒரு சீர்திருத்தவாதி என்று கூறமாட்டார்கள். இவர் ஜீகோவ்ஸ்கி என்ற கவிஞரிடம் பயிற்சி பெற்றதனால் மனிதாபிமான குணம் நிரம்பப் பெற்றார். இவருக்குப் பல ஐரோப்பிய மொழிகள் தெரியும். 1841-ஆம் ஆண்டு ஏப்ரல் 16-இல் ஹெஸி கோமகனான இரண்டாம் லூயி மகளான மேரியைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு ஆறு புதல்வர்களும் இரண்டு புதல்வியரும் பிறந்தனர். 1839-ஆம் ஆண்டு இங்கிலாந்துக்குப் பயணம் செய்தார். பட்டம் ஏற்பதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னர் வியன்னா, பெர்லின் போன்ற இடங்களுக்குப் பலமுறை அரசாங்க அலுவல் காரணமாகச் சென்று வந்துள்ளார்.

1855-ஆம் ஆண்டு கிரிமியப்போர் நடந்து கொண்டிருந்தபோது தன் தந்தை நிக்கோலஸ் மறைந்து விட்டதனால் இரண்டாம் அலெக்ஸாந்தர் பட்டமெய்தினார். போரைத் தொடர்வதால் பயனேதும் இல்லை என்று கருதிய அலெக்ஸாந்தர் அமைதி ஒப்பந்தத்திற்குச் சம்மதம் தெரிவித்தார். அதன்படி 1856-இல் பாரிஸ் மாநாட்டில் அமைதி ஒப்பந்தம் கையெழுத்தாகியது. இவ்வமைதி ஒப்பந்தம் ரஷ்யாவிற்குப் பாதகமாகவே அமைந்தது. படைபலத்தை பெருக்குவதான் மூலம் ரஷ்யாவின் பலத்தை பெருக்க வேண்டும் என்ற முதலாம் நிக்கோலஸின் கொள்கை, தவறானது என்பதை கிரிமியப் போர் நிரூபித்து விட்டது. எனவே, ஐரோப்பாவில் ரஷ்யாவிற்கு நிலையான ஓர் இடத்தைப் பிடிப்பதென்றால், ரஷ்யாவின் இயற்கை வளத்தைப் பெருக்குவதன் மூலமும், ஆட்சி முறையினைச் சீரமைப்பதன் மூலமும் தான் முடியும் என்ற முடிவுக்கு ரஷ்ய மக்கள் வந்தனர். எனவே, மக்களின் வேண்டுகோளுக்கிணங்கி அரசு பல தீவிர சீர்திருத்தங்களை மேற்கொண்டது.

ஆரம்பத்தில் சீர்திருத்தங்களை அலெக்ஸாந்தர் நிதானமாக மேற்கொண்டது கண்டு சீர்திருத்தவாதிகள் முணுமுணுத்தனர். இருப்பினும், தொழிற்சாலைகள், வாணிபம் சம்பந்தமான சீர்திருத்தச் சட்டங்கள் இயற்றப்பட்டன. பொருளாதார ரானுவ காரணங்களுக்கு வேண்டி இருப்புப் பாதைகள் போடத் திட்டமிடப்பட்டன. 1861-ஆம் ஆண்டு அடிமைகள் ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. மேலும், தரைப்படை கப்பல் படை ஆகிய துறைகளிலும் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. நீதித்துறையில் பிரான்ஸ் நாட்டைப் பின்பற்றிச் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டது புதிய தண்டனைச் சட்டத்தொகுப்பு அமைக்கப்பட்டது. சிவில், குற்றவியல் செயல்முறை (Procedure) தொகுப்புகள் எளிதாக்கப்பட்டன. கிராமப்புற நகர்ப்புற மாவட்டங்களில் ஆட்சி செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களைக் கொண்ட ஸ்தல ஆட்சி முறை அமைக்க வழி செய்யப்பட்டது. உள்துறை அமைச்சரின் அதிகாரத்தின் கீழ் இயங்கும் புதிய கிராமப்புற, நகர்ப்புற காவல்துறை அமைக்கப்பட்டது. இப்புதிய அமைப்புகள் பழைய

நிறுவனங்களைவிட சிறப்பு வாய்ந்தனவாக இருந்தன. அவற்றை ஒவ்வொன்றாகப் பார்ப்போம். இச்சீர்திருத்தங்களைச் செயல் படுத்திட மன்னரே முன் நின்றார். 1856-இல் மன்னர், பிரபுக்கள் மத்தியில் மாஸ்கோவில் பேசிய போது 'பண்ணை அடிமைகள் விடுதலை பெறும் வழிமுறைகள் சமுதாய அமைப்பின் கீழ்நிலையிலிருந்து வரும் என்று காத்திருப்பதைவிட அரசின் மேல் மட்டத்திலிருந்தே அத்தகைய விடுதலையை அளித்திட விரும்புகிறேன்' எனக் கூறினார்.

இரண்டாம் அலெக்ஸாந்தரின் பண்ணை அடிமை விடுதலைச் சட்டம் (1861)

பேரரசர் தாம் செய்யும் சீர்திருத்தங்களைத் தன்னிச்சையாகச் செய்து விட்டார் என்ற எண்ணம் பிறருக்கு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக பண்ணைக்குச் சொந்தக்காரர்களான பிரபுக்களின் எண்ணங்களையும் திட்டங்களையும் அறிந்த பின்னரே சீர்திருத்தம் குறித்துச் செயல்பட விரும்பினார். பிரபுக்களே மனம் திருந்தி பண்ணை அடிமைகள் விடுதலை பற்றிய முடிவுக்கு வந்தால் மன்னர் தாம் விரும்பிய சீர்திருத்தங்களை மேற்கொள்வது எளிதாகிவிடும் என்று எண்ணினார். பிரபுக்களிடமிருந்து மன்னர் எதிர்பார்த்த பதில் வரவில்லை.

எனவே மன்னர் தம் உள்துறை அமைச்சர் லான்ஸ்காயி (Lanskay) டம் ஆலோசனை நடத்தி அடிமை முறையினை படிப்படியாக நீக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறு உத்தரவு பிறப்பித்தார். அதன்படி மகாபீட்டர் காலம் முதல் அடிமை முறையின் தோற்றம், வளர்ச்சி, மன்னர்கள் அடிமை முறையை ஒழிக்க எடுத்த முயற்சிகள் ஆகியவை பற்றிய செய்திகளை லான்ஸ்காய் திரட்டலானார்.

பிரபுக்கள் இசைவோடு அடிமைகள் விடுதலை பற்றி முடிவுக்கு வரமுடியாது என்று எண்ணிய அலெக்ஸாந்தர், அரசே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். ரஷ்ய ஆட்சிமுறை வழக்கப்படி தன் தலைமையின் கீழ் ரகசியக் குழு ஒன்றை அமைத்தார். இவர் இல்லாதபோது பேரரசு கவுன்சிலின் தலைவரான ஆர்லாவ் என்பவர் ரகசிய குழுவிற்கு தலைமை தாங்குவார். ஆர்லாவ் (Orlav) அடிமை முறை தேவை என்பதில் நம்பிக்கை கொண்டவர். குழு உறுப்பினர்களில் பெரும்பாலோரும் அடிமை ஒழிப்பில் அக்கரை இல்லாதோர் ஆவார். அக்குழுவில் லான்ஸ்காயும் அவருக்குத்துணையாக மன்னரின் பாதுகாப்புப் படைத்தளபதியான ஜேகப் — ரஸ்டோவ்ஸ்டெவ் என்பவரும்தான் அடிமை ஒழிப்பில் அக்கரை காட்டினர்.

முதல் கூட்டத்திற்கு ஸார் இரண்டாம் அலெக்ஸாந்தரே தலைமை தாங்கினார். தலைமை உரையில், தன்னுடைய மூதாதையர் பலர் அடிமைகள் நலனில் அதிக ஆர்வம் காட்டியதாகவும், அடிமைகள் குறித்து அவர்கள் எடுத்த முடிவில் ஓரளவு வெற்றி கண்டனர் என்றும், இப்போது அடிமை முறையினை அடியோடு ஒழிக்க வேண்டும் என்றும் பேசினார். இது குறித்து உள்துறை அமைச்சகம் பல வினாக்களை எழுப்பிற்று. அவை, அடிமைகள் தங்கள் உபயோகத்தில் வைத்திருக்கின்ற நிலங்கள் உள்பட எல்லா நிலங்களும் நிலப்பிரபுக்களுக்குச் சொந்தமா? அப்படியானால் நிலப்பிரப்புக்கள் வழக்கமாக வைத்திருக்கின்ற நில அடிமைகள் சட்டபடி அங்கீகரிக்கப்படுவார்களா?

மேலும் நில அடிமைகளின் சேவைகளையும், நிலங்களையும் நிலப்பிரபுக்கள் இழப்பதால் அவர்களுக்கு இழப்பீடு கொடுக்கப்படுமா? அப்படியானால் அரசாங்க கருவூலகத்திற்கு எவ்வளவு சுமையாக இருக்கும்? இதுபோன்ற கேள்விகள் எழுந்தன. இக்கேள்விகளைப் பரிசீலனை செய்து பரிந்துரை செய்வது இக்குழுவின் நோக்கமாகும். இக்குழுவில் பெரும்பாலானோர் அடிமை முறை தேவை என்பதை விரும்புவோர். ஆதலால், அடிமை ஒழிப்பு குறித்து நடவடிக்கை எடுக்கத் தடையாக இருந்தனர். ஆகவே, உள்துறை அமைச்சகம் தானே நடவடிக்கைகள் எடுக்க ஆரம்பித்தது. அச்சமயம் பேரரசர் ஜெர்மனிக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். இவ்வேளையில் லான்ஸ்காய் நிலங்கள் அனைத்தும் நிலச்சுவான்தார்களுக்கே சொந்தம் என்றும், விவசாயிகள் தாங்கள் குடியிருக்கும் வீடு, பண்ணைவெளி ஆகியவை விவசாயிகளுக்கே சொந்தம் என்றும், அதற்குரிய பணத்தை 10 முதல் 16 ஆண்டுகளில் தவணை முறையில் விவசாயிகள் செலுத்தலாம்; இதனைப் பணமாகவோ உழைப்பாகவோ செலுத்தலாம்; விவசாயிகள் தனியுரிமைக்காக பிரபுக்களுக்குக் கட்டும் பணத்தைக்கட்ட வேண்டியது இல்லை என்றும் தற்காலிகமாக முடிவு எடுத்தார்.

பயணத்தை முடித்து ரஷ்யாவிற்கு வந்த ஸார் அலெக்ஸாந்தர் ரகசியக் குழுவின் நடவடிக்கை குறித்து மனம் வருந்தினார். ஆகவே, தீவிர சீர்திருத்தவாதியான கான்ஸ்டன்டைன் என்பவரை ரகசியக் குழுவின் உறுப்பினராக்கினார். இவ்வேளையில் லிதுவேனியாவின் தலைமை ஆளுநரான நஜிமோவ் என்பவர் லிதுவேனியா பிரபுக்கள் கொடுத்த மனு ஒன்றினைக் கொண்டு வந்தார். அம்மனுவில் லிதுவேனியாவின் பிரபுக்கள் நிலமனைத்தையும் தாங்களே சொந்தமாக வைத்துக்கொண்டு நில அடிமைகளுக்கு தனி மனிதன் சுதந்திரம் அளிக்க அனுமதி வழங்குமாறு கேட்டிருந்தனர். ரகசியக் குழுவில் உள்ள பெரும்பாலோர் இந்த வேண்டுகோளை ஆதரித்தனர். ஆனால், அலெக்ஸாந்தர் நில அடிமைகளுக்கு நிலமின்றி விடுதலை கொடுப்பதாக இருந்த அந்த வேண்டுகோளை நிராகரித்தார். மேலும், லான்ஸ்காய் திட்டப்படி சட்டமியற்ற நடவடிக்கை எடுக்குமாறு ரகசியக் குழுவைக் கேட்டிருந்தார்.

1857-ஆம் ஆண்டு டிசம்பர் இரண்டாம் தேதி ஸார் அலெக்ஸாந்தர் 'பேரரசர் உத்தரவு' ஒன்றினை நஜிமோவிற்குக் கொடுத்தார். அந்த உத்தரவில் லிதுவேனியப் பிரபுக்களின் வேண்டுகோளுக்குப் பதில் அளித்திருந்தார். அந்த உத்தரவின்படி நஜிமோவ் லிதுவேனியா மாநிலத்தின் மூன்று மாவட்டங்களுக்கும் மூன்று குழுக்களை அமைத்து அந்தக் குழுக்கள் கீழ்க்கண்ட கருத்துக்களை மனத்தில் வைத்துக்கொண்டு முடிவு எடுக்க வேண்டும். அவ்வாறு எடுத்த முடிவை உள்துறை அமைச்சருக்கு அனுப்புதல் வேண்டும் என்று இருந்தது. அதன்படி எல்லா நிலங்களையும் நிலச்சுவான்தார்கள் சொந்தமாக வைத்துக்கொள்ளலாம். நிலம் இருப்பினும், அடிமைகள் தங்களின் உபயோகத்தில் உள்ள பண்ணைவெளிகளைச் சொந்தமாக வைத்துக்கொண்டு அதற்குரிய பணத்தை சுலபத் தவணை முறையிலோ அல்லது உழைப்பின் மூலமோ சில குறிப்பிட்ட ஆண்டுகளுக்குள் கழித்துவிட வேண்டும். இந்நிலம் விவசாயிகளின் நல் வாழ்வுக்கும், வரி கொடுக்கவும் தேவையாதலால், அந்நிலம் அவர்களுக்கே சொந்தமாக்கப்படும். பண்ணை நீதிமுறை வழக்கத்தில் இருக்கும். இத்தகைய கருத்துக்களை மனத்தில் வைத்துக்கொண்டு முடிவை எடுத்த பின் மூன்று மாவட்டக் குழுக்களும் இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து

லிதுவேனியாவின் மாநில குழுவிற்கு அனுப்பவேண்டும். இவர்களோடு அந்தந்த மாவட்ட ஆளுநரால் நியமனம் செய்யப்பட்ட நிலச்சுவான்தாரில் ஒருவரும் உறுப்பினராகப் பங்குபெறுவார். உள்துறை அமைச்சரவையும், ஒரு பிரதிநிதியை இந்த மாநிலக் குழுவிற்கு அனுப்பும். இந்த மாநிலக்குழு மூன்று மாவட்டக் குழுக்கள் எடுத்த முடிவையும் ஆராய்ந்து மாநில முழுவதற்கும் ஒரு முடிவு எடுத்து அதனை உள்துறை அமைச்சருக்கு அனுப்பவேண்டும் என்ற உத்தரவை மன்னர் சமர்ப்பித்திருந்தார். மன்னரின் உத்தரவோடு லான்ஸ்காயும் நஜிமோவுக்கு ஒரு அறிவிப்பு செய்திருந்தார். அதன்படி 12 ஆண்டுகளுக்குப் பின்னர் நில அடிமை முறை முழுவதுமாக ஒழிக்கப்படவேண்டும் என்று இருந்தது. 12 ஆண்டுகளுக்குப் பின்னர் நில அடிமைகளை விற்பதோ, தங்கள் விருப்பப்படி நடத்துவதோ கூடாது என்று முடிவு செய்யப்பட்டது. மன்னரின் உத்தரவையோ லான்ஸ்காயின் அறிவிப்பையோ வெளியிடுதல் தேவை என்று கருதப்படவில்லை. ஆனால், மன்னர் உத்தரவிட்ட இரண்டு நாட்களில் ரஷ்யாவின் மத்தியமாநில பிரபுக்களுக்கும் பிறமாநில பிரபுக்களுக்கும் அடிமைகள் விடுதலைபற்றிய தன் கருத்துக்களைத் தெரிவிக்கலானார். எனவே அடிமைகள் விடுதலை பற்றிய பிரச்சினையை லிதுவேனியா மாநிலத்தில் மட்டுமல்லாமல், ரஷ்யா முழுமைக்கும் எடுக்கவேண்டிய நிலைமை தோன்றிற்று. பேரரசரின் கொள்கை யாருக்கும் பாதிப்பு இல்லாத ஒன்றாகும். அலெக்ஸாந்தர் பிரபுக்களை வேண்டுவதெல்லாம், பாமர விவசாய அடிமைகள் விடுதலையில் பிரபுக்களே அதிக அக்கரை காட்டவேண்டும் என்பதுதான். இப்பிரச்சினை குறித்து இன்னும் காலம் தாழ்த்துவது முடியாத காரியம். இன்னும் காலம் தாழ்த்தாமல் உடனடியாக முடித்துவிடவேண்டும் என்பதுதான் மன்னரின் அசைக்கமுடியாத எண்ணமாகும்.

எனவே, இதுகாறும் இந்த ரகசிய குழு இப்பொழுது 'விவசாயிகள் பிரச்சினை குறித்து எழும் கருத்துக்களையும், திட்டங்களையும், ஆராயும் முக்கிய குழு' என்று அதிகாரபூர்வமாக உருவாக்கப்பட்டது. விவசாய விடுதலை பற்றி மன்னர் செய்த அறிவிப்பு ரஷ்ய சமுதாயத்தை இரண்டாகப் பிரித்தது. ஒன்று அடிமை முறையை ஒழிப்பவர்கள் (abolitionists), மற்றொன்று அடிமை முறை தேவை என்போர் (Planters) ஆவர். அடிமைமுறை ஒழிப்பாளர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் தாராளக் கொள்கை கொண்ட அலுவலர்கள் போன்றோர். இவர்கள் மன்னருக்கு ஆதரவாகப் பொதுமக்களிடம் பிரச்சாரம் செய்தனர். 1858-ஆம் ஆண்டு ஜனவரியில் மாஸ்கோ வர்த்தகச் சங்கம் நடத்திய பெருவிருந்தில் ரஷ்யமக்களின் ஒவ்வொரு சமுதாயத்தினரின் எண்ணத்தையும் பிரதிபலிக்கும்படியாக பல பேராசிரியர்கள் சொற்பொழிவாற்றினார்கள். கோகோநிரவ் என்ற கோடீஸ்வர வணிகர் பேசும்போது விவசாயிகள் நிலப்பிரபுக்களுக்குச் செலுத்தவேண்டிய பணத்தைக் கொடுக்க வியாபாரிகளும் நன்கொடை அளிக்கவேண்டும். ஏனென்றால், எல்லா வியாபாரிகளும் விவசாயக் குடும்பத்தில் இருந்து வந்தவர்கள்தான் என்று கூறினார். இவ்விருந்துச் சொற்பொழிவைத் தொடர்ந்து பல சொற்பொழிவு நிகழ்ச்சிகள் நடைபெறலாயின.

ரஷ்ய பத்திரிகைகளும் விவசாய அடிமைகள் பிரச்சினை பற்றிக் கருத்துக்கள் வெளியிட உரிமை பெற்ற பின் அடிமை விடுதலை பற்றி ஆதரித்து கருத்துக்களையும்,

கட்டுரைகளையும் வெளியிட்டன. சொர்னிசேவ்ஸ்கி என்ற பத்திரிகையாசிரியர் அலெக்ஸாந்தரை மகா பீட்டரோடு ஒப்பிட்டார்.

அரசாங்கத்தில் உள்துறை அமைச்சர் லான்ஸ்காய், அவர் உதவியாளர்கள் சோலோவியவ் நிகோலஸ் மிலியடின், வெளியுறவு அமைச்சர் அலெக்சாந்தர் சோர்ச்சாகோவ் போன்றோர் அடிமை விடுதலை ஒழிப்பில் அதிக ஆர்வம் காட்டியவர்கள். அடிமைமுறை தேவை என்போருக்கு தலைமையேற்றவர்கள் செல்வாக்கு மிகுந்த அமைச்சர்களான ஆர்லாவ், பானின் போன்றோராவர். இவர்கள் அடிமைமுறை ஒழிக்கப்பட்டால் இருக்கின்ற சமுதாய அமைப்புமுறை மாறிவிடும் என்று கருதி, எப்படியும் அடிமை முறையைக் காக்கவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு இருந்தனர். இவர்கள் அடிமைமுறை ஒழிக்கப்பட்டால் விவசாயிகள் புரட்சி தவிர்க்க முடியாதது என்று மன்னரை அச்சுறுத்தினர். மன்னர் மனம் தளரவில்லை. அடிமை விடுதலை பற்றித் திட்டம் தீட்ட அமைக்கப்பட்ட அனைத்து மாநிலக் குழுக்களிலும் அடிமை முறை வேண்டும் (Planters) என்போர் தான் பெரும்பான்மை இடம் பெற்றிருந்தனர். அக்குழுவில் அடிமை முறை ஒழிப்பை ஆதரிப்போரான விழிப்புணர்ச்சி பெற்ற சிறுபான்மையினர்தான் இருந்தனர். முக்கிய குழுவிலும் இவ்வாறுதான் இருந்தனர். எனவே, இத்தகைய எதிர்ப்புக்கிடையே மன்னரின் உத்தரவை சட்டமாக்குவது ஐயத்திற்குரிய பிரச்சினையாகவே இருந்தது. எப்படியிருந்தாலும் ரஷ்ய வரலாற்றிலேயே முதன் முறையாகக் கீழ் மட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு விவசாய பிரச்சினை போன்ற முக்கிய பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டன. மாநில குழுக்களின் நடவடிக்கைகள் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்று உள்துறை அமைச்சர் அறிவிப்பு செய்தார். அதன்படி அடிமை விடுதலையின் முக்கிய நோக்கம் விவசாயிகள், தங்கள் பிரபுக்களிடம் இருந்து நிலங்களின் முழுச் சுதந்திரத்தையும் பெறுதல் வேண்டும். அதற்கேற்ற வகையில் சட்டங்கள் தீட்டவேண்டும் என்று லான்ஸ்காய் அறிவித்தார். ஆனால், இத்திட்டத்தை முக்கிய குழு எதிர்த்தது. எனவே, ரஸ்டேவ்ஸ்ட்செவ் முயற்சியால் லான்ஸ்காய் அறிவிப்பில் மாறுதல் செய்யப்பட்டது. அதன்படி விவசாயிகள் தனிமனித உரிமை பெறுவர். அவர்கள் குடியிருக்கும் வீட்டையும் பண்ணை வெளிகளையும் வழக்கப்படி பயன்படுத்திக் கொள்ளலாம். விவசாயிகள் சொந்தமாக வைத்துக் கொள்ள அனுமதிப்பதும், அதற்குரிய பணத்தைக் குறிப்பிட்ட காலத்திற்குள் பெறுவதும் பிரபுக்களுடைய விருப்பத்தைப் பொறுத்தது என்ற திட்டத்தை முன்வைத்தார். இதனை முக்கிய குழு ஏற்றுக்கொண்டது மன்னரும் ஓரளவு மனநிறைவுற்றார்.

இவ்வேளையில் செய்தித்தாள் தணிக்கை கடுமையாக இல்லை. ஆகவே, பேராசிரியர் கேவ்லின் (Kavalin) என்பவர் அடிமை விடுதலை குறித்து இரண்டு கட்டுரைகள் வெளியிட்டார். அதில் அரசாங்கம், நிலச்சுவான்தார்கள், விவசாயிகள் ஆகியோர்களின் உறவு குறித்து மூன்று கருத்துக்கள் வெளியிட்டார். (1) நில உடைமையாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் இடையே இருக்கும் சட்டப்பூர்வமான உறவு முறிக்கப்பட வேண்டும். ஏனென்றால், ரஷ்ய நீதிமன்றம் இன்னும் பல ஆண்டுகளுக்கு இந்த இரு சாராருக்கும் இடையே பாரபட்சமற்ற முறையில் நடந்து கொள்ள முடியாது. (2) நில அடிமைகள் நங்களுடைய பொறுப்பில் விவசாயம் செய்து வரும் நிலமனைத்தையும் தாங்களே வைத்துக் கொள்ளலாம். (3) நிலச்சுவான்தார்களுக்கு கொடுக்கப்படும் இழப்புத் தொகையை அரசாங்கம் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்திய பணத்தை அரசாங்கம்

விவசாயிகளிடம் நீண்ட காலத் தவணை முறையில் பெற்றுக்கொள்ளலாம். இக்கருத்துக்கள் குறிப்பாக, விவசாயிகள் வைத்திருக்கும் நிலமனைத்தும் சொந்தமாக்கப்பட வேண்டும் என்ற கருத்து ஆபத்தானதாகக் கருதப்பட்டது. மன்னரும் முக்கிய குழுவின் கருத்தை அப்போதைய சூழ்நிலையில் ஒத்துக்கொண்டார். மேலே குறிப்பிட்ட கருத்தினை வெளியிட்ட கேவ்லின் தம் ஆசிரியர் பதவியை இழந்தார். செய்தித்தாள் தணிக்கை கடுமையாக்கப்பட்டது.

அடிமைமுறை தேவை என்போருக்கு (Planters) சிறிது சலுகை அளித்த மன்னர் நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொள்ள முடிவு செய்தார். சென்ற இடங்களிலெல்லாம் பிரபுக்களில் ஒரு சிறு பிரிவினராவது மன்னருடைய கொள்கையான அடிமை விடுதலையில் அக்கறை காட்டிலர். பீட்டர்ஸ்பர்க்கிற்கு வந்த மன்னர் லான்ஸ்காய் ரஸ்டோவ்செவ் ஆகியோர்களின் ஆலோசனையின் பேரில் அடிமைகள் விடுதலை குறித்து முக்கிய குழு கொடுத்த அடிப்படையில் முடிவு எடுக்கலாயினர். லான்ஸ்காய், முக்கிய குழுவை நீக்கிவிட்டு தன் துறையின் கீழ் இரண்டு புலனாய்வுக் குழுக்களை நியமித்தார். இவருக்கும் ரஷ்தோவ்செவ்க்கும் துணை செய்ய உள்துறை துணை அமைச்சர்களான மிலியூதின், சோலோவியவ் ஆகிய இருவரை நியமித்தார். பின்னர் மிலியூதின் இரு ஆய்வுக்குழுவையும் ஒன்றாக இணைத்து தொகுப்புக்குழு என்று ஆக்கினார். இத்தொகுப்புக்குழு அடிமைகள் விடுதலைபற்றி அலசி ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருவதற்குள் ரஸ்தோவ்செவ் 1860-இல் மரணம் அடைந்தார். அவருடைய இடத்தில் அடிமை முறையை ஆதரிப்போர்களின் ஆதரவாளரான பாணின் என்ற அமைச்சர் நியமிக்கப்பட்டார். நியமனம் செய்யப்படும்போது மன்னர் பாணினிடம் தொகுப்புக்குழுவில் ரஷ்தோவ்செவ் என்பவரின் எண்ணங்களைச் செயல்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். பாணின், ரஸ்தோவ்செவ் கொள்கைக்கு மாறுபட்டவர் எனினும் மன்னருடைய ஆணையைச் செயல்படுத்தும் உண்மையான அமைச்சரானதால் அடிமைமுறை ஒழிப்பு பற்றி தொகுப்புக்குழு எடுத்த நடவடிக்கைகளின் படியே செயல்பட்டார். 1861-இல் அடிமைகள் விடுதலைச் சட்டம் தயாரிக்கப்பட்டது. 1861 மார்ச் 3-ஆம் நாள் தனது ஆறாவது பட்டமேற்பு நாளன்று கையொப்பமிட்டு, மார்ச் 17-இல் ரஷ்யாவின் எல்லாத் திருச்சபைகளிலும் விடுதலைக் சட்டம் வாசிக்கப்பட்டது.

1861 ஆம் ஆண்டின் விடுதலைச் சட்டம் பதினேழு பெரும் பிரிவுகளையும், அதனுள் அடங்கிய பல்வேறு சிறுதுணை விதிகளையும் கொண்டதாக இருந்தது. இதன்படி அடிமை விவசாயிகள் தங்களுடைய நில உடைமையாளர்களின் அனுமதியின்றித் திருமணம் செய்துகொள்ளலாம். பிற மக்களுடன் தங்கள் விருப்பம் போல் பலவித ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளலாம். தாங்கள் தனியாகவோ, வேறுபலருடன் இணைந்தோ வாணிபம் செய்யவோ, வேறு தொழில் தொடங்கவோ உரிமை பெற்றனர். தங்களின் உரிமைகள் பறிக்கப்படும் என அஞ்சினால் சட்டத்தின் துணையையும் நாடலாம். விடுதலை பெற்ற இவ்விவசாயிகள் சொத்துக்களை வாங்கவும், விற்கவும் உரிமை உண்டு. தாங்கள் வாங்கியசொத்துக்களை தங்கள் விருப்பம் போல் பயன்படுத்திக் கொள்ளவும், நடைமுறையிலிருக்கும் சம்பிரதாய முறையில் அவற்றைத் தங்களுடைய வாரிசுகளுக்கு உடமையாக்கவும் உரிமை பெற்றனர்.

விவசாயிகள் தனிமனித உரிமை பெற்றாலும் கூட பொருளாதாரத் துறையில் அவர்கள் சிக்கல்களுக்குள்ளாயினர். மேற்கு மாநிலங்களைத் தவிர ஏனைய மாநிலங்களில் அடிமை விவசாயிகள் தாங்கள் உபயோகத்தில் வைத்திருந்த நில அளவைவிடக் குறைவாகவே பெற்றனர். ஆனால், விடுதலை அறிவிப்பிற்கு முன்னர், வாரத்தில் மூன்று நாளாவது முதலாளியின் நிலத்தில் அடிமை விவசாயியாக வேலை செய்யவேண்டும் என்ற நிலை இப்பொழுது இல்லை. வாரம் முழுவதும் தம் நிலத்திலேயே வேலை செய்யலாம். நிலச்சுவான்தார்களுக்குச் சொந்தமான மலைக்காடுகளில் விறகு போன்ற எரிபொருட்கள் எடுக்கவோ, நிலச்சுவான்தார்களின் மேய்ச்சல் நிலங்களில் தங்கள் ஆடுமாடுகளை மேய்க்கவோ கூடாது. எனவே, பெரும்பாலான விவசாயிகள் கடனுக்குள்ளாயினர். நிலஉடைமையாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய இழப்புத் தொகையில் எண்பது சதவீதத்தை முன்பணமாக அரசாங்கமும், இருபது சதவீதத்தை விவசாயியும் செலுத்த வேண்டும். இப்பணத்தை அரசே விவசாயிக்குக் கடனாக அளித்தது. இக்கடனை விவசாயி வட்டியுடன் 49 ஆண்டுகளில் செலுத்தலாம். இம்முறை, நில உடைமையாளர்களை மனநிறைவு பெறச் செய்யப்பட்டதே ஒழிய உண்மையில் விவசாயிகளின் நல்வாழ்வுக்காகச் செய்யப்பட்டது அல்ல. இக்கடனை விவசாயிகள் குறிப்பிட்ட காலத்திற்குள் கட்டாத காரணத்தால் நிலுவைத் தொகை கூடிக்கொண்டே போயிற்று. இக்கடன் பற்றிய மறுபரிசீலனை 1896-ஆம் ஆண்டு செய்யப்பட்டபோது, 1950 வரை அரசுக் கடனைத் திருப்பிச் செலுத்தலாம் என்று தவணைக் காலம் நீடிக்கப்பட்டது. 1905ஆம் ஆண்டு வரை விவசாயிகள் நில உடைமையாளர்களுக்கு 500 ரூபிள் பெறுமானமுள்ள நிலத்திற்கு ரூ. 2000 வரை செலுத்தியபின்னும் கடன் தீரவில்லை. இரண்டாம் அலெக்ஸாந்தரின் அடிமைகள் விடுதலைச் சட்டம் (1861), மக்களை பிரபுக்களிடம் இருந்து விடுதலைச் செய்தது. ஆனால், அவர்களை பின்னர் அரசின் நிரந்தர கடனாளிகளாக ஆக்கியதேத் தவிர அவர்களுக்கு விடுதலை அளிக்கவில்லை. அவ்விவசாயிகள் கடன் ஒருபுறமிருக்க, வறுமையில் வாடி வதங்கினர். இவ்விவசாயிகள் தனி மனிதனின் சுதந்திரம் ஓரளவு பெற்றிருந்தாலும், கட்டாயப் படைப் பணியிலிருந்தும், உடலை வருத்தும் கடுந்தண்டனையிலிருந்தும் விடுதலை கிடைத்த பாடில்லை. விவசாயிகளை, வரிவசூலிப்போரும் மத்திய அரசின் போலீஸ் அதிகாரிகளும் கொடுமைபடுத்தினர்.

விவசாயிகள் தனி மனித விடுதலை பெற்றிருந்தாலும் கம்யூன்களின் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்ததால் விடுதலைச் சட்டம் எதிர்பார்த்த அளவிற்கு வெற்றியளிக்கவில்லை. வரிவிதிப்பும் விவசாயிகளின் வருமானத்திற்கு ஏற்றவாறு அமையவில்லை. கம்யூன் உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் உடன்பாட்டின்படி, கம்யூன் மூலமே விவசாயிகள் தங்களுக்கு விதிக்கப்பட்ட தலைவரியைக் கட்டவேண்டும். கம்யூன் கூட்டமைப்பை நிர்வகிக்கவும், ஒழுங்கை நிலை நாட்டவும் சில உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். குற்றவாளிகளைத் தண்டிக்கவும், கைது செய்யவும், விசாரிக்கவும், கட்டாய உழைப்புக்கு உத்தரவிடவும் இவர்கள் அதிகாரம் பெற்றிருந்தனர். இவர்களுக்கு மேலாக வட்டார நிர்வாக கூட்டமைப்புக்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் இயங்கி வந்தன. நிலப்பிரபுக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நடுநிலைமையாளர் ஒருவரும் இருந்தார். இவர்கள் அரசின் காவல்துறை, உள்நாட்டுத்துறை அதிகாரிகளின் நேரடிக்

கண்காணிப்பிலேயே இருந்து வந்தனர். சிறு குற்றங்களையும், நிலத் தகராறுகளையும் விசாரிக்க வட்டார வழக்கு மன்றங்களும் இயங்கி வந்தன. இவையனைத்தும் விவசாயிகளின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தவே செய்யப்பட்டன. விவசாயிகள் பெற்ற நிலங்களை, தனியாரின் பொறுப்பில் விடுவதற்குப் பதிலாக கம்யூன் கூட்டுப்பொறுப்பில் விட்டதால் நிலத்தைப் பண்படுத்த வேண்டும் என்ற ஆர்வம் விவசாயிகளுக்கு இல்லாது போயிற்று.

இவ்விடுதலைச் சட்டத்தால் மிகவும் மோசமான நிலைமையில் பாதிக்கப்பட்டோர் பிரபுக்களின் மாளிகைகளில் வேலை செய்தவர்கள். இவர்கள் நிலமேதும் கிடைக்காததால் அவர்கள் நகரங்கள் நோக்கிச் சென்று புதிய வேலைகளைத் தேடலாயினர். பிரபுக்களின் பண்ணைகளில் இருந்த தொழிற்கூடங்கள், தனியாரின் நேரடிப் பொறுப்பில் இருந்த தொழிற்கூடங்கள் ஆகியவற்றில் பணிபுரிந்த அடிமைத் தொழிலாளர்களுக்கு தங்கள் வேலைகளை விட்டு வெளியேற வேண்டியதாயிற்று. இதனால், கம்பளி உற்பத்தி, சுரங்கத்தொழில் ஆகியவை பெருமளவிற்கு பாதிக்கப்பட்டது.

அடிமைகள் விடுதலைச் சட்டம், நடுத்தர முதலாளித்துவ சமுதாயத்தை உருவாக்கிற்று. நில உடமையாளர்களே தற்போதும் நாட்டின் முக்கிய குடிமக்களாகி அரசின் நிருவாக இயந்திரத்தை இயக்கலாயினர். விடுதலைச் சட்டத்தால் ஏமாற்றம் அடைந்த விவசாயிகள், காசன், பென்சா போன்ற மாநிலங்களில் உண்மையான விடுதலை வேண்டுமெனக்கோரி கிளர்ச்சி செய்தனர். இதனால், இராணுவம் சில இடங்களில் துப்பாக்கியால் சுட்டது. முழு விருப்பத்தோடு இச்சட்டம் இயற்றப்படாத காரணத்தால் இக்கிளர்ச்சிகள் ஏற்படலாயின. எனவே மன்னர் லான்ஸ்காய், மில்யூதின் ஆகியோரை அமைச்சர் பதவியிலிருந்து விலக்கினார், லான்ஸ்காய்க்குப் பதில் வலுயேவ் என்பவர் உள்துறை அமைச்சரானார்.

பிற சீர்திருத்தங்கள்

பிற சீர்திருத்தங்களைச் செய்வதற்கு அதிக எதிர்ப்புக்கள் இல்லையாததால் மன்னர் முழுமையான கவனத்தைச் செலுத்த வேண்டிய தேவையில்லாது போயிற்று. பல புதிய அமைச்சர்களை நியமித்து அவர்கள் மூலமாக அனைத்துச் சீர்திருத்தங்களையும் செய்தார். எந்த ஒரு சட்டம் கொண்டு வரவேண்டுமானாலும் மன்னர்தான் மூலகாரணமாக இருந்து, எத்தகைய முறையில் சீர்திருத்தச் சட்டம் இருக்கவேண்டும் என்கின்ற வரையறை கொடுப்பார். அதனை வைத்துக் கொண்டு அமைச்சரகம், மன்னர் கொடுத்த வரையறையை வைத்துத் தெள்ளத் தெளிவாக ஆராய்ந்து, அதற்கு ஒரு முழுவடிவு கொடுத்து மீண்டும் மன்னரிடம் சமர்ப்பிக்கும், மன்னரின் இசைவு பெற்ற பின்னர்தான் பேரரசுக்குழு (Imperial Council) விற்கு அனுப்புவார். பேரரசுக்குழு விவாதிக்கும்போது கருத்து வேறுபாடு தோன்றுமாயின் மன்னருடைய முடிவுதான் இறுதியானது.

உள்ளாட்சித்துறை (1864) Local Assembly (Zemstovs)

1864-ஆம் ஆண்டில் உள்ளாட்சித்துறைச் சீர்திருத்தச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. இதன்படி மாநிலங்களும், மாவட்ட ஊராட்சி சபைகளும்

தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு நடைபெறும். தேர்ந்தெடுக்கப்பட்ட அவை உறுப்பினர்கள் நிர்வாகக்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பர். இவர்களின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகள், ஊராட்சி மன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் வாக்காளர்களை மூன்று வகையாகப் பிரிப்பர். முதல் வகுப்பினர் நில உடைமையாளர்கள், குறிப்பிட்ட அளவு நிலம் வைத்திருப்போருக்கு ஒரு வாக்கு. சிறுசிறு நிலம் வைத்திருப்பவர்கள் மொத்தமாகச் சேர்ந்து ஒரு வாக்காளரைத் தேர்ந்தெடுத்து வாக்களிக்க அனுப்புவர். இரண்டாவது வகையில் சொத்துக்கள் வைத்திருக்கும் நகரத்து மக்கள். மூன்றாவது வகையில் மறைமுகத் தேர்தல் முறையில் விவசாயிகள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பர்.

உள்ளாட்சித்துறை அங்கங்கள் (Zemstovs) ஆண்டுக்கு ஒரு முறை கூடும். அவ்வேளையில் செய்து முடித்த பணிகளைப் பற்றியும், செய்யவிருக்கும் திட்டங்களைப் பற்றியும் விவாதித்து வரவு - செலவுத் திட்டத்தின் மீது வாக்கெடுப்பு நடத்துவர். அன்றாட செயல்முறைகளைக் கவனிக்க ஒரு தலைவரையும், மற்றும் இரு உறுப்பினர்களையும் கொண்டு ஒரு குழுவினை ஏற்படுத்துவர். தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டத் தலைவரை ஆளுநரும், மாநிலத் தலைவரை உள்துறை அமைச்சரும் அதிகாரப்பூர்வமாக அங்கீகாரம் செய்வர். மாநில ஆளுநர் இவர்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் அதிகாரம் பெற்றிருந்தார்.

ஊராட்சி முறை ஊர்களில் மருத்துவம், கல்வி ஆகிய துறைகளில் நல்ல பணியினைச் செய்தது. மருத்துவ மனநோய் மருத்துவ விடுதிகள் மற்றும் உள்ள பயனுள்ள நிறுவனங்கள் கிராம ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டன. இந்நிறுவனங்களின் நிர்வாக முறையினைக் கிராம ஆட்சிமுறை சீராக உயர்த்தியது. விவசாயிகள் ஆடுமாடுகள் குதிரைகள் வளர்ப்பதற்கு அதிக ஆதரவு கொடுத்தது. தீ போன்ற விபத்துக்களிலிருந்து விலங்குகளைப் பாதுகாக்க நெருப்பு காப்புத் திட்டம் (Fire Insurance) வகுக்கப்பட்டிருந்தது. கிராம ஆட்சிமுறையில் கிராமங்களில் மருத்துவமும், ஆடுமாடுகள் மருத்துவ வசதியும் சிறப்பாகச் செய்யப்பட்டன. உள்ளாட்சித் துறையில் தேர்ந்தெடுக்கும் முறை தோன்றியதால் மக்களாட்சி உணர்வுகளில் உந்தப்பட்ட மக்கள் மென்மேலும் மக்களாட்சி கோட்பாடுகளுக்குரிய சலுகைகள் பலவற்றையும் கேட்கலாயினர். 1870-ஆம் ஆண்டின் மற்றொரு சட்டத்தால் பெரும் நகரங்களில் நகராட்சி மன்ற உறுப்பினர்கள் நகரத் தலைவர் ஆகியோர் நான்கு ஆண்டுக்காலம் பதவியில் இருப்பர். ஆனால், வாக்காளர்களில் அதிகச் சலுகை பெற்றோரே அதிகச் சலுகைகளும் உரிமைகளும் பெற்றவராயினர்.

கல்வித்துறை

கல்வி அமைச்சராக கோவாவ்னின் என்பவர் 1861-66 வரை இருந்தார். 1861-இல் இருந்து அரசாங்கம், அடிமைகள் விடுதலையைத் தொடர்ந்து, கிராமங்களில் தொடக்க கல்வியைப் பெருக்குவதில் நாட்டம் கொண்டது. இதனை சமயத்துறையின் தலைமை அமைப்பான புனித தலைமைக்குழு (Holy Synod) எதிர்த்தது. காரணம் திருச்சபை, பிரபுக்கள் ஆதிக்கத்தில் இருந்து, பள்ளிகளை கல்வித்துறை எடுத்துக்

கொள்வதை விரும்பவில்லை. ஆனால், அமைச்சர் கோவாவ்னின் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மன்னரின் ஆதரவையும் பெற்று 1862-இல் அரசாங்க உத்தரவு போட்டார். அதன்படி திருச்சபை வைத்திருக்கின்ற பள்ளிகளில் மட்டும்தான் திருச்சபைத் தலைவர் ஆதிக்கம் செலுத்தலாம். பிற பள்ளிகள் அனைத்தும் அரசாங்கத்தின் கீழ் கொண்டு வரப்படும். தொடக்கப்பள்ளிகளும், உயர்நிலைப்பள்ளிகளும் தொடங்கப்பட்டன. கணிதம், விஞ்ஞானம், நவீன இலக்கியங்கள் ஆகியவற்றில் சிறந்த புத்தகங்களுக்குப் பரிசுகள் வழங்கும் திட்டமும் வெளியிடப்பட்டது. ஆசிரியர்களுக்கு ஊதியம் ஒழுங்காகக் கொடுக்கப்பட்டது.

உயர் கல்வியில் பல்கலைகழகங்களுக்குத் தன்னாட்சி வழங்கும் சட்டம் ஒன்று 1863-இல் கோலோவ்னின் கொண்டு வந்தார். அதன்படி ஒவ்வொரு பல்கலைக்கழகமும் பேராசிரியர்களால் 4 ஆண்டுகளுக்கென தேர்ந்தெடுக்கப்பட்ட பல்கலைக்கழகமுகவர் (Rector) என்பவரின் தலைமையில் இயங்கும். பல்கலைக்கழகத்தில் உள்ள அனைத்துப் பேராசிரியர்களையும் கொண்டு ஒரு குழு ஆட்சிப்பொறுப்பை ஏற்று நடத்தும். பல்கலைக்கழகங்கள் கல்வி சம்பந்தமான கருத்துக்களை வெளியிட சுதந்திரம பெற்றிருந்தன. இருப்பினும் பதவிகள் பூர்த்தி செய்வதற்கு பல்கலைக்கழகத்திற்கு தொடர்புடைய க்யூரேட்டர் என்ற அதிகாரியின் அனுமதியைப் பெறவேண்டும். மாணவர்களிடையே ஒழுங்கை நிலைநிறுத்த ஒரு குழு அமைக்கப்பட்டது. அதற்குச் சட்டப்பேராசிரியர் தலைவராவார். பட்ட மேற்படிப்பில் திறமை மிகுந்த மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டது. விஞ்ஞான சம்பந்தமாக வெளிநாடுகளுக்குப் பயணம் செய்வது ஊக்குவிக்கப்பட்டது. கோவாவ்னின் இச்சீர்திருத்தங்களால் 1863 முதல் 1880 வரை ரஷ்ய உயர் கல்வியில் அதிக வளர்ச்சி ஏற்பட்டது.

படைத்துறை

படைத்துறையிலும் அலெக்ஸாந்தர் காலத்தில் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. டி.ஏ. மில்யுதின் என்பவர் படைத்துறையில் பல சீர்திருத்தங்கள் கொண்டு வந்தார். தரைப்படைத்துறை அமைச்சரான இவரும், கடற்படைத்துறை அமைச்சரான கான்ஸ்டன்டைன் இளவரசரும் படைப் பிரிவுகளில் கடுமையான தண்டனை வழங்குவதை ஒழித்தார்கள். படைச் சேவைக்காலத்தை 25 ஆண்டுகளிலிருந்து 16 ஆண்டுகளாக மில்யூதீன் குறைத்தார். படைச்சட்டம் திருத்தி அமைக்கப்பட்டு தண்டனைகள் எளிதாக்கப்பட்டன. 1864-இல் அமைக்கப்பட்ட சிவில் நீதி விசாரணை மன்றங்களைப் போன்று படை நீதிமன்றங்களின் செய்முறைகளும் மாற்றியமைக்கப் பட்டன. சாதாரண சிப்பாய்களின் நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டது. ஆட்சி அமைப்பில் ஏற்படுத்திய மாற்றம் படையின் திறமையை வெளிப்படுத்திற்று. கிரிமி யப்போரில் பயன்படுத்திய பயனற்ற ஆயுதங்களை நீக்கி நவீன ஆயுதங்களை படைத்துறை சேகரித்தது. படைத்தலைமை பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, பகுதிவாரியாக படைத்தலைமைகள் உருவாக்கப்பட்டன. 1865-ஆம் ஆண்டு படைத்துறையின் பொது அலுவலர்களின் தலைமைப்பதவி உருவாக்கப்பட்டது. படைத்துறையிலும், போக்குவரத்துத்துறையிலும், மருத்துவத் துறையிலும் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. படைப்பொறியியல் துறையிலும் முன்னேற்றம் ஏற்பட்டது. ராணுவ நோக்கம் கருதிய இருப்புப் பாதைகளும் போடப்பட்டன. விவசாயிகளும் நடுத்தர மக்களுமே கட்டாய

இராணுவ சேவைக்கு முன்பு பணிக்கப்பட்டனர். அந்நிலை மாறி 25 வயது வந்த அனைத்து ஆண்களும் கட்டாய இராணுவத்தில் சேர்க்கப்படவேண்டும் என்ற நிலை உருவாக்கப்பட்டது. இவையனைத்தும் படையை நவீனமாக்கும் நோக்கோடு செயல்படுத்தப்படினும், ஐரோப்பிய, ஆசிய நாடுகளின் வேகமான மாறுதலை எட்டிப்பிடித்திடும் நிலை உருவாகாமலே போயிற்று.

ஸார் இரண்டாம் அலெக்ஸாந்தரின் நிதித்துறைச் சீர்திருத்தங்கள்

கிரிமியப் போரின் விளைவாக நாட்டில் நிலவிய கடுமையான பொருளாதாரச் சிக்கல்களால் நிதிநிலை மிகவும் மோசமான நிலையை அடைந்தது. இதனால் பலவகை அரசுக் கடனுதவிச் சங்கங்கள் செயல் இழந்து நின்றன. இந்நிலையைப் போக்க 1860-இல் அரசு வங்கி (State Bank) ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இவ்வங்கி பல திட்டங்களின் கீழ் குறுகிய காலக்கடனுதவிகள் வழங்கின. இதே ஆண்டு மதுபானங்களின் மீது இருந்த பண்ணை வரிமுறை நீக்கப்பட்டு மதுபானங்கள் விற்பனையின் மீது உள்நாட்டு வருவாய் வரி விதிக்கப்பட்டது. வரி விதிப்பு முறையும், வரவு - செலவுத்திட்டத் தயாரிப்பும் திருத்தியமைக்கப்பட்டது. 1862ஆம் ஆண்டு பொதுமக்களின் பார்வைக்கென வரவு செலவுத்திட்டம் வெளியிடப்பட்டது. 1862-இல் நிதியமைச்சராக இருந்த ரெய்டர்ன் நாட்டின் காகித நாணய மதிப்பை உயர்த்த பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். தாதரினாவ் என்ற அதிகாரி மேற்கொண்ட நடவடிக்கைகளால் அரசுச் செலவினங்கள் கட்டுப்பாடுகளுக்குட்படுத்தப்பட்டன. வெளிநாட்டுக் கடன்கள் எழுப்பப்பட்டன. தனியார் வங்கிகளுக்கு அதிக ஊக்கம் கொடுக்கப்பட்டன. இருப்புப் பாதை போன்ற பெரிய திட்டங்களுக்கு வெளிநாட்டு முதலீடுகள் வரவேற்கப்பட்டன. இத்தகைய பெரும் திட்டங்கள் வெளிநாட்டினர் கட்டுப்பாட்டுக்குள்ளானதால் ரஷ்யப் பொருளாதார நிலை பாதிப்பு அடைந்தது. பற்றாக்குறை வரவுசெலவுத் திட்டங்களால் பணவீக்கம் பெருமளவு ஏற்பட்டு ரூபிளின் மதிப்பு பெரும் வீழ்ச்சியுற்றது.

நீதித்துறைச் சீர்திருத்தங்கள்

மேல்நாட்டுமுறையில் ரஷ்ய நீதித் துறையை மாற்றியமைத்தார் இரண்டாம் அலெக்ஸாந்தர். ரஷ்யாவின் நீதித் துறையை எளிமையானதாகவும் தூய்மையானதாகவும் ஆக்க வேண்டும் என்ற நோக்கோடு 1864ஆம் ஆண்டில் நீதித்துறைச் சீர்திருத்தச் சட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டது. கீழ்நிலையில் நகராட்சி மன்றங்களாலும், ஊராட்சி மன்றங்களாலும் தேர்ந்தெடுக்கப்படும் நீதிபதிகளால், சிறிய அளவிலான சிவில் வழக்குகளும் குற்றவியல் வழக்குகளும் விசாரிக்கப்படும். எல்லாவகையான வழக்குகளையும் விசாரிக்க மாவட்ட நீதிமன்றங்களும், உயர் நீதிமன்றங்களும் ஏற்படுத்தப்பட்டன. நாட்டின் தலைமை நீதிமன்றமாக செனட் நீதிமன்றமே செயல்படும். நிருவாகத்தையும், நீதித்துறையையும் தனித்தனியே பிரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நீதித்துறையில் ஊழலை ஒழிக்க நீதிபதிகளின் நியமனங்கள் நிரந்தரமாக்கப்பட்டன. உயர்ந்த சம்பள விகிதங்கள் அளிக்கப்பட்டன. வழக்கு விவரங்களை பகிரங்கமாக வெளியிடப் பத்திரிகைகள் அனுமதிக்கப்பட்டன. இரகசிய முறையில் வழக்குகளை விசாரிக்க அனுமதிக்கப்படவில்லை. வாதிகளும், பிரதிவாதிகளும் கற்றுத் தேர்ந்த வழக்கறிஞர்களின் சட்ட உதவியைப் பெறலாம். சட்டத்தின் முன்

அனைவரும் சமமே என்ற கோட்பாட்டினை நீதிமன்றங்கள் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. நாட்டின் சட்டங்களைத் தொகுத்து அளிக்க தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

குற்றவியல் குற்றங்களை விசாரிக்க காவல்துறையினருக்குப் பதில் தொடக்கப் புலன் விசாரணையை மேற்கொள்ள ஓர் ஆய்வு நீதிபதி நியமிக்கப்பட்டார். 1866இல் இயற்றப்பட்ட சட்டம், உயர் நீதிமன்றங்களை தணிக்கை செய்யும் அதிகாரத்தைப் பெற்றது. 1867ஆம் ஆண்டு குற்ற ஆய்வுத்துறை நீதிபதிகளின் பதவியைத் தற்காலிகமான தாக்கினர். 1871-ஆம் ஆண்டு சட்டமொன்று அரசுக்கெதிரான குற்றங்களை விசாரிப்பதில் தொடக்கப் புலன் விசாரணையை மேற்கொள்ளும் அதிகாரத்தை நீதிபதிகளிடமிருந்து இரகசியக் காவல் துறையினருக்கு மாற்றியது. இதன்மூலம் அத்தகைய குற்றங்களை முறைப்படியான விசாரணை ஏதுமின்றி நிருவாக அமைப்பின் விசாரணைக்குட்படுத்தித் தீர்ப்புக் கூறவும் முடிந்தது. அரசியல் வழக்குகளை விசாரிக்க தனியானதோர் செனட் நீதிமன்றம் 1872ஆம் ஆண்டுச் சட்டத்தால் உருவாக்கப் பட்டது. அரசியல் கைதிகள் மட்டும் விசாரணை இன்றியும் தண்டிக்கப்பட்டனர்.

இவ்வாறாக, இரண்டாம் அலெக்ஸாந்தரின் சீர்திருத்தங்கள் ரஷ்ய அரசின் அனைத்துத் துறைகளிலும் ஏற்பட்டது. ரஷ்யாவில் எங்கு பார்த்தாலும் பிரபுக்களின் உரிமைகள் குறைக்கப்பட்டன. உள்ளாட்சித் துறையின் அதிகாரங்கள் அதிகமாக்கப் பட்டன. முதலாம் நிக்கோலஸின் ஆட்சியை ஒருமுகப்படுத்தும் கொள்கை நீக்கப்பட்டது. இடைக்கால நிறுவனங்கள் ரஷ்யாவில் மறையத் தொடங்கின. கல்வியும், அறிவார்ந்த நடவடிக்கைகளும் பெரிதும் போற்றப்பட்டன. இருப்புப் பாதைகள், கடனுதவி நிறுவனங்கள், நீதிமன்றங்கள், சீர்திருத்தப்பட்ட வரிக்கொள்கைகள் ஆகியவை ரஷ்யப் பொருளாதார வளர்ச்சியின் கால்கோளாக விளங்கின.

இத்தகைய சீர்திருத்தங்கள் பல ஏற்பட்டாலும், அவற்றால் எதிர்பார்த்த அளவிற்குப் பலன் இல்லாது போயிற்று.

விடுதலைச் சட்டத்தினால் விடுதலை பெற்ற பண்ணை முதலாளிகளின் பங்களாக்களில் வேலைபார்த்த தொழிலாளர்கள் அடிமை முறையிலிருந்து விடுபடினும் குடியிருக்க குடிசை இல்லாத தொழிலாளர்களாக மாறி பொருளாதார அடிமை களாயினர். நிலப்பங்கீட்டு வேலையைக் கவனிக்கவென்று நியமிக்கப்பட்ட அமைதி காக்கும் நடுவர்கள் பிரபுக்களாகவே இருந்ததால், அவர்கள் நடுநிலையில் நின்று நீதி வழங்கத் தவறினர். எனினும் விடுதலைச் சட்டத்தை மனிதாபிமானத்தோடு அடிமைகளை விடுவிக்கவென்று ஸார் மன்னர் கொண்டு வந்தார் என்பதில் ஐயமில்லை.

சிறு சிறு நிலம் பெற்ற விவசாயிகள் தாம் அளிக்கவேண்டிய இழப்பீட்டுத் தொகையை அரசு செலுத்தியதால், அரசுக்கு இவ்விவசாயிகள் செலுத்தவேண்டிய தவணைக் காலம் நீடிக்கப்பட்டு வட்டியும் முதலுமாக பல ஆண்டுகள் செலுத்தவேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் மூலம் அரசின் அடிமைகளாக சிறு விவசாயிகள் மாறினர்.

நிலப்பிரபுக்களிடமிருந்த பெற்ற நிலங்களை 'கம்யூன்கள்' மூலம் இவ்விவசாயிகள் பராமரிப்பு செய்து வந்ததால் விவசாயிகளின் தனியுரிமை காக்கப்படவில்லை.

இச்சீர்திருத்தங்களால் பிரபுக்கள் பெரும் பாதிப்புக்குள்ளானார்கள். "முன்னர் கணக்கேதுமின்றி உயர் மதுவகைகளில் ஊறிக்கிடந்த நாங்கள் இப்போது கணக்குப்பார்த்து பீர் மட்டுமே குடிக்கவேண்டியவர்களானோம்" என பிரபுக்கள் மனம் வெதும்பினர்.

விவசாயிகள், பிரபுக்கள், தொழிலாளர்கள், அரசியல் அறிஞர்கள், சிந்தனை யாளர்கள், புரட்சியாளர்கள், இலக்கியவாதிகள் ஆகிய அனைத்துச் சமுதாயப் பிரிவினரும் ஏதேனும் ஒரு காரணம் கொண்டு அரசுக்கொள்கையால் அவநம்பிக்கை கொண்டனர்.

இரண்டாம் அலெக்ஸாந்தர் பயங்கரவாதிகளால் கொலை செய்யப்பட்டபின் அனைத்துச் சீர்திருத்தங்களும் கைவிடப்பட்டது. அரசின் அடக்குமுறைக் கொள்கை கட்டவிழ்த்து விடப்பட்டது. எனவே, இறுதியில் அலெக்ஸாந்தரின் சீர்திருத்தங்கள் தோல்வியுற்றன.

பயிற்சி வினாக்கள்

1) ஸார் இரண்டாம் அலெக்ஸாந்தர் மேற்கொண்ட சீர்திருத்தங்களை ஆய்க.

2) ரஷ்ய ஸார் இரண்டாம் அலெக்ஸாந்தரின் உள்நாட்டு ஆட்சிமுறையை ஆய்வுமுறையில் பரிசீலனை செய்க.

3) அடிமை ஒழிப்புச் சட்டம் 1861, ஏராளமாக குறைகள் மிக்கதாயும், பெரும் எதிர்ப்புக்களை சமாளிக்க வேண்டியதாயுமிருந்தது என்பதை ஒப்புக்கொள்கிறீரா?

பாடம் – 5 இரண்டாம் அலெக்ஸாந்தர் காலத்தில் இலக்கிய வளர்ச்சி

இரண்டாம் அலெக்ஸாந்தரின் காலம் அரசியல் சீர்திருத்தங்கள் பலவற்றைக் கண்ணுற்றதைப் போன்று, புதிய புரட்சி இயக்கங்களையும், சிந்தனையாளர்களின் சிறந்த இலக்கியங்களையும் கண்ணுற்றது. அதனைப் பரப்பியோர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய புதிய சிந்தனையாளர்கள் எனவும், சூனியவாதிகள் (Nihilists) எனவும் அழைக்கப்பட்டனர். அவர்களது கொள்கை சூனியவாதம் (Nihilism) எனப்பட்டது. 'சமகாலம்' எனும் இதழில் செர்னிசேவ்ஸ்கி என்பார் எழுதிய புதிய கருத்துக்கள் இயற்கை அறிவியலைச் சார்ந்திருந்தது. உடலும் ஆன்மாவும் மட்டுமே ஒருமனிதனை முழுமையைக் காட்டாது; ஆன்மா பற்றிய ஆய்வின்றி பொருள் முதல் வாதத்தை (Materialism) அடிப்படையாகக் கொண்ட செயல்களே மனிதனை உருவாக்கும் என்றும், கலைகள் அனைத்தும் வாழ்க்கையைப் படம் பிடித்துக்காட்டும் செவ்வையான நூல்களே என்றனர். சமுதாய அமைப்பு முறையால் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சிக்கல்களையும், சீர் குலைவினையும் சமதர்மக் கோட்பாடுகளால் சீர்திருத்தி அமைக்க முடியும். எல்லாத் துறைகளிலும் பிற்போக்குச் சக்திகளின் பிரதிபலிப்பையே காண முடிகின்ற ரஷ்யாவை ஒரு புரட்சியின் மூலம் மட்டுமே மாற்றியமைக்க முடியும். இத்தகைய கொள்கைகளைக் கொண்ட சூனியவாதிகள் சமுதாயம், சமயம், அரசு ஆகிய அனைத்தையுமே இயற்கை அறிவியல் அடிப்படையில் மாற்றியமைக்கவும் விரும்பினர். இளம் சந்ததியைச் சேர்ந்த இத்தீவிரவாதிகள் தங்களைச் சமதர்மவாதிகளாகவும், ஜனநாயகவாதிகளாகவும் பாவித்துக் கொண்டதோடு, பூர்சுவா அரசியல், தாராளக் கோட்பாடு, வல்லாட்சி ஆகியவற்றின் எதிரிகளாகவும் செயல்படலாயினர். அவர்கள் அரசையும், சமய நெறிகளையும் முற்றிலும் எதிர்த்தாலும், தாயகத்தின் மீதும், மக்கள் மீதும் தூய அன்பு காட்டினர். இயற்கை அறிவியலின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடப்பதன் மூலம் புதியதோர் சமுதாயத்தை உருவாக்க இயலும் என்று நம்பினர்.

விடுதலைச் சட்டத்திற்குப் பின் புரட்சியாளர்களின் செயல்கள் மேலும் அதிகரிக்கலாயின. செர்னிசேவ்ஸ்கியைப் பின்பற்றியோர் இதில் முன்னணியில் இருந்தனர். இவர்கள் தங்கள் கோட்பாடுகளையும், அவற்றை அடையும் வழிமுறைகளையும் சமுதாயத்தின் பல பிரிவுகளையும் சார்ந்தோரின் மத்தியில் தங்கள் அறிக்கைகள் மூலம் பரப்பலாயினர். செர்னிசேவ்ஸ்கி எழுதிய 'நில உடைமையாளர்களிடமிருந்து விடுதலை பெறவிருக்கும் பண்ணைக் கூலிக்கு உங்கள் நலன் நாடுவோரின் வாழ்த்துக்கள்' என்னும் அறிக்கையொன்று, விடுதலைச் சட்டத்தின் மூலம் பயனடையப்போவது பிரபுக்களே தவிர, பண்ணைக் கூலிகளல்லர் என விளக்கியது. மக்கள் தங்கள் ஒன்றுபட்ட கிளர்ச்சியின் மூலமே தங்கள் நலன்களைக் காக்க முடியுமாதலால் எல்லா இடங்களிலும் விவசாயிகள் புரட்சி ஏற்பட வேண்டுமென்றார். மற்றுமோர் பத்திரிகையாசிரியரான செல்குனோவ் எழுதிய 'இளைய தலைமுறையினருக்கு' என்னும் அறிக்கை புரட்சிமனம் கொண்ட ஜனநாயகவாதிகளின் கொள்கையறிக்கையாகக் கொள்ளப்பட்டது 'பெருமை மிகு ரஷ்யன்' என்னும் புரட்சி இயக்கத்தைச் சார்ந்தோர் ஜனநாயக அரசியல் சாசனம்

வேண்டியும், ரஷ்ய மக்களுக்கு அடிப்படை உரிமைகள் அளிக்கக் கோரியும், அரசு செயல்படும் முறையைக் கண்டித்தும், விடுதலைச் சட்டத்தில் காணப்பட்ட பித்தலாட்டக் கோட்பாடுகளைச் சாடியும் பல இதழ்களை வெளியிட்டனர்.

புதுமை இலக்கியம்

சட்ட விரோதமான இலக்கியப் பணிகள் புற்றீசல்களாய் வெளிவந்த வண்ணமி ருந்தன. மாஸ்கோ பல்கலைக்கழகத்தில் ஒரு மாணவர் சங்கத்தை உருவாக்கிய சைக்னேவ்ஸ்கி என்னும் பத்தொன்பது வயது இளைஞர் 'இளைய ரஷ்யா' என்னும் இதழை வெளியிட்டார். அவ்விதழில் நாட்டில் நிலவிய அரசியல், சமுதாய அமைப்பை ஒரு புரட்சியின் மூலம் ஒழித்து விட்டுப் புரட்சியாளர்களின் சர்வாதிகார ஆட்சியை நிறுவி, புதியதோர் சமுதாயத்தையும், ரஷ்யக் குடியரசையும் நிறுவ வேண்டும் என எழுதினார். இவ்விதழ் ரியாசன் நகரில் அச்சிடப்பட்டு பீட்டர்ஸ் பர்க்கில் விநியோகிக்கப்பட்டது. அதே சமயம் பீட்டர்ஸ்பர்க்கின் பல பகுதிகளிலும் திடீரென நெருப்புப் பற்றி பல கட்டடங்களைச் சாம்பலாக்கியது. இது புதிய புரட்சியாளர்களான சூனியவாதிகளின் செயல் என்றே சந்தேகிக்கப்பட்டது. அரசியல் விழிப்புணர்ச்சி வளர்ச்சியுற்றதால் தீவிரவாதிகளான சிந்தனையாளர்கள் புரட்சிக்கும் போராட்டத்திற்கும் வழிகாட்டும் பொருட்டு புதியதோர் அமைப்பினையும் உருவாக்கினர். அவ்வமைப்பிற்கு 'நிலமும் விடுதலையும்' என்று பெயரிடப்பட்டது. பீட்டர்ஸ்பர்க்கில் செயல்பட்டுவந்த இவ்வமைப்பின் முக்கிய ஆசிரியராக செர்னிசேவ்ஸ்கி பணிபுரிந்தார். மற்றும் ஒகரியோவ், ஹெர்சன், பாகுனின் போன்றோர் இதில் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். ஒகரியோவின் 'மக்கள் விரும்புவது யாது?' என்னும் கட்டுரை மணி என்னும் பத்திரிகையில் வெளியாயிற்று. 'மக்கள் மனதினைப் புண்ணாக்கி விட்ட பேரரசனின் விலங்கினை ஒடித்திட வேண்டுமெனவும், மக்கள் பரம எதிரியான மன்னரையும், அரசினையும் ஒழிக்கப் பெரும் புரட்சி தேவை எனவும் அது வலியுறுத்தியது.

போலந்து புரட்சி

1863ஆம் ஆண்டு போலந்து, லிதுவேனியா, பைலோரஷ்யா ஆகிய பகுதிகளில் தோன்றிய புரட்சிகள் ரஷ்யாவில் பிற்போக்காளர்களின் கரங்களை வலுவடைய செய்தன. போலந்தின் தேசிய விடுதலை இயக்கவாதிகளும், நிலமானிய முறையை எதிர்த்த விவசாயிகளும் ரஷ்யாவில் நிலவிய புரட்சிநிலையைத் தங்கட்குச் சாதகமாக்கிக்கொண்டு ஒருங்கிணைந்து செயல்பட்டனர். ஜனவரியில் போலந்தில் புரட்சி மூண்டது. ஆனால் புரட்சி தோற்றுப்போகவே புரட்சியாளர்கள் கொடூரமான தண்டனைக்குள்ளாயினர்.

1863ஆம் ஆண்டுக்குப்பின் 'மணி'யின் விற்பனை குறையலாயிற்று. செர்னிசேவ்ஸ்கி கைது செய்யப்பட்டு சைபீரியாவுக்கு அனுப்பப்பட்டார். நாடு கடத்தப்படுவதற்கு முன் மிட்னின் சதுக்கத்தில் கீழ்த்தரமான முறையில் அவர் அவமானப்படுத்தப்பட்டார். இதனையறிந்த மக்கள் கொதிப்படைந்தனர். இச்சமயம் திமித்ரிபிசரேவ் என்பார் 'ரஷ்யச் சொல்' என்னும் தலைப்பில் சில கட்டுரைகள் எழுதினார். ரஷ்யாவின் சிந்தனை யாளர்களை இயற்கை அறிவியலின்பால் தங்கள் சிந்தனையைச் செயல்படுத்துமாறும், கலையழகில் காலத்தைக் கழிக்கும் சமுதாய விரோதிகளைத் தூக்கியெறிந்துவிட்டு

பொருளாதார வளர்ச்சிக்கு உழைக்குமாறும் தூண்டினார். இதன் காரணமாக அவர் சிறைசெல்ல நேர்ந்தது. சிறையும் அவரது சிந்தனைக் கூடமாயிற்று. இந்நிலையில் சூனியவாதக் கொள்கையைப் பரப்பிக் கொண்டிருந்த 'சமகாலம்' என்னும் பத்திரிகை தடை செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து 'வெண்பயங்கரம்' (White Terror) எனப்படும் கடுமையான அடக்கு முறைகள் நாடெங்கும் அரசால் கட்டவிழ்த்து விடப்பட்டன.

அரசின் அடக்கு முறைகளால் சிந்தனையாளர்களின் செயல்களும், புரட்சியாளர்களின் வேகமும் குறைந்திருந்த காலத்தில் வெளிநாடுகளில் தங்கியிருந்த பாகுனின், லாவ்ரோவ், திகச்யோவ் போன்ற எழுத்தாளர்கள் புதிய அமைப்புகளின் உயிரோட்டத்துக்கு நீர்வார்த்தனர். இவர்கள் பொதுக்குடிமைக் கட்சியினர் (Populists) என்று அழைக்கப் பட்டனர். பாகுனின் கொள்கைகளில் கவரப்பட்ட ரஷ்யர்கள் புரட்சியிலும், பொதுவுடைமைக் கொள்கைகளிலும் ஈடுபாடு கொண்டனர். புரட்சியாளர்களான சிந்தனையாளர்கள் செய்யவேண்டியதெல்லாம் ஏழை விவசாயிகளைப் புரட்சி செய்யத் தூண்டுவதே என்றார் பாகுனின். மேலும் அவர் அவரது நண்பருடன் சேர்ந்து கொண்டு (நெகயெவுடன்) 'புரட்சிக்கான வினாவிடைகள்' என்னும் நூல் ஒன்றையும் எழுதினார். அந்நூலில் எவ்வாறு புரட்சி யாளன் ஒருவன் தன்னை முழுக்க முழுக்கப் புரட்சிக்காகவே அர்ப்பணித்துக்கொண்டு பிற்போக்காளர்களின் ஆட்சியை அகற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும் என்பதை விளக்கிக் காட்டியிருந்தார். மாஸ்கோவில் விவசாயப் பள்ளி மாணவனாக இருந்த ஐவனோவ், தம் அறிவுரைகளைச் செவ்வனே ஏற்றுச் செயல்பட வில்லை என்ற குற்றச்சாட்டிற்காக அவனை ஒழித்துக்கட்ட நெகயேவ் ஏற்பாடு செய்தார். அம்மாணவனின் கொலையைத் தொடர்ந்து அப்புரட்சிக் குழுவைச் சேர்ந்த பலரும் கைது செய்யப்பட்டுத் தண்டிக்கப்பட்டனர். சுவிட்சர்லாந்தில் தஞ்சமடைந்த நெகயேவ் 1872-ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டார். தம் கொள்கையை உயிர் மூச்சாகக் கொண்டிருந்த அவர் சிறையிலேயே மடிந்தார்.

லாவ்ரோவ் என்பார் 'வரலாற்றுக் கடிதங்கள்' என்னும் நூலை எழுதினார். இந்நூலில் அவர், 'சிந்தனையாளர்கள் அனைவரும் விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கடமைப்பட்டவர்கள் எனவும் அவர்கள் விவசாயப் பெருங்குடி மக்களோடு இரண்டறக்கலந்து ஒரு புதிய சமதர்ம ஆட்சியை நிறுவ மக்களைப் புரட்சி செய்ய ஊக்குவிக்கவேண்டும்' என்று குறிப்பிட்டிருந்தார்.

திகச்யோவ் என்னும் ஆசிரியர் புரட்சியை உருவாக்குவதற்குப் பதிலாக, முதலாளித்துவ அமைப்பை மாற்றிச் சமதர்ம சமுதாயத்தை நிறுவுவதையே முக்கியக் குறிக்கோளாகக் கொண்டிருந்தார். இக்கொள்கைகளே பொதுக்குடிமைக் கோட்பாடுகள் (Populislism) என அழைக்கப்பட்டன.

இரண்டாம் அலெக்ஸாந்தர் காலத்திய எழுத்தாளர்களுள் தலைசிறந்தவர்கள் அந்தோன்சேகவ், துர்கனேவ், தாஸ்தயேவ்ஸ்கி, லியோ டால்ஸ்டாய் முதலியோராவர். இவர்களது இலக்கியங்கள் அனைத்தும் காலத்தைக் காட்டும் கண்ணாடியாக அமைந்தன. இவர்கள் கலைப்பணியில் மட்டுமல்லாது அரசியல் கோட்பாடுகளிலும் வெவ்வேறு கோணத்தையே கொண்டிருந்தனர். துர்கனேவ் மேற்கத்திய நாகரிகத்தையும், கலை

வளர்ச்சியையுமே அரவணைக்கலானார். ரூசோவின் கருத்துக்களில் ஈடுபாடு கொண்ட டால்ஸ்டாய் மேற்கத்திய நாகரிகத்தில் செயற்கை இழைகளையும் இயந்திரத்தின் தன்மையையும், இயற்கையின் அழகில் உண்மையான மனிதனையும் கண்டார்.

அந்தோன் சேகவ் 1860 – 1904

பத்தொன்பதாம் நூற்றாண்டின் புகழ் பெற்ற ருஷ்ய இலக்கிய அறிஞர் அந்தோன் சேகவ் (1860 - 1904). இவர் ஓர் சிறந்த இலக்கியப் படைப்பாளி. மனிதர் என்ற வகையில் பெரிதும் போற்றப்படுகிறார். சேகவின் கதை ஒன்றைப்பற்றி லியோதால்ஸ்தோய் ஒருதரம் புகழ்ந்து பேசும்போது "அது தூய்மை வாய்ந்த நங்கையால் பின்னப்பட்ட லேஸ் போன்றது" எள்றார் அவர். "பழங்காலத்தில் அம்மாதிரியான லேஸ் பின்னும் நங்கையர் இருந்தார்கள். தமது இன்பக் கனவுகளை எல்லாம் வாழ்நாள் முழுவதும் அவர்கள் பின்னல்களாகப் பின்னிக்கொண்டிருப்பது வழக்கம். தமது இதயக் கனவுகளை அவர்கள் லேஸ்களாகப் பின்னிவிடுவார்கள். அந்த லேஸ்கள் யாவும் தெளிவற்றவையான தூய காதலில் தோய்ந்தவையாய் இருக்கும்" இப்படிக் கூறியவர் கவுண்ட் லியோ தாலஸ்தோய். இப்படி அவர் கூறியபோது கண்களில் கண்ணீர் ததும்ப மெய்யாகவே உணர்ச்சி மேலிட்டவராய் பேசினாராம்,

கடைசியாக சேகவ் எழுதிய சிறுகதையின் பெயர் மணமகள் (1903). இதில் நாதியா என்றொரு நங்கையின் கதையைக் கூறுகிறார். சேகவ், கதையின் ஆரம்பத்தில் பொழுது புலருவதற்குச் சிறிது நேரம் முன்னதாய் நாதியா விழித்தெழுந்து தோட்டத்தினுள் உற்று நோக்குகிறாள். "அடர்த்தியான வெண்ணிற மூடுபனி செந்நீல மலர்களை முக்காடிட்டு மூடவிரும்புவதுபோல் அவற்றை நோக்கிப் படர்ந்து வந்தது". கொள்கை குறிக்கோளற்ற தனது அசமந்த வாழ்க்கை மாறவோ முடிவுறவோ போவதில்லையென நினைக்கிறாள் அவள். அப்பொழுது அடர்த்தியான அதே வெண்ணிற மூடுபனி நாதியாவின் ஆன்மாவை முக்காடிட்டு மூடுவதுபோல் தோன்றுகிறது நமக்கு. ஆனால், பிற்பாடு பொழுது புலருகிறது. ஜன்னலுக்கு அடியிலும் தோட்டத்திலும் புள்ளினங்கள் கூச்சலிட்டன; தோட்டத்திலிருந்து மூடுபனி அகன்றுவிட்டது; வசந்த சூரியனது ஒளி யாவற்றைச் சுற்றிலும் பிரகாசித்தது; யாவும் புன்னகைபுரிந்தன" இயற்கைக்காட்சியில் ஏற்படும் ஒரு மாற்றம் மட்டுமல்ல, இது நாதியாவின் ஆன்மாவிலேயே ஏற்படும் ஒரு பெரிய மாற்றமாகவும் விளங்குகிறது. குறிக்கோளற்ற அற்பத்தனமான ஒரு வாழ்க்கையுடன் தனக்குள்ள பிணைப்புக்களை முற்றாகவும், முடிவாகவும் துண்டித்துக்கொள்வதென்று ஏற்கனவே அவள் தீர்மானித்து விடுகிறாள். சேகவின் இந்தக் கடைசிக்கதையின் தலைவியினது ஆன்மாவில் ஏற்படும் இம்மாற்றம் சேகவின் இலக்கியப்பணி அனைத்தையும் ஓரளவுக்கு தீர்மானிப்பதாய் சொல்லலாம்.

அந்தோன் சேகவ் சிறிய தென்திசை நகரான தகன்ரோகில் 1860இல் பிறந்தார். இருபதாவது வயதில் மாஸ்கோ பல்கலைக்கழகத்தில் மருத்துவத்துறையில் சேர்ந்தார். அதேபோல் நையாண்டி நகைச்சுவை ஏடுகளிலும், செய்தியேடுகளிலும், சிறுகதைகளும் விகடத்துணுக்குகளும், ஓரங்க நாடகங்களும், வகைச்சித்திரங்களும் எழுத ஆரம்பித்தார்.

1880-ஆம் ஆண்டுகள் ருஷ்யாவில் மெத்தக்கடினமான காலமாகும். பிற்போக்குத் தலைவிரித்தாடிற்று. சுதந்திர சிந்தனையின் சிறு வெளிப்பாடுகளும் இம்மியளவேயான அறிகுறிகளும் நசுக்கப்பட்டன. பிற்போக்கானது அடர்த்தியான வெண்ணிற மூடுபனி

போல் நாடு அனைத்திலும் முக்காடிட்டு மூடி இருந்தது. இளைஞராய் இருந்த சேகவ் இவ்வாண்டுகளில் எழுதிய கதைகளில் பணத்தையும், பட்டம் பதவியையும் நாடிய சிறுமதியினரைச் சித்தரித்தார். நாட்டாண்மை புரியும் ''தடித்தோரின்'' படாடோபத்தையும், குட்டை மனத்தையும், மெலிந்தோரது அசட்டு பணிவையும், அடிமைப்புத்தியையும் எள்ளி நகையாடினார். இவ்வுலகில் ஒவ்வோர் ஆளுக்கும் அளிக்கவேண்டிய கௌரவம், அவரது பணத்தையும் அந்தஸ்தையும் கொண்டுதான் நிர்ணயிக்கப்படுகிறது என்பதைக் கண்டு வேதனையடைந்தார். சேகவ் எதையும் பலத்த குரலில் பிரகடனம் செய்வதில்லை; வாசகர்களுக்கு நேரடியாய் அறிவுறுத்த முற்படுவதில்லை; ஆயினும் அவரது கதைகளைப் படிப்பவர்கள் தம் காதுக்குள் ஒரு குரல் ஒலிக்கக் கேட்கலாம். "மனிதனாய் வாழ அச்சப்படுகிறீர்கள். ஏன் இது? மேல் நிலையில் இருப்பவர் என்றதும் போற்றுகிறீர்கள், கீழ்நிலையில் இருப்பவர் என்றதும் அப்படி அலட்சியப்படுத்துகிறீர்களே, அழகா இது? மெய்யான இன்பம் பணத்திலும் பட்டம் பதவியிலும் அடங்கி இருப்பதாகவா நினைக்கிறீர்கள்?" இப்படி எல்லாம் கேட்கிறார் சேகவ். சேகவ் இளைஞராய் இருக்கையில் எழுதிய பிரபலமான கதைகளில் ஒன்று பச்சோந்தி (1884). மேலிடம் என்றதும் பல்லைக்காட்டும் மனோபாவத்தை நயம்பட எடுத்துரைத்து நகைக்கிறது இந்தக்கதை, இயோனிச் (1898) - இளம் வயதில் எஸ். நகருக்கு வந்து வேலை பார்க்கும் ஒரு டாக்டரின் கதை இது. இந்நகரில் கல்விகேள்வியில் சிறந்தோராகவும், கலைகளில் தேர்ந்தோராகவும் கூறப்படும் தூர்க்கின் குடும்பத்தாருடன் அவருக்கு பரிச்சயம் ஏற்படுகிறது. இவர்களது வீட்டில் வளரும் நங்கை காத்யாவின் மீது அவர் காதல் கொள்கிறார். ஆனால், காதலின் உணர்ச்சித் துடிப்பும் ஊக்கமும் மிக்க மணிக்குரலுடன் கூடவே டாக்டரது மனத்துள் வேறொரு குரலும் ஒலித்துக் கொண்டிருக்கிறது. நகர மத்தியதர வகுப்பாரது சிடுசிடுப்பான குரல் அது. அந்த இரண்டாவது குரல் நாளடைவில் பலத்துப் பெருத்து முதலாவது குரலை மூழ்கடிக்கிறது.அற்பமும், புன்மையும் பகட்டும், மடமையும் நிறைந்த கொச்சையான சுற்றுப்புற வாழ்க்கையின் வெள்ளம் இந்த இளம் டாக்டரையும் தன்னுள் இழுத்துக் கொண்டு விடுகிறது. அவரது ஆன்மா ஒளி இழந்து மங்குகிறது. பணம் பண்ணுவதைத் தவிர வேறு எதிலும் நாட்டமில்லாதவராகிறார். இயோனிச்சின் கதை மனித ஆன்மா சிறுகச் சிறுக நலமிழந்து மரத்துப்போவதைக் காட்டுகிறது. அடர்த்தியான மூடுபனி ஆன்மாவின் எழில்மலரை முக்காடிட்டு மூடுவதைக் காட்டுகிறது.

சேகவின் கதைகள் படிப்போரைக் கலங்கச் செய்கிறவை; துயரம் தோய்ந்த புன்னகை புரிகிறவை; மென்மையானவை. அவரது கதைகளும், கடற்பறவை, வான்யா மாமா, மூன்று சகோதரிகள், செர்ரித்தோட்டம் முதலான நாடகங்களும் அக்கால ருஷ்ய வாழ்க்கையின் புன்மை குறித்தும், கொச்சைத்தனம் குறித்தும் சிந்திக்கவைத்தன. மனித மாண்புக்குரிய வாழ்வை மலரச்செய்ய வேண்டுமென்ற ஊக்கத்தை அவர்களுக்கு ஊட்டின. கேசவ் 1904-இல் இவ்வுலகைவிட்டு மறைந்தார். ருஷ்யாவிலும் அனைத்து உலகிலும் சேகவ் போற்றப்படுகிறார். மனித வாழ்வு வளமும் எழிலும் பெறவேண்டும் என்று எப்போதும் விரும்பினார். சேகவின் வாழ்க்கையும் சேகவின் கதைத் தலைவர்களது வாழ்க்கையும் இன்னல் மிக்கதாகவே இருந்தன. சேகவ் மகத்தான எழுத்தாளராக

விளங்கினார். பிறவை அவர் ஒன்றும் தெரியாத சிறுபிள்ளைகளாகவோ, சிந்தனை யற்றவர்களாகவோ கருதி, ஒவ்வொன்றுக்கும் தாமே தீர்வை தயாரித்தளிக்க அவர் முயலவில்லை. அவர்களுக்கு உபதேசிக்க முற்படவில்லை. தாம் எழுதுவதை பிறர் கூர்ந்து நோக்குவர், சிந்தனை செய்வர். பிழை இன்றிப்புரிந்து கொள்வர் என்று அவர் திட நம்பிக்கை கொண்டிருந்தார்.

தர்கனேவ் : 1818 – 1883

இவர் எழுதிய 'தந்தையரும் தனையரும்' என்னும் நூல் ஒரு குடும்பத்தின் உள்ளத்தைப் பிரதிபலித்தது. அவரது 'ரூதின்' என்னும் நவீனம் சொல்லில் வல்ல, செயலில் திறனற்ற மனிதனைப் படம் பிடித்துக் காட்டியது. அவரது 'அந்தக்காலம்', 'கன்னிநிலம்', 'கனவான்களின் கூடு' ஆகியவையும் புகழ்பெற்ற நூல்களாகும்.

தாஸ்தயேவ்ஸ்கி : 1821 – 1881

இவரது 'உடைமையாளர்கள்' என்னும் நூல் தெய்வத்தன்மையற்ற சமதர்மக் கோட்பாட்டினைக் கடுமையாகத் தாக்கியது. அவரது சொந்த வாழ்க்கை மிகவும் துயரம் நிறைந்தது. அரசியல் கைதியாக் சைபீரியக் கடுங்குளிரில் கொடுமையான சித்திரவதைக்குள்ளானார். நோயும் வறுமையும் அவரை வாட்டி வதைத்தன. இல்வாழ்க்கையும் இன்னல் நிறைந்ததாக அமைந்தது. எனவேதான் அவரது பாத்திரப்படைப்புகள் அனைத்தும் மனித சமுதாயத்தின் தொல்லைகள், துன்பங்கள், துயரங்கள் ஆகியவற்றைப் பிரதிபலித்தன.

சைபீரியச் சிறையிலிருந்து திரும்பியதும் அவர் 'இழிவுற்றோரும், துன்புற்றோரும்' என்னும் புதினத்தை எழுதினார். தாம் பெற்ற சிறை அனுபவங்களை வைத்து 'இறந்தோரின் இல்லம்' என்னும் நூலை எழுதினார். ஐரோப்பாவின் பகுத்தறிவுக் கோட்பாட்டினை எதிர்க்கும் எண்ணத்தோடு 'தலைமறைவுக் குறிப்புகள்' என்னும் நூலை எழுதினார். 'அறிவிலி' என்னும் நூலில் அவர் ஒரு நல்ல உள்ளம் கொண்ட மனிதனைப் படம் பிடித்துக் காட்டியிருந்தார். தாஸ்தயோவ்ஸ்கி ஏழை எளிய மக்களின் வளத்தையே பெரிதும் விரும்பினார்.

கவுண்ட் லியோ டால்ஸ்டாய் : 1828 – 1910

இவரது புதினங்களில் இயற்கையின் நளினங்களும், வாழ்க்கையின் உண்மைகளும் இணைந்தோடக்காணலாம். 'போரும் அமைதியும்', 'விண்ணுலகு உன்னிடத்தில்தான் இருக்கின்றது' போன்ற நூல்கள் உலகப்புகழ் பெற்றவை. இரண்டாம் நூல் காந்தியடிகளின் வாழ்க்கையைப் பெரிதும் மாற்றியமைத்தது. முதல் நூல் நெப்போலியனது படையெடுப்பையும், பல்வேறு போர்க்களங்களையும் படம் பிடித்துக் காட்டியது. அவரது 'அன்னா கரினினா' நம்பிக்கைக்கும் காரணத்திற்கும் உள்ள வேற்றுமையை விளக்குவதாகும். ஒரு பெண் தான் கடைப்பிடிக்கத்தவறிய சில நெறிமுறைகளுக்காக, அவளது இன்ப வாழ்வினை விரும்பாத சமுதாயத்தின் நெருக்குதலைச் சமாளிக்க மாட்டாது இறுதியில் உயிரிழக்க வேண்டிய துன்பச் சூழ்நிலையை அந்நூல்

விவரிக்கின்றது. அவர் எழுதிய ஏனைய நூல்கள் ஐவன் 'இலியிச்சின் மரணம்', 'உயிர்த்தெழுதல்', 'இருளின் வலிமை', 'கல்விக்கனிகள்', 'வாழும் பிணம்' முதலியன. நிலமானிய முறை, சுரண்டும் முதலாளித்துவம், சிறப்புரிமை பெற்ற உயர்குடிமக்கள், அரசு சமயம், படைத்தன்மை ஆகியவற்றை அறவே அவர் வெறுத்தார். மக்களது வாழ்க்கைப் பிரச்சினைகள் தீர பலாத்காரப் புரட்சியைவிடத் தனிமனிதர்களின் தார்மீக மனத்தூய்மை பயன்படும் என்றும் அவர் கருதினார். லெனின் அவரை 'ரஷ்யப் புரட்சி இயக்கத்தின் கண்ணாடி' எனப் போற்றினார்.

ஐவன் கோஞ்ச ரோவ்

ஐவன் கோஞ்ச ரோவ் என்பவர் அதே பழங்கதை, 'ஒப்பளமோவ்', 'பெரும்பள்ளம்' போன்ற நூற்களை எழுதினார். இதில் ஒப்பளமோவில் ரஷ்யாவில் வாழ்ந்த உயர்குடியினரின் சிந்தனையற்ற சோம்பேறி வாழ்வைச் சித்தரிக்கிறார். பிசம்ஸ்கி என்பவர் 'ஓர் ஆயிரம் ஆன்மாக்கள்' என்ற நூலை எழுதினார். இதில் அதிகார வர்க்கத்தின் ஒழுக்கமுறையைப் படம் பிடித்துக் காட்டுகிறார். பிசம்ஸ்கியின் மற்றொரு நூல் 'கலங்கிய கடல்' என்பதாகும். மைக்கேல் சால்டிகோவ் செட்ரின் என்பவர் எழுதிய நூல்களுள் குறிப்பிடத்தக்கவை தெளிவற்ற வரைவுகள், ஒரு நகரத்தின் வரலாறு, கோலவ்லியோவ் குடும்பம் என்பவை மைக்கேல் சால்டிகோவ் மக்களின் அவலநிலையைக்கூட நகைச்சுவையுடன் கூறவல்லவர். இவர் ஏழைமக்களின் உண்மையான நண்பராய் விளங்கினார். இவர் வல்லாட்சியினரையும், அடிமையின் உரிமையாளர்களையும், இலாப வேட்டைக்காரர்களையும், கல்நெஞ்சுகொண்ட அரசு ஊழியர்களையும் கடுமையாக சாடினார்.

மக்கள் கவிஞரான நிகோலாய்நெக்ரசோவ் என்பார் மக்களின் மனத்துன்பங்களையும், வீரத்தையும், விவேகத்தையும், பலத்தையும், பெருந்தன்மையையும் தம் இனிய கவிதைகளில் வார்த்தெடுத்தார். அவருக்குப் புகழ் கொடுத்த பெருங்கவிதை 'ரஷ்யாவில் வளமுடன் வாழ்வது யார்?' என்பதாகும். லெஸ்கோவ் என்பார் எழுதிய 'தேவலாயமக்கள்' என்னும் நூல் சமயக்குருமார்களின் வாழ்வினைச் சித்தரிப்பதாகும். 1881-ஆம் ஆண்டு தாஸ்தயேவ்ஸ்கியும், 1883-ஆம் ஆண்டு துர்கனேவும் மறையவும், டால்ஸ்டாய் சமயதத்துவத்தைச் சார்ந்து விடவும், ரஷ்ய இலக்கியம் அதன் உச்சக் கட்டத்தை அடைந்தது எனலாம்.

நாடகத்துறை

நாடகத்துறையில் தனது பெயரை நிலையாகப் பதித்துக் கொண்டவர் ஆஸ்ட்ரோவ்ஸ்கி என்பவராவார். அவரது 'புயல்' நடுத்தர மக்களான பூர்சுவா வியாபாரிகளின் வாழ்க்கையைச் சித்தரித்தது. அவர் மேலும் 'காடு', 'ஓநாய்களும் ஆடும்', 'பணமற்ற மணமக்கள்' போன்ற ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதினார். வணிகர்கள், நில உடைமையாளர்களின் உலகினைப் பெரிதும் இருண்ட உலகமாகவே காட்டினார். கோபிலின், பிசம்ஸ்கி, டால்ஸ்டாய் ஆகியோர் நாடக உலகின் விடிவெள்ளியாய் திகழ்ந்தனர். இசைத்துறையும் வளர்ந்தது.

பாலகிரேவ், முசோர்க்ஸ்கி, போரோடின், கார்சகோவ் போன்றோர் ஜனநாயக இலக்கியங்களை இசையாக்கி மக்களுக்கு வழங்கினார்கள். முசோர்க்ஸ்கியின் 'போரிஸ் கொடுனோவ்', போரோடினின் எழுதிய 'இளவரசர் ஐகர்', கார்கோவின் எழுதிய 'பனிப்பாவை' முதலிய இசை நாடகங்கள் பெரும் புகழ் பெற்றவையாகும். 'அன்ன ஏரி', 'உறங்கும் அழகி' முதலியன சைகோவ்ஸ்கி என்பார் எழுதிய இசை நடன நாடகங்களாகும்.

பெரோவ், கிரம்ஸ்கோ, ரபின்வாசிலிசுரிகோவ் ஆகியோர் வண்ண ஓவியங்களைத் தீட்டுவதில் வல்லவர்களாகத் திகழ்ந்தனர். மக்களின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவனவாக அவ்வோவியங்கள் அமைந்தன.

கல்வித்துறையிலும் இக்காலத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. செவிசேவ், மார்க்கோவ் ஆகியோர் கணிதத்துறையில் புகழ்பெற்றனர். சதோவடோவ் என்பார் மின்துறையில் புகழ்பெற்று விளங்கியவர். பாபோவ் என்பவர் முதலாவது கம்பியில்லாத் தந்தியைக் கண்டுபிடித்தார். மெந்தாயேவ் தம் 'வேதியியல் அடிப்படைகள்' என்ற கண்டுபிடிப்புக்காக உலகப்புகழ் பெற்றார். திமிரியசேவ் என்னும் தாவரவியல் அறிஞர் டார்வினின் தத்துவங்களை ஆதரித்து அவற்றின் உண்மையை உணர்த்தினார்.

இவ்வாறு பாகுனின், செர்னிசேவ்ஸ்கி, ஹெர்சன், நிகச்யோவ், லாவ்ரோவ் ஆகியோரின் அடிப்படைக் கொள்கைகளை ஆதாரமாகக் கொண்டு உருவான இயக்கமே பாப்புலிசம் எனப்படும். இவர்கள் முதலாளித்துவத்தை ஒழித்து சமதர்மத்தை ரஷ்யாவில் கொண்டு வர இயலும் என்று நம்பினர். இவர்கள், விவசாயிகட்கு விடுதலை, நிலம், சமத்துவம், சமதர்மம் ஆகியவை அளிக்க இயலும் என்று நம்பினர். ரஷ்யச் சமுதாயத்திற்குப் புத்துயிர் ஊட்ட முயன்றனர்.

பயிற்சி வினாக்கள்

1) இரண்டாம் அலெக்ஸாந்தர் காலத்திய இலக்கிய வளர்ச்சி குறித்து ஒரு கட்டுரை வரைக.

2) இரண்டாம் அலெக்ஸாந்தர் காலத்தில் இலக்கிய வளர்ச்சி எந்த அளவுக்கு மக்களின் மனதைத் தூண்டியது என்பது பற்றி ஒரு கட்டுரை வரைக.

பாடம் – 6 நிகிலிச இயக்கம் (Nihilism) அல்லது சூனியவாதம்

ஸார் இரண்டாம் அலெக்ஸாந்தர் சீர்திருத்தங்கள் பல செய்தாராயினும் முழுமனதோடு அதனை நிறைவேற்றவில்லை. அவருடைய நோக்கம் எல்லாம் அரசில், சமுதாயத்தில் எந்த மாற்றம் ஏற்பட்டாலும், அது அரசரால், பிரபுக்களால் ஏற்படுத்தப்பட வேண்டுமே தவிர, பொதுமக்களால் ஏற்படக்கூடாது என்பதுதான். ஆகவே அவர் பலருடைய ஆலோசனையைக் கேட்டு நடக்க வேண்டியவரானார். அதனால் திடமான கொள்கையைக் கடைப்பிடிக்க முடியவில்லை. சமுதாயத்தின் அனைத்து மக்களையும் நிறைவு செய்யக்கூடிய சீர்திருத்தங்களைக் கடைபிடிக்கவேண்டும் என்று எண்ணிச் சீர்திருத்தங்கள் செய்தமையால், அச்சீர்திருத்தங்கள் அரை குறையாகவே செய்யப்பட்டன. விவசாயிகள் பெற்ற விடுதலை முழுமை பெறவில்லை. பிரபுக்கள் தாங்கள் இழந்த நிலங்களுக்குப் பதில் அரசிடம் பணம் பெற்றதோடு, அரசில் தங்களுக்கும் பங்கு வேண்டி பிரதிநிதித்துவ நிறுவனங்களை நிறுவும் அரசியலமைப்பு வேண்டினர். இதனைக் கொடுக்க மன்னருக்கு இறுதிவரை மனம் இல்லை. மன்னர் செய்த சீர்திருத்தங்களால் பலன் ஏதும் இல்லை என்று அனைத்து பிரிவினர்களும் கருதினர். அதனால் எழுந்த இயக்கமே நிகிலிச இயக்கம் எனப்படும் சூனியவாத இயக்கமாகும்.

முதலாவது கட்டம்

நிகிலிசம், 19ஆம் நூற்றாண்டில், ரஷ்ய நாட்டில், இரண்டாம் அலெக்ஸாந்தரின் ஆட்சியின் ஆரம்பகாலத்தில் ஏற்பட்ட ஓர் தத்துவமாகும். நிகிலிசம் என்னுஞ்சொல் (இலத்தீன் மொழியில் நிகில் (nihil) என்றால் ஒன்றும் இல்லை (nothing)) என்று பொருள். இது இடைக்காலத்தில், திருச்சபைக்கு முரண்பாடான கோட்பாடுடைய சிலரைக் குறிப்பதற்கென்று பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் ரஷ்ய இலக்கியத்துறையில் நிகிலிசம் என்னுஞ்சொல்லை முதன்முதல் பயன்படுத்தியதாக கருதப்படுகிறவர். N.I. நாதிஷதின் (N.I. Nadezhdin). இவர் தனது "ஐரோப்பிய தூதுவன்" என்னும் கட்டுரையில் புஸ்கினைப் பற்றி குறிப்பிடும் போது இச்சொல்லைப் பயன்படுத்தினார். பின்னர், பெர்வி என்பவர் கி.பி. 1858-இல் கூறியது போல், நாதிஷதினும் நிகிலிசத்தை இறை ஐயுறவு கோட்பாட்டுடன் ஒப்புமைப்படுத்தினார். புகழ் பெற்ற பழமைவாத பத்திரிகையாளரான M.N. காட்கோவ் என்பவர், நிகிலிசம் ஓர் புரட்சி இயக்கம் என்றதோடு, அது சமுதாயத்திற்கு ஓர் அச்சுறுத்தும் செய்தி - அதாவது சமூகத்தின் ஒழுக்கமுறைக் கொள்கைகளை மறுத்து, அதனை அச்சுறுத்தும் ஓர் இயக்கம் என்றார். புதினங்கள் எழுதியவர்களான N.S. லெஸ்கோவ், A.F. பிஸம்ஸ்கி, V. கிரஸ்டோவ்ஸ்கி ஆகியோர் நிகிலிசத்தை கடுமையாகத் தாக்கி எழுதாமல் இருந்தாலும் இவ்வியக்கத்தை நுணுகி ஆராய்ந்தபின், சமுதாயத்திற்கு எதிரிடையான ஓர் இயக்கமாகவே கருதினார். ஆயினும் S.J. தர்க்கனேவ் என்பவர் தனது புகழ் பெற்ற "தந்தையும் மகனும்" (1862) (Fathers and Sons) என்னும் புதினத்தில் நிகிலிசவாதியான பசாராவ் என்னும் பாத்திரத்தின் மூலம் நிகிலிச இயக்கத்தை மக்கள் மத்தியில் பிரபலமாக்கினார். 1860 முதல் ஏறத்தாழ 20-ஆண்டுகாலம் நிகிலிசவாதிகளை 'பீட்நிக்குகள்' (beatniks) என்றும்,

நிகிலிசவாதிகள் பணிபுரிதவிர்கள், தூய்மையற்றவர்கள், கீழ்ப்படியாதவர்கள், ஏறுமாறானவர்கள், மரபு வழிக்கொள்கைகளையும் சமுதாயக் கட்டுகோப்புகளையும் எதிர்த்துப் புரட்சி செய்பவர்கள் என்றும் கருதலாயினர். இவ்வாறாக நிகிலிச இயக்கத்தின் கோட்பாடுகளைத் தவறாகப் புரிந்து கொண்டதோடு, இவ்வியக்கவாதிகளை, அரசு கொலையில் வங்கு கொண்டு அரசியலில் பயங்கரமான சூழ்நிலைகளை உருவாக்கி யதேச்சதிகாரத்தை எதிர்த்து வந்த இரகசிய இயக்க அமைப்புகளுடன் இணைத்துப் பேசலாயினர். இவ்வியக்கம் தனி மனித உரிமைக்காகவும், ஆண் பெண் சம உரிமைக்காகவும் போராடியது என்பதில் ஐயமில்லை.

நிகிலிச இயக்கம் காலத்தின் சாபக்கேடு என்று பழமைவாதிகள் கருதிய அதே நேரத்தில், தாராளக் கொள்கையினை ஆதரித்த N.G. செர்னி சேவ்ஸ்கி போன்றவர்களுக்கு இவ்வியக்கம் தேசிய சிந்தனைகளுடன் தனி மனிதனின் உரிமைக்காகப் போராடும் சம்பவத்தின் ஓர் கட்டம் என்றும் புரட்சிகரமான எண்ணங்களுடைய இளைஞர் சமுதாயத்தின் ஓர் உண்மையான உணர்வு என்றும் தோன்றியது. N.G. செர்னி சேவ்ஸ்கி தனது "என்ன செய்ய வேண்டும்" (1863) என்ற புதினத்தில், பெரும் முயற்சி மேற்கொண்டு நிகிலிச இயக்கத்தின் நன்மை பயக்கும் கோட்பாடுகளை உணர்த்த முயன்றார். அரசிலா கோட்பாட்டை ஆதரித்த ரஷ்ய இளவரசர் பீட்டர் கிரோபோட்கின் தனது வாழ்க்கை நிகழ்ச்சிக் கோவை (Memoirs)யில் நிகிலிச இயக்கத்தை ஆதரித்துக் கூறியதோடு, இவ்வியக்கம் வல்லாட்சி, போலிநடிப்பு, செயற்கையாய் உள்ள தன்மை முதலியவற்றை எதிர்த்த போதிலும் தனிமனிதனது சுதந்திரத்திற்காக பாடுபடுகிறது என்றார். மேலும் இவர் இவ்வியக்கம் மெய்மையான நம்பிக்கையில் எண்ணங்கொண்டு அதற்காகவே போராடும் புதுமலர்ச்சிப் பெருவழிக்க இளைஞர்களின் இயக்கம் என்றார்.

அடிப்படையில் நிகிலிசம் எல்லாவிதமான கலைப்பணிகளையும் வெறுத்தது. மாறாக பயனேறி முறைக் கோட்பாட்டிலும் பகுத்தறிவுவாதத்திலும் மிக்க நம்பிக்கைக் கொண்டிருந்தது. சமுதாய முறைகளையும், ஒப்புக்கொள்ளப்பட்ட தத்துவ முறைகளையும் முழுதுமாக இவ்வியக்கம் வெறுத்தது. இவ்வியக்கம் இயற்கை மேனியான சமுதாய விதிமுறைகளை ஆதரித்தது. அரசு, திருச்சபை, குடும்பமுறை போன்ற எல்லா அதிகாரங்களையும் வெறுத்தது. இவ்வியக்கத்தினர் விஞ்ஞான முறையிலமைந்த உண்மைகளைத்தவிர வேறு எதனையும் நம்ப மறுத்தனர். சமூகப் பிரச்சினைகளுக்கு விஞ்ஞானமே சஞ்சீவி என்று கருதலாயினர். நிகிலிசவாதிகளின் கருத்துப்படி, எல்லாதீமைகளும் அறியாமையிலிருந்தே உருவாகின்றன. அதனை வெற்றி கொள்ள விஞ்ஞானத்தால் மட்டுமே இயலும் என்றனர். லுட்விக் ப்யூவர்பாக், சார்ல்ஸ்டார்வின், ஹென்ரி பக்கில், ஹெர்பர்ட் ஸ்பென்சர் போன்ற அறிஞர்களின் மனதை இவ்வியக்கம் கவர்ந்தது.

மனிதன் என்பவன் சரீரம், ஆன்மா என்ற இரண்டு வகையான அதாவது ஆன்மீகமான தாயும் உடல் சார்ந்ததாயும் ஆன பொருளால் ஆனவன் என்ற கொள்கையை நிகிலிசம் மறுத்தது. எனவே திருச்சபைக்கு எதிராக வன்முறையில் நிகிலிசவாதிகள் ஈடுபட்டனர். அவர்கள் எல்லாவிதமான சமுதாய ஒப்பந்தங்களையும், குடும்ப அதிகாரங்களையும் அவமதித்ததால் குடும்பங்களில் தந்தைக்கும் தனயனுக்கும் சச்சரவுகள்

ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாக அமைந்தது. இக்கருத்தை டர்ஜினேவ் என்பவர் தனது புதினத்தில் பிரதிபலித்தார். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் லியோனிட் ஆண்ட்ரியேவ் என்பவரால் எழுதப்பட்ட சவ்வா (Savva) என்ற புதினத்தின் தலைவன், பயங்கரவாதியான S.G. நெச்சாவ் என்பவனுடனும், டக்னேவ்வின் கதைத்தலைவனான பசாரோவ் என்பவனுடனும் ஒப்புமைப்படுத்தப்பட்டான். பிற்காலத்தில் இவ்வியக்கம் விஞ்ஞானத்தின் மேல் இருந்த நம்பிக்கையையும் கை விட்டு விட்டு, தனது குறிக்கோள்களை அடைய பயங்கரத்தையும் அழிவையும் கடைப்பிடிக்கலாம் என்பதை நியாயப்படுத்த முனைந்தது. எவ்வாறு இருப்பினும் நிகிலிசம் என்பது பழையனவற்றை விஞ்ஞான முறையில் மாற்றியமைப்பதையே கொள்கையாகக் கொண்டிருந்தது.

முதல் கட்டம்

அதிகார வர்க்கத்தினை வழிபடுதலையும், மூட நம்பிக்கையை உண்டாக்குதலையும் நிகிலிச இயக்கம் தலையாய கொள்கையாகக் கொண்டிருந்தது. ஸ்டெப்நியக் (Stephlak) என்ற ஆசிரியர் தன்னுடைய Under ground Russia என்ற புத்தகத்தில் "எல்லாவிதமான பிடியிலிருந்தும் அறிவியல் விழிப்புணர்ச்சி பெற எழுந்த போராட்டமே நிகிலிசம் ஆகும்" என்றார். நிகிலிசத்தின் அடிப்படைக் கொள்கை தனி மனிதனின் தனித் தன்மையைக் காத்தல் ஆகும். தனி மனிதன் மீது சமுதாயம், சமயம், குடும்பம் ஆகியவை விதிக்கும் கட்டுப்பாடுகளை அறுத்தெறிதல்தான் நிகிலிசம் என்கின்றார். அழகுக் கலைமீது செய்யும் ரசனையைத் துறக்க வேண்டும் காரணம் அத்தகைய ரசனை பகுத்தறிவின் அடிப்படையில் எழவில்லை. காலணி செய்பவர் ரபேலை விட உயர்ந்தவர். காரணம் காலணி செய்பவர் பயனுள்ள பொருளைச் செய்கின்றார். ஆனால் ரபேல் அத்தகைய பொருளைச் செய்வதில்லை. நிகிலிச இயக்கத்தால் பெண்களுக்கு விடுதலையும், உயர்கல்விக் கூடங்களில் சர்வ சாதாரணமாக பழகுவதற்கும் வாய்ப்பு உண்டானது.

இரண்டாவது கட்டம்

ஆரம்பக் காலத்தில் (1860 - 1870) ஆகிய ஆண்டுகளில் தத்துவ இலக்கிய இயக்கமாக இருந்து வந்த நிகிலிச இயக்கம், 1871-இல் புரட்சி இயக்கமாக மாறிற்று. 1866-இல் பேரரசரைக் கொலை செய்ய நடந்த முயற்சியில், பேரரசர் அடக்குமுறையைக் கையாண்டார். தீவிரமான முறையில் அடக்குமுறையைக் கையாண்டதால், புரட்சி ஏற்பட வழிவகுத்தது. அந்நிய நாட்டவரின் தலையீடும் இப்புரட்சிக்கு ஆதரவாக இருந்தது. உதாரணமாக 'பாரீசியம் கம்யூன்' என்ற சங்கம், தனி மனிதன் உரிமையை விரும்பி நிற்கும் ரஷியர்களுக்கு ஒரு உறுதியான கொள்கையைக் கொடுத்தது. இச்சங்கத்தின் உறுப்பினர்கள் ரஷ்ய விவசாயியின் மோசமான சூழ்நிலையை ஆராய முற்பட்டனர். அவ்விவசாயிகள், தங்கள் வரவுக்கும் அதிகமாக வரி கொடுப்பதையும், பசியாலும், இடையராத உழைப்பாலும் வீழ்ச்சியுற்ற நிலையில், சலுகைகள் பெற்ற சமுதாயத்தின் இயற்கைக் கைதிகளாகி வாழ்ந்து வந்த விவசாயிகளின் நிலையினை எடுத்து இயம்ப ஆரம்பித்தனர்.

ரஷ்ய மக்களுக்கு அரசியல் விழிப்புணர்ச்சி அளித்த மற்றொரு சங்கம் "சர்வதேச பன்னாட்டு மக்கள்" (Internationals) என்ற சோசலிச சங்கம் ஆகும். இதன் தலைமை அலுவலகம் ஜீலக் என்னுமிடத்தில் அமைக்கப்பட்டிருந்தது. இச்சங்கத்தில் ரஷியாவின்

பல பாகங்கலிருந்துவந்த ஆண்களும் பெண்களும் உறுப்பினர்களாய் இருந்தனர். 1873-இல் பேரரசின் ஆணைப்படி அவர்கள் ஜுரிக்கை விட்டு வெளியே செல்ல வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதனால் உறுப்பினர்கள் தங்கள் ஊர்களுக்குச் சென்று தாங்கள் ஜுரிக்கில் தெரிந்து கொண்ட உழைக்கும் வர்க்கத்தின் விடுதலையைப் பரப்பினர். இவ்வேளையில் இரு வகையான அரசியல் கருத்துக்கள் வெளியாயின. ஒன்று சோஷியலிசம் மற்றொன்று அராஜகம் (Anarchism). சோஷியலிஸ்ட்கள் லாவ்ராவ் என்பவர் தலைமையில் அமைதியான முறையில் விவசாயிகளிடம் கொள்கைகளைப் பரப்ப வேண்டும் என விரும்பினர். அவர்கள் தேசிய உணர்வைவிட சமூக, பொருளாதார விடுதலை பெறவேண்டி கொள்கைகளை வகுத்து அதனை மக்களிடையே பரப்ப எண்ணினார். அராஜகவாதிகள் பாகுனின் (Bakunin) தலைமையில் இயங்கினர். இவர்கள் விவசாயிகள் உடனடியாகப் புரட்சியில் இறங்கவேண்டும் என்று எண்ணினர். 1872 முதல் 1875 வரை 'சோஷியலிச இயக்கம்' அமைதியான முறையில் பல இன்னல்களுக் கிடையே செயல்பட்டது. பெட்ரோகிரேட் என்னுமிடத்தில் இளவரசர் க்ரோபோகின், அந்நகரைச் சுற்றியுள்ள தொழிலாளர்களிடையே ரகசியமாக சொற்பொழிவாற்றினார். மற்றவர்கள், பல கிராமங்களிலும், தொழிலாளர்கள் இருக்கும் இடங்களிலும் சென்று ரகசியமாகச் சோஷியலிசக் கொள்கைகளைப் பரப்பினர். ஆனால் போலீசின் கவனத்திலிருந்து தப்ப முடியவில்லை. ஆகவே, பல புரட்சியாளர்கள் கைதிகளாயினர். விசாரணை நடத்தப்பட்டு தண்டிக்கப்பட்டனர். விடுதலை பெற்ற ஒரு சிலரையும் ஏதேனும் காரணத்தைக் காட்டி சைபீரியாவிற்கு அனுப்பிவிட்டனர்.

மூன்றாவது கட்டம்

பிரசார வடிவில் இருந்த நிகிலிச இயக்கம் செயலில் இறங்கியது. பிரசார வடிவில் இருந்த நிகிலிச இயக்கம் தன் எழுச்சி பலத்தை எடுத்துக்காட்டியது. ஆகவே இவ்வியக்கத்தில் உள்ளோரில் பலர் செயல் வடிவில் இறங்கினர். அடிக்கு அடி பழிக்குப்பழி என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கலாயினர். ஆகவே 1876-1878 ஆண்டுகளில் பல போராட்டங்கள், ஊர்வலங்கள், கலவரங்கள் ஆகியவற்றை நடத்தினர். ஆனால் பாரிஸில் நடைபெற்ற புரட்சியைப்போல் இப்புரட்சி வெற்றி பெற வாய்ப்பு இல்லை. காரணம், பெரும்பாலோர் கிராமங்களிலேயே வாழ்ந்து வந்தனர். இராணுவம் அரசின் கையில் இருந்தமையால் 1878ற்குள் புரட்சியை எளிதான முறையில் அரசு அடக்கிவிட்டது. தனியான நீதிமன்றங்களில், அரசியல் சம்பந்தப்பட்ட வழக்குகள் விசாரிக்கப்பட்டு சிறு குற்றம் செய்தவர்களுக்குக் கூட கடும் தண்டனைகள் வழங்கினர். மாணவர்கள் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேற்றப்பட்டனர். அவர்கள் அரசு உயர் பதவிகள் பெறுவது தடுக்கப்பட்டது. செம்ஸ்டோஸ் என்ற மாவட்ட மன்றங்களும், நீதிமன்றங்களும் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தன. செய்தித்தாள் தணிக்கைக் கடுமையாக்கப்பட்டது. ஆளும் வர்க்கம் தீவிரமான கட்டுப்பாடுகளை விதித்தது. படித்த கூட்டம் தீவிரப் புரட்சியாளர்களாக மாறியது.

அரசு எடுத்த தீவிர நடவடிக்கைகளால் நிகிலிச இயக்கம் அமைதியான முறையில் போராடும் முறையை நிறுத்திவிட்டு ரகசிய சதித்திட்டத்தில் இறங்கிற்று. இம்முறைப் பொதுமக்களுக்கு பிடிக்கவில்லை. ஐரோப்பிய பாணியில் ரஷ்யாவில் புரட்சி நடத்த

முடியாது என்பதால் தான் பயங்கர ஆயுதங்களைப் பயன்படுத்தி சமுதாயத்தை மாற்றியமைத்திட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர். திட்டமிட்ட முறையில் இறங்கிய நிகிலிச இயக்கத்தினர் முதலில் உளவுத்துறை அதிகாரிகளைக் கொலை செய்தனர். முதன் முதலாக வீர ஜாஸ்னுலிக் என்ற பெண்மணி, அரசியல் கைதியைச் சட்டத்திற்குப் புறம்பாகத் தண்டனை கொடுத்ததால் ஜெரல்டிரிடோவ் என்பவரை தன்னுடைய துப்பாக்கியால் சுட்டார். பின்னர் வழக்காடு மன்றத்தில் விசாரணையின் போது விடுதலையும் பெற்றார். இதனைத் தொடர்ந்து மூன்று ஆண்டு காலங்கள் வன்முறைச் செயல்கள் நிகழ்ந்தன. இச்செயல்கள் மன்னர் அலெக்ஸாந்தரின் மரணத்தோடு தான் நின்றது. ஜாஸ்னுலிக் விடுதலை பெற்ற சில மாதங்களுக்குள், இரகசியப்போலீசின் தலைமை அதிகாரியை பெட்ரோகிரேட் நகரில் பட்டப்பகலில் கொலை செய்து விட்டனர். கொலை செய்தவரும் தப்பிவிட்டார். இவ்வாறு இரண்டாம் அலெக்ஸாந்தரைக் கொலை செய்ய நான்குமுறை முயற்சி நடந்தபோது ரஷ்யா அறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ராணுவத்தின் கீழ்விடப்பட்டது. இது புரட்சியாளர்களின் வேகத்தை இன்னும் அதிகப்படுத்தியது. நிகிலிச இயக்கத்தினர் எண்ணிக்கையில் குறைந்தவர்களாக இருந்தாலும், பயமின்றி உறுதியுடன் போராட்டத்தில் இறங்கினர். நிகிலிச வாதிகளின் வன்முறைச் செயல்களில் மக்களுக்கு நம்பிக்கையில்லையெனினும், அவர்களுடைய கொள்கையை மக்கள் இரக்கத்துடன் நோக்கினர். நிகிலிசவாதிகளைச் சமாதானப்படுத்த எடுத்த முயற்சியில் தோல்வி கண்ட அரசு திடமான சீர்திருத்தங்களைச் செய்வதாக லாரிஸ்மெலிகாவ் என்ற உயர்மட்ட அதிகாரியின் மூலம் அறிவிப்புச் செய்தது. இவ்வுறுதிமொழியை நிறைவேற்றக் காட்டிய காலதாமதத்தினால் கோபமுற்ற புரட்சியாளர்கள் 1881-ஆம் ஆண்டு இரண்டாம் அலெக்ஸாந்தர் மீது குண்டு வீசி கொன்று விட்டனர். இந்நிகழ்ச்சி தான் நிகிலிச வாதிகளின் உச்சகட்டமாகும்.

இந்நிகழ்ச்சி நடைபெறும் வரை நிகிலிச இயக்கத்திற்குப் படித்த இளைஞர்களிடையே நல்ல ஆதரவு இருந்தது. இவர்கள் நிகிலிச வாதிகளின் செயல்முறைகளை வெறுத்தாலும், அவர்களின் குறிக்கோளை ஆதரித்தனர். ஆனால் விடுதலை விரும்பியான மன்னரின் மரணம் இம்மக்களைத் துன்பத்தில் ஆழ்த்தியது. இந்நிகழ்ச்சியால் மக்கள் நிகிலிச இயக்கத்தில் நம்பிக்கை இழந்தனர். இயக்கத்தின் தீவிரவாதிகள் கண்டுபிடிக்கப்பட்டுத் தூக்கிலிடப்பட்டனர். மீண்டும் இவ்வியக்கத்தை உருவாக்க எடுத்த பல முயற்சிகளும் தோல்வியே கண்டன. புரட்சியாளர்களும், விவசாயிகள் இன்னும் அரசியல் விழிப்புணர்ச்சி பெறவில்லை என உணர்ந்தனர். விவசாயிகள் அரசியல் விழிப்புணர்ச்சி பெறாத வரையில் நிகிலிச இயக்கத்தலைவர்கள் தொண்டர்களற்ற தலைவர்களாகவே இருந்தனர். எனவே இவ்வியக்கம் தோல்வி கண்டது.

பயிற்சி வினாக்கள்

1) ரஷ்யாவில் நடைபெற்ற நிகிலிச இயக்கத்தைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

2) நிகிலிச இயக்கத்தின் பல்வேறு கால கட்ட வளர்ச்சி பற்றியும் ரஷ்ய சமுதாயத்தில் அது ஏற்படுத்திய தாக்கம் பற்றியும் கட்டுரை வரைக.

பாடம் – 7 போலந்துச் சிக்கல் (1863)

இரண்டாம் அலெக்ஸாந்தரின் காலத்தில் மேற் கொள்ளப்பட்டச் சீர்திருத்தங்கள் ரஷ்யாவின் பொருளாதாரம், சமுதாயம், கலாச்சாரம் ஆகியவற்றில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தினாலும், பேரரசரின் அதிகாரங்களைக் குறைக்கவில்லை. இந்தத் தவறு சீர்திருத்தச் சட்டங்களைப் பலவீனப்படுத்தியதோடு, நாட்டில் அதிருப்தியான ஒரு சூழ்நிலையை உருவாக்கியது. இதன் விளைவாக நாடு பிற்போக்குக் கொள்கையையும் அடக்குமுறையையும் பெரும் கலகத்தையும் அவ்வப்போது கண்ணுற்றது.

அதன்முதல் எதிரொலியாகப் போலந்தில் கலகம் மூண்டது. போலந்து நாடு 18-ஆம் நூற்றாண்டில் 1772-ஆம் ஆண்டிலும், 1793-ஆம் ஆண்டிலும் 1795-ஆம் ஆண்டிலும் ஆக மூன்று முறை பங்கிடப்பட்டது. 1830-ஆம் ஆண்டின் ஜூலைப்புரட்சியின் போது அங்கு ரஷ்யாவுக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தப்பட்டது. 1814-15ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற வியன்னா மாநாட்டின் போது முதலாம் அலெக்ஸாந்தர் போலந்தைத் தனக்கெனப்பெற்றார். இதன் விளைவாகவே 1830-ஆம் ஆண்டுப் போலந்தில் புரட்சி எழவே முதலாம் நிக்கோலஸ் தம் படைகளை அனுப்பிக் கலவரத்தை அடக்கினார்.

போலந்து மக்கள் அந்நிய ஆட்சியை வெறுத்தனர். இவ்வெறுப்பு புரட்சி இயக்கங்கள் தோன்றக் காரணமாயிற்று. 16ஆம் நூற்றாண்டில் பெற்றிருந்த உரிமைகளை மீண்டும் போலந்து பெறவேண்டும் என்ற எண்ணத்துடன் இப்புரட்சி இயக்கங்கள் செயல்பட்டனாயின். கொடுங்கோலரான இரண்டாம் அலெக்ஸாந்தரின் ஆட்சியை போலந்து மக்கள் பெரிதும் வெறுத்தனர். இது போலவே ரஷ்யாவில் உள்ள தீவிரவாதிகளும் அலெக்ஸாந்தர் தங்களுக்கு எதுவும் செய்யவில்லை என்று நினைத்தனர். நாடு முழுவதும் பல ரகசிய அமைப்புக்கள் தோன்றின. இவைகள் அரசுக்கு எதிரான கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்பின. இந்த எதிர்ப்புகளை உணர்த்தும் வண்ணமே போலந்தில் 1863இல் புரட்சி ஏற்பட்டது. போலந்துப் புரட்சி ரஷ்ய பகுதியாய் விளங்கிய போலந்தில் மட்டுமே நடந்தாலும், போலந்து பிரிவினையின் மூலம் பிரஷ்யா (ஜெர்மனி)வின் பகுதியாய் விளங்கிய போஸ்னியா (Bosnia) விலும், ஆஸ்திரியாவின் பகுதியாய் விளங்கிய காலீஸியாவிலும் இருந்து புரட்சியாளர்களுக்கு ஆதரவு கிடைத்தது. மேலும் மேற்கு ஐரோப்பாவிலும் குறிப்பாக பிரான்ஸிலிருந்தும் போலந்து நாட்டு மக்களுக்கு ஆதரவு ஏற்பட்டது. முதலில் ரஷ்யர்கள் இக்கலகத்தை ஓர் உள்நாட்டு நிகழ்ச்சியாக கருதியதோடு இக்கலகத்தால் ரஷ்யாவிற்கும் மேலை நாடுகளுக்கும், குறிப்பாக பிரான்ஸிற்கும் உள்ள உறவில் மாற்றம் ஏற்படாது என்று கருதினர். 1848 வரை போலந்து கிளர்ச்சியாளர்களை அடக்குவதில் அதிதீவிரம் காட்டிய ஆஸ்திரியா, 1863-இல் போலந்தில் தோன்றிய இப்புரட்சியை அடக்க எண்ணவில்லை. காரணம் ஆஸ்திரியப் பேரரசு முழுவதிலும் குழப்பமான சூழ்நிலை காணப்பட்டது. எனவே மேலும் குழப்பம் ஏற்படுத்தும் பகுதி மக்களை தன் பேரரசுடன் இணைத்துக் கொள்ள ஆஸ்திரியா விரும்பவில்லை. அத்துடன் போலந்து புரட்சியாளர்களுக்கு ஆதரவாக ஆஸ்திரியா நடந்து கொண்டாலும் அதனால் ரஷ்யாவுடன் போரிட நேரிடலாம் என்ற அச்சத்தினாலும் ஆஸ்திரியா போலந்துப் புரட்சியை கண்டும் வாளாவிருந்தது. இவைகள் எல்லாவற்றையும்விட இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாடுகளை வெறுப்பூட்ட ஆர்வமற்ற

நிலையிலும் ஆஸ்திரியா இருந்தது. பிற நாடுகளும் போலந்தில் எந்நிகழ்க்கியும் முதலீடு செய்வதில்லை என்பது போல் இருந்து விடுவது எல்லோருக்கும் நல்லது என்று எண்ணலாயிற்று. ஆனால் இத்தகைய அமைதியான தோர் சூழ்நிலையை பிரஷ்யாவின் பிஸ்மார்க் சீர்குலைத்தார். பிரஷ்யா தனது படைத் தளபதியான ஆல்வன்ஸ்லீபன் என்பவரை ரஷ்ய தலைநகரான புனித பீட்டர்ஸ்பர்க்கிற்கு அனுப்பி, பிரஷ்யா, ரஷ்யா ஆகிய இரு நாட்டுப்படைகளும் புரட்சியாளர்களை அடக்க, எல்லை மாவட்டங்களில் (Frontier Districts) ஒத்துழைப்பது என்று முடிவாயிற்று. இதனால் பிரான்சைவிட பிரஷ்யாவின் மீது வார் மிக்க நம்பிக்கை கொண்டார். மேலும் ரஷ்யா, போலந்தில் இருந்து எக்காரணத்தை முன்னிட்டாவது பின்வாங்க நேரிட்டால் பிரஷ்யா போலந்தை கைப்பற்ற வேண்டிவரும் என்றும் பிஸ்மார்க் வெளிப்படையாகக் கூறினார். காரணம் போலந்துப்புரட்சி, பின்னர் பிரஷ்யாவுக்குச் சொந்தமான போலந்து பகுதியிலும் பரவிவிடக்கூடும் என்று பிஸ்மார்க் எண்ணினார். இதன் காரணமாகவே உலக நாடுகளையும் பொருட்படுத்தாமல் போலந்தின் மீது ராணுவ நடவடிக்கைகூட எடுக்க பிஸ்மார்க் தயாராய் இருந்தார். இச்சூழ்நிலையால் பிற ஐரோப்பிய நாடுகளும் போலந்து விஷயத்தில் தலையிட வேண்டிய சூழ்நிலை உருவாகும் போல் இருந்தது.

இதே வேளையில் ரஷ்யாவின் உறவினை பிரான்ஸின் மூன்றாம் நெப்போலியனும் பெரிதும் விரும்பினார். காரணம் ரஷ்யாவின் உதவியுடன் ஐரோப்பிய விவகாரங்களைத் தன் எண்ணம்போல் மாற்றி அமைக்க இயலும் என்று அவர் கருதினார். கிரிமியப்போரின் போது ஏற்பட்ட பிரான்ஸ், ஆஸ்திரியா, பிரிட்டிஷ் உறவு தற்காப்புக்கு என்று ஏற்பட்டது. என்வே இக்கூட்டின் மூலம் நெப்போலியன் திருப்தியடையவில்லை. எனினும் எவ்வளவுதான் போலந்து புரட்சியாளர்களுக்கு அனுதாபம் கொண்டாலும் பிரான்ஸ், ரஷ்யாவைத் தாக்க முடியாது. ஆனால் பிரஷ்யாவை பிரான்ஸ் எளிதில் வெற்றி கொள்ள முடியும் என்பதை நெப்போலியன் உணர்ந்திருந்தார். ஆஸ்திரியாவுடன், பிரான்ஸ் மீண்டும் நெருக்கமானதோர் உறவை ஏற்படுத்துவதற்கான ஓர் சூழ்நிலையை தோற்றுவிக்க முயன்றும், ஆஸ்திரியா இந்த உறவினை முழுமனதுடன் வரவேற்கவில்லை. ஆயினும் இத்தகைய சூழ்நிலை பிஸ்மார்க்கிற்கு பெரும் அதிர்ச்சியைத் தந்தது. என்வே அவர் ரஷ்யாவுடன் உறவினை வலிமைப்படுத்திக் கொள்ள விரும்பினார்.

இச்சூழ்நிலையில் பிரஷ்யாவை பிரான்ஸ் தாக்கினால், ரஷ்யா பிரஷ்யாவிற்கு ஆதரவு தரவேண்டும் அல்லது பிரஷ்ய - ரஷ்யா கூட்டு முறியும் என்றார் பிஸ்மார்க். பிஸ்மார்க்கின் இந்த வேண்டுகோளை ரஷ்யா ஏற்கவில்லை. பிரிட்டனும், ஆஸ்திரியாவும் போலந்துப் பிரச்சனையில் தலையிடாதிருக்க விரும்பின. அதே வேளையில் இருநாடுகளும் சேர்ந்து ரஷ்யாவை சிறிது நிர்பந்திப்பதன்மூலம், பிரஷ்யாவை பிரான்ஸ் தாக்காமல் இருக்கச் செய்யமுடியும் என்றும் கருதின. இச்சூழ்நிலையில் பிரான்ஸ், பிரஷ்யாவின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி, போலந்து விவகாரத்தை ஓர் பன்னாட்டு விவகாரமாக்க முயன்றதால் பிரான்ஸ் - ரஷ்யா பகைமை ஏற்படலாயிற்று.

கிரிமியப் போரின் போது ஏற்பட்ட கூட்டு தற்போது ஏற்படாமல் போயிற்று அல்லது கிரிமியப்போரின் போது ஏற்பட்ட குழப்பமித்நிலை மீண்டும் நிலவியது. ஆனால் ஒரே ஒரு வேற்றுமை இருந்தது. அதாவது பிரிட்டன், அமெரிக்க உள்நாட்டுப் போரினால்

குழம்பிப்போய் இருந்தது. அதன் கடற்படைகளும் சிதைந்து போயிற்று. ஆனால் மூன்றாம் நெப்போலியனைப் பெரும் சந்தேகக் கண்ணுடன் பிரிட்டன் பார்க்கலாயிற்று. எனினும் பிரான்ஸ் - ரஷ்யா ஆகிய நாடுகளின் உறவினை முறிக்க பிரிட்டன் விரும்பியதால் பிரிட்டன் பிரான்சுடன் ஒத்துழைத்தது. மேலும் பிரிட்டனிலும் போலந்து மக்கள்மீது அனுதாப எண்ணம் ஏற்பட்டது.

கிரிமியப்போரின் போது நடந்து கொண்டது போலவே, ராஜதந்திர முறையில் தற்போதும் ஆஸ்திரியா, பிரான்சுடன் நடந்துகொண்டது. இதனால் ஆஸ்திரியாமீது ரஷ்யாவிற்கு வெறுப்பு ஏற்பட்டது. போலந்துப் பிரச்சனையின் உச்சகட்டம் யாதெனில் பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகளிடையே ஏற்பட்ட நெருக்கடி ஆகும். இந்நிகழ்ச்சி ரஷ்யாவிற்கு விருப்பமில்லாமலே இருந்தது. காரணம் போலந்துப் பிரச்சனை தீர்ந்தால் கிழக்கு ஐரோப்பிய விவகாரங்களை கவனிக்க ஏதுவாகும் என்று ரஷ்யா கருதியது. ஆஸ்திரியா, கிரேட்பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் தங்களது முதலாவது எதிர்ப்பை புனிதபீட்டர்ஸ்பர்கிற்கு தெரிவித்தபோது, மற்ற இருநாடுகளைவிட பிரான்ஸ்ற்கு மட்டும் ரஷ்யா சாதகமாக நடந்து கொண்டது. அதாவது, பிற ஐரோப்பிய விவகாரங்களையும் பேசி தீர்ப்பதாக இருந்தால், போலந்துப் பிரச்சனையை ஐரோப்பிய மாநாட்டில் பேசி தீர்க்க தயாராய் இருப்பதாக ரஷ்யா, பிரான்ஸிடம் கூறியது. ஆனால் பிரெஞ்சு மக்களுக்கு வேறு எநத் பிரச்சனைகளையும் விட போலந்துப்பிரச்சனையே மிகவும் முக்கியமாக பட்டதோடு, போலந்து மக்களுக்காக வேண்டி உடனே ஏதாவது செய்யவேண்டும் என்றும் தோன்றியது. எனவே ஆஸ்திரியா, கிரேட்பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய மூன்று நாட்டு பிரதிநிதிகளும் உடனேயே போர் அமைதி சூழ்நிலையை போலந்தில் ஏற்படுத்தி தன்னாட்சி பெற்ற போலந்து மாநிலத்தை அமைக்க விரும்பினார்கள். ஆனால் ரஷ்யா வெளிவிவகார அமைச்சர் கோர்சகோவ் இந்த யோசனையை நிராகரித்தார். ரஷ்யாவின் இச்செயலை பிரான்ஸ் வன்மையாகக் கண்டித்தது. இந்த நிலையில் ரஷ்ய பிரான்ஸ் உறவு முறிந்தது. இதே விளையில் ஜெர்மானிய இணைவு விரும்பிய பிஸ்மார்க், 1863-இல் பிராங்க்பர்ட்டில், ஆஸ்திரியா தலைமையில் கூடி ஜெர்மானிய இளவரசர்களையும் ஆஸ்திரியாவையும் ஒழிக்கவேண்டி ரஷ்யாவின் உதவியை நாடினார். ஆனால் ரஷ்யா போலந்து விஷயத்தில் மும்முரமாக இருந்ததால் பிரஷ்யாவின் வேண்டுகோளுக்கு அவ்வளவாக செவிசாய்க்கவில்லை. எனினும் போலந்து விவகாரத்தில் அல்லது அண்டைய கிழக்கு நாடுகள் (Near East) விஷயத்தில் பிரஷ்யா நடுவுநிலைமை வகிக்கவேண்டும் என்று பின்னர் தீர்மானமாயிற்று. அதுபோலவே ஜெர்மானிய விவகாரங்களில் ரஷ்யா தலையிடுவதில்லை என்றும் முடிவாயிற்று. பிஷ்மார்க் இதனை நேரத்திற்கு ஏற்ப வரவேற்றார்.

இரண்டாம் அலெக்ஸாந்தர் பதவியேற்றதும், 1830-ஆம் ஆண்டின் ஜூலைப் புரட்சியைத் தொடர்ந்து போலந்திலிருந்து சைபீரியத்தீவுக்குக் கைதிகளாக அனுப்பப்பட்டிருந்த நிலப்பிரபுக்களை விடுதலை செய்தார். குடியரசுக் கட்சியைச் சார்ந்த போலந்தியர் குறிப்பாக மாணவர்கள் ரஷ்ய மன்னரின் இச்செயலைத் தப்புக் கணக்குப்போட்டு, அதனை மன்னனின் பலவீனம் என எடுத்துக்கொண்டனர். 1860-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் போலந்துப் புரட்சியாளர்கள் தலைநகரான வார்சாவில் ஓர் ஊர்வலம் நடத்தி ரஷ்யாவுக்கெதிரான தங்கள் கோபத்தை வெளிப்படுத்தினர்.

அதைப்போன்று 1861-ஆம் ஆண்டும் பிப்ரவரித் திங்கள் இறுதியில் போலந்தியர் வார்சாவில் கலவரம் ஒன்றினை மூட்டினர். ரஷ்யத் துருப்புகள் அங்கு அனுப்பப்பட்டு அக்கலவரம் ஒடுக்கப்பட்டது. கலவரத்தில் ஐந்து போலந்தியர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். இதனைத் தொடர்ந்து போலந்திய மிதவாதிகள் தங்கள் நாட்டிற்குச் சுயாட்சி கோரி இரண்டாம் அலெக்ஸாந்தரிடம் முறையிட்டனர். முறையீட்டுக்குச் செவிமடுத்த மன்னர் போலந்து மக்களுக்குப் பல சலுகைகள் வழங்கினார். ஆனால், அக்டோபர்த் திங்களில் (1861) மீண்டும் அங்கு வன்முறைகள் எழத்தொடங்கின. ரஷ்யாவுக்கு எதிராக நடைபெற்ற போராட்டங்களில் 1600 பேர் கைது செய்யப்பட்டனர்; பல்வேறு மிதவாதி அலுவலர்கள் தங்கள் பதவிகளைத் துறந்தனர். போலந்திலிருந்த ரஷ்ய உயர் அதிகாரிகளைக் கொலை செய்வதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1862-ஆம் ஆண்டுக் கோடைகாலத்தில் போலந்து மிதவாதிகளின் தலைவர் கவுண்ட் ஆண்ட்ரு ஜமோஸ்கி, 1772-ஆம் ஆண்டுக்கு முன்னர் தாங்கள் அனுபவித்து வந்த உரிமைகளை ரஷ்யா வழங்குவதாக இருந்தால் ரஷ்யாவின் அறைகூவலுக்குத் தாங்கள் செவிசாய்க்க இயலும் என்று அறிக்கை விடுத்தார். இக்கோரிக்கையை நிராகரித்த ரஷ்ய ஆட்சியாளர்கள் 1863-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 15-ஆம் நாள் முதல் போலந்தியர் கட்டாய இராணுவ சேவையில் சேரவேண்டும் என ஆணைப் பிறப்பித்தனர் இதனால் போலந்தில் கலவரம் மூண்டது.

போலந்தின் தேசிய விடுதலை இயக்கவாதிகளும், நிலமானிய முறையை எதிர்த்த விவசாயிகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டனர். ஆனால் போராட்டக்காரர்களிடையே ஒற்றுமையின்மையால் ஆரம்பத்திலிருந்தே அங்கு பிளவு ஏற்பட்டது. நிலவுடைமையாளர்கள், பூர்சுவாக்கள், மிதவாதிகளான 'வெள்ளைக் குழுவினர்' (Whites), தீவிரவாதிகளான 'சிவப்புக் குழுவினர்' (Reds) ஆகியோரிடையே முதலிலிருந்தே கருத்து வேற்றுமைகள் இருந்து வந்தன. புரட்சித் தலைவர்கள் தங்கட்கு ரஷ்ய தீவிரவாதிகளின் ஆதரவும், ஐரோப்பிய அரசுகளின் உதவியும் கிடைக்கும் என முழுக்க முழுக்க நம்பினர். ரஷ்யாவில் ஜனநாயகக் கோட்பாடுகளைக் கொண்டிருந்த தலைவர்களான செரகோவ்ஸ்கி, தாம்புரோவ்ஸ்கி, காலினோவ்ஸ்கி போன்றோர் சிவப்புக் குழுவின் தலைவர்களாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர். புரட்சியாளரின் மனக்கோட்டைகள் அனைத்தும் மண் கோட்டைகளாயின எதிர்பார்த்த உதவி எங்கிருந்தும் வரக்காணோம். புரட்சியாளர்கள் போலந்திய விவசாயிகட்கு நிலமும், சமத்துவமும் கிடைப்பதற்கு வழி முறைகள் செய்யப்படும் என்று வாக்குறுதிகள் வாரி வழங்கிய பிறகும் அவர்கள் புரட்சியில் கலந்து கொள்ளாது ஒதுங்கியிருந்தனர். ஐரோப்பாவில் தலைமறைவாக வாழ்ந்து வந்த ஹெர்சனும், பாகுனினும் மட்டுமே ரஷ்யத் தீவிரவாதிகளில் போலந்தியப் பிரச்சனைக்கு ஆதரவு அளித்தனர். பத்தாயிரம் பயிற்சியற்ற வீரர்களை மட்டுமே பெற்றிருந்த புரட்சியாளர்கள் எண்பதாயிரம் எண்ணிக்கை கொண்ட ரஷ்யப்படைகட்கு ஈடு கொடுக்க இயலாது திணறினர். பெரும்பாலானச் சண்டைகள் போலந்திலும், லித்துவேனியாவிலும் நடைபெற்றன.

போலந்துப் புரட்சியை ரஷ்யர்கள் இலகுவாக அடக்கலாயினர். லித்துவேனியாவில் மூண்ட கலகத்தை ரஷ்யத் தளபதி ங.ச. முரவ்யோவ் ஒடுக்கினார். 1863-ஆம் ஆண்டு மார்ச் திங்களிலிருந்து, 1865-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் வரையிலும் அவர் 240க்கும் மேற்பட்ட மக்களைக் கொன்று குவித்தார். 20,000க்கும் மேற்பட்ட நிலப்பிரபுக்கள்

கைது செய்யப்பட்டு சைபீரியத் தீவுக்கு அனுப்பப்பட்டனர். நூற்றுக்கணக்கான பண்ணை நிலங்கள் சூறையாடப்பட்டன. போலந்து மக்களுக்கு இவ்வாறு பலக்கொடுமைகள் இழைக்கப்பட்டன. ரஷ்யப் பண்ணையடிமைகளின் விடுதலையை விரும்பாத முரவ்யோவ், லித்துவேனிய விவசாயிகட்கு 25லிருந்து 70 விழுக்காடு வரையிலும் நிலங்கள் வழங்குவதன் மூலமும், அவர்களது கடன் தொகையை 16 விழுக்காடாகக் குறைத்ததன் மூலமும், அவர்களது அன்பைப் பெற்றார். மேலும், லித்துவேனியாவில் போலந்தியக் கத்தோலிக்கரின் செல்வாக்கை அழிக்கும் பொருட்டு அவர் போலந்திய அதிகாரிகளை மாற்றி விட்டு ரஷ்ய அதிகாரிகளை நியமித்தார். பள்ளிக்கூடங்களின் நிருவாகம் மாற்றியமைக்கப்பட்டது. அலுவலகங்களில் ரஷ்ய மொழி கட்டாயமாக்கப்பட்டதோடு, கிரேக்கத் திருச்சபைக்குச் சமய மாற்றமும் ஊக்குவிக்கப்பட்டது.

போலந்தில் புரட்சியை அடக்கிய ரஷ்யத் தளபதி F.F. பர்க் பல நிலச் சீர்த்திருத்தங்களை மேற்கொண்டார். போலந்து விவசாயிகள் அனைவரும் நிலங்கள் பெற்றதோடு, பழைய கடன்களைச் செலுத்த வேண்டாமென்றும் கேட்டுக்கொள்ளப் பட்டனர். தலநிர்வாகம் சீர்திருத்தியமைக்கப்பட்டதோடு போலந்தை ரஷ்யமயமாக்கும் பணியில் அவர் முற்பட்டார். அரசின் நிர்வாகத் துறைகளிலும், நீதிமன்றங்களிலும், பள்ளிகளிலும், நாடக அரங்குகளிலும் வாணிப ஒப்பந்தங்களிலும் ரஷ்ய மொழி கட்டாயமாக்கப்பட்டது. கத்தோலிக்க மடாலயங்களும் ஏனைய சமய நிறுவனங்களும் கிரேக்கத் திருச்சபையைப் பின்பற்றுவதற்குக் கட்டாயப்படுத்தப்பட்டன. வாய்ப்புக் கிடைத்த இடங்களில் எல்லாம் அவர் போலந்து அதிகாரிகளை நீக்கிவிட்டு ரஷ்ய அதிகாரிகளை நியமித்தார். தளபதி பெர்க் எடுத்த நடவடிக்கைகள் போலந்தின் விவசாயிகட்குச் சில அனுகூலங்களை அளித்தாலும், ரஷ்யப் பேரரசுக்கு அவர்களை விசுவாசமுள்ளவர்களாக்கவில்லை. காரணம், அவர்கள் நாட்டுப்பற்று மொழிப்பற்று மிக்கவர்களாக விளங்கினர். போலந்து மொழியில் செய்தித் தாள்கள் வெளியிடுவதும் தடை செய்யப்பட்டது. போலந்தை அடுத்து ரஷ்ய அரசு உக்கிரேனியர்களை பல்வேறு அடக்கு முறைக்குள்ளாக்கியது. உக்கிரேனிய மொழியில் நூல்கள் வெளியிடுவது தடை செய்யப்பட்டது. 1875-ஆம் ஆண்டு உக்கிரேனிய இயக்கத்தைப் பற்றி ஆராய்வதற்கு மன்னர் ஒரு குழுவை நியமித்தார். அக்குழு உக்கிரேனிய மொழியில் நூல்கள் வெளியிடக் கூடாதென்றும், பள்ளிகளில் உக்கிரேனிய மொழியைப் பயிற்றுவிக்கக் கூடாதென்றும் பரிந்துரை வழங்கியது. 1876-ஆம் ஆண்டு மே திங்கள் 30-ஆம் நாள் அப்பரிந்துரைகள் சட்டமாகும் வண்ணம் அவற்றில் கையெழுத்திட்டார்.

பிரிட்டன், பிரான்சு போன்ற நாடுகளுடன் பிரஷ்யாவும் ஒத்துழைத்து இருந்தால் மேலைநாட்டுப் படைகளின் பெரும் கூட்டு எதிர்ப்பினை ரஷ்யா சந்திக்கவேண்டி ஏற்பட்டிருக்கும். ஆனால் பிஸ்மார்க் தான் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகளுக்கு ரஷ்யாவின் உதவி மிகவும் தேவை என்று கருதியதால், பிரஷ்யாவில் உள்ள தாராள கொள்கையினர், பிரஷ்ய இளவரசர்கள் இவர்களது எதிர்ப்பினையும் பொருட்படுத்தாமல் போலந்துப் புரட்சியை அடக்க ரஷ்யாவுடன் ஒத்துழைத்தார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் 1863-இல் போலந்துப் புரட்சியாளர்கள் கடுமையான முறையில் அடக்கி ஒடுக்கப்பட்டனர். அடுத்த ஒரு 50-ஆண்டுகள் போலந்தில் புரட்சி ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லாமல் ஆக்கப்பட்டது. போலந்து புரட்சியாளர்களுக்கு

வெளிநாடுகளின் உதவி இல்லாமல் மறைந்தது. இது முதல் ரஷ்யா ராணுவபலம் கொண்டு போலந்தை ஆண்டது. லிவோனியர்கள், பின்லாந்தினர் (Finns) போன்றவர்களும் போலந்துப் புரட்சியின் விளைவாக பெரும் துன்பங்களை அனுபவிக்க வேண்டி வந்தது. அது முதல் நாட்டில் இருள் சூழ்ந்த நிலையும், பிற்போக்குத்தனங்களும் அரசின் சார்பில் பரவலாயின. ஸார் மன்னனின் ஆட்சிக்குட்பட்ட பகுதியில் வாழ்ந்த ரஷ்யர் அல்லாத பகுதி மக்கள் கடுமையான முறையில் நசுக்கப்பட்டனர்.

சுருங்கக்கூறின் பிரான்சின் மூன்றாம் நெப்போலியனது பிடிவாதப்போக்கு ரஷ்ய - பிரெஞ்சு நட்புறவு முறிய காரணமாயிற்று. அதுபோலவே நெப்போலியனது விருப்பப்படி ஒரு மாநாடு கூட்ட பிரிட்டன் விரும்பாமல் இருந்தது பிரான்சு பிரிட்டன் உறவு முறிய காரணமாயிற்று. ஆஸ்திரியாவும் பிரான்சுடன் உறவுகொள்ளத் தவறிவிட்டது. மேலும் ஆஸ்திரியா ரஷ்யாவின் வெறுப்பையும் கிரிமியப்போரின்போதே பெற்றுவிட்டது. அதுபோலவே ஆஸ்திரியா ஜெர்மனியையும் பகைத்துக் கொண்டது. இச்சூழ்நிலையில் பிரஷ்யா ரஷ்யா உறவு போலந்துக்கு எதிராக ஏற்பட்டதில் வியப்பு ஒன்றும் இல்லை.

பயிற்சி வினாக்கள்

1) 1863-ஆம் ஆண்டின் போலந்துப் புரட்சி குறித்து ஒரு கட்டுரை வரைக.

2) 1863-ஆம் ஆண்டில் போலந்தில் ஏற்பட்ட புரட்சிக்கான காரணங்களையும், விளைவுகளையும் விவரி.

பாடம் – 8

ரஷ்ய – துருக்கிப் போர் (1877 – 1878)

இரண்டாம் அலெக்ஸாந்தர் கருங்கடல் பகுதியில் ரஷ்ய நாட்டின் கப்பல் படையை நிறுவுவதற்காக உதுமானியப் பேரரசின் மீது தாக்குதல் நடத்துவதற்கு தயாராகிக் கொண்டிருந்தார். இந்நிலையில் கிருமியப் போரை முடித்த பாரிஸ் உடன்பாட்டின் பிரிவுகளை துருக்கி மதிக்கத் தவறிவிட்டது. பாரிஸ் உடன்பாட்டின்படி பால்கன் நாடுகளில் வாழுகின்ற கிறித்துவர்களின் உரிமையைக் காக்கின்ற பொறுப்பை துருக்கியப் பேரரசு ஏற்று இருந்தது. இதேவேளையில் துருக்கிய அரசு, பாரிஸ் மாநாட்டில் ஒத்துக்கொண்ட இப்பொறுப்பைத் தட்டிக் கழித்ததால் பால்கன் பகுதியில் துருக்கிக்கு எதிராக கிளர்ச்சிகள் பல தோன்றின. செர்பியாவின் அருகாமையில் உள்ள ஹெர்சிகோவினாவில் 1875இல் புரட்சி மூண்டது. இதனைத் தொடர்ந்து ஸ்லாவ் இனமக்கள் துருக்கியின் காட்டுமிராண்டித்தனமான போக்கினை எதிர்த்துப் புரட்சி செய்தனர். இம்மக்களுக்கு ஆதரவாக போஸ்னியா, செர்பியா, பல்கேரியா ஆகிய பகுதிகளில் வாழ்ந்த ஸ்லாவ் மக்களின் ஆதரவும் கிடைத்தது. இப்புரட்சிகள் முஸ்லீம்களுக்கு எதிரான ஒன்றானதால் அனைத்து கிறித்துவர்களும் ஒன்று சேர்ந்து பெரும் போரையே உருவாக்கினர். 1876இல் பல்கேரியாவில் புரட்சி கடுமையாக இருந்தது. இப்புரட்சியில் துருக்கிய அதிகாரிகள் பலர் பலியாயினர். பழிவாங்க அனுப்பப்பட்ட துருக்கியப் படை அகப்பட்ட ஆயிரக்கணக்கான ஸ்லாவ் மக்களைக் கொன்று குவித்தது. பல ஊர்கள் சூறையாடப்பட்டன.

அதே வேளையில் கான்ஸ்டாண்டிநோபிள் பகுதியில் உதுமானியப்பேரரசு ஆற்றலற்று அழிவுப் பாதையை நோக்கி விரைந்து கொண்டிருந்தது. அமைதியை நிலைநாட்டுவதும் மாநில ஆளுநர்களைக் கட்டுப்படுத்திப் பேரரசின் கட்டளைகளை நிறைவேற்றச் செய்வதும், இராணுவ வீரர்களைப் பேரரசின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கச் செய்வதும் உதுமானியப் பேரரசுக்கு இயலாத செயல்களாகி வந்தன. பேரரசின் கருவூலமும் காலியாகிக் கொண்டிருந்தது. பேரரசின் பல பகுதிகளில் எதிர்ப்பு அரசுகள் நிறுவப்பட்டன. எனவே 1876-இல் அரண்மனைப் புரட்சி ஒன்று நடத்தி இரண்டாம் அப்துல்ஹமீது என்பவர் ஆட்சியைக் கைப்பற்றினார்.

இரண்டாம் அப்துல் ஹமீத் ஒரு ஏதேச்சதிகார மன்னனாகவும் கொடிய அரசனாகவும் விளங்கினார். மன்னராகப் பதவியேற்ற இரண்டாம் அப்துல் ஹமீது ஐரோப்பிய நாடுகளின் நல்லெண்ணத்தைப் பெறும் நோக்குடன் 1876-இல் உரிமைகள் வழங்கக்கூடிய ஓர் அரசியலமைப்பைக் கொண்டு வந்தார். ஆனால் அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காததோடு புறக்கணிக்கவும் செய்தார். உள்நாட்டில் அமைதியை நிலைநாட்டவும், அந்நியர், குறிப்பாக ரஷ்யர் தலையீட்டினைத் தடுக்கவும் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டார்.

தன்னுடைய செல்வாக்கு கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும், கருங்கடல் பகுதிகளிலும் குறைவதை விரும்பாத ரஷ்ய அரசரான இரண்டாம் அலெக்ஸாந்தர், உதுமானியப் பேரரசில் வாழ்கின்ற செர்பியர்கள், பல்கேரியர்கள், ஸ்லாவியர்கள் போன்ற அனைத்து இனத்தைச் சார்ந்தவர்களும் தேசியவாதிகளும் கொடிய முறையில் நடத்தப்படுகிறார்கள் என்று குற்றம் சாட்டி 1877ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், இரண்டாம் அப்துல்ஹமீதுக்கு எதிராகப் போர் தொடுத்தார்.

ரஷ்யா 1877-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ஆம் தேதி துருக்கியின் மீது போர் தொடுத்தது. இப்போர் ஏறத்தாழ 10 மாதங்கள் பால்கன் பகுதியிலும், காகஸஸ் பகுதியிலும் நடைபெற்றது. துருக்கியின் மேலாதிக்கத்திலிருந்த ருமேனியாவும் பல்கேரியாவும் ரஷ்யாவையே ஆதரித்தன. 1877-ஆம் ஆண்டு ஜூன் மாதம் ரஷ்யப் படைகள் ருமேனியாவைச் சுற்றிக் கொண்டு டான்யூப் ஆற்றைக் கடந்து உதுமானியப் பேரரசுக்குள் புகுந்தன. இப்படையை முறியடிக்க எண்ணிய இரண்டாம் அப்துல் ஹமீது, பல்கேரியாவில் டான்யூப் நதிக்குச் சற்று தெற்கே அமைந்திருந்த பிளிவ்னா என்ற பகுதியில் தன் படைகளை மறைத்து வைத்திருந்தார். ஆகவே ரஷ்யப் படைகள் இப்பகுதிக்குள் நுழைந்தவுடன் எதிர்பாராத விதமாக துருக்கியப்படைகள் கடுமையாகத் தாக்குதல் செய்தன. இதனால் ரஷ்யப்படைகள் பிளிவ்னா பகுதியில் இருந்து பின்வாங்கின.

முதலில் பின்னடைந்த ரஷ்யப்படை விழிப்படைந்து மிகவும் வலிமையுடன் துருக்கியப்படையின் தளபதி உஷ்மான் பாஷாவின் கோட்டையை முற்றுகையிட்டன. கோட்டை முற்றுகையிடப்பட்டதால் உணவுப் பொருள் எதுவும் செல்ல வழியில்லாமல் துருக்கியப்படை மிகத் துயருக்குள்ளானது. ரஷ்யப் படைகளை முறியடிக்க எடுத்துக்கொண்ட முயற்சியில் தோல்வியடையவே உஷ்மான் பாஷா நாற்பதாயிரம் போர் வீரர்களுடன் ரஷ்யப் படையிடம் சரணடைந்தார். இந்த வெற்றிக்குப் பின்னர் 1878 ஜனவரியில் ரஷ்யப்படையினர் துருக்கியப் படையை மீண்டும் தாக்கி சரணடையச் செய்தனர்.

இச்சமயத்தில் செர்பியர்களும், மாண்டிநீக்ரோக்களும், துருக்கியப் படைகளை முறியடித்தனர். பால்கன் தீபகற்பத்தின் மேற்குப் பகுதியிலிருந்து இவ்வாறு துருக்கியர்கள் வெளியேற்றப்பட்டனர். பல்கேரியர்கள் பலர் ரஷ்யப் படையில் சேர்ந்து துணைபுரிந்தனர். துருக்கியப் போர் வீரர்களும் முழு மூச்சுடன் போர் புரிந்தனர். ஆனால் துருக்கியப்படையின் எண்ணிக்கையும், போர்த் தளவாட வசதிகளும் மிகக் குறைவாக இருந்தமையால் ரஷ்யப் படைகளிடம் சரணடையவேண்டிய நிலை ஏற்பட்டது. ஏட்ரியாநோபிளை ரஷ்யப்படைகள் கைப்பற்றியபிறகு கான்ஸ்டாண்டிநோபிளை நோக்கி விரைந்தன. எனவே துருக்கியச் சுல்தான் இரண்டாம் அப்துல் ஹமீது ரஷ்யாவுடன் உடன்படிக்கை செய்து கொள்வதற்கு முன்வந்தார். ஆகவே 1878-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஸான்-ஸ்டீபனோ (San-Stefano) எனும் உடன்படிக்கை கையெழுத்தாகியது.

இதன்படி துருக்கியச் சுல்தான் செர்பியா, மாண்டிநீக்ரோ, ருமேனியா ஆகிய நாடுகளின் சுதந்திரத்தை அங்கீகரித்தார். ஈஜீக் கடல் பகுதியிலிருந்து அல்பேனியா வரை பரவியிருந்த பெரும்பாலான மாசிடோனியப் பகுதிகளையும், பல்கேரியாவையும் ஒருங்கிணைத்து பல்கேரியா தேசிய அரசு ஒன்றை ஏற்படுத்தி, சுயஆட்சி உரிமை பெற்ற அப்பகுதியைச் சேர்ந்த இளவரசரின் கீழ் ஆட்சி அமைக்க ஒப்புக்கொண்டார். போஸ்னியா, ஹெர்சிகோவினா என்ற பகுதிகளில் அப்பகுதி மக்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு துருக்கிய சுல்தான் ஒப்புக்கொண்டார். அத்துடன் டார்டனால், பாஸ்பரஸ் ஆகிய பகுதிகளை எவ்விதக் கட்டுப்பாடுமின்றி வாணிபத்திற்குப் பயன்படுத்துவதற்கும் அனுமதித்தார்.

இவ்வுடன்படிக்கையால் பால்கன் நாடுகளும், ரஷ்யாவும் நன்மையடைந்தன. ரஷ்யாவிற்கு ஆர்மேனியாவின் ஒரு பகுதியும் டோப்ருஜாவின் ஒரு பகுதியும் கிடைத்தது. ரஷ்யா துருக்கியின் மீது போர் தொடுப்பதற்குக் காரணத்தை உண்டாக்கிக் கொள்கிற வகையில் பெருந்தொகையை போர் இழப்பீடாகத் துருக்கியிடமிருந்து பெற்றது.

இவ்வுடன்படிக்கையால் ஏற்பட்ட பெருமையை ரஷ்யாவும், ஸ்லாவ் இனத்தைச் சார்ந்தவர்களும் நீண்ட நாட்கள் அனுபவிக்க இயலவில்லை. காரணம் ரஷ்யா, பால்கன் நாடுகளில் வாழும் ஸ்லாவ் இனத்தவர்கள் இவர்களின் தேசிய கருத்துக்களை தடுக்காது விட்டு விட்டால் ஸ்லாவ் இனத்தவர்கள் வாழும் தன் பகுதியில் குழப்பங்கள் விளையும் என ஆஸ்திரிய ஹங்கேரி பேரரசரான பிரான்சிஸ் ஜோசப் கருதினார். இங்கிலாந்து நாடும் அண்டைக்கிழக்கு நாடுகளில் ரஷ்யாவின் செல்வாக்கு சான்ஸ்டீபனோ உடன்படிக்கையினால் வளர்ச்சி பெறுமானால் அது இங்கிலாந்தின் தேசியக் கொள்கைக்கும், ஏகாதிபத்தியத்திற்கும் ஆபத்து என கருதியது.

ஆஸ்திரிய - ஹங்கேரிப் பேரரசர் ஜோசப், துருக்கியின் எதிர்காலத்தில் அதன் சுல்தானான இரண்டாம் அப்துல் ஹமீதுக்கும், ரஷ்யாவின் பேரரசர் அலெக்ஸாந்தருக்கும் மட்டுமல்லாமல் இங்கிலாந்து பிரான்சு, இத்தாலி, ஜெர்மனி ஆகிய அனைத்து ஐரோப்பிய நாடுகளுக்கும் பங்கு உண்டு என 1856-இல் கூடிய மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தைச் சுட்டிகாட்டி சான்ஸ்டீபனோ உடன்படிக்கையை மாற்றியமைக்க வேண்டும் என்று கோரினார். இக்கருத்துக்கு பிரிட்டிஷ் பிரதமரான (Prime Minister) பென்ஜமின் டிஸ்ரேலி முழு ஆதரவு கொடுத்தார். ஆனால் பிரஷ்யாவின் சான்சலரான பிஸ்மார்க் பொதுநபராக இருந்து ஆஸ்திரியாவிற்கும் ரஷ்யாவிற்கும் உள்ள பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதாக அறிவித்து நேர்மையான தரகராக (Honest Broker) செயல்பட்டு பெர்லின் மாநாட்டைக் கூட்ட ஏற்பாடு செய்தார்.

பெர்லின் மாநாடு – 1878

பிஸ்மார்க்கின் முயற்சியால் இம் மாநாடு கூட்டப்பட்டது. ரஷ்யாவின் பெருமை இம்மாநாட்டில் குறையும் என்று தெரிந்தும் கலந்து கொண்டது. காரணம் அவ்வாறு

கலந்து கொள்ளாவிட்டால் இங்கிலாந்து ரஷ்யா மீது படையெடுக்கும் என எண்ணியது. இம்மாநாட்டில் ஐரோப்பிய நாடுகள் பலவும், அண்டைய கிழக்கு நாடுகள் சிலவும் கலந்து கொண்டன. அண்டை கிழக்கு நாடுகளின் சிக்கல்களை விவாதித்து ஓர் உடன்படிக்கையை 1878-ஆம் ஆண்டு ஜூலை மாதம் எல்லா வலிமைமிக்க நாடுகளும் பெர்லின் உடன்படிக்கையில் கையொப்பமிட்டன.

இந்த உடன்படிக்கை சான்ஸ்டீபனோ உடன்படிக்கையின் அம்சங்களைக் குறைத்தது. மேலும் பால்கன் பகுதியில் இருந்த மக்களின் தேசியக் கருத்துக்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காததுடன், துருக்கியப் பேரரசின் எதிர்காலத்திற்கும், ரஷ்யா, ஆஸ்திரியா - ஹங்கேரி, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கும் இடையே சான்ஸ்டீபனோ உடன்படிக்கையில் ஏற்பட்ட கருத்து வேற்றுமையைக் குறைப்பதற்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்தது.

பெர்லின் மாநாட்டின் மாண்டிநீக்ரோ, செர்பியா, ருமேனியா ஆகியவை துருக்கியின் தொடர்பிலிருந்து முற்றிலுமாகத் துண்டிக்கப்பட்டுச் சுதந்திர நாடுகளாயின. ஆனால் பல்கேரியா மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுப் புதுமையானதோர் ஏற்பாட்டுக்கு உள்ளாயிற்று. பல்கேரியாவின் சுயாட்சி உரிமை அங்கீகரிக்கப்பட்டாலும் துருக்கியுடன் ஓரளவு தொடர்பு கொண்டதாக இருக்கும். கிழக்கு ருமேனியா என்னும் ஒரு பகுதி சுல்தானின் ஆதிக்கத்தில் வைக்கப்பட்டாலும், அவரால் நியமிக்கப்படும் ஒரு கிறித்துவ ஆளுநரே அதன் ஆட்சியாளராக இருப்பார். மூன்றாவது பகுதியான மாசிடோனியா இன்னமும் துருக்கியின் நேராட்சியிலேயே நீடிக்கும். துருக்கிக்கு சொந்தமான சில பகுதிகளைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளவும் இம்மாநாட்டை சில நாடுகள் பயன்படுத்திக் கொண்டன. போஸ்னியாவும், ஹெர்சிகோவினாவும் ஆஸ்திரியா - ஹங்கேரியின் நிர்வாகப் பாதுகாப்பில் வைக்கப்பட்டன. அவை விரைவிலேயே ஆஸ்திரியாவோடு இணைத்துக் கொள்ளப்படலாயின. துருக்கியின் மத்திய தரைக்கடற்பகுதி நலன்களைக் காப்பதற்கென சைப்ரல் தீவு இங்கிலாந்துக்குக் கொடுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து எகிப்தும் இங்கிலாந்துக்கு இரையாயிற்று. பெயரளவில் இவை துருக்கியப் பகுதிகளாகவே நீடித்தாலும் இப்புதிய ஏற்பாடுகள் நிலையற்றவையாய், குழப்பமுண்டாக்குவதாய், எதிர்காலத்தில் எரிமலையாய் வெடிப்பதற்கான வாய்ப்பை உருவாக்குவதாய் அமைந்தன.

ரஷ்யா - துருக்கி போர் ஏற்படக் காரணம், ஸ்லாவ் மக்களின் மீது ரஷ்யாவுக்கு உள்ள அனுதாபமும் தேசியப் பெருந்தன்மையும் ஆகும். ஆனால் போரில் வெற்றி பெற்றாலும் பெர்லின் மாநாடு ரஷ்யாவின் பெருமைக்கு ஓர் களங்கமாய் அமைந்தது. ஆனால் அதன் கொள்கைகளுக்கு பின்னடைவு என்று இதனைக் கருத முடியாது. 1878-க்குப் பிறகு ரஷ்யாவிற்கு முன்னை விட அதிக ஆபத்து ஏற்படலாயிற்று. இந்த ஆபத்து, ரஷ்யா - துருக்கியப் போரில், ரஷ்யா வெற்றி பெற்றதால் ஏற்பட்டதாகும். மாறாக தோல்வியினால் ஏற்பட்ட ஒன்றல்ல. இந்தப் போருக்குப் பின்னர் ரஷ்யாவிற்கும் கிரேட்

பிரிட்டனுக்கும் இடையில் பலமிக்கதோர் அரசாக துருக்கியப் பேரரசு விளங்கிய நிலை மாறி துருக்கி பலமிழந்து காணப்பட்டது. கருங்கடலில் பிரிட்டிஷ் கப்பல்களும் செல்ல அனுமதிக்கப்பட்டன. அதாவது பிரிட்டன், ரஷ்யா ஆகிய நாடுகளின் கப்பல்கள்இனிமேல் சென்று வரலாம். இம்மாற்றம் ரஷ்யாவால் விளைந்த ஒன்றாகும். பெர்லின் மாநாட்டிற்கு பிறகு ரஷ்யாவின் கொள்கை அச்சமும் வெறுப்பும் கலந்த ஒன்றாய் அமைந்தது. மூன்றாம் அலெக்ஸாந்தர் பிற்காலத்தில் இது பற்றிக்கூறும்போது "1876, 1877 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட தோல்விக்கு முக்கிய காரணம் நாம் (ரஷ்யா) பிற நாடுகளின் மக்களோடு சென்றோம் மாறாக அந்நாடுகளின் அரசசுகளுடன் உறவு கொள்ளத்தவறி விட்டோம்" என்றார்.

பெர்லின் மாநாடு ரஷ்யாவிற்குத் தோல்வியாய் அமைந்தாலும், ஆஸ்திரியா - ஹங்கேரி, கிரேட் பிரிட்டன் போன்ற நாடுகளுக்கு முழு வெற்றியாய் அமைந்தது என்றும் கருத முடியாது. ஆஸ்திரிய சான்சலர் ஆண்டிராசி (Andrassay) உத்மானியப் பேரரசினை காப்பாற்ற முயன்றார். ஆனால் காப்பாற்றப்படக் கூடிய நிலையில் உத்மானியப் பேரரசு இல்லை. உத்மானியப் பேரரசு என்பது கடந்த காலத்தில் ஏற்பட்ட ஒன்றாய் இருந்தது. பெர்லின் மாநாட்டின் மூலம் மாசிடோனியா, போஸ்னியா போன்ற நாடுகள் வருங்கால பேரழிவுக்கான விதைகளாய் அமைந்தன. மாசிடோனியா விவகாரம் ஐரோப்பிய ராஜ தந்திரத்தில் அடிக்கடித் தோன்றி 1912-ல் ஏற்பட்ட அண்டைய பால்கன் போருக்குக் காரணமாய் அமைந்தது. போஸ்னியா விவகாரமும் 1908-ல் ஏற்பட்ட குழப்பங்களுக்குக் காரணமாய் அமைந்ததோடு பின்னர் 1914-ல் முதல் உலகப் போர் ஏற்படவும் காரணமாய் அமைந்தது. இந்தப் போர் ஹாப்ஸ்பர்க் ராஜ வம்சத்தை (Hapspurg monarchy) முடிவுக்குக் கொண்டு வந்தது. மாறாக சான் ஸ்டிபனோ உடன்படிக்கையைக் காப்பாற்றி இருந்தால் உத்மானியப் பேரரசும், ஆஸ்திரிய - ஹங்கேரி அரசும் இன்று வரை நிலவி இருக்கும். மேலும், பெர்லின் மாநாடு மேற்கொண்ட நடவடிக்கைகளைவிட, அது நடந்த இடத்திற்கு மாபெரும் திருப்பு கட்டமாய் அமைந்தது. 1856-இல் பிரஷ்யா, பாரிஸ் மாநாட்டில் பிறகு கலந்து கொண்டபோது மிகவும் தாழ்வு படுத்தப்பட்ட நிலையில் நடத்தப்பட்டது. ஆனால் தற்போது ஜெர்மனி ஒரு மதிப்பு மிக்க ஐரோப்பிய சக்தி என்கிற முறையில் கலந்துகொண்டது - அத்துடன் பெரும் பொறுப்புக்களும் அதனிடம் ஒப்படைக்கப்பட்டது. கிழக்கத்திய பிரச்சனைகளைக் கண்டுகொள்ளாமல் இனிமேல் ஜெர்மனியால் இருக்க முடியாது. ஆயினும் அப்பிரச்சனையை தனக்குச் சாதகமாய் பயன்படுத்திக்கொள்ள ஜெர்மனி விரும்பவில்லை. ஆனால் கிழக்கத்திய பிரச்சனையில் கலந்து கொண்ட பிற நாடுகள் இப்பிரச்சனையில் ஜெர்மனியைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள விரைந்தன. ஜெர்மனி இதனை நன்கு கவனித்தே வந்தது.

பெர்லின் மாநாடு மூலம் ஜெர்மனியை மையமாகக் கொண்ட புதிய இராணுவ சமநிலை அமைந்ததை உணர முடிகிறது. பெர்லின் மாநாட்டில் பங்கு கொண்ட அரசியல் மேதைகள் எவருமே நீண்ட நாட்கள் இம்மாநாட்டின் பணிகள் நிலைத்து நிற்கும் என்று

கருதவே இல்லை. எனவே பெர்லின் மாநாட்டைத் தொடர்ந்து முப்பத்தாறு ஆண்டுகள் இம்மாநாட்டினால் ஐரோப்பாவில் அமைதி நிலவியது என்பதைக் கேட்கும் பட்சத்தில் அவர்கள் பெரும் ஆச்சரியம் அடையவேண்டியிருக்கும். மேலும் ஐரோப்பாவின் மாபெரும் மாநாடு ஒன்று நாற்பது ஆண்டுகளுக்குப் பின்னர் பாரிசில் நடைபெறும் என்பதை உணர்ந்திருந்தால், இன்னும் அவர்கள் வியப்பில் ஆழ்ந்திருப்பர்.

ரஷ்யாவின் தனிப்போரின் மூலம் பால்டிக் நாடுகள் சில சுதந்திரம் பெற்றாலும், அப்போரின் விளைவாக ரஷ்யாவுக்கு அதிக நன்மையேதும் இல்லாது போயிற்று. ஐரோப்பாவில் துருக்கியின் நிலை பெருமளவு பாதிக்கப்பட்டது. போரில் ரஷ்யாவிற்கு வெற்றி கிடைத்தாலும் அதன் பொருளாதாரச்சுமை முழுவதும் சாதாரண மக்களின் மீது விழுந்தது. நெடுங்காலம் துருக்கியின் பிடியில் சிக்குண்டு தவித்துக் கொண்டிருந்த பால்கன் பகுதி மக்கள் உரிமை பெறலாயினர்.

பயிற்சி வினாக்கள்

1) 1877 - 78 ரஷ்ய - துருக்கியப் போரைப்பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

2) ரஷ்ய துருக்கியப்போர் 1877 - 78க்கான காரணங்களையும், பெர்லின் மாநாட்டின் ஷரத்துக்களையும் விவரிக்க.

பாடம் – 9 மூன்றாம் அலெக்ஸாந்தரின் 1881–1894 உள்நாட்டு – வெளிநாட்டுக் கொள்கைகள்

மூன்றாம் அலெக்ஸாந்தரின் உள்நாட்டுக் கொள்கைகள்

இரண்டாம் அலெக்ஸாந்தர் 1881-ஆம் ஆண்டு கொலை செய்யப்படவே அவரது மகனான மூன்றாம் அலெக்ஸாந்தர் பட்டமேற்றார். 1845-ஆம் ஆண்டு பிறந்த அவர், உடல் வலிமையும் மன வலிமையும் நிரம்பப் பெற்றிருந்தார். இவரது ஆட்சிக்காலம் பிற்போக்குக் கொள்கைக்குப் பெயர் பெற்றது. மக்களுக்கு அவரது ஆட்சிக்காலம் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. அவர் அரியணையேறியதும் லிபரல் கொள்கையுடைய பழைய அமைச்சர்கள் நீக்கப்பட்டு அவ்விடங்களில் பிற்போக்குக் கொள்கைகளில் ஊறிப்போன அமைச்சர்களை நியமித்தார். இவ்வமைச்சர்களின் துணையுடன் பேரரசர் தாம் விரும்பியபடி பிற்போக்குக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கலானார். இதன் காரணமாகவே மூன்றாம் அலெக்ஸாந்தரின் ஆட்சிக் காலம் "எதிர் சீர்திருத்தக் காலம்" (Era of Counter Reforms) என்று அழைக்கப்படுகின்றது. வரலாற்றாசிரியர் சோலவ்யோ, பத்திரிகையாசிரியரும் பான்ஸ்லாவிய Panlav இயக்கத் தலைவரான அச்சகோவ், மற்றொரு பத்திரிகையாசிரியரான கட்சோவ், நீதிபதி சி.பி. போபிசோனஸ்டவ் ஆகியோரது எழுத்துக்கள் அவரைப் பெரிதும் கவர்ந்தன. பிற்போக்குக் கொள்கைகளில் ஊறித்திளைத்திருந்த அமைச்சர்களான திமித்ரி டால்ஸ்டாய், போபிடோனஸ்டவ், டெலியனோவ் ஆகியோரது உதவியுடன் இவர் தம் பழிவாங்கும் படலத்தைத் தொடர்ந்தார். பதவிக்கு வரும்வரை 'அனைத்தும் ஸ்லாவியர்களுக்கே' என்ற கோட்பாட்டில் ஊறித் திளைத்திருந்த அவர், பால்கன் பகுதி ஸ்லாவ் இனமக்கள் ரஷ்ய எதிர்ப்புக் கொள்கையினைத் தொடர்ந்து கடைப்பிடித்ததால், அவரும் தம் கொள்கையை மாற்றியமைக்க வேண்டியதாயிற்று. அரசியலில் ஆகட்டும் அல்லது சமுதாய அமைப்பில் ஆகட்டும் பெரும் மாற்றங்கள் புகுந்திட காலம் இன்னும் கனியவில்லை என்றே அவர் கருதினார்.

உள்நாட்டளவில் பிற்போக்குக்கொள்கையைக் கடைப்பிடித்தலையும் வெளிநாட்டு உறவு முறையில் ஜெர்மனியுடன் உறவு முறிந்ததன் காரணமாகப் பிரான்சுடன் நெருக்கமான உறவு மேற்கொள்ளுதலையுமே தம் முக்கியக் கொள்கைகளாகக் கொண்டிருந்தார்.

மூன்றாம் அலெக்ஸாந்தரின் எதிர்சீர்த்திருத்தங்கள்

மூன்றாம் அலெக்ஸாந்தர் அரியணையேறியதும் புரட்சி இயக்கத்தலைவர்களான டெலியபோவ், சோபியா பெராவ்ஸ்கயா, கிபல்சிக் ஆகியோரைத் தூக்கிலிட்டார்.

பிற்போக்குக் கொள்கையின் முதல் கட்டமாகப் பேரரசர் புதிய சட்டங்கள் பலவற்றை இயற்றினார். அதன் முதற்படிக்கல்லாக 1881-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 26-ஆம் நாள் அவசரக் காலச் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. 1917ஆம் ஆண்டு வரையிலும் நடைமுறையிலிருந்த அச்சட்டம் அரசாங்க அலுவலர்களுக்கு அவசரகால

அதிகாரங்கள் பல அளித்திருந்தது. இதன்படி அமைதிக்குப் பங்கம் ஏற்படுவதாக இருந்தால் கவர்னர்களோ, கவர்னர் ஜெனரல்களோ, உள்நாட்டு அமைச்சரோ அவசர நிலையைப் பயன்படுத்த இயலும். எந்த ஒரு நபரையும் முன்கூட்டியே கைது செய்யலாம்; நிர்வாக அலுவலர்களே வழக்குகளை விசாரிக்கலாம்; வழக்குகளை இராணுவ விசாரணைக்கும் உட்படுத்தலாம். அவசர நிலை பிரகடனப் பயன்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் புரட்சி இயக்கங்களின் நடவடிக்கைகள் குறையவில்லையென்றாலோ, உரிய நடவடிக்கைகள் எடுக்கத் தவறினாலோ உள்துறை அமைச்சரக ஊழியர்களும் நிர்வாக நிலை ஊழியர்களும் கடுந்தண்டனைக்குள்ளாவர். பேரரசரின் ஒப்புதலுடன் இவ்வமைச்சர்கள் எந்த நேரத்திலும் அவசர நிலையைப் பிரகடனப்படுத்தலாம். அவசர காலங்களில் எந்தவொரு நபரையும் கைதுசெய்து நாடு கடத்த இயலும்; அவர்களுடைய சொத்துக்களும் பறிமுதல் செய்யப்படலாம். நியமிக்கப்பட்ட அல்லது தேர்ந்தெடுக்கப் பட்ட அலுவலர்களை அரசு வலுக்கட்டாயமாக நீக்க இயலும். அரசுக்கெதிரான நூல்களை அரசு தடை செய்ய இயலும். தேவையேற்பட்டால் பள்ளிகளையும் மூட இயலும். செயின்ட் பீட்டர்ஸ்பர்க், மாஸ்கோ மற்றும் அநேக பகுதிகளில் அவசர காலச்சட்டங்கள் நடைமுறைக்கு வந்தன.

அடுத்து, பத்திரிகைகளும் அடக்கு முறைக்குள்ளாயின. 1882ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 8-ஆம் நாள் "பத்திரிகைகள் சம்பந்தப்பட்ட தற்காலிகச் சட்டங்கள்" (Temporary Measures Concerning the Periodical Press) என்னும் சட்டங்களை இயற்றி அரசு தாராள, மற்றும் தீவிரக் கொள்கைகள் உடைய செய்தி தாட்களைத் தணிக்கை செய்தது. அரசுக்கும் ஆட்சிக்கும் எதிரான செயல்களை வெளியிட்டு மும்முறை எச்சரிக்கைக்குள்ளான அனைத்து வெளியீட்டாளர்களும் அடுத்துத் தங்கள் வெளியீடுகளை வெளியிடு முன் தணிக்கை பெறவேண்டும் என்று ஆணையிடப்பட்டது. 1884-இல் 'தந்தையர் நாட்டின் வரலாற்று நிகழ்ச்சிகள்' (Father land Notes) என்னும் தீவிரவாதிகளின் செய்தித்தாள் தடைக்குள்ளாகியது.

பிரபுக்களுக்குச் சலுகைகள்

பிரபுக்களின் மேலாண்மையை மீண்டும் உயர்த்தும் பொருட்டு பிரபுக்கள் பாங்கு (Nobles Bank) ஒன்று 1885-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. விவசாயிகள் வங்கி ஏழை விவசாயிகளுக்கு 6.5 சதவீத வட்டி விகிதத்தில் கடன்கொடுத்தபோது, பிரபுக்கள் வங்கியோ உயர்குடி மக்களுக்கு 4.5 சதவீத வட்டிக்குக் கடன் கொடுத்தது. நீதித்துறையின் அதிகாரங்கள் மேலும் குறைக்கப்பட்டன. நீதிபதிகளின் மீது நீதித்துறை அமைச்சருக்கு அதிகக் கட்டுப்பாடு இருக்கும் வகையில் 1885இல் சட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டன. அரசின் மதிப்பும், மரியாதையும் உள்ளடக்கிய விவகாரமாயிருந்தால் அத்தகைய வழக்கு விவரங்களை மற்றவர்களுக்கு ஏதும் தெரியா வண்ணம் தனி அறையில் நீதித்துறை அமைச்சரே ரகசியமாக விசாரிக்கலாம். நீதிபதிகளின் துணையாளர்களான 'ஜூரி'களுக் குரிய பதவிகள் செல்வந்தர்களுக்கே அளிக்கப்பட்டன. அரசு அதிகாரிகளுக்கெதிரான வழக்குகளை ஜூரிகளின்றியே விசாரிக்கலாம். சட்டத்துறையிலும், நீதித்துறையிலும் யூதர் எவரும் எப்பதவியும் வகிக்கலாகாது. 1886ஆம் ஆண்டுச் சட்டமொன்று

நிலப்பிரபுக்களோடு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்த நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறிய விவசாயிகளைக் கைது செய்து கொடூரமான குற்றவிசாரணைக்குட்படுத்த வழிவகுத்தது. ஒரு விவசாயியின் உடைமையை ஒரு குடும்பத்துப் பிள்ளைகள் பிரிவினை செய்து கொள்வதற்குக் கூடத் தந்தையின் அனுமதியோடு விவசாயக் கூட்டமைப்பான 'கம்யூனியன்' உறுப்பினர்களில் மூன்றில் இரு பங்கினரின் ஒப்புதலும் இன்றியமை யாததாயிற்று.

கல்விக் கொள்கை

அரசின் அடக்குமுறையிலிருந்து கல்வித்துறையும் தப்ப இயலவில்லை உயர்நிலைப்பள்ளிகளில் ஏழை, எளியமக்களின் குழந்தைகள் 'சமயற்காரரின் குழந்தைகள்' என்று அழைக்கப்பட்டன. அக்குழந்தைகள் உயர்கல்வி பெற்றுவிடக்கூடாது என்பதற்காக புதிய கட்டுப்பாட்டுத் திட்டங்கள் இயற்றப்பட்டன. பல்கலைக்கழகங்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் உயர் பதவிக்குரியோரைக் கல்வி அமைச்சரே நியமிக்கலானார். ஆட்சியாளரின் ஆதரவு பெற்றோரே பல்கலைக்கழகத்திற்குள் நுழைய முடியும். பல்கலைக்கழகப் படிப்புக்கட்டணம் ஐந்து மடங்காக உயர்த்தப்பட்டது. யூதர் எதிர்ப்புக் கொள்கையை அரசு கடைப்பிடித்து வந்ததால் அவர்கள் தங்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டு முறையில்தான் உயர் கல்வி பெற இயலும், தென்மேற்கு ரஷ்யாவிலும், உக்ரெயின் பகுதியிலும் மொத்த மாணவர்களில் பத்து சதவீதமாகவும், மாஸ்கோ, பீட்டர்ஸ்பர்க் நகரங்களில் மூன்று சதவீதமாகவும் அவர்கள் இடம் பெற்றனர். அவர்கட்கென இயங்கிய ஒரே மருத்துவப்பள்ளியும் 1882-இல் மூடப்பட்டது. 1886-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டமொன்று பல்கலைக்கழக படிப்புக்குப் பெண்களைத் தகுதியற்றவர்களாக்கியது. பள்ளி ஆய்வாளர்களின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டன. மாணவர் இயக்கங்களும் மன்றங்களும் தடைசெய்யப்பட்டன. யூதர்கள் தங்கள் இருப்பிடங்களிலிருந்து வெளியேறவோ, மதுவகைகளை விற்கவோ, பண்ணைகளை நிர்வகிக்கவோ, அரசு வேலைகளில் சேரவோ அனுமதிக்கப்படவில்லை. இவ்வகையில் யூதர்கள் மன்னர் பரம்பரையினரின் பரம எதிரிகளாயினர்.

உயர்குடியினருக்கு உயர் பதவிகள்

விடுதலைச் சட்டம் வெளி வருவதற்கு முன் பிரபுக்கள் வகித்து வந்த உயர்நிலையை மீட்டுத் தருவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. 1889-ஆம் ஆண்டின் சட்டம் நிலத்தலைவர்கள் (Land Captains) என்போரை உள்துறை அமைச்சர் நியமிக்கத் துணை செய்தது. பரம்பரை பிரபுக்களின் குடும்பங்களிலிருந்து நியமிக்கப்பட்ட இவ்வூர்ப்புற மேற்பார்வையாளர்கள் நிலத்தலைவர்கள் விவசாய வட்டாரங்கள் மீது நீதி, நிர்வாக அதிகாரங்களைச் செலுத்த அதிகாரம் பெற்றனர். எனவே, விவசாயத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கவும், விவசாயிகளின் வழக்கு மன்ற உறுப்பினர்களைக் கண்காணிக்கவும், விவசாயக் கூட்டமைப்பு மன்றங்களின் நடவடிக்கைகளைக் கவனிக்கவும், கைது செய்து விசாரித்துத் தண்டனையளிக்கவும் முழு அதிகாரமும் பெற்றிருந்ததால் விவசாயிகளின் வாழ்க்கையே உயர்குடியினரிடம் ஒப்படைக்கப்பட்டதாயிற்று.

அமைதிகாண் நீதிபதிகள் (Justices of Peace)

அமைதிகாக்கும் நீதிபதிகளாகவும் தங்களை மாற்றிக் கொண்ட இவர்கள், பிரபுக்களின் தலைவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட கோட்டக் கழகத்தினிடம் மட்டுமே தங்கள் செயலுக்கான விளக்கத்தைத் தெரிவித்தால் போதுமானது. உள்துறை அமைச்சரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இவர்கள் இருக்க வேண்டியவர்களானாலும் தங்கள் விருப்பப்படி செயலாற்றவும் இயலும், இதனால் விடுதலைச் சட்டமளித்த சிறிதளவு சுதந்திரம்கூட இப்போது நாட்டில் இல்லாது போயிற்று. கிராமப்புறங்களும் அரசின் அடக்கு முறைக்குள்ளாயின. 1893-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டம் ஒன்று ஏழை விவசாயிகளின் நிலையை மேலும் படுமோசமாக்கியது. விவசாயக் கூட்டமைப்பிலுள்ள ஓர் உறுப்பினர், கூட்டமைப்பாளர்களில் மூன்றில் இரு பங்கினர் ஒப்புதல் அளித்தாலே கூட்டமைப்பிலிருந்து விலக இயலும். இதனால் எவரும் விரும்பும்போது வெளியேறுவது என்பது நடைமுறையில் சாத்தியமில்லாமிற்போயிற்று. கூட்டமைப்பு நிலத்தினை அடமானமும் வைக்க இயலாது விவசாயிகள் தவித்தனர். ஓர் உறுப்பினர் தம் பங்கு நிலத்தினைக் கூட்டமைப்புக்கு மட்டுமே விற்கமுடியுமே தவிர அந்நியருக்கு விற்பனை செய்ய இயலாது. கூட்டமைப்பிலிருந்து வெளியேறும் உரிமையை அவ்வமைப்பு ஏற்றுக்கொண்டாலொழிய அதற்குரிய அனுமதிச்சீட்டு எவருக்கும் அளிக்கப்படவில்லை.

உள்ளாட்சித்துறையில் கட்டுப்பாடுகள்

அடுத்து வந்த சட்டங்கள் ஊராட்சிமன்ற, நகராட்சி மன்றங்களின் சுயாட்சி அதிகாரங்களைக் கட்டுப்படுத்தின. ஆளுநரால் நியமிக்கப்பட்ட அரசு அதிகாரிகளே ஊராட்சி மன்றங்களின் நிர்வாக உறுப்பினர்களாயினர். ஊராட்சி மன்றங்களின் தீர்மானங்களையும், நலத்திட்டங்களையும் செல்லாததாக்கி விடும் தனியதிகாரம் உள்துறையமைச்சருக்கும், மாநில ஆளுநர்களுக்கும் அளிக்கப்பட்டது. நிர்வாக உறுப்பினர்களைக் கண்டிக்கவும், தண்டிக்கவும் அவர்களுக்கு முடியும். விவசாயத் தேர்வாளர்கள் சமர்ப்பிக்கும் பட்டியலிலிருந்தே விவசாய பிரதிநிதிகள் சிலரை ஊராட்சி மன்ற உறுப்பினர்களாக ஆளுநர் நியமிப்பார். இதனால் விவசாயிகளின் உறுப்பினர் எண்ணிக்கைகுறைந்ததோடு, ஊராட்சி மன்றங்களின் தலைவர்களாக பிரபுக்களே இருக்க முடியும் என்ற நிலை உருவானது. இதனால் விவசாயிகளின் நிலை பரிதாபத்துக் குரியதாகியது. நகராட்சி மன்றங்களிலும் கூட பிரபுக்களும் செல்வந்தர்களுமே ஆளும் அதிகாரத்தைப் பெற்றனர். வணிகர்களும் கைவினைஞர்களும் தங்கள் உரிமைகளை யெல்லாம் இழந்தனர்.

சமயக் கொள்கை

சமயக்கொள்கைகள் கூட பரந்த மனப்பான்மையற்றதாகவும், குறுகிய நோக்கம் கொண்டதாகவுமே இருந்தது. ரஷ்யாவின் ஒரு பகுதியாயிருந்த போலந்தில் ரோமன் கத்தோலிக்கர்கட்கு எதிராகவும், பால்டிக் கடற்பகுதி மக்களின் புரட்டஸ்தானிய சமயக்கோட்பாடுகட்டிற்கு அரசின் நிர்வாக இயந்திரம் செயல்பட்டது. வைதீகத் திருச்சபைக் கோட்பாடுகளைக் கொண்டிராத துகோபார்கள், சுகோப்பியர்கள்,

நிஹிலிஸ்டுகள் போன்றோர்களால் மட்டும் சமய எதிர்ப்புக்கொள்கை கடைப்பிடிக்கப் பட்டது. போலந்து, பின்லாந்து (Finland) ஆகிய பகுதிகளில் மக்களின் கலாச்சார, பண்பாட்டு சமூக அமைப்பின் எல்லா நிலைகளையும் பாதிக்கத்தக்கவாறு, ரஷ்யமயமாக்கும் கொள்கையே தொடர்ந்து உறுதியாகக் கடைப்பிடிக்கப்பட்டது. பெரும் ரஷ்ய தேசிய உணர்வின் அடிப்படையிலேயே இச்சமயக் கோட்பாடுகள் வரையறுக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டன.

1. ரஷ்ய வெளிநாட்டுக் கொள்கை (External Policy)

பல்கேரிய விவகாரம்

மூன்றாம் அலெக்ஸாந்தர் அரியணையேறியதைத் தொடர்ந்து 1881-ல் ரஷ்யா, ஜெர்மனி, ஆஸ்திரியா ஆகிய மூன்று நாடுகளிடையே ஏற்பட்ட முக்கூட்டு ஒப்பந்தத்தால் ஐரோப்பாவில் ரஷ்யாவின் செல்வாக்கு ஓரளவு அதிகரிக்கலாயிற்று. இதன்படி பிரான்சுக்கும் ஜெர்மனிக்குமிடையே போர் மூளுமானால் ரஷ்யா நடுநிலைவகிக்கும். பால்கன் பகுதியின் ஆட்சிமுறையிலும் அரசியல் அமைப்பிலும் எவ்வித மாறுதலும் ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ளும் எனத் தெரிய வந்தது. ரஷ்ய துருக்கியப் போரின் விளைவாக பல்கேரிய விடுதலை பெற்றாலும் அது நல்லதோர் நட்பு நாடாக இல்லாது போயிற்று. 1879-இல் இரண்டாம் அலெக்ஸாந்தர் அளித்திருந்த அரசியல் சட்ட அடிப்படையில் பாட்டன்பர்க்கைச் சேர்ந்த இளவரசர் அலெக்ஸாந்தர். பல்கேரிய மன்னராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். விரைவிலேயே அரசியல் சட்ட அமைப்புப்படி நிர்வாகத்தைச் செலுத்த இயலாமல் பெரும் சங்கடத்துக்குள்ளானார். 1881-ல் எல்லாப் பிணைப்புகளிலிருந்தும் தன்னை விடுவித்துக் கொண்ட அவர் ஒரு சர்வாதிகாரியானார். பல்கேரிய பழமை விரும்பிகளும், ரஷ்ய ராணுவ அதிகாரிகளும் ஒரு மனப்பட்டு அவரை ஆதரித்திருந்தால் அவரது சர்வாதிகார ஆட்சி நீடித்திருக்கக்கூடும். அத்தகையதோர் இணைப்பு நிலை இல்லாது போகவே பல்கேரிய ஆட்சிக் குழு உறுப்பினர்கள் மன்னரின் போக்கை எதிர்த்துத் தங்கள் பதவியைத் துறக்கவே 1883இல் மீண்டும் மன்னரே அரசியல் சட்ட ஆட்சிக்குட்பட வேண்டியதாயிற்று. ரஷ்யாவின் விருப்பத்திற்கெதிரான இம்முடிவு கண்டு பீட்டர்ஸ்பர்க் மிக வெறுப்புக் கொண்டது. 1885ஆம் ஆண்டு பெர்லின் மாநாட்டு விதிகட்கு முரணாக கிழக்கு ருமேனியாவை பல்கேரியா விழுங்கிக் கொள்ளவே அலெக்ஸாந்தருக்குத் தாம் அளித்து வந்த இராணுவ ஆதரவை ரஷ்யா நிறுத்திக்கொண்டது. பல்கேரியாவின் அப்பட்டமான ஆக்கிரமிப்பை செர்பியா எதிர்த்தபோது பல்கேரியப்படை செர்பியாவைத் தோற்கடித்துப் பெரும் வெற்றி பெற்றது. 1886-இல் அலெக்ஸாந்தர் பதவி துறக்கவே, சாக்ஸ் - கோபர்க்கைச் சேர்ந்த பெர்டினாண்டு பல்கேரிய மன்னராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இம்மாற்றத்தினால், ரஷ்யச் செல்வாக்கு அந்நாட்டில் அதிகரித்து விடவில்லை.

ஜெர்மனியுடனான மறுகாப்புறுதி உடன்பாடு (Re-Insurance Treaty)

1885-ஆம் ஆண்டு ஆப்கானிய எல்லை விவகாரமாக ரஷ்யாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையே கடும் மனவேற்றுமை ஏற்பட்டது. ஆப்கானிஸ்தானில் ரஷ்யச்

செல்வாக்கு ஏற்படுமானால் அது தன் இந்தியக்குடியேற்ற நாட்டுக் கொள்கைக்குப் பெரும் அறைகூவலாகி விடும் என அஞ்சிய இங்கிலாந்து ரஷ்யாவை எதிர்க்கவே இறுதியில் எல்லைத் தகராறுகளைத் தீர்த்துக் கொள்ள இருநாட்டுப் பிரதிநிதிகளைக் கொண்ட எல்லை நிர்ணயக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. இச்சிக்கல் குறித்து இருநாடுகட்குமிடையே போர் எதுவும் ஏற்படுமானால் கருங்கடல் பகுதி நீர்ப்பாதைகள் அனைத்தையும் அடைத்துவிட வேண்டுமென பிஸ்மார்க் வலியுறுத்தினார். இதனால் ரஷ்யாவுக்கு ஜெர்மனியின்பால் பெருமதிப்பு ஏற்பட்டது. ஆனால் பல்கேரியாவின் மன்னர் பதவியை பெர்டினாண்டு ஏற்றத்திலிருந்து அந்நாடு ஆஸ்திரியா நோக்கி மெல்லமெல்லச் சாயலாயிற்று. இந்நிலையில் முக்கூட்டு உடன்பாட்டினை மீண்டும் புதுப்பிப்பதில் பயன் எதுவும் இல்லை என்றறிந்த ரஷ்யா 1887-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 18-ஆம் நாள் ஜெர்மனியுடன் தனியாகவே மறுகாப்புறுதி உடன்பாடு ஒன்றினை இரகசியமாகச் செய்து கொண்டது. பிரான்சு, ஜெர்மனியைத் தாக்குமானால் ஆஸ்திரியா நடுநிலை வகிக்கும் என்ற காப்புறுதியை 1879-ஆம் ஆண்டின் உடன்பாட்டின் மூலம் ரஷ்யப் பகுதியிலிருந்தும் ஆபத்து ஏதும் எழாதவாறு மறுகாப்புறுதி செய்து கொள்ள முடிந்தது.

இவ்வுடன்படிக்கையின்படி : 1) இருநாடுகளில் ஒன்று மூன்றாம் நாடு ஒன்றுடன் போரிட நேரிட்டால் மற்ற நாடு நடுநிலை வகிக்க வேண்டும். ஆனால், இவ்விருநாடுகளில் ஒன்று ஆஸ்திரியாவுடனோ - பிரான்சுடனோ போரிட நேர்ந்தால் மற்ற நாடு நடுநிலை வகிக்க வேண்டும் என்ற நிபந்தனை பொருந்தாது. 2) பால்கன் பகுதியில் இருந்த ரஷ்ய நலன்களை ஜெர்மனி அங்கீகரிக்கும். பல்கேரியாவிலும் கிழக்கு ருமேனியாவிலும் ரஷ்யாவுக்கிருந்த சட்டபூர்வமான செல்வாக்கினை ஜெர்மனி ஏற்றுக்கொள்ளும். 3) பாஸ்போரஸ், டார்டானெல்ஸ் ஜலசந்திகளை அயல்நாட்டுப் போர்க்கப்பல்கள் நுழையாதவாறு மூடிவிடும்படி துருக்கிய சுல்தானைக் கட்டாயப்படுத்த இரு நாடுகளும் இணைந்து செயலாற்ற வேண்டும். 4) பால்கன் தீபகற்பப் பகுதியின் அரசியல் நிலை மாறாது நிலைத்திருக்க இருநாடுகளும் ஒத்துழைக்கவேண்டும். 5) ரஷ்யா நலன்களைக் கருத்தில் கொண்டு கருங்கடல் திறவுகோலைக் காக்க ரஷ்யா முற்படுமாயின் அதனை ஜெர்மனி ஆதரிக்கும். 6) இருநாடுகளும் ஏற்றுக்கொண்ட மறுகாப்புறுதி உடன்பாடு மூன்று ஆண்டுகட்குச் செயல்படும். இவ்வுடன்பாடு ரஷ்யாவுக்குப் பல சலுகைகளை அளித்தாலும், துருக்கிய விவகாரத்தில் ரஷ்யாவின் செல்வாக்கு அதிகரித்து விடாதபடி இங்கிலாந்து தடுத்துவிடும் என்ற நம்பிக்கை பிஸ்மார்க்குக்கு இருந்தது.

பிரான்சுடன் உறவு

1888ஆம் ஆண்டு இரண்டாம் கெய்சர் வில்லியம் ஜெர்மனிக்கு மன்னரானதும் அவருக்கும் பிஸ்மார்க்குக்கும் இடையே மூண்ட கருத்து வேறுபாடுகள் காரணமாக இரண்டாண்டுகள் கழித்து பிஸ்மார்க் சான்ஸலர் பதவியிலிருந்து விலகினார். இதன் காரணமாக ரஷ்யாவும் ஜெர்மனியும் செய்து கொண்ட உடன்படிக்கையும் துண்டிக்கப்பட்டது. ஐரோப்பிய அரசியலில் பெரும் முக்கியத்துவத்தைப் பெற்றிருந்த

இவ்வுடன்படிக்கை முடியவிருப்பதைத் தொடர்ந்து, தனக்கெனத் தனியொரு நட்பு நாட்டைத் தேடிக்கொண்டிருந்த ரஷ்யா, 1870-ஆம் ஆண்டில் பிரான்சுடன் ஓர் ஒப்பந்தம் மேற்கொள்ள விழைந்தது. ஜெர்மனியின் பகை உணர்வால் உந்தப்பட்ட நிலையில் பிரான்சும், ரஷ்யாவுக்குத் தேவையான பொருளாதார உதவிகளையும் படைக்கல உதவிகளையும் அளித்ததோடு, பொதுக் கடன்கள் எழுப்பிக்கொள்ள வசதியையும் வாய்ப்பினையும் அளித்தது. நட்பை நெருக்கமாக்கிக் கொள்ளும் நோக்கில் 1891-இல் பிரெஞ்சுக் கடற்படையொன்று ரஷ்யத் துறைமுகமான 'கிரான்ஸ்டட்' நகருக்கு அனுப்பப்பட்டது. மறு ஆண்டில் இருநாடுகளும் ஓர் இராணுவ உடன்படிக்கை செய்து கொண்டன. அதன்படி கூட்டு நாடுகளான ஜெர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி ஆகியவைகள் தங்கள் படைபலத்தைப் பெருக்குப் போர் செய்ய ஆயத்தமானால் ரஷ்யாவும் பிரான்சும் தங்கள் படைகளைத் தயார் நிலையில் வைத்திருக்கவேண்டும். இருநாடுகளையும் சேர்ந்த இராணுவ அதிகாரிகள் ஒருங்கிணைந்து செயல்பட்டு இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், ஆயினும் மூன்றாம் அலெக்ஸாந்தரின் காலத்தில் ரஷ்யா எந்தவொரு பெரும் போரினையும் சந்திக்கவில்லை.

பயிற்சி வினாக்கள்

1) மூன்றாம் அலெக்ஸாந்தரின் உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.

2) மூன்றாம் அலெக்ஸாந்தர் ரஷ்யமயமாக்கும் (Russification) கொள்கையை திறனாய்வு செய்க.

பாடம் – 10 ஸார் மூன்றாம் அலெக்ஸாந்தர் காலத்திய அரசியல் மற்றும் பொருளாதார நிலை

ஸார் மூன்றாம் அலெக்ஸாந்தர் (1881-1894) ஆட்சிக்காலம் முழுவதும் கடுமையான அடக்குமுறை ஆட்சியாகவே விளங்கியது. இரண்டாம் அலெக்ஸாந்தரின் மகனான மூன்றாம் அலெக்ஸாந்தர் பதவிக்கு வரும் போது அவருக்கு வயது முப்பத்து ஆறு ஆகும். அவர் திடமான உடற்கட்டுடையவராயும் சிறந்த இராணுவப் பயிற்சி பெற்றவராயும் விளங்கினார். மூன்றாம் அலெக்ஸாந்தர் மன்னரது வல்லாட்சியில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவராய் விளங்கினார். எனவே மன்னருடைய வல்லாட்சி சிறிதுகூட பாதிக்காமல் அதனை அப்படியே காத்து வரவேண்டும் என்று விரும்பினார். இவர், புதுமாறுதல்களை உண்டு பண்ண எண்ணுபவர்களையும், தாராளக்கோட்பாட்டினை ஆதரிப்பவர்களையும், ஏற்க மறுத்து அவர்கள் மீது வெறுப்பும், பகைமையும் கொண்டு விளங்கினார். இரண்டாம் அலெக்ஸாந்தர் காலத்தில் புகுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் தடை செய்யப்பட்டன அல்லது இடையில் நிறுத்தப்பட்டன. நாட்டில் உள்ள ஆட்சிக்கு எதிராக செயல்படுகிறவர்களை வேட்டையாடினார். இச்செயலால் அவர்களது நடவடிக்கைகள் தடைப்படலாயின. பத்திரிக்கைகள் முழுவதுமாக கட்டுப்படுத்தப்பட்டன. பல்கலைக்கழக பேராசிரியர்களும் மாணவர்களும் முழுவதுமாக கண்காணிக்கப்பட்டனர்; அவர்களது செயல்களைப் பொறுத்து பணி நீக்கம் செய்யப்பட்டனர் அல்லது நாடு கடத்தப்பட்டனர். உளவுத்துறை மிகவும் பெரிதாக்கப்பட்டது. தாராளக் கொள்கை மனம் படைத்தவர்கள், மூன்றாம் அலெக்ஸாந்தரின் காலத்தில் எத்தகைய சீர்திருத்தங்களும் நாட்டில் நடைப்பெறப்போவ தில்லை என்கிற முடிவிற்கு நாட்டு மக்கள் வந்தனர். அலெக்ஸாந்தரின் கருத்துப்படி நாட்டை குழப்பத்திலிருந்தும், புரட்சியிலிருந்தும் காக்க வேண்டுமானால் ஐரோப்பிய நாடுகளில் பரவி வந்த தாராளக் கொள்கையினை ரஷ்யாவில் பரவாமல் தடுத்து மரபுக் கோட்பாடு (Orthodoxy), ஏகாதிபத்தியம் (autocracy), ரஷ்ய மக்கள் மீது உள்ள அசைவற்ற நம்பிக்கை (belief in the Russian people) ஆகிய மூன்று கொள்கைகளின் மூலமே நாட்டைத் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியும் என்பதாகும். அவரது அரசியல் கோட்பாடு என்பது ஒரே தேசியம், ஒரே மொழி, ஒரே மதம், ஒரே ஆட்சி முறை உடைய ரஷ்யாவை உருவாக்குவதே. அதற்கு வேண்டி ரஷ்ய மொழியை ஜெர்மன் இனத்தவர், போலந்து மக்கள், பின்லாந்துகாரர் (Finns) போன்றோர் மீது திணிக்கலானார். அவர்கள் காத்து வந்த தனித்துவத்தை அழிக்க முற்பட்டார். அவர்களது தனித்தன்மையைத் தாங்கி நின்ற அனைத்தையும் ஒழித்துக் கட்டலானார். யூத மக்கள் உயர்கல்வி கற்றதைத் தடை விதிக்க எண்ணிய அவர், யூதர்களுக்கு இட ஒதுக்கீடு முறை மூலம் அவர்கட்கான இட எண்ணிக்கையினை குறைக்கலானார். அவர்களைத் தொடர்ந்து எல்லா வழிகளிலும் அடக்க ஆரம்பித்ததால் அவர்கள் தங்கள் உயிருக்குப் பாதுகாப்பைத் தேடி அமெரிக்கா செல்ல வேண்டிய நிலை ஆரம்பமாயிற்று.

ரஷ்யா ஒரு விவசாய நாடு. அத்தகைய விவசாய நாட்டில் பண்ணை அடிமைகளை வைத்து விவசாயம் செய்து பொருளீட்டி வந்தனர். பண்ணையார்கள், பண்ணை அடிமை முறையை ஒழிக்க 1861-இல் சட்டமியற்றி, பண்ணை அடிமையின் விடுதலை

பெற்றதாலும் விடுதலை பெற்ற பண்ணை அடிமைகளுக்கு நிலம் வழங்கப்பட்டிருந்தாலும் அந்தச் சிறு விவசாயிகள் வாழ்க்கைத்தரம் மூன்றாம் அலெக்ஸாந்தர் காலத்தில் சிறந்த முன்னேற்றம் அடைந்ததாகக் கூறுவதற்கில்லை.

நாட்டின் மக்கள் தொகை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டே சென்றது. 1860இல் 74 மில்லியன்களாக இருந்த மக்கள் தொகை 1900-இல் 133 மில்லியன்களாக அதிகரித்திருந்தது. இவர்களில் 97 மில்லியன் மக்கள் விவசாயிகள். இவர்களுள் செல்வச் சீமான்களான விவசாயிகள், தங்கள் குடும்பத்திற்குக் கூடப் போதுமான நிலமில்லா ஏழை விவசாயிகள், பிரபுக்களிடமும் புதிய செல்வந்தர்களிடமும் விவசாயக் கூலிகளாக தங்களை மாற்றிக் கொண்ட அப்பாவி மக்கள் ஆகியோர் அடங்குவர். விவசாயிகளுக்கு என்று கடன் வழங்க அமைக்கப்பட்டிருந்த விவசாய வங்கிகள், ஒரு சில செல்வாக்கு மிக்கவர்களுக்கு மட்டுமே கடன் வழங்கியதால், புதிதாக செல்வந்தர்கள் தோன்றினர். நகர மக்களும் தங்கள் பணவசதிகளைப் பொறுத்து நிலம் வாங்கி நிலக்கிழார்களாயினர். கூட்டுறவுச் சங்கங்கள் பல நிலம் பெற்றன. ஆனால் கடன் பெற இயலாத பாமர விவசாய மக்கள் பலர் தங்கள் விவசாயத்தைக் கூட செயல்படுத்த முடியாது இருந்தமையால் விவசாயப் பொருள் உற்பத்தி, குறிப்பாக ஏற்றுமதி செய்யக்கூடிய பல விவசாயப் பொருட்களின் உற்பத்தி குறைந்தது. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பொதுவாக உலக அரங்கிலேயே விவசாயப் பொருள்களின் விலை குறைந்து விட்டமையால் ரஷ்யநாட்டின் கிராம மக்களின் வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பெற்றது. இதே காலத்தில் உணவு உற்பத்தி ரஷ்யாவில் அதிகமாகி ஏற்றுமதி பெருகினாலும், விலைவாசியில்லாமையால் வெளி வருவாய் இல்லாது போயிற்று. கிடைத்த குறைந்த வருவாயை வைத்து தொழில் உற்பத்திப் பொருட்களை வாங்க இயலாது போயினர். பொதுவாக நாட்டு மக்களின் உடல் வலிமை நலிந்தது. அத்தோடு இறப்பு விகிதம் கூட இங்கிலாந்தைவிட இருமடங்கு பெருகிற்று.

பயிர்த்தொழிலில் பாதகம் ஏற்பட்டமையின், விவசாயிகளின் நிலைமை மிக மோசமான வேளையில் 1891ஆம் ஆண்டு கடும்பஞ்சம் நிலவியது. ரஷ்யாவின் கரிசல் நிலப்பகுதி முழுவதிலும் பஞ்சம் அதிகமாயிற்று. பஞ்சம் கடுமையாக இருந்தமையால் துன்பத்தில் ஆழ்த்தப்பட்ட மக்கள் மரணத்தை எய்தினர். அரசு பஞ்சத்தைப் போக்க எந்தவித நிவாரண நடவடிக்கையிலும் ஈடுபட்டதாகத் தெரியவில்லை. சிறிய அளவில் பஞ்ச நிவாரண வேலைகளை ஊராட்சி மன்றங்களே மேற்கொண்டன. அவை போதுமானவையாக இல்லை. இப்பஞ்ச காலத்திலும் வரி கடுமையாக திரட்டப்பட்டது. விதிக்கப்பட்ட வரிகள் பலவும் பாதிப்புக்குள்ளாகியிருந்த விவசாயிகள் மீதே விழுந்தன. இத்தகைய இன்னல்களிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள பலர் சைபீரியாவிற்கும், தூரக்கிழக்கு எல்லைப் பகுதிகளுக்கும் சென்று குடியேறினர். நாட்டின் சூழ்நிலையை முழுமையாக உணராத அரசு விவசாயிகளுக்கு சில சலுகைகள் வழங்கினால் போதுமெனக் கருதி விவசாய வங்கி வழங்கிய கடனுக்கான வட்டி விகிதத்தை ஒரு சிறிது குறைத்து, திருப்பிச் செலுத்த வேண்டியிருந்த இழப்பீட்டுத் தொகைத் தவணைக் காலத்தையும் அரசு கடன் தவணைக் காலத்தையும் ஓரளவுக்கு நீடித்தது. ஆனால் அவை விவசாயிகளின் நிலையைச் சற்றும் மாற்றவில்லை.

ஆயினும் இரஷ்யப் பேரரசின் ஆட்சியாளரான மூன்றாம் அலெக்ஸாந்தர் காலத்தில் தொழில்துறை மட்டும் வளர்ச்சியடையலாயிற்று. அதாவது தொழில்துறையில் புரட்சி ஏற்பட்டது என்று சொல்லப்படுகிறது. அது பின்னர் வந்த ஆட்சியாளர்களாலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வந்தது. பொதுவில் ரஷ்யா பல நூற்றாண்டு காலமாக விவசாய நாடாகவே விளங்கி வந்துள்ளது. இந்த விவசாயத் துறையானது இலாபமற்ற பழைய முறையிலேயே அமைந்திருந்தது. எந்த ஒரு தொழில் நாட்டில் ஏற்பட்டாலும் பொதுவில் அது சிறிய அளவிலேயே நடைபெற்றது. ரஷ்ய நாடு உலகில் உள்ள ஏழ்மையான நாடுகளில் ஒன்றாக விளங்கிவந்தது. அதனிடம் காணப்பட்ட ஏராளமான வளங்களும் பயன்படுத்தாத நிலையிலேயே இருந்தது. மூன்றாம் அலெக்ஸாந்தர் காலத்தில், நிதி, வர்த்தகம் ஆகிய துறைகளின் அமைச்சராக செர்கியஸ் டே விட்டே (Sergius de Witte) என்பவர் நியமிக்கப்பட்டது முதல் நாட்டில் தொழில் துறையின் வளர்ச்சியில் ஓர் உன்னத நிலை ஏற்பட தூண்டலாயிற்று. விட்டேயின் கருத்துப்படி ஐரோப்பாவில் மக்கள் தொகையிலும் பரப்பளவிலும் பெரிதாக விளங்கிய ரஷ்ய நாட்டில் எல்லா துறைகளிலும் தன்னிறைவு ஏற்பட்டே ஆக வேண்டும் என்றும் காரணம் ரஷ்யாவே சிறு உலகமாக விளங்குகிறது என்றும், அது விவசாய நாடாக விளங்கும் வரையில், தொழில்துறையில் முன்னேறியுள்ள நாடுகளை நம்பி தான் வாழ வேண்டி வரும் என்றும், ஏராளமான மூலப்பொருட்களும் உற்பத்தித்திறனும் அதற்கு இருப்பதால் அது தன் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முயன்றால் முடியும் என்றும் கருதினார். இந்தக் கொள்கையைச் செயல்படுத்த வேண்டுமானால் ரஷ்யநாட்டுத் தொழில் துறைக்கு பாதுகாப்பு தருவதன் மூலமே செயல்படுத்த முடியும் என்றும் எண்ணினார். இதற்கு முன்னோடியாக ஜெர்மனி, அமெரிக்க ஐக்கிய நாடுகளை மனதில் கொண்டார். அவைகள் தங்கள் நாட்டு தொழில்துறையை பேணி பாதுகாத்ததால் இரண்டு நாடுகளுமே தொழில் துறையில் சிறந்து விளங்கியதை கண்டுணர்ந்தார். தனது இந்த முயற்சிக்கு அயல்நாட்டு ஒத்துழைப்பும் தேவை என்பதனை உணர்ந்த அவர், அயல் நாடுகளிடமி ருந்து பெரும் நிதியைக் கடனாகப்பெற்று அவைகளை தொழில் துறையில் முதலீடு செய்தார். இவரது இந்த சீரிய முயற்சியின் பயனாகவே பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசி பத்தாண்டு காலத்தில் ரஷ்ய நாடு தொழில் துறையில் விரைந்து முன்னேறலாயிற்று.

மேலும் ரஷ்ய நாட்டின் தொழில்துறை விரைந்து முன்னேற வேண்டுமானால் அதன் செய்தி போக்குவரத்து முதலியவையும் பரவலாக நாடு முழுவதும் நல்ல முறையில் வளர வேண்டும் என்பதையும் விட்டே உணர்ந்தார். இதனை செயல்படுத்தும் விதத்தில் நாடு முழுவதும் ரயில் போக்குவரத்தை விரிவுபடுத்த துவங்கினார் விட்டே (Witte). விட்டே பதவி ஏற்கும் முன்னால் ஆண்டுக்கு 400 மைல்களுக்கும் குறைவாகவே இருப்புப்பாதைகள் நாட்டில் போடப்பட்டுவந்தன. ஆனால் அவர் பதவி ஏற்றது முதல் ஆண்டுக்கு 1400 மைல் நீளத்திற்கு இருப்புப்பாதைகள் போடப்பட்டன. இவைகளில் மிகவும் முக்கியமானது ஐரோப்பாவையும் பசிபிக் பெருங்கடலையும் இணைக்கவென்று போடப்பட்ட இருப்புப்பாதைத் தொடராகும். இது மாபெரும் சைபீரிய இருப்புப்பாதைத் தொடர் (The Great Trans - Siberian Railroad) ஆகும். இதற்கு வேண்டி ரஷ்யா மேலை நாடுகளிடம் இருந்து பெரும் தொகையை கடனாகப் பெறவேண்டியதாயிற்று. அதாவது குறிப்பாக பிரான்சிடமிருந்து பெரும் பகுதியைக் கடனாகப் பெற்றது. இந்த ரயில் பாதை

1891ஆம் ஆண்டு துவங்கப்பட்டு 1902ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டு போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் கிழக்குப் பகுதிக்குப் பயணம் செய்யும் நேரமும், தூரமும் பாதியாகக் குறைந்தது. 1909இல் ரஷ்யநாட்டில் 41,000 மைல் நீளத்தில் ரயில்பாதைகள் இருந்தன. அதில் 28,000 மைல் நீள ரயில்பாதை அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது.

தொழில் உற்பத்தித்துறை, சுரங்கத்தொழில் துறை, இரயில்வே அமைப்புத் துறை ஆகியவற்றில் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. 1879இல் 11,89,000 பேராயிருந்த உழைக்கும் வர்க்கத்தினரின் எண்ணிக்கை 1903இல் 28,00,000 ஆக உயர்ந்தது. தொழில் துறைகள் வளர்ச்சி பெறும் பொருட்டு வெளிநாட்டு மூலதனத்திற்கு அரசு அதிக வட்டி கொடுத்தது. அதனால் பிரான்ஸ், பெல்ஜியம் போன்ற மேலை நாட்டினர் அதிக முதலீடு செய்தனர். தொழில் பாதுகாப்புக்கு என்று சட்டங்கள் இயற்றப்பட்டன. தொழில் துறை வளர்ச்சி ஏற்படும் வகையில் பங்கே, விட்டே போன்ற நிதியமைச்சர்களின் நிதிக் கொள்கை அமைந்திருந்தது. 1897இல் விட்டே தங்க நாணயத் திட்டத்தைக் கொணர்ந்தார். இருப்புப்பாதைகள் சில அரசின் நேரடிக்கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டன. இது தொழில் வளர்ச்சிக்குதவியது. 1881இல் எல்லா இருப்புப் பாதைகளும் தனியாரிடமே இருந்தன. 1902இல் மூன்றிலொரு பகுதி மட்டுமே தனியார் பொறுப்பில் நீடித்தது. காஸ்பியன் கடல், கருங்கடல் போன்ற கடல்களையும் மத்திய ஆசியாவோடு இணைக்கும் திட்டங்கள் இக்காலத்தில் நிறைவேற்றப்பட்டன. தன்பாஸ் நிலக்கரிச்சுரங்கம் கிரிவாய்ராக் பகுதியின் இரும்புத்தாது சுரங்கப்பகுதியோடு இணைக்கும் இரும்புப்பாதை அமைப்பும் இக்காலத்தில் தான் முடிவுபெற்றது. 1880ஆம் ஆண்டுக்குப் பின் 10 ஆண்டுக்குள் தன்பாஸ் நிலக்கரி உற்பத்தி இருமடங்காயிற்று.

இக்காலத்தில் சில கனரகத் தொழில்கள் விரைந்து வளர்ச்சியடைந்தன. இக்காலத்தில் எண்ணெய் உற்பத்தியும் பதினான்கு மடங்கு அதிகமாகி உலகத்திலேயே ரஷ்யா முதலிடத்தைப்பெற்றது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உலோக உற்பத்தியிலும் ரஷ்யா உலகில் நான்காவது இடத்தைப் பெற்றது.

இயந்திர உற்பத்தியில் நல்ல முன்னேற்றம் கண்ட ரஷ்யா, விவசாயக் கருவிகளும், இயந்திரங்களும், நிலக்கரியில் இயங்கும் புகைவண்டி இயந்திரங்களும் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டன.

இப்படி நாட்டின் பொருளாதார வாழ்க்கையில் ஏற்பட்ட மாறுதல்கள் நாட்டின் மக்களின் வாழ்க்கையிலும் உடனே பிரதிபலிக்கத் தவறவில்லை. நாட்டில் நகரங்கள் திடீர் திடீர் என தோன்றலாயின. பேரளவு உழைப்பாளர் வர்க்கமும் தோன்றிற்று. இதன் மூலம் மேலை நாடுகளில் ஏற்பட்ட தொழிலாளர் பிரச்சனைகளும், பொதுவுடைமைக் கொள்கைகளும் தொழிலாளர் மத்தியில் பரவலாயின. இத்துடன் நாட்டில் தோன்றிய புதியதோர் மத்தியவர்க்கமும். அதாவது முதலீட்டாளர்கள், உற்பத்தியாளர்கள் இவர்களைக்கொண்டதோர் மத்திய வர்க்கமும் தோன்றிற்று. இந்த மத்திய வகுப்பினர் ஆட்சியில் பங்கு கேட்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்பதையும் உணர முடிந்தது. இந்தப் புதிய சக்திகள் நாளடைவில் பழையதும், தாராளக்

கொள்கையற்றதும் முற்போக்குத் தனமற்றதும் ஆக விளங்கிய ஆட்சியாளர்களை எதிர்க்கத் துணிந்தன. காரணம் இந்த ஆட்சியாளர்கள் நாட்டை நீண்ட காலம் இருண்டதோர் நிலையில் நடத்தி வந்துள்ளனர். இந்நிலைமை ரஷ்ய - ஜப்பானிய போர் (1904-5) மூலம் தெரிய வந்தது.

இருப்பினும் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தொழில் துறையில் ஒரு மந்தநிலை ஏற்பட்டது. இருப்புப் பாதைக்குரிய தண்டவாளங்களும், பிற தளவாடங்களும் போதுமான அளவு உற்பத்தி செய்யப்படாததால் புதிய இருப்புப்பாதைகள் அமைப்பதில் தேக்கநிலை ஏற்பட்டது. சில தொழிற்கூடங்கள் திவாலாயின. மூன்றிலொரு பங்கு தொழிலாளர் வேலையிழந்தனர். பெரும் தொழில் துறைகளில் போட்டியைத் தவிர்ப்பதற்கென பல தொழிற்சாலைகள் ஒன்றாக இணைந்து தனியார் துறையில் தனியுரிமைக் (monopoly) கொள்கையைக் கடைபிடிக்கலாயினர். இதனால் தொழில் அதிபர்கள் அதிக லாப மடைந்தனர். இம்முறையால் இரும்பு உற்பத்தியில் 75 சதவீதமும், உலோகத் தகடு உற்பத்தியில் 78 சதவீதமும், தண்டவாள உற்பத்தியில் 55 சதவீதமும் தனியாரிடம் சிக்கின. இவை தவிர குழாய்கள், சிமெண்ட், சர்க்கரை, நிலக்கரி ஆகியவை தனியார்களின் தனி உரிமைக் கோட்பாட்டின்படி விநியோகம் செய்யப்பட்டதால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர்.

பாதிக்கப்பட்ட பொதுமக்களில் தொழிலாளர்களும் அடங்குவர். இத் தொழிலாளர் கள் பெரும்பாலும் நெசவாலைகளிலும் உணவு உற்பத்தி ஆலைகளிலும் பணியாற்றியதால் அங்கே பல வேலை நிறுத்தங்களும், புரட்சிகளும் நடந்தன. இவ்வேலைநிறுத்தங்களுக்கு தொழிலாளர்களின் வேலை நிலையிலும் வாழ்க்கை நிலையிலும் இருந்த மோசமான சூழ்நிலையும், அன்றாடத் தேவைகளுக்குக்கூட போதாத கூலியும், ஒழுங்கற்ற நிலையில் கொடுக்கப்பட்ட கூலிமுறையும், சிறு தவறுக்கும் கூட விதிக்கப்பட்ட அதிக அளவு தண்டனையும் பொருளாதாரக் குளறுபடிகளுமே அடிப்படைக் காரணங்களாகும். 1891 முதல் 1900 ஆம் ஆண்டுக்குள்ளாக ஏறத்தாழ 450 வேலை நிறுத்தங்கள் நாடு தழுவிய அளவில் நடந்தன. இவ்வேலை நிறுத்தங்களுள் குறிப்பிடத்தக்கவை ஓரிசோலோசுவோ என்னுமிடத்தில் உள்ள மோரோசோவ் பஞ்சாலையில் பணியாற்றிய 8000 தொழிலாளர் களால் மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தமாகும். வரலாற்றுச் சிறப்பு மிக்க இவ்வேலை நிறுத்தத்தை அரசு இராணுவம் கொண்டு அடக்கியது. விசாரணை ஏதுமின்றிப் பலர் சைபீரியாவிற்கு அனுப்பப்பட்டனர்.

தொழிலாளர்களின் பிரச்சனைகளால் ரஷ்யாவில் பல தொழிற்சாலை சட்டங்கள் இயற்றப்பட்டன. 1882ஆம் ஆண்டு 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களை வேலையில் சேர்த்துக்கொள்ளக்கூடாது என சட்டமியற்றப்பட்டது. 1885ஆம் ஆண்டுச்சட்டம் பெண்களையும் பதினேழு வயதுகுட்பட்டோரையும் பஞ்சாலைகளில் இரவு நேரங்களில் வேலையில் பணித்தல் கூடாது எனக் கூறியது. 1886ஆம் ஆண்டுச் சட்டம் தொழிலாளர்களின் வேலை ஒப்பந்த விதிகளை விதித்தது. அதன்படி சம்பளம் பொருளாக அன்றி பணமாகக் கொடுக்கப்பட்டது. வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் தொழிலாளர்மீது அபராதம் விதிக்கப்பட்டது. வேலை செய்யாமல் இருப்பது சட்டப்படி குற்றமாயிற்று. தொழிலாளர்கள் தங்கள் நலன் காக்க கூட்டு நடவடிக்கை எடுப்பதை அச்சட்டங்கள்

தடைசெய்தன. 1897ஆம் ஆண்டுச் சட்டம் பகல் வேலை நேரத்தை 11½ மணியாகவும் இரவு வேலை நேரத்தை 10 மணியாகவும் நிர்ணயித்தது. 1903ஆம் ஆண்டுச் சட்டம் வேலை நேர விபத்துக்களில் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீட்டுத்தொகை அளிக்க வகை செய்தது.

சட்டங்கள் பல இக்காலத்தில் இயற்றப்பட்டனயென்றாலும் அவை தொழிலாளர்களின் அடிப்படைத் தேவைகளைக்கூட பூர்த்தி செய்வதாக அமையவில்லை. ஆகவே பல புரட்சி இயக்கங்கள் தோன்றின.

ஜார்ஜ் பிலக்கனோவ் (George Plekhanov) என்பவரால் மார்க்சிய சமூக ஜனநாயகக் கட்சி தோற்றுவிக்கப் பட்டது. இது தொழிலாளர்களின் நலனில் அதிக அக்கறை காட்டியது. பிலக்கனோவ் சுரங்கப் பள்ளியில் மாணவராய் இருந்தபோது பல புரட்சி இயக்கங்களோடு தொடர்பு கொண்டவர். நிலமும் விடுதலையும் என்ற மற்றொரு இயக்கத்திலும் தீவிர பங்கேற்றார். இவ்வியக்கம் மக்கள் விருப்பக் கட்சியாகவும் கறுப்புப்பிரிவினைக் கட்சியாகவும் பிரிந்தபோது இவர் கறுப்பு பிரிவினைக் கட்சியின் தலைவரானார். ஆனால், காவல்துறையினரின் கண்களில் இருந்து தப்பித்துக்கொள்ள 1880இல் வெளிநாடு சென்றார். இவர் ஜெனியாவில் இருந்தபோது காரல் மார்க்ஸ், பிரடிரிக் ஏங்கல்ஸ் (Friedrick Engels) கொள்கைகளையும் தொழிலாளர் இயக்கங் களையும் நன்கு கற்றறிந்தார். 1882ஆம் ஆண்டில் பொதுவுடைமைக் கட்சிக் கொள்கை அறிக்கையை ரஷ்ய மொழியில் மொழி பெயர்த்தார். பின்னர் 1883இல் அவர் ரஷ்ய சமூக ஜனநாயகக் கட்சியைத் தோற்றுவித்தார். இதனைத் தொடர்ந்து தொழிலாளர் விடுதலை இயக்கம் உருவாயிற்று. இதனை உருவாக்கியவர்களில் ஆக்சல்ராடு, வீரசூலிக், இக்னடோல் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

பிலக்கனோவின் முதலாவது அரசியல் நூல் சமதர்மமும் அரசியல் போராட்டமும் என்பதாகும். இவர் எழுதிய மற்ற நூல்கள் நமது வேறுபாடுகள், வரலாறு பற்றிய தத்துவ வாதியின் கருத்து ஆகியவையாகும். மார்க்சின் Karl Marx கொள்கைகளைத் தெளிவாகப் பரப்பியவர் இவரே. அரசியலை விட பொருளாதாரத்தினையே மார்க்ஸ் அதிகம் சார்ந்திருந்தார் என்ற பொதுவுடமை கட்சியினரின் கருத்தினை மறுத்து, எல்லா வர்க்கப் போராட்டங்களும் அரசியல் போராட்டங்களே என்ற மார்க்சின் கருத்தினைப் பரப்பினார். தொழிலாளர் பங்கேற்கும் அரசியல் போராட்டத்தின் மூலம்தான் அவர்களுக்குப் பொருளாதார விடுதலை கிடைக்கும் என்றார். அன்றைய ரஷ்யா ஒரு சமதர்மப் புரட்சியை நோக்கிச் செல்வதைவிட ஒரு பூர்சுவா ஜனநாயகப் புரட்சியை நோக்கியே செல்வதாக அவர் கணித்தார். அரசியல் தெளிவு பெற்ற தொழிலாளர் புரட்சி இயக்கம் மன்னராட்சியை முற்றிலும் ஒழிப்பதன் மூலமே தனது சமுதாய, அரசியல், பொருளாதார குறிக்கோள்களை அடையமுடியும் என்பதைச் சமூக ஜனநாயகக் கட்சியினர் உணரவேண்டும் என்றார்.

இவருடைய மற்றொரு நூலான 'நமது வேறுபாடுகள்' தொழில் துறையில் மட்டு மில்லாமல் கிராமப் புறங்களிலும் கூட முதலாளித்துவம் வேர்விடத் தொடங்கிவிட்டதை உணர்த்திற்று. ரஷ்யாவின் சமூக ஜனநாயகவாதிகள் ஒரு தொழிலாளர் சமதர்ம கட்சி உருவாக உழைக்க வேண்டுமென்றார். "புரட்சி மனம் கொண்ட சிந்தனையாளர்கள்

நவீன அறிவியல் சமதர்மக் கோட்பாடுகளைக் கற்றுணர்ந்து தொழிலாளர்கள் மத்தியில் பரப்ப வேண்டும்; தொழிலாளர் புரட்சி இயக்கத்தின் வாயிலாக மட்டுமே ரஷ்யாவில் ஒரு புரட்சி இயக்கம் வெற்றி பெறமுடியும்" என்பது அவரது நம்பிக்கை.

மேலும் அவர் எழுதிய 'வரலாறு பற்றிய தத்துவவாதியின் கருத்து' எனும் நூலும், 'இயற்பொருள் வாதத்தை ஆதரித்து' எனும் நூலும், அக்கால ரஷ்யர்கள் மார்க்கீசிய கொள்கையைப்புரிந்துகொள்ள உதவின. 1883இல் பிளகோயேவு குழுவினர் தொழிலாளர் இயக்கம் ஒன்றினைத் தோற்றுவித்தனர். பிரஷ்னேவ் என்பவர் 'சமூக ஜனநாயகப் பொது அமைப்பு' என்னும் இயக்கத்தை 1889இல் தோற்றுவித்தார். ரஷ்யாவின் பல நகரங்களிலும் மார்க்கீசிய இயக்கம் தோன்றி வளரலாயிற்று. அத்தகைய நகரங்களில் குறிப்பிடத்தக்கவை மாஸ்கோ, கீவ், ஒடிதா, காசன், வில்னா, மின்ஸ்க் போன்றவையாகும்.

இத்தகைய அமைப்புகள் ரஷ்யாவில் ஏற்பட்ட பொருளாதார மாற்றத்தால் தோன்றின. இருப்பினும் இவை வலுவான இயக்கங்கள் என்று கூறுவதற்கில்லை. அத்தகைய நிலை லெனின் காலத்தில் தான் தோன்றிற்று. அலெக்ஸாந்தர் 1894ஆம் ஆண்டில் மரணமடைந்தார். அவரைத் தொடர்ந்து இரண்டாம் நிக்கோலஸ் (1894 - 1917) பதவிக்கு வந்தார்.

பயிற்சி வினாக்கள்

1) மூன்றாம் அலெக்ஸாந்தர் காலத்திய பொருளாதார நிலையையும், புரட்சி இயக்கங்களையும் பற்றி ஒரு கட்டுரை வரைக.

2) மூன்றாம் அலெக்ஸாந்தர் ரஷ்ய நாட்டுக்காற்றிய பங்குபற்றி ஒரு கட்டுரை வரைக.

பாடம் – 11

இரண்டாம் நிக்கோலஸ் காலத்திய தொழிற் புரட்சி

அடிமைகள் விடுதலைச் சட்டத்தின் 1861 பின்னர் ரஷ்யநாட்டில் தொழிலாள அடிமைகள் விடுதலை அடைந்தாலும், ஸார் மன்னர்களின் காலத்திய ரஷ்ய நாட்டின் நிலையை அறிந்தவர்கள், ரஷ்யா மேலை நாடுகளின் முறையில் தொழில் துறையில் ஈடுபடலாகாதுஎன்றும் அது ரஷ்யாவின் பின்தங்கிய நிலைமைக்கு ஒத்துவராது என்றும் கருதலாயினர். பாப்புலிஸ்டுகள் கருத்துப்படி, ரஷ்ய விவசாயிகள் தன்னிறைவுடன் விளங்குகிறார்கள். அவர்கள் தங்களுக்குத் தேவையான உணவையும், உடையையும் உற்பத்தி செய்கிறார்கள். இதன்மூலம் அவர்கள் தங்களுக்குள் சமத்துவமாக விளங்குகிறார்கள். எனவே அவர்களுக்கு முதலாளித்துவ முறைதேவை இல்லை. மேலும் அதுபற்றி அவர்கள் அக்கறை கொள்ளவும் தேவை இல்லை என்பதாகும். மேலும் ரஷ்ய மக்கள் மிகவும் ஏழைகளாக இருந்தார்கள். அவர்களிடம் தொழில் வளர்ச்சிக்கான போதிய திறமை, அறிவு, பிறவசதிகள் முதலியனவும் இல்லை. உள்துறை அமைச்சகமும் கூட ஸார் மன்னரின் வல்லாட்சியை நிலைநிறுத்துவதில் நாட்டம் கொண்டு விளங்கியதால் தொழில் வளர்ச்சி பற்றி அதிக நாட்டம் செலுத்த முடியாது போயிற்று.

எனினும் ரஷ்யாவின் தொழில் துறை 1890-க்கு பிறகு வியத்தகு முறையில் சிறப்படையலாயிற்று. அதாவது ஆண்டு 8 விழுக்காடு என்கிற முறையில் ரஷ்யாவின் தொழில்துறை வளர்ச்சியடைந்தது. ரஷ்ய தொழில்துறை வளர்ச்சிக்கு சிறந்த போக்குவரத்து முறையும் தேவையாய் இருந்தது. நாட்டில் ஆண்டுக்கு 40 விழுக்காடு என்கிற முறையில் 1881-க்கும் 1894-க்கும் இடையில் ரயில் பாதைகள் அமைக்கப்பட்டன. அது மேலும் இரண்டுமடங்காக 1895-க்கும் 1905-க்கும் இடையில் வளர்ச்சியடைந்தது. ரஷ்யாவின் நிதிவசதிகளுடன், வெளிநாட்டு முதலீடுகளும் ரஷ்யா பெரும் தொழில்துறையில் முதலீடு செய்யப்பட்டது. 1880-இல் ரஷ்யாவில் வெளிநாட்டு மூலதனமாக 100 மில்லியன் ரூபிள் முதலீடு செய்யப்பட்டது. அது 1890இல் 200 மில்லியனாகவும், 1900-இல் 900த்திற்கும் அதிகமான மில்லியனாகவும் உயர்ந்தது.

விட்டே (Witte) நிதியமைச்சராக விளங்கிய காலத்தில் நாட்டில் ரயில் பாதைகள் அமைப்பதோடு, வெளிநாட்டு முதலீடுகளையும் பேரளவு ரஷ்யாவில் கொண்டுவர பாடுபடலானார். மேலும் நாட்டில் கனரக தொழில்களை ஏற்படுத்தவும் பெரும் முயற்சிகளை மேற்கொண்டார். கனரக தொழில் துறைகளை ஊக்குவிக்கும் பொருட்டு விட்டே (Witte) ஏற்றுமதி வாணிபத்திற்கு பேராதரவு அளித்தார். அதேநேரத்தில் படிப்படியாக இறக்குமதியையும் கட்டுப்படுத்தினார். இவ்விதத்தில் வரவு செலவுகளை (budget) சமன் செய்தார். தங்க நாணயத் (gold standard) திட்டம் நாட்டில் புகுத்தப் பட்டது. நாட்டின் தேவைகளுக்கான நிதிவசதியை திரட்டும் எண்ணத்தில் சாதாரண மக்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் பல்வேறு பொருட்களின் மீதும் மறைமுக வரிகள் விதிக்கப்பட்டன. இவ்வாறு ரஷ்ய நிலைமைக்கு ஏற்ப அரசாங்கம்

பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு தொழில் துறை வளர்ச்சிக்கு சிறந்த வழிமுறைகளை மேற்கொள்ளலாயிற்று. இதன்மூலம் நாட்டின் தொழில் முன்னேற்றத்தில் ரஷ்ய அரசு பெரும் பங்கு வகித்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ரஷ்யாவில் 8 அடிப்படை தொழில் மண்டலக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. மாஸ்கோ தொழில்துறை மண்டலம் 6 மாநிலங்களை உள்ளடக்கியதாக விளங்கியது. அதில் நூற்பு ஆலை சம்பந்தப்பட்ட எல்லா தொழிற்கூடங்களும், உலோக ஆலைகளும், ரசாயன தொழிற்சாலைகளும் அடங்கி இருந்தன. புனித பீட்டர்ஸ்பர்க் தொழில் மண்டலத்தில் உலோக உற்பத்தியும், இயந்திர உற்பத்தியும், நூற்பு ஆலைகளும் அடங்கின. போலந்து மண்டலத்தில் (Polish region), லோட்ஸ் (Lodz), வார்சா போன்ற பகுதிகள் அடங்கி இருந்தன. அங்கும் பருத்தி, நிலக்கரி, இரும்பு, உலோக உற்பத்தி, ரசாயன உற்பத்தி முதலான பலவகை தொழிற்சாலைகள் செயல்படலாயின. ரஷ்யாவின் உக்ரேனியன் பகுதியில் இருந்து நிலக்கரி, இரும்புத்தாது, அடிப்படை ரசாயன பொருட்கள் முதலியன கிடைக்கப் பெற்றன. யூரல் பகுதியில் இருந்து இரும்பு, இரும்பு அல்லாத உலோகங்கள் (non ferrous metals), தாதுக்கள் (minerals) முதலியனக் கிடைக்கலாயின. டிரான்ஸ்காகசியன் பகுதியில் அமைந்திருந்த பாகு தொழிற்சாலையிலிருந்து (Baku Sector) தேவையான எண்ணை கிடைக்கலாயிற்று. தென்மேற்குப் பகுதியில் பீட்ரூட்டில் இருந்து சீனி (beet sugar) தயாரிக்கும் தொழில் சிறப்புடன் நடந்தது. கடைசியாக டிரான்ஸ்காகசியன் பகுதியில் இருந்து மாங்கனீசும், நிலக்கரியும் போதிய அளவு கிடைக்கலாயின. 1891-ல் ரஷ்யாவின் மாபெரும் சைபீரிய ரயில்பாதை வேலை தொடங்க விட்டே மிகவும் காரணமாக இருந்தார்.

ரஷ்யாவின் புதிய தொழில்துறை பல வகைகளிலும் சிறந்து விளங்கலாயிற்று. காரணம் ரஷ்யாவின் தொழில்துறை காலந்தாழ்ந்தும், விரைவாக ஏற்படுத்தப்பட்டதாயும் இருந்ததால் மேலைநாடுகளின் முன்னேறிய பல தொழில் துறைகளை மொத்தமாக ஆரம்பிக்க ஏதுவாயிற்று. இதனால் ரஷ்யாவின் புதிய தொழிற்சாலைகள், மேலை நாடுகளின் பழைய தொழிற்கூடங்களை விட மிகவும் நவீனமானதாய் காணப்பட்டது. இப்படி ஒரு சில துறைகள் மிகவும் நவீனமாக இருந்தாலும், பல்வேறு துறைகளில் ரஷ்யநாடு பின்தங்கியே காணப்பட்டது. குறிப்பாக ரஷ்ய தொழிலாளர் திறன் இன்னமும் பழமையான முறையிலேயே அமைந்திருந்தது. அது நவீன ஆலைத்துறைக்கு ஒத்து வராமல் இருந்தது மட்டுமல்லாமல் மிகவும் மலிவானதாயும் அவர்களது உழைப்பு காணப்பட்டது.

தொழில்துறை காரணமாயும், அரசின் கொள்கைகளின் விளைவாகவும், ரஷ்ய அரசாங்கம் பெரும் தொழில் கூடங்களையும், பேரளவு தொழிற்துறைகளையும் எளிதில் வாங்க முடிந்தது. பெரும் முதலாளிகள் ஒன்று சேர்ந்து அமைப்புகளை ஏற்படுத்தும் முன்னரே, 1902-இல் உலோகத்தொழில் சிண்டிகேட்டும் (metallurgical syndicate), 1904-இல் நிலக்கரி சிண்டிகேட்டும் (coal syndicate), பிற பிற்காலத்திலும் ஏற்படுத்தப்பட்டன. ரஷ்யாவின் முதலாளிகளும் உற்பத்தியாளர்களும் பிரபுக்கள் முதல் பழைய அடிமைத்தொழிலாளர்கள் மத்தியிலிருந்து தோன்றினார்கள். இவர்களுடன் அயல் நாட்டினரும் சேர்ந்து காணப்பட்டார்கள். அவர்களின் தலைவர்களில் பலர் பழைய

வணிகர்கள், உற்பத்தியாளர்கள் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாயும் காணப்பட்டனர். ரஷ்யாவின் சந்தைகளைப் பொறுத்த மட்டில், ரஷ்ய மக்கள் மிகவும் ஏழைகளாக காணப்பட்டதால், அவர்களால் புதிய ஆலைகளில் உற்பத்தியாகும் பொருட்களில் ஓரளவே வாங்கி நுகரமுடியும் என்பதால், ரஷ்யமுதலாளிகள் பெரிதும் அரசு கொள்முதலை நம்பி இருந்தனர். மேலும் உற்பத்திப் பொருட்களை வெளிநாட்டுச் சந்தைகளுக்கு எடுத்துச் செல்லலாயினர். குறிப்பாக ரஷ்ய உற்பத்தியாளர்கள் மேலை நாட்டு உற்பத்தியாளர்களுடன் போட்டி போடமுடியாத காரணத்தால், பேரளவு வெளிநாட்டு வாணிபம் சமீபத்தில் உள்ள ஆசியா பகுதி நாடுகளான துருக்கி, பாரசீகம், ஆப்கானிஸ்தான், மங்கோலியா, சீனா போன்ற நாடுகளுடன்தான் நடைபெறலாயிற்று. மேலும் விட்டேயும், அரசும் உற்பத்தியாளர்களுக்கு பல வகைகளிலும் துணைபுரிந்தன. அதாவது 'ருஷ்ய - பாரசீக வங்கி', 'ருஷ்ய - சீன வங்கி' முதலானவை ஏற்படுத்தப்பட்டன. மேலும் கிழக்கு சீன ரயில்பாதை அமைக்கப்பட்டது. சுருங்கச் சொன்னால், ரஷ்ய - ஜப்பானிய போர் (1904-05) நடக்க ரஷ்யாவின் தூரக்கிழக்கு பொருளாதாரக் கொள்கையும் ஒரு காரணமாய் அமைந்தது எனலாம்.

1890-க்குப் பிறகு ரஷ்யாவின் தொழில் துறையில் ஏற்பட்ட மாபெரும் வளர்ச்சி, 1900-இல் ஏற்பட்ட பொருளாதார மந்தத்தினால் முடிவடைந்தது. இதற்குப் பல்வேறு காரணங்கள் உண்டு. ஆனால் ரஷ்யாவின் விவசாயிகளிடம் நாளும் வளர்ந்துவந்த அடிப்படை நலிவு தான் முக்கிய காரணமாய் அமைந்தது. அவர்கள் எண்ணிக்கை குறையலாயிற்று. இந்தப் பொருளாதார மந்தம் பல ஆண்டுகாலம் தொடர்ந்து காணப்பட்டது. அதனுடன் அரசியல் அமைதி இன்மையும் சேர்ந்து வந்தது. அதுமுடிவில் 1905 புரட்சியுடன் முடிந்தது. நாட்டில் புரட்சி அடக்கப்பட்டு, மீண்டும் தொழிலாளர்கள் ஆலைகளில் அமைதியாகப் பணி புரியலாயினர். தொழில் வளம் மேலும் சிறப்படையலாயிற்று. ஸார்களின் ஆட்சி கால ரஷ்ய நாட்டில், கடைசிகால பொருளாதார வளர்ச்சியானது முதலாவது டூமா (Duma) (ரஷ்ய பாராளுமன்றம்) கூட்டப்பட்டது முதல், முதல் உலகப்போர் ஏற்படும் காலம் வரையில் நாட்டில் நல்லமுறையில் காணப்பட்டது. ஆனால் அது 1890 இல் ஏற்பட்ட, அதே வேகத்தில் இல்லாமல் இருந்தது. அதாவது முதலில் தொழில் துறையின் வளர்ச்சி 8 விழுக்காடாக இருந்தது. தற்போது 6 விழுக்காடு வளர்ச்சியே இருந்தது. எல்லா தொழில்களும், எண்ணெய் ஆலைகளைத் தவிர பின்தங்கிய நிலையிலேயே இருந்தன. எவ்வாறாயினும் நாட்டில் வார்ப்பு இரும்பு உற்பத்தியும், இரும்பு எஃகு உற்பத்தியும், செம்பு உற்பத்தியும், நிலக்கரி உற்பத்தியும் பேரளவு அதிகரிக்கலாயிற்று.

புதிய தொழில்துறை முன்னேற்றம் நாட்டின் கனரக தொழில்துறையையும், பேரளவு உற்பத்தித் துறைகளையும் ஆதரித்து நின்றது. ஆனால் விட்டே பதவி விலகிய பின்னர் அரசு நாட்டை தொழில் மயமாக்க பெரும் முயற்சி கொள்ளவில்லை. முதலாளிகளுக்கு அரசு அளித்த உதவிகளும் தடைப்பட்டன. மக்கள் மீது தொழில் வளர்ச்சிக்காக திணிக்கப்பட்ட பொருளாதார பளு (financial pressure) குறையலாயிற்று. எனினும் ரஷ்ய தொழில்துறை இந்த நிலைமைகளையும் சமாளிக்கலாயிற்று. காரணம் ஏற்கனவே தனது சொந்தக் காலில் நின்று கொள்ளும் தகுதியை தொழில்துறை அடைந்து இருந்தது. மேலும், வங்கிகளும் தொழில் துறைகளுக்கு கடன் வழங்கி ஊக்குவிக்கலாயிற்று. இது

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு வழிகாட்டியாயும் செயல்படலாயிற்று. ரஷ்ய தொழில் வல்லுனர்களும் படிப்படியாக தனித்து இயங்கும் வகையில் சிறப்படைந் திருந்தனர். முதல் உலகப்போருக்கு முன்னால் உள்ள சில ஆண்டுகளில் ரஷ்யாவின் தொழில் துறை பன்முகப்படுத்தப்பட்டது. மேலும் உள்நாட்டிலும் அதற்கு பெரும் வரவேற்பு இருந்தது. அதன் நன்மைகள் தொழிலாளர்கள், நுகர்வோர்கள் முதலானோர் களையும் அடையலாயிற்று. இருபதாம் நூற்றாண்டில் ரஷ்யாவின் உற்பத்தித்திறன் அதிகரித்தும் கூட ஸார் மன்னர்களின் ரஷ்யா, ஐரோப்பாவின் முன்னேறிய நாடுகளைவிட மிகவும் பின்தங்கியே காணப்பட்டது. மேலும் ரஷ்ய தொழில்துறை வெளிநாட்டு மூலதனத்தை நம்பி இருந்தது. அது 1916-17 ஆகிய ஆண்டுகளில் இரண்டே கால் பில்லியன் (billion) ரூபிளாக உயர்ந்து இருந்தது. இது ரஷ்யாவின் தொழில் துறையின் மொத்த முதலீட்டில் மூன்றில் ஒரு பகுதியாக காணப்பட்டது. உதாரணமாக, ரஷ்யாவின் வார்ப்பு இரும்பு (pig iron) உற்பத்தியில் மூன்றில் இரண்டுபங்கும், ரஷ்ய நிலக்கரி உற்பத்தியில் பகுதியும் பிரெஞ்சு நாட்டு முதலாளிகள் வசம் இருந்தது. ஜெர்மானியர்கள் ரசாயன உற்பத்தி, மின்சார சாதன உற்பத்தியில் ஈடுபட்டிருந்தனர். பிரிட்டிஷ்காரர்கள் எண்ணை உற்பத்தியில் கவனம் செலுத்தினர். சுருங்கக்கூறின். ரஷ்யா, மேலை நாடுகளின் பொருளாதார ஆதிக்கத்தில் இருந்தது. இதன்மூலம் விவசாயிகள் தொழிலாளர், நலம் மிகவும் பின்தங்கி இருந்தது.

பயிற்சி வினாக்கள்

1) இரண்டாம் நிக்கோலஸ் காலத்திய தொழிற் புரட்சி குறித்து ஒரு கட்டுரை வரைக.

2) 19-ஆம் நூற்றாண்டின் இறுதிகாலத்தில் ரஷ்யாவின் தொழில் வளர்ச்சி பற்றி ஒரு கட்டுரை வரைக.

பாடம் – 12 ரஷ்யாவின் தூரக்கிழக்குக் கொள்கை ரஷ்ய – ஜப்பானியப் போர் 1904 – 05

ஸார் இரண்டாம் நிக்கோலஸ் ஆட்சிக்காலம் எப்போதும் அமைதியையே நாடும் ஒன்றாக இருக்கவில்லை. மாறாக ஆக்கிரமிப்பும், தீரச் செயல்களும் நிறைந்த ஒன்றாகவே இருந்தது. காரணம் தூரக்கிழக்கில் உள்ள ஜப்பான், குடியேற்றம் அமைப்பது குறித்து, ஆக்கிரமிப்புகளில் ஈடுபட்டதை கண்ணுற்ற ரஷ்யமன்னர், ஜப்பானின் செல்வாக்கு ஓங்குவதால் ரஷ்யாவிற்கு ஆபத்து என்று கருதினார். எனவே ரஷ்யா தூரக்கிழக்கு பிரச்சனைகளில் தலையிட்டது.

மேலும் 1891-1903 ஆகிய ஆண்டுகளுக்கிடையில் அமைக்கப்பெற்ற மாபெரும் சைபீரிய இருப்புப்பாதைத் தொடர் (Trans-Siberian Rail road) சைபீரியாவின் தேவைகளுக்கு என்று கூறப்பட்டாலும், அது ரஷ்யநாட்டை மஞ்சூரியா, சீனா, கொரியா போன்ற நாடுகளுடனும், மேலும் மறைமுகமாக ஜப்பானையும் இணைத்தது என்றே கூறமுடியும். அதே வேளையில் ஜப்பான் நாடும் மிகவும் நவீனமான முறையில் மாற்றியமைக்கப்பட்டிருந்தது. மேலும் உலகநாடுகளில் பல சீனப் பேரரசரிடம் இருந்து பல சலுகைகளைப் பெற்றன. சீனாவைத் தங்கள் சந்தையாகக் கொண்டு பல ஐரோப்பிய நாடுகள் இலாபமடைந்ததைக் கண்டு பொறாமை கொண்ட ஜப்பான், தானும் ஒரு சந்தை தளத்தை அமைக்க வேண்டும் என்று கருதவே தன் அருகாமையில் உள்ள கொரியநாட்டை நாடியது. ஆனால் கொரியாவில் ஜப்பானின் ஆதிக்கம் வளர்வதை விரும்பாத சீனா, ஜப்பான் மீது போர் தொடுத்தது. இப்போர் 1894-95 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்றது. போரில் வெற்றி பெற்ற ஜப்பான், சீனாவுடன் சீமனோசெகி (Shimonoseki) என்கிற உடன்படிக்கையைச் செய்து கொண்டது. இந்த உடன்படிக்கையின் படி ஜப்பான், சீனாவிடமிருந்து, பிறவெற்றிகளுடன், பார்மோசா, பெஸ்கடோர்ஸ் தீவுகள், லியோதுங் தீபகற்பம், ஆர்தர்துறைமுகம் போன்ற பகுதிகளையும் பெற்றுக் கொண்டது. மேலும், கொரியாவின் சுதந்திரத்தையும் சீனா அங்கீகரித்தது. ஜப்பானுக்கு போர் இழப்பீடாக பெருந்தொகையையும் கொடுக்க சீனா ஒப்புக்கொண்டது.

இதனைக்கண்டு பொறாமையும், அச்சமும் கொண்ட ரஷ்யநாடு, ஜப்பானின் செல்வாக்கைக் குறைக்க எண்ணி, பிரான்சு, ஜெர்மனி ஆகிய நாடுகளுடன் சேர்ந்து கொண்டு, ஜப்பானின் இந்த வெற்றியால் பீகிங் அரசுக்கும், தூரக்கிழக்கு நாடுகளுக்கும் பேராபத்து என வாதாடியது. மூன்று நாடுகளும் ரஷ்யாவின் தலைமையில் ஜப்பானை அச்சுறுத்தவே, ஜப்பானும் தான் சீனாவுடன் நடத்திய போரின் மூலம் பெற்றிருந்த லியோதங் தீபகற்பத்தையும், ஆர்தர் துறைமுகத்தையும் திரும்பவும் சீனாவுக்கே கொடுத்து விட்டது.

அடுத்து ரஷ்யா, சீனாவுடன் ஓர் ரகசிய ஒப்பந்தமும் செய்து கொண்டது. இதன்படி சீனாவைப் பிறநாடுகள் (குறிப்பாக ஜப்பான் நாடு) தாக்கினால் சீனாவிற்கு ஆதரவாக ரஷ்யா போரில் இறங்கும் என்பதாகும். அதற்குக் கைமாறாக மஞ்சூரியா வழியாக ஒரு ரயில்பாதையை கடற்கரைவரை அமைத்துக் கொள்ளும் உரிமையை சீனாவிடம் ரஷ்யா

பெற்றது. இந்த புதிய ரயில்பாதைத் தொடருக்கு கிழக்கு சீன ரயில் பாதை (East China Railway) என்று பெயர். இந்த ரயில்பாதைத் தொடர்பால் மஞ்சூரியாவில், ரஷ்யாவின் செல்வாக்கு பரவ ஏதுவாயிற்று. மேலும் இந்த ரயில்பாதையை காரணமாய் வைத்துக்கொண்டு ஹார்பின் (Harbin) என்ற பகுதியிலும், பிற பகுதிகளிலும் உள்ள ரயில்பாதை சொத்துக்களையும், ரயில்பாதையையும் பாதுகாக்கவென்று ரஷ்ய அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். இவ்வாறாக ரஷ்யாவின் செல்வாக்கு அந்நாட்டில் ஏற்படுத்தப்பட்டது. இது ஜப்பானின் நலனைப் பாதிக்கும் என ஜப்பான் கருதியது.

ரஷ்ய நாட்டிற்கு நியாயமான வாணிக உரிமைகளும், பிற உரிமைகளும் ஆசிய பகுதிகளில் இருந்தாலும், பிற ஐரோப்பிய நாடுகளுடன் வாணிபத்தில் போட்டி போடும் அளவில் ரஷ்யாவின் தொழில் துறை சிறப்படையாமல் இருந்ததால், தன் செய்பொருட்களை கீழ் நாடுகளில் விற்பதில் ரஷ்யநாடு தீவிரமாய் இறங்கிற்று. இந்த வகையில், ரஷ்ய ஏகாதிபத்தியம், அமைதியான முறையில் கிழக்கில் ஊடுருவல் என்கிற முறையில் நடந்து கொண்டது. நாளடைவில் இம்முறை சிக்கலை ஏற்படுத்தும் ஒன்றாகவே மாற்றியமைக்கப்பட்டது. அதாவது ரஷ்யநாடு புது வாய்ப்புக்களை தன் படைபலம் மூலம் பெற முனைந்தது. அதே நேரத்தில் ஜெர்மன் நாட்டைச் சார்ந்த இரண்டு கிறிஸ்தவ பாதிரிமார்கள், 1897 நவம்பரில், சீனாவில் படுகொலை செய்யப்படவே, ஜெர்மன்நாடு தன் கப்பற்படையைக்காட்டி சீனாவிடம் கியோ - சௌ (Kiao - chow) வை 99 - ஆண்டுகள் குத்தகையாக பெற்றுக்கொண்டது. உடனே ரஷ்யாவின் இரண்டாம் நிக்கோலஸும், சீனாவை நெருக்கி லியோதுங் தீபகற்பத்தின் தென்பகுதியை ஆர்தர் துறைமுகத் (Port Arthur)துடன் சேர்த்து 25 ஆண்டுகள் குத்தகையாக பெற்றுக்கொண்டார். ஏற்கனவே ரஷ்ய - சீன ஒப்பந்தம் இருந்தும் ரஷ்யா இவ்விதம் நடந்து கொண்டது ரஷ்யாவின் ஆதிக்க வளர்ச்சி நடவடிக்கையாகவே கருதப்படுகிறது. ஆர்தர் துறைமுகத்தையும், கார்டின் நகரையும் இணைக்கும் வண்ணம் தெற்கு மஞ்சூரிய இருப்புப்பாதை ஒன்றையும் அமைக்க ரஷ்யா உரிமைபெற்றது. ரஷ்யாவின் இச்செயலால் மஞ்சூரியாவில் ரஷ்ய ஆதிக்கம் வளர ஏதுவாயிற்று. மேலும் சீனாவில் 1900 - 1901 ஆகிய ஆண்டுகளில் அன்னியர்களுக்கு எதிராக நடைபெற்ற பாக்ஸர் புரட்சியை அடக்க ஜெர்மனி இங்கிலாந்து, பிரான்சு போன்ற நாடுகள் படைகளை அனுப்பி, அதனை அடக்க சீனாவுக்கு உதவியபோது ரஷ்யாவும் தன் படைகளை சீனாவுக்கு அனுப்பி வைத்தது.

மஞ்சூரியாவின் உள்நாட்டு நிலைமை மிகவும் மோசமானதாக இருப்பதாகக்கூறி, ரயில்பாதைகளின் பாதுகாப்புக்கென்று ரஷ்யப்படைகள் மஞ்சூரியாவில், ரஷ்யாவால் நிறுத்தி வைக்கப்பட்டது. இத்துடன் சில ரஷ்யர்கள் ரஷ்ய அதிகாரிகளின் தொடர்புடன் யாலு நதி (Yalu River) வழியாக மர வியாபாரம் செய்யும் உரிமையும் பெற்றனர். இம்முறைகள், கொரியாவினுள் ஊடுருவும் நோக்குடன் ரஷ்யாவால் மேற்கொள்ளப்பட்ட முறைகளாகவே தோன்றியது. ரஷ்ய மன்னரும் இம்முறைகளை மிகவும் விருப்பத்துடன் ஆதரிக்கலானார். அவரது நோக்கமெல்லாம், எவ்வழிகளிலாயினும் ஆசியா பகுதிகளில் ஊடுருவி விடவேண்டும் என்பதே ஆகும். ரஷ்யாவின் சாதாரண அதிகாரிகளைப்போல் மன்னரும் நடந்து கொண்டார். மன்னர் மேலும் ஜப்பானின் வலிமையையும் குறைத்து மதிப்பிட்டு வந்தார்.

இந்நிலையில் ஆசியாவில் பல நாடுகளைத்தன் ஆதிக்கத்தில் கொண்டிருந்த இங்கிலாந்து ரஷ்யாவின் ஆதிக்கக் கொள்கையால் தன் நலன் பாதிக்கும் என்று எண்ணியது. அதேவேளையில் தன் பேரரசினை விரிவாக்க இயலாத நிலையில் ஜப்பான் இருந்தது. எனவே பிரிட்டனும், ஜப்பானும் ஓர் உடன்படிக்கையைச் செய்துகொண்டால் இருநாடுகளின் நலன்களும் காக்கப்படும் என்று நம்பின. ஆகவே 1902-ஆம் ஆண்டில் ஆங்கிலோ - ஜப்பானிய 1902 உடன்பாடு கையெழுத்தாகியது. அதன்படி இரு நாடுகளில் ஏதேனும் ஒருநாடு இன்னொரு நாட்டுடன் போரிட்டால் மற்றநாடு நடுநிலைமை வகிக்கவேண்டும். ஒரு நாடு இவ்விரு நாடுகளில் ஒன்றோடு போரிட்டுக் கொண்டிருக்கும்போது, எதிரிநாட்டுக்குத் துணையாக மூன்றாவது நாடு போரில் இறங்கினால் மற்ற நாடு உடனேயே நட்பு நாட்டுக்குத் துணையாகப் போரில் இறங்க வேண்டும்.

இந்த உடன்படிக்கையால் ரஷ்யா, தனது விரிவாக்கக் கொள்கையை செயல்படுத்த முடியாத ஒரு நிலை ஏற்பட்டது. நிக்கோலஸ் அரசரும் போர் செய்ய மனமின்றி தன் நாட்டுப்படைகளை மஞ்சூரியாவில் இருந்து வாபஸ் பெற சம்மதித்தார். ஆனால் ஜெர்மானிய பேரரசான இரண்டாம் கெய்சர் வில்லியமும், ரஷ்ய அமைச்சர்களான பெசல் ஏசோல், பிளீல் ஆகியோர்களும் இரண்டாம் நிக்கோலஸை கேட்டுக் கொண்டதன் பேரில் அவரும் மஞ்சூரியாவை விட்டு ரஷ்யப்படைகளை வெளியேற்றுவதில்லை என்று முடிவு செய்தார். ரஷ்ய நாடு ஜப்பானை சரியான முறையில் கணிக்கத்தவறியது இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

ஜப்பானைப் பொறுத்த வரையில் அது ஒரு புத்திலுள்ள ஆக்கிரமிப்பாளனாகவே நடந்து கொண்டது. அதாவது, மஞ்சூரியாவின் வடபகுதியை ரஷ்யாவிற்குப் பங்கிட்டு அளித்துவிடுவதாயும், ஆனால் தென்மஞ்சூரியாவும், கொரியாவும் தனக்கு வேண்டு மென்றும் ரஷ்யாவிடம் கூறியவண்ணம் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதுபோல் தனக்கு தக்க தருணம் ஏற்படும் வரை காலம் தாழ்த்தி வந்தது. இந்த பேச்சுவார்த்தை 1903 ஆகஸ்ட் முதல் 1904 பிப்ரவரி வரையில் ரஷ்யாவிற்கும் ஜப்பானுக்கும் இடையில் நடந்து வந்தது. ஆனால் ரஷ்யாவும் தன் விரிவாக்கக் கொள்கையிலிருந்து பின்வாங்கப் போவதில்லை என்பதில் விடாப்பிடியாக இருக்கவே 1904ஆம் ஆண்டு, பிப்ரவரி 8-ஆம் நாள், ரஷ்யா சிறிதும் எதிர்பாராத வேளையில் ஆர்தர் துறைமுகத்தின் வெளிப்பகுதியில் வைத்து, ரஷ்யப்படைகளின் மீது ஜப்பான்படைகள் திடீர்த் தாக்குதலை நடத்தின. ஜப்பானின் இச்செயல் ரஷ்யாவிற்கு பெரும் அதிர்ச்சியைத் தரலாயிற்று. பசிபிக்பெருங்கடல் பகுதியில் இருந்த ரஷ்ய கடற்படைத் தளபதி அட்மிரல் மகரோ மரணமடைந்த பின் அப்படையும் முறியடிக்கப்பட்டது. கடுமையான போருக்குப்பின் ரஷ்யபடையினர் முக்டனுக்குப் (Mukden) பின்வாங்கினர். ஜப்பானியப் படையினரை முறியடிக்க செப்டம்பர் மாதம் ரஷ்யர்கள் எடுத்த பெரும் முயற்சியும் வீணாயிற்று. ஆர்தர் துறைமுக முற்றுகையும் ஐந்து மாதம் தொடர்ந்து நடைபெற்றது. இறுதியில் ஜப்பான் ஆர்தர் துறைமுகத்தை கைப்பற்றியது என்றாலும் பல ஜப்பானியர்கள் இப்போரில் இறந்தார்கள். இதன் பின்னர் மூன்று இலட்சம் ஜப்பானியப் படையினர் அதே அளவு எண்ணிக்கையுள்ள ரஷ்யப்படையோடு முக்டன் நகருக்கு வெளியே போரிட்டு ரஷ்யப்படைகளை முக்டன் பகுதியிலிருந்தும், பிறபகுதிகளில் இருந்தும்

மஞ்சூரியாவின் வடக்காக விரட்டியடித்தனர். இத்தகைய தோல்விகளுக்குப்பின்னர், ரஷ்யா பால்டிக் கடற்பகுதியிலிருந்த தனது கடற்படையை அவசரகால ஏற்பாடுகளுடன் பசிபிக்பெருங்கடலுக்கு விரையுமாறு அனுப்பியது.

பால்டிக்கடலிலிருந்து ரஷ்யப் படைகள் பசிபிக்கடல் வந்து சேருவதற்குள் பல இன்னல்களுக்குள்ளாயினர். காரணம் இருகடல்களுக்கும் இடையில் உள்ள துறைமுகங்கள் அனைத்தும் இங்கிலாந்தின் ஆதிக்கத்தில் இருந்தது. எனவே அப்படைகளுக்குத் தேவையான எரிபொருட்களையும், குடிநீர், உணவு, பிறபொருட்கள் முதலியனவும் பெறுவது பெரும்பாடாயிற்று. வரும்வழியில் ரஷ்ய கடற்படை பிரிவு பன்னாட்டு பதட்டத்தையும் ஏற்படுத்தியது. காரணம் வழியில் டோகர் பாங் (Dogger Bank) என்னும் இடத்தில் ஆங்கில நாட்டு மீன்பிடி படகுகளை நோக்கிச் சுட்டதன் விளைவாக பலர் இறந்தனர். ஆனால் அதற்குரிய நஷ்ட ஈட்டை ரஷ்யா பிரிட்டனுக்கு தந்ததோடு வருத்தத்தையும் தெரிவித்தது. இறுதியில் ரஷ்ய படைப்பிரிவுகள் பசிபிக் பகுதியை அடைந்தன. ரஷ்ய படைகள் பசிபிக்கை அடைந்ததும் ஜப்பானிய கடற்படைத்தளபதி டோஜோ என்பவர் ரஷ்யப்படைகளை (ஜப்பானுக்கும், கொரியாவிற்கும் இடைப்பட்ட பகுதியான) துஷிமா நீர் இணைப்புபகுதியில் (Tsushima Straight), 1905ஆம் ஆண்டு, மே மாதம், 27-29 வரை நடந்த போரில், ஓரிரு ரஷ்யக் கப்பல்களைத்தவிர, அனைத்து ரஷ்யக் கப்பல்களையும் மூழ்கடித்தார். ரஷ்யர்கள் கூற்றுப்படி எதிரியின் கையில் கிடைப்பதற்கு முன்னால் தங்கள் கப்பல்களை தாங்களே மூழ்கடித்தனர். இந்த ரஷ்ய - ஜப்பானியப்போரில், போரின் தொடக்கம் தொட்டு இறுதி வரை ஜப்பானியரே வெற்றி மேல் வெற்றி பெற்றனர்.

போரின் தோல்வி ரஷ்யாவின் பெருமைக்கும் செல்வாக்கிற்கும் பெரும் இழுக்காய் அமைந்தது. காரணம், ஜப்பானியர்கள் மிகவும் குள்ளமானவர்கள். அவர்கள் உயரமான ரஷ்யர்களைப் போரில் புறங்காணச் செய்தனர். இச்செயல், அந்நேரத்தில் பெரிதும் வியப்பில் எல்லோரையும் ஆழ்த்தியது. இதற்குப் பல்வேறு காரணங்கள் இருந்தன. காரணம் ஜப்பான் ஏற்கனவே போருக்கு தன்னைத்தயார்படுத்திக் கொண்டிருந்தது. அதன் படைகள் நல்லமுறையில் அமைக்கப்பட்டிருந்தன. நவீன ஆயுதங்கள் அதற்கு வழங்கப்பட்டிருந்தன. ரஷ்யப்படைகள் மாறாக போருக்கு தயார்படுத்தப் பட்டிருக்க வில்லை. போதிய நவீன ஆயுதங்கள் அவைகளுக்கு வழங்கப்படவும் இல்லை. சிறந்த படைத் தளபதிகளும் அப்படைக்கு இல்லை. மேலும் ரஷ்யநாட்டில் உள்நாட்டுக் குழப்பங்களும் நிறைந்து காணப்பட்டது. அதே வேளையில் ஜப்பான் நாட்டிற்கு கிரேட்பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளின் நட்பு இருந்தது. மேலும் உலக நாடுகளின் பொதுக் கருத்தும் ஜப்பானுக்கு ஆதரவாக இருந்தது. ஆனால் ரஷ்யா அரசியல் ரீதியாக உலகநாடுகளால் ஒதுக்கப்பட்டிருந்தது. மேலும் ஜப்பானுக்கு குறுகிய போக்குவரவு தொடர்புகளும் மிகவும் பயன் உள்ளதாக அமைந்திருந்தது. ஆனால் ரஷ்யா ஒரே ரயில்பாதைத் தொடரான மாபெரும் சைபீரிய ரயில் பாதையை மட்டுமே நம்பி இருந்தது. அதுவும்கூட, பெய்க்கால் ஏரி (Lake Baikal) பகுதியில் உள்ள வேலைகள் முற்றுப்பெறாத நிலையில் காணப்பட்டது. இருந்தும் ரஷ்யப்போர் வீரர்களும் மாலுமிகளும் மிகவும் கடினமாகவே போரிட்டும் தோல்வியைத் தழுவினர்.

துஷிமா போர் நிகழ்ச்சிக்குப்பிறகு போர் ஓய்வு ஒப்பந்தம் ஏற்பட்டது. இப்போருக்குப் பின் ரஷ்ய நாட்டில் 1905இல் ஓர் உள்நாட்டுப்புரட்சி ஏற்பட்டது. ஜப்பானியர்களும் பெரும் சேதத்தில்தான் வெற்றிகளைக் குவித்தார்கள். ரஷ்யப்படைகள் ஜப்பானால் தோற்கடிக்கப்பட்டாலும் ரஷ்யபடைகளின் முக்கியப்படைகளை ஜப்பானால் முழுவதுமாக அழிக்க முடியவில்லை. இறுதியில் ஜப்பானின் ஓர் ரகசிய வேண்டுகோளை ஏற்ற அமெரிக்க ஜனாதிபதி தியோடர் ரூஸ் வெல்ட் அமெரிக்காவில் நியூஹாம்ஷயரில் உள்ள போர்ட்ஸ்மௌத் (Portsmouth) என்கிற இடத்தில் ஓர் சமாதான மாநாட்டைக் கூட்டினார்.

இந்த போர்ட்ஸ் மௌவுத் (Portsmouth) உடன்படிக்கையின் ஷரத்துக்கள் விட்டே (Witte)யின் அரசியல் புத்திசாதுரியத்தை பிரதிபலிக்கிறது. விட்டே, ரஷ்யாவின் தூதுக்குழுவிற்குத் தலைமை தாங்கிச் சென்றார். இவ்வுடன்படிக்கை ஓரளவு ரஷ்யாவிற்குச் சாதகமான ஒன்றாக அவரால் அமைந்தது. இவ்வுடன்படிக்கையின்படி ஜப்பானுக்கு கொரியாமீது உள்ள உரிமைகளை ரஷ்யா ஒப்புக்கொண்டது. மேலும் லியோதங்தீபகற்பம், ஆர்தர்துறைமுகம், டைரன் ஆகிய பகுதிகள் உரிமையை ரஷ்யா ஜப்பானுக்கு விட்டுக் கொடுத்தது. தென்பகுதியில் சியாங் - சென் (Chang-Chun) வரை உள்ள ரயில் பாதையையும், ரஷ்யா ஜப்பானுக்கு அளித்தது. பெருந்தகராறுக்குட்பட்ட பகுதியாய் அமைந்துவிட்ட சாகலின் தீவு ரஷ்யா, ஜப்பான் ஆகிய இருநாடுகளுக்குமிடையே பகிர்ந்துக்கொள்ளப்பட்டது. ஜப்பானுடன் ஒருசிறுபோரில் கலந்து கொண்டு வெற்றி பெறுவதன் மூலம், ரஷ்யாவில் வளர்ந்து வரும் புரட்சியின் போக்கை திசைதிருப்பலாம் என்று எண்ணி ரஷ்யா போரில் இறங்கியது. ஆனால் போரில் தோற்றதால் நாட்டில் புரட்சியின் வேகம் அதிகரித்தது. "கண்ணியமற்ற இத்தோல்வியின் முழுப்பொறுப்பும் மன்னனின் வல்லாட்சியைச் சாருமே தவிர, வீரமிக்க ரஷ்ய மக்களைச் சாராது. மன்னனின் தோல்வி மக்களின் வெற்றியாகும். ஆர்தர் துறைமுகத்தின் வீழ்ச்சி சார் மன்னனின் ஆட்சியின் வீழ்ச்சிக்கு முதல்படி" என லெனின் குறிப்பிட்டார்.

பயிற்சி வினா

ரஷ்ய - ஜப்பானியப் (1904-05) போருக்கான காரணங்களையும், விளைவுகளையும் விவரி.

பாடம் – 13 சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியும் பிறகட்சிகளும் 1905–ஆம் ஆண்டுப் புரட்சியும் அதன் விளைவுகளும்

ஸார் இரண்டாம் நிக்கோலஸ் (1894 – 1917)

ஸார் மூன்றாம் அலெக்ஸாந்தர் 1894-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் இரண்டாம் நாள் மரணமடையவே அவர் மகனான இரண்டாம் நிக்கோலஸ் அரியணையேறினார். தம் மூதாதயரைப் போன்று மூன்றாம் அலெக்ஸாந்தரும் தம் கால்வழியினருக்குப் பல்வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பிரச்சனைகளை விட்டுச் சென்றார். ஆனால் இரண்டாம் நிக்கோலஸோ அப்பிரச்சனைகட்குத் தீர்வுகாணும் மனப்பக்குவத்தைப் பெற்றிருக்கவில்லை. அவர் அறிவுத்திறமற்றவராக இருந்ததோடு மட்டுமின்றி, எதையும் புரிந்துகொண்டு எதிர்நோக்கும் வல்லமையும் பெற்றிருக்கவில்லை. மிகுந்த கல்வியறிவு பெற்றவராக இருந்தும், நாட்டில் நிலவி வந்த அரசியல் நிலையைக் கொஞ்சமும் தெரிந்திருக்கவில்லை. ஆனால், எதேச்சாதிகாரத்தில் அவர் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருந்தார். மக்களாட்சி முறையில் மிகவும் அவநம்பிக்கை வைத்திருந்தார். அரசுக் கட்டிலில் அமர்ந்தாரே ஒழிய ஆட்சி புரிந்தார் என்று சொல்வதற்கில்லை. தம் மனைவி அலெக்சாந்திராவிடமும் குழந்தைகளிடமும் மட்டுமே அவர் அன்பு வைத்திருந்தார். ஜெர்மனியில் பிறந்து இங்கிலாந்தில் கல்வி கற்றுத் தேர்ந்த அரசியார் 1894-ஆம் ஆண்டு நிக்கோலசை மணந்திருந்தார். அறிவுக்குப்பொருந்தாத செயல்களால் அவர் 'மூடன் நிக்கோலஸ்' என அழைக்கப்பட்டார். அவரது கொள்கைகள் 13-ஆம் நூற்றாண்டின் மங்கோலியத் தலைவர் செங்கிஸ்கானின் கொள்கைகளை ஒத்திருந்தன. 1895-ஆம் ஆண்டு யரோசுலாவில் தொழிலாளர்மீது நடத்திய துப்பாக்கி பிரயோகத்தை மனமாரப் பாராட்டினார். பஞ்சணையாக அவர் கருதியிருந்த அரியணையின் அடியில் தான் தொழிலாளரின் வேலை நிறுத்தங்கள், மாணவர்களின் அமைதியின்மை, விவசாயிகளின் கிளர்ச்சிகள், அரசியல் புயல்கள் ஆகிய புரட்சிவித்துக்கள் முளைவிடலாயின.

ரஷ்ய புரட்சி இயக்கங்கள்

1880ஆம் ஆண்டுகளில் பல்வேறான அரசியல், சமூக சக்திகள் ரஷ்ய அரசியலில் பல்வேறான மாற்றங்களை ஏற்படுத்தின. அதன் முதல் சக்தி மார்க்சியக் கோட்பாடாகும். ரஷ்யா மிக வேகமாகத் தொழில் மயம்ஆனதைத் தொடர்ந்து பல்வேறு புதிய பிரச்சனைகள் தோன்றலாயின. பல்கலைக்கழக மாணவர்களிடையேயும் தீவிர சிந்தனை யாளர்களிடையேயும் மார்க்சீயக் கருத்துக்கள் வேரூன்றத் தொடங்கின. அரசு இத்தகையச் செயல்களை வன்மையாகக் கண்டிக்கவே ரஷ்ய மார்க்சிஸ்டுகள் பிலக்கனோவ் என்பாரின் தலைமையில் அவ்வப்போது இங்கிலாந்து, பிரான்சு, சுவிட்சர்லாந்து. ஜெர்மனி போன்ற நாடுகளில் கூடினர். 1880-இல் அவர் ஜெனீவாரில் இருந்தபோது மார்க்ஸ் - ஏங்கல்ஸ் ஆகிய சிந்தனையாளர்களின் கொள்கைகளையும், தொழிலாளர் இயக்கங்களையும் பற்றி அறிந்தபின் 1883-இல் முதலாவது ரஷ்ய சமூக ஜனநாயகக்

கட்சியை நிறுவினார். 1882-ஆம் ஆண்டிலேயே 'பொதுவுடைமைக் கொள்கை அறிக்கையை, ரஷ்ய மொழியில் பெயர்த்தார். இதனைத் தொடர்ந்து 'தொழிலாளர் விடுதலை' என்னும் இயக்கம் உருவாயிற்று.

போலீஸ் கண்காணிப்பு மிகத்தீவிரமாக இருந்ததால், கூட்டத்தில் கலந்து கொள்ள ஒன்பது பிரதிநிதிகளே அனுமதிக்கப்பட்டனர். இக்கூட்டத்தில் கலந்து கொண்ட எட்டு பேரும் கைது செய்யப்பட்டனர். இக்கட்சியின் பத்திரிக்கையான 'இஸ்க்ரா' ஜெர்மனியிலுள்ள ஸ்டட்கார்ட் என்னும் நகரிலே 1900ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் கட்சி பிரசாரத்தை ஆரம்பித்தது. இக்கட்சியின் இரண்டாவது கூட்டம் 1903-ஆம் ஆண்டுக் கோடைக்காலத்தில் பிரஸ்சல்ஸ் நகரில் நடந்தேறியது. போலீஸ் அதிகாரிகளின் அடக்குமுறை அங்கும் அதிகமாகவே அதன் தலைமைச் செயலகம் லண்டனுக்கு மாற்றப்பட்டது. நீண்ட நேர விவாதத்திற்குப்பின் 26 நிறுவனங்களைச் சார்ந்த இம்மாநாட்டின் 45 பிரதிநிதிகள் ரஷ்ய எதேச்சாதிகார ஆட்சியைத் தூக்கி எறிந்து விட்டு, பாட்டாளி மக்களின் எதேட்சாதிகார ஆட்சி ஒன்று நிறுவப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். அனைத்து ரஷ்யமக்கட்கும் வாக்குரிமை அளிக்க வேண்டும் என்றும், தல ஆட்சித்துறைகளில் அவர்கட்குச் சம அந்தஸ்து அளிக்கவேண்டும் என்றும், சமுதாயத்தில் புரையோடியிருந்த விருப்பு வேறுபாட்டைக் களையவேண்டும் என்றும், திருச்சபையை அரசின் நிர்வாகத்தினின்றும் பிரிக்கவேண்டும் என்றும் அனைத்து ரஷ்யமக்கட்கும் இலவசக் கல்வியளிக்க வேண்டும் என்றும், தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களின் வேலை நேரம் 8 மணி நேரமாகக் குறைக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் அரசை வேண்டிக்கொண்டனர். இக்கோரிக்கைகள் 1919ஆம் ஆண்டு வரையிலும் நடைமுறையில் இருந்து வந்தன. இந்த மாநாட்டில் போதுதான் ரஷ்ய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சி போல்ஷவிக்குகள் (பெரும்பான்மையோர்) என்றும், மென்ஷவிக்குகள் (சிறுபான்மையோர்) என்றும் இரு பிரிவுகளாகப் பிரிந்தது. போல்ஷவிக்குகளின் தலைவராக லெனின் (1870 - 1924) விளங்கினார். தொழிலாளர்களின் எதேச்சாதிகார ஆட்சி நிறுவுதலையும், தாராள வசதிகளுடன் ஒத்துழையாமையுமே போல்ஷவிக்குகள் முக்கியக் கொள்கைகளாகக் கொண்டிருந்தனர். புரட்சிவாதிகளைக் கொண்ட இயக்கமொன்று எங்களிடம் இருக்குமானால், ரஷ்யாவையே நாங்கள் தலைகீழாக மாற்றியமைப்போம் என்று ஒரு முறை லெனின் அறிவித்தார்.

மென்ஷவிக்குகளின் தலைவராக மார்டோவ் என்பவர் திகழ்ந்தார். இவர்களுக்குத் தொழிலாளர்களிடையே அதிகச் செல்வாக்கிருந்தது. பகிரங்கமான கட்சி ஒன்று ஏற்படுத்துதலையும், வெளிப்படையான சமுதாயம் ஒன்று உருவாக்குவதையும், புரட்சியை ஆதரிப்பதையுமே அவர்கள் முக்கியக் கோட்பாடுகளாகக் கொண்டிருந்தனர். மாநாட்டில் கட்சி உறுப்பினர் சம்பந்தப்பட்ட விதிகளே பெரும் சிக்கலுக்குள்ளாயின. கட்சிப் பத்திரிக்கை, உறுப்பினர் பதவி, யூதர்களின் தொழிலாளர் இயக்கத்தை அங்கீகரிப்பது, கட்சி மத்திய அமைப்பின் அதிகாரம் ஆகியவை சம்பந்தமான அனைத்து விஷயங்களிலும் லெனின் கொள்கைகளை மாநாடு ஏற்றுக்கொண்டது. மார்டோவின் மிதவாதக் கொள்கைகள் ஏற்றுக்கொள்ளப்படாது தள்ளப்பட்டன. லெனினோடு மோதித் தோல்வியடைந்த பிரதிநிதிகள் மாநாட்டைவிட்டு வெளியேறினர். மென்ஷவிக்குகளின்

திரிபுவாதக்கொள்கைகளையும், போல்ஷவிக்குகளின் அமைப்புக் கொள்கைகளையும் விளக்கி லெனின் 'ஓரடி முன்னேற்றம், ஈரடி பின்னேற்றம்' (One Step Forward, Two Steps Backward) என்னும் நூலை எழுதினார். அது முதல் ரஷ்ய அரசியல் வானில் லெனின் கையே ஓங்கியிருந்தது.

சமதர்ம புரட்சிக் கட்சி

இரண்டாம் நிக்கோலஸ் காலத்தில் தோன்றிய மற்றொரு கட்சி சமதர்மப் புரட்சிக் கட்சியாகும். இதன் தலைவர் வி.எம். சென்னோவ் (V.M. Chennov) என்பவராவார். 1905-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இக்கட்சி தன் கோட்பாடுகளை முறையே

(1) மக்களாட்சி முறையில் நம்பிக்கை வைப்பது;

(2) நிக்கோலசின் எதேச்சாதிகார ஆட்சியை நீக்குவது,

(3) வகுப்புப் பேதமற்ற சமதர்ம சமுதாயத்தை உருவாக்குவது என்பதாகக் கொண்டிருந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ரஷ்யாவில் நடைமுறையிலிருந்த மற்றொரு சக்தி தாராளக் கொள்கையுடைய பிரபுக்களும், ஆசிரியர்களும், மருத்துவர்களும், தாதியரும், கால்நடை மருத்துவர்களின் குழுமமும் ஆகும். இவர்கள் அதிகமாகக் கிராமப் பஞ்சாயத்துக்களான ஸெம்ஸ்டவோக்கள் (Zemstvos) பக்கமே வாழ்ந்து வந்தனர். 1890-ஆம் ஆண்டளவில் தங்கள் அலுவல்களையே கவனித்து வந்த இவர்கள் அவ்வாண்டளவின் இறுதியில் அரசு குற்றவாளிகட்கு அளிக்கும் கடுந்தண்டனைகளைக் குறைக்க வேண்டும் என்றும், அனைத்துக் குழந்தைகட்கும் இலவசக் கல்வியளிக்க வேண்டும் என்றும் கோரிக்கைகள் விடுத்தனர். ஆட்சியாளர்கட்கு இவர்களது எழுச்சி, மிகுந்த அதிர்ச்சியையே கொடுத்தது.

பல்கலைக்கழக மாணவர்கள் எல்லாவற்றுக்கும் மேலாக மாபெரும் சக்தியாக விளங்கினர். 1884-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட பல்கலைக் கழக சட்டம் அனைத்து மாணவ இயக்கங்களையும் தடை செய்தது. இதனைப் பொறுக்காத மாணவர்கள் அரசுக்கு எதிராகக் கொதித்தெழுந்தனர். 1896-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் மாஸ்கோ நகரில் போலீசாருக்கும் மாணவர்களுக்குமிடையே கலவரம் மூண்டது. இதன் விளைவாக 660 மாணவர்கள் நாடு கடத்தப்பட்டனர். அதைப்போன்று 1899-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் மாணவர்களுக்கும் போலீசாருக்குமிடையே கலவரம் மூண்டது. இதன் விளைவாக அனைத்துப் பல்கலைக்கழகங்களும், விளையாட்டு அரங்குகளும் பலதிங்கள் மூடப்பட்டன.

ரஷ்ய விவசாயிகளின் மனக்குறை

மாணவர்களின் குறையையும், அரசில் பணிபுரிவோரின் குறையையும் அடுத்து விவசாயிகளின் மனக்குறையும் கடுமையாக இருந்தது. மக்கள்பெருக்கு, வேலையில்லாத் திண்டாட்டம், குறைந்த அறுவடை, அவ்வப்போது ஏற்பட்ட பஞ்சம் ஆகியவை

விவசாயிகளின் மனக்குறைக்கு முக்கிய காரணங்களாக அமைந்தன. 1891இலிருந்து 1901 வரையுள்ள 10 ஆண்டுக் காலத்திலும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் காலநிலைக் கோளாறினால் பயிர்கள் வாடின; பஞ்சம் மக்களை வாட்டியது உக்ரேயின் போன்ற பகுதிகளில் வாழ்ந்த விவசாயிகள் பெரிய பண்ணைகளைச் சூறையாடினர் பல கட்டிடங்கள் தீக்கு இரையாயின. விவசாயிகளின் கிளர்ச்சிகள் புரட்சியாளர்களின் கவனத்தையும், ஆட்சியாளர்களின் கவனத்தையும் அதிகமாகக் கவர்ந்தன. 1905-ஆம் ஆண்டின் புரட்சிக்கு அதுவும் ஒரு முக்கிய காரணமாக அமைந்தது.

ரஷ்ய தொழிலாளர் மனக்குறை

விவசாயிகளை அடுத்து தொழிலாளர்களும் மனக்குறைவுற்றிருந்தனர். அதற்குக் காரணம் அவர்களின் பொருளாதார நிலையே ஆகும். 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் ரஷ்யா தொழில்மயம் ஆனதன் காரணமாக 2 மில்லியனுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இருந்தனர். இவர்களில் பருத்தித் தொழிற்சாலைகளிலும், சுரங்கத் தொழிற்சாலைகளிலும், இரும்புப் பாதைகளிலும், நிலக்கரிச் சுரங்கங்களிலும் பணிபுரிந்து வந்தனர். அவர்கள் நாளொன்றுக்கு 15 மணி நேரம் பணி புரிந்தனர். நீண்ட நேரம் அவர்கள் வேலை செய்தாலும் சராசரி ஓர் ஆணுக்கு ஒரு ரூபிளும் ஒரு பெண்ணுக்கு ½ ரூபிளுமே ஊதியமாகக் கிடைத்தன. இந்தக் குறைந்த ஊதியமும் அவர்கள் ஏதாவது தவறுசெய்துவிட்டால் தண்டத்தொகையாக திரட்டப்படும். வர்த்தக ஒன்றியங்களும், வேலை நிறுத்தங்களும் தடைசெய்யப்பட்டிருந்தன. எனவே அவர்கள் மிகவும் பரிதாபத்துக்குரிய வாழ்க்கையே நடத்தினர்.

இரண்டாம் நிக்கோலஸ் ஆட்சிக்காலத்தில் நடைமுறையிலிருந்த மற்றொரு சக்தி ரஷ்யர் அல்லாதோரின் தீவிர தேசியம் (militant nationalism) ஆகும். 1897ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கட்தொகை கணக்குப்படி அங்கு ரஷ்யர் அல்லாதோர் 56 விழுக்காடாக இருந்தனர். அவர்கள் முறையே பின்லாந்து, போலந்து போன்ற நாடுகளிலும், காகசஸ், உக்ரேயின், பைலோரஷியா, பெசராபிய போன்ற பகுதிகளிலும் வாழ்ந்து வந்தார்கள். அவர்களிடையே பல்வேறான தேசிய கலாச்சார, சமூகப் பிரச்சனைகள் கொழுந்து விட்டெரிந்தன. தேசிய சிறுபான்மையோரில் சிலர் இரகசியக் கழகங்கள் பலவற்றை ஆரம்பித்துத் தங்கட்கு சுயாட்சி வேண்டுமெனவும், தங்கள் தாய்மொழிகளை பள்ளிகளிலும் அரசாங்க நிறுவனங்களிலும் செயற்படுத்தப்பட வேண்டுமெனவும் கோரிக்கைகள் விடுத்தனர்.

மேற்கூறிய சக்திகள் அனைத்தும் 1905-ஆம் ஆண்டின் புரட்சிக்கு இட்டுச் சென்றன.

1905ஆம் ஆண்டு ஏற்பட்ட ரஷ்ய புரட்சிக்கான காரணங்கள்

ரஷ்யாவில் 1905-இல் ஏற்பட்ட புரட்சிக்கு நாட்டில் நிலவிய அரசியல், சமூக, பொருளாதார காரணங்களே முக்கிய காரணங்களாக அமைந்தன. நாட்டில் பெரும் புரட்சி ஏற்படுவதற்கான சூழ்நிலை ஏற்கனவே உருவாகி இருந்தது. ஆனால் 1905-இல் நடந்த ரஷ்ய ஜப்பானியப் போரில் ரஷ்யா தோற்கடிக்கப்பட்டதுதான் உடனடி காரணமாய் அமைந்தது என்றால் மிகையாகாது. ரஷ்ய ஜப்பானியப் போர் முதலில்

இருந்தே நாட்டில் பெரும் எதிர்ப்பினை உருவாக்கியது. காரணம் எந்த ஒரு காரணத்திற்கு வேண்டி ரஷ்ய நாடு ஜப்பான் நாட்டுடன் போரில் ஈடுபட்டுள்ளது என்பதைப் பற்றி மக்களுக்கு ஒன்றுமே தெரியவில்லை. போரின் இறுதியில் ரஷ்ய கப்பல், தரைப்படைகள் பெரும் தோல்விகளை சந்தித்ததை அறிந்ததும் மக்களுக்கு ரஷ்ய ஸார் மன்னரின் திறமையற்ற படையையும், தகுதியற்ற அரசு அதிகாரிகளையும் பற்றி முழுதுமாக அறிந்து கொள்ளும் வாய்ப்பு அவர்களுக்கு கிட்டியது. திறமையற்ற ராணுவ தலைவர்களின் செயல்களினால் சாதாரண படைவீரர்களாய் போரில் ஈடுபட்டு உயிர்நீத்த தங்கள் சகோதரர்களை எண்ணியும் கலங்கினார்கள். எனவே போரில் ஏற்பட்ட தோல்விக்கு ஸார் மன்னன் தான் முழுக்க முழுக்க காரணம் என்பதை எண்ணி அப்படிப்பட்ட திறமையற்ற ஒரு மன்னனின் கீழ் இருக்க விரும்பாதவர்களாய் அவனை அதிவிரைவிலேயே தூக்கி எறிய உறுதி பூண்டார்கள். இவ்வாறு 1905இல் நடந்த ரஷ்ய ஜப்பானியப் போர் உடனடிக் காரணமாய் அமைந்தது.

மேலும் 1880க்குப் பின்னர் ஏற்பட்ட தொழில் மறுமலர்ச்சியினால் மக்களின் வாழ்க்கையிலும் பெரும் மாறுதல்கள் ஏற்படலாயின. அதாவது தொழில்கள் நாட்டில் புதிதாக ஏற்பட்டதால் உற்பத்தியில் ஈடுபடும் பணக்கார முதலாளிகள், ஆலைகளில் பணிபுரியும் ஏழை தொழிலாளர் என்ற இரு பிரிவினர் தோன்றலாயினர். தொழிலாளர்கள் மத்தியில் தொழிலாளர் இயக்கங்கள் வேகமாகப் பரவலாயின. மேலும் தாராளக் கருத்துக்களைக் கொண்ட பலரும் அரசினை எதிர்த்து மக்கள் மத்தியில் பிரச்சாரம் மேற்கொண்டனர். அவர்கள் 1903-இல் "விடுதலை சங்கம்" (Union of Liberation) என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தி. தங்கள் கொள்கைகளைப் பரப்புவதற்கு என்று விடுதலை (The Liberation) என்னும் பத்திரிக்கையையும் வெளிநாட்டில் இருந்து வெளியிட்டு வந்தனர். பொருளியல் மேதையான பீட்டர் ஸ்டுரு (Peter Struve) என்பார் அதன் ஆசிரியராவார். பின்னர் 1905-இல் அவர்கள் "அரசியலமைப்பு ஜனநாயகக் கட்சி (Constitutional Democratic Party) அல்லது "காடெட்டுகள்" (Cadet) என்னும் ஒரு கட்சியை அமைத்துக் கொண்டார்கள். இவர்கள் தாராளக் கொள்கையையும் அதே நேரத்தில் அரசியலமைப்புக்குட்பட்ட அரசாட்சியையும் விரும்பியவர்களாவர். இக்கட்சியில் மக்களாட்சி தத்துவத்தை (republicans) விரும்புபவர்களும் இருந்தனர்.

மேலும் தீவிரவாதிகளும் இரண்டு முக்கிய கட்சிகளை ஏற்படுத்தியிருந்தனர். சமூக ஜனநாயகக்கட்சி (Social Democratic Party or "S.D.") என்பது ஒன்று. மற்றையது சோசலிச புரட்சிக்கட்சி (Socialist Revolutionary or "S.R."). சமூக ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர்கள் மார்க்ஸிஸ்டுகளாவார். இக்கட்சிதான் ரஷ்யநாட்டில் மார்க்ஸிய இயக்கம் வளர காரணமாயிற்று. 1880க்கு பிறகு இன்னும் சொன்னால் 1890-ஆம் ஆண்டுக்குப் பிறகு ரஷ்ய நாட்டில் மார்க்ஸீயம் மிகவும் செல்வாக்குப் பெறலாயிற்று. ஜார்ஜ் பிலக்கனோவ் (George Plekhanov) என்பவர் தான் அதற்கு முக்கிய காரணமாவார். அவர் தொழிலாளர் விடுதலைக்காக பாடுபடலானார். ஆயினும் மார்க்ஸீய அரசியல் கட்சியான சமூக ஜனநாயகக்கட்சி 1898-க்குப் பிறகுதான் தோற்றுவிக்கப்பட்டது. எனினும் இக்கட்சியின் இரண்டாவது மாநாடு புருசெல்ஸ் (Brussels) என்னுமிடத்திலும், இலண்டனிலும் ஆக 1903-இல் கூட்டப்பட்ட பிறகுதான் இக்கட்சி மிகவும் தீவிரமாக தொழிலாளர்களுக்காக போராடலாயிற்று. 1903-இல் சமூக ஜனநாயகக்கட்சி இரண்டாக

உடைந்தது. அதில் போல்ஸ்விக்குகளுக்கு லெனின் தலைவரானார். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ரஷ்யநாட்டில் ஒரே குழப்பமாய் காணப்பட்டது. கதவடைப்புகளும், வேலை நிறுத்தங்களும் நாடுமுழுவதும் நடந்தேறியது. மாணவர்களும் புரட்சிக் கருத்துக்களை விரும்பி ஏற்றனர். 1902, 1903 ஆகிய ஆண்டுகளிலும் 1904 ஆகிய ஆண்டிலும் ஏற்படுத்தப்பட்ட தேசிய பொருளாதாரம் பற்றிய குழுக்களும், பேராசிரியர்கள், மருத்துவர்கள், பிற பொது அமைப்புகள் முதலியனவும் நாட்டில் சீர்திருத்தம் வேண்டுமென்று வற்புறுத்தின. மேலும் சோசலிச புரட்சியாளர்கள் தீவிரமான நடவடிக்கைகளில் ஈடுபடலாயினர். அதாவது அரசு உயர் அதிகாரிகளையும், இரண்டு அமைச்சர்களையும் படுகொலை செய்தனர். பிற அமைப்புகளும் அதிக உரிமை கேட்டுப் போராடலாயின. அரசும் புரட்சியாளர்களைக் கடினமாய் இரும்புக்கரம் கொண்டு அடக்கியும், சிற்சில உரிமைகளை மக்களுக்கு வழங்கியும் சமாதானம் செய்து கொள்ளமுனைந்தது.

1904 - 1905ஆம் ஆண்டுகளில் நடந்த போரில் ரஷ்யா தோல்வியடைந்ததைத் தொடர்ந்து புரட்சி இயக்கங்களின் வேலைகள் நாட்டில் சுறுசுறுப்படைந்தது. தொழிலாளர்களின் மத்தியில் புரட்சி இயக்கங்கள் வேரூன்ற ஆரம்பித்தன. 1904-இல் புரட்சியாளர்களால் கொலை செய்யப்பட்ட அமைச்சர் பிளீவ் என்பவருக்குப் பதிலாகப் புதிய உள்துறை அமைச்சராக மிரஸ்கி என்பவர் பதவியேற்றார். இவர் ஓரளவு தாராளக் கோட்பாட்டினை கொண்டிருந்தும்கூட, போர்ப்படையில் விவசாயிகளைக் கட்டாய மாகச் சேர்க்கத் தொடங்கியதும் அதனை மக்கள் எதிர்க்கலாயினர். புரட்சியாளர்கள் மீண்டும் தலை தூக்க ஆரம்பிக்கவே, கடுமையான அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. சிறைகளும், தூக்கு மரங்களும் புரட்சியை நிறுத்திவிடும் என அரசு எதிர்பார்த்தது. 1905ஆம் ஆண்டு ஜனவரி மாதம் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கிலிருந்த புத்திலோவ் (Putilov) என்னும் தொழிற்சாலையில் பணிபுரிந்து வந்த 12,000 தொழிலாளர்களும் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்த வேண்டி வேலை நிறுத்தம் செய்தனர். ஏனைய ஆலைத் தொழிலாளர்களும் அவர்கட்கு ஆதரவாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். நான்கு நாட்களுக்குள் அது ஒரு பொது வேலை நிறுத்தமாக மாறியது. தொழிலாளர் மத்தியிலும் ஆட்சியாளரிடத்திலும் செல்வாக்குப் பெற்றிருந்த கேப்பன் பாதிரியார், தொழிலாளர்கள் அமைதியுடன் ஊர்வலமாகச் சென்று தங்களது குறைபாடுகளையும், கோரிக்கைகளையும் நாட்டின் தந்தையான மன்னரிடம் முறையாகத் தெரிவிப்பதே சாலச்சிறந்தது என ஆலோசனை கூறினார். அவரது ஆலோசனையை அனைவரும் ஏற்றுக் கொண்டனர். கேப்பன் பாதிரியார் விருப்பப்படியே கோரிக்கைகளையும், குறைபாடுகளையும் கூறும் விண்ணப்பம் ஒன்று தயார் செய்யப்பட்டது. அவ்விண்ணப்பத்தில் தங்கட்கு வாக்குரிமை அளிக்கப்படவேண்டும் எனவும், அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்படவேண்டுமெனவும், தங்கள் சுதந்திரம் காக்கப்பட வேண்டுமெனவும் பேச்சுரிமை, எழுத்துரிமை, கல்வி கற்கும் உரிமையனைத்தும் காக்கப்பட வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

குருதிகொட்டிய ஞாயிறு (Bloody Sunday)

1905, ஜனவரித் திங்கள் 22-ஆம் நாள் குளிர்கால அரண்மனையில் தங்கியிருந்த மன்னரிடம் தங்கள் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் பொருட்டு பாரதியார் ஜார்ஜ்

கேப்பனின் தலைமையில் 1,50,000க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஊர்வலமாகப் புறப்பட்டனர். அந்த ஊர்வலத்தினர் இயேசுவின் திருவுருவச் சிலையையும், ஸார் மன்னனின் படத்தையும் கையில் எடுத்துக்கொண்டு, தாங்கள் ஸார் மன்னனின் குடிமக்கள் என்றும் தங்களது குறைகளை நீக்கவேண்டுமென்றும் கூறினார்கள். அவர்களைச் சந்திக்க மன்னர் துப்பாக்கியேந்திய படையொன்றை அனுப்பினார். தொழிலாளர்கள் புனித பீட்டர்ஸ்பர்கில் உள்ள குளிர்கால அரண்மனையை நெருங்கியதும் படையினர் அவர்களை நோக்கிச் சுட்டனர். ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொடூரமான முறையில் கொல்லப் பட்டனர். ஐயாயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமுற்றனர். எனவே அந்நாள் 'குருதி கொட்டிய ஞாயிறு' என்று அழைக்கப்படுகின்றது. தெருவில் தொழிலாளர்கள் சிந்திய இரத்தமே 1905-ஆம் ஆண்டு புரட்சியின் தொடக்கமாயிற்று.

பயங்கரமான அப்படுகொலையைப் பற்றிக் கேள்விப்பட்ட லெனின் வெளிநாட்டிலிருந்தவாறே 'ரஷ்யப் புரட்சி' என்னும் கட்டுரையை வெளியிட்டார். சூழ்நிலையைக் கண்ணுற்ற நிக்கோலஸ் சில அரசியல் சலுகைகள் வழங்க முன்வந்தார். புரட்சியைத் தொடர்ந்து தாராளக் கொள்கைகளில் நாட்டம் கொண்ட மிரஸ்கி பதவியை விட்டு விலகினார். அதனைத் தொடர்ந்து புலிஜின் என்பார் புதிய உள்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டு ஒரு 'தேசிய ஆலோசனை சபை' நிறுவுவதற்கானச் சட்டங்களைத் தொகுக்குமாறு ஆணையிடப்பட்டார். அவரது அறிக்கை ஆகஸ்டில் வெளியாயிற்று. அதன்படி 'டூமா' Duma என்னும் தேசிய சட்டமன்றம் ஒன்று நிறுவப்படும். அதில் சிந்தனையாளர்களும், தொழிலாளர்களும் வாக்குரிமை பெறவில்லை. மாறாக செல்வந்தர்கட்கும், நிலப்பிரபுகளுக்கும் மட்டுமே வாக்குரிமை கிட்டியது. சட்டமன்றம் வெறும் ஆலோசனை மன்றமாக இருந்ததே ஒழிய அதற்கு அதிகாரங்கள் கொடுக்கப்படவில்லை. எனவே, தங்கள் அரசியல் உரிமைகளைப் பெறவேண்டி தொழிலாளர்கள் மீண்டும் போராடலாயினர். பிரதிநிதிகளின் முதலாவது சோவியத் (சபை) அமைக்கப்பட்டது. இதில் மென்ஷிவிக்குகளின் தலைவராய் இருந்த குருஸ்தலேவ் நோசரும், யூத சமூக ஜனநாயகக் கட்சியைச் சார்ந்த டிராட்ஸ்கியும் இடம் பெற்று விரைவில் புரட்சிகரமான தொழிலாளர் இயக்கங்கள் ஒன்றாக இணையவேண்டிய அவசியத்தை வலியுறுத்தினர்.

அக்டோபர் அறிக்கை (October Manifesto)

ஒருங்கிணைந்த மக்களின் பெரும் எதிர்ப்பைக் கண்ணுற்ற நிக்கோலஸ் அக்டோபர்த் திங்கள் 17ஆம் நாள் தம் அரசியல் கொள்கையறிக்கையை வெளியிட்டார். அதன்படி பத்திரிக்கைச் சுதந்திரமும், கருத்துச் சுதந்திரமும், பொது நலனுக்காகக் கூட்டம் கூடும் உரிமையும், கட்சிகளையும், தொழிற்சங்கங்களையும் அமைத்துக் கொள்ளும் உரிமையும் அளிக்கப்பட்டது. ஆனால், இவை எதுவும் நடைமுறையில் செயல் படுத்தப்படவில்லை. டூமா சற்று விரிவாக்கப்பட்ட வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட நிரதிநிதிகளைக் கொண்டிருந்தது. டூமா என்னும் ரஷ்யப் பாராளுமன்றம் அனைத்து அதிகாரங்களுடன் கூடிய ஒன்றாகவும் சட்டங்களை ஏற்படுத்தவோ, மாற்றியமைக்கவோ அதிகாரம் பெற்றதாயும் விளங்கும் என்றும் கூறப்பட்டது. பிரிட்டிஷ் காபினெட்டைப் போன்று அமைச்சர் குழு ஒன்று அமைக்கப்பட்டது. புதிய பிரதம அமைச்சராக விட்டே என்பார்

நியமிக்கப்பட்டார். ரஷ்யா முற்றிலும் அரசியலமைப்புக்குட்பட்ட ஒரு நாடாகவே வெளிப்பார்வைக்குக் காட்சியளித்தது. புரட்சி தன் லட்சியத்தில் வெற்றி பெற்றுவிட்ட தாகவே சில தாராளக்கொள்கையினர் கருதினர். ஆனால், இது தற்காலிகமானதாகவே இருந்தது.

ஆனால், வலதுசாரிகளாயிருந்த சிலர் இச்சலுகைகளை அறவே வெறுக்கலாயினர். உள்துறை அமைச்சரான துர்னோவோவின் முழு ஆதரவுடன் 'கறுப்பு நூற்றுவர்' (Black Hundred) என்னும் குற்றவாளிகளான குண்டர்களைக் கொண்ட சமூக விரோத அமைப்பு ஒன்றை நிறுவிப் பயங்கரச் செயல்களில் ஈடுபடலாயினர். புரட்சி மனம் கொண்டோர் பயங்கர தாக்குதல்களுக்குள்ளாயினர். நாட்டின் பல பாகங்களிலும் யூதர்கட்கு எதிராகப் பாதகச் செயல்கள் பல நடத்தப்பட்டன. லெனின் பதிப்பித்த 'புதுவாழ்வு' என்னும் பத்திரிகை புரட்சியைத் தூண்டியது. எட்டு மணி நேர வேலை நாள் வேண்டுமெனக் கோரிப் போராடுமாறு தொழிலாளர்களை செயின்ட் பீட்டர்ஸ்பர்க் சோவியத் தூண்டியது, கிரான்ஸ்டாம், விளாடிவாஸ்டாக், செவஸ்டர்போல் ஆகிய இடங்களிலிருந்த கடற்படை வீரர்கள் கலகம் செய்யலாயினர். கீவ், கார்கோவ், தர்கிஸ்தான், அசர்பைசன், இர்குட்ஸ்க், மாஸ்கோ போன்ற இடங்களிலும் போர் வீரர்கள் புரட்சிக் கொடி தூக்கினர். ஆனாலும், அவையனைத்தும் அடக்கப்பட்டுவிட்டன. நவம்பர்த் திங்கள் 27-ஆம் நாள் பீட்டர்ஸ்பர்க் சோவியத்தின் தலைவரான குருஸ்தலேவ் நோசர் கைது செய்யப்பட்டார். அடுத்த மாதமே முதல் சோவியத்தும் கலைக்கப்பட்டது. மக்களும் புரட்சியின் மீது நம்பிக்கை இழந்தனர். அரசும் பிரான்சு நாட்டில் இருந்து ஏராளமாகப் பணம் கடன் பெற்று புதுத் திட்டங்களைத் தீட்டியது.

1905 – ஆண்டு புரட்சியின் விளைவுகள்

1905-ஆம் ஆண்டு தொடக்கத்தில் நிலைமை ஓரளவுக்குச் சீர்திருத்தியது. புரட்சி இயக்கங்களும் கட்டுக்கடங்கின. புரட்சி ஒரே காலத்தில் நடத்தப்படாமல் போய்விட்டது. அதன் தோல்விக்கு முதல் காரணமாகும். புரட்சி இயக்கங்களிடையே பிளவுகளும், பிரிவுகளும் அதிகரித்திருந்த நிலையில் மன்னராட்சியை விரும்பிய செல்வந்தர்களும், பூர்சுவாக்களும் உறுதியுடன் ஒன்றுபட்டுப் புரட்சியை எதிர்த்தனர். பின்லாந்து மக்கள் ஓரளவுக்குப் பயன் அடைந்தனர். அங்கு அனைவரையும் ரஷ்ய மயமாக்கும் முயற்சி வெற்றி பெறாது போயிற்று. சட்டமன்றம் ஒன்று புதிதாகத் திருத்தியமைக்கப்பட்டது. விகிதாச்சார பிரதிநிதித்துவத்திற்கு வழி செய்யப்பட்டது. ஏறத்தாழ வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டதோடு, பெண்களுக்கும் வாக்குரிமை யளிக்கப்பட்டது. 1905 ஆண்டு புரட்சி ரஷ்யாவின் சர்வாதிகார ஆட்சியை மாற்றி ஓரளவு மக்கள் உரிமைபெற வாய்ப்பு அளித்தது. எனினும் அரசியலமைப்புக்குட்பட்ட மன்னராட்சியால் ரஷ்ய மக்கள் எந்தவிதமான பயனும் பெறவில்லை. காரணம் மன்னர் மக்களுக்கு உரிமைகள் வழங்க உண்மையாக ஆர்வம் உள்ளவராக விளங்கவில்லை. மேலும் மன்னரின் பரந்த பேரரசில் வாழ்ந்த மக்களும் மன்னரின் போக்கை கண்டிக்கும் அளவிற்கு அரசியல் விழிப்புணர்ச்சி அடைந்திருக்கவில்லை.

மன்னர் மக்களுக்கு அளித்த அக்டாபர் அறிக்கையை, அவருக்கு வரைந்து கொடுத்தது விட்டே என்னும் அமைச்சராவார். அவர்தான் அப்போது அமைக்கப்பட்ட அமைச்சரவையின் தலைவராக (President) இருந்தார். அவர் தனது அமைச்சரவையில் ஊராட்சிமன்ற உறுப்பினர்களையும், தாராளக்கொள்கையுடையோரையும் சேர்த்துக் கொள்ள முயன்று தோல்வியுற்றார். காரணம் அவரால் அமைக்கப்பட்ட அமைச்சரவை அதிகாரஇன ஆட்சியாய் (bureaucratic government) அமைந்தது. மேலும் 1905-ஆம் ஆண்டு புரட்சியின் விளைவாக இருசபைகளுடைய சட்டமன்றம் ஏற்படுத்தப்பட்டது. பேரரசு டூமா (State Duma) என்னும் கீழ்சபையும். பேரரசு கவுன்சில் (State Council) எனும் மேல்சபையும் ஆகும். ஆனால் அமைச்சர் பேரரசருக்குதான் பொறுப்பு உடையவராய் விளங்கினார். சட்டமன்றத்திற்கல்ல 1905-ஆண்டு புரட்சிக்குப்பின் மக்களுக்கு சில அடிப்படை உரிமைகள் வழங்கப்பட்டன. ஆயினும் உரிமைகள் பெரும் கட்டுப்பாடுகளுக்கிடையே தான் வழங்கப்பட்டிருந்தது. இறுதியாக 1905-ஆம் ஆண்டுப் புரட்சி 1917-ஆம் ஆண்டுப்புரட்சிக்கு வழி வகுத்தது. 1905-ஆம் ஆண்டுப் புரட்சி மக்களுக்கு பொருளாதார நல்வாழ்வு ஏற்படுத்தாமல் இருந்தாலும் மன்னனது வல்லாட்சியை ஓரளவு கட்டுப்படுத்தி, அரசியலமைப்புக்குட் பட்ட மன்னர் ஆட்சியாக மாறியது. மேலும் மக்கள்புரட்சிக் கருத்துக்களைப் பரப்ப ஓரளவு உரிமை பெற்றனர். மக்கள் பொருளாதார விடுதலை கிடைக்க வேண்டி மீண்டும் மீண்டும் தங்களை புரட்சிக்காகத் தயார்படுத்திக் கொண்டனர். தங்கள் போராட்டத்தின் இறுதிக்கட்டமாக மாஸ்கோ சோவியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆயுதப் புரட்சியும் செமியனோவ்ஸ்கி படைப்பிரிவினால் நசுக்கப்பட்ட பிறகு 1905ஆம் ஆண்டின் முதலாவது புரட்சியும் முடிவுற்றது.

பயிற்சி வினா

1905-ஆம் ஆண்டு ரஷ்யப் புரட்சி பற்றி ஒரு கட்டுரை வரைக.

பாடம் – 14 புரட்சி – எதிர்ப்புரட்சி – சட்டமன்றங்கள் – நிக்கோலசின் சீர்திருத்தங்கள் – சைபீரியப் புரட்சி – நான்காம் சட்டமன்றம்

1905-ஆம் ஆண்டு ஏற்பட்ட புரட்சியின் விளைவால் தலைமை அமைச்சர் விட்டே சட்டமன்றத் தேர்தல் சட்டம் ஒன்றை 1906 ஏப்ரலில் கொண்டு வந்தார். அதன்படி 1906 மார்ச்சில் 'டூமா' என்ற சட்டமன்றத்திற்கு தேர்தல் நடைபெற்றது. முதல் டூமா காடெட்கள் 150 இடங்களையும், திருதோவிக்குகள் 100 இடங்களையும், அக்டோபர் வாதிகள் 17 இடங்களையும் பெற்றனர். இவ்வுறுப்பினர்கள் தீவிரவாதிகளாகவும், சீர்திருத்த வாதிகளாகவும் இருந்தமையால் இவர்கள் நிலத்தை நாட்டுடைமையாக்க வேண்டும் என்றும், வயது வந்தோருக்கு வாக்குரிமை, பாராளுமன்ற ஆட்சிமுறை, நேரடித் தேர்தல் ஆகியவற்றையும் வலியுறுத்தினர். இதனைக் கண்ணுற்ற அமைச்சர் இம்மன்றத்தை ஒரு புரட்சி மன்றம் எனக் கருதினார். எனவே முதல் டூமா கூடிய இரண்டரை மாத காலத்திற்குள்ளாக 1906 ஜூலை 9-இல் மன்னர் கலைத்துவிட்டார்.

ஏமாற்றமடைந்த காடெட், திருதோவிக் ஆகிய கட்சி உறுப்பினர்கள் பின்லாந்துக்குச் சென்று ஒத்துழையாமை இயக்கம் ஒன்றினை நடத்தினர். அதன்படி அவர்கள் மக்களைப் படையில் சேரவேண்டாம் என்றும், வரியேதும் கட்டவேண்டாம் என்றும், அரசினர் சேமிப்புக் கணக்குகளில் பணமேதும் போடவேண்டாம் என்றும், அனைத்துத் துறைகளிலும் அரசோடு ஒத்துழைக்க வேண்டாம் என்றும் வேண்டுகோள் விடுத்தனர். இதனால் புதிய பிரதமராக வந்த ஸ்டோலிபின் என்பவர் எதிர் நடவடிக்கைகள் மேற்கொண்டார். இதன்படி ஒத்துழையாமை இயக்கத்திற்கு வேண்டுகோள் விடுத்தோர். தேர்தலில் நிற்பதற்குத்தகுதி அற்றோராக்கப்பட்டனர். புரட்சியாளர்களுக்கு மரண தண்டனை அளிப்பதற்கென இராணுவ வழக்கு மன்றங்கள் நிறுவப்பட்டன. இதனால் ஆயிரக்கணக்கானோர் ஆறுமாத கலத்திற்குள் மரண தண்டனை அடைந்தனர். இதனால் புரட்சியாளர்கள் பொங்கி எழுந்து பிரதமர், அதிகாரிகள், அரசு ஆதரவாளர்கள் ஆகியோரை கொலை செய்யத் தலைப்பட்டனர். தலைமையமைச்சர் ஸ்டோலிபின் என்பவரைக் கொலை செய்ய நடந்த முயற்சி வெற்றி பெறவில்லையாயினும், அவர் அரண்மனையில் இருந்த 27 பேர் கொலை செய்யப்பட்டனர். பிரதமரின் முயற்சியால், அரசின் ஆதரவாக எதிர்புரட்சியாளர்களின் இயக்கம் ஒன்றினைத் தோற்றுவித்தனர். அதற்கு 'ஐக்கிய பிரபுக்கள் சங்கம்' (United Nobility) என்று பெயர்.

1906 நவம்பரில் சட்டம் ஒன்று இயற்றி, விவசாயிகள் தங்கள் விவசாயக் கூட்டமைப்பிலிருந்து எப்போது வேண்டுமானாலும் விலகிக் கொள்ளலாம் என்றும், விவசாயி தன் சொந்தப் பொறுப்பில் வைத்திருந்த நிலத்திற்கு நிலவரிப் பட்டா கொடுக்கவும் வழிவகை செய்தது. கூட்டமைப்பில் பரம்பரைச் சொத்தாக இருந்த நிலங்களை இனி தாங்கள் குடும்பத்தின் பரம்பரைச் சொத்தாக மாற்றிக் கொள்ளலாம். விவசாயிகள் புரட்சி செய்வதைத் தடுக்கவே இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

விவசாயிகள் பழைமை விரும்பிகள், எதிர்ப்புரட்சியாளர்கள் அரசுக்கு விசுவாசமானவர்கள் என எண்ணியிருந்த மன்னரின் நம்பிக்கையை முதலாவது சட்டமன்றம் தூள் தூளாக்கியது. இந்நிலையில் 1907-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இரண்டாவது டூமா சட்டமன்றம் கூட்டப்பட்டது. இச்சட்டமன்றத்தின் மொத்த உறுப்பினர்கள் 516. இதில் திருதோவிக்குகள் 104 பேர், சமூக ஜனநாயகக் கட்சியினர் 65 பேர், சமதர்மப் புரட்சியாளர்கள் 37, காடெட்டுகள் 98, எஞ்சிய வேறு தேசியப் பிரதிநிதிகள். இம்மன்றத்தில் முதல் மன்றத்தை விட மிக தீவிரமான உறுப்பினர்கள் அதிகம் இருந்தனர். எனவே அரசின் விவசாயச் சட்டங்களை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டனர்.

1907-ஆம் ஆண்டு இலண்டனில் கூடிய அனைத்து ரஷ்ய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சி மாநாட்டில் பெரும்பாலான போல்ஸ்விக் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அம்மாநாட்டில் ஆயுதம் தாங்கிய தொழிலாளர் புரட்சியின் அவசியத்தையும், பிற்போக்கு அரசியல் கட்சிகளை எதிர்த்துப் போராட வேண்டியதின் அவசியத்தையும் வலியுறுத்தினர். இதனையறிந்த பிரதம அமைச்சர் ஸ்டோலிபின் இக்கட்சியினர் மீது ராஜதுரோக குற்றம்சாட்டி கட்சியைச் சேர்ந்த 55 சட்டமன்ற உறுப்பினர்களைக் கைதுசெய்து சிறைக்கு அனுப்பினார். மேலும் சட்டமன்றம் கூட்டப்பட்ட மூன்று மாத காலத்திற்குள் இரண்டாவது மன்றம் கலைக்கப்பட்டது. இதே வேளையில் தேர்தல் சட்டம் திருத்தி அமைக்கப்பட்டது. இதன்படி மொத்த உறுப்பினர்களில் பாதிப்பேரை நிலஉடைமையாளர்களும், பிரபுக்களும் தேர்ந்தெடுக்க வகை செய்யப்பட்டது. நான்கில் ஒரு பகுதியினரை மட்டும் தான் விவசாயிகளும் தொழிலாளர்களும் தேர்ந்தெடுக்க வழிவகை செய்யப்பட்டது. பழைய சட்டப்படி 2000 பேருக்கு ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்த பிரபுக்கள் இனி 230 பேருக்கு ஒரு பிரதிநிதி வீதம் தேர்ந்தெடுப்பர். முன்பு 30,000 பேருக்கு ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்த விவசாயிகள் இனி 60,000 பேருக்கு ஒரு பிரதிநிதி என்று தேர்ந்தெடுப்பர். இதன்மூலம் அரசு ஆதரவாளர்கள் சட்டமன்றத்தில் இடம் பெறுவர் என எதிர்பார்த்தனர். மூன்றாவது சட்டமன்றம் டூமா 1907ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கூட்டப்பட்டது. ஸ்டோலிபின் எதிர்பார்த்ததைப் போலவே இம்மன்றம் வலதுசாரிகள் பெரும்பான்மையைக் கொண்டதாக இயங்கிற்று. ரஷ்யமக்கள் ஆட்சி, ஐக்கிய பிரபுக்கள் சங்கம் ஆகியவற்றின் பிறநாட்டுப் பிரதிநிதிகளாக ஏறத்தாழ 150 பேர் இருந்தனர். இடதுசாரிகளான காடெட்டுகள் முற்போக்காளர்கள். திருதோவிக்குகள், சமூக ஜனநாயகவாதிகள் ஆகியோர் 120 இடங்களைப் பிடித்தனர். அக்டோபர்வாதிகள் தனிப்பெரும் கட்சியாக 154 இடங்களைப் பிடித்தனர். இச்சட்டமன்றம் நாட்டின் வரவு, செலவுத்திட்டம், இராணுவச் செலவினங்கள், கல்வி, இருப்புப்பாதைகள் ஆகியவற்றை விவாதித்தாலும் அரசின் முடிவு தான் இறுதியானதாக இருந்தது. சட்டமன்ற உறுப்பினர்களில் ஒரு சிலரே போல்ஸ்விக்குகள் ஆனமையால், அனைத்து ரஷ்ய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியைக் கலைத்துவிட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது.

தனது ஆட்சியை நிலையாக்கிக்கொள்ள எண்ணிய அரசு. கி.பி. 1907 முதல் 1909க்குள் ஏறத்தாழ 5000 பேருக்கு மரண தண்டனை விதித்தது. 30,000 பேர் கடும்சிறைவாசத்தைப் பெற்றனர். பல தொழிற்சங்கங்கள் தடைக்குள்ளாயின. பல

போல்ஸ்விக் தலைவர்கள் சிறை சென்றனர். நாடு திரும்பிய லெனின் மீண்டும் வெளிநாடு செல்ல வேண்டியவரானார். கட்சித் தாவல்கள் நடைபெற்றன. புரட்சி வெற்றியடையக் கூடும் என்று நம்பி போல்ஸ்விக் கட்சியில் இருந்த பலர் வெளியேறி வலதுசாரிகளாயினர். சமதர்மப் புரட்சியாளர் கட்சியின் புரட்சிப் படைப்பிரிவு தலைவராக இருந்த எவ்னோ ஐசக் ஓர் இரகசியக் காவல்துறைப் பிரதிநிதி என்று தெரிந்தவுடன் புரட்சியாளர்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டது.

இந்நிலையில் அரசு சில சீர்திருத்தங்களை மேற்கொள்ளலாயிற்று. ஐரோப்பிய ரஷ்யாவில் இருந்த மக்கள் பெருக்கத்தைக் குறைக்கப் பல ஆயிரக்கணக்கானோரை தூரகிழக்குப் பகுதிகளுக்கும், சைபீரியாவுக்கும் சென்று குடியேறும் வகையில் அரசு ஏற்பாடு செய்தது. ஏறத்தாழ இவ்வாறு 5 ஆண்டுகள் குடியேற்றம் நடை பெற்றது. அவர்கள் குடியேறிய இடம் வளமற்ற இடமாக இருந்தமையாலும், அவற்றைப் பண்படுத்தப் போதுமான கருவிகள் இல்லாமையாலும், அரசின் ஆதரவும் இல்லாமையாலும் மக்கள் இன்னல்களுக்குள்ளாயினர். தட்பவெப்ப நிலை உயிர் வாழ்வதற்கு ஏற்றவகையில் இல்லாமையால் பலர் நோயுற்று மாண்டனர். எனவே பலர் தங்கள் இருப்பிடங்களுக்கு மீண்டும் வந்தனர். தர்கிஸ்தான், மத்திய ஆசியா, பைக்கல் ஏரிப்பகுதிகளில் இருந்த வளமான நிலங்கள் அனைத்தும் ஏழை விவசாயிகளிடம் இருந்து பறிக்கப்பட்டு நிலப்பிரபுக்களுக்கும், உயர்குடி மக்களுக்கும், பெரும்வணிகர்களுக்கும் அளிக்கப்பட்டன. ஓரளவு சுதந்திரம் பெற்றிருந்த பின்லாந்து மக்கள் 1910ஆம் ஆண்டில் ரஷ்யச் சட்டமன்றம் இயற்றிய சட்டத்தின்படி, பின்லாந்தின் சட்டமன்றம் தனது சட்டமியற்றும் அதிகாரத்தினை இழந்தது. 1911ஆம் ஆண்டில் சட்டமன்றம் கூடாதபோது பல சட்டங்கள் மன்னரால் நடைமுறையில் செயல்படுத்தப்பட்டன. போலந்தில் நில உடைமையாளர்கள் வசமிருந்த நிலங்கள் பறிக்கப்பட்டு ரஷ்ய மயமாக்கும் கொள்கை புகுத்தப்பட்டது. கல்வித்துறையில் யூதர்கள் மீது விதிக்கப்பட்ட தடை மேலும் அதிகரித்தது. அரசின் பிரித்தாளும் கொள்கை ஓரளவு வெற்றி பெற்றது என்றே சொல்லலாம். சைபீரியா, தர்கிஸ்தான் போன்ற பகுதிகளில் விவசாய உற்பத்தி பெருகியது. உணவுப்பொருள், பருத்தி, பீட்ரூட், உருளைக்கிழங்கு ஆகியவற்றின் உற்பத்தியும் அதிகரித்தது. கால்நடைகளின் எண்ணிக்கையும் கூடுதலாயிற்று. கோதுமை போன்ற உணவுப்பொருள்களின் ஏற்றுமதி அதிகமாகியது. இருப்பினும் விவசாயம் உழுவோரின் உடல் உழைப்பையே நம்பி இருந்தது. 1913ஆம் ஆண்டில் ரஷ்யாவில் மொத்தம் 166 உழவு இயந்திரங்கள் இருந்தன. ஒரு விவசாய குடும்பத்தின் ஆண்டு சராசரி வருமானம் 250 ரூபிள். ஒரு தொழிலாளியின் வருமானம் 240 ரூபிள். எனவே விவசாயியும், தொழிலாளியும் மிகவும் இன்னலுக்குள்ளாயினர்.

1913ஆம் ஆண்டில் தொழிலாளியின் எண்ணிக்கை 60 இலட்சமாக உயர்ந்தது. இரும்பு, எஃகு, எண்ணெய், நிலக்கரி உற்பத்தியும் அதிகமாயின. வங்கித்துறை, வணிகத்துறை, இராணுவத்துறை ஆகியவற்றில் வெளிநாட்டுமூலதனம் அதிகமாயிற்று. இராணுவத்தை முன்னிட்டு நாட்டின் மேற்கு, தெற்கு எல்லைப் பகுதிகளில் புதிய இருப்புப் பாதைகள் அமைக்கப்பட்டன. இவற்றில் பெரும்பாலானவை தனியார்துறை நிர்வாகத்தில் இருந்தன.

வாணிபத்தைப் பொறுத்தமட்டில் ஏற்றுமதியைவிட இறக்குமதியே அதிகம் இருந்தமையால் நாட்டின் பொருளாதார நிலை மிகவும் மோசமான சூழ்நிலையிலே இருந்தது. காப்புவரிகள் அதிகமாக்கப்பட்டதால், விலைவாசி உயர்ந்து நுகர்வோர் பெரிதும் பாதிப்புக்குள்ளானார்கள். இவைதவிர மறைமுகவரிகளும் விதிக்கப்பட்டன. இவ்வரிகளில் பெரும்பகுதியை ஏழைமக்களே கட்டிவந்தனர்.

ஸ்டோலிபின் போராட்டங்களும் பகைமையும் இல்லாத அமைதியை இருபது ஆண்டுகாலத்திற்குக் கொடுத்தார். மேலும் முற்றிலும் மாறுபட்ட ரஷ்யாவை உருவாக்குவதாகக் கூறினார். இருப்பினும் அவர் விருப்பம் நிறைவேறவில்லை. கம்யூன் உறுப்பினர்களில் நான்கில் ஒரு பகுதியினர் கூட நிலத்தைப் பெற முடியவில்லை. நிலத்தை அளந்து பிரித்துக் கொடுப்பதற்கென அமைக்கப்பட்ட நில அளவைக் குழுவினர், உண்மையில் நிலப் பறிக்குழுவினராகவேமாறி, வளமான நிலத்தை செல்வந்தர்களுக்கே உரிமையாக்கித் தந்தனர். எனவே விவசாயிகள் அமைதியைக் காக்க முடியாத் நிலை ஏற்பட்டது. சட்டமன்றத்திடமும், தேசிய சபையிடமும் அவருக்கு நல்ல உறவு இல்லை. மன்னரின் ஆதரவும் குறைந்துவிட்டது. இந்நிலையில் 1911ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் நாள் இந்நாடக அரங்கில் அரசருக்கு அருகாமையில் அமர்ந்திருந்தபோது இரகசிய காவல்துறையைச் சேர்ந்த போக்ரோவ் என்பவரால் ஸ்டோலின் தாக்கப்பட்டு கொலை செய்யப் பட்டார். முன்னாள் நிதியமைச்சரான ரோகல்சோல் புதிய பிரதமரானார்.

இதற்கிடையே ரஷ்புதீன் எனும் மருத்துவரின் செல்வாக்கு அரசில் அதிகம் இருந்தது. 1904-ஆம் ஆண்டில் அரசருக்கு பிறந்த ஒரு ஆண் குழந்தை நோய்வாய்ப்பட்டதால் பல மருத்துவர்கள் குணப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர். பல மேல்நாட்டு மருத்துவர்களால் தீர்க்க முடியாத இந்நோயை ரஸ்புதீன் குணப்படுத்திவிட்டார். ஆகவே தன் மகனைக் குணப்படுத்திய காரணத்தால் அரசிக்கு அளவு கடந்த அன்பு ரஸ்புதீன் மீது ஏற்பட்டது. அரசரால், ரஸ்புதீனின் செல்வாக்கு அரசியிடம் வளர்வதையும், அரசியலில் ரஸ்புதீன் தலையிடுவதையும் தடுக்கமுடியவில்லை. அதுமட்டுமில்லாமல் அவனது நடத்தையும், பெண்கள் மாட்டு அவன் கொண்டிருந்த மோகமும் பெரும் புயலைக் கிளப்பின. சட்டமன்ற உறுப்பினர்களும்,, செனட் நீதிபதிகளும், உயரதிகாரிகளும் முயன்றும்கூட அவனைக்கட்டுபடுத்த இயலாது போயிற்று.

ரஷ்ய அரசியலில் நிலப்பிரபுக்கள் ஆதிக்கம் செலுத்தினர். பெரும் பொருளாதார நலிவுக்கு உள்ளான மக்கள் அமெரிக்கா, கனடா ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளில் குடியேறலாயினர். அறிவியல் அறிஞர்களும் சிந்தனையாளர்களும் மீண்டும் அரசியலில் ஆர்வம் காட்டினர். கலகத்தில் ஏற்பட்ட மாணவர் கொந்தளிப்பை அடக்க காவல்துறையினர் பணிக்கப்பட்டனர். இதனை எதிர்த்து 21 பேராசிரியர்கள் தங்கள் பதவியை விட்டு விலகினர். 1910-ஆம் ஆண்டு முதல், தாரகை எனும் பத்திரிகை புரட்சியாளர்களின் புதுமை ஏடாயிற்று. 1912-ஆம் ஆண்டு பிராவ்தா எனும் நாளிதழ் வெளியாயிற்று. இதே ஆண்டு ஜனவரியில் அனைத்து ரஷ்ய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் மாநாடு பிரேகு நகரில் கூடியது. இம்மாநாட்டில் தான் போல்ஸ்விக்களும், மென்சிவிக்களும் முறைப்படி மீண்டும் ஒன்றிணைந்து ஒரே கட்சியாகச் செயல்படத் தொடங்கினர். லெனின் தலைமையில் கட்சியின் செயற்குழு செயல்பட்டது.

சைபீரியப் புரட்சி

சைபீரியாவில் பெரும் வங்கிகளும், வெளிநாட்டு தொழில் அதிபர்களும் மூலதன மிட்டு நடத்திவந்த லீனா தங்கவயல்கள் இருந்தன. நிர்வாகிகளின் சுரண்டலும், பொறுப்பற்ற செயல்களும் தொழிலாளர்களை வதைத்தன. தொழிலாளர்கள் முழங்காலளவு பனி நீரில் நின்று கொண்டு 12 மணி நேரத்திற்குமேல் உழைக்க வேண்டியிருந்தது. அவர்கள் குடிசைகளிலே வாழ்ந்தனர். கொடுக்கப்பட்ட உணவுப்பொருட்களும் உண்ணத் தகுதியற்றவை. எனவே தொழிலாளர்கள் மகிழ்ச்சியாக இல்லை. அவர்கள் வெறுப்புகளைக்காட்டியபோது தங்கவயல் தொழிலாளர்கள் பன்றிகள், அவர்கள் எதையும் தின்னலாம் என்று நிர்வாகிகள் கூறினர். எனவே தொழிலாளர்கள் தாங்கள் வேலை நிலையை மாற்றவேண்டி அமைதியான முறையில் ஊர்வலமாக 1912 ஏப்ரல் 4ஆம் நாள் சென்றனர். ஊர்வலமாகச் சென்ற இவர்கள்மீது துப்பாக்கி பிரயோகம் செய்யப்பட்டது. இதில் 270 பேர் கொல்லப்பட்டனர். 250 பேர் கடும் காயமுற்றனர். இது குறித்து சட்டமன்றத்தில் கேள்வி எழுந்தபோது உள்துறை அமைச்சர் மகரோவ் 'அது அவ்வாறுதான் நடந்தது, எதிர்காலத்திலும் அவ்வாறே நடக்கும்' என்றார்.

எனவே மாணவர்களும் தொழிலாளர்களும் வேலைநிறுத்தங்களை மேற் கொண்டனர். வேலைநிறுத்தத்தில் 4 லட்சம் தொழிலாளர்கள் பங்குபெற்றதோடு அவ்வாண்டின் தொழிலாளர்கள் தினமான மேதினம் கொண்டாடப்பட்டது. இதனைத் தொடர்ந்து பல வேலைநிறுத்தங்கள் நடைபெற்றன. 1912இல் 10 இலட்சமாகவும், 1913இல் 12 லட்சமாகவும், 1914இல் 15 லட்சமாகவும் போராடியவர்களின் எண்ணிக்கை உயர்ந்தது. இந்நிலையில் மூன்றாவது சட்டமன்றத்தின் முழுப்பதவி காலம் முடிந்து நான்காம் (டூமா) சட்ட மன்றத்திற்கு தேர்தல் வந்தது. இத்தேர்தலில் அக்டோபர் வாதிகள் 97 இடங்களையும், வலதுசாரிகள் மொத்தமாக 184 இடங்களையும், காடெட்டுகளும் முற்போக்காளர்களும் 126 இடங்களையும், கெரன்ஸ்கின் தலைமையிலான திருதோவிக்குகள் 10 இடங்களையும் சமூகஜனநாயகக் கட்சியின் 14 இடங்களையும் பெற்றனர்.

இப்புதிய சட்டமன்றம் சில புதிய நடவடிக்கையை மேற்கொண்டது. அமைதி காக்கும் நீதிபதிகள் மீண்டும் நியமனம் செய்யப்பட்டனர். ரோமனோவ் அரசமரபினர் ஆட்சிபீடம் ஏறிய 300வது ஆண்டு விழாவைக் கொண்டாட என்று குற்றவாளிகளுக்குப் பொது மன்னிப்பு அளிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்ட அரசியல்வாதிகள் அனைவரும் தாயகம் திரும்ப அனுமதிக்கப்பட்டனர். ஆனால் லெனின் மட்டும் நாடு திரும்ப அனுமதிக்கப்படவில்லை. 1914இல் தாராள மனப்பான்மை கொண்டிருந்த கோகல்சோவ் பதவியிலிருந்து நீக்கப்பட்டு பழைய பிற்போக்காளரான சோர்முகின் புதிய தலைமையமைச்சராக நியமிக்கப்பட்டார். கல்வி அமைச்சரான காரசோவின் பிற்போக்குக் கொள்கையால் கல்வித் துறையிலும் புரட்சி ஏற்படத் தொடங்கிற்று.

பயிற்சி வினாக்கள்

1) நிக்கோலஸின் சீர்திருத்தங்களையும், சீர்திருத்தம் ஏற்படுவதற்கான சூழ்நிலைகளையும், சட்டமன்றங்கள் பற்றியும் ஒரு கட்டுரை வரைக.

2) ரஷ்ய சட்டமன்றமான டூமா பற்றி ஒரு கட்டுரை வரைக.

பாடம் – 15 முதல் உலகப்போருக்கு முன் ரஷ்யாவின் வெளிநாட்டுக் கொள்கை

ரஷ்ய – ஜெர்மனி உறவு

பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்தே ரஷ்யாவும் பிரஷ்யாவும் நெருங்கிய அரசியல் உறவுகளைக் கொண்டிருந்தன. முதலாம் வில்லியமும், இரண்டாம் அலெக்ஸாந்தரும் உறவினர்களாக இருந்ததால் நெருங்கிய உறவுநிலை நீடித்தது. பிரெஞ்சுப் புரட்சியாளர்கள், ரஷ்யச் சூனியவாதிகள், ஜெர்மானிய சமூக ஜனநாயக வாதிகள், ஆகியோருக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ள விரும்பிய முப்பேரரசர்களும் 1872இல் பெர்லினில் கூடினர்.

ஆனால் 1877-ஆம் ஆண்டின் ரஷ்ய துருக்கியப் போருக்குப்பின் உறவுநிலை சீர்குலையத் தொடங்கியது. பெர்லின் மாநாட்டின்போது ஜெர்மனி ஆஸ்திரியாவை ஆதரித்து நிற்கவே ரஷ்ய - ஜெர்மானியப் பகையுணர்வு முளைவிடத் தொடங்கியது. அதைத் தொடர்ந்து 1879இல் ஜெர்மனியும் ஆஸ்திரியாவும் கூட்டு உடன்பாடு ஒன்றைச் செய்து கொண்டன. அதன்படி, இரு நாடுகளில் ஏதேனும் ஒன்று ரஷ்யாவால் தாக்கப்பட்டால் இருநாடுகளும் இணைந்து எதிர்க்க வேண்டும். ரஷ்ய உதவியோடு வேறு ஒரு நாடு தாக்குதலைத் தொடங்கினாலும் அதே போல் இணைந்து செயல்படவேண்டும் என உறுதி செய்யப்பட்டது. இது முற்றிலுமாக ஒரு ரஷ்ய எதிர்ப்பு உடன்பாடேயாகும்.

வெகு விரைவிலேயே இருவர் கூட்டில் இத்தாலி 1882-இல் இணைந்ததோடு, மூவர் கூட்டாகியது (Triple Alliance). பிரான்சு இத்தாலிக்குச் சொந்தமான டுனீசியாவை ஆப்பிரிக்காவில் கவர்ந்து கொண்டதால் அதனை மீட்கும் பொருட்டு ஜெர்மனியின் உதவியை இத்தாலி நாடியது. மூவர் கூட்டுறவு ஏற்பட்ட பின்னரும் கூட பிஸ்மார்க் ரஷ்யாவுடன் நட்புக் கொள்ளவே விரும்பினார். மேற்கத்திய ஜனநாயக நாடான பிரான்சும், கிழக்கத்தியப் பேரரசான ரஷ்யாவும் கூட்டுறவு கொள்ளக்கூடாது என்பதே பிஸ்மார்க்கின் அவா. ஆகையால் தான் முப்பேரரசர்கட்கிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்ட பின்னரும் அவர்கள் பிற்போக்குக் கொள்கைகளைக் கடைப்பிடிக்க மீண்டும் உறுதிபூண்டனர். இப்பொழுது அம்மூன்று நாடுகளுள் ஏதேனும் ஒன்று போரில் ஈடுபட்டால் மற்ற இரு நாடுகளும் நடு நிலை வகிக்க ஒப்புக்கொண்டன. மூன்றாண்டுகட்குப்பின் அது முடிவுற்றபோது ஜெர்மனியும், ரஷ்யாவும் தங்கட்குள் மறைவாக 'மறு காப்புறுதி உடன்பாடு' ஒன்றைச் செய்து கொண்டன. 1888-இல் ஜெர்மனிய மன்னராகப் பதவியேற்ற இரண்டாம் வில்லியம் அவ்வுடன்பாட்டைப் புதுப்பிக்க விரும்பாததால் 1890-இல் இயற்கையாக அவ்வுடன்பாடு செல்லாத் தன்மையினையடைந்தது.

ரஷ்ய – பிரான்சு உறவு

1870-ஆம் ஆண்டைய பிராங்கோ - பிரஷ்யப் போருக்குப் பின் ரஷ்யாவும், பிரான்சும் உறவுகொள்ளத் தொடங்கின. அல்ஸேஸ். லொரேன் ஆகிய பகுதிகளை

ஜெர்மனியிடம் இழந்த பிரான்சு தனிமைப்படுத்தப்பட்ட நிலையிலிருந்து மீள விரும்பி ரஷ்யாவின் நட்பைப் பெற விரும்பியது. வலிமை வாய்ந்த ஜெர்மானியப் பேரரசு ஒன்று தனக்கெதிராக வளர்வதை வெறுத்த பிரெஞ்சு அரசின் புதிய கொள்கைகளும் அதன் அதிகரித்த படை வலிமையும் ரஷ்யப் பேரரசருக்கு மனநிறைவளித்தன. இரு அரசுகளும் இராஜ தந்திரக் குறிப்புகளைப் பரிமாறிக் கொள்ள அவர் இசைந்தார். இறுதியில் ரஷ்யாவும் பிரான்சும் இருவர் கூட்டு ஒன்றைச் செய்து கொண்டன. 1894-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 4ஆம் நாள் அவ்வுடன்பாடு இரு நாடுகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு செயல்முறைக்கு வந்தது. ஆயினும் அவ்வுடன்பாடு பற்றிய விதிகள் 1895இல் தான் வெளியுலகுக்குத் தெரிய வந்தது. அவ்வுடன்பாட்டின்படி,

1. ஜெர்மனியோ அல்லது ஜெர்மனியின் உதவியுடன் இத்தாலியோ, பிரான்சைத் தாக்க நேர்ந்தால், ரஷ்யா பிரான்சின் உதவிக்கு வரவேண்டும்.

2. ஜெர்மனியோ அல்லது ஜெர்மனியின் துணையுடன் ஆஸ்திரியாவோ, ரஷ்யாவைத் தாக்கினால், பிரான்சு ரஷ்யாவின் உதவிக்கு வரவேண்டும்.

3. மூவர் கூட்டுறவு உடன்பாடு செய்துகொண்டுள்ள நாடுகளோ அல்லது அவற்றில் ஒரு நாடோ தனது படைபலத்தைப் பெருக்குமானால் ரஷ்யாவும், பிரான்சும் உடனடியாக ஒரேசமயத்தில் படைகளைத்திரட்டி எல்லைப் பகுதிகட்கு அனுப்ப வேண்டும்.

4. இரு நாடுகளும் முழு ஆயுத பலத்துடன் படைகளையனுப்பி மேற்கிலும், கிழக்கிலுமாக ஜெர்மனியை நெருங்குவதின் மூலம் ஒரே சமயத்தில் இரு முனைப்போரை எதிர்கொள்ளவேண்டிய சூழ்நிலையில் ஜெர்மனி இருக்க வேண்டும்.

5. அமைதிக்காலத்தில் மூவர் கூட்டுறவு Triple Alliance நாடுகளின் படைவலிமை குறித்து இரு நாடுகளும் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்ள வேண்டும்.

6. இரு நாடுகளும் எதிரி நாடுகளுடன் தனித்தனியே சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளுதல் கூடாது.

ஆயுத அமைதிக் காலம் (Period of Armed Peace)

1898இல் ரஷ்யப் பேரரசரான இரண்டாம் நிக்கோலஸ் ஹாலந்திலுள்ள ஹேக் நகரில் ஒரு சமாதான மாநாடு கூட்டினார். உலக நாடுகள் அமைதிக் கோட்பாட்டினைக் கடைப்பிடிக்க வேண்டுமென வலியுறுத்தியதே அம்மாநாட்டின் சிறப்புச் செயலாகும். ஆனால், அதன் விளைவு வேறுவிதமாக அமைந்தது. பெரும் வல்லரசுகள் தங்கட்குள் சக்திமிக்க கூட்டுறவுகளை உருவாக்கிக்கொண்டன. அமைதியைக் காக்கவெனத் தங்களது ஆயுத வலிமையை அதிகரித்துக்கொண்டன. பாதுகாப்புப் போர்வையில் படை வலிமையைப் பெருக்கிக் கொண்டன. பொருளாதார நெருக்கடிகளும், போர்க் கருவிகளும் நாளுக்கு நாள் அதிகரித்த போதிலும், போர் மேகங்கள் சூழத்தொடங்கிய சூழ்நிலையிலும் அமைதி நிலவவே செய்தது. எனவே, அக்காலம் 'ஆயுத அமைதிக்காலம்' (Armed Peace) என்று அழைக்கப்படுகின்றது.

ரஷ்யா இங்கிலாந்து உறவு

1904-05ஆம் ஆண்டு நடைபெற்ற ரஷ்ய — ஜப்பானியப் போரின் விளைவாக சில மாற்றங்கள் நிகழ்ந்தன. ரஷ்யாவின் படைவலிமை சீர்குலைந்து போயிற்று. இங்கிலாந்தும் பிரான்சும் நெருக்கமான தொடர்பு கொள்ள விழைந்தன; இதுவரையிலும் ஐரோப்பிய அரசியலில் ஏகாந்தத் தனிமையைக் கடைப்பிடித்துவந்த இங்கிலாந்து 1904ஆம் ஆண்டு பிரான்சுடன் இருவர் நட்புறவு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது. ரஷ்ய - ஜப்பானியப் போரின் போது ரஷ்யக் கடற்படை, ஆங்கிலக் கப்பல் ஒன்றினை ஜப்பானியக் கப்பல் எனத் தவறாகக் கருதி அதனைத் தாக்கியது. பின்னர் தவற்றை உணர்ந்த ரஷ்யா மன்னிப்புக் கேட்டதோடு இழப்பீட்டுத் தொகையையும் அளித்தது. ஏற்கனவே பிரான்சுடன் உடன்பாடு செய்து கொண்டிருந்த ரஷ்யா இப்போது இங்கிலாந்துடனும் உறவு கொள்ள விரும்பியது. பிரான்சும் அதற்குத் துணை புரிந்தது. 1907இல் இங்கிலாந்தும் ரஷ்யாவும் நட்புறவு உடன்பாடு ஒன்றைச் செய்து கொண்டன. அத்தத்தொடர்ந்து இங்கிலாந்து பிரான்சு, ரஷ்யா ஆகிய மூன்று நாடுகளும் முக்கூட்டு (Triple Alliance) நட்புறவு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டன.

மத்தியக் கிழக்குப்பகுதியில் ரஷ்யாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே நீண்ட காலமாக இருந்து வந்த ஆதிக்கப் போட்டி ரஷ்யாவுக்கு மற்றொரு அபாயமாக இருந்து வந்தது. அதனைத் தவிர்ப்பதன் மூலம் உலக அரங்கில் தன் நிலையை உயர்த்திக்கொண்டு பால்கன் நாடுகளின் விவகாரங்களில் தன் ஆதிக்கக் கொள்கையை விரிவாக்க இயலும் என ரஷ்யா நம்பியது. இறுதியாக 1907ஆம் ஆண்டு ஆகஸ்டு 31-ஆம் நாள் ஆங்கிலோ - ரஷ்ய நட்புறவு ஒப்பந்தமாயிற்று. அவ்வுடன்பாடு மத்தியகிழக்கு, திபெத், ஆப்கானிஸ்தானம், பாரசீகம், சம்பந்தமாக இருநாடுகளும் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகளை உறுதிப்படுத்தியது.

இதன்படி;

1. திபெத்தின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட இரு நாடுகளும் முயலுதல் கூடாது. அந்நாட்டின் மீதான சீனாவின் ஆதிக்கம் ஒப்புக்கொள்ளப்படும்.
2. ஆப்கானிஸ்தானம் இங்கிலாந்தின் செல்வாக்குக்குட்பட்ட பகுதியாகவே இருக்கும்.
3. பாரசீகத்தின் வடபகுதி ரஷ்யாவில் செல்வாக்கிற்குட்பட்ட பகுதியாகவும், தென்பகுதி இங்கிலாந்தின் செல்வாக்கிற்குட்பட்ட பகுதியாகவும் விளங்கும்.

பால்கன் கொள்கை (Balkan Policy)

இங்கிலாந்துடனும் பிரான்சுடனும் நெருங்கிய உறவுகளை வளர்த்துக் கொண்ட ரஷ்யா, அடுத்துப் பால்கன் பகுதி நாடுகள் பால் தன் கவனத்தைத் திருப்பியது. மகாபீட்டர் தொடங்கிவைத்த கருங்கடல் பகுதிக் கொள்கையை ரஷ்யா ஒரு போதும்

கைகழுவியது இல்லை. கருங்கடல் பகுதியைத் தன் கடற்படையின் செல்வாக்கில் வைத்துக் கொள்ளவும், ஜலசந்திகளையும், கான்ஸ்டான்டிநோபிளையும் தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளவும் அது விழைந்தது. அப்பகுதியில் ரஷ்யக் கடற்படையின் ஆதிக்கம் நிலைக்குமானால் ஆஸ்திரிய இத்தாலியக் கடற்படை வலிமையைத் தகர்க்க உதவக்கூடும் என்ற நம்பிக்கையுடன் இங்கிலாந்தும் பிரான்சும் தன் கருங்கடல் கொள்கையை ஆதரிக்கவும் செய்யும் என நம்பியது. அதனைத்தொடர்ந்து மத்திய தரைக்கடல் பகுதியிலும் கடற்படைத்தளம் உருவாக்கிக்கொள்ள இயலுமென ரஷ்யா எதிர்பார்த்தது. இந்த அடிப்படையில் ரஷ்யாவும், பிரான்சும் 1912-இல் கடற்படை மாநாடு ஒன்றில் கலந்துகொண்டன. அம்மாநாட்டின் இறுதியில் மத்தியதரைக்கடல் பிரான்சின் ஆதிக்கத்திலும், வடகடல் இங்கிலாந்தின் ஆதிக்கத்திலும் கருங்கடலும் பால்டிக்கடலும் ரஷ்யாவின் ஆதிக்கத்திலும் இருக்கவேண்டுமென முடிவு செய்யப்பட்டது.

பால்கன் கூட்டணி (The Balkan League)

துருக்கியப் பேரரசு சிதைந்ததால் கிரீஸ், செர்பியா, பல்கேரியா ருமேனியா ஆகியவை தனி நாடுகளாயின. ஆயினும் பல்லாயிரக்கணக்கான கிரேக்கர்களும், செர்பியரும், பல்கேரியரும், ருமேனியரும் துருக்கிய ஆஸ்திரிய ஆட்சியிலேயே அல்லற்பட்டனர். துருக்கிக்கும், இத்தாலிக்கும் ஏற்பட்டப் போரைப் பயன்படுத்திக் கொண்ட ரஷ்யா, பால்கன் நாடுகளிடையே தனது செல்வாக்கை வளர்த்துக்கொண்டது. பால்கன் நாடுகளிடையே ஒரு கூட்டணியை உருவாக்குவதன்மூலம் அப்பகுதியில் அரசியல் அமைதிக்கு அபாயம் நேரிடாதவாறு பாதுகாக்கவும், ஆஸ்திரியாவுக்கு எதிரான ரஷ்யப் போரில் பால்கன் நாடுகளின் ஆதரவினைப் பெறவும் ரஷ்யா முயன்றது. அத்தகைய கூட்டணி உருவானால் அதன் தாக்குதலிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள துருக்கியும் ரஷ்யாவின் துணையை நாட வேண்டியதிருந்தது.

பால்கன் பகுதியில் ஒரு கூட்டணி உருவானால் அது தனக்குப்பெரும் பயன் விளைவிக்கும் எனக்கண்ட ரஷ்யா அதற்கான முயற்சிகளை மேற்கொண்டது. செர்பியாவுக்கும் பல்கேரியாவுக்குமிடையே நிலவிய கருத்து வேறுபாடுகள் அகற்றப்பட்டதைத் தொடர்ந்து 1912 மார்ச் 13ஆம் நாள் இரு நாடுகளும் ஓரணியாய் இணைந்தன. துருக்கிக்கெதிராக உருவான பால்கன் கூட்டணி நாடுகளின் போர் நடவடிக்கைகளை முற்றிலும் ஆதரிப்பதாக ரஷ்யா உறுதியளித்தது.

முதல் பால்கன் போர் (The First Balkan War)

முதல் பால்கன் போர் 1912-ஆம் ஆண்டின் இலையுதிர் காலத்தில் தொடங்கியது. பால்கன் கூட்டணி நாடுகள் துருக்கிக்கெதிராகப் போர் தொடுத்து இருவார காலத்திலேயே பெரும் வெற்றி பெற்றன. போருக்கு முன்பே மாசிடோனியாவின் பெரும்பகுதியை பல்கேரியாவும் சிறு அளவிலான ஏட்ரியாட்டிக் கடல் பகுதியை செர்பியாவும் அடைவதென உடன்பாடு ஏற்பட்டிருந்தது. துருக்கிக்கெதிரான போரில்

கிர்க்கிளிஸ், லூல்பர்காஸ் ஆகிய போர்களங்களில் பல்கேரியாவும், குமனோவோ பகுதியில் செர்பியாவும் வெற்றி பெற்றன. இறுதியில் 1913-ஆம் ஆண்டு மே 30இல் இலண்டன் உடன்பாடு கையெழுத்தாகியது. அதன்படி எஞ்சியிருந்த தனது ஐரோப்பிய பகுதிகள் அனைத்தையும் துருக்கி இழந்தது. கிரீட்தீவு கிரேக்க நாட்டுடன் இணைக்கப்பட்டது. இலண்டன் உடன்பாட்டின்படி அல்பேனியா என்னும் புதிய நாடு ஒன்று உருவாக்கப் பட்டது. இது செர்பியாவுக்குப் பெருத்த ஏமாற்றத்தையளித்தது. ஆஸ்திரியாவில் பல்லாயிரக்கணக்கான செர்பியர்கள் இருந்ததால், செர்பியா பெரிய நாடாக மாறினும் அது ரஷ்ய ஆதிக்கத்திலேயே இருக்கும் என அஞ்சியது. ஏட்ரியாட்டிக் கடற்பகுதியேதும் கிடைக்காது போன செர்பியா மாசிடோனியாவில் அதிக நிலப்பரப்பைக்கோர பல்கேரியா மறுத்துவிட்டது, பால்கன் பகுதியில் ரஷ்யச் செல்வாக்கு வளருவதை விரும்பாத ஆஸ்திரியாவும், ஜெர்மனியும் கூட்டணி நாடுகளிடையே பிளவு உண்டு பண்ணலாயின. பல்கேரிய மன்னர் ஜெர்மானிய அரச குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்ததால் அது சாத்தியமாயிற்று. பால்கன் நாடுகளிடையே நிலவிய பரம்பரைப் பகையுணர்வும் அதற்கு துணை செய்தது. மாசிடோனியாவைப் பங்கிடும் விவகாரத்தில் தகராறு எழவே பல்கேரியாவுக்கும், செர்பியாவுக்குமிடையே இருந்து வந்த உறவு முறிந்து போயிற்று.

இரண்டாம் பால்கன் போர் (The Second Balkan War)

பால்கன் நாடுகளிடையே தோன்றி வளர்ந்த பகை 1913 ஆம் ஆண்டில் இரண்டாவது பால்கன் போராக மூண்டது. பல்கேரியாவின் வடமேற்குப் பகுதியில் ருமேனியர்கள் அதிகமிருந்ததால் அப்பகுதி தன்னைச் சேரவேண்டுமென ருமேனியா கோரவே அதனைப் பல்கேரியா ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது. எனவே, செர்பியாவுக்கு எதிராகப் பல்கேரியா போரில் இறங்கிய போது, செர்பியாவுக்கு ஆதரவாகக் கிரீசும், ருமேனியாவும் கலந்து கொண்டன. பல்கேரியாவைப் பழி வாங்கக் கருதிய துருக்கியும் போரில் கலந்து கொண்டது. ஆனால், கூட்டணி நாடுகள் பல்கேரியாவை எளிதில் தோற்கடித்தன. 1913-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 10-ஆம் நாள் புகாரெஸ்ட் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. முதல் பால்கன் போரின் மூலம் கிடைத்த நிலப்பகுதிகளையெல்லாம் பல்கேரியா இழந்தது. துருக்கிக்கு ஏட்ரியா நோபிளும், சிலநிலப்பகுதிகளும் கிடைத்தன. மாசிடோனியாவை ஏனைய நாடுகள் பகிர்ந்து கொண்டன.

ஜெர்மானிய எதிர்ப்பு (German Opposition)

இரண்டாம் பால்கன் போருக்குப்பின் ரஷ்யாவிற்கும் ஜெர்மனிக்குமிடையே இருந்த போட்டி மேலும் வலுவடைந்தது. இருபால்கன் போர்களின் மூலம் துருக்கி ஐரோப்பாவிலிருந்து கிட்டத்தட்ட வெளியேற்றப்பட்டு விட்டதால் செர்பியாமீது ஜெர்மனிக்கு விரோதம் வளர்ந்தது. துருக்கியுடன் உறவு கொண்டிருந்த ஜெர்மனி பெர்லின்

- பாக்தாத் ரெயில் பாதை அமைக்க முடிவு செய்திருந்தது. துருக்கி தன் ஐரோப்பியப் பகுதிகளை இழந்துவிட்ட நிலையில் அது நின்று போயிற்று. 1913-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் ஜெர்மானிய தளபதி லிமன்வான் சாண்டர்ஸ் என்பவர் கான்ஸ்டாண்டி நோபிளில் நிலை கொண்டிருந்த துருக்கியின் முதலாவது படைப்பிரிவிற்குத் தளபதியாக நியமிக்கப்பட்டார்; அதன்மூலம் தனக்கு ஏற்படக்கூடிய இராணுவ, அரசியல் பாதகங்களை முன்னிட்டுக் கடுமையாக ரஷ்யா எதிர்த்த போதும் இங்கிலாந்தும் பிரான்சும் அதனை ஆதரிக்கவில்லை. கடைசியில் ஜெர்மானிய தளபதி படைப் பிரிவிலிருந்து மாற்றப்பட்டு காவல்துறை இயக்குனராக நியமிக்கப்பட்டார். 1904-ஆம் ஆண்டு ஜெர்மனிக்கும், ரஷ்யாவுக்கும் ஏற்பட்டிருந்த வணிக உடன்பாட்டு விதிகள் ஜெர்மனிக்குச் சாதகமாக இருந்ததால் அது புதுப்பிக்கப்பட வேண்டுமென விரும்பிய போது ரஷ்யத் தொழில் அதிபர்களும், நிலப்பிரபுக்களும் அதனை எதிர்க்கலாயினர். எனவே முதல் உலகப்போர் மூளுவது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது.

பயிற்சி வினாக்கள்

1) முதல் உலகப்போருக்கு முன் ரஷ்யா கடைபிடித்து வந்த வெளிநாட்டுக் கொள்கையைப்பற்றி ஆய்க.

2) முதல் உலகப்போருக்கு முன்னால் இருந்த மூவர் நேசக்கூட்டில் ரஷ்யா எவ்வாறு இணைந்தது.

பாடம் – 16

முதல் உலகப்போரில் 1914–18 ரஷ்யாவின் பங்கு

1907ஆம் ஆண்டில் இங்கிலாந்து, பிரான்சு, ரஷ்யா ஆகிய நாடுகளுக்கிடையே நட்புறவு ஒப்பந்தம் நிறைவு பெற்றது. இதே போன்று முக்கூட்டு உடன்படிக்கையில் ஜெர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி ஆகிய நாடுகள் இருந்தன. இத்தகைய இரு வேறுபட்ட கூட்டு நாடுகளுக்கு இடையே பகைமை வளர்ந்து வந்தது. இப்பகைமை பாஸ்னியாவின் தலை நகரான செரோஜிவாவில் வைத்து ஆர்ச்டூக் பெர்டினாண்டு, அவர் மனைவி ஆகியோரைக் கொலை செய்து விட்டதால் உலகப் போராக உருவெடுத்தது. இக்கொலைக்கு செர்பியர் காரணம் என்று குற்றம் சாட்டி சில நிபந்தனைகளை விதித்தது ஆஸ்திரியா. இதற்கு செர்பியா ஒத்துக் கொள்ளாமையால் ஆஸ்திரியா செர்பியா மீது போர் தொடுத்தது. செர்பியா மக்கள் ஸ்லாவ் இனத்தவராக இருந்தமையாலும் கிரேக்க வைதீகக் கிருத்தவர்களாக இருந்தமையாலும் அவர்களைக் காக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்ட ரஷ்ய ஸார் நிக்கோலஸ், போரில் இறங்க முடிவு செய்து படையைத் திரட்ட ஆணையிட்டார். ரஷ்யா போரில் இறங்க வேண்டாமென ஜெர்மனி கேட்டுக் கொண்டும் போரில் இறங்கியதால் ஜெர்மனி செர்பியாவையும், ரஷ்யாவையும் தாக்கியது. 1914 ஜூலை 28இல் போர் தொடங்கியது. தொடங்கிய மூன்றாம் நாள் ஜெர்மனி பிரான்சையும் தாக்கியது. பெல்ஜியத்திற்குள் ஜெர்மானியப் படைகள் நுழைந்ததைத் தொடர்ந்து இங்கிலாந்தும் ஜெர்மனி மீது போர் நிலையை அறிவித்துப் போரில் இறங்கியது.

நிக்கோலஸ், ரஷ்யாவை போரில் ஈடுபடுத்துவதால் போராட்டங்களில் ஈடுபட்டுள்ள மக்களைத் திசை திருப்பலாம் என்றும் எண்ணினார். அவர் எண்ணியபடியே நாடு முழுவதும் பரவலாக இருந்த வேலை நிறுத்தங்கள் ஒருவாறு முடிவுற்றன. தேசிய உணர்வால் உந்தப்பட்ட மக்கள் பலர் மன்னருக்கு ஆதரவு தெரிவித்தனர். இருப்பினும் போர் தொடங்கிய அதே நாளில் பீட்டர்ஸ்பர்க் நகரில் 27,000 தொழிலாளர்கள் போருக்கெதிரான குரலை எழுப்பி வேலை நிறுத்தம் செய்தனர். சட்டமன்ற உறுப்பினர்களில் போல்ஸ்விக் உறுப்பினர்களைத் தவிர அனைவரும் அரசுக்கு ஆதரவு நல்கினர். போர் தொடங்கிய மூன்றாம் திங்கள் ஐந்து போல்ஸ்விக் உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு ஆர்டிக் பகுதியில் உள்ள துருகன்ஸ்க் மாவட்டத்துக்கு நாடு கடத்தப் பட்டனர். 'போரும் ரஷ்ய சமூக ஜனநாயகவாதிகளும்' என்ற தனது புத்தகத்தில் மன்னரின் போரே ஒரு உள்நாட்டுப் போராக மாறும் என்று லெனின் குறிப்பிட்டார். ஜெர்மனியின் மீது கொண்ட வெறுப்பின் காரணமாக ஜெர்மானிய மொழியின் தொனியைக் கொண்டிருந்த செயின்ட் பீட்டர்ஸ்பர்க் எனும் பெயரை பெட்ரோகிரேட் என ஸார் அரசு மாற்றியது.

தொடக்க காலத்தில் ஜெர்மனி பல வெற்றிகளைப் பெற்றது. இந்நிலையில் கிழக்கு பிரஷ்யாவில் ரஷ்யப்படைகள் போர் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தன. போதுமான பயிற்சியும், படைக்கருவிகளும் இல்லாமலேயே ஆரம்பத்தில் வெற்றியுடன் கிழக்குப் பிரஷ்யாவிற்குள் நுழைந்தன. கும்பினன் எனும் போர்க்களத்தில் ஜெர்மானியர்

தோற்றனர். ஆயினும் விரைவிலேயே ஜெர்மனி நிலைமையை தனக்குச் சாதகமாக மாற்றி அமைத்தது. ரஷ்யத் தளபதிகள் தங்களுக்குள் கம்பியில்லாத் தந்தி மூலம் பேசும் போது கூட ரகசியக் குறிப்புச் சொற்களைப் பயன்படுத்தாது நேர் மொழியிலேயே பேசிக் கொண்டனர். ஹண்டன்பர்க் எனும் ஜெர்மானியத் தளபதி ரஷ்யப்படைகளைத் தானென்பர்க் என்னுமிடத்தில் தோற்கடித்தார். இப்போர்களத்தில் ரஷ்யர்கள் இரண்டு லட்சம் போர் வீரர்களையும், 500 துப்பாக்கிகளையும் இழந்தனர். ஏனையோர் ரஷ்யாவிற்குப் பின் வாங்கினர். மார்ன் போருக்குப்பின் பெல்ஜியம் முழுவதும், பிரான்சின் சில பகுதிகளும் ஜெர்மானியர் கைக்கு வந்தது.

காலீசியா என்னுமிடத்தில் ரஷ்யப்படைகள் ஆஸ்திரியப் படைகளோடு மோதின. ஒரு மாதத்திற்கு மேலாக நடைபெற்ற இப்போரில் ஆஸ்திரியப் படைகள் முறியடிக்கப்படவே அப்படையினர் சம்போதியன் பகுதி நோக்கிப் பின்வாங்கியது. ஆஸ்திரியா ஏறத்தாழ 4 லட்சம் படைவீரர்களை இழந்தது. ஆஸ்திரியாவை முறியடித்து சைலிசியாவை நோக்கி ரஷ்யப்படை செல்லும் வேளையில் ஜெர்மானியப்படை ரஷ்யப் படைகளோடு மோதின. இரு நாட்டுப் படைகளுக்குமிடையே நீண்ட நாள் போர் நடைபெற்றன. 1914 அக்டோபர் மாதம் ஆஸ்திரியாவுக்கு ஆதரவாக துருக்கிப் போரில் இறங்கிற்று. எனவே ரஷ்யப்படைகள் துருக்கிக்குள் நுழைந்தன. ஜப்பான் நாட்டுத் துறைமுகமான கியாசௌகில் இருந்த ஜெர்மனி கப்பல்படையை விலக்கிக் கொள்ளுமாறு ஜப்பான் விடுத்த எச்சரிக்கையை ஜெர்மனி நிராகரித்ததால் ஜப்பான் நட்பு நாடுகளுடன் சேர்ந்து போரில் இறங்கிற்று. 1914ஆம் ஆண்டின் இறுதியில் போர் நட்பு நாடுகளுக்கு பாதகமாக இருந்தது.

1915ஆம் ஆண்டின் தொடக்கத்தில் முழுவதுமாக ரஷ்யாவைத் தோற்கடித்து கிழக்கு போர் முனையில் இருந்து விலக்கினால் தான் மேற்கு முனையில் இங்கிலாந்தையும், பிரான்சையும் தாக்குதல் எளிது என ஜெர்மனி கருதியது. இந்நிலையில் உள்நாட்டில் ரஷ்யர்களின் நிலை அரசை ஆதரிப்பதாய் இல்லை.

ரஷ்யப் போர்த்துறை அமைச்சரான சுகம்லீனா ஒரு திறமையற்றவர். அரசின் மேல் மட்டத்தில் ஊழல்கள் நிறைந்து காணப்பட்டன. வணிகர்கள், தொழிலதிபர்கள் தேசிய உணர்வுக்கு அப்பாற்பட்ட நிலையில் அதிக செல்வத்தைப் பெருக்க வேண்டுமென்ற நோக்கத்துடனே இருந்தனர். இத்தோடு போர் வீரர்களுக்குத் தேவையான ஆயுதங்கள், சீருடைகள், காலணிகள், உணவுப் பொருள்கள், ஆகியவையும் ஒழுங்காக கிடைக்கவில்லை. எனவே படைவீரர்கள் மிகவும் இன்னலுக்குள்ளாயினர். இராணுவத் தேவைகளைக் கவனிக்கும் பொறுப்பை 1915ஆம் ஆண்டு மே மாதம் போர்த் தொழிற்சாலைகள் மையக்குழு, அனைத்து ரஷ்ய ஊராட்சி மன்றக் கூட்டமைப்பு அனைத்து ரஷ்ய நகரக் கூட்டமைப்பு போன்ற நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இதனாலும் பலன் அதிகம் ஏற்படவில்லை. இந்நிலையில் ஜெர்மானியத் தாக்குதல் மிகப்பலமாக இருந்தது. காலிசியாவிலிருந்த ரஷ்யர்கள் ஜெர்மனியின் தாக்குதலை பொறுக்க முடியாமல் வெளியேறினர். ஜூலை, ஆகஸ்ட் திங்களில் கிழக்குப் பிரஷ்ஷீயாவிலும், போலந்திலும், ஜெர்மனியர் முன்னேறவே கடும் போருக்குப் பின் போலந்து, லிதுவேனியா, லாட்வியா, பைலோ ரஷ்யா ஆகிய பகுதிகளை ஜெர்மனியிடம்

ரஷ்யா இழந்தது. 1915ஆம் ஆண்டு போர் ரஷ்யாவிற்கு ஒரு பேரிழப்பாகும். இப்போரில் ஏறத்தாழ 35 லட்சம் பேரையும் மிக முக்கிய பகுதிகளையும் ரஷ்யா இழந்தது. ரஷ்ய படையில் மூன்றிலொரு பகுதியினர் ஆயுதங்களே இல்லாத நிலையில் போர்க்களத்தில் பணிபுரிந்தனர்.

போரில் ஏற்பட்ட பெருந்தோல்வியால் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளை ரஷ்ய மக்கள் மேற்கொள்ளலாயினர். தொழிலாளர்கள் பல இடங்களில் வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டனர். பெட்ரோகிரேடில் 70,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். 'கங்கத்' என்னும் போர் கப்பலிலிருந்த கப்பல் படையினர், போர் வெறுப்பைக் காட்டும் வண்ணம் கலகம் செய்தனர். ஆனால் அடக்கப்பட்டு விட்டனர். உள்துறை அமைச்சர் மகிலகோவ், போர்த்துறை அமைச்சர் சுகம்லினோவ் ஆகியோர் பதவி விலகினர். தளபதி அலெக்சயேவ் புதிய தரைப் படைத்தளபதியாகவும், தளபதி பொலவனோவ் புதிய போர்த்துறை அமைச்சராகவும் பதவியேற்றனர். இரண்டாம் நிக்கோலஸ் தம் ஒன்றுவிட்ட சகோதரர் வகித்து வந்த தலைமைப் பதவியைத் தாமே வகித்தார். ரஸ்புதீன் மீது நம்பிக்கை வைத்த உயர்மட்ட ஆட்சியாளர்கள் அவன் ஆலோசனைப்படி கூட சில போர் நடவடிக்கையை மேற்கொண்டனர். ரஸ்புதீனின் பரிந்துரையால் பலர் அமைச்சர்களாயினர். அவரது ஆதரவைப் பெற்ற ஸ்துர்டர் தலைமை அமைச்சரானார். சட்டமன்ற நடவடிக்கைகளையும் கூட பாராட்டியோ தாக்கியோ எழுத அனுமதிக்கப்பட்ட பத்திரிக்கைகள் ரஸ்புதீனின் ஒழுங்கற்ற நடவடிக்கைகளை எழுத அனுமதிக்கப்படவில்லை. சமயத்துறையிலும் ரஸ்புதீனின் செல்வாக்கு மேலோங்கி இருந்தது. எனவே ரஸ்புதீனை ஒழித்து கட்ட இளவரசர் யூரிபோவ், தமித்ரி கோமகன், யூரிஸ்கேவிச் ஆகியோர் திட்டமிட்டனர். 1916ஆம் ஆண்டு டிசம்பர் 26ல் புனிதபாசில் தேவாலயத்தில் இரண்டு மணி நேரம் இறைவழிபாடு நடத்திவிட்டு மாய்லி கால்வாய் பகுதியிலிருந்த ரஸ்புதீனின் மாளிகையில் நடைபெற்ற விருந்தில் கலந்துகொண்ட இளவரசர் யூசுபோவ் ரஸ்புதீனை கொலை செய்துவிட்டார்.

1916ஆம் ஆண்டு மேற்கு அரங்கில் வெர்டூன் போர்முனை தொடங்கப்பட்டபோது ஜெர்மனியின் வேகத்தை அப்பகுதியில் குறைக்கும் வண்ணம் வில்னா வட்டத்தைச் சேர்ந்த டிவின்ஸ்க் பகுதியில் ரஷ்யர்கள் ஜெர்மனிக்கெதிரான போரில் தோல்வி தழுவினார். மே திங்கள் ரஷ்யாவின் தென்மேற்குத் திசையில் ஆஸ்திரியாப் பகுதியில் நடைபெற்ற போரில் ஆஸ்திரேலியர்கள் தோல்வியடைந்து 4 லட்சம் பேரை இழந்தனர். நட்பு நாடுகளின் சார்பாக ருமேனியா போரில் இறங்கியது. ரஷ்யா வெற்றி பெற்றாலும் ரஷ்யத் தரப்பில் பலர் இறந்தனர்.

ஆஸ்திரியப் பகுதியில் அடைந்த வெற்றியைப் போலவே காகஸஸ் பகுதியிலும் ரஷ்யாவிற்கு வெற்றி கிடைத்தது. இருப்பினும் காகஸஸ் பகுதியில் போதுமான பின்பலம் இல்லாமையால் துருக்கியை முற்றிலும் தோற்கடிப்பது கடினமாயிற்று. போரின் முடிவுகள் ரஷ்யாவிற்கு சாதகமான சூழ்நிலையைத் தந்தாலும் போரினால் ஏற்பட்ட விளைவுகளை மக்கள் நேரடியாகச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. விவசாயிகள் பலர் போர்களத்திற்கு அனுப்பப்பட்டதால் உணவுப் பொருள்களின் உற்பத்தி குறைந்தது;

தொழிலாளர்களின் போராட்டத்தால் தொழில் உற்பத்தியும் குறைந்தது. போர்க்களத்தில் ஈடுபட்டோர் பலர் படையிலிருந்து பிரிந்து தலைமறைவாயினர். படையின் மனவலிமை யும் உடல் வலிமையும் மிகக் குன்றின. நாட்டின் பொருளாதாரம் சீரழிந்தது.

1916ஆம் ஆண்டு சோம் போரில் டாங்குகளை பயன்படுத்தி நட்பு நாடுகள் பெரும் வெற்றி பெற்றன. ஆனால் ருமேனியாவை ஜெர்மனி விழுங்கிவிட்டது. மே 31 இல் நடைபெற்ற ஜூட்லாந்து கடற்போரில் இங்கிலாந்து வெற்றி பெற்றது. இதே ஆண்டில் ரஷ்ய நாட்டில் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர். ரஷ்ய நாடும் நாளுக்குநாள் புரட்சிப் பாதையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. 1915இல், தேசிய முற்போக்காளர்கள், அக்டோபர்வாதிகள், மக்கள் விடுதலைக் கட்சியினர் போன்ற ஆறு வலதுசாரி கட்சியினர் இணைந்து 'முன்னேற்றக் குழு' ஒன்றை உருவாக்கிச் செயல்படலாயினர். இக் குழுவினர் மன்னரின் மனதை மாற்ற இயலாது என உணர்ந்து, அரண்மனைக்குள்ளும் அரசுக்குள்ளும் ஒரு சிறு புரட்சியைத் தோற்றுவிக்க முடிவு செய்தனர். மன்னரைக் கட்டாயமாகப் பதவித் துறக்கச் செய்து, அரசரின் இளவலை அரியணையில் ஏற்றி, அரசரின் சகோதரரான மைக்கேலை காப்பாளராட்சியை ஏற்குமாறு செய்வது எனத் திட்டமிட்டனர்.

1917ஆம் ஆண்டு தொடக்கமே போராட்டத்தில் ஆரம்பமானது. 1917 பிப்ரவரியில் 6,70,000 தொழிலாளர்கள் ரஷ்யாவில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இராணுவ அமைப்புகளிலும் புரட்சி ஏற்படத் தொடங்கியது. இதுவரை நடந்த போரில் ஏறத்தாழ 70 லட்சம் பேர் இறந்து விட்டனர். வேலை நிறுத்தங்கள், கலகங்கள், தெருக்கிளர்ச்சிகள், விவசாயிகளின் போராட்டங்கள், ஊர்வலங்கள் எனச் சங்கிலித் தொடர்பாகத் தொடர்ந்த நிகழ்ச்சிகள் 1917ஆம் ஆண்டு பிப்ரவரி 23ஆம் நாள் 'அகில உலக மக்கள்' நாள் அன்று புரட்சியாக உருவெடுத்தது.

இதேபோன்று தொழிலாளர்களும் வேலை நிறுத்தங்களில் பங்கு பெற்றனர், 1917 பிப்ரவரி 18ஆம் நாள் அரசின் புதிலோவ் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் தங்களுக்கு உண்ண ரொட்டி வேண்டும் என்று போராடவே அரசு கதவடைப்பு செய்தது. பிப்ரவரி 24-இல் படைவீரர்கள், கோசக்குகள், காவல் துறையினரின் எதிர்ப்பைச் சமாளித்த தொழிலாளர்கள் ஆகியோர் 'நெவ்ஸ்கிபிராஸ்பக்ட்' நோக்கிச் சென்றனர். பிப்ரவரி 25இல் போல்சிவிக் கட்சி 'அனைவரும் புரட்சியில் பங்கு கொள்க'! அனைவரும் தெருக்களுக்கு வருக! என்ற அழைப்பை விடுத்தது. இதனை எதிர்பார்த்த அரசு நிலைமையைச் சமாளிக்க 2,80,000 புதிய படை வீரர்களை வைத்திருந்தது. பிப்ரவரி 26இல் நிலைமை கட்டுக்கு அடங்கியிருப்பினும் பிப்ரவரி 27இல் பெட்ரோகிரேடில் இருந்த ஒலீனியன் படைப்பிரிவும், பிரிய பிரசன்ஸ்கி படைப்பிரிவும், லிதுவேனியன் படைப்பிரிவும் புரட்சியாளர்களோடு சேர்ந்து கொண்டன. புரட்சிப் படையினர் புரட்சி செய்த தொழிலாளர்களோடு இணைந்து தங்களது துப்பாக்கிகளை மன்னராட்சி மீது திருப்பினர். விசுவாசப் படையினரும் புரட்சியாளர் பக்கம் சேர்ந்து கொண்டனர். காவல்துறை நிலையங்களும், புகைவண்டி நிலையங்களும் புரட்சியாளர் வசமாயின. இந்நிலையினைக் கண்ட சட்டமன்றம் தற்காலிக சட்டமன்றம் ஒன்றை அவசரமாகக் கூட்டி அரசின் அதிகாரத்தை அதனிடம் ஒப்படைத்தனர். அதன் தலைவராக அலெக்ஸாந்தர் கெரன்ஸ்கி

நியமிக்கப்பட்டார். சட்டமன்றப் பிரதிநிதிகள் பேரரசரைச் சந்தித்து பதவி துறக்குமாறு பணிக்கவே, பேரரசரும் தன்னுடைய சகோதரரான மைக்கேலை அரசராக நியமித்து விட்டு பதவி துறந்தார். ஆனால் மைக்கேல் அப்பதவியை ஒத்துக்கொள்ளவில்லை.

ஆட்சி பீடத்தில் அமர்ந்த தாராளத் தன்மையை கொண்ட புதிய அரசு எதையும் எளிதில் செயலாற்றிடும் வகையின்றி இருந்தது. தொழிலாளர்களும், விவசாயிகளும் சோவியத்களில் பங்கு பெற்றிருந்தாலும் சமதர்மப் புரட்சியை ஏற்படுத்துதற்கான காலம் கனிந்திருக்கவில்லை என்றே கருதி ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றிக் கொள்ள அஞ்சினர். இத்தகைய அச்சங்களுக்கு இடங்கொடுக்காத லெனின் ஸ்விட்சர்லாந்திலிருந்து மார்ச் 27இல் புறப்பட்டு ஏப்ரல் 3 ஆம் நாள் மாலை ஜெர்மனி உதவியுடன் பெட்ரோகிரேடு வந்து சேர்ந்தார். லெனின் 'சமதர்ம புரட்சி வாழ்க' என்ற முழக்கங்களுடன் தம் நாடு வந்து சேர்ந்தார். தாரிதா மாளிகையில் உரையாற்றும் போது, 'இடைக்கால அரசு என்பது புரட்சியின் இறுதிக்கட்டமன்று; உலகப் போரினால், ரொட்டியும், சர்க்கரையும் கூட இல்லாமல் மக்கள் பட்டினி கிடக்க வேண்டியுள்ளது. எனவே போரை எதிர்த்துப் போர் செய்தல் வேண்டும் என்று பறை சாற்றினர். கெரன்ஸ்கியின் அரசு இக்கொள்கையில் திருப்திபடாத வகையில் லெனின் ஜெர்மனியின் உளவாளி என்று குற்றம் சாட்டிஅவரைக் கைது செய்ய வலை வீசியது. ஆகவே லெனின் தலைமறைவானார். அப்போது தான் 'அரசும் புரட்சியும்' என்ற நூலை எழுதினார். பின்னர் ட்ராட்ஸ்கியையும் தன்னோடு சேர்த்துக்கொண்டு போல்ஸ்விக் புரட்சி ஒன்றை அக்டோபரில் நடத்தி கெரஸ்கி அரசரை தூக்கி எறிந்துவிட்டு தன் தலைமையில் கம்யூனிச அரசை நிறுவினார்.

போல்ஸ்விக், அரசு அமைத்தவுடன் போரில் ரஷ்யாவை விடுவிக்க முயற்சிகள் மேற்கொண்டார். நட்பு நாடுகள் அனைத்திற்கும் சமாதானத்திற்கான வழிவகைகள் காணுமாறு வேண்டுகோள் விடுவிக்கப்பட்டது. பதில் ஏதும் கிடைக்காத காரணத்தால் லெனின் ஜெர்மனிய இராணுவ அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த ஜோஃபே என்பவர் தலைமையில் சோவியத் குழு அமைத்தார். பேச்சுவார்த்தை பிரஸ்ட் லிதோவ்ஸ்க் என்னுமிடத்தில் நடைபெற்றது. ஜெர்மனி கடுமையான நிபந்தனைகளை விதித்தது. ட்ராட்ஸ்கி போன்றோர் ஒத்துக்கொள்ளாத நிலையிலும், லெனின் உள்நாட்டில் அமைதியைக் காக்கவேண்டி ஜெர்மனி விதித்த விதிகளை ஏற்றுக்கொள்ளுமாறு பணித்தார். அதன்படி 1918ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் நாள் பிரஸ்ட் லிதோவ்ஸ்க் உடன்பாட்டில் சோவியத் ரஷ்யா கையெழுத்து போட்டு முதல் உலகப் போரிலிருந்து ரஷ்யாவை விடுவித்துக்கொண்டது.

பயிற்சி வினா

முதல் உலகப் போரில் ரஷ்யாவின் பங்கினை விளக்குக.

பாடம் – 17 1917–இல் ஏற்பட்ட பிப்ரவரிப் புரட்சி

கி.பி. 1917 ஆம் ஆண்டு உலக நாடுகளின் வரலாற்றில் மறக்க முடியாத மாபெரும் நிகழ்ச்சி நடைபெற்ற ஆண்டு ஆகும். பண்பாடற்ற அரசியலின் போலித்தனத்திற்கும், பாமரர்களின் மூடத்தனத்திற்கும், பழைமைவாதிகளின் குருட்டு நம்பிக்கைகளும், கோட்பாடற்று தட்டிக் கேட்பாரின்றி திரிந்த ஆட்சியாளர்களுக்கும் சமாதி கட்டிய ஆண்டு அது. இருபதாம் நூற்றாண்டில் எழுந்திட்ட எழுச்சிமிக்க நிகழ்ச்சி தான் 1917இல் நடைபெற்ற ரஷ்யப் புரட்சி. 18ஆம் நூற்றாண்டின் பிரெஞ்சுப் புரட்சிக்குப் பின்னர் மாபெரும் அரசியல் சமூக பொருளாதார மாற்றங்களைக்கொணர்ந்த நிகழ்ச்சி தான் 1917ஆம் ஆண்டு ஏற்பட்ட ரஷ்யப் புரட்சி. இங்கிலாந்து நாட்டில் நடைபெற்ற தொழிற்புரட்சி மற்றும் பிரான்சின் சமுதாயப் புரட்சியைக் காட்டிலும் ரஷ்யாவின் இந்த அரசியல் புரட்சி, அதன் தன்மையிலும் தாக்கத்திலும் மிகுந்தளவு மாற்றங்களை ஏற்படுத்தியது. பேராசிரியர் லிப்ஸன் குறிப்பிடுவது போல, 'ஸார் மன்னர்களின் அரசாங்கத்தின் அடித்தளம் முழுவதும் சிதறடிக்கப்பட்டது. இப்புரட்சிக்கான காரணம் ரஷ்யாவின் நீண்ட நெடுங்கால வரலாற்றில் அடங்கியுள்ளது. இப்புரட்சி வெடிப்பதற்குக் காரணம் யாதெனில், நிலை தடுமாறி முறைகெட்ட, யாருக்கும் பயனற்ற 'ஜார் மன்னர்களின் ஆட்சி, அரசியல் சூழ்நிலைகள், ஏற்றத்தாழ்வுகள் மலிந்த, குறைபாடு நிறைந்த சமுதாய அமைப்பு, முன்னேற்றத்திற்கான அடிப்படை சிறிதுமற்ற பொருளாதாரச் சூழல், சுய சிந்தனையற்று அறியாமை எனும் இருளில் மூழ்கிக் கிடந்த மக்கள்' ஆகியவைகளே முக்கிய காரணங்களாகும்.

அரசியலும் ஸார் மன்னர்களின் ஆட்சியும்

ரஷ்யா நாட்டு மன்னர் 'ஸார்' என அழைக்கப்பட்டார். ஜார் மன்னர்களின் ஆட்சி எதேச்சதிகாரத்திற்கும், கொடுங்கோன்மைக்கும் பெயர் போனது. மன்னர்களின் கைகளில் அதிகாரங்கள் பெருமளவில் குவிந்திருந்தன. இதைத்தவிர, திருச்சபையும் அரசுக்கு கட்டுப்பட்டுத்தான் இயங்கி வந்தது. அளப்பரிய அதிகாரங்கள் அளித்த அதிகார போதையில், ஸார் மன்னர்கள் கொடுங்கோலாட்சி புரியலானார்கள். ஸார் மன்னர்கள் மக்களின் நலன்களைப் பற்றி சிந்திக்கவில்லை. மக்களுக்கு அரசியல் சுதந்திரம் அல்லது வேறு எவ்விதச் சுதந்திரமும் வழங்கப்படவில்லை. அரசனே அனைத்து துறைகளின் ஏகபோக முதல்வனாக விளங்கினான். அரசனை மிஞ்சிய சக்தியோ, அதிகாரமோ யாருக்கும் கிடையாது. அரசன் இட்டதே சட்டம் கொண்டதே திட்டம். நீதி வழங்கும் நீதிபதியும் அரசன்தான். தம் குடிமக்கள் யாரையும் காரணமின்றி சிறையிடவும், சிரத்சேதம் செய்யவும் அவனுக்கு உரிமையுண்டு.

ஸார் இரண்டாம் அலெக்ஸாந்தரின் காலத்திலிருந்து ஸார் இரண்டாம் நிக்கோலஸ் காலம் வரைக்கும் ரஷ்யாவை ஆண்ட ஜார் மன்னர்கள் வல்லாட்சியும் கொடுங்கோலாட்சியும்தான் செய்து வந்தார்கள். மேலும் நாட்டில் அறிவு வளர்ச்சி ஏற்படாவண்ணம் தடைசெய்தும், புரட்சிக் கருத்துக்கள், இயக்கங்கள் ஆகியவற்றை நசுக்கியும் வந்தார்கள். சட்டமென்னும் இரும்புக்கரம் கொண்டு முற்போக்குவாதிகளையும், உரிமைக்குரல் எழுப்புவோரையும் மூர்க்கத்தனமாக அடக்கி அழித்தனர். இவ்வாறு

உள்நாட்டில் கொடுங்கோலாட்சிதனை கட்டவிழ்ந்து விட்ட ஸார் மன்னர்கள், வெளிநாடுகளோடும் சுமூகமான முறையில் நட்புணர்வு கொண்டிருக்கவில்லை. மாறாக காலத்திற்கு ஒவ்வாத தம் வெளிநாட்டுக் கொள்கைகளால் சதாசர்வகாலமும் போர்களில் ஈடுபட்டு மிகுந்த இழப்பிற்கும் அவமானத்திற்கும் உள்ளாயினர்.

சமூகப் பொருளாதார காரணங்கள்

ரஷ்ய நாட்டு சமுதாயம் ஏற்றதாழ்வுகள் நிறைந்த அமைப்பாக இருந்தது. நிலமானிய முறையை அடிப்படையாகக் கொண்ட சமுதாய அமைப்பில் பிரபுக்களும், செல்வந்தர்களும் அரசாங்க அதிகாரிகளும் ஏகபோக உரிமைகளை அனுபவித்து ஆடம்பர வாழ்க்கையில் ஈடுபட்டு வந்தார்கள். ஆனால் பெரும்பான்மையாக விளங்கிய குடியானவர்களும், சாதாரண பொதுமக்களும் அவலம் நிறைந்த வாழ்க்கையால் அல்லலுற்றனர். குடியானவர்களும் தொழிலாளர்களும் எவ்வித உரிமையுமின்றி ஆடு மாடுகளைப்போல் நடத்தப்பட்டார்கள். சொல்லொணா கொடுமைகளுக்கு ஆளான இவர்கள், வறுமையின் வடிவமாக காட்சி அளித்தார்கள்.

உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றித் தவித்தக் குடியானவர்களும் தொழிலாளர்களும் தங்கள் வருவாயின் பெரும்பகுதியை அரசுக்கு வரியாகச் செலுத்தி வந்தார்கள். ஏழ்மையில் பிறந்து ஏழ்மையில் வளர்ந்து ஏழையாகவே இறந்த இம்மக்களுக்கு வாழ்க்கையின் வறுமையைத் தவிர வேறொன்றும் மிஞ்சவில்லை. மேலும் பெருகிவந்த மக்கள் தொகை காரணமாக பசியும், பட்டினியும், பஞ்சமும் தலைவிரித்தாடத் துவங்கின. அரசனோ அரசாங்கமோ மக்களின் துயர்துடைக்க சிறிதளவும் எண்ணவில்லை. பருவம் பொய்த்த காலங்களில் பட்டினியால் ஆயிரக்கணக்கான மக்கள் ஆண்டுதோறும் இறந்தனர். ரஷ்ய நாட்டு விவசாய முறையும் மிகவும் பின் தங்கிய பழைய முறையாக இருந்தாலும், விவசாயத் துறை வளர்ச்சி குன்றிக் காணப்பட்டது. மேலும் கிராமப் புறங்களில் 'குலக்குகள்' என்றழைக்கப்பட்ட. அதிக வட்டிக்கு பணம் வழங்கி வந்த விவசாய முதலாளிகள் குடியானவர்களைத் துன்பத்திற்கு உள்ளாக்கினார்கள். இரண்டாம் நிக்கோலஸின் காலத்தில் தொழிற்புரட்சியின் பின்விளைவென ரஷ்யாவில் பல மாற்றங்கள் நிகழ ஆரம்பித்தன. புதிய தொழிற்சாலைகள், நவீன இயந்திரங்கள் கருவிகள், ரயில்வே போன்ற துறைகளில் மிகுந்தளவு முன்னேற்றம் ஏற்பட்டது. இதனால் தொழிற்சாலைகளில் பணியாற்றும் 'தொழிலாளர் வர்க்கம்' என்ற புதிய சமூகப் பிரிவு வளரத் துவங்கியது. மேலும் இவ்வளர்ச்சியின் காரணமாக தொழிலதிபர்கள், தொழிலாளர்கள் என்ற பிரிவினையும் வேறுபாடும் புதிதாகத் தோன்றி வளர்ந்தது. தொழிலாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வந்தாலும், இப்பிரிவினரும் ஏனைய பிரிவினரைப் போன்று எவ்வித உரிமைகளுமின்றி அடக்கி ஆளப்பட்டு வந்தார்கள். அதாவது குடியானவர்கள் நிலப்பிரபுக்களிடம் அடிமை வாழ்வு நடத்தினர். தொழிலாளர்கள் முதலாளி வர்க்கத்தினராய் சுரண்டப்பட்டு ஏழ்மையில் வாடினர். இவ்விரு சாராரும் தத்தம் வாழ்க்கையின் மேம்பாட்டிற்குரிய வழியாதென சிந்திக்கலாயினர். மனமருட்சியை நீக்கி சமுதாய அரசியல் புரட்சி ஒன்றுதான் பிரச்சனைகளைத் தீர்க்கக்கூடிய ஒரே வழி என்ற எண்ணம் அனைவருக்கும் ஏற்படலாயிற்று.

ஸார் இரண்டாம் நிக்கோலஸ்

ரஷ்ய சமுதாயம் பிரெஞ்சு சமுதாயத்தைப் போன்றுதான் காணப்பட்டது. முதலாம் உலகப்போர் மூண்டபோது ஸார் இரண்டாம் நிக்கோலஸ் மக்களின் நிலையுணராது தன்னிச்சைப்படி போரில் ஈடுபட்டு வந்தார். பஞ்சமும் பசிப்பிணியும் மக்களை வாட்டின. மன்னரோ மக்களுக்கு எதையும் உருப்படியாகச் செய்யவில்லை. நாடெங்கிலும் மக்கள் மனக்குறைவுடனிருந்தனர். அரசியல் அமைப்பில் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் அவை எவ்வித பலனையும் அளிக்கவில்லை. இருப்பினும் புரட்சியாளர்கள் மனம் தளர்ந்துவிடவில்லை. ரஷ்யாவின் அறிஞர்கள் தனிமனித உரிமை வேண்டும் என விரும்பினர். நிலமற்ற ஏழைகள் தங்கட்கு நிலங்கள் வேண்டுமெனக் கோரினர். சமூகப்புரட்சிக் கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் நிலமற்ற ஏழைகளே, அவர்கள் நிலப்பிரபுக்களின் சொத்துக்களை வன்முறையைப் பயன்படுத்தி பறிக்க வேண்டும் என்று கோரிக்கைகள் விடுத்தனர்.

இந்நிலையில் மன்னரையும் அரசியாரையும் தம் கைப்பாவைகளாக ஆட்டி வைத்த ரஸ்புடீனையும் மக்கள் வெறுத்தனர். ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டன. முதற்கண் ரஸ்புடீன் கொலை செய்யப்பட்டார்.

நாடு கொந்தளித்துக் கொண்டிருக்கக்கூடிய இந்நிலையில் மக்களின் உணர்ச்சிகளை ஒருமுகப்படுத்த பல எழுத்தாளர்களும், சிந்தனையாளர்களும் முயன்றனர். புஷ்கின். டால்ஸ்டாய், மாக்சிம் கார்க்சி போன்றோர் மக்களின் எண்ணங்களை ஒருமுகப்படுத்த முயன்றனர். அவர்கள் அன்றைய அரசியல், சமுதாயம் பொருளாதார அமைப்பு களிலுள்ள சீர்கேடுகளைத் துணிவோடு சுட்டிக்காட்டி புதுவாழ்விற்கு புரட்சியே சிறந்த வழியென முழக்கமிட்டனர். மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வெளியிடப்பட்ட பொருளாதார அரசியல் தத்துவ நூல்களிலுள்ள கருத்துக்களும் ரஷ்யர்களிடையே மெல்ல மெல்லப் பரவின. குறிப்பாக கார்ல் மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகிய அறிஞர்களின் கருத்துக்கள் இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தின.

ரஷ்யத் தொழிலாளர்களிடையே மார்க்சியக் கருத்துக்கள் பரவியிருந்தாலும் முதல் உலகப்போரினால் ரஷ்யாவுக்குத் தோல்வி ஏற்பட்டதாலும் 1917ஆம் ஆண்டு பிறந்ததும் புரட்சிக்கான அறிகுறிகள் பளிச்சென தென்பட்டன. நாட்டின் பல பகுதிகளிலும் இரண்டு மாதங்களுக்குள் 6,70,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இராணுவ அமைப்புகளிலும் புரட்சித் தீ கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. முதல் உலகப்போரில் 1917 வரையிலும் ஏறத்தாழ 70 லட்சம் மக்கள் கொல்லப்பட்டனர். 1905ஆம் ஆண்டுப் புரட்சி தோல்வியடைந்தாலும், அது நீறுபூத்த நெருப்பாகவே இருந்தது. போல்ஷ்விக்குகளின் மத்தியக் குழுவும், பெட்ரோகிராடு நகர்க் குழுவும் புதிய புரட்சிக்கான பாதையை அமைத்தன. வேலை நிறுத்தங்கள், கலகங்கள், தெருக் கிளர்ச்சிகள், விவசாயிகளின் போராட்டங்கள், ஊர்வலங்கள் எனச் சங்கிலித் தொடராகத் தொடர்ந்த நிகழ்ச்சிகள் 1917ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 23ஆம் நாள் புரட்சியாக வெடித்தது.

தொழிலாளர் பங்கு

மார்ச் திங்கள் 8ஆம் நாள் அரசின் கட்டுப்பாட்டிலிருந்த புதிலோவ் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் தங்கட்கு உண்ண ரொட்டி வேண்டுமென வேலையை விட்டு வெளிவரவே, அரசு கதவடைப்பு செய்தது. நார்வா, வைபர்க் மாவட்டங்களிலும் கிளர்ச்சி பரவியதையடுத்து, பெட்ரொகிராடு தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். பிப்ரவரி 24இல் படைவீரர்கள், கோசக்குகள் காவல்துறையினரின் எதிர்ப்பைச் சமாளித்த தொழிலாளர்கள் ஆகியோர் நெவ்ஸ்கி பிராஸ்பிகட், நோக்கிப் புறப்பட்டனர்.

பிப்ரவரி 25இல் போல்ஷவிக் கட்சி, அனைவரும் புரட்சியில் பங்கு கொள்க! அனைவரும் தெரு நோக்கி விரைக! என்ற அழைப்பை விடுத்தது. இதனைக்கண்ணுற்ற அரசு நிலைமையைச் சமாளிக்கும் பொருட்டு 2,80,000 போர் வீரர்களைப் போருக்குத் தயாராக வைத்திருந்தது. பிப்ரவரித் திங்கள் 26ஆம் நாள் தடையை உடைத்து ஊர்வலம் சென்ற தொழிலாளர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அன்றுமாலை தளபதி கபலோவ் நிலைமை கட்டுக்குள் அடங்கியிருப்பதாக மன்னருக்குச் செய்தி அனுப்பினார். ஆனால், பிப்ரவரி 27இல் பெட்ரோக்கிராடிலிருந்து கலீனியன் படைப்பிரிவும், [illegible] பிரசன்ஸ்கி படைப்பிரிவும், லிதுவேனியின் படைப்பிரிவும் புரட்சியாளர்களோடு சேர்ந்து கொண்டன. புரட்சிப் படையினர் புரட்சித் தொழிலாளர்களோடு இணைந்து தங்களது துப்பாக்கிகளை மன்னராட்சி மீது திருப்பினர். மேற்கொண்டு அனுப்பப்பட்ட அரசு விசுவாசப் படையினரும் புரட்சியாளர்களோடு சேர்ந்து கொண்டனர். காவல்துறை நிலையங்களும், புகைவண்டி நிலையங்களும் புரட்சியாளர் வசமாயின. அரசுக் கட்டிடங்கள் பலவற்றிலும் நெருப்பு பற்றி எரிமலையாயின. தளபதி கபலோவ் கடற்படையின் கட்டிடத்திற்குள் ஓடி ஒளியலானார். பிப்ரவரி 28இல் அதுவும் விழவே பெட்ரோகிராடு நகர் முழுவதும் புரட்சியாளர்களின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது.

சட்டமன்ற நடவடிக்கை

புரட்சியின் போக்கைக் கவனித்து வந்த டூமா சட்டமன்றம் அவசரமாகக் கூடி ஒரு தற்காலிகச் சட்டமன்றக் குழுவை உருவாக்கி அரசு அதிகாரத்தை அதனிடம் ஒப்படைத்தது. இத்தற்காலிகச் சட்டமன்ற ஆட்சிக் குழுவில் தீவிர வலதுசாரிகளுக்கும், தீவிர இடதுசாரிகளான போல்ஷ்விக்குகளுக்கும் இடமளிக்கப்படவில்லை. அதே சமயம் தாரிதா அரண்மனையில் தொழிலாளர் பிரதிநிதிகளைக் கொண்ட பெட்ரோகிராடு சோவியத்தின் தற்காலிக நிர்வாகக் குழுவொன்றும் அமைக்கப்பட்டது. இத்தொழிலாளர் சோவியத்தில், மென்ஷ்விக்குகளும், சமதர்மப் புரட்சியாளர்களும் பெரும்பான்மை யினராக இருந்தனர். அதன் தலைவராக மென்ஷ்விக் கட்சியைச் சார்ந்த செக்கெய் செசயும் துணைத்தலைவராக சமதர்மப் புரட்சியாளரான கெரன்ஸ்கியும் பணியாற்றினர். மார்ச் 2ஆம் நாள் அதன் பெயர் தொழிலாளர் படைவீரர் பிரதிநிதிகளின் சோவியத் என மாற்றப்பட்டது. இச்சபை அரசுப் பொறுப்பை ஏற்கத் தயங்கியதோடு சட்டமன்றக்குழுவே ஒரு பூர்சுவா ஜனநாயக அரசை அமைப்பதையும் ஆதரித்தது. பிப்ரவரி 28ஆம் நாள் அரசரின் அமைச்சர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். அந்நிலையிலும் மன்னர் நிக்கோலஸ், தளபதி ஐவனோவ் தலைமையில் ஒரு படையை பெட்ரோகிராடுக்கு அனுப்பி நிலைமையைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ள முனைந்தார். மார்ச் முதல் நாள் பெட்ரோகிராடு அடைந்த அப்படையும் புரட்சியாளர்களுடன் இணைந்து கொண்டது.

இரண்டாம் நிக்கோலஸின் பதவித் துறப்பு

மோகில்யோவிலிருந்து பெட்ரோகிராடு நோக்கிப் புறப்பட்ட ஸார் நிக்கோலசின் புகைவண்டி மாஸ்கோவிலேயே புரட்சிப் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்ட போது சட்டமன்றப் பிரதிநிதிகளான குக்கோவ், சுலகின் ஆகிய இருவரும் பேரரசரைச் சந்தித்து பதவி துறக்குமாறு வற்புறுத்தவே மார்ச் 2ஆம் நாள் மாலை பதவித்துறப்புப் பத்திரத்தில் கையெழுத்திட்டார். முதலில் தம் மனைவி அலெக்சியை மன்னராக்க விரும்பினாலும், இறுதியில் தம் சகோதரர் மைக்கேல் புதிய மன்னராக வேண்டும் என்று தம் பதவி துறப்புப் பத்திரத்தில் குறிப்பிட்டார். பதவித்துறப்புப் பத்திரத்துடன் இரண்டு பிரதிநிதிகளும் தலைநகர் திரும்பியபோது படை வீரர்களுள் சிலர் குக்கோவைப் புகைவண்டி நிலையத்திலேயே சிறைசெய்து தடுத்து நிறுத்தியபோது அவர் 'மன்னர் மைக்கேல் நீடூழி வாழ்க' என முழக்கமிட்டார். அதைப்பற்றிக் குறிப்பிட்ட ட்ராட்ஸ்கி குடியாட்சியை வெகு வேகமாக நாடு வாந்தி எடுத்துவிட்ட நிலையில், மன்னராட்சி மீண்டும் மக்கள் தொண்டைக்குள் ஒரு போதும் இறங்க முடியாது என்றார். புரட்சியாளரின் கரங்கள் வலுப்பெற்றிருந்த நிலையில் சட்டமன்றக் குழுவினர் அழைப்பு விடுத்த போதும் மைக்கேல் மன்னர் பதவியை ஏற்க மறுத்துவிட்டார். ரஷ்யாவின் மன்னர் பரம்பரை யாட்சி ஒரு மைக்கேல் மன்னருடன் தொடங்கி, மற்றொரு மைக்கேல் மன்னருடன் முடிவுற்றது. கோடை முழுவதும் சார்ஸ்கோசெலோ என்னுமிடத்தில் சிறைவைக்கப் பட்டிருந்த அரச குடும்பத்தினர் அங்கிருந்து நோபோல்ஸ்க் என்னுமிடத்திற்கு மாற்றப்பட்டனர். 1918ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 16ஆம் நாள் ஒகடரின்பர்க் என்னுமிடத்தில் மன்னரும் மன்னரின் குடும்பத்தினரும் கொலை செய்யப்பட்டனர். இவ்வாறு ரஷ்ய ரோமனோவ் குடும்பத்தின் ஆட்சி முடிவுற்றது.

புரட்சி படைத்த புதிய அரசு

மார்ச் 3-ஆம் நாள் சிற்றரசர் லியோவ் தலைமையில் தற்காலிக அரசு ஒன்று பதவி ஏற்றது. மில்யுகோவ் வெளிநாட்டு அமைச்சராகவும், குக்கோவ் போர்த்துறை அமைச்சராகவும், தரஸ்செங்கோ என்னும் பெரும் தொழிலதிபர் நிதி அமைச்சராகவும், கோவைக்லாவ் வணிக அமைச்சராகவும், நெக்ரசோவ் செய்தித் தொடர்பு அமைச்சராகவும், பெட்ரோகிராடு சோவியத்தின் துணைத்தலைவரான கெரன்ஸ்கி நீதித்துறை அமைச்சராகவும் பதவியேற்றனர். ஓர் அரசியல் அமைப்புச் சபை கூட்டப்படும் வரை புரட்சியின் பெயரால் பதவியில் இருக்க இத்தற்காலிக அரசுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால் பெட்ரோகிராடு சோவியத்துடன் இணைந்தே அரசு செயல்பட வேண்டும். அதைத்தொடர்ந்து நாடெங்கும் தொழிலாளர் மத்தியிலும், படையினர் மத்தியிலும் சோவியத்துகள் தோன்றலாயின, பெட்ரோகிராடு சோவியத் மார்ச் முதல் நாள் வெளியிட்ட தனது முதலாவது ஆணையில் ஆயுதங்கள் அனைத்தும் தேர்ந்தெடுக்கப் பட்ட படை வீரர் குழுவின் கட்டுப்பாட்டிலேயே இருக்க வேண்டுமெனவும், அதிகாரிகள் அவற்றை அவர்களிடம் ஒப்படைக்கக் கோரினாலும் அவ்வாறு ஒப்படைக்கப்படுதல் கூடாதெனவும் கூறியது. இதனால் ஜெர்மனிக்கு எதிரான போரைத் தொடர்ந்து தீவிரமாக நடத்த வேண்டுமெனத் தற்காலிக அரசு விரும்பியபோதும் அதைச் செயலாக்குவதில் பெரும் சிக்கல்கள் எழலாயின. உண்மையில் ஒரு வகையான இரட்டையாட்சி முறையே நடைமுறையில் இருந்ததெனக் கொள்ளலாம். அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு,

இத்தாலி ஆகிய போர் நட்பு நாடுகள் அனைத்தும் தற்காலிக அரசையே உண்மையான அரசென அங்கீகரித்திருக்க அரசின் ஆணைகளை நடைமுறையில் செயல்படுத்தும் அதிகாரம் சோவியத்துகளிடமே இருந்தன.

புதிய அரசின் நிலையும் லெனினின் வருகையும்

ஆட்சி பீடத்தில் அமர்ந்த தாராளக் கொள்கை கொண்ட புதிய அரசு எதையும் எளிதில் செயலாற்றிவிடும் வகையின்றி இருந்தது. புரட்சித் தொழிலாளர்களும், விவசாயிகளும் புதிய சோவியத்துகளில் இடம் பெற்றார்களே ஒழிய, பொறுமையாகவே இருந்தனர். சோவியத்துகளின் நிர்வாகக் குழுக்களில் சமதர்ம வாதிகளே பெரும்பான்மையினராக இருந்தும், சமதர்மப் புரட்சியை ஏற்படுத்துவதற்கான காலம் இன்னும் கனியவில்லை என்றே கருதினர். ஆனால், அக்கருத்துக்கு லெனின் இடம் கொடுக்கவில்லை. பிறவிப் புரட்சியாளரான அவர் எழுத்தாற்றலில் ஒப்பற்றவராய்உயர்ந்து நின்றார். ஒரு தலைவருக்கான தகுதிகள் அனைத்தும் பெற்றிருந்த லெனின் சுவிட்சர்லாந்தை விட்டு மார்ச் திங்கள் 27-ஆம் நாள் புறப்பட்டு ஏப்ரல் திங்கள் 3-ஆம் நாள் மாலை பெட்ரோகிராடு வந்து சேர்ந்தார். ஜெர்மனியின் பாதுகாப்போடு வந்து சேர்ந்தார். போருக்கு எதிரான குரல் முதலிலிருந்தே கொடுத்ததால் ஜெர்மனி லெனினுக்கு உதவி புரிந்தது. இவ்வுதவியின் காரணமாக லெனின் ஜெர்மனியின் ஏஜண்ட் என்று அவரது எதிரிகள் கூறலாயினர்.

பெட்ரோகிராடு ஊர்வலம்

படைவீரர்களும், விவசாயிகளும், தொழிலாளர்களுமாகப் பெருந்திரளாகக் கூடி நின்று லெனினை வரவேற்றனர். அனைத்து ரஷ்ய சோவியத்துகளின் முதலாவது மாநாடு 1917 ஜூனில் கூடியபோது 1000 பிரதிநிதிகள் கலந்து கொண்டதில் போல்ஸ்விக்குகள் 105 பேர் இருந்தனர். சமதர்மப் புரட்சியாளர்களும், மென்ஷ்விக்குகளும் இடைக்கால அரசுக்கும், அதன் தீவிரப்போர் நடவடிக்கைகளுக்கும் நிபந்தனையற்ற ஆதரவளிப்பதையே விரும்பினர். ஆனால் போல்ஷ்விக்குகள் அனைத்து அதிகாரங்களும் சோவியத்துகளுக்கே என்ற ஒலிகளை எழுப்பிய வண்ணம் ஜூன் 18ஆம் நாள் 5 இலட்சம் தொழிலாளர்களும், படைவீரர்களும் பெட்ரோகிராடு தெருக்களின் வழியே ஊர்வலம் வந்தனர்.

இடது சாரிக் கொள்கையைத் தழுவுதல்

தடைக்குள்ளாயிருந்த 'உண்மை' (Pravda) என்னும் செய்தித்தாள் மீண்டும் மார்ச் 5-முதல் மால்டோவை ·ஆசிரியராகக் கொண்டு வெளிவரத் தொடங்கியது. சைபீரியாவிலிருந்து ஸ்டாலினும், காமனேவும் மார்ச் 13ஆம் நாள் திரும்பி வந்ததைத் தொடர்ந்து இடைக்கால அரசுக்கான போல்ஷ்விக்குகளின் கொள்கையில் சிறிதளவு மாற்றம் ஏற்பட்டது. நாட்டுப் பாதுகாப்புக்கான போருக்கு ஆதரவளிப்பது, தொழிலாளர்கட்கு தினமும் எட்டு மணி நேர வேலை என்ற நிபந்தனைகளின் மீது அரசை ஆதரிக்க முன் வந்தனர். ஆனால், லெனின் இதை ஏற்றுக் கொள்ளவில்லை.

இடைக்கால அரசையும், பாராளுமன்ற குடியாட்சியையும் அவர் அறவே எதிர்த்ததோடு சோவியத்துக்களின் குடியாட்சியை மட்டுமே ஆதரிக்கலானார். லெனின் வந்து சேர்ந்த பின்னர் தான் புரட்சி இடது சாரி புரட்சியாயிற்று.

தொழிலாளர் இயக்கங்கள்

தொழிலாளர்கட்கும், விவசாயிகளுக்கும், படை வீரர்கட்கும் அமைதியும், நிலமும் அளிப்பதே லெனினின் குறிக்கோளாயிற்று. இடைக்கால அரசு சட்ட ஒழுங்கைக் காப்பாற்றவும் தவறியது. நாடு முழுவதும் குழப்பங்களும் போராட்டங்களும் மலிந்திருந்தன. தொழிற்சாலைகள் அனைத்தும் தொழிலாளர் நிர்வாகக் குழுவின் ஆதிக்கத்துக்குட்பட்டன. போலந்தும், பின்லாந்தும் விடுதலை பெற்றதோடு உக்ரெயின் பகுதியிலும் விடுதலை இயக்கமொன்று தோன்றி வளரலாயிற்று. அதன் வெளிநாட்டுக் கொள்கை தோல்வியுற்றதைத் தொடர்ந்து மில்யுகோவும், குச்கோவும் அமைச்சரவையிலிருந்து விலகினர். அமைச்சரவை மாற்றியமைக்கப்பட்டதோடு சமதர்வவாதிகள் அறுவர் அதில் இடம் பெற்றனர். கெரன்ஸ்கி, தரஸ் செங்கோ, நெக்ரசோவ் ஆகிய மூவரும் மிக முக்கிய முடிவுகளை மேற்கொள்ளும் வாய்ப்பையும் வலிமையையும் பெற்றிருந்தனர். ஜூலை 4ஆம் நாள் பெட்ரோகிராடு தொழிலாளர்களும் படைவீரர்களுமாக 5 லட்சம் பேர் போல்ஷ்விக்குகளின் தலைமையில் பெரும் போராட்டம் ஒன்று நடத்தினர். இதற்குள் அரசு லெனினைக் கைது செய்யும் முயற்சியில் இறங்கியது. போல்ஷ்விக் தலைவர்களைக் கைது செய்ய அரசு ஆணைப் பிறப்பித்தது. லெனின் மாறுவேடத்தில் பின்லாந்து சென்றார். அங்கு மரக்கிளைகளாலான மறைவிடமொன்றில் இருந்தவாறு 'அரசும் புரட்சியும்' என்ற நூலை எழுதினார். புரட்சியில் புகுந்துவிட்ட புதிய புயல் தற்காலிக அரசையும் விட்டு வைக்கவில்லை. விவசாய அமைச்சரான விக்டர் செர்னோவின் சமதர்மக் கோட்பாடுகளை ஏற்றுக் கொள்ள மறுத்த பிரதமர் லிவோவ் பதவி விலகியதைத் தொடர்ந்து கெரன்ஸ்கி புதிய பிரதமரானார்.

செங்காவலர் படை (Red Army)

புரட்சிப் போராட்ட அணியின் அண்மையில் இருக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்த லெனின் பெட்ரோகிராடிலிருந்து 60 கிலோமீட்டர் தொலைவிலிருந்த வைபோர் என்னுமிடத்தில் தங்கியிருந்தார். காலீசியப் (Galicia) பகுதியில் தொடங்கப்பட்ட தாக்குதல் தோல்வியில் முடியவே படைத்தலைமையை மாற்ற விரும்பிய கெரன்ஸ்கி, கோசக்குகளின் எளிய குடும்பத்திலே பிறந்து படையில் உயர் நிலையை அடைந்திருந்த தளபதி கார்னிலோவைப் புதிய படைத் தலைவராக்கினார். பெட்ரோகிராடில் புதியதோர் புரட்சிக்குப் போல்ஷிவிக்குகள் ஏற்பாடு செய்திருப்பதையறிந்து ஆகஸ்டு 24இல் ஒரு படையைத் தலைநகருக்கு அனுப்பி வைத்தார். எதிர்ப் புரட்சியாளர்கள் புரட்சியைத் தகர்க்க முடிவு செய்து விட்டார்கள் எனக் கருதிய பெட்ரோகிராடு சோவியத்குழு, போராட்டக் குழு ஒன்றை அமைத்து, ஆயுதம் தாங்கிய தொழிலாளர்களைக் கொண்ட

'செங்காவலர்' பிரிவுகளையும் அமைத்தது. நிலைமையை உணர்ந்த கெரன்ஸ்கி, தளபதி கார்னிலோவைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு தானே படைத்தலைமையை ஏற்று கொண்டார். இப்புதிய திருப்பத்தின் விளைவாக பெட்ரோகிராடு சோவியத்திலும், மாஸ்கோ சோவியத்திலும், போல்ஷ்விக்குகள் பெரும்பான்மையினராயினர்.

டிராட்ஸ்கியின் பங்கு

ஜூலை இறுதியில் கூடிய போல்ஷவிக் கட்சி மாநாடு லெனினின் அனைத்து அதிகாரங்களும் சோவியத்துகளுக்கே என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டது. அக்டோபர் முதல் நாள் போல்ஷவிக் கட்சியின் மத்திய குழுவிற்கு லெனின் எழுதிய கடிதம் ஒன்றில் 'புரட்சியின்றி ஆட்சியைக் கைப்பற்றுவது இயலாதெனின் உடனடியாக ஒரு புரட்சியைத் தொடங்குவது இன்றியமையாதது' என்று எழுதினார். தற்காலிக அரசும் செப்டம்பரில் ஜனநாயக மாநாடு ஒன்றினைக் கூட்டி 550 உறுப்பினர்களைக் கொண்ட 'குடியரசுச் சபை' என்ற ஆலோசனைக் குழு ஒன்றினை உருவாக்கியது. அரசியல் அமைப்புச் சபை முறையாகக் கூட்டப்படும் வரை இதுவே ஒரு இடைக்கால நாடாளுமன்றமாகவும் இயக்குமென அறிவிக்கப்பட்டது. சிறையிலிருந்து விடுதலையாகித் திரும்பியிருந்த டிராட்ஸ்கி குடியரசுச் சபையைக் கடுமையாகச் சாடினார். மாநாட்டில் பங்கு கொண்ட போல்ஷவிக்குகளும் இடைக்கால நாடாளுமன்றத்திலிருந்து வெளியேறினர். தொடக்கத்தில் லெனினின் கொள்கைகளுடன் மாறுபாடு கொண்டிருந்த டிராட்ஸ்கி இப்போது அவரது கொள்கைகளின் தீவிர ஆதரவாளர் ஆனார். செப்டம்பர் 23இல் பெட்ரோகிராடில் புதிதாக அமைக்கப்பட்டிருந்த இராணுவப்புரட்சி குழுவிற்கும் அவரே தலைமை தாங்கி ஒரு புரட்சியையும் தொடங்க வேண்டியிருந்தது.

பயிற்சி வினாக்கள்

1) 1917-ஆம் ஆண்டின் பிப்ரவரிப் புரட்சியைச் சுருக்கி வரைக.

2) 1917-ஆம் ஆண்டுப் பிப்ரவரி புரட்சிக்கான காரணங்களையும், போக்கையும் விவரிக்க.

பாடம் – 18 லெனினின் வாழ்க்கை வரலாறு 1870–1924

வோல்கா நதிக்கரையில் உள்ள ஸிம்பிர்ஸ்க் நகரில் உல்யானவ் குடும்பத்தினர் வாழ்ந்து வந்தனர், அக்குடும்பத்தாருக்கு 1870-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22-ஆம் நாள் பிறந்தார் விளாதீமிர் இலியச் உல்யானவ். பிற்காலத்தில் இவரே மாபெரும் லெனின் ஆகப் புகழ் பெற்றார். இவர் தந்தை பெயர் இலியா நிக்கலயேவிச் உல்யானோவ் தாயின் பெயர் மரியா அலெக்ஸாந்திரோவ்னா.

விளாதீமிர்க்கு இரண்டு தங்கைகளும், ஒரு தம்பியும் இருந்தார்கள். ஓல்கா முதல் தங்கை. அப்புறம் தம்பி திமீத்ரி. வரிசையாக அன்னா, அலெக்ஸாந்தர், விளாதீமிர், ஓல்கா, திமீத்ரி, மரியா என்று அக்காள் தம்பிகள் தங்கைகள் ஆறுபேர். அப்புறம் அப்பாவும் அம்மாவும். எனவே விளாதீமிர் குடும்பம் பெரியதோர் குடும்பமாகும்.

அன்னாவும் அலெக்ஸாந்தரும் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள், விளாதிமீர் வீட்டிலேயே ஆரம்பக் கணிதமும் ஆரம்பப்பாடங்களும் ஆசிரியரிடம் கற்றுக் கொண்டு உயர்நிலைப்பள்ளியில் சேரத்தயாராகிக் கொண்டிருந்தான். தாயாரும் அவன் படிக்க உதவுவாள். அவன் தாயாருக்கு எத்தனையோ விதமான கதைகள் தெரியும். அந்தக் கதைகளைப் பற்றிச் சொல்லுவாள். நெப்போலியன் ரஷ்யாமீது படையெடுத்ததையும், பரதினோ என்னும் கிராமத்துக்கு அருகே அவனுடைய படைகளுக்கும் ரஷ்யப் படைகளுக்கும் நடந்த சண்டையையும் விவரிப்பாள். அம்மா சொன்ன கதைகளை எல்லாம் கணக்கிடவே முடியாது.

தந்தை இலியா நிக்கலா யெவிச் உல்யானவ் ஒரு சிறந்த கல்விமான், பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்று பள்ளிகளில் ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர் ஆய்வாளராகவும், இறுதியில் பள்ளிக்கல்வி இயக்குனராகவும், பணியாற்றினார். இலியா நிக்கலா யெவிச் தம் வேலையில் முனைந்திருக்கும்போது குழந்தைகளின் குரல்கள் தகப்பனாரின் அறையில் கேட்கக்கூடாது. உல்யானவ் குடும்பத்தார் எல்லோருமே அதிகாலையில் எழுந்து விடுவது வழக்கம். மரியா அலெக்ஸாந்திரோவ்னா பல மொழிகளைக் கற்றவர். தினந்தோறும் ருஷ்ய மொழியில் பேசுவது எளிதாய் இருக்கும் தான், ஆனாலும் அயல் மொழிகள் தெரிய வேண்டும் என்பது தாயாரின் கருத்து. எனவே தினமும் ஒரு அயல்நாட்டு மொழியில் எல்லோரும் வீட்டில் பேசவேண்டும் என்பது வீட்டில் கண்டிப்புடன் கடைபிடிக்கப் பட்டுவந்தது.

விளாதீமிரும், அலெக்ஸாந்தரும் எப்போதும் அன்புடன் பழகுவார்கள். அலெக்ஸாந்தர் புத்திசாலி. விளாதீமிர் தானும் அலெக்ஸாந்தர் போலவே இருக்க ஆசைப்படுவான். நாம் எதற்காக வாழ்கிறோம்? நமது குறிக்கோள் என்ன? வாழ்வதும், சிந்தனை செய்வதும், கேட்பதும் அறிவதும், ஏதேனும் செய்வதும் சுவையானவை என்று எண்ணுவான்.

1879-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், உயர்நிலைப்பள்ளியின் முதல் வகுப்பில் சேர்வதற்காக விளாதீமிர் பரீட்சை எழுதும் நாள் வந்தது. அந்த உயர்நிலைப்பள்ளி நகரின் மையத்தில் வோல்காக்கரையின் அருகாமையில் இருந்தது. அதில் விளாதீமிர் எட்டு ஆண்டுகள் படிக்க வேண்டி இருந்தது. எல்லாப் பாடங்களிலும் விளாதீமிர்க்கு நூற்றுக்கு நூறு மார்க்குகள் கொடுத்தார்கள் ஆசிரியர்கள். விளாதீமிர் உயர்நிலைப் பள்ளி மாணவன் ஆனான். தற்போது அலெக்ஸாந்தரும் விளாதீமிரும் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள். அன்னா உயர்நிலைப்பள்ளி மாணவி நாட்கள் ஓடுகின்றன. குழந்தைகள் வளர்ந்து பெரியவர்கள் ஆகிறார்கள்.

விளாதீமிரின் தகப்பனார் மக்கள்கல்வி நிலையங்களின் இயக்குனர் என்ற வகையில் ஆசிரியர்களுக்கு உதவப்போகாத ஆரம்பப்பள்ளிக்கூடம் ஒன்று கூட ஸிம்பிர்ஸ்க் மாவட்டத்தில் இல்லை. விளாதீமிர் கீழ்வகுப்புக்களில் படித்துக் கொண்டிருக்கும் போதே அளவுக்குமேல் திறமைசாலியாக இருந்தான். புது விஷயங்களை எளிதில் புரிந்து கொள்வான். அவன் விடாப்பிடியாக உழைக்கவும் வல்லவன். உழைப்புக்கு ஆழ்ந்த மரியாதை குடும்பத்தில் நிலவியது. அலெக்ஸாந்தர் உயர்நிலைப்பள்ளிப் படிப்பை முடித்து விட்டு புனித பீட்டர்ஸ்பர்க் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தான். விளாதீமிரின் தகப்பனார் உழைப்பு, விஷயஞானம், நேர்மை முதலியவற்றிற்கு எடுத்துக் கட்டாய் விளங்கினார்.

அலெக்ஸாந்தர், பீட்டர்ஸ்பர்க் பல்கலைக் கழகத்தில் மூன்றாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தான். அன்னாவும் பீட்டஸ்பர்கிலேயே மகளிர் உயர்கல்விக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்தாள். விளாதீமிர் அக்காளுக்காகவும், அண்ணனுக்காகவும், சிறப்பாக அலெக்ஸாந்தருக்காகவும் ஏங்கினான். நாமும் எப்போதுதான் மேல்படிப்புக்காக பீட்டர்ஸ்பர்க் போகப் போகிறோமோ என்று ஆவலுடன் எண்ணினார்கள் விளாதீமிரும், ஓல்காவும். தகப்பனாருக்கு ஓய்வு ஒழிவு இல்லாத வேலை. இதனால் இல்யாநிக்கலாயெவிச் தம் அருமை குழந்தைகளையும், அன்பு மனைவியையும் தவிக்க விட்டு விட்டு ஓர் நாள் திடீரென மரணமடைந்தார். தந்தையைப் பிரிந்த அந்தக் குடும்பம் இனி எப்படி வாழப் போகிறதோ என்கிற கவலை எல்லோருக்கும் ஏற்பட்டது.

விளாதீமிர் இளைஞராக இருக்கும் போதே மக்களின் நன்மைக்காக வாழ்வது எப்படி என்பதைப்பற்றி சிந்திப்பான். கெட்ட ஒழுங்கு முறைகள் அவனுக்குப் பிடிக்கவில்லை. சமூகம் எவ்வளவு நியாயமற்ற முறையில் அமைந்திருக்கிறது என்பதுபற்றி அவன் நிறையச் சிந்தனை செய்தான். பணக்காரர்கள் வீண்பொழுது போக்குகிறார்கள். ஏழைகளோ, ஓய்வு ஒழிவு இல்லாமல் உழைக்கிறார்கள். அப்படியும் அவர்கள் ஏழ்மையிலேயே காலம் தள்ளுகிறார்கள். இது சரிதானா? விளாதீமிருக்கு ஸார்மன்னனை பிடிக்கவில்லை. அவன் கொடுங்கோலன். ஆனால் அவனை எதிர்த்துப் போராடுவது எப்படி என்று எண்ணினான்.

பீட்டர்ஸ்பர்கில் அலெக்ஸாந்தர் இவற்றையெல்லாம் பற்றிச் சிந்திக்கிறானா? அல்லது ஒருவேளை அவன் அரசியலை விட்டு விலகி, விஞ்ஞானத்தில் கவனம் செலுத்துகிறானா என்பது விளாதீமிருக்குத் தெரியவில்லை. 1887-ஆம் ஆண்டில் மார்ச்

முதல்தேதி பீட்டர்ஸ்பர்கில் நடந்த நிகழ்ச்சி, விளாதீமிருக்கும், அம்மாவுக்கும், ஆன்னாவுக்கும் எதிர்பாராத இடியாக இருந்தது. எல்ரோரையும் இந்த நிகழ்ச்சி தூக்கிவாரிப் போட்டது.

அந்தச் செய்தி பீட்டர்ஸ்பர்கில் இருந்து வந்திருந்தது. மார்ச் மாதம் முதல்தேதி சில மாணவர்கள் ஸார் மூன்றாம் அலெக்ஸாந்தரைக் கொல்ல முயன்றார்கள். முயற்சி பலிக்கவில்லை. எல்லா மாணவர்களும் கைது செய்யப்பட்டார்கள். அலெக்ஸாந்தர் உல்யானவும் அவர்களில் ஒருவன். அலெக்ஸாந்தர் ஒடிசலும் உயரமுமானவன். அவனது பெரியவிழிகளில் எப்பொழுதும் சிந்தனை நிறைந்திருக்கும். திறமைசாலி; கூரிய அறிவுள்ளவன் அலெக்ஸாந்தர். ஆன்னாவும் கைது செய்யப்பட்டு விட்டாள். தகப்பனார் காலமாகி ஓர் ஆண்டும் சில மாதங்களும் கழிந்திருந்தன. கறுப்பு உடை அணிந்து, ஆழ்ந்த முகத்தோற்றத்துடன் இருக்கும் தாயாரைக் காணும் போதெல்லாம் விளாதீமிரின் நெஞ்சம் சுரீரென வலிக்கும். அன்றே பீட்டர்ஸ்பர்க் புறப்பட்டாள் அம்மா. ஸார் மூன்றாம் அலெக்ஸாந்தரைக் கொலை செய்ய முயன்ற ஐந்து மாணவர்களுக்கும் மரணதண்டனை கிடைத்தது. அண்ணன் தூக்கிலிடப்பட்டான். ஒரு வாரத்திற்கெல்லாம் அம்மா பீட்டர்ஸ்பர்க்கிலிருந்து, திரும்பி வந்தாள். தயார் ஒரேயடியாக முதுமை அடைந்து நரைத்துப் போய்விட்டதை விளாதீமிர் கண்டான்.

ஸிம்பீஸ்கில் உல்யானவ் குடும்பத்தினருக்குத் தெரிந்தவர்கள் எல்லோரும் அவர்களிடமிருந்து முகத்தைத் திருப்பிக் கொள்ளத் தொடங்கினார்கள். விலகி ஒதுங்கினார்கள். தாயாரோ அழவில்லை. அலெக்ஸாந்தரைப் பற்றிப்பேச்சையே எடுக்கவில்லை. "உளவலிமை உள்ளவள், தன்மானம் மிகுந்தவள்".

உயர்நிலைப்பள்ளிப்படிப்பை விளாதீமிர் முடித்துவிட்டான். மரண தண்டனைப் பெற்றவனின் தம்பிக்கு சிறந்த மாணவனுக்கு வழங்கப்படும் தங்கப்பதக்கம் கொடுக்கலாமா கூடாதா என்ற சந்தேகம் ஆசிரியர்களுக்கு உண்டாயிற்று. ஆனால் இறுதி தேர்வுகளில் விளாதீமிர் மிகச்சிறப்பாக தேறி இருந்தான். எனவே தங்கப்பதக்கம் கொடுப்பது என்று முடிவாயிற்று.

விளாதீமிர் பல்கலைக்கழகத்தில் சேரவேண்டும். ஆனால் பீட்டர்ஸ்பர்கில் அவனைச் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள். தகப்பனார் காலமான பின்பு உல்யானவ் குடும்பத்தாரின் நிலமை மோசமாய் இருந்தது. குழந்தைகள் படித்துக் கொண்டிருந்தார்கள். ஒருவரும் சம்பாதிக்கவில்லை. கிடைத்த பென்ஷன் தொகை குடும்பச் செலவுக்குப் போதுமானதாய் இல்லை. ஸிம்பிர்ஸ்கிலிருந்து, கஸான் நகருக்குப் போய்விட தீர்மானித்தார்கள்.

ஸிம்பிர்க்ஸ் ஆண்கள் உயர்நிலைப்பள்ளியை விட கஸான் பல்கலைக்கழகத்தில் ஒழுங்குமுறைகள் அதிகம். ஸாருக்கும், அரசாங்கத்திற்கும் எதிராகவோ, தலைமை அதிகாரிகளுக்கு எதிராகவோ, இன்ஸ்பெக்டர் பத்தாப்புக்கு எதிராகவோ யாராவது பேசுகிறார்களா என்று உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தார்கள் அவர்கள். குற்றம் செய்தவர்களை இரக்கம்யின்றி பல்கலைக்கழகத்தில் இருந்து நீக்கினார்கள். மேலும்

கல்லூரிக்கட்டணம் அதிகமாக்கப்பட்டதால் ஏழைகள் படிப்பது வரவர அதிகக் கடினமாயிற்று. கஸான் பல்கலைக்கழகத்தில் அடக்குமுறை தலைவிரித்தாடியது. சுருங்கக்கூறின் ருஷ்யா முழுவதுமே சிறைக் கூடமாகக் காட்சியளித்தது.

1887-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 4-ஆம் தேரி மாஸ்கோவில் மாணவர்களின் கலக நடவடிக்கைகள் பற்றிய செய்திகள் செய்தித்தாள்களில் வெளியாயின. "உங்கள் உரிமைகளைக் காத்துக் கொள்ளுங்கள்! போராடுங்கள்!" என்ற இரகசிய வேண்டுகோள் கஸான் மாணவர்களிடையே தோன்றியது. மாணவன் விளாதீமிர் உல்யானவ் போலீஸ் கண்காணிப்பில் காகூஷ்கினோ கிராமத்துக்கு அனுப்பப்பட்டான்.

பனிக்கால கர்கூஷ்கினோ கிராமம் ஏக்கமும் தனிமையும் நிறைந்திருந்தது. பனிக்காலம் முழுவதும் விளாதீமிர் படித்துக் கொண்டிருந்தான். அவனுக்குப்பிடித்த எழுத்தாளர் செர்னிசேவ்ஸ்கி. அவருடைய புரட்சித்தன்மை விளாதீமிரை ஆட்கொண்டு விட்டது. ரஷ்ய சமூகம் எவ்வாறு அமைந்திருக்கிறது என்பதை செர்னிஷேவ்ஸ்கி முற்றமுழுக்க விளக்கினார். ரஷ்ய நாட்டில் குடியானவர்களும், தொழிலாளர்களும துன்பத்தில் உழன்று கொண்டிருப்பதையும், ருஷ்ய வாழ்க்கையின் ஒழுங்கீனம் முழுவதையும் செர்னிசேவ்ஸ்கி படம் பிடித்துக் காட்டினார்.

புரட்சிப் போராட்டமே விளாதீமிரின் முக்கியமான, ஒரே குறிக்கோளாக இருந்தது. ஆனால் வாழ்க்கை நடத்துவதற்கு உழைத்துப் பொருள் ஈட்டவேண்டும். பல்கலைக்கழகப்படிப்பை முடிப்பது, பட்டம் பெறுவது ஏதேனும் துறையில் தனித் தேர்ச்சி அடைவது இன்றியமையாதது. வசந்தம் வந்ததும் விளாதீமிர் கஸான் பல்கலைக் கழகத்தில் சேர மனுப் போட்டான். ஆனால் மனு நிராகரிக்கப்பட்டுவிட்டது. கல்வி அமைச்சரிடம் மனுச் செய்தும், மனு நிராகரிக்கப்படவே பல்கலைக்கழகப் பாடங்களைத் தானே கற்றுத் தேற எண்ணி, நான்கு வருஷ சட்டக்கல்வியை ஒன்றரை ஆண்டுக் காலத்திலேயே நன்குக் கற்று பரீட்சை எழுத பீட்டர்ஸ்பர்குக்குப் பயணமானான். கடினமான கேள்விகள் கேட்கப் பட்டன. உல்யானவ் சிறந்த மதிப்பெண்கள் பெற்றான். இதன் மூலம் பல்கலைக்கழக இறுதித் தேர்வுக்குரிய உயர்ந்த மதிப்பெண்கள் பெறத்தகுந்தவர் என்பதே பேராசிரியர்கள் செய்தமுடிவு. விளாதீமிர் இல்ச்சின் விளாதீமிர் என்பது இயற்பெயர். இல்யீச் என்பது இல்யாவின் மகன் என்று பொருள்படும். உல்யானவ் என்பது குலப்பெயர். இயற்பெயரையும் தந்தை பெயரையும் சேர்த்து (விளாதீமிர் இல்யீச் என்று) சொல்வது ரஷ்யமரபு. உள்ளம் மகிழ்ந்தது. பீட்டர்ஸ்பர்க் நகரம் அப்போதும் அவருக்கு முற்றிலும் புதியதுதான். எனவே ஓய்வு நேரத்தில் தங்கை ஓல்காவுடன் நேவ்ஸ்கி வீதியில் உலாவுவதையும், நகரைச்சுற்றிப் பார்ப்பதையும் அவர் விரும்பினார். அந்த ஆண்டு ஓல்கா பீட்டர்ஸ்பர்க் மகளிர் உயர்கல்விக் கழகத்தில் பயின்று கொண்டிருந்தாள்.

பரீட்சை முடிவு தெரிந்ததும் விளாதீமிர் இல்யீச்ஓல்காவிடம் போனார். தமது மகிழ்ச்சியை அவளுடன் பகிர்ந்து கொள்ள விரும்பினார். சகோதரியின் அறைக்குப் போனார். ஓல்கா கடுங்காய்ச்சலில் நினைவு இன்றிப் புரண்டு கொண்டிருந்தாள். விளாதீமிர் இல்யீச் அவளது கையைப் பிடித்துக்கொண்டார். அவள் அவனை அடையாளம் கண்டு கொள்ள வில்லை. தாயாருக்கு தந்தி கொடுத்து அழைத்தார்.

தாயார் மரியா அலெக்சாந்திரவ்னா பீட்டர்ஸ்பர்க் வந்து சேருவதற்குள் ஓல்காவின் நிலை படுமோசமாகிவிட்டது. 1891-ஆம் ஆண்டு மே மாதம் 8-ஆம் நாள் ஓல்கா காலமானாள். நான்கு ஆண்டுகளுக்குமுன் அதே நாளில்தான் அலெக்ஸாண்டர் மரண தண்டனைக்குள்ளானார்.

ஓல்காவின் உடலை அடக்கம் செய்து விட்டு விளாதீமீர் இல்யீச் தாயாருடன் ஸமாரா நகர் திரும்பினார். இப்பொழுது உல்யானவ் குடும்பத்தினர் ஸமாராவில் வசித்து வந்தார்கள். ஸமாராவில் கழித்த ஆண்டுகள் விளாதீமிர் இல்யீச்சின் வாழ்க்கையில் மிக முக்கியமான பருவமாக விளங்கின. அங்கேதான் அவர் பல்கலைக்கழகத் தேர்வுக்குப் பயின்றார். அங்கேதான் காரல்மார்க்ஸின் போதனைகளை நன்கு ஆழ்ந்து தெரிந்து கொண்டார். மார்க்ஸின் போதனைகள் அவரை உளமாரக் கவர்ந்தன. விளாதீமிர்இல்யீச் மார்க்ஸீயவாதியானார். ஸமாராவில் இருந்த மார்க்ஸீயவாதிகள் வட்டத்தில் கலந்து கொண்டு மார்க்ஸின் கருத்துக்களை விளக்கமாக பரப்பத் தொடங்கினார். தேர்வுகள் முடிந்த பின்னர் விளாதீமிர்இல்யீச் ஸமாரா நீதிமன்றத்தில் வழக்குரைஞராகப் பணியாற்றினார். குடியானவர்கள், ஏழைகள் தரப்பில் அவர் எத்தனையோ முறை வழக்காடினார். வேலை செய்து கொண்டே அவர் புது விஷயங்களைக் கற்றார். ஸமாராவிலிருந்து வெளியேறி ஏதேனும் பெரிய தொழிற்சாலை நகருக்கு, குறிப்பாக செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கிற்குப் போக எண்ணினார்.

அவர் வெகு நாட்களுக்கு முன்பே செயின்ட் பீட்டர்ஸ்பர்க் போயிருப்பார். ஓல்கா இழப்பால் ஏங்கிய அன்னைமீது பரிவு காரணமாகவே அவர் ஸமாராவில் தங்கி இருந்தார். தமது பரிவாலும் கனிவாலும் அன்னையின் துயர் துடைக்க முயன்றார் விளாதீமிர்இல்யீச். முடிவில் 1893-ஆம் ஆண்டு உல்யானவ் குடும்பத்தினர் ஸமாராவிலிருந்து வெளியேறி னார்கள். திமீத்ரீ பல்கலைக் கழகத்தில் சேரவேண்டி இருந்தது. எனவே திமீத்ரீயையும் மகள் மரியாவையும் அழைத்துக் கொண்டு மரீயா அலெக்ஸாந்திரவ்னா மாஸ்கோ போய் சேர்ந்தாள்.

ஆன்னாவுக்கு திருமணம் ஆகிவிட்டது. அவளுடைய கணவர் மார்க் திமஃபேயெவிச் யெலிஸாராவ், பீட்டர்ஸ்பர்க்கில் மாணவராய் இருந்த போது அலெக்ஸாந்தரின் தோழனாக இருந்தார். ஆன்னாவும் மார்கும் உல்யானவ் குடும்பத்தாருடன் சேர்ந்தே வாழ்ந்தார்கள். இப்போதும் அவர்களுடன் சேர்ந்தே மாஸ்கோ சென்றார்கள்.

வலிவும் புரட்சி உற்சாகமும் பொங்க, தனியே பீட்டர்ஸ்பர்க் சென்றார் விளாதிமீர் இலியீச் உல்யானவ்.

மாஸ்கோவில் இருந்து நெடுந்தூரத்தில் உள்ள நேவ்ஸ்கயா ஜஸ்தாவா என்ற தொழிலாளர் வட்டாரத்தில், தொழிலாளர்க் குழுக்கூட்டத்திற்கு அடிக்கடி செல்வார் விளாதீமிர் இலியீச். நேவ்ஸ்கயா ஜஸ்தாவாவில் இவான் வஸீலியெவிச் பாபுஷ்கினுடைய குழுவில் விளாதிமீர் இல்யீச் பங்காற்றி வந்த சமயத்தில் பீட்டர்ஸ்பர்க் நகரில் பல்வேறு

பகுதிகளில் அனேக மார்க்ஸீயத் தொழிலாளர் குழுக்கள் இயங்கி வந்தன. விளாதிமீர்இல்யீச் பீட்டர்ஸ்பர்க் வந்ததும் புரட்சிகர மார்க்ஸீய வாதிகளுடன் தொடர்பு கொள்வதிலேயே முதற்படியாக முனைந்தார்.

இவ்வாறே உருவாயிற்று புரட்சிச் சங்கம், பிற்பாடு "தொழிலாளி வர்க்க விடுதலைக்காக போராடும் சங்கம்" என்று இது அழைக்கப்பட்டது. தொடக்கத்தில் "போராட்டச்சங்கம்" பீட்டர்ஸ்பர்க்கில் மட்டுமே இருந்தது. பின்னர் அது மற்ற நகரங்களிலும் நிறுவப்பட்டது.

விளாதிமீர் இல்யீச் இந்தக் குழுக்களை தலைமை தாங்கி நடத்துவதோடு பகலிலும், இரவிலும், சிலநேரங்களில் நள்ளிரவில்கூட அவர் எழுதிக் கொண்டிருப்பார். அவர் எழுதிய புத்தகம் முதலாளி வர்க்கத்தினர்களுக்குப் பயங்கரமானது. முதலாளித்துவ ஆட்சியை எதிர்த்து போராடுவதற்குரிய சரியான வழி எது இந்தப் போராட்டத்தை ஒழுங்கமைந்த முறையில் நடத்துவது எப்படி என்று இந்த நூல் தொழிலாளர்களுக்கு எடுத்துரைத்தது. அவர் எழுதியவற்றை இரகசியமாக அச்சடித்து தொழிலாளர் குழுக்களில், மார்க்ஸீயவாதிகள் வினியோகிப்பார்கள். இவ்வளவிற்கும் அப்போது விளாதிமீர் இல்யீச்சுக்கு வயது இருபத்து நான்குதான். அவர் புத்திளைஞர், ஆனால் நிறைய அறிந்திருந்தார். ருஷ்ய தொழிலாளர்கள் புரட்சியை நிறைவேற்றுவார்கள் என்று அவர் திடமாக நம்பினார்.

பீட்டர்ஸ்பர்க் "போராட்டச் சங்கம்" நூற்றுக்கணக்கான துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டது. பீட்டர்ஸ்பர்க்கில் தொழிலாளர்களுடன் நெருங்கியத் தொடர்பு கொண்டிருந்த போது அங்கு மாலைப்பள்ளியில் ஆசிரியையாக பணியாற்றிவந்த, நதேழ்தா கன்ஸ்தன் தீனவ்னா குரூப்ஸ்கயா என்ற எளிமையும் ஆழ்ந்த போக்கும் உள்ள இந்த மங்கையுடன் பழகுவது விளாதீமிர்இல்யீச்சுக்கு மிக இன்பமாய் இருந்தது. விளாதீமிர் இல்யீச் பீட்டர்ஸ்பர்க் வந்து சேர்ந்த சிறிது காலத்திற்கெல்லாம் அவர்களிடையே பரிச்சயம் ஏற்பட்டது. அவர்களுடைய கருத்துக்களும் குறிக்கோளும் செயலும் நன்றாய் இருந்தன.

1895-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் எட்டாம்நாள் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னா குரூப் ஸ்கயாவின் வீட்டில் "போராட்டச்சங்க" உறுப்பினர்களின் கூட்டம் நடந்தது அவர்கள் ரபோச்சியே தேலோ (தொழிலாளர் விவகாரம்) என்ற செய்தித்தாளை வெளியிட தீர்மானித்தனர். இதன் அச்சகம் பீட்டர்ஸ்பர்க் நகர்புறத்தில், ஃபின்லாந்து வளைகுடாக்கரையில் அமைந்து இருந்தது. விளாதீமிர்இல்யீச்சைப் பிடிக்க போலிஸ் உளவாளிகள் கண்ணி வைத்துக்காத்துக் கொண்டிருந்தார்கள். எனவே எச்சரிக்கையாய் இருப்பதற்காக அடிக்கடி இருப்பிடத்தை மாற்றம் செய்ய வேண்டி வந்தது. 1895-ஆம் ஆண்டு டிசம்பர் 8, 9-ஆம் நாள் இரவில் "போராட்டச் சங்கத்தைச்" சேர்ந்த நூற்று அறுபது பேர் விளாதீமிர்இல்யீச்சுடன் கைது செய்யப்பட்டனர். ஆயினும் சங்கம் சிதறி விடவில்லை. வெளியே சங்கத்தினால் தொடங்கப்பட்டவேலை நிறுத்தங்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தன. விளாதீமிர்இல்யீச் வேலை நிறுத்தக்காரர்களுக்காகத் துண்டு பிரசுரங்கள் அனுப்பினார்.

ஷீஷென் ஸ்கொயே என்னும் தொலை தூர சைபீரிய கிராமத்தில் விளாதீமிர் இல்யீச் முழுதாக ஓர் ஆண்டு கழித்து விட்டார். அதற்குமுன் சிறைச் சாலையில் பதினான்கு மாதங்கள் இருந்தார். இன்னும் இரண்டு ஆண்டு சைபீரிய சிறை வாசம் பாக்கி இருந்தது.

1898-இல் விளாதீமிர்இல்யச், "ரஷ்யாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி" என்னும் நூலை எழுதினார். அதில் ரஷ்யகிராமங்களிலும், நகரங்களிலும் முதலாளிகளும் குலக்குகள் எனப்படும் பணக்கார விவசாயிகளும் மேலும் மேலும் அதிக சக்தி பெற்று வருவதையும் பொதுமக்களின் வாழ்க்கை மேலும் மேலும் அதிக வறுமையும் துயரமும் நிறைந்ததாக ஆகி வருவதையும் குறிப்பிட்டார். விளாதீமிர்இல்யச் நிறைய வேலைகள் செய்தார். புத்தகமும், கட்டுரைகளும் எழுதினார்; ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்த்தார். நதேழ்தா கன்ஸ்தன் தீனவ்னா விளாதீமிர் இல்யீச்சுக்கு உற்ற துணைவியாகத் திகழ்ந்தார்.

இதே வேளையில் சிலமனிதர்கள் ஒரு குழுவாகச் சேர்ந்து மார்க்ஸீய வாதத்தை எதிர்க்கத் தொடங்கி இருந்தார்கள். அவர்களது கருத்துப்படி தொழிலாளர்கள் அரசியலில் அக்கரை கொள்ளத் தேவையில்லை. தொழிலாளர்களுக்குப் புரட்சி வேண்டியது இல்லை. தொழிலாளர் விரும்புவது எல்லாம் சம்பள உயர்வு வேண்டும் என்பதே. இதற்கு முதலாளி களுடனும் தொழில் அதிபர்களுடனும் சமாதானமாக வாழ்வது இன்றியமையாதது. இக்கருத்துக்கள் "பொருளாதாரவாதம்" எனப்பட்டது. இந்த பொருளாதார வாதிகளின் கொள்கைக்கு எதிராக, தொழிலாளர்களுக்கு இரகசியமாக, விளாதீமிர்இல்யீச் சொன்னதெல்லாம் "தோழர்களே, 'பொருளாதாரவாதிகளின்' பேச்சை கேட்காதீர்கள். நமக்கு உள்ள ஒரே வழி_புரட்சி!" பின்னர் தொழிலாளர்களின் மார்க்ஸீயவாதிக்கட்சி அமைத்து அதன் கொள்கைகளைப் பரப்ப ஒரு செய்தித்தாளை வெளியிட தீர்மானித்தார். இதன்மூலம் ஸாரின் வல்லாட்சிக்கு எதிராக போராட தீர்மானித்தார்.

விளாதீமிர்இல்யீச் சைபீரியாவில் இருந்தபோது கட்சியின் முதல் மாநாடு 1898-ஆம் ஆண்டு மின்ஸ்க் நகரில் நடந்தது. ஆனால் போலிஸார் கட்சி அமைப்பாளர்கள் எல்லோரையும் கைது செய்துவிட்டார்கள். விளாதீமிர் இல்யச் சிறையில் சைபீரியாவில் இருந்தபோது ஒரே சிந்தனையில் இருந்தார். அதாவது கட்சியை புதுப்பிப்பதைப் பற்றி நினைவுகளுடன் இருந்தார்.

செய்திதாளுக்கு (Iskra - Spark) இஸ்க்ரா— தீப்பொறி என்று பெயர் இட்டார். விளாதீமிர்இல்யீச் நதேழ்தா கன்ஸ்தன்தீனவ்னாவின் சைபீரியச் சிறைவாசம் இன்னும் முடிவடையவில்லை. அவர் சிறைப்பட்டதும் சைபீரியாப் போனதும் செய்தித்தாளை ருஷ்யாவிற்கு வெளியில் இருந்து அச்சிடுவதாக தீர்மானித்தார்கள். ஜெர்மன் நகரம் லைப்ஸிக் அங்கே ஹெர்மன் ரௌ என்னும் முப்பத்தைந்து வயது மனிதர் வசித்து வந்தார். அவர் ஒரு சமூக ஜனநாயகவாதி. ருஷ்யத் தோழர்களுக்கு உதவவேண்டும் என்று ஹெர்மன் ரௌ, லைப்ஸிக் சமூக - ஜனநாயகவாதிகளிடம் சொன்னார். இவ்வாறு ஜெர்மனியில் அச்சிடப்பட்டு ரகசிய ஏஜெண்டுகள் மூலம் இஸ்க்ராவை Iskra ரஷ்யாவின் பெரிய நகரங்களில் வெளியிட்டார்கள்.

ஸார் ஆட்சிக்கு எதிராகப் போராடுங்கள், முதலாளிகளுக்கு எதிராகப் போராடுங்கள் என்று இஸ்க்ரா தொழிலாளிகளுக்குக் கற்பித்தது. 1901-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் விளாதீமிர்இல்யீச் தமது புத்தகங்களையும் கட்டுரைகளையும் லெனின் என்னும் பெயரால் வெளியிடத் தொடங்கினார். இந்த மாபெரும் பெயர் உலகம் முழுவதும் அறியும். சைபீரியாவின் நீண்டநதியான லீனா என்பதன் பெயரை லெனின் என்று தனக்குச் சூடிக்கொண்டார்.

ரஷ்ய ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது மாநாடு 1903-இல் பிரஸ்ஸல்சிலும், பின்னர் லண்டனிலும் கூடியது. இம்மாநாடுகளில் பேசும்போது தன்னுடைய கொள்கையில் லெனின் உறுதியாக இருந்தார். ஒரு தொழிலாளி தன் கட்சியில் உறுதியான கட்டுப்பாடுடன் செயல்பட வேண்டும். கட்சி உறுப்பினர்கள் முழு மனதுடன் செயல்பட வேண்டும். கட்சி முடிவுகளுக்கு உறுப்பினர்கள் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். இப்படிப்பட்ட புரட்சிவாதிகள் இருப்பார்களேயானால் ரஷ்யாவையே தலைகீழாக மாற்றி அமைப்பதாக உறுதி கூறினார். கட்சிப் பத்திரிக்கை, உறுப்பினர் பதவி, யூதர்களின் தொழிலாளர் இயக்கத்தை அங்கீகரிப்பது, கட்சி மத்திய அமைப்பின் அதிகாரம் ஆகியவை சம்ந்தமான எல்லா விசயங்களிலும் லெனின் கொள்கைகளை மாநாடு ஏற்றுக் கொண்டது. ஆனால் மார்டோவ் என்பவரின் தலைமையில் இருந்த ஒரு சில மிதவாதிகள் இதனை ஏற்காது இருந்தனர். மார்டோவிற்கு ஆதரவு அதிகம் இல்லாதிருந்தமையால் தோல்வியடைந்த மித வாதிகள் கட்சியை விட்டு வெளியேறினர். அப்போது இருந்து லெனினைச் சார்ந்தோர் போல்ஸ்விக்குகள் அல்லது பெரும் பான்மையோர் என்றும், மார்டோவ் உடன் வெளியேறியோர் மென்சிவிக்குகள் அல்லது சிறுபான்மையோர் என்றும் அழைக்கப்படலாயினர். ட்ராட்ஸ்கி, அக்சல்ராடு ஆகியோரும் மென்சிவிக்குகளின் தலைவர்களாவர். போல்ஸ்விக்குகளின் அமைப்புக் கொள்கை களையும், மென்ஸ்விக்குகளின் திரிபுவாதக் கொள்கைகளையும் விளக்க, "ஓரடி முன்னேற்றம் ஈரடி பின்னேற்றம்மா எனும் நூலை லெனின் எழுதினார். இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் லெனினின் செல்வாக்கு ரஷ்ய அரசியலில் ஓங்கியது.

1905-ஆம் ஆண்டு நடைபெற்ற புரட்சியின்போது லெனின் தனது ஜனநாயகப் புரட்சியில் சமூக ஜனநாயகவாதிகளின் இரு நடைமுறைத் தந்திரங்கள் எனும் நூலை வெளியிட்டார். இப்புரட்சி நடந்தபோது ஜெனிவாவில் இருந்த லெனின், புரட்சியைக் கேள்வியுற்ற ஆரவாரத்துடன், அங்கு சமூக ஜனநாயகவாதி நடத்தும் விடுதியில் ஏனைய புரட்சியாளர்களுடன் கூடி புரட்சிக் கீதம் ஒன்றைச் சேர்ந்து பாடினார்கள்.

புரட்சி பரவி வருவதைக் கண்ட லெனின் ரஷ்யா திரும்பத் திட்டமிட்டு நவம்பர் மாதம் ரஷ்யா போய்ச் சேர்ந்தார். அப்போது எழுத்துச் சுதந்திரமும் பேச்சு சுதந்திரமும் ஓரளவு கொடுக்கப்பட்டிருந்ததால், "புதுவாழ்வு" என்னும் பத்திரிகையை போல்சிவிக்குள் தொடங்கினார். லெனினும் பீட்டர்ஸ்பர்க் போன்ற பல இடங்களில் தொழிலாளர் மத்தியில் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். அரசு போல்ஸ்விக்குகளின் நடவடிக்கைகளை ஒற்றர் மூலம் தெரிந்து கொண்டு லெனினை கைது செய்து தண்டனை வழங்கவேண்டும் என்று எண்ணம் கொண்டிருந்தது. எனவே தப்பிச்செல்ல முயன்ஈர். பின்லாந்திலிருந்து ஸ்டாக்ஹோம் சென்றார் குருப்ஸ்கயாவும் பீட்டர்ஸ்பர்க்கிலிருந்து ஸ்டாக்ஹோமிற்கு

வந்து சேர்ந்தார். பிறகு அங்கிருந்து பெர்லின் சென்றார்கள். இவ்வாறாக பல ஊர்களில் 10 ஆண்டுகளைக் கழிக்க வேண்டியவர்களானார்கள். இக்காலத்தில் புரட்சியாளர்களின் வேகத்தை அதிகரிக்க புரேலத்தரீய் எனும் பத்திரிகையை ஜெனிவாவில் தொடங்கினார். 1909-இல் மென்ஸ்விக்குகளின் போக்கைக் கண்டித்து புத்தகங்களை எழுதினார். ஜெனிவாவில் வாழ்ந்து வந்த ரஷ்யப் புரட்சியாளர்களுக்கு சுவிட்சர்லாந்து போலீஸ் தொந்தரவு கொடுக்க ஆரம்பித்தவுடன், இவர் அங்கிருந்து பாரீஸ் பயணமானார். பின்னர் இராக்கா, ஜெனிவா போன்ற இடங்களில் இருந்துகொண்டு புரட்சிக் கருத்துக்களை கட்டுரைகளாக வடித்தார். முதல் உலகப்போரில் ரஷ்யா ஈடுபடும்போதும் உள்நாட்டுக் கலவரத்தை உருவாக்க வேண்டும் என்ற கருத்தினைத் தெரிவித்தார். இதனால் 1917-இல் புரட்சி ஏற்பட்டு மன்னராட்சித் தூக்கி எறியப்பட்டு அலெக்ஸாந்தர் கெரன்ஸ்கி தலைமையில் தற்காலிக அரசு நிறுவப்பட்டது. கெனரன்ஸ்கி ரஷ்யாவை போரில் இருந்து இன்னும் விடுவிக்கவில்லை. எனவே ஜெர்மனியின் சான்சலர் கெய்சர் வில்லியம், லெனினை ரஷ்யாவிற்கு அனுப்ப ஏற்பாடு செய்தார். ஜெனிவாவிலிருந்து வந்த லெனின் அலெக்ஸாந்தர் கெரன்ஸ்கி அரசை தூக்கி எறிந்துவிட்டு ஆட்சிப்பொறுப்பைத் தான் ஏற்றார். ஏற்றபின் பிரஸ்ட் லித்தோவ்ஸ்க் உடன்படிக்கை ஒன்றினை ஜெர்மனியுடன் செய்துகொண்டு ரஷ்யாவை முதல் உலகப்போரிலிருந்து விடுவித்துக் கொண்டார். லெனினுக்கு எதிராக உள்நாட்டுப் போர் ஒன்று நடைபெற்றது. அதனை அடக்க ட்ராட்ஸ்கி தலைமையில் செஞ்சேனையை உருவாக்கினார். புரட்சி செய்த வெள்ளைப் படையினரை செஞ்சேனையினர் தோற்கடித்தனர். அமைதியை உருவாக்கியபின் லெனின் புதிய பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடித்து விவசாயத்திற்கும், தொழில் துறைக்கும் அதிக ஊக்கம் கொடுத்து வளர்ச்சியைப் பெருக்கினார். இத்தகைய பெரும் புரட்சியை உருவாக்கி ரஷ்யாவை கம்யூனிஸ நாடாக்கி, பொருளாதாரத்தை வளர்த்திட்ட லெனின் 1924-ஆம் ஆண்டு ஜனவரி 21-ஆம் தேதி உடல்நிலை பாதிக்கப்பட்டமையால் மூளை ரத்தக்குழாய்கள் வெடித்து மாலை 6.50 மணிக்கு மரணம் அடைந்தார்.

பயிற்சி வினா

லெனினின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாக எழுதுக.

பாடம் – 19 1917–இல் ஏற்பட்ட அக்டோபர் புரட்சி (போல்ஸ்விக்புரட்சி)

1917, அக்டோபர் திங்கள் 12-ஆம் நாள் வெளிநாட்டிலிருந்து பெட்ரோகிராடு திரும்பி ஒரு சிறு வீட்டில் மறைந்திருந்த லெனின், பத்தாம் நாள் நடைபெற்ற போல்ஷ்விக் மத்தியக் குழுவிற்குத் தலைமை தாங்கினார்; ஆயுதப் புரட்சியொன்றை உடனடியாகத் தொடங்கவேண்டும் என்ற அவரது கொள்கைக்கு ஆதரவாகப் பத்துப்பேர் வாக்களிக்க, இருவர் மட்டுமே அதனை எதிர்த்து வாக்களித்தனர். புதிய புரட்சிக்கான ஏற்பாடுகளை டிராட்ஸ்கியே விரைந்து செயலாற்றி முடித்தார். செஞ்சேனைப் படைப்பிரிவினர் அனைவரும் இராணுவப் புரட்சிக் குழுவின் கட்டுப்பாட்டிற்குட்படுத்தப்பட்டனர். அக்டோபர் 21-இல் இராணுவப் புரட்சிக் குழுத்தலைவர்கள் பெட்ரோகிராடு கோட்டையிலிருந்த படையை தங்கள் பொறுப்பில் கொண்டு வந்தனர்.

அக்டோபர் 24-ஆம் நாள் புரட்சியின் தலைமையகமான சுமோல்னி கட்டிடத்திற்கு லெனின் சென்றார். ஒளிமயமாகத் திகழ்ந்த அக்கட்டிடத்தில் படைப்பிரிவுத் தலைவர்களும், செங்காவற்படைத் தலைவர்களும், தொழிலாளர் தலைவர்களுமாக நிரம்பி வழிந்தனர். கட்டிடத்துக்கு வெளியே கவச மோட்டார்கள், துப்பாக்கிகள், இயந்திரத் துப்பாக்கிகள் அனைத்தும் தயார் நிலையில் இருந்தன. எதிர்ப்புரட்சியாளராக இருந்த இடைக்கால அரசுமீது திட்டமிட்டபடி தாக்குதல் நடத்தப்பட்டது. அன்று இரவே அரசு வங்கி, அஞ்சல் நிலையம், தொலைபேசி நிலையம், பாலங்கள், புகைவண்டி நிலையங்கள் அனைத்தையும் செங்காவலர் கைப்பற்றினர். நெவா நதியில் நங்கூரமிட்டு நின்றிருந்த 'அரோரா' போர்க்கப்பலும் அரசின் ஆணைக்குக் கீழ்படிய மறுத்ததோடு புரட்சியாளர் கட்குத் துணையாகவும் செயல்பட்டது. 25-ஆம் நாள் காலை அரசுக்கு ஆதரவாகப் புதிய படைப்பிரிவு எதனையும் கொண்டு வர இயலாத நிலையில் அமெரிக்கத் தூதரகக் கார் ஒன்றில் ஏறி கெரன்ஸ்கி வெளியேறினார். இடைக்கால அரசு குளிர்கால மாளிகையிலே கோசக்குகள், காடேட்டுகள் ஆகியோரின் பாதுகாப்பில் இருந்து வந்தது. அந்நிலையில் அரோராக் கப்பலிலிருந்து மாளிகையை நோக்கிக் குண்டுகள் வீசப்படவே மாளிகையைக் காத்து நின்றோர் அதைக் கைவிட்டு ஓடினர். 26-ஆம் நாள் காலை மூன்று மணிக்குப்பின் குளிர்கால மாளிகையும் கடுமையாகத் தாக்கப்பட்டது. மாளிகை வீழ்ந்ததும் அமைச்சர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். லெனின் தலைமையில் போல்ஷ்விக்குகளும், பெட்ரோகிராடு சோவியத்தும் இணைந்து நின்று தொடங்கி அக்டோபர் புரட்சி, 1917, வெற்றி பெற்றதோடு வரலாற்றுப்புகழ் பெற்ற புரட்சியாகவும் மாறிற்று.

வரலாற்றுப்புகழ் பெற்ற அக்டோபர் புரட்சி வெற்றியடைவதற்கு முக்கிய காரணம் லெனின் ஒரு தெளிவான குறிக்கோளைக் கொண்டிருந்ததும், அதனையடைய அரும்பாடுபட்டதுமேயாகும். உழைப்பாளிகளின் முழு ஆதரவையும் அன்பையும் பெற்றிருந்த அவர் எதிர்ப்புகளை வெகு சுலபமாகச் சமாளித்தார். புரட்சி அலைகள்

மக்கள் மனதைத் தழுவியிருந்தபோது தொழிலாளரும், படை வீரரும் இடம் பெற்றிருந்த சோவியத்துக்களிடமே உண்மையான அதிகாரம் நிலைத்திருந்தது. அந்நிலையில் வலிமை வாய்ந்த ஓர் அரசு கூட மக்கள் எழுச்சியைத் துணையாகக் கொண்டிருந்த ஒரு புரட்சியை அடக்க இயலுமா என்பது ஐயப்பாட்டிற்குரிய பிரச்சினையே.

1917-ஆம் ஆண்டின் இலையுதிர் காலத்தில் இடைக்கால அரசின் சர்வாதிகாரியாகச் செயல்பட்டுக் கொண்டிருந்த கெரன்ஸ்கி மக்கள் மதிப்பைப் பெறத் தவறினார். ஆட்சி செய்யும் திறமையும் பெற்றிருக்கவில்லை. படையின் போரிடும் தன்மை முற்றிலும் அழிந்து போயிருந்த நிலையில் நட்பு நாடுகட்குச் சாதகமாக ஜெர்மனிக்கெதிராகப் போரைத் தொடர்ந்து நடத்த விரும்பிய அரசு, அமைதிக்காலத்தில் மட்டுமே நன்முறையில் நிறைவேற்ற வல்ல சில உள்நாட்டுச் சீர்திருத்தங்களை மாறுபட்ட கொள்கைகளை கொண்டிருந்தோரின்மூலம் நிறைவேற்ற முயற்சித்தது. ஓர் அரசியல் அமைப்பு மூலம் அனைத்தையும் சாதிக்க முடியும் என அது நம்பியது. வெளிநாட்டுக் காரில் வெளியேறித் தப்பிய கெரன்ஸ்கி, தளபதி கிரஸ்னோவை அணுகி வடக்குப் போர் முனையிலிருந்த கோசக்குகளின் படையணி ஒன்றைத் தம் அரசினைக் காப்பாற்றும் நோக்குடன் தலைநகர் நோக்கி அனுப்பிவைக்க ஏற்பாடு செய்தார். அப்பிடையினர் தலைநகருக்கு வெளியிலேயே ஆயுதம் தாங்கிய தொழிலாளர்களால் தோற்கடிக்கப்பட்டனர். அக் கடைசி முயற்சிக்குப்பின் சிறிதும் நம்பிக்கையில்லாதவராய் கெரன்ஸ்கி வெளிநாட்டுக்குத் தப்பி ஓடினார்.

தொழிலாளர் அரசு

லெனின், தொழிலாளர்களின் சர்வாதிகார அரசே, உலகத்தொழிலாளரின் புரட்சிக்கு வழிவகுக்கும் என நம்பினார். குளிர்கால மாளிகை தாக்கப்படுமுன் அக்டோபர் 25- இல் அனைத்து ரஷ்ய சோவியத்துகளின் இரண்டாம் மாநாடு கூடியது. ஜூன் மாதம் அதன் முதல் மாநாடு கூடியபோது சமதர்மப் புரட்சியாளர்களும் மென்ஷவிக்குகளுமே அதில் பெரும்பான்மை பெற்றிருந்தனர். இரண்டாம் மாநாட்டில் கலந்து கொண்ட 650 பிரதிநிதிகளில் போல்ஷவிக்குகள் 390 பேரும், சமதர்மப் புரட்சியாளர்கள் 160 பேரும், மென்ஷவிக்குகள் 72 பேரும், ஏனைய கட்சியினர் 28 பேருமாக இருந்தனர். பிற நாட்டு அரசுகளோடு ரஷ்யப் புரட்சி அரசை ஒப்பிட விரும்பிய லெனின் ஏனைய ஜனநாயகக் குடியரசுகள் பலவற்றை விட சோவியத் அரசின் ஜனநாயகம் ஆயிரம் மடங்கு மேல் என்றார். அவரது அரசு ஆயிரக்கணக்கான சோவியத்துகளின் மூலமாக நடைபெற்ற அரசாயிற்று. ஒரு குறிப்பிட்ட கட்சிக்கோ, ஓர் இனத்துக்கோ ஒரு கூட்டத்துக்கோ எல்லையற்ற அதிகாரத்தை அளித்திட்ட மேலை நாட்டு ஜனநாயக முறையிலிருந்து அவரது முறை மாறுபட்டே இருந்தது. பெரும்பாலானோரை இருளில் இருத்திச் சிலர் மட்டுமே சுகபோகங்களுடன் வாழும் தனிமனித சுதந்திரத்துக்கு ரஷ்யாவில் இடமில்லை என்பது பொருளாயிற்று.

அமைதி – நிலம் பற்றிய ஆணைகள்

மறுநாள் மாநாட்டில் குளிர்கால மாளிகை வீழ்ந்துவிட்ட செய்தி கிட்டியபோது மென்ஷவிக்குகளும், வலது சாரி சமதர்மப் புரட்சியாளர்களும், போல்ஷவிக்குகளின்

வெற்றிப் புரட்சியை எதிர்த்து வெளியேறினர். எதிர்ப்பாளர்கள் வெளியேறியதைத் தொடர்ந்து எதிர்ப்பேதும் இல்லாத நிலையில் லெனின் தம் கொள்கைக் கோட்பாடுகளை இடையூறின்றி நடைமுறைப்படுத்த முடிந்தது. அவர் தம் கொள்கைகளாக நிலம், அமைதி ஆகியவற்றை வெளியிட்டார். அமைதியைப் பற்றிய அவரது ஆணை ஜெர்மனியுடனான போர் நிலையை ஒரு முடிவுக்குக் கொண்டுவர விரும்பியது. அவரது நில ஆணைகள் விவசாயப் பிரதிநிதிகளால் சிபாரிசு செய்யப்பட்டிருந்த 242 விதிகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அதன்படி நாட்டு நிலமனைத்தும் நாட்டு மக்களின் உடைமையாகும். நாட்டுடைமைத் திட்டத்தில் எவருக்கும் எந்த இழப்பீட்டுத் தொகையும் அளிக்கப் படமாட்டாது. நிலங்களும், விவசாயக் கருவிகளும், கட்டிடக் கட்டுமானங்களும் அதற்கென அமைக்கப்படவிருக்கும் வட்டார நிலக்குழுக்களிடமும், விவசாயிகளின் சோவியத்துகளிடமும் ஒப்படைக்கப்பட வேண்டும். நிலமனைத்தும் மறுபங்கீட்டுக்குட் படுத்தப்பட்டுச் சமத்துவ அடிப்படையில் விவசாயிகள் அனைவருக்கும் பகிர்ந் தளிக்கப்படும். அதன் மூலம் விவசாயிகளின் நெடுங்காலக் கனவு நிறைவேற்றப்படும் என அறிவிக்கப்பட்டது.

மத்திய நிருவாகக் குழு

மாநாட்டின் கடைசிக் கட்டமாக அனைத்து ரஷ்ய மத்திய நிர்வாகக் குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது. அதன் 101 உறுப்பினர்களில் 61 பேர் போல்ஷ்விக்குகளாகவும், 29 பேர் இடதுசாரி சமதர்மப் புரட்சியாளர்களாகவும், ஏனையோர் பிறகட்சியினராகவும் இருந்தனர். காமனேவ் அதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மக்கள் பிரதிநிதிளின் சோவியத் குடியரசு என்ற ஓர் அமைச்சரவையும் தேர்ந்தெடுக்கப்பட்டது. அரசின் ஆட்சித்தலைவராக லெனின் தேர்ந்தெடுக்கப்பட்டார். டிராட்ஸ்கி வெளிநாட்டு அமைச்சராகவும், ரிகேவ் உள்துறை அமைச்சராகவும், ஸ்டாலின் தேசிய இனங்களின் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டனர்.

புதிய ஆணைகள்

புதிதாக அமைக்கப்பட்ட அமைச்சரவை சுமோல்னியில் அடிக்கடி கூடி விவாதித்து வரிசையாகப் பல ஆணைகள் வெளியிட்டன. அக்டோபர் 29-இல் அனைத்துத் தொழிற் கூடங்களிலும் 8 மணி நேர வேலை நடைமுறையில் இருக்க வேண்டுமென ஆணையிட்டது. நவம்பர் முதல் நாளில் அனைவருக்கும் இலவசக் கல்விக்கான ஆணை பிறந்தது. நவம்பர் பத்தாம் நாள் தேசிய இனங்களிடையே இருந்த அனைத்து வேறுபாடுகளும், சமுதாய அமைப்பில் நிலவிய ஏற்றத்தாழ்வுகளும், தகுதித்தரங்களும் நீக்கப்பட்டன. நவம்பர் பதினான்கில் தொழிற்சாலைகள் அனைத்தும் தொழிலாளரின் கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்பட்டன. டிசம்பர் முதல் நாள் 'தேசியப் பொருளாதாரத் தலைமை சோவியத்' நிறுவப்பட்டு அனைத்துத் தொழிற்சாலைகளின் இயக்கக் கட்டுப்பாடும், ஒழுங்குமுறை அமைப்பும் அதனிடம் ஒப்படைக்கப்பட்டன.

அரசியல் அமைப்பு சபை

ரஷ்யாவின் அக்டோபர் புரட்சி முதலாளித்துவ உலகின் அடித்தளத்தையே உலுக்கி, உலகை இரு எதிர் முகாம்களாகப் பிரித்தது. 1917-ஆம் ஆண்டு நவம்பர் 15-ஆம் நாளிலேயே அரசியல் அமைப்பு சபைக்கான தேர்தல் தொடங்கிவிட்டது. விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் வாக்கெடுப்பு நடத்தி, புரட்சி வழிவகுத்த பாதையில் மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட அரசியல் அமைப்பு சபை 1918-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 5-ஆம் நாள் தாரிதா மாளிகையில் கூட்டப்பட்டது. ரஷ்யா ஒரு 'சோவியத்துகளின் குடியரசு' எனவும் அறிவிக்கப்பட்டது. 1918-இல் தொழிலாளர்களும் விவசாயிகளும் அடங்கிய செஞ்சேனை ஒன்று அமைக்கப்பட்டது. தற்காலிக அரசு அமைத்திருந்த மக்கள் படைக்குப் பதிலாக நாட்டில் சட்ட, அமைதியை நிலைநாட்டவும், குடிமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் தொழிலாளர்கள் - விவசாயிகளின் மக்கள் படை தோற்றுவிக்கப்பட்டது.

பயிற்சி வினாக்கள்

1) 1917- ஆம் ஆண்டின் அக்டோபர் புரட்சியைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

2) 1917- ஆம் ஆண்டு அக்டோபரில் நடைபெற்ற போல்ஸ்விக் புரட்சி பற்றி ஒரு கட்டுரை வரைக.

பாடம் – 20 ரஷ்ய உள்நாட்டுப் போர் 1918–20

ரஷ்யாவில் லெனின் தலைமையில் அமைக்கப்பட்ட (போல்ஸ்விக்) கம்யூனிஸ்ட் அரசு முதல் உலகப் போரிலிருந்து ரஷ்யாவை விடுவிக்க பிரஸ்ட் லித்தோவ்ஸ்க் எனும் உடன்படிக்கையை ஜெர்மனியுடன் செய்து கொண்டது, அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, ஜப்பான் போன்ற நாடுகளுக்குப் பிடிக்கவில்லை. எனவே கம்யூனிச அரசுக்குத் தொல்லைகள் தரும் வகையில் உள்நாட்டுப் போரைத் தூண்டினர். உள்நாட்டுப் போரை உருவாக்கிய இவர்கள், படைகள் புகவேண்டிய பகுதிகள் குறித்தும் உடன்பாடு ஒன்றினை மேற்கொண்டன. உக்ரெய்ன், கிரிமியா, பெஸ்ஸரேபியா ஆகிய பகுதிகளில் பிரான்சும் வடக்கு ரஷ்யா, டான், குபன்காகஸ் பகுதிகளில் இங்கிலாந்தும், தூரக்கிழக்கு சைபீரியாப் பகுதிகளில் அமெரிக்காவும், ஜப்பானும் தங்கள் கவனங்களைச் செலுத்தி உள்நாட்டுப் போரைத் துரிதப்படுத்த திட்டங்கள் வகுக்கப்பட்டன.

இந்த ஏகாதிபத்திய நாடுகளின் துணையுடன் எதிர்ப்புரட்சியாளர்கள் அமைத்த படைக்கு வெண்சேனை என்று பெயர். போல்ஸ்விக் புரட்சியாளர்கள் மோகில்யோவ் என்ற இராணுவத் தலைமையகத்தைப் பிடித்ததும், அங்கிருந்த தள்பதிகள் கன்னியோவும், அலெக்சயேவும், பைகோவும் சிறையிலடைக்கப்பட்டனர். அங்கிருந்து அவர்கள் தப்பி, ஏற்கனவே டான் பகுதியில் தேசிய கோசக் ஆட்சியினை உருவாக்கியிருந்த காலதின் என்பாரோடு சேர்ந்துகொண்டனர். அலெக்சயேவ் தலைமையில் பழைய மன்னரின் படை அதிகாரிகளையும், வீரர்களையும், பிற நாட்டினர் உதவியுடன் 1918-இல் வெண்சேனை எனும் படையை உருவாக்கினார். இவர்களுக்கு எதிராக லெனின் அரசு உருவாக்கியிருந்த செஞ்சேனைப்படை உக்ரெய்ன், டான் பகுதியில் ஒரு முனைத் தாக்குதல் நடத்திற்று. டான் பகுதியில் நடைபெற்ற போரில் வெண்சேனை தோல்வியுற்றது. இத்தோல்வியால் காலதினின் ஆட்சி முற்றுப் பெறவே தோல்வியுற்றது. படையினர் ஸ்டெப்பிப் பகுதியில் இருந்த குயன் நோக்கிப் பின்வாங்கியது. ஏப்ரலில் ஏசுதரினோதர் மீது தொடுக்கப்பட்ட தாக்குதலின்போது கார்னிலோவ் கொல்லப்பட்டார்.

ஜெர்மனியுடன் ரஷ்யா செய்துகொண்ட ஒப்பந்தத்தை விரும்பாத மேலை நாடுகள் ரஷ்யாவுக்குள் தங்கள் நாட்டுப் படைகளை அனுப்பலாயினர். 1918 மார்ச்சில் முர்மான்ஸ்க் நகரில் இறங்கிய ஆங்கில, அமெரிக்க, பிரெஞ்சுக் கூட்டுப் படையொன்று ஆர்க்கேஞ்சல் நகரைக் கைப்பற்றி சேகோவ்ஸ்கி என்ற பொதுக்குடிமைக் கட்சித் தலைவரின் கீழ் தற்காலிக அரசு ஒன்றை நிறுவியது. அமெரிக்கப் போர்க் கப்பலான புரூக்ளின், ஆங்கிலக் கப்பலான சஃபோக், ஜப்பானியக் கப்பல்களான ஐவசி, அசாகி ஆகியவையும் விளாடிவாஸ்தோக் பகுதியில் போர் நடவடிக்கைகளில் இறங்கின. ஜப்பானியர் இருவரை ஜப்பானியரே கொலை செய்துவிட்டு, அப்பழியை ரஷ்யாவின் மீது போட்டுவிட்டு இதைக் காரணம் காட்டி ஜப்பானியப்படை ஏப்ரல் 4-இல் விளாடிவாஸ்தோக் நகரில் போர்த் தொடுத்தது. வெளிநாட்டுப் படையின் உதவி கிடைத்து விட்டது என்று செமனோவ்ஸ்கி ரஷ்ய படைகளோடு மோதினார். ஆனால் அப்படையை செஞ்சேனைத் தளபதியான ஜெர்ஜிலாவோ என்பவர் மே மாதத்திலும் ஜூலையிலும் தோற்கடித்தார். பிரெஞ்சுக்காரர்களின் தலைமையில் 40,000 'செக்' படை மே மாத இறுதியில் டிரான்ஸ்சைபீரியன் இருப்புப் பாதை வழியே சென்று இர்குட்ஸ்க் தவிர,

ஏனைய பெரும் புகைவண்டி நிலையங்களைக் கைப்பற்றியது. ஆனால் செக் படையினர் இறுதிவரை இந்நிலையில் இல்லை. இப்படையில் ஒரு பிரிவினர் ரஷ்யாவின் ஆதரவாளர்களாக மாறிவிட்டனர். வால்கா, யூரர், சைபீரிய சமாரா, ஆர்க்கேஞ்சல், ஒம்ஸ்க் ஆகிய இடங்களில் சமதர்மப்புரட்சியாளர்களின் ஆட்சி அமைக்கப்பட்டது. ஜூலையில் டிரான்ஸ்காஸ்பியன் பகுதியில் ஊடுருவிய ஆங்கிலப்படை குலக்குகளின் துணையைப் பெற்று ஆகஸ்டு மாதம் பாகுவில் இறங்கியது. மன்னரின் ஆட்சிக் காலத்தில் தாங்கள் அளித்திருந்த ஆயுதங்களையும், பிற பொருட்களின் குவிப்பையும் பாதுகாக்கவே இப்படையெடுப்பு நடைபெறுகின்றன எனக் கூட்டுப்படையினர் சமாதானம் கூறினர்.

ஆங்கிலப் படையின் துணையோடு மென்சிவிக்குகளும், சமதர்மப் புரட்சியாளர்களும் பாகுவில் கம்யூனிச அரசைத் தூக்கி எறிந்ததோடு ஆகஸ்டு முதல் 'மத்திய காஸ்பியன் சர்வாதிகார அரசு' ஒன்றினை நிறுவினர். ஜூன் மாதத்திலேயே துருக்கியப்படை ஜார்ஜியாவையும், ஆர்மீனியாவையும் கைப்பற்றியது. செப்டம்பர் 25-இல் துருக்கியப் படையொன்றும் அந்நகரில் நிலை கொண்டது. ஆங்கிலப்படையின் துணையுடன் துதோவ் என்பவர் ஓர்ன்பர்க் நகரைக் கைப்பற்றி மத்திய ஆசியப் பகுதியின் தொடர்பிலிருந்து துர்கிஸ்தானைத் துண்டித்துவிட்டார். அமாராப் பகுதியில் அடைக்கப்பட்ட சமதர்மப் புரட்சியாளர் அரசும் ஓம்ஸ்க் பகுதியில் நிறுவப்பட்ட வலதுசாரிகளின் அரசும் தங்களுக்கெனத் தனிப்படை எதுவும் இல்லாத நிலையில் செப்டம்பர் மாதம் உஃபாவில் ஒரு மாநாடு கூட்டி, சோவியத் எதிர்ப்புக் கொள்கை சம்பந்தமான உடன்பாடு ஒன்றினை செய்துகொண்டன. தெற்கில் தளபதி டென்கின் தலைமையில் புதிப்பிக்கப்பட்ட படை எகதரினோதர், ஜொவோரசிக் ஆகிய நகரங்களைக் கைப்பற்றியது. தளபதி கிரோஸ்னோவ் தலைமையில் செயல்பட்ட பெரும் படையொன்று சாரித்சின் நகரைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டது. ஆனால் ஸ்டாலின் அதனை முறியடித்தார். அதனால் போருக்குப் பின் அந்நகர் ஸ்டாலின்கிரேடு என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. ஹாசன் எனும் நகரை செக் படையினரும் வெண்சேனையினரும் கைப்பற்றினர். அந்நகரின் பாதுகாப்புக்கென வைக்கப்பட்டிருந்த ஐநூறு கோடி ரூபிள்-மதிப்புள்ள மன்னரின் தங்கக் கட்டிகளும் எதிர்ப்புரட்சியாளர்களின் கையில் சிக்கின. ஆனால் ஐந்தாவது செஞ்சேனைப் படையணி செப்டம்பரில் ஹாசனையும், அக்டோபரில் சமாராவையும் கைப்பற்றிக்கொண்டது. மொத்தத்தில் 1918-ஆம் ஆண்டின் இறுதியில் சோவியத் நாட்டின் முக்கால் பகுதி நிலம் எதிரிகளின் கையிலேயே இருந்தது.

முதல் உலகப் போர் நட்பு நாடுகளுக்குச் சாதகமான சூழ்நிலை ஏற்பட்டமையால் சோவியத் குடியரசை சுற்றிலும் போர்முனைகளின் வளையங்கள் உருவாயின. உணவுப் பொருள்களோ, போக்குவரத்து வசதிகளோ, போதிய அளவில் இல்லை. இதற்கிடையே தொற்று நோய்களும் பரவின. மேலை நாடுகளின் துணையுடன் எதிர்ப்புரட்சியைத் துவக்கியிருந்த முதலாளிகள், வங்கி உரிமையாளர்கள், நிலப்பிரபுக்கள் பழைய படைத்தலைவர்கள், மென்சிவிக்குகள், சமதர்மப் புரட்சியாளர்கள், குலக்குகள் ஆகியோர் வெற்றி பெறுவர் என்றே ஏகாதிபத்தியவாதிகள் எண்ணினர். ஆனால் நாட்டுப்பற்றுமிக்க செகோஸ்லாவாக்கியர்கள், ஜெர்மானியர்கள், ஹங்கேரியர்கள், செர்பியர்கள், போலந்து மக்கள், ஆகிய பல இனத் தொழிலாளர்கள் செஞ்சேனையில் சேர்ந்தனர். போர்ப் பொதுவுடமைக் கொள்கையின் அடிப்படையில் கனரக, நடுத்தர, சிறு தொழில்கள்

யாவும் நாட்டுடமையாக்கப்பட்டு போர்க்கானத் தேவைப் பொருட்களை மிகுதியும் உற்பத்தி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சுதந்திர வாணிகம் தடை செய்யப்பட்டு, குறித்த விலைக்கே உபரியான உணவுப் பொருட்களெல்லாம் கொள்முதல் செய்யப்பட்டு போர்முனைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

1918-ஆம் ஆண்டு செப்டம்பர் 12-இல் துனிஉவ்ஸ்கி என்ற செஞ்சேனைப் படைத் தளபதி சிம்பிர்ஸ்க், சமாரா, சிக்ரன் ஆகிய பகுதிகளில் வெண்சேனையினை வெளியேற்றினார். அதனைத் தொடர்ந்து வால்கா நீர்வழி போக்குவரத்துக்குப் பயன் படுத்தப்பட்டது. அதே ஆண்டு மற்றொரு செஞ்சேனைப் படை இசவ்சய்க் என்ற நகரையும், ஒரு வாரம் கழித்து 'ஒட்கின்ஸ்க்' நகரையும், கைப்பற்றியது. முதல் உலகப் போரில் அச்சு நாடுகள் தோல்வியுற்றதால், பிரஸ்ட்-லிட்டோவ்ஸ்க் உடன்பாட்டை மாற்றியமைக்க லெனினுக்கு வாய்ப்பு ஏற்பட்டது.

இவ்வாண்டு மார்ச் மாதம் உஃபாவைக் கைப்பற்றிய வெண்சேனை மாஸ்கோ நோக்கிச் செல்வதற்குப் பதிலாக ஆர்க்கேஞ்சல் நோக்கிச் சென்றது. இவ்வாறு செய்வதன் மூலம் அப்பகுதியில் செயல்பட்டுவந்த ஆங்கிலப் படையுடன் இணைந்து, தெற்கே ஒல்கா நோக்கிப் பாய்ந்து டென்கினின் படைகளுடன் இணைய முடியும் என நம்பியது. ஆனால் ஏப்ரல் இறுதியில் பிரான்சேயின் தலைமையில் எதிர்த்தாக்குதல் ஒன்றைத் துவக்கி செஞ்சேனை ஜூலையில் கோல்சாகின் படைகளைத் தோற்கடித்து அவரது குறிக்கோளைச் சிதைத்தது. தெற்கே டென்கின் தலைமையில் செயல்பட்ட வெண்சேனையினர் குறிப்பிடத்தக்க சில வெற்றிகளைப் பெற்றனர். ஜூன் 25-இல் கார்கோல் நகரைக் கைப்பற்றிய அப்படை மறுவாரத்தில் சாரித்சின் நகரைக் கைப்பற்றியது. ஜூலையில் போல்தாலாவும், ஆகஸ்டில் ஓடிசா, கீவ் நகரங்களும் வீழ்த்தன. இவ்வெற்றிகளுக்குப் பின் மாஸ்கோவைக் கைப்பற்றும் நோக்குடன் வடக்கு நோக்கிப் பாய்ந்தார் டென்கின். செப்டம்பர் 20-இல் குர்ஸ்க் நகரும் அக்டோபர் 6-இல் ஓரன்சும், 13- இல் ஓரியோல் நகரும், தொடர்ந்து வீழ்ந்தன. அந்நிலையில் வெண்சேனையினர் மாஸ்கோவுக்கு 400 கி. மீட்டரிலே இருந்தனர். வடக்குக் காகசிலும், நிலைமை மிகநெருக்கடியாயிற்று. திகோரட்ஸ்கயா, எகதரினோதர், நொவோரோசிக் நகர்கள் வீழ்ந்ததோடு 16,000 சோவியத் படையினர் துண்டிக்கப்பட்டனர். மத்வயேவின் தலைமையில் இயங்கிய அப்படையினர் நெருக்கடியைச் சமாளித்து வடக்குக் காகசஸ் படையணிகளோடு இணைந்தனர்.

வடக்கே 20,000 வெண்சேனைப் படையினர் யூதனிக் தலைமையில் எஸ்தோனியாவிலிருந்து கிளம்பி பெட்ரோகிரேடு நோக்கி முன்னேறினர். நவம்பரில் ட்ராட்டியின் தலைமையில் அப்படையைச் சந்தித்த செஞ்சேனையினர் எதிர்ப்பாளர்களை அவர்கள் புறப்பட்ட இடத்திற்கே விரட்டியடித்தனர். அதே சமயம் டென்கின் என்பவர் ஓயோவிலிருந்து விரட்டியடிக்கப்பட்டார். இதுகாறும் சைபீரியாவில் இயங்கி வந்த எதிர்ப்பாளர் அரசும் முற்றிலும் சரிந்தது. நவம்பர் 16-இல் ஓம்ஸ்க் மீண்டும் செஞ்சேனையிடம் சரணடைந்தது. தோல்வியுற்ற கோல்சக் நட்பு நாடுகளின் கூட்டணிப் படையுடன் டிரான்ஸ்சைபீரியின் இருப்புப்பாதை வழியே பின்நோக்கி ஓடி இர்குட்சை அடைந்தார். அங்கு அரசியல் இடதுசாரிகளான தீவிரவாதிகளிடம் சிக்கிய அவர் 1920

பிப்ரவரியில் தூக்கிலிடப்பட்டு அங்காராவின் உறைபனிக்குள் எறியப் பட்டார். 1920-ஆம் ஆண்டு முதல் காலாண்டுக் காலம் வரை பல இடங்களில் தோற்றும் தாக்குப்பிடித்து நின்ற டென்கின் மார்ச் 27-இல் அவரது கடைசி இருப்பிடமான நொவோரோசிக் நகரையும் இழந்தார். படைத்தலைமையை ஆங்கிலத் தளபதி ரேஞ்சல் என்பவரிடம் ஒப்படைத்த டென்கினும் அவரது துணையாளர்களும் ஆங்கிலேயரின் துணையோடு நாட்டைவிட்டே வெளியேறித் தப்பினர். உக்ரெய்ன், பைலோரஷ்யப்பகுதிமக்கள் வெளியாரின் ஆட்சியை எதிர்த்துக் கிளர்த்தெழுந்தபோது சோவியத் அரசின் உதவியும் கிட்டியது. 1918 நவம்பர் 29-இல் உக்ரெயின் சோவியத் குடியரசு மீண்டும் உதயமாயிற்று. டிசம்பர் 31-இல் பைலோ ரஷ்யாவில் - தொழிலாளர் - விவசாயிகளின் தற்காலிக அரசு தோற்றுவிக்கப்பட்டது. டிசம்பரிலேயே லிதுவேனியாவிலும் சோவியத் ஆட்சி அமைக்கப்பட்டது.

ஆங்கிலப் படை ஒன்று 1920-ஆம் ஆண்டு ஆர்க்கேஞ்சல் நகரில் தோற்றுப் பின்வாங்கியது. சோவியத் படையின் தாக்குதல்களை அதிகரிக்க வேண்டி தென்போர்முனைப் படைத் தளபதியாக ஃபிரான் ஹேம் என்பவரும் வடக்குப் போர்முனைத் தளபதியாக வாசிலிசோரின் என்பவரும் பொறுப்பேற்றனர். சோல்சக். தெனிகின் ஆகியோரின் கலகப்படையினரை எதிர்க்க எதிர்ப்புரட்சியாளர்களின் ஆட்சியிலிருந்த பகுதிகளில் மக்கள் படையினரும் உருவாக்கப்பட்டனர். தலைமறைவிலிருந்த பொதுவுடைமைக் கட்சியினர் இப்படையணிகளை உருவாக்கிப் பயிற்சியளித்தனர். ஏப்ரல் 25-இல் போலந்துப் படையினர் தாக்குதலைத் தொடுத்து சிதோமிர், கோரஸ்தான், காசதின், கீவ் ஆகிய நகரங்களைப் கைப்பற்றினர். 'செமியன்புதியோனி' என்பவரின் தலைமையில் செயல்பட்ட செஞ்சேனையின் குதிரைப்படை, போலந்துப் படையணியை ஊடுருவி அதைத் தோற்கடித்தது ஜூன் 12-இல் கீவ் நகரைத் திரும்பக் கைப்பற்றியது. கிரிமியாவில் தன் படையுடன் காத்திருந்த தளபதி ரேஞ்சல் தன்பாசறையை விட்டுப்புறப்பட்டுத் தன் உக்ரெய்ன் பகுதியைதாக்கினார். புதியோனியின் ஊடுருவலும் புதிதாக துகசேவ்ஸ்க்கியின் தலைமையில் வந்துசேர்ந்தப் படையின் விரைந்த முன்னேற்றமும் போலந்துப் படையணியைச் சிதறடித்தன. ஆனால் வார்சாவின் வெளிப்புறத்தில் துகசேவ்ஸ்க்கியின் படையை தடுத்து நிறுத்திய போலந்துப் படை ரஷ்யப்படையின் தாக்குதலை வெற்றிகரமாகச் சமாளித்தது. இறுதியில் அக்டோபர் 12-ஆம் நாள் ரீஹாவில் போர் நிறுத்தத்திற்கான உடன்பாடு ஏற்பட்டது. 1921 மார்ச்சில் கையெழுத்திடப்பட்ட ரீஹா உடன்பாட்டின்படி Riga Treaty சோவியத்போலந்து எல்லைகள் வரையறுக்கப்பட்டன. அதன்படி உக்ரெய்னிலும் பைலோ ரஷ்யாவிலும் சில பகுதிகள் போலந்துக்கும் கிடைத்தன. போலந்துடன் சமாதான உடன்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து ஏஞ்சலின் படைகளைச் சந்திக்கும் முழுமுயற்சியில் ரஷ்யப் படைகள் ஈடுபடுத்தப்பட்டன. இப்படையினர் திறமைமிக்க ஏஞ்சலின் படையைத் தோற்கடித்தனர். ஆங்கிலப்படையும் இஸ்துமஸ் வரை பின்வாங்கியது. 1920 நவம்பர் 11-இல் அந்நகர் கடுமையான தாக்குதலுக்கு இரையானது. வெண்சேனையில் இருந்து 1,50,000 படைவீரர்களும், தளபதி ஏஞ்சலும் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டனர். லெனின் அமைத்த சோவியத் அரசை அகற்ற முயன்ற 14 நாடுகளில் கூட்டுப்படை சோவியத் நாட்டின் மக்கள் படைக்குமுன் தோல்வியையே தழுவியது.

அமெரிக்க நாட்டுப் படையினர் 1920 ஏப்ரலில் தோற்கடிக்கப்பட்டு ரஷ்யாவின் தூரக்கிழக்கு பகுதியிலிருந்தே விரட்டியடிக்கப்பட்டனர். ஜப்பான் தவிர, ஏனைய நாடுகள், சோவியத் அரசரோடு போரிடுவது பயனற்ற ஒன்று என்று கருதிப் பின்வாங்கியது. ஜப்பான், மங்கோலியாவில் 10,000 பேர் கொண்ட படையை உருவாக்கி, புதிய தாக்குதலைத் தொடுத்தது. மங்கோலியப் புரட்சியாளர்களும், செஞ்சேனையினரும், ஜப்பானின் துணையுடன் இயங்கிய வெண்சேனையினரைத் தோற்கடித்து மங்கோலியாவை ஒரு குடியரசாக்கினர். 1922 அக்டோபர் 25-இல் ஜப்பானும் கடைசியாக ரஷ்ய மண்ணைவிட்டு விலகியது. நவம்பர் 14- இல் தூரக்கிழக்குக் குடியரசும் ரஷ்யாவுடன் இணைந்தது. பின்லாந்து, போலந்து, பால்டிக்கடல் பகுதி நாடுகள் நீங்கிய ஏனைய பகுதிகள் அனைத்தும் சோவியத் ரஷ்யாவின் ஆட்சியில் நிலைத்தன. ஆர்மீனியா, அசர்பைசன் பகுதிகளில் பிரிவினைவாதிகளான தேசியவாதிகளின் ஆட்சி நிறுவப்பட்டிருந்தது. அப்பகுதிகளில் வலிமையுடன் திகழ்ந்த 'பொதுவுடைமை இராணுவப் புரட்சிக் குழுக்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்று 1920-இல் அனுப்பப்பட்ட செஞ்சேனை அவற்றை கைப்பற்றியது. 1921 பிப்ரவரியில் ஜார்ஜியாவிலிருந்த மென்சிவிக் அரசை மற்றொரு படை கைப்பற்றியது. மத்திய ஆசியப் பகுதி மக்களைப் போலவே காகசஸ் பகுதியிலிருந்த பஸ்கீர், தாதர், காசர் மக்களும் சோவியத் ஆட்சியை ஏற்றுக்கொண்டனர். அப்பகுதியில் வாழும் முஸ்லீம் மக்கள், தாங்கள் தங்களுடைய கலாசார, பழக்க வழக்கங்களை சுதந்திரமாக அனுபவிக்கலாம் என்று லெனின் அறிவித்ததும், அவர்களும் சோவியத் அரசை ஏற்றுக்கொண்டனர். விளாடிவாஸ்டாக் பகுதியில் இருந்த ஜெர்மானியப் படை 1922 நவம்பரில் வெளியேறியது. எனவே அக்குடியரசும் சோவியத் ஆட்சியின் கீழ் வந்தது. உள்நாட்டுப் போருக்குப் பின், தேசிய இனங்களின் அமைச்சராயிருந்த ஸ்டாலின் பல பகுதிகளையும் இணைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வெற்றி பெற்றார்.

உள்நாட்டுப் போரில் லெனின் பெற்ற வெற்றித் தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் கிடைத்த வெற்றியாகும். சோவியத் அரசுக்கு மக்களின் ஒருமித்த ஆதரவு இருந்தது. கடமையிலும், கட்டுப்பாட்டிலும் ஒழுங்கு நெறி தவறாத பொதுவுடைமைக் கட்சியின் முழு ஆதரவு இருந்தது. அரசியல் கோட்பாடுகளில் தெளிவு பெற்ற செஞ்சேனை, மன உறுதியுடன் போராடியது. ஆனால் வெண்சேனைப் படையினர் அவ்வப்போது கிடைத்த அரசியல் கோட்பாடற்ற கைக்கூலிகளே. வெண்சேனையை நடத்தியோரின் குறிக்கோள் எல்லாம் ரஷ்யாவில் கடந்த காலத்தில் நிலவிய சமுதாய அமைப்பை நிலை நிறுத்துவதும், மன்னராட்சியை ஏற்படுத்துவதும், ஒன்றிணைக்கப்பட்ட, பிளவுபடாத பெரும் ரஷ்யப் பேரரசினை உருவாக்குவதுமே. மையப் பகுதியில் தலை நகரைக் கொண்டியங்கிய செஞ்சேனையினர் தேவையான போக்குவரத்துத் தொடர் பினையும், செய்தித் தொடர்பினையும் எளிதில் பெற்று அனைத்துப் போர் முனைகளிலும் ஒருங்கிணைந்து செயலாற்றினர். செஞ்சேனையின் குறிக்கோள்கள் மக்களைத் தழுவி நின்றன. ஆனால் வெண்செனையின் குறிக்கோள்கள் மக்கள் மனதைத் தொடவில்லை.

பயிற்சி வினா

ரஷ்யாவில் 1917 க்குப் பின் நடைபெற்ற உள்நாட்டுப் போரைப் பற்றி கட்டுரை வரைக.

பாடம் – 21

சோவியத் நாடு உருவாதலும், போர் பொதுவுடமையும் புதிய பொருளாதாரக் கொள்கையும்

உள்நாட்டுப்போர் முடிவுற்றபோது 2,13,00,000 சதுர கிலோமீட்டர் பரப்பளவையும், 13,20,000 மக்களையும் கொண்ட மிகப்பரந்த நாடாக ரஷ்யா திகழ்ந்தது. ரஷ்யா, உக்ரெயின், பைலோரஷ்யா, ஜார்ஜியா, அர்மீனியா, அசர்பைசன் ஆகிய ஆறு குடியரசுகள் இணைந்து உலக நிலப்பரப்பில் ஆறில் ஒரு பகுதியைக் கொண்டிருந்தன தொழிலாளர்கள் விவசாயிகள், நிலப்பிரபுக்கள், தொழிலதிபர்கள், வணிகர்கள் எனச் சமுதாயம் பல பிரிவுகளைச் சேர்ந்த மக்களை கொண்டிருந்தது. போர்க்காலத்தில் இச்சமுதாய அமைப்புமுறை ஓரளவு மாறியிருந்தது. விவசாயிகளே ஏறத்தாழ 80 சதவீதத்தினர் இருந்தனர். போருக்கு முன் 1922-ல் உருவான சோவியத் குடியரசுகளின் இணைப்பே வரலாற்றுச் சிறப்புப் பெற்ற நிகழ்ச்சியாகும்.

அக்டோபர் புரட்சிக்குப்பின் ஐந்தாண்டுக்காலக் கட்சி வேலைகளும் கல்வித் துறையில் மக்களை விழிப்புறச் செய்ய ஆற்றிய பணிகளுமே குடியரசுகளின் கூட்டு எளிதில் உருவாகத் துணை செய்தன. கட்சியின் 10- வது மாநாட்டில் 'தேசீய இனங்களின் மீதான கட்சியின் தலையாய குறிக்கோள்' பற்றிய தீர்மானம் பல குடியரசுகளையும் ஒன்றிணைத்து ஒரேநாடு ஒரே மைய அரசு உருவாக வழி காணுமாறு கோரியது. தனிக் குடியரசுகளாக இயங்கினும் சோவியத்தின் ஆட்சி அமைப்புமுறை மக்கள் மனதில் ஆழப்பதிந்திருந்ததால் மக்களின் வேற்றுமைகளுக்கிடையே ஒற்றுமையை உருவாக்க முடிந்தது. நாட்டின் பொருளாதாரப் பாகுபாட்டு முறையும் இவ்வினைப்பை உறுதி செய்தன; மத்திய ரஷ்யப் பகுதியின் தொழில் நிறுவனங்களில் உற்பத்தியான பொருட்கள் தென்கிழக்கு, வடபகுதிகளுக்கு அனுப்பப்பட்டு, அதற்குப் பதிலாகப் பருத்தி, மரம், நார்பொருள்களைப் பரிமாறிக்கொள்ள வேண்டியிருந்தது. தென்பகுதியில் எண்ணெய், நிலக்கரி, இரும்புத்தாது போன்ற தொழில் வளர்ச்சிக்கான அடிப்படைத் தேவைப்பொருட்கள் உற்பத்தியாயின. இவற்றின் ஒன்றிணைந்த செயற்பாட்டுக்காவும் ஒரே நாடு என்ற உருவமைப்பு தேவையாயிற்று. நாட்டை மின்மயமாக்கும் லெனினின் கொள்கையான 'கோயல்ரோ' (Goelro) நிறைவேறவும், சமதர்மக் கோட்பாடுகள் வெற்றி இலக்கை எட்டவும் இணைப்பு இன்றியமையாததாயிற்று. சோவியத் குடியரசுகளைச் சுற்றிலும் முதலாளித்துவ நாடுகளின் வளையம் வலுவுடன் குறுகத் தொடங்கியிருந்த காலத்தில் ஒவ்வொரு குடியரசும் தனித்தனியே இயங்குவதானால் இராணுவம் வெளியுறவு, இராஜதந்திர நடவடிக்கைகள் ஆகியவற்றை மேற்கொள்ள மட்டுமே வாய்ப்பும், வசதியும் ஏற்படுமே தவிர நாட்டுவளர்ச்சிக்கான நேரமே இல்லாது போய்விடும்.

சோவியத் குடியரசுகளின் இணைப்பு உலகப்புரட்சி இயக்கத்தின் வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் இன்றியமையாததாயிற்று. உலக அரங்கில் அரசியல் 'பொருளாதாரத் துறைகளில் பெரும்பங்கேற்று அடிமை விலங்குகளில் அடைபட்டுக்கிடக்கும் நாடுகளை - குறிப்பாகக் கீழை நாடுகளை விடுவிக்கும் பணியில் முயற்சிகள் மேற்கொள்ள

வேண்டியிருந்தன. குடியரசுகளின் இணைப்புக் கொள்கையை லெனின் அறிவித்தபோது இணைப்புக்கான நடிவடிக்கைகளைக் கட்சியே மேற்கொண்டது. 1922-ஆம் ஆண்டின் மத்தியிலேயே ரஷ்யாவைத் தவிர்த்த ஏனைய குடியர்சுகள் ரஷ்ய அரசோடு அனைத்து மட்டத்திலும் நெருங்கிய உறவு கொள்ள விரும்பின. இது காறும் சோவியத் அரசோடு ஒப்பந்தங்களின் மூலமான உறவினையே கொண்டிருந்த அவை ஒரே ஒரு தனிப்பெரும்நாடு உருவாவதை வரவேற்றன. அதன் தொடக்கம் டிரான்ஸ்காகசஸ் குடியரசுகளான அசர்பைசன், ஆர்மீனியா, ஜார்ஜியா ஆகியவற்றிடமிருந்தே வந்தது. பிப்ரவரியிலேயே அம்மூன்று குடியரசுகளும் இணைந்து 'டிரான்காகசியன் சோவியத் சமதர்மக் குடியரசு' என்ற ஓர் அமைப்பை உருவாக்கியிருந்தன. உக்ரெயின், பைலோ ரஷ்யா போன்ற பிறபகுதி மக்களும் இணைப்புக் கொள்கையை இறுதியாகவும், உறுதியாகவும் விரைவுபடுத்த வேண்டினர்.

முதல் நடிவடிக்கையாக ரஷ்யப் பொதுவுடமைக் கட்சியின் மத்தியக் குழு சோவியத் குடியரசுகளின் இணைப்புச் சிக்கலை ஆராயும் பொருட்டு ஸ்டாலின் தலைமையில் ஒரு தனிக் குழுவை நியமித்தது. அக்குழுவில் அலெக்சாண்டர், மியாஸ்னிகோவ், கிரிகரி ஆர்ஜோனிகிட்ச், பெட்ரோவ்ஸ்கி ஆகியோர் ரஷ்யரல்லாக் குடியரசு மக்களின் பிரதிநிதிகளாகப் பங்கு பெற்றுப் பணியாற்றினர். குடியரசுகளின் சுயாட்சித் திட்ட அடிப்படையில் இணைப்புக்கான திட்டத்தினை ஸ்டாலின் உருவாக்கினார். அதன்படி பைலோரஷ்யா, ஆர்மீனியா, அசர்பைசன், ஜார்ஜியா ஆகியன சுயாட்சி அதிகாரம் பெற்ற குடியரசுகளாக ரஷ்யக் கூட்டாட்சி அமைப்பில் இணையும். 'ரஷ்ய சோவியத் கூட்டாட்சி சம தர்மக் குடியரசு' உயரதிகாரமனைத்தும் பெற்ற மைய அரசாக இயங்கும் என அறிவிக்கப்பட்டன. பல குடியரசுகளையும் சேர்ந்த பொதுவுடமைக் கட்சிகளின் மத்தியக் குழுக்கள் அத்திட்டத்தினை அங்கீகரித்தன. ஆனால் அதில் சில தவறுகள் இருந்ததையும் லெனின் சுட்டிக் காட்டினார் நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில் அதனைத் தீவிரமாக ஆராய்ந்திடும் நல்ல நிலையில் லெனின் இருக்கவில்லை. அந்நிலையிலும் இணைப்புத் திட்டத்தை ஆராய்ந்தவர், சோவியத் குடியரசுகளின் உரிமைகளை அதுகுறைத்துக் கணித்திருப்பதாயும், மக்களிடையே நிலவ வேண்டிய நட்புணர்வுக்கு அது குந்தகம் விளைவிக்கக் கூடுமென்றும் கூறினார். சமத்துவத்தினடிப்படையில் சோவியத் சமதர்மக் குடியரசுடன் சம உரிமைகளோடு தாங்களாகவே இணையவும், எப்போது விரும்புகிறார்களோ அப்போதே இணைப்பிலிருந்து விலகிச் செல்லும் உரிமை பெற்றதாகவும் அவ்வினைப்பு இருக்க வேண்டுமென்றார் லெனின். அதன்படி சம உரிமைகளின் அடிப்படையில் இணைப்பு ஏற்படவும் இணைப்பரசை நிர்வகிக்க சோவியத்துக்களின் மத்திய நிர்வாகக் குழு ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும் முடிவு செய்யப்பட்டது. கட்சியின் மத்தியக்குழு நிறுவியிருந்த தனிக்குழு லெனினின் திட்டத்தை 1922 அக்டோபர் 6-ஆம் நாள் அங்கீகரித்தது. அனைத்துக் குடியரசுகளைச் சேர்ந்த கட்சியின் மத்திய குழுக்கள் 'உக்ரெயின்' பைலோ ரஷ்யா, டிரான்ஸ் காகசியன் கூட்டாட்சிக் குடியரசு. ரஷ்ய சோவியத் குடியரசு ஆகிய அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து "சோவியத் சமதர்மக் கூட்டாட்சி நாடு" என்று பிரிந்து செல்லும் உரிமையுடன் உருவாவதற்கான ஏற்பாட்டினை ஏற்றுக்கொள்கின்றன' என்ற தீர்மானத்தை நிறைவேற்றின. அக்டோபர், நவம்பர் திங்களில் அனைத்துக் குடியரசுகளின் தொழிலாளர், விவசாயிகள், அலுவலக அலுவலர்களின் கூட்டங்களில் இணைப்பு பற்றிய ஏற்பாடு விவாதிக்கப்பட்டு அனைவரின் ஆதரவினையும் பெற்றது.

சோவியத் சமதர்மக் குடியரசு நாட்டை உருவாக்கும் தீர்மானத்தை ஏழாவது உக்ரெயின் சோவியத்துக்களின் மாநாடும், முதலாவது டிரான்ஸ் காகசியின் சோவியத்துக்களின் மாநாடும், நான்காவது பைலோ ரஷ்யா சோவியத்துக்களின் மாநாடும், பத்தாவது அனைத்து ரஷ்ய சோவியத்துக்களின் மாநாடும் ஏற்றுக்கொண்டபின், சோவியத் அரசியலமைப்பு மாநாட்டிற்கான பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதன் முதலாவது மாநாடு 1922 டிசம்பர் 30-இல் கூடியது. விகிதாச்சார முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுக் கலந்து கொண்ட 2215 பேராளர்களில் ரஷ்யப் பேராளர்கள் 1727 பேராகவும் உக்ரேனியர் பேராளர்கள் 364 பேராகவும், டிரான்ஸ் காகசியன் கூட்டமைப்பின் பேராளர்கள் 91 பேராகவும் பைலோ ரஷ்யப் பேராளர்கள் 33 பேராகவும் இருந்தனர். மாநாட்டின் சிறப்புத்தலைவராக லெனின் தேர்ந்தெடுக்கப்பட்டார். சோவியத் சமதர்மக் குடியரசு நாட்டை உருவாக்கும் அறிக்கையையும் பல்வேறு குடியரசுகளுக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்தங்களையும் மாநாடு அங்கீகரித்தது. ஓர் ஐக்கிய அரசை உருவாக்கும் லெனினின் கொள்கைகள் சட்டங்களாயின. இதயபூர்வமாகத் தாங்களாகவே இணைதல்; இணைந்த உறுப்பு நாடுகள் அனைத்துக்கும் சமஉரிமைகள்; உலக உழைப்பாளிகளின் நல்வாழ்வு அடிப்படையில் சோவியத் மக்களிடையே சகோதரக் கூட்டுறவு காணுதல்; இருக்கின்ற குடியரசுகளும், ஏற்படவிருக்கின்ற குடியரசுகளும் புதிய அரசுடன் இணைவதற்குக் கதவுகள் திறந்தே வைக்கப்பட்டிருக்கும் என்பவை அதன் சிறப்பு விதிகளாயின. ஒரு குடியரசு இணைவதற்கான விதிமுறைகளும், விரும்பும்போது இணைப்பிலிருந்து விடுபட்டு விலகிக் கொள்வதற்கான உரிமை, விதிகளும், நாட்டின் உயரதிகார அரசு அமைப்பையும் நிர்வாக அமைப்பையும் உருவாக்கும் வழிமுறைகளும் மாநாட்டில் தொகுத்து முடிக்கப்பட்டன. நாட்டின் உயரதிகார அமைப்பாக ஒரு மத்திய நிர்வாகக் குழுவினையும் மாநாடு தேர்ந்தெடுத்தது.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மத்திய நிர்வாகக் குழு ஓர் அமைச்சரவையைத் தேர்ந்தெடுத்தது. கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள எண்ணிக்கைக்குத் தக்கவாறு மத்திய நிர்வாகக் குழுவிற்கு நான்கு தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். முதன் முதலில் தலைவர்களாகத்தேர்வு பெற்றோர் மிக்கெயில் காலினின், கிரிகரி பெட்ரோவஸ்கி, அலெக்சாண்டர் செர்வியகோவ், நாரிமனோவ் ஆகியோரே. புதிய கூட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. நாட்டின் எந்தக் குடியரசும் மூத்த சகோதரன் என்ற மனப்பான்மையுடனோ, நாட்டுக்காவலன் என்ற எண்ணத்துடனோ இயங்கக் கூடாதென வலியுறுத்தப்பட்டது. 1923 ஏப்ரலில் கூடிய 12-வது கட்சிமாநாட்டில் சம உரிமைகளின் அடிப்படையில் அமைந்த மைய அரசின் அமைப்பும் முறையும், பேரரசில் இணைந்த குடியரசுகளின் கடமைகளும் தீர்மானிக்கப் பட்டன. அவ்வாண்டின் கோடைகாலத்தில் நாட்டின் புதிய அரசியலமைப்புச் சட்டத்தினை மத்திய நிர்வாகக்குழு ஏற்றது. ஒரு மத்திய அரசும், லெனினை பிரதமராகக் கொண்ட ஓர் அமைச்சரவையும், பல்வேறு மைய அரசுத்துறை அலுவலங்களும், நிறுவனங்களும் முறைப்படி அமைக்கப்பட்டன. 1924 ஜனவரியில் கூடிய புதிய பேரரசு சோவியத்துக்களின் 2-வது மாநாடு புதிய அரசியல் சட்டத்தினை ஏற்றுக்கொண்டது. அதன் மூலம் சோவியத் குடியரசுகளின் இணைப்பில் உருவான கூட்டரசு ஒன்று முறைப்படி உருவாகி இயங்கத் தொடங்கியது.

குடியரசுக் கோட்பாடுகளின் கொள்கைகளைக் கொண்டிருந்த புதிய அரசியல் சட்டம், சட்டத்தின் முன் அனைவரும் சமமே என்ற உண்மையை உணர்த்தியது: தாங்கள் விரும்பும் ஆட்சியை அமைத்துக்கொள்ளும் உரிமையை நல்கியது; எல்லோருக்கும் எல்லா உரிமைகளும் சமத்துவ அடிப்படையில் கிடைத்திட வழி செய்தது; நாட்டின் வளர்ச்சிக்கென மக்களின் கடமைகளை நினைவூட்டியது; ஜனநாயகக் கோட்பாட்டினைக் கோடிட்டுக் காட்டியது. வெளிநாட்டுறவு, வெளிவாணிகம். இராணுவம், நாணயம், செய்திபோக்குவரத்துத் தொடர்புகள் போன்றவை மத்திய அரசின் அதிகாரத்தின் கீழ் வந்தன: மற்றவையனைத்தும் உறுப்பு நாடுகளான குடியரசுகளின் தன்னாட்சிக்கு உட்படுத்துப்பட்டன. மத்திய நிர்வாகக்குழு அனைத்து ரஷ்ய சோவியத் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்படும், கூட்டரசின் சோவியத் என்றும், குடியரசின் பிரதிநிதிகளாலும் மத்திய அரசின் நேராட்சிக்குட்பட்ட பகுதிகளின் பிரதிநிதிகளால் தேர்ந்தேடுக்கப்படும். 'தேசிய இனங்களின் சோவியத்' என்றும் இரு சபைகளைக் கொண்டிருக்கும். இம்முறையால் அனைத்து மக்களும், அனைத்து இனங்களும் ஒரு புதிய சமதர்மச் சமுதாயத்தை உருவாக்கிட ஒருங்கிணைந்து செயல்பட முடிந்தது. உருவாக்கப்பட்ட புதிய அரசும் சமத்துவம், சகோதரத்துவம் மக்களின் ஆட்சியுரிமை யென்ற கோட்பாடுகளின் மொத்த உருவாக அமைந்தது.

புதியநாடு உருவானதைத் தொடர்ந்து சமதர்மக் குடியரசுகளின் எல்லைகளை வரையறுத்து நிர்ணயிக்கும் வேலை தொடங்கியது. 1926-ஆம் ஆண்டுக்குள்ளாக விடெப்ஸ்க், கோமல், சுமோலன்ஸ்க் ஆகிய பகுதிகளிலிருந்த பைலோ ரஷ்ய மக்களை பைலோ ரஷ்ய குடியரசில் இணைத்ததால் அதன் எல்லைகள் விரிவாகி, பரப்பளவு இருமடங்காயிற்று. உஃபா மாநிலம் பாஸ்கிரியின் குடியரசோடு இணைக்கப்பட்டதால் அதன் பரப்பளவும் மக்கள் தொகையும் இருமடங்காயிற்று. 1924-ஆம் ஆண்டிலிருந்து ஈராண்டுக்குள்ளாக இனவழி அரசமைப்புக் கோட்பாட்டினால் சில புதிய குடியரசுகளும் உதயமாயின. உக்ரெயின் குடியரசுக்குள்ளாகவே 1924-அக்டோபரில் மோல்தாவியக் குடியரசு உதயமாயிற்று. மங்கோலியா, சுவாஸ் ஆகிய இரு குடியரசுகள் ரஷ்யக் கூட்டமைப்புக்குள் தோன்றின. அப்காசியன், அஜரியன் ஆகிய தனிக் குடியரசுகளும், ஜார்ஜியாவுக்குள்ளேயே தென் ஒசேசியன் குடியரசும் புதிதாகப் பிறந்தன. அசர்பைசன் குடியரசுக்குள்ளாக நாகிசேவன் குடியரசும், நாகர்னி கரபாக் குடியரசும் முளைத்தன. 1924-இல் மத்திய ஆசியப் பகுதியிலும் தேசியமாநில எல்லை அமைப்பு வேலை தொடங்கியது. அக்டோபர் புரட்சிக்குப்பின் உஸ்பெக்குகள், துர்க்மேனியர்கள், தாஜிக்குகள், காசாக்குகள், கிர்கீசியர்கள் போன்ற பல்வேறு இன மக்களும் இரண்டறக் கலந்திருந்த துர்க்கிஸ்தான், புகாரா, கோரசம் என்ற மூன்று குடியரசுகள் இருந்தன. இனவழி நாடுகளை உருவாக்கும் கொள்கையால் அம் மூன்று குடியரசுகளின் எல்லைகளும் மாற்றியமைக்கப்பட்டுத் துர்க்மேனியா, உஸ்பெகிஸ்தான் என்ற இரு புதிய குடியரசுகள் உருவாக்கப்பட்டன. இத்தகைய தேசிய இனக்கொள்கையால் ஒவ்வொரு இனமும் உரிமை பெற்ற இனமாகி, எல்லா வாய்ப்புகளையும் எல்லோரும் பெற்றிடும் உரிமையைப் பெற்று, நாட்டு வளர்ச்சிக்கும், நிர்வாக இயக்கத்திற்கும், அரசியல் பொருளாதாரச் சுதந்திரத்திற்கும் மனமுவந்து உழைத்திடும் மனப்பக்குவம் ஏற்பட்டது. சோவியத் கூட்டரசில் ரஷ்யா, உக்ரெயின். பைலோ ரஷ்யா, உஸ்பெகிஸ்தான், காசக்ஸ்தான், ஜார்ஜியா, அசர்பைசன், லிதுவேனியா, மோல்தாவியா, லாத்வியா, கிர்கிஸ்,

தாஜிக், அர்மீனியா, துர்க்மன் எஸ்தோனியா என்னும் 15 குடியரசுகள் சமத்துவ அடிப்படையில் இணைந்தன. இக் குடியரசுகள் பலவற்றினுள்ளும் பல சிறு குடியரசுகளும் சுயாட்சி உரிமை பெற்றவையாக அமைந்தன. எடுத்துக்காட்டாக ரஷ்யக் குடியரசுக்குள் 16 சுயாட்சி அதிகாரம் பெற்ற குடியரசுகளும். 5 சுயாட்சிப் பிரதேசங்களும் 10 தேசீய இனங்களின் பிரதேசங்களும் அடங்கி இருந்தன. இவை பிரிந்து செல்லும் உரிமையைப் பெற்றிருப்பினும் அரசியல், பொருளாதார சமுதாய அமைப்பில் ஒருமையுணர்வைக் கொண்டிருந்ததால் அச்சிறப்புரிமையை எக்குடியரசும் பயன்படுத்த நினைத்ததில்லை. நாட்டின் அனைத்து உடமைகளும் தொழில்துறை, விவசாயத்துறை, சுரங்கத்துறை ஆகிய அனைத்துத்துறைகளும் மக்கள் அனைவரின் பொதுவுடமை என்ற நிலை ஏற்பட்டிருக்கும்போது எப்பிரிவினரும், எக்காரணம் கொண்டும், பிரிந்து செல்லும் வாய்ப்பு குறைந்து காணப்பட்டது.

புதிய பொருளாதாரக் கொள்கை
(New Economic Policy)

நாட்டின் நிலை

இருபதாம் நூற்றாண்டின் இருபதாம் ஆண்டு தொடங்கும்போது ரஷ்யப் பொருளாதாரம் பெரிதும் சீர்குலைந்தே இருந்தது. தொழிலாளர்களின் எண்ணிக்கை, தொழிற்சாலை உற்பத்தி ஆகியன குறைந்திருந்தன. ஏழாண்டுகாலப் போரே இப்பேரழிவுக்குக் காரணமாயினும், நாட்டுடைமையான தொழில்களில் நிலவிய தொழில் திறமையின்மை, அறியாமை, ஆழ்ந்த அளவில் ஊடுருவிப் போன நிர்வாகத் திறமையின்மை ஆகியனவும் துணைக்காரணங்களாயின. விவசாயத் தொழிலாளர்களும் ஏறத்தாழ 140 இலட்சம் பேர்வரை குறைந்து போயினர். வோல்கா பகுதியின் வறட்சியாலும், மனிதக்குலத்தின் போர்மனப்பான்மையும் விளைச்சல் குறைவுக்கு காரணமாயின. 1921-இல் வோல்கா பகுதியோடு யூரல் கரிசல்நிலப் பகுதிகளும், ஆசிய மண்ணின் சில பகுதிகளும் வறட்சியால் பாதிக்கப்பட்டன. இத்தோடு பெரும்பஞ்சமும் வந்து சேர்ந்தது. தொடர்ந்து தொத்து நோய்களும் பரவின. மூன்று கோடிப்பேருக்கு மேல் பஞ்சத்தால் பீடிக்கப் பட்டதில் ஒருபாதிப்பேர் பட்டினியால் வாழ்வையும் இழக்க வேண்டிய அளவுக்கு அபாயத்தைச் சந்தித்தனர். சீரியமுறையில் பரவலான அடிப்படையில் அமைந்த பஞ்ச நிவாரண வேலைகளை அரசுமேற்கொண்டது. பிறநாடுகளிலிருந்தும் பஞ்சநிவாரணத்திற்கென உதவிகள் வந்து சேர்ந்தன. இதற்காக நார்வே நாட்டவரான நான்சன் முன் நின்று உழைத்தார். பஞ்சத்தால் இறந்தவர்கள் எண்ணிக்கை ஏறத்தாழ இருபது இலட்சம் எனக் கணிக்கப்பட்டது. இவற்றின் விளைவாக ஏற்பட்ட பண வீக்கமும், விலை உயர்வும் சொல்லிலடங்காத் துன்பங்களையும், துயரங்களையும் கொண்டுவந்து சேர்த்தன.

காரணங்கள்

கடுமையான விளைவுகளைக் கொணர்ந்த வெளிப்போரும், மக்களையும் அரசையும் ஆட்டிப்படைத்த உள்நாட்டுப் போரும் ஒருவாறு முடிவுற்றன. ரஷ்யாவில் தொழிலாளர்களின் சர்வாதிகார ஆட்சி தோன்றியதைத் தொடர்ந்து ஜெர்மனியிலும்

பிற ஐரோப்பிய நாடுகளிலும் தொழிலாளர் புரட்சிகள் தொடரும் என எதிர்பார்க்கப் பட்டது. முதலாளித்துவ உலகில் சோவியத் ரஷ்யா மட்டுமே ஒரேயொரு சமதர்ம நாடாக அனைத்து முதலாளித்துவ நாடுகளாலும் ஒதுக்கி வைக்கப்பட்ட, உறவு கொள்ளத்தகாத தனி நாடாக இருக்கலாயிற்று. ரஷ்யாவிலிருந்த வெளி நாட்டாரின் உடமைகள் பலவற்றையும் அரசு கைப்பற்றிக் கொண்டதால் அந்நாடுகள் எதிர் நடவடிக்கைகளில் இறங்கக்கூடிய அபாயமும் இருக்கவே செய்தது. கட்சி ஊழியர்களிடையே ஒற்றுமைக் குறைவு ஏற்படுமானால் சூழ்நிலைச் சிக்கல்களில் சிக்குண்டு அரசு அதிர்ச்சி வைத்தியத்திற்கு உள்ளாக நேரிடும் என்பதை அனைவரும் உணர்ந்தேயிருந்தனர். கட்சியின் கட்டுக்கோப்பு கலையாதிருந்தாலேயே தொடக்ககால அபாயங்களையும், ஆபத்துக் களையும் சமாளிக்க முடிந்தது. அரசின் கொள்கைகள் காலச் சூழ்நிலைக்கேற்ப மாற்றி யமைக்கப்படினும், கிடைத்த ஆட்சி கைநழுவிப் போகாதிருந்தாலே உலகில் உழைக்கும் வர்க்கத்தின் சர்வாதிகாரம் உருவாகும் வாய்ப்பு ஏற்படுமென நம்பினர். 1919-ஆம் ஆண்டு முதலே அரசுக்கொள்கை முடிவுகள் யாவும் லெனின், டிராட்ஸ்கி, ஸ்டாலின், காமனேவ், சினோவ்யேவ், ரிகோவ், தாம்ஸ்கி ஆகியோரைக்கொண்ட கட்சியின் உயர்மட்ட அமைப்பான போலிட்பீரோவினால் எடுக்கப்பட்டது. தன்னிகரில்லாத் தனித்தலைவராக லெனின் இருந்தாலும்; போலிட்பீரோவிலும், மத்தியசெயற்குழுவிலும் கொள்கைகள் அனைத்தும் அனைவரின் ஆய்வுக்கும், விவாதத்திற்கும் உட்படுவதை அனுமதித்தார்.

உள்நாட்டுப்போர் முடிவுற்றகாலை 1921-ஆம் ஆண்டின் துவக்கத்தில் அரசுக்கெதிரான அபாயகரமானதோர் நிலைமை உருவாயிற்று. பிப்ரவரி 28-ஆம் நாள் கிரான்ஸ்டட்டில் நிலைகொண்டிருந்த பால்டிக் கடற்படையினரில் சிலர் கலகம் செய்யலாயினர். பெட்ரோகிராடிலும் எதிர்புரட்சியாளர்கள் வேலை நிறுத்தங்களை ஊக்குவித்தனர். இத்தகைய கலகங்கள் முளையிலேயே கிள்ளப்படவேண்டியவை என அரசுகருதியது. துகசேவ்ஸ்கியின் தலைமையில் சென்ற சோவியத்படை கலகத்தை மிக எளிதில் அடக்கியது; கலகத்திற்கு காரணமாயிருந்தோர் கொலையாயினர். போர்ப் பொதுவுடமைக் War Communism கொள்கைகள் நெளிவு சுளிவின்றித் தீவிரமாகச் செயல்படுத்தப்படுவதாலேயே இத்தகைய எதிர்ப்பு ஏற்படுகிறது என்பதை லெனின் உணர்ந்தார். அரசு தனது தீவிரக்கொள்கைகள் சிலவற்றைக் கைவிட்டு, சலுகைகள் சிலவற்றையும் அளிப்பது அவசியம் எனக் கருதினார். அதனடிப்படையில் அவர் வெளியிட்டதே புதிய பொருளாதாரக் கொள்கை ஆகும்.

புதிய கொள்கையை அறிவித்தல்

நாட்டை முன்னேற்ற வேண்டி 1921 மார்ச்சில் கூடிய கட்சி மாநாடு போர்ப் பொதுவுடமைக் கொள்கைக்குப் பதிலாக லெனினின் 'புதிய பொருளாதாரக் கொள்கையை' (New Economic Policy or N.E.P.) ஏற்றுக்கொண்டது. போர்ப் பொதுவுடமைக் (War Communism) காலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட 'விவசாயி களிடமிருந்து கட்டாயக்கொள்முதல்' திட்டத்திற்குப் பதிலாக உணவு தானியங்களின் சுதந்திரச் சந்தையை கட்டுப்பாடற்ற உணவு விற்பனையை ஒரு கொள்கையாக அங்கீகரித்தது. அதன்படி விவசாயிகள் தங்கள் விளைச்சலில் பத்தில் ஒரு பங்கினை மட்டுமே வரிசையாக அரசிடம் அளிக்கவேண்டும்.. தங்களுக்கென ஒதுக்கப்பட்ட

நிலத்தினைத் தங்களின் தனிச்சொத்தாகவே வைத்துக்கொள்ளலாம். தாங்கள் நிலத்தை பிறருக்குக் குத்தகைக்கும் விடலாம். ஏழை விவசாயிகளுக்கு வரிச்சலுகைகளும் அளிக்கப்பட்டன. உணவுப்பொருள் உற்பத்தி பெருக்கத்திற்கே இச்சலுகைகள் மிகவும் அவசியம் என லெனின் நம்பினார்.

தொழில்துறை: நாட்டுப் பொருளாதாரத்தின் அமைப்பாகக் கருதப்பட்ட கனகரத்தொழில் யாவும் அரசின் கட்டுப்பாட்டிலேயே தொடர்ந்து இயங்கும். தொழில்துறை நிர்வாகிகள் தங்கள் தொழிற்சாலை உற்பத்திப் பொருட்களின் விற்பனையைக் கணிசமாக அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளைச் சுதந்திரமாக மேற்கொள்ளவும் சலுகைகள் அளிக்கப்பட்டன. சிறு தொழில்கள் சில தனியார்துறையில் செயல்படவும் அனுமதிக்கப்பட்டன. அதன் விற்பனையையும் தனியார் துறையைச் சேர்ந்த வணிகர்களே மேற்கொள்ளலாம். இதன் மூலம் தொழில்துறையின் நிலைமையும் ஓரளவு சீரடையக் கூடுமென எதிர்பார்க்கப்பட்டது.

கூட்டுறவுகள்: அனைத்து உற்பத்திப்பொருட்களையும் வாங்கவும், நகர, கிராமப்புறங்களில் விற்பனை செய்யவும் அனுமதிக்கப்பட்டன. அரசு நிறுவனங்களும், கூட்டுறவு நிறுவனங்களும் இணைந்து செயல்படவும் வழி வகைகள் காணப்பட்டன. விவசாயப் பொருளாதார வளர்ச்சிக்குக் கனகரத் தொழில்களின் வளர்ச்சியும் இன்றியமையாததாயிற்று. பணவீக்கம் கட்டுப்படுத்தப்பட்டதால் ரூபிளின் வாங்கும் சக்தி கணிசமாகக் கூடியது. அரசுவங்கியும், கடன்முறையும் தடையற்ற பொருளாதார நடமாட்டமும் மீண்டும் உயிர்பெற்றன. தனியார்துறையிலும் அரசுத்துறையிலும் இயங்கிய நிறுவனங்களின் போட்டியைத் தவிர்க்கவும் உற்பத்தியை அதிரிக்கவும் அனைத்து நிறுவனங்களின் இணைப்புச் செயல்களின் மூலம் பொருளாதாரக் கட்டுக்கோப்பினைக் காக்கவும் புதிய 'தேசீயத்திட்டக்குழு' 'காஸ்பிளான்' (Gosplan) என வரலாற்றில் புகழ் பெற்ற குழுவொன்று நிறுவப்பெற்றது.

எதிர்ப்பும், விளைவுகளும்

1921-22 ஆம் ஆண்டுகளில் பலபகுதிகளிலும் தலைவிரித்தாடிய பஞ்சநிலைமையால் போருளாதாரநிலை பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த காலத்தில்தான் புதிய பொருளாதாரக் கொள்கைகள் அறிவிக்கப்பட்டன. இப்புதிய நடவடிக்கைகளால் ரஷ்யப் பொருளாதாரம் சுயபலத்தில் செயலாற்றும் வலிமையைப் பெற்றது. 'சிலவே ஆயினும், சிறப்பாக' என்னும் கட்டுரையில் 'நமது அரசு அமைப்புகளைத் திறம்பட மாற்றியமைத்திட முதலாவதாக நாம் கற்க வேண்டும்; இரண்டாவதாக நாம் கற்க வேண்டும்; மூன்றாவதாக நாம் கற்கவேண்டும், என்றார் லெனின். அதே சமயம் அவரது மாறுபட்டப் பொருளாதாரக் கொள்கைகளைக் கட்சியின் மேல்மட்டத்தலைவர்கள் சிலர் எதிர்க்கவே செய்தனர். உள்நாட்டுப் போரின் போது செஞ்சேனை அமைப்பினை உருவாக்கிச்செயல்படுத்திய டிராட்ஸ்கி, தொழிற்சங்க அமைப்பிலும் தொழில்துறை நிர்வாகங்களிலும் நிலவும் கடுமையான கட்டுப்பாட்டையும், ஒழுங்கையும் சார்ந்ததாகவே தொழிலாளர்களின் சர்வாதிகாரம் வளர வேண்டுமென்றார். போக்குவரத்துத் துறையில் டிராட்ஸ்கி கையாண்ட சர்வாதிகாரப்போக்கினை கட்சியிலேயே பலர் வன்மையாகக் குறை கூறினர். பொருளாதாரத் துறையில் லெனின் மேற்கொண்ட தாராளக் கோட்பாடுகளை டிராட்ஸ்கி

எதிர்த்தபோது கட்சி அதனை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டது. தொழிற்சாலைகளில் 'தொழிலாளர்களின் கட்டுப்பாடு' அகற்றப்பட்டதை சிலியப்னியகோவ் என்பவரின் தலைமையில் தொழிலாளர்கள் எதிர்த்தனர். தொழிற்சங்க அமைப்பு முறைகளில் தேர்தல் கொள்கைகள் மீறப்படுவதையும் அவர்கள் ஆதரிக்கவில்லை; தொழில் நிறுவனங்களைக் கட்டிக்காப்பதில் தொழிலாளர்களுக்குப் பெரும் பங்கும், பொறுப்பும் இருக்க வேண்டுமென வலியுறுத்தினர். கட்சிக்கோ அரசுக்கோ ஊறுவிளைவிக்கும் வகையில் செயல்படும் உறுப்பினர்களைக் கட்சியிலிருந்து நீக்கும் அதிகாரத்தைக் கட்சியின் மத்தியக் குழுவிற்கு வழங்கிடும் தீர்மானத்தை பத்தாவதுக் கட்சி காங்கிரஸ் ஏற்றுக்கொண்டது. இதன் மூலம் உள்நாட்டுப் போரின்போது உறுப்பினர்களாக கட்சிக்குள் நுழைத்து விட்ட சந்தர்ப்பவாதிகளைக் கட்சி களையெடுத்தது. இக்களையெடுப்பிற்குப்பின் 1923-இல் ஏறத்தாழ 5 இலட்சம் உறுப்பினர்களைக் கொண்டிருந்த கட்சியில் பாதிக்கும் மேலானோர் முப்பது வயதுக்குட்பட்ட இளைஞர்களாக இருந்தனர். புதிய பொருளாதாரக் கொள்கைத் திட்டங்கள் நிறைவேறியபோது கட்சி உறுப்பினர் எண்ணிக்கை மும்மடங்காயிற்று.

புதியப் பொருளாதாரக் கொள்கை சில புயல்களையும் சந்திக்கவே செய்தது. தொழிற்சாலை மையங்களில் உணவுப் பற்றாக்குறை மிகுதியும் இருந்தது; எரிப் பொருட்களில், மூலப்பொருட்களும் போதிய அளவு கிடைக்கவில்லை; போக்குவரத்து வசதியும் சீர்குலைந்து போயிருந்தது. வரிகளைப் பொருட்களாகவே வசூலிப்பதென்பது கடினமாகவும் இருந்தது; கால தாமதமும் ஆயிற்று. எல்லாவற்றுக்கும் மேலாக புதியப் பொருளாதாரக் கொள்கையின் முதலாண்டின் இறுதியில் விவசாய உற்பத்தி பெருமளவிற்குப் பாதித்தது; பஞ்சமும் வந்து சேர்ந்தது. பஞ்சப் பகுதிகளிலிருந்து சைபீரியா, உக்ரெயின், பைலோரஷ்யா, மத்திய ஆசியப் பகுதிகளுக்கு மக்கள் மாற்றப்பட்டனர். 1922-இல் நிலைமை சீர்திருந்தியது.

பயிற்சி வினா

சோவியத் ரஷ்யாவில் புகுத்தப்பட்ட லெனினின் புதிய பொருளாதாரக் கொள்கைபற்றி ஒரு கட்டுரை வரைக.

பாடம் – 22 ஜோசப் ஸ்டாலின் ஆட்சிக்கு வருதலும் ஐந்தாண்டுத்திட்டங்களும்

லெனின் 1924-ஆம் ஆண்டு ஜனவரி 21இல் மரணமடைந்தவுடன் கட்சியின் பொருச் செயலாளராக இருந்த ஸ்டாலின் புதிய பிரதமரானார். ஆனால் ஸ்டாலினுக்கு டிராட்ஸ்கி, சினோவ்யேவ், காமனேவ் ஆகியோர் கட்சியில் போட்டியாக இருந்தனர். லெனினின் சமதர்மம் என்பது தொழிலாளர்களும் விவசாயிகளும் இணைந்த இணைப்பிலேயே அமையவேண்டும் என உறுதியாகக் கூறியிருந்தார். லெனின் உடல் நலமின்றி இருந்த காலத்தில் பொலிட்பீரோவின் மூன்று முக்கிய உறுப்பினர்களான ஸ்டாலின், காமனோவ், சினோவ்யேவ் ஆகியோர் தொழில்துறை நன்முறையில் வளர விவசாயிகளின் வளமான நல்வாழ்வு அவசியம் என்ற நம்பிக்கையில் அக்கொள்கையையே முற்றிலும் ஆதரித்தனர். இக்கருத்துக்கு மாறாக டிராட்ஸ்கி தொழில் துறைக்கு முதலிடம் கொடுக்க வேண்டும், மேலும் ரஷ்யாவில் சமதர்மம் நிலைத்து நிற்க உலகத் தொழிலாளர்களின் ஒன்றுபட்ட புரட்சி அவசியம் என்றார். இக்கொள்கையை ஸ்டாலின் வன்மையாகக் கண்டித்ததோடு, உலகப் புரட்சிக்குப்பதிலாக 'ஒரே ஒரு நாட்டில் சமதர்மம், என்னும் தத்துவத்தை முன்மொழிந்தார். இவ்வேளையில் டிராட்ஸ்கியை ஒழித்துக்கட்ட பொலிட்பீரோவின் உறுப்பினர்களான சினோவ்யோவ், காமனேவ், ஆகியோரின் துணையைப் பெற்றார் ஸ்டாலின். அதன்மூலம் டிராட்ஸ்கிக்கு செஞ்சேனையுடன் இருந்த உறவினை முறித்துவிட்டார். அதன்பின் காமனேவ், சினோவ்யோவ் ஆகியோரின் செல்வாக்கையும் முறியடிக்க முடிவு செய்தார். பொலிட்பீரோவின் உயர் உறுப்பினர் பொறுப்பில் இருந்து காமனேவ் பதவி நீக்கம் செய்யப்பட்டார். அவ்வாறே லெனின்கிரேடு கட்சி அமைப்பின் மிக முக்கிய பொறுப்பில் இருந்து சினோவ்யோவ் விலக்கப்பட்டார். தோல்வியினைத் தழுவிய டிராட்ஸ்கி, காமனேவ், சினோவ்யேவ், ஆகியோர் இணைந்து எதிர்த்தும், கட்சியின் பல்வேறு அமைப்புகளிலும், மத்தியக் குழுவிலும், ஸ்டாலினின் ஆதரவாளர்களே பெரும்பான்மையோராக இருந்தனர். இவர்கள், கட்சியின் பல பொறுப்புகளிலிருந்தும் வெளியேற்றப் பட்டதால், தங்களுக்கு நேர்ந்த நிலைமையை கட்சி உறுப்பினர்களிடத்தும், பொதுக் கூட்டங்களிலும் முழங்கினர். 1927 அக்டோபரில் நடைபெற்ற மத்திய குழுவின் கூட்டத்தின்போது டிராட்ஸ்கியும், சினோவ்யேவும் மத்தியகுழுவிலிருந்து வெளியேற்றப் பட்டனர். 1928 ஜனவரியில் டிராட்ஸ்கி நாடு கடத்தப்பட்டார். டிராட்ஸ்கி முதலில் ஆல்மாவுக்கும் , பின்னர் துருக்கிக்கும் சென்றவர். இறுதியில் மெக்ஸிகோவில் தங்கி வாழ்ந்தபோது ரஷ்ய உளவாளி ஒருவனால் 1940-இல் கொல்லப்பட்டார்.

இவ்வாறு தன்னுடைய எதிர்ப்பாளர்களை எல்லாம் ஒழித்தப்பின் தன் கட்சியின் துணையுடன் சர்வாதிகார ஆட்சியைத் தொடங்கினார். 1927-ஆம் ஆண்டு டிசம்பர் 2இல் கூடிய கட்சிமாநாட்டில் புதிய விவசாயச் செல்வர்களாகிய 'குலக்குகள் மீது அதிக வரிவிதிக்கும் தீர்மானம் நிறைவேறியது. தொழில் துறை வளர்ச்சிக்கு என ஐந்தாண்டுத்திட்டம் ஒன்றும் தீட்டப்படவேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

ஸ்டாலின் தொழில்துறை உற்பத்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க மனமின்றி இருந்தாரெனினும், இப்போது தொழில்துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. லெனினின் புதிய பொருளாதாரக் கொள்கையால் விவசாய உற்பத்தி

எதிர்பாராத அளவிற்கு அதிகரித்துவிட்டது. ஆனால் தொழில் உற்பத்தி மிகக்குறைந்தது. விவசாய உற்பத்தி பெருகி தொழில் உற்பத்தி குறைந்ததால் விவசாயப் பொருள்களின் விலை சரிந்தது. தொழில்துறை உற்பத்திப் பொருள்களின் விலை அதிகமாயிற்று. இவ்விருவகை விலையையும் தன்மையையும் ஒரு வரைபடத்தின் மூலம் விவரிக்க டிராட்ஸ்கி இந்நிலைமையை ஒரு கத்தரிக்கோலின் அமைப்புக்கு விளக்கிக்காட்டினார். அதுமுதல் 1923ஆம் ஆண்டின் பொருளாதாரச் சீர்குலைவு 'கத்தரிக்கோல் சிக்கல்' எனப் பெயர் பெற்றது. இந்நெருக்கடியை விடுவிக்க அரசு சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. அதன்படி தொழில்துறை உற்பத்திப் பொருட்களின் விலையில் 29% குறைக்கப்பட்டது. மத்திய விவசாய வங்கி ஒன்று ஏற்படுத்தப்பட்டு கிராமப்புறங்களில் பணப்புழக்கம் அதிகரிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. தங்கத்தின் இருப்பிற்கேற்ப அதிக அளவு காகிதப்பணம் வெளியிடப்பட்டது. இத்தகைய நடவடிக்கைகளால் நெருக்கடி நீக்கப்பட்டது. 1927ஆம் ஆண்டுக்குள்ளாக விவசாய துறையும், பிற துறைகளும் போருக்கு முன்பு இருந்த அளவிற்கு உற்பத்தி செய்யலாயின.

நாட்டின் மூலதனத்தில் பெரும்பகுதி போரில் பாதிக்கப்பட்ட தொழில் நிறுவனங்களைச் சரிபடுத்தவே செலவிடப்பட்டது. ரஷ்யாவை மின்மயமாக்க 1920- இல் ஒரு தேசியகுழு ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்படி நீப்பர் மின்திட்டம் செயலுக்கு வந்தது. மற்றும் இருப்புப் பாதை வளர்ச்சியும் ஏற்பட்டது. 1930 தர்க்சிப் இருப்புப்பாதை போடப்பட்டது. ஸ்டாலின் கிரேடில் விவசாயக் கருவிகளை உற்பத்தி செய்ய தனித் தொழிற்சாலை அமைக்கப்பட்டது. சைபீரியாவில் குச்னட்ஸ்க், பிரலின், மக்னிதோகோர்ஸ்க், உக்ரெய்னின், இரிவால்ராக் ஆகிய இடங்களில் பெரும் உலோக உற்பத்தித் தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன.

விவசாயிகள் நிலை : புதிய பொருளாதாரக் கொள்கைக் காலத்தில் 70 சதவீதத்தினர் நடுத்தர விவசாயிகளாகவும், 4 சதவீதத்தினர் குலக்குகளாகவும், எஞ்சியோர் ஏழை விவசாயிகளாகவும் இருந்தனர். நடுத்தர விவசாயிகளின் எண்ணிக்கை மிக அதிகரித்த போதும், விவசாயிகளின் கூட்டமைப்புகளான கம்யூன்களும்' கூட்டமைப்பு நிலமுறையும் மாற்றமடையவில்லை. விளை பொருட்களை அரசு குறித்த விலைக்கே விற்றனர். சில விவசாயச் செல்வந்தர்கள் விளை பொருட்களை நகர மக்களுக்கும் கொடுக்க மறுத்ததால் அவர்கள் மீது தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டியதாயிற்று. அரசுக்கு எதிராக, குலக்குகள் போன்றோர் அதிக அளவு உணவுப்பொருட்களை உற்பத்தி செய்ய மறுத்தனர்.

சமூக சுதந்திரம் அதிகமாக இருந்த புதிய பொருளாதாரக் காலத்தில் விருப்பப்படி திருமணம் செய்வதும், திருமண விலக்கு (divorce) பெறுவதும் சாதாரண மாகிவிட்டபடியால் பலர் அனாதைகளாயினர். இவர்களுக்கு வாழ்வு கொடுக்கும் வண்ணம் கோம்சோமல் (Komsomol) என்னும் இளம் பொதுவுடமைக் கழகத்தினர் முன்வந்தனர். திருச்சபையின் செல்வாக்குக் குறைக்கப்பட்டது. 1925இல் நாத்திகப் படைக்கழகம் என்ற ஒன்று துவங்கப்பட்டு திருச்சபையின் ஊழலைச்சாடியது. கல்வித்துறையில் பல முன்னேற்றங்கள் செய்யப்பட்டன. அறிவியல் பாடங்களுக்கு அதிக ஊக்கம் கொடுக்கப்பட்டது. வேலையில்லாத் திண்டாட்டம் குறைக்கப்பட்டது. முதியோர்க்கு ஓய்வூதியம் அளிக்கப்பட்டது.

இலக்கிய வளர்ச்சி : புதிய பொருளாதாரக் கொள்கைக் காலத்தில் புதிய இளந்தலை முறையினரே கலாச்சாரத்துறையில் ஆதிக்கம் செலுத்தலாயினர். இடது சாரிகள், காவலர், பயணத்தோழர்கள் போன்ற பல இலக்கிய வட்டக்குழுக்கள் தோன்றின.

உள்நாட்டுப்போர் முடிந்தவுடன் அதனை மையமாகக் கொண்ட புதினமாக செராஃபி மோவிச் எழுதிய 'இரும்பு வெள்ளம்' பெரும் புகழை அடைந்தது. எதிர்ப்புரட்சியாளரான சோல்சக்கை எதிர்த்து நடைபெற்ற போரினை ஃபர்மனோவ் எழுதிய சட்யேவ் என்னும் நவீனம் விளக்குகின்றது. உளவியலை அடிப்படையாகக் கொண்டதாகவும் தூரக்கிழக்கில் நடைபெற்ற உள்நாட்டுப் போரை உள்ளடக்கியதாகவும் ஃபதயேவ் தீட்டிய 'தோல்வி' என்னும் நூல் தோன்றியது. நகர்ப்புரத்துக்கும், கிராமப்புரத்துக்கும் இடையே நடைபெற்ற மறைமுகப் போரினைத் தெளிவாக்குவதாக லியோனோவ் எழுதிய வளைக்கரடிகள் விளக்கியது. பில்னியக் எழுதிய நிர்வாண ஆண்டு என்ற நெடுங்கதையும், பாபல் எழுதிய மெம்பரிப்படை என்னும் குதிரைப்படை ஆற்றிய பெருந்தொண்டினை விளக்குவதான நவீனமும் உள்நாட்டுப்போரின் உள்நடவடிக்கைகளை வெளிக் கொணர்ந்தன. இளைய தலைமுறையினர் எதிர்நோக்க வேண்டியிருந்த சிக்கல்களை எல்லாம் சிக்கலின்றி விளக்குவதாக ஃபெதின் எழுதிய நகரங்களும் ஆண்டுகளும், சகோதரர்கள் ஆகிய நூல்கள் அமைந்தன. மேலும் சோலகோவ் எழுதிய டான் அமைதியாக ஓடுகிறது. அலெக்ஸி டால்ஸ்டாய் எழுதிய புனித பூமிக்குப்போகும் சாலை ஆகிய காவியங்களும், பல பாகங்களில் வெளியானதும் போரிஸ் பாஸ்டர்ரக் எழுதிய டாக்டர் சிவாகோ என்னும் படைப்பு நோபல் பரிசினைப் பெற்றது. புதிய பொருளாதாரக் கொள்கைக்காலத்தில் கவிதை இலக்கியமும் நல்ல வளர்ச்சி பெற்ற மாயகோவ்ஸ்கி என்பவர் எழுதிய ஒலிபெருக்கி தொழிலாளர் புரட்சியின் வெற்றியினை பாடுவதாக அமைந்தது. லெனினுக்குக் காணிக்கை செலுத்தும் வண்ணம் விளாதிமிர் இலியச்லெனின் கவிதையும், புரட்சியின் பத்தாம் ஆண்டு விழாவினை ஒட்டி, 'நன்று' எனும் கவிதையும் சிறப்பு வாய்ந்தவைகளாகும்.

ஸ்டாலின் பதவிக்கு வந்த போது மேலே கூறியபடி ரஷ்யாவின் விவசாயம் மற்றும் சமுதாய, கலாச்சார நிலை இருந்து வந்தன. ஸ்டாலின் ரஷ்ய நாட்டினை உயர்வடையச் செய்ய மூன்றாவது புரட்சியைத் துவக்கலானார். மூன்றாவது புரட்சி என்பது, புகாரின் என்ற பொலிட்பீரோ உறுப்பினரின் கூற்றுப்படி ஐந்தாண்டுத் திட்டங்களையே குறிக்கும்.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் – 1928–1933

காஸ்பிளான் என்னும் திட்டக்குழு தீட்டியிருந்த ஐந்தாண்டுத் திட்டம் 1929 ஏப்ரல் மாதம் கூடிய 16 வது கட்சி மாநாட்டில் அங்கீகரிக்கப்பட்டது. இத்திட்டத்தினை மாநாடு ஏற்றுக்கொண்டதால் ஸ்டாலினுக்கு எதிராக இருந்த வலதுசாரிக் கொள்கைகொண்ட புகாரின், தாம்ஸ்கி, ரீசோ போன்றவர்கள் பதவியிழந்தனர். ஐந்தாண்டுத்திட்டமானது கூட்டுப் பண்ணை விவசாயத்தையும், விரைந்த தொழில் வளர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்த ஒன்றாகும்.

விவசாயம் : முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்படி கிராமப்புறங்களில் உள்ள அரைகோடி விவசாயிகளின் நிலங்களை கூட்டுப்பண்ணைகளாக மாற்றுவது என்று முடிவு செய்ப்பட்டது. சிறுசிறு துண்டு நிலங்களைவைத்து, பழைய முறையிலான

கருவிகளையும், மெலிந்த கால்நடைகளையும் கொண்டு விவசாயம் செய்த விவசாயிகள், இவையனைத்தையும் கூட்டுப் பண்ணையிடம் ஒப்படைக்குமாறு வேண்டப்பட்டனர். தங்கள் உடமைகளை ஒப்படைத்த இவ்விவசாயிகள் கூட்டு உழைப்பின் மூலம் பெருமளவு விவசாய உற்பத்தியைக் கண்டு அவற்றைத் தங்களிடையே பகிர்ந்து கொள்வதே கூட்டுப்பண்ணைகளின் பணிகளாகும். மற்றொரு வகையான பண்ணைகள் அரசுப் பண்ணைகள் ஆகும். அரசுப் பண்ணைகள் என்பவை அரசின் விவசாயத் தொழில் நிறுவனங்களாகும். இவை தொழில் துறை நிறுவனங்களைப்போல் செயல்பட்டன இந்நிறுவனங்களில் பணியாற்றிய விவசாயத் தொழிலாளர்கள் குறிப்பிட்ட தொகையைச் சம்பளமாகப் பெறுவர். இத்தகைய பண்ணைகளில் இயந்திரமயமாக்கப்பட்ட பயிர்நிலங்கள், பழத்தோட்டங்கள், நாற்றங்கால்கள் அடங்கிய பெரும்பண்ணைகள் அடங்கும்.

அரசின் தலையீடு இன்றி கூட்டுப்பண்ணைகள் செயல்படும். இவற்றுக்குத் தேவையான இயந்திர சாதனங்களை அரசின் 'விவசாய இயந்திர நிலையங்கள்' அளிக்கும். கூட்டுப்பண்ணை முறையில் இரு சாதகங்கள் ஏற்பட்டன. சிறுசிறு விவசாயிகள், மூலதனம் அதிகம் போட்டு இயந்திர சாதனங்களைப் பயன்படுத்த முடியாது. இப்போது கூட்டுப்பண்ணைகள் மூலம் இயந்திரங்களைப் பயன்படுத்துவது எளிதாயிற்று. அதேபோன்று அரசும், தேவையான உணவுப் பொருட்களைக் கொள்முதல் செய்வது எளிதாயிற்று. ஆரம்பத்தில் கூட்டுப்பண்ணையில் சில சிக்கல்கள் இருந்தன. முதலில் சிறு விவசாயிகள் நிலங்களையும், கால்நடைகளையும் கொடுத்துவிட மனமின்றியே இருந்தனர். மேலும் தொழில் வளர்ச்சியும் தேவையான அளவிற்கு உற்பத்தியில்லாததால், போதுமான இயந்திரங்கள் கிடைக்கவில்லை.

இக்கூட்டுப் பண்ணைகளில் சேர்ந்த சிறு விவசாயிகளும் நடுத்தர விவசாயிகளும் மனமுவந்து நிலங்களை ஒப்படைத்து உழைப்பினையும் அளிக்க முன்வந்தனர். ஆனால் செல்வந்தர்களான குலக்குகள், வசதிபடைத்த நடுத்தர விவசாயிகள் போன்றோர், உழைக்க மனமில்லாதவராய் கூட்டுப்பண்ணை முறையை 1929-ஆம் ஆண்டு இலையுதிர் காலத்தில் எதிர்த்தனர். எனவே பல இடங்களில் வர்க்கப் போராட்டங்கள் நடைபெற்றன. எனவே அரசு தலையிட வேண்டியதாயிற்று. ஏறத்தாழ 12.5 லட்சம் குலக்குகளின் குடும்ப நிலங்கள் பறிமுதலாயின. நிலமிழந்த குலக்குகள் வேறு இடங்களில் குடியமர்த்தப்பட்டனர். 1930-ஆம் ஆண்டு வரையில் கட்டாய கூட்டமைப்புத் திட்டம் விரைந்து செயற்பட்டது. பொதுநலனைக் கருத்தில் கொள்ளாத பலர் பண்ணைகளிடம் தங்கள் கால்நடைகளை ஒப்படைப்பதற்குப் பதிலாக கொன்று தின்று தீர்த்துவிட்டனர். இக்கூட்டுப்பண்ணை முறையால் வசதியும், வாய்ப்பும், சோம்பல் வாழ்க்கையும் கொண்டிருந்தோர் பாதிக்கப்பட்டனர். 1930, மார்ச் 2 இல் மேலும் புதிய கூட்டுப்பண்ணைகள் நிறுவுவதை நிறுத்துமாறு ஸ்டாலின் ஆணையிட்டார். இதனால் ஏற்கனவே கூட்டுப் பண்ணைகளாக இயங்கிவந்தவற்றில் சில கலைந்து போயின.

விவசாயப் பண்ணைகளுக்குத் தேவையான இயந்திரங்களை அரசே வழங்கியது 1928-இல் 27,000 இயந்திரக்கலப்பைகளைக் கொண்டிருந்த ரஷ்யா, மறு ஆண்டில் 35,000 ஆக உயர்ந்தது. விவசாய இயந்திரங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை 1928-இல்

ஒன்றுதான் இருந்தது. ஆனால் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் 2446 தொழிற்சாலைகள் இருந்தன. 1930-ஆம் ஆண்டு ஜூலையில் 86,000 கூட்டுப்பண்ணைகள் இருந்தன. இவற்றுடன் 60 லட்சம் விவசாயக் குடும்பங்கள் இணைக்கப்பட்டிருந்தன. இவ்வமைப்பின் மூலம் தனி விவசாய உரிமையாளர் என்ற நிலை மாறி பொது உடைமையாளர் என்ற புது நிலை ஏற்பட்டது. இதனால் விவசாய உற்பத்தி தன்னிறைவு பெற்று, நாட்டு வளர்ச்சியில் தொழில் துறைகளில் இணைந்து செயல்படலாயிற்று.

தொழில் துறை: தொழிற் துறையில் ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் மேலை நாடுகளைப் போன்ற முன்னேற்றமான நாடாக 10 ஆண்டுகளுக்குள் ஆகவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இத்திட்டத்தைச் செயல்படுத்த 6450 கோடி ரூபிள் ஒதுக்கப்பட்டது. 1929 இறுதியில் திட்டக் குறிக்கோளை எட்டிப் பார்த்தாகி விட்டது. இத்தகைய திட்டங்களை செயல்படுத்த நாட்டுப் பற்று மிக்க நிபுணர்களும் அதிகாரிகளும் தேவை. அரசின் பிரசார சாதனங்கள் நாட்டுப்பற்றை மக்களிடம் ஊட்டும் வகையில் செயல்படுத்தப்பட்டன. இதன் அடிப்படையில்தான் 'தொழிலாளர் முன்னணிப் படைகள்' உருவாக்கப்பட்டு சமதர்மப் போட்டியை உருவாக்கினர். அரசையோ, அரசின் கொள்கைகளையோ குறை கூறியோரும், திட்ட வேலைகளில் தீவிரமாக ஈடுபடாதோரும் தண்டனைக்குள்ளாயினர்.

தொழில்துறை நிறுவனங்களில் 1928-இல் 20 லட்சம் தொழிலாளர்கள் பணியாற்றினர். பின்னர் தொழிலாளர்களின் எண்ணிக்கை 30 லட்சமாக ஆகியது. 44.2 விழுக்காடு இயந்திரக் கருவிகள் பொறியியற் துறையில் பொருத்தப்பட்டன. மத்திய ஆசியாவில் அஸ்காபாத், பர்கானா ஆகிய இடங்களிலும் டிரான்ஸ்காகஸ் பகுதியில் கிரோவாபாத், லெனின்கன் ஆகிய இடங்களிலும் நெசவாலைகள் பொருத்தப்பட்டன. செலியபின்ஸ்க் சிதரோவ்கா, கிசல் போன்ற இடங்களில் அனல்மின் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1500 கிலோ மீட்டர் நீளமுள்ள துர்க்கிஸ்தான், சைபீரிய இருப்புப்பாதை முடிவுற்றதைத் தொடர்ந்து தானியங்கள், மரம் ஆகியவற்றை அதிக அளவில் உற்பத்தி செய்த சைபீரியா, பருத்தி மிகுதியான மத்திய ஆசியாவோடு நேரடியாகத் தொடர்பு கொள்ள முடிந்தது. மாக்னிதோகோர்ஸ்க், குஸ்னட்ஸ்க் ஆகிய இடங்களில் இரும்பு எஃகு ஆலைகள் நிறுவப்பட்டன. தொழில் உற்பத்தியில் போருக்கு முன் இருந்ததைவிட இப்போது 2.7 மடங்கு அதிகமாகியது. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியான விவசாய இயந்திர சாதனங்கள், கப்பல்கள், விமானங்கள் போன்றவை ரஷ்யாவிலேயே உற்பத்தி செய்யப்பட்டது. ஏறத்தாழ 1500 புதிய தொழில் நிறுவனங்ள் நிறுவப்பட்டதைத் தொடர்ந்து புதிய புதிய நகரங்கள் தோன்றின.

பல துறைகளில் முதல் ஐந்தாண்டுத் திட்டம் வெற்றி பெற்றது. என்றாலும் நிலக்கரி உற்பத்தி, உபயோகப் பொருள்கள் உற்பத்தி, சுத்திகரிக்கப்படாத எண்ணெய் உற்பத்தி, பருத்தி நெசவு போன்ற துறையில் நூதனத் திட்டக் குறிக்கோள்களை எட்டமுடியாத நிலை ஏற்பட்டது. 1932-இல் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. பண்ணை உற்பத்திப் பொருட்களை அரசே வாங்கியதால் விவசாயப் பொருட்களுக்கு குறைந்த விலையே

கிடைத்தன. இதனால் நகரத் தொழிலாளர்கள் லாபம் அடைந்தனர். கூட்டுப்பண்ணைகள் அமைத்த காலத்திலும் வறட்சிக் காலங்களின் போதும் மூன்று கோடியே 30 லட்சம் கால்நடைகள் இறந்துபோயின.

விவசாயத் தொழிலாளர்கள் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் ஒழுங்காகப் பணியாற்ற சில நெறிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. வேலைக்கு வராதிருத்தல், ஒழுங்குக் கட்டுப்பாடுகளை மீறுதல், வேலை நிறுத்தத்திற்குத் திட்டமிடுதல் ஆகியவை பெரிய குற்றங்களாகக் கருதப்பட்டு, அவற்றில் ஈடுபட்டோருக்கு கடும் தண்டனை வழங்கப்பட்டது. இதற்கென தனிச் சிறைகள் ஏற்படுத்தப்பட்டது.

1934-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சட்டப்படி கூட்டுப் பண்ணைகளில் உள்ள விவசாயிகள், தங்களுக்கு என நிலமும், வீடும், வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர். ஆடுகள், கோழிகள் வளர்க்கவும் அனுமதிக்கப்பட்டனர். விவசாயி கூட்டுப் பண்ணையில் செய்த வேலையின் தரத்தையும் அளவையும் பொறுத்து அவரது ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டது.

பண்ணைகளின் செயல் முறைகளைக் கவனிக்க ஒரு நிர்வாகக்குழு அமைக்கப்பட்டது; விவசாயிகள், ஏனைய ஊழியர்களைப் போலவே ஓய்வூதியம் பெறவும், ஊனமுற்றோருக்கான ஊதியம் பெறவும் அனுமதிக்கப்பட்டனர்.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் : 1933–1938

முதலாம் ஐந்தாண்டுத் திட்டம் 1932-இல் நிறைவெய்தியது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் 1932 ஜனவரி 24 முதல் பிப்ரவரி 10 வரை நடைபெற்ற பதினேழாவது கட்சி மாநாட்டில் அங்கீகாரம் செய்யப்பட்டது. இத்திட்டத்தின்படி தொழில் துறை வளர்ச்சிக்கு முதல் திட்டத்தைவிட 2½ மடங்கு மூலதனம் அதிகமாக ஒதுக்கப்பட்டது.

நீப்பர் நீர்மின் நிலையம் 1932-இல் முடிவுற்றது. இதனைத் தொடர்ந்து நாட்டை மின்மயமாக்கும் லெனினின் கொள்கையை தீவிரமாக்க ஸ்டாலினுக்கு வாய்ப்பு ஏற்பட்டது. 1933-இல் வெண் கடலையும் பால்டிக் கடலையும் இணைக்கும், கால்வாய் அமைப்புப் பணி முற்றுப்பெற்றது. உணவுப் பொருள் உற்பத்தி ஆலையொன்று யூரலில் தொடங்கப் பெற்றது. 1934-இல் தன்பாசில் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட பெரும் தொழிற்சாலைகளின் மூலமாக இரும்பு உற்பத்தி ஏறத்தாழ மூன்றிலொரு பகுதி அதிகரித்தது. 1935-இல் உணவுப் பங்கீட்டுமுறை படிப்படியாக நீக்கப்பட்டது. உயர்ந்த உற்பத்திக்கு உயர்ந்த ஊதியம் என்ற கோட்பாட்டால் மக்கள் உந்தப்பட்டனர். அதிகரித்த உழைப்பு, அதிகரித்த உற்பத்தி, உயர்வான நிலை என்ற உணர்வுகளால் உந்தப்பட்டவர்களாய் மக்கள் உழைப்பை நல்கிட நாடும் விரைந்து முன்னேறியது. கல்வித்துறையிலும் நாடு நல்ல வளர்ச்சியைப் பெற்றது. முதலாம் ஐந்தாண்டுத்திட்டத்தில் 4,60,000 பேர் தனித் திறம் பெற்றவர்களாகப் பயிற்சி பெற்றிருந்தனர். இரண்டாம் திட்டத்தின் இறுதியில் பல்கலைக்கழகங்கள், பல்கலைக்கழக அளவிலான நிறுவனங்கள் ஆகியவற்றில் ஏறத்தாழ 6 லட்சம் மாணவர்கள் பயின்றனர். அக்டோபர் புரட்சிக்குமுன் 1,27,000 பேரே உயர்

கல்வி பெற்றனர். 1930-இல் 8 வயதுக்கு மேற்பட்டோருக்கு கட்டாயக் கல்வித் திட்டம் புகுத்தப்பட்டன. கிராமப்புறங்களில் 4 ஆண்டுக்கால கல்விமுறையும் நகரங்களில், தொழிற்சாலை மையங்களில் ஏழாண்டுக் காலக் கல்வி முறையும் புகுத்தப்பட்டன. மாணவர்களுக்கு எழுதப் படிக்கக் கற்பித்தமையை அடிப்படைக் கல்வியாகக் கொண்டிருந்தது அரசு. அறிவியல் அறிவு, வகுப்பில் ஒழுங்கை நிலைநாட்டுதல், ஆசிரியருக்கு அடங்கி நடத்தல் ஆகியவற்றை அளித்திட கல்வித்திட்டம் வாய்ப்பளித்தது. பல புதிய வரலாற்றுப் புத்தகங்களும் பள்ளிகள், கல்லூரிகளில் இடம்பெற்றன.

இரண்டாம் ஐந்தாண்டுத்திட்டத்தின் இறுதியில் 1932-ஆம் ஆண்டைவிட தொழிற்துறை உற்பத்தியில் 100 சதவீதம் அதிகமாகவும் 1913-ஆம் ஆண்டை விட 500 சதவீதம் அதிகமாகவும் அதிகரித்தது. ஏறத்தாழ 4500 தொழில் நிறுவனங்கள் இயங்கின. விவசாயத்துறையில் 2,48,500 கூட்டுப் பண்ணைகள் அமைக்கப்பட்டன. இப்பண்ணைகளில் 4,56,000 இயந்திரக் கலப்பைகளும், 1,28,000 அறுவடை இயந்திரங்களும் 1,46,000 லாரிகளும் பயன்படுத்தப்பட்டன. 1913-இல் 21,000 மில்லியன் ரூபிளாக இருந்த வருடவருமானம். இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் 96,300 மில்லியன் ரூபிள்களாக உயர்ந்தது.

மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம் : 1938–1942

1939-ஆம் ஆண்டின் மார்ச்சில் கூடிய கட்சியின் பதினெட்டாவது மாநாட்டில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் குறைபாடுகள் சில ஒத்துக்கொள்ளப்பட்டன. நிலக்கரி உற்பத்தியும், தேனிரும்பு உற்பத்தியும் திட்ட அளவை எட்டவில்லை. இத்திட்டத்தின்படி மூன்று ஆண்டுகளுக்குள் தொழில் வளர்ச்சியை 'இருமடங்காக' ஆக்கவும் விவசாய உற்பத்தியை ஐம்பது சதவீதம் அதிகரிக்கவும், கூட்டுப் பண்ணை முறையை அதிகரிக்கவும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும், நாட்டின் கிழக்குப்பகுதியில் கிடைத்த வளத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்றும் திட்டமிடப்பட்டன. இத்திட்டம் மிகவும் வெற்றிகரமாக அமைந்தது.

1940-இல் 15 மில்லியன் டன் தேனிரும்பும், 18 மில்லியன் டன் எஃகும், 166 மில்லியன் டன் பருத்தியும் உற்பத்தியாயின. பயனீட்டாளர்கள் உற்பத்தி ஆலைகள் அனைத்தும் ஆயுத உற்பத்தி ஆலைகளாக மாறின. ரஷ்யா எண்ணெய் உற்பத்தியில் அமெரிக்காவிற்கு அடுத்த நாடாகவும், எஃகு உற்பத்தியில் உலகில் மூன்றாவது நாடாகவும், நிலக்கரி உற்பத்தியில் நான்காவது நாடாகவும் விளங்கியது. கனரகத் தொழில் உற்த்தியில் 1913-ஆம் ஆண்டைவிட 12 மடங்கு அதிகமாகவும், இயந்திர உற்பத்தியில் 35 மடங்கு அதிகமாகவும் உற்பத்தியாயிற்று. ஐந்தாண்டுத்திட்டக் காலத்தில் உக்ரெய்ன், ஒரு சிறப்பு மிக்க பகுதியாயிற்று. இக்காலத்தில் உக்ரெய்ன், தொழில் வளர்ச்சி பெற்ற கூட்டுப் பண்ணைகளின் வெற்றியைக் கண்ட ஒரு பகுதியாயிற்று. நாட்டின் மொத்த மின் உற்பத்தியில் கால்பாகமும், விவசாய இயந்திரக் கருவிகளில் 5 இல் ஒரு பாகமும் அங்கு உற்பத்தியாயிற்று. இத்திட்டங்களினால் மிகவும் பின் தங்கியிருந்த பைலோரஷ்யா கூட உற்பத்தியை இருமடங்காக்கிக் கொண்டது. நாட்டின் பருத்தி உற்பத்தித்தேவையில் பெரும்பகுதியை உஸ்பெகிஸ்தான் உற்பத்தி செய்தது. நான்காம் ஐந்தாண்டு திட்டம்: 1946-1950 வரை நடைபெற்றது.

ஐந்தாண்டுத் திட்டங்களைப் பற்றிய ஒரு மதிப்பீடு

ஐந்தாண்டுத் திட்டங்களைப்பற்றிய மேலெழுந்த வாரியானமதிப்பீடு என்பது குழப்பம் நிறைந்தாயும், கருத்து வேறுபாடு மிக்கதாயும் அமையும் என்பதே பொதுவான கருத்து. உண்மையில் நன்கு ஊன்றி கவனித்தால் ஸ்டாலின் காலத்தில் ஐந்தாண்டுதிட்டங்கள் வெற்றி பெற்றன. சொல்லப்போனால் சிறப்பான முறையில் நாட்டை முன்னேற்றமடையச் செய்தன என்றுதான் கூறவேண்டும். தொழில் துறைகள் புதிதாக தோன்றின, குறிப்பாக கனரக தொழில்கள் வளர்ச்சியடைந்தன. அது போலவே கூட்டுப்பண்ணை முறைகளும் மிகவும் நவீனமடைந்தன. எல்லோரும் இதை கண்ணுற்று வியந்தனர். நாட்டில் உற்பத்தி பன்மடங்கு அதிகரித்தது. முற்றிலும் புதிதான தொழில்கள் நாட்டில் துவங்கப்பெற்றன. புதிதாக சாகுபடிக்கு என்று தரிசுநிலமீட்சி திட்டம் மூலம் பண்ணைகள் தோன்றின. வடபகுதிகள் இதனால் வளமடைந்தன. இது வரையிலும் தரிசாக கிடந்த தூரத்து வடபகுதி நிலங்கள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவின. செஞ்சேனைப் படைகளைப் பொறுத்த வரையில், ஸார் மன்னனின் படைகளைவிட, சிறந்த தொழில் முறைகளையும் நவீன ஆயுதங்களையும் பெற முடிந்தது. இதுவே புதிய ஐந்தாண்டுத் திட்டத்தின் வெற்றியை பறைசாற்றப் போதுமானதாய் அமைந்தது. உள்நாட்டு மனிதசக்தியின் மூலம் தான் பெரும்பாலான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இதற்கு உள்நாட்டு பொருள் வசதிதான் பெரிதும் பயன்படுத்தப்பட்டது. ஆனால் வெளி நாடுகளில் இருந்து பல ஆயிரக்கணக்கான தொழில் நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு அவர்களது தொழில் திறமையும் பெரிதும் பயன்படுத்தப்பட்டது. அதுபோல குறைந்த கால கடன் தொகையும் பிறவும் ஜெர்மனி ரஷ்யாவிற்கு தொடக்க காலத்தில் வழங்கியது. இப்படியாக தொழில் துறையில் பின்தங்கிய ஒரு நாட்டை முன்னேற்றமடைய ஐந்தாண்டுத் திட்டங்கள் பெரிதும் பயன்பட்டன. சோவியத் அரசு இத்திட்டங்களைச் செயல்படுத்த மேற்கொண்ட முறைகள் மிகக் கடுமையானவை; மக்களை பெரிதும் துன்பத்திற்கு உள்ளாக்கியது எனலாம். நாட்டுமக்களை ராணுவ சட்டங்கள் மூலம் துன்புறுத்தியது. அதிக உற்பத்திக்கு வேண்டி மக்கள் கடுமையாக உழைக்க வேண்டி வந்தது. இதற்கு வேண்டி சிலர் உயிரையும் இழக்க வேண்டிய நிலை வந்தது. அக்டோபர் புரட்சிக்கு பிறகு, குறிப்பாக 1930-ஆம் ஆண்டுகளில் தொழிற் சங்கங்கள், அரசின் ஊழியனாக செயலாற்றி வந்தது. அரசின் சேவகனாக மாறி தொழிலாளர்களை துன்புறுத்தலாயிற்று. நுகர்வோர் பொருட்கள் பற்றாகுறையும் இருந்தன. குடியிருப்புகளும் மக்களுக்கு போதுமானதாய் இல்லாதிருந்தது. அந்த நேரத்தில் அரசு எல்லாவற்றையும் தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தது. எனவே கறுப்பு சந்தைகள் ஏராளம் தோன்றிற்று என்று ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் குறை கூறுபவர்கள் கூறுகின்றனர். எப்படியும் நாட்டின் வளர்ச்சிக்கு வேண்டி எல்லோரும் கஷ்டப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் சிலர் இன்னும் அதிகமாக கஷ்ட நஷ்டங்களை அனுபவித்தனர். அப்படிபட்டவர்களில் குலக்குகள் (Kulak) என்னும் பிரிவினரும் அவர்களது குடும்பத்தாரும் அடங்குவர். குலக் என்னும் வார்த்தை முதலில் பணக்கார விவசாயிகளை குறிக்க பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் சோவியத் மக்கள் பிற்காலத்தில் பேராசையுடன் பிறரை சுரண்டி வாழ்ந்த நிலக்கிழார்களை குறிக்க பயன்படுத்தலாயினர். குலக்குகள் கட்டாய வேலைக்கு அனுப்பட்டனர். பால்டிக்கடல் வெண்கடல் (Baltic-White Sea) திட்டம், பிற கால்வாய் திட்டங்கள் முதலியன, கட்டாய வேலை முறையில்

செயல்படுத்தப்பட்டன. அது போலவே சுரங்க வேலைகளுக்கு இம்முறையில் ஆட்கள் பயன்படுத்தப்பட்டனர். சேகா (Cheka) என்னும் அரசு காவல்துறை தான் இந்த வேலையின் ஈடுபடுபவர்களை கண் காணித்து வந்தது. வேலைசெய்ய மறுத்தவர்களை ஐரோப்பாவில் உள்ள ரஷ்ய பகுதிகளிலும், சைபீரியாவிலும் உள்ள (Concentration-camp) சிறை கூடங்களுக்கு அனுப்பினர்.

ஸ்டாலினின் தனித் தலைவர் வழிபாட்டுக் கொள்கையால் நாட்டில் சற்று மந்தநிலை ஏற்பட்டது. தொழிலாளர்களிடையே மனக்கசப்பு ஏற்பட்டன. கட்டுப்பாடுகள் அதிரிக்கப்பட்டன, வேலையில் நாட்டமில்லாது எப்போதும் வருதல், வேலைநேரத்தில் வேலையை விட்டுவிட்டு வெளியே போதல் போன்ற ஒழுங்கீனங்கள் நடைபெற்றன. ஸ்டாலின் பேச்சு எங்கும் ஒலித்தது. கட்சிக்களையெடுப்பின் காரணமாக வயது முதிர்ந்த போல்ஸ்விக்குகள் உறுப்பினர் பதவியிழந்தனர். 18வது மாநாட்டில் கலந்து கொண்ட உறுபினர்களில் பெரும்பாலோர் 35 வயதுக்குட்பட்டவர்களே இருந்தனர். மிக முக்கிய பிரச்சனைகளைக் கூட பொலிட்பீரோ உறுப்பினர்களைக் கலந்து மேற்கொள்வதில்லை. அனைவரும் ஸ்டாலினை தலைவர், ஆசிரியர், நண்பர், தோழர் என்று வருணிக்கலாயினர்.

பயிற்சி வினா

ஸ்டாலினின் ஐந்தாண்டுத் திட்டங்கள் எந்த அளவிற்கு ரஷ்யாவை உயர்வடையச் செய்தது என்பதை விளக்குக.

பாடம் – 23 1936–ஆம் ஆண்டின் அரசியல் சட்டம் தனித்தலைவர் வழிபாட்டுக் கொள்கை

ஜோசப் ஸ்டாலினின் ஆட்சிக்காலத்தில் 1936-ஆம் ஆண்டு புதிய அரசியல் சட்டம் ஒன்று தொகுக்கப்பட்டு நவம்பரில் மாஸ்கோவில் கூடிய எட்டாவது சோவியத்துகளின் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. முன்பே 1918, 1924 ஆம் ஆண்டுகளில் லெனினின் கோட்பாடுகளை ஏற்று இரு அரசியல் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு செயல்படுத்தப் பட்டிருந்தன. புதிய பொருளாதாரக் கொள்கையும், ஐந்தாண்டு திட்டங்களும் நாட்டின் பொருளாதார அமைப்பினை மாற்றியமைத்ததாலும், குடியரசுகளின் எல்லைகளும் அமைப்புகளும் சில மாற்றங்களைப் பெற்றிருந்ததாலும், சமுதாய அரசியல் அமைப்புமுறை அதிக ஜனநாயகத்தன்மை கொண்டதாக இருக்கவேண்டுமென்ற நோக்கோடு புதிய அரசியல் சட்டம் தொகுக்கப்பட வேண்டியதாயிற்று. முன்னைய அரசியல் சட்டத்தில் சமத்துவ நோக்கும் இல்லை; தேர்தல் முறையும் பலகட்டங்களைக் கொண்டதாக இருந்தது. சோவியத்துக்களின் அதிகாரங்களுக்கிருந்த வரம்பினை நீக்கி, சமதர்ம ஜனநாயகம் நிலைத்திடவும் சில மாற்றங்களைச் செய்யவேண்டிருந்தது.

1936-ஆம் ஆண்டு ஜூன் மாதம் நாடு தழுவிய அளவில் பொது மக்களின் விவாதம் நடைபெறவேண்டுமென்ற நோக்கோடு தொகுக்கப்பட்ட அரசியல் சட்டம் வெளியிடப்பட்டது. வயது வந்தோரில், வாக்காளராகும் தகுதி படைத்தோரில் ஏறத்தாழ பாதிப்பேர் புதிய அரசியல் சட்டத்தைப்பற்றிய விவாதத்தில் பங்கு பெற்றனர். நவம்பரில் அது செயல்முறைக்கு வந்தது. சமதர்மக் கோட்பாடுகளின் வெற்றியையும், சமதர்ம ஜனநாயக அமைப்பிற்கான அடித்தளத்தையும் அது குறிப்பிட்டது. சோவியத்துகளின் தேர்தல் முறையிலிருந்து கட்டுப்பாடுகளையும், பல கட்டத்தேர்தல் முறையிலிருந்த கட்டுப்பாடுகளையும், பல கட்டத்தேர்தல் முறையையும் நீக்கி, வயது வந்தோருக்கெல்லாம் வாக்குரிமையளித்து, இரகசியமான நேரடித்தேர்தல் நடக்க வழி செய்தது. மக்களுக்கு வேலை செய்யவும், ஓய்வெடுக்கவும், கல்வி பெறவும், முதுமைக்கால ஊனமுற்றோர் உதவித்தொகை பெறவும் உரிமைகளை அளித்தது.

புதிய அரசியல் சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டபோதே தேசீய அளவிலும் சில மாற்றங்கள் நிகழ்ந்தன. கசக்ஸ்தான், கிர்கீசியா ஆகிய இரு சுயாட்சிக் குடியரசுகள் ஐந்தாண்டு திட்டக்காலத்தில் பொருளாதார, அரசியல் துறைகளில் நல்ல வளர்ச்சி பெற்றிருந்ததால் அவை கூட்டரசின் குடியரசுகளாயின. டிரான்ஸ்காகசியன் கூட்டமைப்பு கலைக்கப்பட்டு அதற்குப் பதிலாக அர்மீனியா, அசர்பைசன், ஜார்ஜியா ஆகிய மூன்று குடியரசுகள் உருவாக்கப்பட்டன.

புதிய அரசியல் சட்டத்தின்படி சோவியத் சமதர்ம குடியரசுக் கூட்டரசு தொழிலாளர்களின் — விவசாயிகளின் சமதர்ம அரசாக இயங்கும். அனைத்து அதிகாரங்களும் உழைப்பாளிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட சோவியத்துக்களிடமே

இருக்கும். சமதர்ம சொத்து அனைத்தும் அரசின் சொத்தாகவும் கூட்டுறவுகளின் சொத்தாகவும் கூட்டுப் பண்ணைகளின் சொத்தாகவும் இருக்கும். கூட்டுப்பண்ணைகளின் நிலமனைத்தும் காலவரம்பின்றி அவற்றின் சுதந்திரமான உபயோகத்திலேயேயிருக்கும். கூட்டரசில் மொத்தம் 15 குடியரசுகள் சமஉரிமைகளைக் கொண்டதாக இணைந்திருக்கும். அவற்றின் அதிகார வரம்பிற்குள் சுயாட்சி அதிகாரம் பெற்ற சில குடியரசுகளும், சுயாட்சி அதிகாரம் பெற்ற சில நிலப்பகுதிகளும் இருக்கும். ஒவ்வொரு குடியரசும் தனக்கென தனி அரசியல் சட்டத்தை வகுத்துக் கொள்ளும். ஒவ்வொரு குடியரசும் தான் 'விரும்பும் போது கூட்டரசிலிருந்து விலகிக்கொள்ள உரிமையுண்டு. கூட்டரசுக் குடியரசுகளின் எல்லைகள் அவற்றின் சம்மதமின்றி மாற்றப்படமாட்டாது. ஒவ்வொரு குடியரசும் வெளிநாடுகளுடன் நேரடியாக அரசியல் உறவு கொள்ளவும், தனி ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளவும் உரிமையுண்டு. கூட்டரசின் தலைமை சோவியத் அரசின் உயரதிகார அமைப்பாகும். தலைமை சோவியத் கூட்டரசின் சோவியத் என்றும், 'தேசிய இனங்களின் சோவியத் என்றும் இருசபைகளைக் கொண்டிருக்கும். அவ்விரு சபைகளுக்கும் சம உரிமைகள் உண்டு. கூட்டரசின் சோவியத்துக்கான பிரதிநிதிகள் மூன்று இலட்சம் வாக்காளர்களுக்கு ஒருவர் வீதம் நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர். தேசிய இனங்களின் சோவியத்துக்கான பிரதிநிதிகளைக் கூட்டரசின் குடியரசுகள் ஒவ்வொன்றும் 32 பிரதிநிதிகள் வீதமும், சுயாட்சிக் குடியரசுகள் ஒவ்வொன்றும் 11 பிரதிநிதிகள் வீதமும் சுயாட்சிப் பகுதிகள் ஒவ்வொன்றும் 5 பிரதிநிதிகள் வீதமும், தேசியநிலப்பகுதிகள் ஒவ்வொன்றும் ஒரு பிரதிநிதிவீதமும் தேர்ந்தெடுக்கும். தலைமை சோவியத் அரசு அமைப்பிற்கென ஒரு குடியரசுத் தலைவரையும், கூட்டரசின் ஒவ்வொரு குடியரசிலிருந்தும் ஒருவர் வீதம் 15 துணைத்தலைவர்களையும் தேர்ந்தெடுக்கும். தேர்தல்கள் நான்காண்டுக்கொருமுறை நடைபெறும். அரசின் நிர்வாகங்களைக் கவனிக்கவென அமைச்சரவை ஒன்று அமைக்கப்படும். நீதித்துறையில் தலைமை நீதிமன்றமே எல்லா அதிகாரங்களையும் கொண்டிருக்கும்; அனைத்துக் குடியரசுகளும் தங்களுக்கெனத் தனித்தலைமை நீதிமன்றங்களைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு குடிமகனுக்கும் வேலைபெறும் உரிமையுண்டு.

புதிய அரசியல் சட்டத்தின் அடிப்படையில் 1937 டிசம்பர் 12-இல் பொதுத்தேர்தல் நடைபெற்றது. கட்சி உறுப்பினர்களுக்கும், உறுப்பினர் அல்லாதாரும் தேர்வு பெறவும் வழிவகுக்கப்பட்டது. கூட்டரசு சோவியத் மன்ற உறுப்பினர்கள் 1143 பேரில் 870 பேர் பொதுவுடைமைக் கட்சியினராகவும், 273 பேர் கட்சி உறுப்பினரல்லாதவராயும் இருந்தனர். 1938 ஜனவரியில் அதன் முதல் கூட்டம் கூடியபோது மிக்கெயில் காலினின் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தலைமை அமைச்சராக ஸ்டாலின் தேர்வு பெற்றார்.

தனித்தலைவர் வழிபாட்டுக் கொள்கை

பெரும் பொருளாதாரச் சிக்கலுக்கிடையேயும், அரசியல் குழப்பத்திற்கிடையேயும் தான் சோவியத் சமதர்ம அரசு உருவாக்கப்பட்டது. அதன் முதலாளித்துவ தன்மையிலிருந்து சமதர்ம இலக்கு நோக்கி மாற்றம் ஏற்பட்டபோதும், புதிய பொருளாதாரக் கொள்கையின் போது பூர்சுவா மனம் கொண்ட "குலக்கு"களும், நிலப்பிரபுக்களும் தங்கள்

எதிர்ப்பினைக் காட்டவே அவர்களை ஒழித்துக் கட்ட கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. முதலாளித்துவத்தின் வெற்றியை தவிர்க்க தொழிலாளர் விவசாயிகளின் இணைப்பு தவிர்க்க முடியாத தேவையாயிற்று, டிராட்ஸ்கிய வாதிகளையும், வலதுசாரி, இடதுசாரி எதிர்ப்பாளர்களையும், திரிபுவாதிகளையும் ஒழிக்கவேண்டி பொதுச்செயலாளர் ஸ்டாலினும், மத்தியக்குழு உறுப்பினர்களும் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். ஆனால் விரைவிலேயே மக்களின் வெற்றியைத் தனது வெற்றியாக மாற்றிட ஸ்டாலின் முனைந்தார். கட்சியின் 17-வது மாநாடு 1934-இல் கூடியபோது தனித்தலைவரின் வழிபாட்டுக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டது. நாட்டுக்கும், கட்சிக்கும், திட்டங்களின் வெற்றிக்கும் அவர் ஆற்றிய தொண்டு மட்டுமே வானவளாவப் புகழப்பட்டது. மத்தியக்குழுவின் அறிக்கைக்குப் பதிலாக ஸ்டாலினின் அறிக்கையை மட்டுமே மாநாடு ஏற்றுக்கொண்டது.

லெனின் வகுத்த வழியிலிருந்தும் வழுவிய அவர், கட்சியின் கூட்டுத் தலைமையைக் கட்டிக் காப்பதற்குப் பதிலாகத் தன் பதவியைப் பயன்படுத்தித் தனது நிலையை மட்டுமே நன்கு நிலைநாட்டிக் கொள்ள முனைந்தார். அவரது குணவியல்புகளான முரட்டுத்தனம், கட்சித் தொண்டர்களை மதியாமை, குறை கூறுவோரை இழிவுபடுத்துதல், தனது சொல்லே சட்டம் என்ற எண்ணம் ஆகிய எல்லாமே பல வழிகளிலும் வெளிப்பட்டது. அவரது அதிகார எல்லைகள் விரிவாகாது தடுத்த மத்தியக் கட்டுப்பாட்டுக்குழுவும், தொழிலாளர் - விவசாயிகளின் ஆய்வுக்குழுவும் அவரது ஆலோசனையின் பேரில் அகற்றப்பட்டன. 1934-ஆம் ஆண்டு தனது கட்சி களையெடுப்புத் திட்டத்தை நிறைவேற்ற விரும்பிய அவர் 'நாடு சமதர்மத்தை நோக்கி முன்னேறும் போது வர்க்கப் போராட்டமும் அதிகரிக்கும்' என்றார். உள்நாட்டில் அத்தகைய போராட்டம் முடிவுற்று உலக அரங்கில் அப்போராட்டம் தலைதூக்கத் தொடங்கியிருந்த சமயம் அவரது கூற்று உண்மைக்குப் புறம்பாகவே இருந்தது.

செப்டம்பரில் யகோதா (Yagoda)வுக்குப் பதிலாக எசோவ் (Yezhev) புதிய உள்துறை அமைச்சரானதைத் தொடர்ந்து அவரது பயங்கர நடவடிக்கைகள் தொடங்கின. 1937-38ல் ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டு சதிக்குற்றங்களை ஒப்புக் கொள்ள வற்புறுத்தப்பட்டுக் கொல்லப்பட்டனர் அல்லது தொழிலாளர்களின் கட்டாயச் சிறை முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர். மக்கள் ஸ்டாலினிடம் கொண்டிருந்த உயர் நம்பிக்கை காரணமாக அவரது தனித்தலைவர் வழிபாட்டுக் கொள்கையின் எதிர்ப்புக்கு மக்கள் ஆதரவு கிடைக்கவில்லை; அத்தகைய எதிர்ப்பாளர்களை சமதர்மக் கோட்பாடுகளின் எதிர்ப்பாளர்கள் என்றே எண்ணினர். அவரது சட்ட விரோத, சமுதாய விரோதச் செயல்களும் தங்கு தடையின்றி நிறைவேற வாய்ப்பும், வசதியும் ஏற்பட்டது.

1936-ல் கார்க்கி (Gorky) மர்மமான முறையில் மரணமடைந்தார். தாம்ஸ்கி (Tomsky) தற்கொலை செய்து கொண்டார். 1937 ஜனவரியில் ரதாக் மற்றும் 16 பேர் மீது ஜெர்மனி, ஜப்பான் நாடுகளின் துணையுடன் நாட்டையழிக்கத் திட்டமிட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டு விசாரிக்கப்பட்டனர். கட்சி எதிர்ப்புப்பணி, நாட்டைக் காட்டிக்கொடுக்கும் நடவடிக்கைகள், அரசதுரோகம், தொழிற்சாலைகளை முடமாக்கும் நாச வேலைகள், வாழ்க்கையைச் சீர் குலைத்தல் போன்ற பயங்கரக் குற்றங்களை ஒப்புக்கொண்ட பலரும்

தூக்குமரத்துக்கு அனுப்பப்பட்டனர். ஜூன் மாதம் இராணுவத்தைச் சேர்ந்த துகசேவ்ஸ்கியும், மற்றும் பல உயரதிகாரிகளும் கைது செய்யப்பட்டு டிராட்ஸ்கீய வாதிகளுடன் திடீர்ப் புரட்சிக்குத் திட்டமிட்டதாகவும் ஜெர்மனி, ஜப்பான் நாடுகளுக்காக உளவு வேலைகளில் ஈடுபட்டதாகவும் குற்றம் சுமத்தப்பட்டு, விசாரணைக்குப்பின் கொல்லப்பட்டனர். படைத்துறையில் பயனுள்ள அனுபவம் பெற்றிருந்த பலர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதோடு, மரணதண்டனையும் அளிக்கப்பட்டதால் படைத்தலைமை பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டது. அதன் மோசமான விளைவுக்கு ஸ்டாலினே முழுப்பொறுப்பாளியானார்.

1938 மார்ச்சில் புகாரின், ரிகோவ், யகோதா மற்றும் 18 பேர் விசாரணைக் குட்பட்டனர். கார்க்கி, குய்பிசேவ், மென்சிஸ்கி ஆகியோருக்கு நஞ்சூட்டியதாக யகோதா மீது குற்றம் சுமத்தப்பட்டது. அவர்களில் மூவரைத்தவிர மற்றோர் மரணதண்டனைப் பெற்றனர். அதைப்போலவே பவல், போஸ்திசேவ், காமின்ஸ்கி, கோசியார், ராபர்ட்ஜக், குபர், புப்னோவ், கிரை லங்கோவாசிலி பிளச்சர், எகரோவ் போன்ற பல தலைவர்களும் சிறை தண்டனை பெற்று நாடு கடத்தப்பட்டனர். இத்தகைய கொடுஞ் செயல்களெல்லாம் ஸ்டாலினின் மரணத்திற்குப் பின்பே வெளியாயிற்று. அவரது பயங்கர நடவடிக்கைகளில் மாலடோவ், மாலங்கோவ், கனோவிச் ஆகியோரும் பங்குபெற்றனர். 1938-ஆம் ஆண்டின் மத்தியில் எசோவுக்குப் பதிலாக பெரியா (Peria) உளவுத்துறைத் தலைவரானார். தத்துவங்கள் நடைமுறைச் செயல்களிலிருந்து மாறுபட்டன. எல்லாம் வல்ல தனித்தலைவராக ஸ்டாலின் போற்றப்பட்டார். 'பொதுவுடைமைக் கட்சியின் வரலாறு' என்னும் நூல் அவரைப் பற்றியச் செய்திகளை மட்டுமே அதிகம் கொண்டிருந்ததே தவிர, கட்சியின் பல பணிகள் அதில் இடம்பெறவே இல்லை.

பயிற்சி வினாக்கள்

1) ரஷ்யாவில் உருவான தனித்தலைவர் கொள்கைமுறை குறித்து ஒரு கட்டுரை வரைக.

2) தனித் தலைவர் வழிபாட்டுக்கொள்கை என்றால் என்ன? அது ரஷ்யாவில் எங்ஙனம் கடைப்பிடிக்கப்பட்டது.

பாடம் – 24 ஸ்டாலினின் வெளிநாட்டுக் கொள்கை

லெனின் தலைமையிலான கம்யூனிச அரசு சிறந்த ரெளிநாட்டுக் கொள்கையினைக் கடைப்பிடித்து வந்தது. லெனினின் மறைவிற்குப் பின்னர் ஸ்டாலின் பதவியேற்றபோதும் லெனின் ஆரம்பித்த கொள்கையினைத் திறம்பட முடித்திட முடிவு செய்து, முதலாளித்துவ நாடுகளுக்கு எதிராக பொதுவுடமைக் கொள்கையில் நம்பிக்கையுள்ள அனைத்து நாடுகளின் சங்கம் ஒன்று பொதுவுடமை அகிலம் (Comintern) என்ற பெயரில் அமைக்கப்பட்டது. ஏனைய நாடுகளுடன் ராஜதந்திர உறவு முறையையும் ஏற்படுத்திக் கொண்டது.

பாரசீகம், ஆப்கானிஸ்தானம், துருக்கி, மங்கோலியா ஆகிய நாடுகளுடன் 1921-இல் அமைதி உடன்பாடுகள் செய்து கொள்ளப்பட்டன. சீனாவுடனும் நட்புறவு ஏற்பட்டது. இங்கிலாந்து, நார்வே, இத்தாலி, ஆஸ்திரியா ஆகிய நாடுகளுடன் வணிக உடன்பாடுகள் செய்து கொள்ளப்பட்டன. இத்தகைய உடன்பாடுகள் ஏற்பட மிகவும் பாடுபட்டவர் சிகரின் என்ற வெளிநாட்டு அமைச்சராவார். இவ்வாறே ஜெர்மனியுடனும் நட்பு நடுநிலை உடன்பாடு ஒன்றினை ரஷ்யா செய்து கொண்டது. 1924இல் இங்கிலாந்துடன் இராஜ தந்திர உறவினை ஏற்படுத்திக் கொண்டது. இதன் மூலம் ரஷ்ய நாட்டின் சோவியத் அரசை இந்நாடுகள் அங்கீகாரம் செய்தன. வெர்சேல்ஸ் உடன்பாட்டின் அடிப்படையிலான ஜெர்மனியின் மேற்கு எல்லைகளை 1925 அக்டோபரில் ஏற்பட்ட லொக்கார்னோ உடன்பாடு உறுதி செய்தது. இதனை தனது கிழக்கு எல்லைகளை விரிவுபடுத்திக்கொள்ளும் சுதந்திரத்தைப் பறிப்பதாக ரஷ்யா குற்றம் சாட்டியது. 1926இல் இங்கிலாந்தில் தொடங்கிய பொதுவேலை நிறுத்தத்தை ரஷ்யா முழுமனதுடன் ஆதரித்தது. இதனை கன்சர்வேட்டிவ் கட்சியினர் கண்டித்ததோடு அல்லாமல் ஆர்கோஸ் என்னும் சோவியத் வணிக நிறுவனத்தைத் தாக்கிப் பெரும் சேதத்தையும் விளைவித்தனர். மேலும் இங்கிலாந்து ரஷ்யாவுடன் இருந்த தொடர்பினை முறித்துக் கொண்டது. சீனாவும் சோவியத் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டது. போலந்தில் இருந்த சோவியத் தூதர் கொலை செய்யப்பட்டார். எந்த நேரமும் சோவியத் நாட்டுக்கு எதிராக முதலாளித்துவ நாடுகள் போர் தொடுக்கலாம் என்ற எண்ணம் கொண்டிருந்த ஸ்டாலின் நாட்டை தொழில் மயமாக்கும் முயற்சியில் ஈடுபட்டார். எனவே ஐந்தாண்டு திட்டங்களை வகுத்தார்.

இத்திட்டங்களின் பயனாக ரஷ்யா ஒரு வல்லரசு நாடாயிற்று. வெளியுறவு அமைச்சர் சிசரினுக்குப் பின் லித்வினோவ் என்பவர் அமைச்சரானார். இவருடைய முயற்சியால் 1929இல் 'கிழக்கு நாடுகளின் போலந்து, ருமேனியா, லாத்வியா, எஸ்தோனியா, லிதுவேனியா, துருக்கி, பாரசீகம், தான்சிக் சுதந்திர நாடுகள் ஆகியவை கையெழுத்திட்டன.

இவ்வொப்பந்தத்தில் பின்லாந்து கையெழுத்திட மறுத்து விட்டது. இங்கிலாந்தில் 1929இல் தொழிற்கட்சி பதவியேற்றதும் ரஷ்யா உறவு புதுப்பிக்கப்பட்டது. மஞ்சூரியாவிலிருந்து 'சீனக் கிழக்கு இருப்புப்பாதை' அலுவலகத்தில் இருந்த ரஷ்யர்கள் துன்புறுத்தப்பட்டதால் சென்சேனைப் படையின் ஒரு பிரிவினர் மஞ்சூரியாவிற்குள் அனுப்பப்பட்டனர். டிசம்பரில் சீனாவும், ரஷ்யாவும் கையெழுத்திட்ட 'கபரோவஸ்க் போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி' 1924ஆம் ஆண்டின் இருப்புப்பாதை நிர்வாக ஏற்பாட்டினை ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் விட்டு விடுவது என முடிவு செய்யப்பட்டது.

சீனாவில் கம்யூனிசம் வளர்வதை ரஷ்யா விரும்பியது. அதனால் மா-சே-துங்கிற்கு, அவர் 1932இல் அமைத்த சீனச் செஞ்சேனைக்கு அனைத்து உதவிகளையும் ரஷ்யா கொடுத்தது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஜப்பான் மஞ்சூரியாவை ஆக்கிரமித்தது. இதனால், சீனாவும் ரஷ்யாவுடன் 'நான்கிங் போர் மறுப்பு ஒப்பந்தம் ஒன்றை செய்துகொண்டது. அதேபோன்று, அந்த ஆண்டிலேயே பின்லாந்து, லாத்வியா, எஸ்தோனியா, போலந்து, பிரான்சு ஆகிய நாடுகளுடனும் போர் மறுப்பு ஒப்பந்தங்களைச் செய்து கொண்டது. 1933இல் ரஷ்யாவும், ஹிட்லரின் ஜெர்மனியும் ரபல்லோ உடன்படிக்கையை மீண்டும் அங்கீகரித்தன. அப்போது ஜெர்மனியில் நாஸிஸம் வளர்வதன் மூலம் கம்யூனிசம் வளரும் என்று ரஷ்யா எதிர்பார்த்தது. ஆனால், ஹிட்லரின் மெய்ன் கேம்ப் நூலில், கம்யூனிச எதிர்ப்புக் கொள்கைகள் வெளியிடப்பட்டதால் சோவியத் அரசின் வெளிநாட்டுக் கொள்கையிலும் மாற்றம் ஏற்பட்டது. 1933இல் அமெரிக்க ஐக்கிய நாடு சோவியத் அரசை அங்கீகரித்தது. 'பத்தாண்டு காலப்போர் மறுப்பு ஒப்பந்தம்' ஒன்றை 1934 ஜனவரியில் ஜெர்மனியும், போலந்தும் கையெழுத்திட்டது. இது உக்ரெயின் மீது ஜெர்மனி கொண்ட உள் ஆசையை வெளிக்காட்டிற்று. முதலாளித்துவ நாடுகளிடமிருந்து வரும் ஆபத்தை விட ஜெர்மனியிடமிருந்து அதிக ஆபத்து உண்டு என்று ரஷ்யா கருதியதால் 1935ஆம் ஆண்டு மே மாதம் ரஷ்யாவும் பிரான்சும் அவசர காலத்தில் ஒருவருக்கொருவர் துணை புரியவென்று 'இருவர் ஒப்பந்தம்' ஒன்றைச் செய்துகொண்டன. இத்தோடு செக்கோஸ்லாவிகியாவையும் இணைத்துக் கொண்டு 'மூவர் ஒப்பந்தம்' என்று அமைத்துக் கொண்டன. இதன்படி ரஷ்யாவோ, செக்கோஸ்லோவாகியாவோ தாக்கப்படும் போது பிரான்சு உதவிக்கு வந்தாலே 'ஒருவருக்கொருவர் உதவுவது' என்ற கோட்பாடு கடைப்பிடிக்கப்பட்டது.

ஜெர்மனியில் ஹிட்லரின் நாஸிஸமும், இத்தாலியில் முசோலினியின் பாசிசமும் வளர்வதை கம்யூனிச கட்சி விரும்பவில்லை. எனவே, இடதுசாரிகளுடன் சேர்ந்துகொண்டு அனைத்து நாடுகளிலும் பொதுவுடமையாளர்கள் 'மக்கள் முன்னணி' அமைத்துத் தங்கள் வலிமையைப் பெருக்கலாயினர். ஜப்பான் மஞ்சூரியாவைக் கைப்பற்றியவுடன் சீனக்கிழக்கு இருப்புப் பாதையையும் ஜப்பானுக்கே விற்றுவிட்டது. அதன் நோக்கம் ஜப்பானின் மண்ணாசையைத் தணிக்க ரஷ்யா கடைபிடித்த, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையைக் காட்டியது. இத்தகைய சூழ்நிலையில் உலகம் ஒரு பெரும் நெருக்கடியில் திழைத்திருந்தது.

1927-இல் நடைபெற்ற உலகப் பொருளாதார மாநாட்டில் சோவியத் நாடு பங்கு பெற்றது. அம்மாநாட்டில் வெவ்வேறு சமூக அமைப்புக்களைக் கொண்டுள்ள நாடுகளிடையே சமாதானக் கூட்டு வாழ்வு நிலவ முடியும் என்று ரஷ்யா கருத்து தெரிவித்தது. 1928 ஆகஸ்டில், அமெரிக்க வெளியுறவு அமைச்சரான கெல்லக், பிரான்சின் வெளியுறவு அமைச்சரான பிரியாண்ட் ஆகியோரின் முயற்சியால் நடைபெற்ற கெல்லக் பிரியண்ட், போர் மறுப்பு ஒப்பந்தத்தில் அமெரிக்க, பிரான்சு, இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான், செக்கோஸ்லாவாகியா, போலந்து ஆகிய நாடுகள் கையொப்பமிட்டன. ரஷ்யாவையும் இந்த உடன்பாட்டுக்கு உடன்பட அழைப்பு விடுவிக்கப்பட்டது.

1925 முதல் 1926 வரை கூடி சர்வதேச சங்கத்தின் மூலம் கூட்டப்பட்ட ஆயுதக் குறைப்பு மாநாட்டில் ரஷ்யா கலந்து கொண்டு, அனைத்து நாடுகளில் ஆயுதப்படைகளைக் கலைத்து விடுவது, ஆயுதங்களை அழித்து விடுவது, ஆயுதத் தொழிற்சாலைகளை அடைத்து விடுவது போன்ற பல திட்டங்களை ரஷ்யா முன் வைத்தது. இக்கருத்துக்களைப் பல மேலை நாடுகள் ஒத்துக் கொள்ளவில்லையெனினும் அடுத்த மாநாட்டில் அதனை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள சம்மதித்தன. 1932ல் நடைபெற்ற படைக்குறைப்பு மாநாடு ஆயுதக் குறைப்பினை ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக, ஜெர்மனி படைபலப் பெருக்கக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டது. இத்தாலியிலும், முசோலினி தலைமையிலான ஆட்சி 1935-இல் எதியோப்பியாவைக் கைப்பற்றியது. இத்தகைய நிலைமைச் சமாளிக்கும் வலிமை சர்வதேச சங்கத்திற்கு இல்லை. 1936இல் ஸ்பெயின் நாட்டில் உள்நாட்டுப் போர் ஏற்பட்டபோது நாசிச அரசும், பாசிச அரசும் அப்போரை ஆதரித்தன. ஆனால் ரஷ்யா ஸ்பானியக் குடியரசைக் கடைசி வரை ஆதரித்தது. பொதுவுடமை அரசுக்கு எதிராக பெர்லின் - ரோம் அரசும், அதனைத் தொடர்ந்து பெர்லினும், டோக்கியோவும் உடன்பாடு செய்துகொண்டன. பாசிசம், நாசிசம் வளர்வதை விரும்பாத அமெரிக்கா, சோவியத் நாட்டை அங்கீகரித்தது. 1933இல் ஜெர்மனியும், ஜப்பானும் சர்வதேச சங்கத்திலிருந்து விலகிக் கொண்டன. 1934இல் உருவாக்கப்பட்ட கிழக்கு லோகர்னோ உடன்பாட்டில். ஜெர்மனி, போலந்து, பின்லாந்து, செக்கோஸ்லோவேகியா, பால்டிக் நாடுகள், ரஷ்யா ஆகியவை கையெழுத்திட்டன. அதன்படி ஐரோப்பிய நாடுகளின் எல்லைகள் உறுதி செய்யப்பட்டன. மேலும் இவ்வொப்பந்தத்தின் பாதுகாவலராக பிரான்சு இருக்கும். 1935ஆம் ஆண்டு மே 2ஆம் தேதி ரஷ்யாவும், பிரான்சும் இராணுவ உதவி ஒப்பந்தத்தையும், ஆகஸ்டில் சீனாவுடன் போர் மறுப்பு ஒப்பந்தம் ஒன்றையும் செய்து கொண்டன. 1934ஆம் ஆண்டு ஜப்பானிய ஆக்கிரமிப்பை எதிர்க்கவேண்டும் என ஷியாங்கே ஷேக்கின் தேசிய அரசுடன் ரஷ்யா கூட்டணி அமைத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. 1938இல் மஞ்சூரியாவைக் கைப்பற்றி கொண்ட ஜப்பான், பின்னர் ஹாசன் ஏரிப் பகுதியில் ரஷ்யாவினுள்ளும் நுழைந்தது. இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்சு போன்ற நாடுகள், அமைதியை விரும்பியவர்களாய் ஜெர்மனியிடம் விட்டுக் கொடுக்கும் கொள்கையினைக் கடைப்பிடித்தனர். 1938இல் செக்கோஸ்லாவாகியாவைச் சேர்ந்த சுதேதன்லாந்தைத் தன்னுடையது என்று ஜெர்மனி

அறிவித்தபோது இங்கிலாந்து நாட்டுப் பிரதமர், பிரான்ஸ் நாட்டுப் பிரதமர் இத்தாலியச் சர்வாதிகாரி ஆகியோர் ஹிட்லருடன் மியூனிச் என்னுமிடத்தில் பேச்சு வார்த்தை மேற்கொண்டனர். எட்டு மணி நேரம் நடைபெற்ற இம்மாநாடு மியூனிச் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டது. அதன்படி செக்கோஸ்லாவாகியா தனது நாட்டில் நான்கு எல்லைப்புற மாநிலங்களை இழக்க வேண்டியதாயிற்று. செக்கோஸ்லாவாகியாவைக் கலந்து ஆலோசிக்காமலேயே அதன் தலைவிதியை அவை நிர்ணயித்தன. இதன்படி ஜெர்மனி கிழக்குப் பகுதியில் தனது எல்லையை விரிவாக்கிக் கொள்ளத் தடையேதும் இல்லாது போயிற்று. இந்நிலையில் 1939 மார்ச் 15க்குள்ளாக செக்கோஸ்லாவாகியா முழுவதையுமே ஜெர்மனி கைப்பற்றிக் கொண்டபோது மியூனிச் ஒப்பந்த நாடுகள் ஒன்றும் சொல்லவில்லை. மார்ச் 21இல் போலந்தைச் சார்ந்த தான்சிக் பகுதி தன்னைச் சேரவேண்டுமென்றார். ஹிட்லர். மறுநாளே லிதுவேனியாவைச் சேர்ந்த கிளைபெதாப் பகுதியில் ஜெர்மன் படைகள் நுழைந்தன. சில நாட்களில் முசோலினியின் படைகள் அல்போனியாவைக் கைப்பற்றின.

இத்தகைய சூழ்நிலையில் இரண்டாம் உலகப்போர் ஏற்படும் சூழ்நிலை உருவாயிற்று. பல நாடுகளும் போர் எண்ணம் கொண்டிருந்த வேளையில் 1939 செப்டம்பர் முதல் நாள் போலந்தை ஜெர்மனி தாக்கியதைத் தொடர்ந்து இரண்டாம் உலகப்போரும் துவங்கிற்று.

பயிற்சி வினா

ஜோசப் ஸ்டாலினின் வெளிநாட்டுக் கொள்கையை விளக்குக.

பாடம் – 25

இரண்டாம் உலகப்போரில் ரஷ்யாவின் பங்கு

மேற்கு ஐரோப்பாவில் தொடங்கிய இரண்டாவது உலகப்போர் (1939-45) சோவியத் நாட்டின் எல்லையை அபாயகரமாக அணுகியது. அதற்கெனவே 1941-ஆம் ஆண்டின் வசந்த காலத்திலேயே ருமேனியா, பல்கேரியா, ஹங்கேரி, பின்லாந்து ஆகிய நாடுகளுடன் இராணுவ ஒப்பந்தங்களைச் செய்து கொண்டிருந்த ஜெர்மனி, துருக்கியுடன் நட்புறவு ஒப்பந்தம் ஒன்றையும் செய்து கொண்டது. மேற்கு அரங்கில் அளவிடற்கரிய வெற்றிகளை அள்ளி குவித்துக்கொண்ட ஹிட்லர் கிழக்கு நோக்கிக் கவனத்தைத் திருப்பவிருப்பதை அமெரிக்காவும், இங்கிலாந்தும் குறிப்பாக உணர்த்தவே செய்தன. போருக்கான ஆயத்த வேலைகளை சோவியத் அரசும் மேற்கொண்டது. தொழிற்சாலைகள் போர்க்கருவிகளை உற்பத்தி செய்யலாயின. படை வீரர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரிக்கப் பட்டதோடு அவர்களுக்கு நவீன ஆயுதங்களும் அளிக்கப்பட்டன. ஜெர்மனியின் இராணுவத்தலைமை சோவியத் நாட்டின்மீது 'பார்பரோசா' எனப்படும் மின்னல் வேகத் தாக்குதல் ஒன்றைத் தொகுத்து 1941 ஆம் ஆண்டின் இறுதிக்குள்ளாகவே அதனை அடிபணிய வைக்கும் திட்டத்தைத் தீட்டியது. சோவியத்தின் அரசியல் முறையை ஆதரிக்காத அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள் தனது ரஷ்யப்படை எடுப்பிற்கு ஆதரவு அளிக்காது போனாலும் தடையாக நில்லாதென்றே ஜெர்மனி நம்பியது.

ஜெர்மனியின் நவீனப் படையணிகளில் 153 அணிகளும், அதன் கூட்டணி நாடுகளில் 37 படைப் பிரிவுகளும் சோவியத் நாட்டின் எல்லைகளை நோக்கிப் பாய்ந்தன. 1941 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 22 ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை முறையான போர் அறிவிப்பேதுமின்றி ஜெர்மனியின் படைகள் ரஷ்ய மண்ணுக்குள் புகுந்தன. இரண்டாம் உலகப்போரில், கிழக்கு அரங்கில் தொடங்கிய அப்பெரும்போர் ரஷ்ய மக்களைப் பொறுத்தமட்டில் தாயகத்தின் தன்மானப்போராக — விடுதலைப் போராக மாறியது.

போரின் தொடக்கமே பெரும் சோதனையாக அமைந்தது. ஜெர்மனியின் படையணிகள் மாஸ்கோ, லெனின்கிராடு, கீவ் நகரங்களைக் கைப்பற்றுவதையே முதல் நோக்கமாகக் கொண்டு முன்னேறின. பிரான்சின் மீது தனது புதிய மின்னல் தாக்குதலைத் தொடுத்து வெற்றிகண்ட ஜெர்மானியத் தளபதி வான்லீப் வடக்குப்போர் முனையிலும், தளபதி போக் மையப்போர் முனையிலும், தளபதி ரண்டஸ்டட் தெற்குப்போர் முனையிலும் பணியாற்றினர். வடக்குப்படையணி லெனின்கிராடு நோக்கியும், மையப் படையணி மாஸ்கோ, சுமோலன்ஸ்க், மின்ஸ்க் நகர்களை நோக்கியும், தெற்குப்படையணி கீவ் நோக்கியும் முன்னேறின.

போர் தொடங்கிய சிலமணி நேரங்களுக்குள்ளாகவே நாட்டின் 66 விமான நிலையங்கள், 1200 விமானங்கள் நாசமாக்கப்பட்டன. வானமண்டலமே நாஜிகளின் ஆதிக்கத்தில் நிலைத்தது. மேற்குப்போர் முனையில் ரஷ்யப் படைகளிடமிருந்த 3000 டாங்குகளும், 2000 துப்பாக்கிகளும் எதிரியின் வசமாயின. சிதறடிக்கப்பட்ட நிலையில் போரிட்ட செஞ்சேனை படைத்துறை தலைமையகத்துடன் தொடர்புகொள்ள வியலாது

தோல்விகளைச் சந்திக்க வேண்டியதாயிற்று. வடக்குப்போர் முனையில் விரைந்து முன்னேறிய நாஜிப்படை பால்டிக் நாடுகளில் நிலைகொண்டிருந்த செஞ்சேனையை முற்றிலும் துண்டித்து அழித்துவிட முயன்றது. செஞ்சேனைத் தளபதியாக செயலாற்றிய குஸ்னத்சோவ் பெரிதும் முயன்றும் எதிரியின் முன்னேற்றத்தைத் தடுக்கவியலாது போயிற்று. சோவியத் நாட்டின் பால்டிக் குடியரசுகள் ஜூலை 10 க்குள் எதிரியின் கைகளில் சிக்குண்டன. ரஷ்யாவின் பால்டிக் கடற்படை லெனின்கிராடை அடைந்து அழிவிலிருந்து தப்பியது.

மையப்போர் முனையில் தளபதி பாவ்லோவ் தலைமையில் மூன்று படையணிகள் எதிரியின் தாக்குதலை எதிர் நோக்கின. முதல் படைப் பிரிவு முற்றிலும் முறியடிக்கப்படவே, மூன்றாவது படைப்பிரிவு எதிரியின் வளையத்துக்குள்ளிருந்து தப்பவேண்டி, கிராத்னோ நகருக்குப் பின் நகர்ந்தது. ஜூன் 28 ஆம் நாள் இரு பக்கங்களிலுமாகப் பாய்ந்து வந்த எதிரியின் படைகள் மின்ஸ்க் நகர்ப்பகுதியில் இணைந்தன. இந்நிலையில் ரஷ்யா மையப்போர் முனையில் விட்டப்ஸ்க், மோகில்யோவ், சிலோபின் நகர்களை இழந்தது. இப்பகுதி படையமைப்பை மாற்றியமைக்க விரும்பிய சோவியத் அரசு, அதனைத் தளபதி திமசெங்கோவிடம் ஒப்படைத்தது.

தெற்குப்போர் முனையின் தென்மேற்கு எல்லையில் தளபதி கிர்போனசும், தெற்கெல்லையில் தளபதி தியுலனேவும் ஆறு படைப் பிரிவுகளுக்குத் தலைமை தாங்கினர். நொவோகிராடு, ஓலின்ஸ்கி, சிதோமிர் நகர்களை நோக்கிப் பாய்ந்த ஜெர்மானியர்கள் ரஷ்யப்படையணிகளை ஊடுருவிச் சுற்றிவளைக்கலாயினர். ரஷ்யப் படைகள் பின்வாங்கி நிலைகொண்டன. எனினும் 1941 ஜூலைக்குள்ளாக லிதுவேனியா, லாத்வியா, மேற்கு பைலோ ரஷ்யா, உக்ரெயின் போன்ற பகுதிகளை ரஷ்யா இழந்தது.

போர்க் கொள்கை

தொடங்கியபோர் தடங்கலின்றி விரைந்து முடியாது என்ற நிலையில் ரஷ்யா தனது படை வலிமையைப் பெருக்கலாயிற்று. நாட்டு அரசின் வேண்டு கோளுக்கிணங்க பல்லாயிரக்கணக்கான இளைஞர்களும், இளம் பெண்களும் படையில் சேர்ந்து பயிற்சி பெற்றனர். உடல் வலிமையும், உள்ள வீரமும் கொண்ட 35 புதிய மக்கள்படைப் பிரிவுகள் மாஸ்கோ, லெனின்கிராடு, கீவ், ஸ்டாலின் கிராடு போன்ற பெருநகரங்களில் உருவாக்கப்பட்டன. 'எல்லாமே போர்முனைக்கு! எல்லாமே வெற்றிக்காக!, என்பதே ஒன்றுபட்ட மக்களின் ஒருமித்த குரலாயிற்று. 23 வயதுக்கு மேற்பட்டோர் கட்டாயப் படைப்பணிக்கு அழைக்கப்பட்டனர். தேசிய பாதுகாப்புக் குழுவொன்றும் ஸ்டாலின் தலைமையில் நிறுவப்பட்டது. மக்களும், மக்களின் உடைமைகளும் எதிரிகளிடம் சிக்காது காப்பாற்றி வெளியேற்ற வேண்டி 'வெளியேற்றக்குழு' ஒன்றும் அமைக்கப்பட்டது. போர் நிலையை உடனுக்குடன் உணர்த்தவென 'தகவல் தொடர்பு அலுவலகம்' ஒன்றும் தோற்றுவிக்கப்பட்டது.

மக்களின் வாழ்க்கைத் தேவைகளுக்கான பொருட்களை உற்பத்தி செய்து கொண்டிருந்த தொழிற்சாலைகள் அனைத்தும் ஆயுதங்களையே உற்பத்தி செய்யலாயின. இயந்திரக் கலைப்பைகளை உற்பத்தி செய்த தொழிற்சாலைகள் டாங்குகளை உற்பத்தி

செய்தன. இரும்பு, எஃகுத் தொழிற்கூடங்கள் கவசமோட்டார்களைத் தயாரித்தன. தொழிற்சாலைகள் பலவும் தூரகிழக்குப் பகுதிகளுக்கு மாற்றம் செய்யப்பட்டன. உக்ரெயின், பைலோ ரஷ்யா, பால்டிக், குடியரசுகளில் இருந்த தொழிற்சாலைகள் யூரல், சைபீரியா, மத்திய ஆசியா பகுதிகளுக்கு இடம் மாறின. ஏறத்தாழ 1523 தொழில் நிறுவனங்கள் இவ்வகையில் இடம் பெயர்ந்தன. அப்படியும் தொழிற்சாலைகள் பல எதிரிகளிடம் சிக்கின. சரிந்து கொண்டிருந்த நாட்டின் பொருளாதார நிலை கடும் முயற்சிகளுக்குப்பின் மீண்டும் தன்னிலை பெற்றுச் சீரடைந்தது.

ஜெர்மனி எதிர்ப்புக் கூட்டணி உருவாதல்

நாஜிகளுக்கெதிரான சோவியத் மக்களின் உயிர்ப்போராட்டத்திற்குத் தங்களால் இயன்ற அனைத்து உதவிகளும் அளிப்போம் என இங்கிலாந்தின் பிரதமர் சர்ச்சில் 1941-ஆம் ஆண்டு ஜூன் 22 ஆம் நாள் அறிவித்தார். இருநாட்களுக்குப்பின் அது போன்றதோர் அறிவிப்பை அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்ட்டும் வெளியிட்டார். ஜெர்மனிக்கெதிரான போர் நடவடிக்கைகளை உருவாக்க மூன்று நாடுகளின் தலைவர்களும் செப்டம்பர் 29 முதல் அக்டோபர் முதல்நாள் வரை மாஸ்கோவில் கூடிப் பேசினர். அதன் விளைவாக அமெரிக்காவிலிருந்தும் இங்கிலாந்திலிருந்தும் அதிக அளவில் ஆயுதங்களும், உணவுப் பொருட்களும் இறக்குமதியாயின. அந்நாடுகளுக்கு சோவியத் நாட்டிலிருந்து மிக முக்கியமான மூலப் பொருட்கள் ஏற்றுமதியாயின.

டிசம்பர் 7இல் பேர்ல்ஸ் ஹார்பரில் (Pearls Harbour) இருந்த அமெரிக்கக் கப்பல்களை ஜப்பானியக் கடற்படை திடீரெனத் தாக்கி அழித்ததைத் தொடர்ந்து அச்சு நாடுகளுக்கெதிராக அமெரிக்காவும் போரில் குதித்தது. நாசிகளுக்கெதிரான மக்கள் கருத்துக்கேற்ப ரஷ்யா, அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு போன்ற பல நாடுகளும் ஜெர்மனிக்கெதிரான கூட்டணியை உருவாக்கின. 1942ஆம் ஆண்டு பிறந்த போது விடுதலைவிரும்பிகளான மக்களின் கூட்டணியை அச்சு நாடுகள் எதிர்நோக்க வேண்டியதாயிற்று.

நாசிகளின் வெற்றி

1941-ல் வடமேற்குப் போர்முனையிலிருந்து செஞ்சேனை பின்வாங்கியதைத் தொடர்ந்து நாசிப் படையினர் லெனின்கிராடு நகரின் வாயிலை அணுகி முற்றுகையிடலாயினர். இரவும் பகலுமாய் எதிர்படையினர் தொடர்ந்து குண்டுமாரி பொழிந்தனர். பல கட்டிடங்கள் இடிந்து விழுந்தன. ஆனால் எதிர்படையினரை நகருக்குள் நுழையவிடாது, நகரை காக்கவென உருவாக்கப்பட்ட படையும், பால்டிக் கடற்படைபிரிவும், நகர மக்களும் ஒரு வலிமையான கோட்டையாகவே மாறிக் கட்டிக் காத்தனர்.

மாஸ்கோ நோக்கிப் பாய்ந்த நாசிப்படை சுமோலன்ஸ்க், உக்ரெயின், ஒடிசா நகரங்களைக் கைபற்றியபின், கீவ் நகரைக் கைப்பற்ற 83 நாட்கள் தொடர்ந்து போர்

நடைபெற்றது. இறுதியில் செப்டம்பர் 19-இல் அந்நகரும் வீழ்ந்தது. ரஷ்யப்படை செவாஸ்டபோலுக்குப் பின்வாங்கியது. அந்நகரின் முற்றுகையும் நவம்பர் 3-ல் தொடங்கியது.

மாஸ்கோ நோக்கிப் போர்

மாஸ்கோவை மட்டுமே முக்கிய இலக்காகக் கொண்டு, ஏறத்தாழ எண்பது படைப்பிரிவுகள் எல்லாவகையான படைக்கலத்துணையுடன் மாஸ்கோ நோக்கி முன்னேறின. தலைநகரை இடப்புறமும், வலப்புறமுமாகத் தாக்கித் துண்டித்தபின் மையப் படைப்பிரிவினர் நேரடியாகத் தாக்கி நகரைக் கைப்பற்றத் திட்டம் தீட்டப்பட்டது. மாபெரும் போர் செப்டம்பர் 30-இல் துவங்கியது. பெரும் எண்ணிக்கையிலான எதிர்ப்படையினர் ரஷ்யா பாதுகாப்பணியை ஊடுருவிப் றபுகுந்து காலினின், பிரியன்ஸ்க், ஓரல், வியாஸ்மா ஆகிய நகரங்களை நசுக்கியபின் மாஸ்கோ வட்டத்திற்குள் புகுந்தனர். மக்கள் மாஸ்கோவை ஒரு கோட்டையாக மாற்றினர். தெருக்களில் தடுப்பரண்கள் எழுப்பப்பட்டன. தெருப்போருக்கும் மக்கள் தயாராயினர். ஜெர்மனி தனது படைவலிமையனைத்தையும் பயன்படுத்திப் போரை நடத்தியது.

இதுவரை நடந்த போரில் பெரும் நிலப்பகுதியை ரஷ்யா இழந்துவிட்டிருந்தது. நிலக்கரி வயல்களில் 63 சதவீதமும், தேனிரும்புத் தொழிற்சாலைகளில் 68 சதவீதமும், எஃகு தொழிற்சாலைகளில் 58 சதவீதமும், அலுமினிய உற்பத்தியில் 60 சதவீதமும், விளைநிலங்களில் 38 சதவீதமும், சர்க்கரை உற்பத்திப்பகுதிகளில் 85 சதவீதமும் ஜெர்மனியிடம் சிக்கின. வெற்றிகொண்ட பகுதிகளிலெல்லாம் நாசிகள் பெரும் நாசவேலைகளில் ஈடுபட்டனர். கிராமங்களும், நகரங்களும் கொள்ளையடிக்கப்பட்டன; கையில் அகப்பட்ட மக்களனைவரும் சித்திரவதைக்குள்ளாயினர்; பட்டினியால் பலர் பலியாயினர்; நச்சுக் காற்றுக்கும் பலர் மாண்டனர்.

போர் நிலையில் மாற்றம்

மாஸ்கோவை காப்பதற்கென மூன்று புதிய படைப்பிரிவுகள் உடனே உருவாக்கப்பட்டன. தென்முனைப்பகுதியில் ராஸ்டோவ் ஆன்டான் பகுதியிலும், திக்வின் முனையிலும் செஞ்சேனையினர் தங்கள் தாக்குதலைத் தொடுத்தனர். ராஸ்டோவ் திரும்பக் கைப்பற்றப்பட்டதும் நாசிப்படை பின்வாங்கியது. நவம்பரில் மற்றுமொரு தாக்குதல் மாஸ்கோ மீது தொடங்கியது. நகரிலிருந்து 30 கிலோமீட்டர் தொலைவுவரை நெருங்கிவிட்ட நாசிப்படையினர் பின் தங்களின் முன்னேற்றத்தை மட்டுப்படுத்திக் கொண்டனர்.

டிசம்பர் 5-இல் செஞ்சேனை தனது எதிர்த்தாக்குதலைத் தொடுத்தது. மேற்கு, தென்மேற்குப் போர்முனைத் தளபதிகளான சுகோவ், திமசெங்கோ ஆகியோர் திட்டமிட்ட தாக்குதலை தகுந்த நேரத்தில் தொடங்கினர். குளிர்காலத்தில் தொடங்கிய இத்தாக்குதல் வெறறிகளை குவிக்கத் தொடங்கியது. காலினின், கலுகா போன்ற நகரங்களையும், நூற்றுக்கணக்கான சிற்றூர்களையும் கைப்பற்றினர். 1942-இல்

ஹிட்லருக்கெதிராக 26 நாடுகளைக் கொண்ட வலிமையான கூட்டணி உருவாயிற்று. ஏறத்தாழ 266 படைப்பிரிவுகள் ரஷ்யமண்ணில் நிலைகொண்டன. லெனின்கிராடு முற்றுகையும் சிறிதும் தளர்த்தப்படவில்லை.

1942 மே மாதத்தில் கெர்ச் தீபகற்பபகுதியை ஜெர்மனி கைப்பற்றியது. ஜூலையில் செவாஸ்டபோல் துறைமுகநகரை ரஷ்யா இழந்தது. பின்னர் ஜெர்மனி எண்ணெய்க் கிணறு பகுதியான காகசைக் கைப்பற்ற தாக்குதலைத் தொடங்கியது. ஜூன் 28 முதல் ஜூலை 24 ஆம் நாளுக்குள்ளாக 400 கிலோமீட்டர் வரை முன்னேறி காகசை நெருங்கியது. முக்கிய நகரமான ஸ்டாலின் கிராடுக்காகப் பெரும்போர் தொடங்கியது. செப்டம்பரில் வார்சாவை அடைந்த ஜெர்மானியர் ஸ்டாலின்கிராடின் வெளிப்புறத்தில் போரிடலாயினர்.

வால்கா பகுதி

வால்காவிலும், காகசஸ் பகுதியிலும் போர் வலுவடைந்தது. அந்நகரைக் காக்கும் படைக்குழுவில் குருச்சேவும் ஒருவரானார். ஆகஸ்டு 25-இல் நகரம் முற்றுகைக் குள்ளானது. செப்டம்பர் 13-இல் தெருப்போரே தொடங்கியது. நவம்பர் மத்தியில் நாசிகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டிய நிலைக்குள்ளாயினர். வால்காவைக் காப்பாற்றியதிலிருந்து வெற்றி ரஷ்யாவின் பக்கம் திரும்பியது. ரஷ்யாவின் முன்னேற்றத் தாக்குதல் தொடங்கிற்று. அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளிலிருந்தும் ஆயுதங்கள் இறக்குமதியாயின. வால்கா, டான் ஆகிய இரு நதிகளுக்கிடையே ரஷ்யா எதிர்த் தாக்குதலைத் தொடங்கி, நான்கு நாட்கள் போருக்குப்பின் ஸ்டாலின்கிராடு நகரிலிருந்த நாசிப் படையைச் சுற்றி வளைத்துக்கொண்டன. 1943 ஆம் ஆண்டு பிப்ரவரி 2 இல் போர் முடிவுற்றபோது 1,47,000 போர் வீரர்களின் உடல்கள் கிடைத்தன. தளபதி பாலசும், 91000 போர் வீரர்களும் கைதிகளாயினர். இரண்டாம் உலகப்போரின் போக்கிலும் திருப்பம் ஏற்பட்டது.

வெற்றியை நோக்கி

1943 ஜனவரியில் லெனின்கிராடுக்கு ஏற்பட்டிருந்த நெருக்கடி நிலை ஓரளவு தளர்ந்தது. ஜனவரி 12 இல் தளபதி கோவரோவும் தளபதி மெரட்ஸ்கோவும், லடோகா ஏரிக்குத் தெற்கே தங்கள் எதிர்த்தாக்குதலைத் துவக்கினர். வோல்கா, காகசஸ் பகுதிகளிலிருந்து ஏறத்தாழ 700 கிலோ மீட்டர் வரை நாசிப்படையினர் பின்வாங்கினர். ஜூலை 5-இல் ஜெர்மனி புதிய படையோடும் 'டைகர்' 'பாந்தர்' போன்ற புதுவகை டாங்குகளோடும், தானியங்கித் துப்பாக்கிகளுடனும் தாக்கியது. ஓரல், குர்ஸ்க், பெல்கோராடு நகர்களைக் கைப்பற்றினர். ஜூலை 12 இல் ரஷ்யா எதிர்த்தாக்குதலைத் தொடங்கி ஆகஸ்டு 5-இல் ஓரலும். பெல்கோராடும் திரும்பப்பெற்றனர்.

ஜூலையில் ஆங்கில அமெரிக்கப் படைகள் சிசிலியிலும், இத்தாலிய தீபகற்பத்திலும் இறங்கின. இத்தாலி முற்றிலும் முறியடிக்கப்பட்டதையடுத்து ஜூலை 25 இல் முசோலினி பதவியிலிருந்து விரட்டப்பட்டு பதோக்லியோவின் தலைமையில் புதிய அரசு

பதவியேற்றது. அக்டோபர் 16 முதல் 30 வரை ரஷ்யா, அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர் மாஸ்கோவில் கூடி விவாதித்து, இறுதி வெற்றிவரைப் போர் செய்வதென முடிவு செய்தனர்.

நவம்பர் 28 முதல் டிசம்பர் முதல்நாள் வரை நட்பு நாடுகளின் அரசுத் தலைவர்கள் மாநாடு டெஹ்ரானில் நடைபெற்றது. சர்ச்சில், ஸ்டாலின், ரூஸ்வெல்ட் ஆகியோர் மாநாட்டில் பங்குபெற்று, போர் நடவடிக்கைகள் சம்பந்தமாக ஒரு முடிவினை மேற்கொண்டனர். அதன்படி ஐரோப்பாவில் இரண்டாவது போர்முனை ஒன்று உருவாயிற்று. ஜனவரி 20-இல் லெனின்கிராடு பகுதியில் எதிரியின் படையணி உடைக்கப்பட்டு நோவோகிராடும் கைப்பற்றப்பட்டது.

வெற்றியை நோக்கி ரஷ்யா

1944-ஆம் ஆண்டின் குளிர்காலப் போரில் ரஷ்யா வெற்றிகளை குவித்துக் கொண்டது. கிழக்கில் முழுக்கவனத்தையும் ஜெர்மனி செலுத்தியதால், நட்புநாடுகள் பிரான்சில் போர்முனைத் தொடங்க வசதியேற்பட்டது. ஜூன் 6 இல் ஆங்கில-அமெரிக்க படையொன்று நார்மண்டியில் இறங்கியது. வடமேற்குப் பிரான்சில் நட்புநாடுகளின் படைகள் வெகுவேகமாக முன்னேறலாயின. ஆகஸ்டு 20 இல் ஜெர்மனியின் 22 படைப் பிரிவினர் கிசினேவ் பகுதியில் சுற்றி வளைத்துக் கொள்ளப்பட்டனர். வெற்றியை ஈட்டிய ரஷ்யப்படை ருமேனியாவுக்குள் நுழைந்தது. ஆகஸ்டு 31-இல் ருமேனியாவின் தலைநகர் புடாபெஸ்டை பிடித்தனர். பின்னர் ரஷ்யப்படையின் வேகம் அதிகரித்தது. செக்கோஸ்லோவேகியா, ஹங்கேரி, யூகோஸ்லோவேகியா ஆகிய நாடுகளைக் கைப்பற்றினர். விடுதலைப் பெற்ற அந்நாடுகளும் ஜெர்மனியின் மீது போர் தொடுத்தன.

வடப்பகுதிப் போர்

வடக்குப்போர் முனையில் ஜெர்மனியின் எதிர்ப்பைத் தகர்க்க ரஷ்யப்படை கிழக்குப் பிரஷ்யாவை அணுகியது. செப்டம்பர் 14-இல் ரீகா நோக்கி அப்படை முன்னேறியது. பால்டிக் பகுதியிலிருந்த நாசிப்படைகள் ஒரு மாத காலப் போரில் தோல்வியுற்றன. நவம்பர் முதல்நாள் நார்வே நாட்டுக்குள்ளும் ரஷ்யப் படைகள் நுழைந்தன. இப்பெரும் வெற்றிகளால் லாத்வியாவைத் தவிர்த்த ரஷ்ய நிலப்பகுதிகள் அனைத்தும் விடுவிக்கப்பட்டன.

இறுதிப்போரும் பெர்லின் வீழ்ச்சியும்

பெர்லினை நோக்கி ரஷ்யப் படைகள் புறப்பட்டபோது, ஜெர்மனியை சரணடையச் செய்யவேண்டிய நிபந்தனைகளையும் விதிகளையும் வகுக்க வேண்டியதாயிற்று. எனவே 1945 பிப்ரவரியில் கிரீமியாவிலிருந்த யால்டா என்னுமிடத்தில் மூவல்லரசுத் தலைவர்களும் கூடிப் பேசினர். போர் இழப்பீடுகள், சோவியத் போலந்து எல்லைச் சிக்கல்கள் சம்பந்தமாகவும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. உலக அமைதியை நிலைநாட்ட ஐக்கிய நாடுகள் சபை நிறுவவும் திட்டம் தீட்டப்பட்டது. ஜப்பானுக்கெதிரான போருக்குப்பின் சகலின், குரில் தீவுகளை ரஷ்யாவுக்கு அளிக்கவும் ஒப்புக்கொள்ளப் பட்டது. ஜெர்மனியை இறுதியாகவும் முறியடிக்க வேண்டிய திட்டத்தைத் தீட்டினர்.

ஏப்ரலில் போரின் இறுதிக் கட்டம் நெருங்கியது பெர்லினைப் பாதுகாக்கப் பத்து இலட்சம் பேர்கொண்ட பெரும்படை எல்லாவகையான நவீன ஆயுதங்களுடன் ஆயத்த நிலையில் இருந்தது. செஞ்சேனைப் பிரிவிலும் 40,000 துப்பாக்கிகளும், 6,300 டாங்குகளும், 7,300 விமானங்களும் ஈடுபடுத்தப்பட்டன. ஏப்ரல் 16-இல் தொடங்கிய பெர்லினுக்கான இறுதிப்போர் மே 2 வரையில் நீடித்தது. நாசிப்படையினர் சரணடைய மறுத்ததைத் தொடர்ந்து செஞ்சேனை தனது தாக்குதலை வலுப்படுத்தியது. 10 நாட்களாக இரவும் பகலுமாக பெர்லின் நகரத்தெருக்களில் பயங்கரப் போர் நடைபெற்றது. இறுதியாக ஏப்ரல் 30-ஆம் நாள் பெர்லின் நாடாளுமன்றக் கட்டிடத்தில் சோவியத் படையினர் தங்கள் வெற்றிக் கொடியை ஏற்றிப் பறக்கவிட்டனர். அடால்ஃப் ஹிட்லர் தற்கொலை செய்துகொண்டார். அவரது நெருங்கிய நண்பரான கோயபல்ஸ் தன் மனைவி மக்களைக் கொன்றபின் தன்னையும் மாய்த்துக் கொண்டார்.

மே 8-ஆம் நாள் ஜெர்மனியின் உயர்படை அதிகாரிகள் பெர்லினுக்கு வெளியே கார்ல்சார்ஸ்ட் என்னுமிடத்தில் நிபந்தனையின்றிச் சரணடைய ஒப்புக் கொண்டனர். வலிமை வாய்ந்த செஞ்சேனையும், அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, செக்கோஸ்லோவேகியா, யூகோஸ்லோவேகியா, போலந்து, ருமேனியா, பல்கேரியா, அல்பேனியா, ஹங்கேரி ஆகிய நாடுகளைச் சேர்ந்த படைகளும் இறுதி வெற்றியை எய்தினர். ஐரோப்பியப் போர் அரங்கில் இரண்டாவது உலகப்போரும் முடிவுற்றது.

ஐரோப்பிய அரங்கில் போர் முடிவுற்றாலும், சோவியத்தின் எல்லையருகே பசிபிக் கடற்பகுதியில் ஜப்பானின் போர் நடவடிக்கைகள் நீடிக்கவே செய்தன. ஆகஸ்டு 8-இல் ஜப்பான் மீது ரஷ்யா போர் தொடுத்தது. சீனாவும் இதற்கு துணை நின்றது. ஆமூர், டிரான்ஸ்பைகல் பகுதிகளில் போர் முனைகள் தொடங்கப்பட்டன. விரைவிலேயே ரஷ்ய-சீனப் படைகள் மஞ்சூரியா, போர்ட் ஆர்தர், வடகொரியா, தென்சகலின், குரில் தீவுகள் போன்ற பகுதிகளை விடுவித்தன, ஜப்பானை விரைவில் பணிய வைக்க விரும்பிய அமெரிக்கா, ஆகஸ்ட் 6 ஆம் நாள் ஹிரோசிமா நகர் மீதும், ஆகஸ்ட் 9-இல் நாகசாகி நகர் மீதும் இரு அணுகுண்டுகளை வீசியது. இதனால் பயங்கர அழிவுகளைச் சந்தித்த ஜப்பானும் சரணடையச் சம்மதித்து செப்டம்பர் 2-இல் நிபந்தனை இன்றி சரணடையும் சாசனத்தில் கையெழுத்திட்டது. ஆறாண்டுக் காலமாக உலகை ஆட்டுவித்த இரண்டாம் உலகப் போரும் முடிவுற்றது. நாசிகளை நசுக்கியப் பெருமை செஞ்சேனைக்குக் கிடைத்ததால் உலக அரங்கில் ரஷ்யாவின் புகழ் உயர்ந்தது.

பயிற்சி வினாக்கள்

1) இரண்டாம் உலகப்போரில் ரஷ்யாவின் பங்கினைக் குறிப்பிடுக.

2) இரு உலகப் போர்களுக்குமிடையே இரஷ்யா மேற்கொண்ட வெளிநாட்டுக் கொள்கையை திறனாய்வுசெய்க.

பாடம் – 26 இரண்டாம் உலகப் போருக்குப்பின் ரஷ்யாவின் பொருளாதார வளர்ச்சி

இரண்டாம் உலகப்போரில் ரஷ்யா பெரும் பங்கு ஏற்றதால் ஏராளமான பொருள் சேதமும், உயிர்ச் சேதமும் ஏற்பட்டன. பல நகரங்கள் உருக்குலைந்து விளங்கின. ஸ்டாலின்கிராடு, போல்தாவா, கார்கோவ், கிரமன்ஸ்க், கீவ், தெர்னபோல் ஆகிய நகரங்களில் எண்பது சதவீதத்திற்கும் அதிகமான வீடுகளும், அரசு அலுவலகங்களும், நாகரீகத்தின் சின்னமாய் இருந்த உயர் மாளிகைகளும் தரைமட்டமாக்கப் பட்டிருந்தன. பைலோ ரஷ்யப்பகுதியில், கிராமங்களும் மற்றும், பெரிய, சிறிய தொழிற்சாலைகளும், அணைக்கட்டுகளும், நீர் மின் சக்தி நிறுவனங்கள் போன்றவையும் அழிக்கப்பட்டன. இப்போரினால் கூட்டுப் பண்ணைகளும், விவசாய இயந்திரநிலையங்களும் தாக்கப்பட்டிருந்தன. நிலக்கரிச் சுரங்கங்கள் தகர்க்கப்பட்டிருந்ததால் நீர் நிறைந்திருந்தது.

இத்தகைய சிரழிந்த நிலையிலிருந்த ரஷ்ய நாட்டைச் சீராக்கி, பாழ்பட்டிருந்த தொழிற்சாலைகளைச் சரிபடுத்தி செயல்படுத்தவும் குண்டு வீச்சுக்களால் சீரழிந்திருந்த விவசாயப் பண்ணைகளைச் சரி செய்யவும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஏறத்தாழ மூன்றிலிரண்டு பகுதி நிலக்கரிச் சுரங்கங்கள் செயலற்ற நிலையில் இருந்தன. 98,000 கூட்டுப் பண்ணைகள் கூண்டோடு நாசமாகின. 2890 விவசாய இயந்திர சாதன நிலையங்கள் அழிந்து பயனற்ற நிலையில் இருந்தன. இத்தகைய நிலையிலும், மக்களும், அரசும் மனந்தளராமல், உழைத்து நாட்டை உன்னத நிலைக்கு உயர்த்த வேண்டும் என்ற உற்சாகத்துடன் இருந்தனர்.

சீரமைப்புச் செய்வதற்காக அரசும், கட்சியின் மத்திய குழுவும் ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றினைத் தீட்டுமாறு திட்டக் குழுவிற்கு ஆணையிட்டனர். அதன்படி தயாரிக்கப்பட்ட திட்டம் 1946-ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற தலைமை சோவியத் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது. அதன்படி தொழில் உற்பத்தியில் போருக்கு முந்திய உற்பத்தியைவிட 48 சதவிதம் அதிகரிக்க வேண்டும். ஆலைத் தொழிலாளர்கன் எண்ணிக்கையில் 40 சதவீதம் அதிகரிக்க வேண்டும். அதே நேரத்தில் உற்பத்திச் செலவும் 17 சதவீதம் குறைக்கப்பட வேண்டும் என்ற சிக்கன நடிவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

மின்சாரம், தொழில்துறை: நாட்டில் மின்சார உற்பத்தியைப் பெருக்கிட வால்காகிரேடு, கார்க்கி, குய்பிசேவ் போன்ற நீர் மின்நிலையங்களும், பல இடங்களில் அனல் மின் நிலையங்களும் தொடங்கப்பட்டன. பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களும், தொழில் வல்லுநர்களும், பொறியியல் அறிஞர்களும் பெரிதும் முனைத்து நீப்பர் நீர் மின் நிலையத்தைச் சரி செய்து செயல்பட வைத்தனர். அவ்வாறே தானெட்ஸ் வடிநிலப் பகுதியில் சுயேவ்கா, குரசோவ்கா மின் நிலையங்களும்; மர்மான்ஸ்க் பகுதியில் நிவா நீர்மின் நிலையமும், திரஸ்போல், கார்கோவ், கிரிவாய்ராக் மின் நிலையங்களும், பழுது பார்க்கப்பட்டு விரைவில் செயலுக்குக் கொண்டுவரப்பட்டன. மாஸ்கோ, தன்பாஸ், தானெட்ஸ், யூரல், குஸ்பாஸ், காரகண்டா போன்ற பகுதிகளிலிருந்த நிலக்கரிச் சுரங்கங்களில் புதிய இயந்திரங்களும், நவீன முறைகளும் புகுத்தப்பட்டு நிலக்கரி உற்பத்தியைப் பெருக்கினர். உக்ரேனிய இரும்பு எஃகு ஆலை சீரமைக்கப்பட்டு

தேனுரும்பும், எஃகும் அதிகமாக உற்பத்தியாயின. கீவ், கார்கோவ், மின்ஸ்க், ஸ்டாலின்கிராடு, லெனின்கிராடு ஆகிய நகரங்களில் இருந்த தொழிற்சாலைகளும் சீரமைக்கப்பட்டன. உஸ்பெகிஸ்தானில் உள்ள சிர்தாரிய நதியிலும், சுசக்ஸ்தானில் இர்திஸ் நதியிலும், ஜார்ஜியாவில் கிராமி, சுகுமி ஆகிய இடங்களிலும் ஆர்மீனியாவில் செவன் ஏரியிலும், அசர்பைசனில் மாங்கசார் என்னுமிடத்திலும் புதிய மின் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. வால்கா, யூரல் பகுதியில் அதிக எண்ணெய் உற்பத்தியாயிற்று. போரோவிசி, நெளிதாவோ, செலிசாரோவோ ஆகிய பகுதிகளில் பழுப்பு நிலக்கரிச் சுரங்கங்கள் புதிதாகத் தோண்டப்பட்டன. ஆர்மீனியாவில் கன்னர், யூரலில் போக சுலாவ்ஸ்க்கில் இயந்திரக் கலப்பை உற்பத்தி ஆலையும், குதைசி என்னுமிடத்தில் மோட்டார் தொழிற் சாலையும் புதிதாக நிறுவப்பட்டன.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் குறிக்கோள் 4 ஆண்டுகள் 3 திங்களுக்குள்ளாகவே, தொழில்துறை சம்பந்தமாக முடிவுற்றது. இப்போது 6200 புதுப்பிக்கப்பட்ட ஆலைகளும், புதிதாக தொடங்கப்பட்ட ஆலைகளும் செயல்படலாயின. உற்பத்தியிலும் 73 சதவீதம் அதிகரித்தது. 1950-இல் 19 மில்லியன் டன் இரும்பும், 27 மில்லியன் டன் எஃகும், 261 மில்லியன் டன் நிலக்கரியும், 98 மில்லியன் டன் எண்ணெயும் உற்பத்தியாயிற்று.

போரின் விளைவால் பண்ணை விவசாயமும் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. நாசிகள் விளைவித்த நாசத்தோடு 1946-இல் ஏற்பட்ட வறட்சியும், உற்பத்தியில் பெரிதும் பாதிப்பை உண்டாக்கியது. இத்தொடு பண்ணைகளில் சட்ட மீறல்களும், நிர்வாகக் குறைபாடுகளும், சம்பளம் கொடுப்பதில் பல முறை கேடுகள் போன்ற பல சீர்கேடுகளும் உற்பத்தியைக் குறைத்தன. இத்தகைய குறைபாடுகள் 1947-இல் களையப்பட்டன. பழைய பண்ணைகளைச் சீரமைத்ததோடு புதிய பண்ணைகளும் உருவாக்கப்பட்டன. அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் 827 பண்ணைகளும் உருவாக்கப்பட்டன. 1345 விவசாய இயந்திரசாதன நிலையங்கள் அமைக்கப்பட்டன. திட்ட முடிவில் 5,95,500 இயந்திரக் கலப்பைகள் விவசாயப் பண்ணைகளின் பணியில் ஈடுபடுத்தப்பட்டன. சிறிய கூட்டுப்பண்ணைகள் பெரும் பண்ணைகளோடு இணைக்கப்பட்டன. விளைச்சல் நிலத்தில் பரப்பில் 20 சதவீதம் அதிகரித்தது. ஆயினும் விவசாயத்துறையைப் பொறுத்தமட்டில் திட்டக் குறியீட்டினை எட்ட இயலவில்லை.

இக்காலத்தில் திட்ட வளர்ச்சியோடு படைச் செலவுகளும் குறைக்கப்பட்டன. எனவே மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. வேலையில்லாத் திண்டாட்டம் நீக்கப்பட்டது. மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்தது. புதிய நகரங்கள் எழுந்தன. புதிய முறையிலான வீடுகள் பல லட்சம் கட்டப்பட்டன. 1947-இல் உணவுப் பங்கீட்டு முறை ஒழிக்கப்பட்டது. போர்க் காலத்தில் காகிதப்பணம் அதிகம் வெளியிட்டிருந்ததால் பணவீக்கம் ஏற்பட்டிருந்தது. இதனை மாற்றிட விரும்பிய அரசு நாணயச்சீர்திருத்தச் சட்டத்தைக் கொணர்ந்து காகிதப்பணத்தின் அளவைக் குறைத்தது. திட்டக் காலத்திலேயே பொருள்களின் விலைகள் மும்முறை குறைக்கப்பட்டன. இச்சீரிய நடிவடிக்கைகளால் விலைகள் இறங்கின. தேசீய வருமானம் திட்டமிட்டபடி அதிரித்தது.

பயிற்சி வினா

இரண்டாம் உலகப் போருக்குப்பின் ரஷ்யாவில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சியை விவரிக்க.

பாடம் – 27

கெடுபிடிப்போர் (COLD WAR)

இரண்டாம் உலகப் போரின் போது பிரிட்டன், அமெரிக்கா ஆகிய மேற்கு நாடுகளும் கம்யூனிச நாடான ரஷியாவும் "நேசநாடுகளாக" ஒன்று பட்டு ஒரே அணியில் நின்று போராடின. ஆனால் அப்போருக்கு முன்பு அந்நாடுகளிடையே நல்லுறவு நிலவியதில்லை. ஹிட்லரின் நாஸி ஜெர்மனி இருதரப்பினருக்கும் பொது எதிரியாக எழுச்சியுற்றதால் அந்நாடுகள் தற்காலிகமாகத் தங்கள் கருத்து வேறுபாடுகளை மறந்து ஒருங்கிணைந்து போரிட்டன. போர் முடிந்ததும் அதாவது பொது எதிரி மறைந்ததும், "போர்க்காலத் தேனிலவும்" முடிந்துவிட்டது. அந்நாடுகளிடையே குறிப்பாக ரஷியா, அமெரிக்கா நாடுகளிடையே பழைய கருத்து வேறுபாடுகளும் ஐயப்பாடுகளும் தலைதூக்கின. போருக்குப்பின் அவ்விருநாடுகள் மட்டும் தான் வலிமை மிகுந்து விளங்கின. எனவே அந்நாடுகள் உலகளாவிய ஆதிக்கப் போட்டியில் இறங்கின. இருவரும் தங்களின் அரசியல் கோட்பாடுகளே சிறந்தது. அவற்றையே உலகநாடுகள் அனைத்தும் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனப் பேராசைப்பட்டன. ரஷியா பொது உடமைக் கோட்பாட்டை உலகமெங்கும் பரப்ப முயன்ற போது அமெரிக்கா அதனைத் தடுத்து நிறுத்தி, தனிமனித உரிமைப் பாதுகாப்புள்ள சுதந்திரக் கோட்பாட்டை நிலைநாட்ட முயன்றது. இந்த கோட்பாட்டுப்போட்டி ஆதிக்கப்போட்டியாக உருமாறியது. அப்போட்டி, பொறாமை, பகைமை, உணர்வுகளைக் கிளறியது. அதன் காரணமாக ஒன்றையொன்று அழித்திட முயன்றன. அதற்கு நேரடிப்போர் தவிர பிறவழி வகைகள் அனைத்தையும் பயன்படுத்தின. இதனால் உலகில் பதட்டநிலை உருவாகியது. இவ்வல்லரசுகளிடையே எந்த நிமிடமும் போர் மூண்டு விடலாம் என்ற அச்சம் ஏற்பட்டது. இதுவே கெடுபிடிப்போர்" எனப்படுகிறது.

1945-இல் தொடங்கிய இக்கெடுபிடிப்போர் சுமார் 45-ஆண்டு காலம் நீடித்தது. அதன்பின் அதன் கடுமை தணிந்தது.

இக்கெடுபிடிப்போர் காலத்தில் உலக நாடுகளில் பல இரு முகாம்களாகப் பிளவுபட்டு நின்றன. ஒரு முகாமிற்கு ரஷியா தலைமை தாங்கியது. அமெரிக்க முகாமில் பிரிட்டன், பெல்ஜியம், நெதர்லாந்து, இத்தாலி போன்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளும் பல லத்தின் அமெரிக்க நாடுகளும் பிலிப்பைன்ஸ், தேசீய சீனா, பாகிஸ்தான் போன்ற ஆசியநாடுகளும் அணிதிரண்டு நின்றபோது ரஷிய முகாமில் போலந்து, ஹங்கேரி, செக்கோஸ்லோவாகியா, யூகோஸ்லோவியா, அல்பேனியா, ருமேனியா, பல்கேரியா போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஒன்றுபட்டு நின்றன. கெடுபிடிப்போரின் தன்மை: இக்கெடுபிடிப்போர் போர்க்களத்தில் நடைபெறவில்லை: ஆனால் பிற "களங்கள்" அனைத்திலுமே அது நடைபெற்றது. பிரச்சாரப் பொருளாதாரம், அறிவியல், படைப்பெருக்கம் ராணுவக்கூட்டு ஆகியவற்றிலும் போட்டி ஏற்பட்டு போர் ஊக்கத்துடன் காரியங்கள் நடைபெற்றன. தங்கள் கூட்டில் புதிய நாடுகளை வளைத்துப் போடுவதில் அதிக ஆர்வம் காட்டின. அந்நாடுகளுக்குப் படை உதவி அளிப்பதில் தீவிரம் காட்டப்பட்டது; உலகின் எங்கோ ஒரு மூலையில் ஏதாவது இருநாடுகளிடையே மோதல்

ஏற்பட்டால் இருவல்லரசுகளும் அங்கு விரைந்து அந்நாடுகளில் ஒன்றை ஆதரித்து அச்சிக்கலைப் பெரிதாக்கிவிட்டது. அதனால் எந்த ஒரு சிக்கலும் பெரும்போராக மாறிவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டது: பயங்கர அழிவைத் தரக்கூடிய அணு ஆயுதங்கள் தயாரித்துக் குவிக்கப்பட்டன; போருக்கான முன்னேற்பாடுகள் அனைத்தும் முழு மூச்சுடன் செய்து முடிக்கப்பட்டு இருபத்தி நான்கு மணி நேரமும் இருவல்லரசுகளும் தயார் நிலையில் இருந்தன. கெடுபிடிப்போர் காலம் முழுவதும் மூன்றாம் உலகப்போர் என்ற பேராபத்து உலகை அஞ்சி நடுங்கச் செய்தது. இதுவே கெடுபிடிப்போரின் உண்மைத் தன்மையாகும்.

கெடுபிடிப்போரின் காரணங்கள்

பொது எதிரி ஒழிப்புதான் அதற்கு முதல் காரணமாக இருந்தது. இரண்டாவதாக, ஐரோப்பாவில் மாபெரும் வல்லரசுகளாக இருந்த பிரிட்டனும், பிரான்சும், போருக்குப் பின் இரண்டாந்தர அரசுகளாகிவிட்டன. ஜெர்மனி, இத்தாலி ஆகிய அரசுகளும் அடியோடு அழிந்து போயின. ரஷ்யா மட்டும்தான் ஐரோப்பாக் கண்டத்தில் வல்லரசாக எஞ்சி நின்றது. பிறநாடுகள் அனைத்தையும் விட வலிமை பெற்று விளங்கியதால் ஐரோப்பிய வல்லமைச் சமநிலை கெட்டுவிட்டது. இது மோதலுக்கு வழிவகுத்தது. மூன்றாவதாக கோட்பாடு வேறுபாடுகள் அவைகளிடையே போட்டி மனப்பான்மையை உண்டு பண்ணின. நான்காவதாக பொருளாதார ஆதிக்கத்திட்டங்கள் பகைமையை அதிகரித்தன. முதலாளித்துவ நாடான அமெரிக்கா தன் உற்பத்திப்பொருட்களுக்கு உலகளாவிய சந்தை இருக்க வேண்டும் என்று விரும்பியது. இறுதியாக யார் வல்லமை வாய்ந்தவர், யார் உலகளாவிய ஆதிக்கம் பெறுவது என்ற ஆதிக்க வெறி ஒன்றையொன்று அழித்திடத் தூண்டியது. அதன் காரணமாகக் கெடிபிடிப் போர் தோன்றியது.

கெடுபிடிக் போர்க்கால தொடக்கம்

போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது யால்டாவில் கூடிய (1945 பிப்ரவரி) மாநாட்டில் வல்லரசுகளிடையே பல்வேறு பிரச்சினைகளில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. குறிப்பாக போலந்தின் எதிர்காலம் ஜெர்மனியின் எதிர்காலம் ஆகியவற்றில் அவைகளிடையே ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. எனவே யால்டாவிலே கெடுபிடிப் போருக்கான விதை ஊன்றப்பட்டது. அதன் பின் ரஷியா தன்னிச்சையாகப் பல கா=யங்களைச் செய்தது. தன்னால் நாஸி ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கம்யூனிஸ்ட் அரசைத் திணிக்க அதன் விளைவாக கிரிஸ் நீங்கலாக பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளனைத்தும் கம்யூனிஸ்ட் மயமாயின. இந்நாடுகள் அரசியல் பொருளியல் பண்பாட்டுத் துறையில் முற்றிலும் ரஷியாவையே பின்பற்றின. மேற்கு நாடுகளுடன் அனைத்து அரசியல், பொருளாதார தொடர்புகளும் துண்டிக்கப்பட்டு விட்டன. ஐரோப்பா இரு முகாங்களாகப் பிளவுபட்டது. அவற்றிற்கிடையில் "இரும்புத்திரை" போடப்பட்டது. சர்ச்சில் கூறியது போல பால்டிக்கில் உள்ள ஸ்டெட்டின் துறைமுகத்திலிருந்து ஏட்ரியாக்கில் உள்ள திடிஸ்டி வரை அந்த இரும்புத்திரை ஐரோப்பாவில் தென்வடலாகப் போடப்பட்டது.

கெடுபிடிப் போர்க்கால நிகழ்ச்சிகள்

கெடுபிடிப் போர்க்காலத்தில் இரு முகாம்களிடையே பகையையும், போட்டியையும் அதிகரித்து பதட்ட நிலையை உண்டு பண்ணும் நிகழ்ச்சிகள் பல நடைபெற்றன.

ட்ரூமன் கொள்கை

கிழக்கு ஐரோப்பாவில் எஞ்சி நின்ற கிரீஸ் நாட்டிலும் கம்யூனிஸ்டுகள் ஊடுருவி அரசைக் கவிழ்க்க குழப்பம் விளைவித்தனர். அதேபோல் ரஷியாவின் தெற்கில் உள்ள துருக்கியிலும் ரஷியா ஊடுருவல் ஏற்பட்டது. இந்த இருநாடுகளிலும் கம்யூனிஸ்ட் ஆட்சி ஏற்படும் சூழ்நிலை தோன்றியது. இவ்வாறு அக்கோட்பாடு விரைவாகப் பரவி, பல்வேறு நாடுகளும் சிவப்பு மயமாகி இரும்புத்திரைக்குள் இழுக்கப்படுவது கண்டு அமெரிக்கா அதிர்ச்சியடைந்தது. கம்யூனிசம் பரவாது தடுப்பது சுதந்திர நாடுகளின் தலைவன் என்ற முறையில், தனது கடமை என்று கருதியது. எனவே "கம்யூனிசம் பரவாமல் தடுப்பதை" (Contain communism). தன் பொறுப்பாகக் கொண்டது; உலகில் கம்யூனிஸத்திற்கு எதிராகப் "போலீஸ் பணி" புரியவும் உறுதி பூண்டது. (இதுவே கெடுபிடிப் போர்க்காலத்தில் அமெரிக்க அயல் நாட்டுக் கொள்கையின் அடிப்படையானது) அப்போது அமெரிக்கக் குடியரசுத் தலைவராக இருந்த ட்ரூமன் அதற்கு ஒரு கொள்கை வடிவம் கொடுத்தார். அதுவே அவர் பெயரால் ட்ரூமன் கொள்கை எனப்பட்டது. அதன்படி உள்நாட்டுக் குழப்பங்களாலோ, வெளிநாட்டுத் தலையீடுகளாகவோ தவிக்கும் ஒரு அரசுக்கு அமெரிக்கா உதவி அளிக்கத் தயார் எனக் கூறப்பட்டது.

இப்புதிய கொள்கையின்படி கிரீசிற்கும், துருக்கிக்கும், அமெரிக்க பொருளாதாரப் படை உதவிகள் அளிக்கப்பட்டன. அதன் காரணமாக அந்நாடுகளில் உள்நாட்டுக் குழப்பங்களும், அயல்நாட்டு ஊடுருவல்களும் ஒடுக்கப்பட்டன. அவை அந்த இரு நாடுகளையும் கம்யூனிசத்திற்கு இரையாகாதவாறு தடுத்து நிறுத்தின.

மார்ஷல் திட்டம்

போருக்குப்பின் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக பிரான்ஸ், இத்தாலி நாடுகளில் கம்யூனிஸ்ட்கட்சி செல்வாக்குப் பெறத் தொடங்கியது. இதற்கு காரணம் பொருளாதாரம் சீர்கெட்டிருந்ததுதான். போர்ச் சீரமைப்பு பணிகளுக்குப் போதிய நிதி ஆதாரங்கள் இல்லாததால் அந்நாடுகளில் பொருளாதாரம் சீர்கெட்டிருந்தது. தொழில் துறையில் அமைதி நிலவவில்லை. தொழிலாளர்கள் தொல்லைகள் காரணமாக கம்யூனிசக் கோட்பாடுகளால் கவரப்பட்டிருந்தனர். இந்நாடுகளில் கம்யூனிசம் பரவாமல் தடுப்பதற்கு பொருளாதாரத்தைச் சீரமைப்பதே சீரிய வழி என அமெரிக்கா உணர்ந்தது. உடனே இத்திட்டம் அமெரிக்க வெளிநாட்டமைச்சர் ஜார்ஜ் மார்ஷல் என்பவரால் வகுக்கப்பட்டதால் அவர் பெயராலே அத்திட்டம் வழங்கப்பட்டது.

அதன்படி கோடிக்கணக்கான அமெரிக்க டாலர்கள் போர்ச்சீரமைப்புப் பணிகளுக்கென ஐரோப்பாவில் கொட்டப்பட்டன. ரஷியா, மார்ஷல் திட்டத்தை எதிர்த்தது. டாலர் ஏகாதிபத்தியத்தை மறைமுகமாக ஐரோப்பாவில் திணித்துவிடும் என்று கூறியது. அதன் காரணமாக கிழக்கு ஐரோப்பிய நாடுகள் இத்திட்டத்தைப் புறக்கணித்தன.

அந்நாடுகளுக்கு ரஷியா நிதி உதவி வழங்கியது. மேற்கு ஐரோப்பிய நாடுகள் மட்டுமே மார்ஷல் திட்டத்தை ஏற்றுக்கொண்டன. அங்கு நிதிநிலை சீரடைந்து வாழ்க்கைத்தரம் உயர்ந்தது. அதனால் கம்யூனிசம் செல்வாக்கிழந்தது. இவ்வாறு கெடுபிடிப்போரில் பொருளாதாரமும் ஒரு ஆயுதமாகப் பயன்பட்டது.

ஜெர்மானியப் பிரச்சனை: போட்ஸ்டாம் மாநாட்டு முடிவின் படி ஜெர்மனி நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒரு வல்லரசின் படைக்கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்பட்டது. ஜெர்மனியில் நாஸிக் கருத்துக்களையும் நிறுவனங்களையும் ஒழித்து மக்களாட்சிக் கருத்துக்களையும், நிறுவனங்களையும் ஏற்படுத்தி சுதந்திரமான தேர்தல்கள் நடத்தி அதில் வெற்றி பெறுபவர்களிடம் ஆட்சி பொறுப்பை ஒப்படைத்து விட்டு வல்லரசுகள் வெளியேறிவிட வேண்டும் என்று போட்ஸ்டாம் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டிருந்தது. கிழக்கு மேற்கு நாடுகளின் மையத்தில் அமைந்திருந்த ஜெர்மனி வல்லரசுகளின் வெளியேற்றத்திற்குப் பின் தங்கள் முகாமில் சேர வேண்டுமென்று இரு வல்லரசுகளும் விரும்பியதால் ஜெர்மன் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது இயலாத காரியமாயிற்று. குறிப்பாக ரஷியா சுதந்திரத் தேர்தல்கள் நடத்துவதற்குப் பல முட்டுக்கட்டைகள் போட்டது.

இந்நிலையில் பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா ஆகிய மேற்கு வல்லரசுகள் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள மூன்று மண்டலங்களையும் ஒருங்கிணைத்து ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசு (German Federal Republic) என்ற பெயரில் சுதந்திர நாடாக்கி விட்டு வெளியேறின. இதுவே மேற்கு ஜெர்மனி எனப்பட்டது. பான் (BONN) அதன் தலைநகரமானது. இங்கு ஒரு சில படைத்தளங்களில் மட்டும் மேற்கு நாடுகளின் படைகள் நிறுத்தப் பட்டிருந்தன. மற்றபடி அது சுய ஆட்சி பெற்ற நாடாக இயங்கத் தொடங்கியது. அங்கு உருவான அரசு மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு ஆதரவாக இயங்கியது.

உடனே இதற்கு பதிலடியாக ரஷியா தன் கட்டுப்பாட்டில் உள்ள கிழக்கு ஜெர்மனியை ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு (German Democratic Republic) என்ற சுதந்திர நாடாக்கியது. பெர்லின் அதன் தலைநகரானது. நாளடைவில் மேற்கு ஜெர்மனி மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார பாதுகாப்பு நிறுவனங்களோடு இணைந்து செயல்பட்டது. நேட்டோவிலும் உறுப்பினரானது. அது போல கிழக்கு ஜெர்மனி வார்சா ஒப்பந்தத்தில் இணைந்து பிற கம்யூனிஸ்ட் நாடுகளோடு பொருளாதாரத் தொடர்புகளை ஏற்படுத்திய ரஷியத் தலைமையின் கீழ் இயங்கியது. இவ்வாறு கெடுபிடிப் போர் சூழ்நிலை காரணமாக ஜெர்மனி இரு நாடுகளாகப் பிரிக்கப்பட்டது. தற்போது ஜெர்மனி ஒன்றுபட்டு ஒரே ஜெர்மனியாக விளங்குகிறது.

பெர்லின் சிக்கல்: பெர்லின் நகர் ரஷ்ய மண்டலமான கிழக்கு ஜெர்மனியில் அமைந்திருந்த போதிலும் அந்நகரின் மேற்குப்பகுதி மேற்கு வல்லரசுகளுக்கு அளிக்கப்பட்டிருந்தது. ஜெர்மனி இரண்டாகப் பிளவுபட்ட பின்பும் மேற்குப் பெர்லின் மேற்கு ஜெர்மனிக்குச் சொந்தமான பகுதியாகவே கருதப்பட்டது. அந்நகர் மேற்கு ஜெர்மனியைவிட்டு தனித்து கிழக்கு ஜெர்மனிக்குள் அமைந்திருந்ததால், மேற்கு ஜெர்மனிக்கும், மேற்கு பெர்லினுக்கும் இடையிலான போக்குவரவு தொடர்புகள் எல்லாம் கிழக்கு ஜெர்மனி வழியாகவே அமைந்திருந்தன.

தன் ஆதிக்கமண்டலத்தினுள் மேற்கு நாடுகளின் ஆதிக்க மையம் (மேற்கு பெர்லின்) அமைந்திருப்பதை ரஷியா விரும்பவில்லை. பிற நிர்ப்பந்தங்களை உண்டுபண்ணி இங்கிருந்து வல்லரசுகளை வெளியேற்ற ரஷியா திட்டமிட்டது. 1948-இல் மேற்கு நாடுகள் தங்கள் புதிய நாணயச் சீர்திருத்தத்தை மேற்குப் பெர்லினிலும் அமுல் செய்ததை ரஷியா எதிர்த்தது. மேற்கு ஜெர்மனிக்கு இடையிலான நீர், நில மார்க்கங்களை அடைத்துவிட்டது. இதனால் அங்கு வாழ்ந்த மக்களுக்கு உணவுப்பொருள் கிடைக்க வழியில்லாது போயிற்று. சகல தொடர்புகளிலிருந்தும் துண்டிக்கப்பட்ட மேற்கு பெர்லினுக்கு ஆகாய வழியாக மட்டும் தொடர்பு கொள்ள முடிந்தது. அமெரிக்கா தனது விமான பலத்தைப் பயன்படுத்தி, மேற்கு பெர்லினில் வாழும் மக்களுக்கு அனைத்துப் பொருட்களையும் அனுப்பியது 1948 மே மாதம் தொடங்கி பெர்லின் முற்றுகை 1949 மே வரை நீடித்தது. மேற்கு நாடுகள் அதனை உறுதியுடன் சமாளித்ததால் ரஷியா விட்டுக்கொடுத்தது. முற்றுகைத் தளர்த்தப்பட்டது. இந்த ஓராண்டு காலமும் பெர்லின் நகரில் அருகருகே இரு வல்லரசுகளும் பல தற்காப்பு படை நடவடிக்கைகளை எடுத்ததால் பதட்டநிலை நீடித்தது.

அதன்பின் மேலும் இரண்டு தடவை பெர்லின் நகரிலிருந்து மேற்கு வல்லரசுகளை வெளியேற்ற நிர்பந்தங்களை மேற்கொண்டது. 1957-இலும் 1961-இலும் பெர்லின் நெருக்கடி ஏற்பட்டது. அப்போதும் மேற்கு வல்லரசுகள் உறுதியுடன் நின்றதால் ரஷியா விட்டு கொடுக்க நேர்ந்தது.

நேட்டோ பாதுகாப்பு ஒப்பந்தம்

பெர்லின் நெருக்கடி கண்ட மேற்கு ஐரோப்பிய நாடுகள் ரஷியாவிற்கு எதிராகத் தங்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்த முயன்றனர். அனைத்து நாடுகளும் ஒன்று சேர்ந்து ரஷியப் படைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையிலும் கூட்டுப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யத் திட்டமிட்டன. அதன் விளைவே வட அட்லாண்டிக் ஒப்பந்தமாகும். (North Atlantic Treaty Organisation - NATO) இதில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், பெல்ஜியம், நெதர்லாந்து, லக்சம்பர்க், நார்வே, டென்மார்க், இத்தாலி, ஐஸ்லாந்து, கனடா, போர்த்துக்கல் ஆகிய 12 நாடுகள் சேர்ந்திருந்தன. இதன் தலைமையகம் பாரிசில் நிறுவப்பட்டது. உறுப்பு நாடுகளின் கூட்டுப் படைகள் உருவாக்கப்பட்டன. இந்நாடுகளில் ஏதாவது ஒரு நாட்டின் மீது தாக்குதல் நடந்தால், அனைத்து நாடுகளின் மீதான தாக்குதலாகக் கருதப்படவேண்டும் என்பது அவ்வொப்பந்தத்தின் முக்கியமான அம்சமாகும். 1952-இல் கிரீசும், துருக்கியும் சேர்ந்தன. 1955-இல் மேற்கு ஜெர்மனி சேர்த்துக் கொள்ளப்பட்டது.

வார்சா ஒப்பந்தம்

நோட்டோவிற்குப் பதிலடியாக ரஷ்யா வார்சா ஒப்பந்தத்தை உருவாக்கியது. இதில் ரஷ்யாவும் பிற கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்ட் நாடுகளும் (யூகோஸ்லாவியா நீங்கலாக) இணைந்திருந்தன. இவ்வாறு ஐரோப்பா மீண்டும் இரு ராணுவ முகாம்களாகப் பிளவுபட்டது. அதனால் பதட்டநிலை மேலும் அதிகரித்தது.

படைப்பெருக்கம்

கெடுபிடிப்போர்க்காலத்தில் பதட்டநிலை அதிகரித்ததற்குப் படைப்பெருக்கம் முக்கிய காரணமாகும். பயங்கர அழிவைத்தரும் கொடிய ஆயுதங்களை இரு வல்லரசுகளும் செய்து குவிக்கத் தொடங்கின. அணுக்குண்டை முதலில் தயாரித்த நாடு அமெரிக்காவாகும். 1949 வரை அந்நாடு அதில் முழுஉரிமை பெற்றிருந்தது. அவ்வாண்டில் ரஷியா அணுக்குண்டு ரகசியத்தை கண்டுபிடித்தறிந்து அதனைத் தயாரிக்க தொடங்கியது. நாள்டைவில் அணுக்குண்டை விடச் கொடிய அழிவை உண்டாக்கவல்ல நீர்வாயுக் குண்டு கண்டுபிடிக்கப்பட்டன. கண்டம்விட்டு கண்டம் தாக்கும் ஏவுகணைகளும், அணுக்குண்டு ஏவுக்கணைகளையும் இரு அணிகளும் செய்தன.

சீன உள்நாட்டுப்போர் (1947–49)

சீனாவில் சியாங்கே ஷேக் தலைமையிலான கோமிண்டாங் கட்சியினருக்கும் (தேசிய சீனா) மாசேதுங் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சிக்குமிடையில் உள்நாட்டுப்போர் ஏற்பட்டது. அமெரிக்கா சியாங்கேஷேற்கு உதவியபோது ரஷ்யா மசேதுங்கிற்கு உதவியது. இறுதியில் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி பெற்றது. 1949 அக்டோபர் முதல் தேதியில் சீனா மக்கள் குடியரசை நிறுவியது. சீனப்பிரச்சனை இத்துடன் தீர்ந்தபாடில்லை. கெடுபிடிப்போர் சூழ்நிலை காரணமாக அது தொடர்ந்து நீடித்தது. தோல்வியுற்ற சியாங்கே ஷேக் பர்மோசாத் தீவிற்குப் பின்வாங்கி அங்கு தமது தேசிய சீன அரசை நிறுவினார். தமது அரசுதான் சீனா முழுமைக்குமான உண்மையான அதிகாரப் பூர்வமான அரசு என்று கூறினார். அமெரிக்காவும், அதன் சார்பு நாடுகளும் சியாங்கே ஷேக்கின் அரசைத்தான் தொடர்ந்து சீன அரசாக அங்கீகரித்தன. ஐ.நா. சபையிலும் சீனாவிற்கு உரிய இடத்தில் தேசிய சீனாவே தொடர்ந்து இருக்குமாறு பார்த்துக்கொண்டது. சீனா முழுவதையும் உண்மையில் ஆட்சி புரிந்து கொண்டிருந்த கம்யூனிஸ்ட் அரசுக்கு அங்கீகாரம் அளிக்க அமெரிக்கா மறுத்தது. இவ்வாறு "இரு சீனாக்கள்" தோன்றின. சுமார் இருபதாண்டு காலத்திற்கு கம்யூனிஸ்ட் சீனாவிற்கு உலக அரசியலில் உரிய இடம் கிடைக்காதவாறு பார்த்துக்கொண்டிருப்பது அமெரிக்காவின் அதிக முக்கிய கொள்கையாயிற்று. இதனை ரஷ்யா கடுமையாக எதிர்த்தது. தேசிய சீனப் பிரதிநிதி ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அமர்ந்திருக்கும் வரை கூட்டத்தில் கலந்து கொள்ள மாட்டேன் எனப் புறக்கணித்தது. தற்போது கம்யூனிஸ்ட் சீனா ஐ.நா. சபையில் அதிகாரப்பூர்வமான அரசாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கொரியச் சிக்கல்: இரண்டாம் உலகப்போருக்குப்பின் கொரியா ஐப்பானிய மேலாதிக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டு வல்லரசுகளின் படைக் கட்டுப்பாட்டின் கீழ் தற்காலிகமாக வைக்கப்பட்டது. 38 வது அட்சரேகைக்கு வடக்கில் உள்ள பகுதியில் ரஷிய ஆதிக்கமும், தெற்கில் உள்ள பகுதியில் அமெரிக்க ஆதிக்கமும் ஏற்பட்டது. கெடுபிடிப்போர்ச் சூழ்நிலை காரணமாக அங்கு தேர்தல்கள் நடத்தப்பட்டு கொரியா முழுமைக்குமான சுதந்திர அரசை நிறுவ இயலாது போயிற்று. விரைவில் அமெரிக்கா தென்கொரியாவில் ஒரு சுதந்திர அரசை நிறுவியது. உடனே ரஷ்யாவும் வடகொரியாவில் ஒரு கம்யூனிஸ்ட் அரசை நிறுவியது. இவ்வாறு கொரியா இரண்டாகப் பிளவுப்பட்டது.

இந்நிலையில் 1950 ஜூனில் வடகொரியா தென்கொரியா மீது படையெடுத்தது. இப்பிரச்சனை ஐ.நா. சபைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அப்போது ரஷியா ஐ.நா. பாதுகாப்புக்குழுக் கூட்டத்தைப் புறக்கணித்திருந்தபடியால், வடகொரியா ஆக்கிரமிப்பை அகற்ற ஐ.நா. படையனுப்ப ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது. முதன் முறையாக ஐ.நா. படையனுப்பு கொள்கை முறைப்படி படையனுப்பி ஆக்ரமிப்பை அகற்ற முற்பட்டது. ஐ.நா. படையமைப்பிற்கு மேற்கத்திய நாடுகள் படை அனுப்பியது; அமெரிக்கத் தளபதி மக்கார்தர் ஐ.நா. படைத் தளபதியாக நியமிக்கப்பட்டார். ஐ.நா. படைகள் பெரும் சிரமத்துடன் வடகொரியாவைத் தோற்கடித்து 38 வது அட்சரேகைக்கு வடக்கில் பின்வாங்குமாறு செய்தன. தொடர்ந்து வடகொரியாவினுள்ளும் நுழைந்து போர் புரிந்தன. உடனே சீனா வடகொரியாவிற்குப் படைக்கலன்களையும் படைவீரர்களையும் கொடுத்து உதவியது; அதனால் ஐ.நா. படைமுன்னேற்றம் தடுத்து நிறுத்தப்பட்டது. தளபதி, மக்கார்தர் போரை விரைவில் வெற்றிகரமாக முடிக்க வேண்டுமென்றால் சீனாவினுள் புகுந்து தாக்குதல் தொடுக்க வேண்டும் என்று கருதினார். இவ்விதம் செய்தால் அது உலகப்போராக மாறிவிடும் என அஞ்சப்பட்டது. உடனே அமெரிக்க அதிபர் ட்ருமன், தளபதி மக்கார்தரை பதவி நீக்கம் செய்தார்.

இதற்கிடையில் ஐ.நா. பொதுச்சபையில் கொரியப்போர் நிறுத்தத்திற்காக இந்தியா கொண்டு வந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் போர் நிறுத்த கோட்பாட்டைக் கண்காணிக்க இந்தியப் படைகள் அனுப்பப்பட்டன. கொரியப்போர் நின்றது. ஆனால் கொரியப் பிரச்சனை தீரவில்லை. இன்னமும் இரு கொரியாக்கள் நீடிக்கின்றன.

தென் கிழக்காசியாவில் கெடுபிடிப்போர்

வியட்நாம் போர்

தென்கிழக்காசியாவில் உள்ள இந்தோசீனா அடுத்த கெடுபிடி போர்க்களமாக மாறியது. உலகப் போருக்குப்பின் மீண்டும் பிரெஞ்சுக்காரர்கள் தங்கள் மேலாதிக்கத்தை நிலைநாட்ட முயன்றபோது தேசியவாதிகள் கடுமையாக எதிர்த்தனர். அந்த தேசிய விடுதலை வீரர்களுக்கு ஹோசி-மின் என்ற கம்யூனிஸ்ட் தலைவர் தலைமை வகித்தார். பிரேஞ்சுக்காரர்களால் தேசியவாதிகளை முறியடிக்க இயலவில்லை. அதன் காரணமாக இந்தோ சீனப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண 1954-இல் ஜெனிவாவில் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. இதில் ரஷ்யா, சீனா, அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய வல்லரசுகளும் பிறநாடுகளும் கலந்து கொண்டன. அம்மாநாட்டில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

(அ) இந்தோசீனாவிலிருந்து பிரான்ஸ் வெளியேறி அப்பகுதிக்கு சுதந்திரம் அளிக்க வேண்டும்.

(ஆ) அங்கு லாவோஸ், வியட்நாம், கம்போடியா என்ற மூன்று சுதந்திர நாடுகள் உருவாக்கப்பட வேண்டும்.

(இ) இதில் லாவோஸ், கம்போடியா, ஆகிய இரு நாடுகளும் ஒரு நிலை நாடுகளாகக் கருதப்பட வேண்டும்.

(ஈ) வியட்நாம் 17-வது அட்சரேகையை எல்லையாகக் கொண்டு இருபகுதிகளாகத் தற்காலிகமாகப் பிரிக்கப்பட வேண்டும். வட வியட்நாமில் ஹோசிமின் தலைமையிலான கம்யூனிஸ்ட் அரசும், தென் வியட்நாமில் பவோடாய் என்பார் தலைமையில் ஒரு சுதந்திர அரசும் நிறுவப்பட வேண்டும். இருவருடங்களுக்குப் பின் அங்கு சுதந்திரமான தேர்தல்கள் நடத்தப்பட்டு வியட்நாம் முழுமைக்கான அரசு உருவாக்கப்பட வேண்டும்.

இதில் கடைசியில் குறிப்பிட்ட நிபந்தனை நிறைவேற்றப்பட முடியாமல் போய் விட்டது. வியட்நாம் இரு நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் கம்யூனிஸ்டுகள் வியட்நாமை வன்முறை மூலம் ஒன்றுபடுத்த விரும்பி தென் வியட்நாமில் "வியட்காங்" என்ற இயக்கத்தை உருவாக்கினர். அவ்வியக்கத்தினர் தென்வியட்நாம் அரசிற்கெதிராக உள்நாட்டு போரில் ஈடுபட்டனர். இதற்கு வடவியட்நாம் கம்யூனிஸ்டுகள் பேருதவி அளித்தனர். இப்போரில் தென்வியட்நாம் பல தோல்விகளைத் தழுவியது.

இந்நிலையில் உலகில் கம்யூனிசம் பரவுவதை தடுப்பதற்காக அமெரிக்கா தென்வியட்நாம் அரசிற்கு (தீன்.தியம்) உதவி புரிய விரைந்தது. தொடக்கத்தில் வெறும் ஆலோசகர்களையும், படை விரர்களையும் கொடுத்து உதவிய அமெரிக்கா நாளடைவில் தனது படை விரர்களையே அனுப்பத் தொடங்கியது. 1969-இல் ஐந்து லட்சத்திற்கு மேற்பட்ட அமெரிக்க வீரர்கள் அங்கு அனுப்பப்பட்டனர். அப்படியும் வியட்காங்குகளின் முன்னேற்றத்தைத் தடுக்க இயலாத வடவியட்நாம் மீது விமானங்கள் மூலம் குண்டு வீசியது. உண்மையில் வியட்நாம் போர் கம்யூனிஸ்ட் அமெரிக்க மோதலாக இருந்தது. வியட்நாமில் சக்தி வாய்ந்த வல்லரசான அமெரிக்கா இரண்டு மில்லியன் மக்களை கொண்டிருந்த வியட்காங்குகளிடம், தோல்வியுற நேர்ந்தது. அந்த தோல்வியை ஒப்புகொண்டு கௌரவமாக அப்போர்த் தொல்லையிலிருந்து தன்னை விடுத்துக்கொள்ள விரும்பியது. 1969- இல் பாரிசில் அமைதிக்கான பேச்சுவார்த்தை தொடங்கியது. 1978- இல் போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது. அமெரிக்கா தன் படைகளைத் திரும்ப வரவழைத்துக் கொண்டது. 1975-இல் கம்யூனிஸ்டுகள் வியட்நாம் முழுவதிலும் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதில் வெற்றி பெற்றனர்.

(2) **தென்கிழக்கு ஆசியப் பாதுகாப்பு ஒப்பந்தம்:** (South East Asian Treaty Organization SEATO) தென்கிழக்கு ஆசியாவில் கம்யூனிசத்தை நிறுத்தி சுதந்திர நாடுகளுக்குப் படை உதவி அளிக்கும் நோக்குடன் தென் கிழக்கு ஆசியப் பாதுகாப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது. இதில் பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, பாகிஸ்தான் ஆகிய மூன்று தென்கிழக்கு ஆசிய நாடுகளே சேர்ந்தன. இந்தியா, பர்மா, இந்தோனேசியா போன்ற பிற தென்கிழக்கு ஆசிய நாடுகள் இதில் சேரவில்லை. ஆனால் பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, நீயூசிலாந்து ஆகிய நாடுகள் சேர்ந்தன. நேட்டோ பாணியில் அமைந்த இந்த பாதுகாப்பு ஒப்பந்தம் அதனைப்போல் வலுவாகவும் உறுதியாகவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய உபகண்டத்தில் கெடுபிடிப்போர்

SEATO இந்த ஒப்பந்த மூலம் எந்த அளவிற்கும் கம்யூனிசம் பரவுவது தடுக்கப்பட்டது என்பது சர்ச்சைக்குரியது. ஆனால் இவ்வொப்பந்தத்தில் பாகிஸ்தான் சேர்ந்ததன் மூலம் கெடுபிடிப் போர் இந்திய உபகண்டத்தினுள் கொண்டுவரப்பட்டது. பாகிஸ்தான் அவ்வொப்பந்தப்படி பெற்ற படை உதவிகளைக் கொண்டு கம்யூனிசத்தை எதிர்க்க வில்லை. மாறாக இந்தியாவிற் கெதிராக 1965-இல் போர்தொடுத்தது. மடிந்துபோன காஷ்மீர் பிரச்சனைக்கு உயிரூட்டி அதனை ஐ.நா. சபையில் கிளப்பியது. தங்கள் ஒப்பந்தக் கூட்டாளியான பாகிஸ்தானை அமெரிக்கா அங்கு ஆதரித்தது. இதனால் இந்தியப் பாகிஸ்தான் உறவு சீர்கெட்டது.

1971-இல் பங்களாதேஷ் பிரச்சினை காரணமாக மூண்ட இந்தியா பாகிஸ்தான் போரின் போது அமெரிக்கா தனது ராணுவ ஒப்பந்த நாட்டிற்கு உதவி புரிய விரைந்தது. இச்சமயத்தில் ரஷ்யா இந்தியாவிற்கு ஆதரவளித்தது. போரில் இந்தியா வென்றது. ஆயினும் காஷ்மீர் பிரச்சனை தீராத ஒரு பிரச்னையாக உள்ளது.

மத்தியக் கிழக்கில் கெடுபிடிப்போர்

(1) **மத்திய கிழக்கு பாதுகாப்பு ஒப்பந்தம்:** எண்ணெய் வளமிக்க மத்திய கிழக்கிலிருந்து இரண்டாம் உலகப் போருக்குப்பின் பிரெஞ்சு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியங்கள் வெளியேறியபின் அங்கு ஏற்பட்ட ஆதிக்க வெற்றிடத்தை நிரப்ப அமெரிக்கா அங்கு நுழைந்தது. 1955-இல் மத்திய கிழக்குப் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. ஈராக் அதிலிருந்து விலகிவிட்டது. எனவே, இது தொடக்க முதலே வலுவற்றிருந்தது. அமெரிக்க குடியரசுத் தலைவர் ஜசன்ஹோவர் 1957 இல் மத்தியகிழக்கிற்கென ஒரு கொள்கையை வெளியிட்டார். மத்திய கிழக்கு நாடுகளுக்கு கம்யூனிஸ்ட் ஆக்கிரமிப்பினால் ஆபத்து ஏற்படும் போது அமெரிக்கப்படை பொருளியல், உதவி அளிக்கத் தயார் என்று அறிவித்தார்.

(2) **சூயஸ் கால்வாய் தகராறு:** 1956-இல் அமெரிக்காவும், பிரிட்டனும் எகிப்தில் அஸ்வான் அணை கட்டுவதற்கு நிதி அளிக்க மறுத்த போது நாஸர், சூயஸ் கால்வாயை தேசியமயமாக்கினார். அதனால் பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் இஸ்ரேல் உதவியுடன் எகிப்து மீது படையெடுத்த போது ரஷ்யா எகிப்தின் உதவிக்கு விரைந்தது. அதனால் வல்லரசுகள் அங்கு பின்வாங்க நேர்ந்தது.

(3) **அரபு–இஸ்ரேல் போர்கள்:** மத்தியகிழக்கில் அமைதிக்கு இடையூறு விளைவிக்கும் சிக்கல் அரபு இஸ்ரேல் தகராறுகளாகும். கெடுபிடிப்போர் அங்கும் சிக்கலை அதிகரித்தது. இஸ்ரேல் நாட்டிற்கு அமெரிக்க உதவியளிக்கும்போது அரபுக்களுக்கு ரஷ்யா ஆயுத உதவி அளிக்கிறது: அதனால் அங்கு அத்தகராறு நிரந்தரத் தீர்வு காண இயலாமல் இருக்கிறது.

ஹங்கேரிச் சிக்கல்: வார்சா ஒப்பந்தத்தில் இணைந்திருந்த கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்ட் நாடான ஹங்கேரியில் 1956இல் ஒரு சிக்கல் ஏற்பட்டது. அந்நாட்டுப் பிரதமரான இம்ரே நாக் கம்யூனிஸ்ட் கொள்கைகள் தன் நாட்டு நலன்களுக்கு உகந்ததாக இல்லை என்று எண்ணினார். அதனால் கொள்கையை, அரசியல் பொருளியல் துறைகளில் சற்றுத் தளர்த்தி, ரஷியப் பிடியிலிருந்து விடுபட்டு மேற்கு நாடுகளுடன் தொடர்பு கொள்ள முயன்றார். ஹங்கேரியின் இச் செய்கை இரும்புத்திரையை கிழித்து விடும் என்றஞ்சிய ரஷ்யா அம் முயற்சியை முளையிலே கிள்ளி எறிய முனைந்தது. வார்சா ஒப்பந்தப்படி அங்கு நிறுத்தப்பட்டிருந்த ரஷியப் படைகள் இம்ரேநாகி அரசிற்கு எதிராகக் கிளம்பியது. அதன் விளைவாக இம்ரேநாகி பதவி விலக்கப்பட்டு காடார் என்பார் பிரதமராக்கப்பட்டார். நாசி தேசத்துரோகி எனச் சுட்டுக் கொல்லப்பட்டான். ரஷிய டாங்குகள் எதிர்ப்பு அனைத்தையும் நசுக்கி விட்டன. ஆயிரக்கணக்கான ஹங்கேரி தேசியவாதிகள் மேற்கு நாடுகளுக்கு அகதிகளாக ஓடி வந்தனர். அமெரிக்காவும், மேற்கு நாடுகளும் ஹங்கேரியில் ரஷ்யப் படைத் தலையீட்டை எதிர்த்து ஐ.நா. சபையில் தீர்மானம் கொண்டு வந்தன. ரஷ்யா ரத்து அதிகாரம்ளமுலம் அத்தீர்மானத்தை முறியடித்தது. அது போல் 1969-இல் செக்கோஸ்லோவியாவில் பிரதமர் அலெக்சாண்டர் டுப்செக் இது போல் கம்யூனிசக் கொள்கையைத் தளர்த்த முயன்றபோது ரஷ்யப் படைகள் தலையிட்டு தோற்கடித்தது குறிப்பிடத்தக்கது.

யு2 நிகழ்ச்சி

1958-இல் ரஷ்யப் பிரதமரான குருஷேவ் சமாதான சகவாழ்வுக் கொள்கையை கடைப்பிடிக்கப் போவதாக அறிவித்தார். 1958-இல் அவர் அமெரிக்காவுக்கு வருகை புரிந்து ஐசன்ஹோவரைச் சந்தித்துப்பேசினார். அதன்பயனாக சர்வதேச சிக்கல்களுக்கு தீர்வுகாணும் பொருட்டு 1960இல் பாரிசில் உச்சகட்ட மாநாடு ஒன்றைக் கூட்டவேண்டு மென்று தீர்மானிக்கப்பட்டது.

இதற்கிடையில் ஒரு விரும்பத்தகாத நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றுவிட்டது. 1960 மே மாதம் அமெரிக்க விமானம் யு2 ரஷ்யா மீது பறந்த போது சுட்டு வீழ்த்தப்பட்டது. அதன் விமானி பிரான்சில் பவர்ஸ் என்பவர் உயிருடன் பிடிக்கப்பட்டார். அவரிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலத்திலிருந்து அமெரிக்கா ரஷ்யாவின் படைநிலைகளை எவ்வாறு ஒற்றறிந்து வருகிறது என்பது பற்றி விரிவான தகவல் பெறப்பட்டது. ஒரு வாரத்திற்கு பின் பாரிசில் உச்சக்கட்ட மாநாடு தொடங்கிய போது குருஷேவ் யு2 நிகழ்ச்சி பற்றிக் குறிப்பிட்டு அதற்கு அமெரிக்க குடியரசுத் தலைவர் ஐசன் ஹோவர் மன்னிப்பு கேட்கவேண்டும் எனக் கோரினார். அதற்கு அவர் இணங்காததால் மாநாடு பன்னாட்டுச் சிக்கல்கள் எதனையும் பரிசீலிக்காமலே பயனின்றிக் கலைந்தது:

ஆப்பிரிக்காவில் கெடுபிடிப்போர்

வல்லரசுகளின் ஆதிக்கப் போக்குக்கு ஆப்பிரிக்க கண்டமும் தப்பவில்லை. 1960-இல் பெல்ஜியம் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற காங்கோவில் வல்லரசுகள்

தலையிட்டன. அந்நாட்டில் உள்நாட்டுக் குழப்பம் ஏற்பட்டது. உடனே தனது நலன்களைப் பாதுகாப்பதற்கென்று பெல்ஜியம் தனது படைகளை அனுப்பியது. அதன் ஆதரவால் காங்கோ பிரதமரான லுமும்பா தம் நாட்டிலுள்ள அந்நியப்படைகளை வெளியேற்றக் கோரி ஐ.நா. சபையில் புகார் செய்தார். அக்கோரிக்கையை ரஷ்யா தீவிரமாக ஆதரித்தது. இதற்கிடையில் காங்கோ அரசியல் குழப்பம் அதிகரித்தது. அதிபர் கசபவு லுமும்பாவை பதவியிலிருந்து நீக்கியிருப்பதாக அறிவித்தார். அது செல்லாது என்று கோரி லுமும்பா தொடர்ந்து தான் பிரதமராயிருப்பதாகக் கூறினார். அவருக்கு உதவிசெய்ய ரஷ்யா விரைந்தது. இந்நிலையில் தளபதி மொபடு என்பவர் ஆட்சியைக் கைப்பற்றினார். அவருக்கு மேற்கு வல்லரசுகள் ஆதரவு இருப்பதாகக் கருதப்பட்டது. இவ்வாறு காங்கோ உள் நாட்டுப்போரில் ஆளுக்கொரு கட்சியை ஆதரித்து வல்லரசுகள் தலையிடத் தொடங்கின. அது காங்கோ குழப்பத்தை அதிகரித்தது. அக்குழப்பத்தில் லுமும்பா கொல்லப்பட்டார். இறுதியில் அங்கு அமைதியை நிலைநாட்ட ஐ.நா. படை அனுப்பப்பட்டது.

லத்தீன் அமெரிக்காவில் கெடுபிடிப்போர்

நீண்ட காலமாகவே லத்தீன் அமெரிக்கா, அமெரிக்கச் செல்வாக்கு மண்டலத்தினுள் இருந்தது. அவ்வப்போது கம்யூனிசக் கருத்துக்கள் அரசியலில் தலை தூக்கிய போது அமெரிக்கா முன்னெச்சரிக்கையுடன் அதனை முளையிலேயேகிள்ளியெறிய முற்பட்டது. 1954-இல் குவாடாமாலாவில் கம்யூனிசத்திற்கு ஆதரவான அரசு நிறுவப்பட்ட போது அதனைக் கவிழ்க்க அமெரிக்கா, திரைமறைவு சதி வேலைகளைச் செய்தது. இறுதியில் அவ்வரசு கவிழ்க்கப்பட்டது. 1969-இல் கியூபாவில் ஏற்பட்ட புரட்சியில் பதவியைப் பிடித்த பிடல் காஸ்ட்ரோ கம்யூனிஸ்ட் கொள்கைகளைக் கடைப்பிடிக்கத் தொடங்கிய போது அவரது அரசைக் கவிழ்க்க அமெரிக்கா முயன்றது. 1965-இல் டொமினிகன் குடியரசில் நிகழ்ந்த உள்நாட்டுப் போரில் கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக அமெரிக்கா படையனுப்பியது. 1970-இல் சிலி நாட்டின் அதிபரான சால்வடார் அல்லாண்டோ கம்யூனிஸ்ட் கோட்பாடுகளை கடைப்பிடித்தார். அவருக்கு விரோதமாக அமெரிக்க ஒற்றர் படைப்பிரிவு சதிவேலைகளை நடத்தியது. அதன் விளைவாக 1974-இல் அவர் கொல்லப்பட்டார். கியூபா தவிர பிற லத்தீன் அமெரிக்க நாடுகளில் கம்யூனிஸ்ட் ஆதரவு அரசுகள் நிறுவப்படுவதை அமெரிக்கா வெற்றிகரமாகத் தடுத்து வருகிறது. அண்மையில் (1983) சின்னஞ்சிறு கரிபியன் தீவு நாடான ரோண்டாவில் கம்யூனிச ஆதரவு அரசு நிறுவப்பட்டபோது அமெரிக்கா பிற லத்தீன் அமெரிக்கா நாடுகளின் உதவியுடன் வன்முறையில் அவ்வரசை அகற்றியது குறிப்பிடத்தக்கது.

கியூபா நெருக்கடி

1959-இல் கியூபா அதிபரான பீடல்காஸ்ட்ரோ தம் நாட்டுப் பொருளாதார நிலையைச் சீரமைக்க கம்யூனிஸ்ட் கொள்கைகளைக் கடைபிடித்தார். 1960-இல் முதலீடு நிறுவனங்களைத் தேசிய மயமாக்கினார். இதில் அமெரிக்க முதலாளிகள் பலர் பாதிக்கப்பட்டனர். அதனால் அமெரிக்கா கியூபா உறவு சீர்கேடடைந்தது. காஸ்ட்ரோவின் ஆட்சியை வன்முறையில் கவிழ்க்க அமெரிக்கா திரைமறைவு சதிவேலைகளைத்

தொடங்கியது. அமெரிக்காவிற்கு தப்பியோட வந்த கியூபானிய அகதிகளுக்கு படையுதவி அளித்து அமெரிக்க உதவியுடன் கியூபாவில் இறங்கச்செய்து உள்நாட்டுப் போரை தொடங்கச் செய்த முயற்சி பின் வளைகுடா நிகழ்ச்சி 1964-ல் தோல்வியில் முடிந்தது.

இந்நிகழ்ச்சி கியூபாவை ரஷ்யப் பாதுகாப்பில் புகலிடம் தேடுமாறு செய்தது. லத்தீன் அமெரிக்காவில் காலூன்ற பலகாலமாக முயன்ற ரஷ்யாவிற்கு இது ஒரு நல்ல வாய்ப்பானது. அந்நாட்டிற்கு ஏராளமான படைக்கலன்களை அனுப்பியது. மேலும் ஏவுகணைத் தளங்களை ரஷ்யா ரகசியமாக நிறுவிவந்தது. அமெரிக்கா இதனை அறிந்ததும் அதிர்ச்சியுற்றது. தன் நாட்டிற்கு வெகு அருகில் ரகசியப்படை நிறுவ அனுமதிப்பது தனது பாதுகாப்பிற்கு ஆபத்து எனக் கருதியது. அப்போது அதிபராக இருந்த ஜான் எப் கென்னடி எவ்வகையிலும் இத்தளங்களை நிறுவமுடியாதபடிச் செய்ய உறுதி பூண்டார். எனவே ஏவுகணைக் கருவிகளை கொண்டுவரும் ரஷ்யக் கப்பல்களைத் தடுப்பதற்கு கியூபாவிற்கு வரும் அனைத்துக் கப்பல்களும் சோதிக்கப்படும். அதில் அணு ஏவுகணைக் கருவிகள் இருந்தால் திரும்பியனுப்பப்படும்; இல்லையேல் மூழ்கடிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. கடல் வெளிகளில் சுதந்திரம் வேண்டும்' என்று கூறிய அமெரிக்கா இப்போது அதனை மீறியது. தங்களது பாதுகாப்பிற்கு ஆபத்து என்ற நிலை வந்ததும் சர்வதேச நியதிகளை வல்லரசுகள் எவ்வாறு மீறுகின்றன என்பதற்கு இது தகுந்ததோர் எடுத்துக்காட்டு. அமெரிக்காவின் கடல் முற்றுகை ஆணை ரஷ்யாவிற்கு நேரடி அறைகூவலாக இருந்தது. அந்த சமயத்தில் ஒன்பது ரஷ்யக் கப்பல்கள் ஏவுகணைக் கருவிகளை கியூபாவிற்கு சுமந்து வந்துகொண்டிருந்தன. கெடுபிடிப் போரில் இப்போது இரு வல்லரசுகளும் நேரடியாக மோதிக்கொள்ளும் சூழ்நிலை தோன்றியது. எந்த நிமிடத்திலும் வல்லரசுகளிடம் மோதல் ஏற்பட்டு அணு ஆயுதப்போர் மூண்டுவிடும் அபாயம் தோன்றியது.

ஆனால் நல்லவேளையாக அமெரிக்க உறுதியினைக் கண்ட ரஷ்ய பிரதமர் குருஷேவ் சற்றுப் பின் வாங்கினார். அந்த ஒன்பது ரஷ்ய கப்பல்களும் வேறிடங்களுக்குத் தானாகத் திரும்பிச் சென்றன. உலகம் நிம்மதிப் பெருமூச்சுவிட்டது. அதனைத் தொடர்ந்து கியூபாவை தாக்கமாட்டோம் என அமெரிக்கா உறுதியளித்தால் அங்குள்ள ஏவுகணைகளை அகற்றி விடுதாக குருஷேவ் அறிவித்தார். அத்தகைய உறுதிமொழியை அமெரிக்கா அளித்ததும் ஏவுகணைத் தளங்களும் அகற்றப்பட்டன. நெருக்கம் தீர்ந்தது. ஆனால் கியூபா ரஷ்யாவின் ஆதரவு நாடாக ஆதரவாளராகப் பன்னாட்டரசியலில் தீவிர பங்குபெறத் தொடங்கியது.

கெடுபிடிப் போரின் தணிவு

கியூபா நெருக்கடி தீர்ந்த பின் கெடுபிடிப் போரின் கடுமை தணியத் தொடங்கியது. அதற்கு முதற்காரணம் ரஷ்யப் பிரதமர் குருஷேவின் "சமாதான சகவாழ்வுக் கொள்கை". அவரது நல்லெண்ணபயணங்கள் இரும்புத்திரையை அகற்றிவிட்டது என்றே கூறலாம். இரண்டாவதாக வல்லரசுகளின் படைக்கலன் பெருக்கமும், தயார் நிலையும் போரின் விளைவுகள் எவ்வாறு இருக்கும் என்பதைத் தெளிவாக உணர்த்தின.

கொடிய அணு ஆயுதங்கள் மக்கள் இனத்தையும் பண்பாட்டையும் நாகரீகத்தையும் அடியோடு அழித்துவிடும் என்ற அச்சம் வல்லரசுகளின் சிந்தையில் ஒரு மூலையில் இன்னும் உயிருடனிருந்த மனிதாபிமான உணர்வுகளைத் தட்டியெழுப்பியது. இருதரப்பாருக்கும் முழுமையான அழிவினைத் தரவல்ல கொடிய போரினை தொடங்க தயங்கின. மூன்றாவதாக பதட்டநிலையைத் தணிக்கவேண்டும் என்ற உள்நோக்கத்துடன் 1963-இல் மாஸ்கோவிற்கும் வாஷிங்டனுக்கும் நேரடித் தொலைபேசி தொடர்பு (Hot line) நிறுவப்பட்டது. 1966-இல் இரு நகரங்களுக்கிடையில் நேரடி விமானத் தொடர்பு ஏற்படுத்தப்பட்டது. நான்காவதாக, படைக்குறைப்பில் முதன் முறையாக ஒரு முன்னேற்றமான முடிவை ஒரு மனதாக எடுத்தனர். 1963-ல் அணு ஆயுதச் சோதனைத் தடை ஒப்பந்தம் (Test Ban Treaty) கையெழுத்தானது. நான்காவதாக வல்லரசுகளின் முகாம்களுக்கும் பூசல்கள் ஏற்பட்டன. பிரான்சின் அதிபரான டிகால் பன்னாட்டுறவுகளில் கண்மூடித்தனமாக அமெரிக்காவைப் பின்பற்றுவதை வெறுத்தார். அத்துடன் அது ஐரோப்பிய விவகாரங்களில் அளவிற்கு மீறித் தலையிடுவதாக எண்ணினார். நேட்டோ இனி தேவையில்லை என்றும் நம்பினார். மறு ஆண்டில் நேட்டோவின் தலைமையகம் பாரிசிலிருந்து மாற்றப்பட்டது. அதுபோல் ரஷ்ய கம்யூனிச முகாமிலும் பிளவுகள் ஏற்பட்டன. மாசேதுங்கின் சீனா மாஸ்கோவின் தலைமையைப் புறக்கணித்தது. போல்ஷ்விக் கொள்கைகளுக்கு புதுவிளக்கம் கொடுத்தது; ரஷ்யாவின் போக்கைக் கண்டித்தது. எல்லாவற்றிற்கும் மேலாக இரு நாடுகளுக்குமிடையில் எல்லைத் தகராறு ஏற்பட்டு மோதல் ஏற்படும் நிலை தோன்றியது. இந்த ரஷ்ய சீனப் பிளவு உலகக் கம்யூனிச இயக்கத்தையே இரண்டாகப் பிளந்துவிட்டது. கிழக்கு ஐரோப்பிய நாடான அல்பேனியா கூட ரஷ்ய தலைமையைப் புறக்கணிக்கத் துணிந்தது. ஐந்தாவதாக குருஷேவ் தொடங்கி வைத்த நல்லெண்ணப் பயணங்கள் தொடர்ந்து நடைபெற்றன. 1967-ல் ரஷ்ய பிரதமர் கோசிஜின் அமெரிக்காவுக்கு வருகை புரிந்தார். 1972-ல் அமெரிக்க அதிபர் நிக்சன் மாஸ்கோவிற்கு வருகை புரிந்தார். மறு ஆண்டில் ரஷ்யத் தலைவர் பிரஷ்னேவ் அமெரிக்கா வந்தார். இந்த நல்லெண்ணப் பயணங்கள் பகைகளைத் தீர்க்க வகைசெய்தன. ஆறாவதாக படைகுறைப்பு பற்றி வல்லரசுகளிடையே கருத்தொற்றுமை ஏற்பட்டது. அதன் விளைவாக 1966-ல் அணு ஆயுதப்பரவல் தடை ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. 1972-ல் பயங்கர அணு ஆயுதங்களின் உற்பத்தியை தடை செய்யும் ஒப்பந்தம் (Strategic Arms Limitation Treaty - SALT) கையெழுத்தானது. 1979-ல் மீண்டும் ரஷ்ய கம்யூனிச முகாமிலும் பிளவுகள் ஏற்பட்டன. ஏழாவதாக ஐ.நா. சபை கெடுபிடிப்போரின் கடுமையைத் தணிப்பதில் பெரும்பங்கு பெற்றுள்ளது. ஐ.நா. சபையில் நடைபெற்ற விவாதங்கள் ஒருவர் கருத்தையும் நிலையையும் மற்றவர் புரிந்துகொள்ள வகைசெய்தது. போர் நிறுத்த தீர்மானங்களை நிறைவேற்றி பிராந்தியப் போர்கள் பெரும் போராக மாறாதபடி பார்த்துக்கொண்டது. வல்லரசுகளின் அத்துமீறிய செயல்களைத் துணிந்து கண்டித்தது. இந்தக் கண்டனம் தார்மீக விளைவுகளை உண்டுபண்ணியது என்பதை மறக்கமுடியாது. 1956-இல் ரஷ்யா ஹங்கேரியில் தலையிட்டதையும் அதே ஆண்டில் பிரிட்டனும், பிரான்சும் எகிப்தின் மீது தாக்குதல் தொடுத்ததையும் ஐ.நா. சபைக் கண்டித்தது குறிப்பிடத்தக்கது. இறுதியாக கூட்டுசேரா

நாடுகளின் இயக்கத்தின் வளர்ச்சி வல்லரசுகளின் இருதுருவ அரசியல் வேறுபாடுகளுக்கு எதிராக அமைந்தது. 1961-இல் 26 நாடுகளைக் கொண்ட அவ்வியக்கம் தற்போது 101 நாடுகளைக் கொண்ட பெரியதொரு அணியாக வளர்ச்சி பெற்றுள்ளது. இது வல்லரசுகளின் ராணுவக் கூட்டுகளுக்கு எதிரானது என்பது குறிப்பிடத்தக்கது. ராணுவக் கூட்டுகளில் சேர்ந்த நாடுகள் கூட அதிலிருந்து விலகி கூட்டுசேரா அணியில் சேர்ந்து வருகின்றன. இது இராணுவக் கூட்டுகளின் முக்கியத்துவத்தை வெகுவாகக் குறைத்து விட்டது.

திறனாய்வு ரஷ்யாவின் கம்யூனிசத்தின் வீழ்ச்சிக்கு பிறகு

கெடுபிடிப்போர் முடிந்துவிட்டது என்பதில் கருத்து வேறுபாடுகள் இருக்க முடியாது.

இன்றைய சூழ்நிலையில் கெடுபிடிப் போருக்கு மூல காரணமாக நிகழ்ந்த சோவியத் ரஷ்யா தற்போது சிதறுண்டு போனமையால் கெடுபிடிப்போருக்கான அறிகுறிகள் முழுவதும் மறைந்துவிட்டதெனலாம்.

பயிற்சி வினாக்கள்

1) கெடுபிடிப் போரினை விளக்குக.

2) ரஷ்ய அமெரிக்க நாடுகளுக்கிடையே நடைபெற்ற கெடுபிடிபோர் பற்றி கட்டுரை வரைக.

பாடம் – 28

குருச்சேவின் கொள்கையும் பொருளாதார வளர்ச்சியும்

1894-ஆம் ஆண்டு குர்ஸ்க் பகுதியைச் சேர்ந்த காலினோவ்கா என்னுமிடத்தில், நிகிடாசெர்ஜியேவிச் குருச்சேவ் பிறந்தார். இவருடைய தந்தை ஒரு சுரங்கத் தொழிலாளி. குருச்சேவிற்கு உயர் கல்வி பெறும் வாய்ப்பில்லை. தன்னுடைய 15-ஆம் வயதிலிருந்து பல தொழில்களைக் கற்றுக் கொண்டார். ஆடு மேய்க்கும் தொழில் முதற்கொண்டு சுரங்கத்தொழில் வரை பலவிதமான தொழில்களில் ஈடுபட்டார். ஆரம்பத்தில் இவர் கட்சியில் துணை உறுப்பினராயிருந்து, கட்சி வளர்ச்சிக்கென அருந்தொண்டாற்றி முதல் உலகப் போர் முடியும் வேளையில் தான் கட்சியின் முழு உறுப்பினரானார். லெனின் பதவியேற்றபின் ஏற்பட்ட உள்நாட்டுப் போரின் போது போல்ஸ்விக் கட்சியின் கீழ்மட்டத், தலைவர்களில் ஒருவராகப் பணியாற்றி, லெனினின் படைகள் வெற்றி பெறப் பாடுபட்டார். 1922-இல் கட்சியின் உயர்நிலைப் பள்ளியில் உறுப்பினராகிக் கட்சிக் கொள்கையிலும், செயல்முறைத் திட்டங்களிலும் மேலும் பயிற்சி பெற்றார். பின்னர் உக்ரெய்ன் பகுதியைச் சேர்ந்த பெத்ரோவோ - மாரின்ஸ்கி வட்டாரத்தில் இருந்த ஸ்டாலினோ நகரின் கட்சிச் செயலாளரானார். 1929-இல் மாஸ்கோவிலிருந்து ஸ்டாலின் தொழில் கல்விக் கூடத்திற்குச் சென்றார். 1935-இல் மாஸ்கோ நகரின் செயலாளரானார். இதனைத் தொடர்ந்து மூன்றாண்டுகளுக்குள் உக்ரெய்ன் மாநில முதல் செயலாளராகவும் பொலிட்பீரோவின் துணை உறுப்பினராகவும் ஆனார். 1936-ஆம் ஆண்டில் நடைபெற்ற கட்சியின் பதினெட்டாவது மாநாட்டில் அவர் பொலிட்பீரோ உறுப்பினரானார். அதுமுதல் தன்னுடைய திட்டங்களை விளக்கி, கட்சியிலும் மக்களிடத்தும் பெரும் பெயர்பெற்றுத் திகழலானார்.

ஸ்டாலின் 1953-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5-ஆம் நாள் நோய்வாய்ப்பட்டு இறந்து போனார். இவர் மறைவிற்குப்பின் இவர் கொண்டிருந்த தனித்தலைவர் வழிபாட்டுக் கொள்கை என்பது கைவிடப்பட்டு 'கூட்டுத் தலைமை' எனும் புதிய கொள்கை கட்சியின் புனிதக் கொள்கையாயிற்று. இக்கொள்கைக்கிணங்க புதிய பிரதமராக மாலெங்கோவ் (Malenkov) என்பவர் பதவி ஏற்றார். ஆட்சியின் மத்தியக் குழுவின் அமைப்பு முறையும் மாற்றியமைக்கப்பட்டது. இதுகாறும் இருந்து வந்த "பிரசீடியம்", 'பீரோ ஆஃப் பிரசீடியம்' என்ற இரு உயரதிகாரக் குழுக்களுக்குப் பதிலாக "பொதுஉடமைக் கட்சியின் உயரதிகார மத்தியக்குழு" என்ற ஒரே ஒரு தலைமைக்குழு உருவாக்கப்பட்டது. இவ்வமைப்பில் 10 உறுப்பினர்கள் இருந்தனர். அவர்கள் மாலெங்கோவ், பெரியா, மாலடோவ், ஒரோசிலோவ், குருச்சேவ், புல்கானின், ககனோவிச், மிக்கோயன், பெர்வுகின், சபுரோவ் ஆகியோர் இடம் பெற்றனர். முன்னைய தலைமையின்போது தவறான முறையில் தண்டனை யளிக்கப்பட்டுச் சிறையிலிருந்த அனைவரும் விடுதலை பெற்றனர். அரசு அதிகாரிகள் சிகப்பு நாடா முறையை ஒழித்துவிட்டனர். பெரியா என்பவர் கடைப்பிடித்து வந்த குற்ற நடவடிக்கைகள் விவாதத்திற்குள்ளாயிற்று. அவர் கட்டுப்பாட்டிலிருந்த இரகசியக் காவல்துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். ஸ்டாலின் மறைவுக்குப் பின் தொழிலாளர், விவசாயிகள் இணைப்பை அறுத்து, கூட்டுப்பண்ணை முறைக்கு வேட்டு

வைத்தார். எனவே கட்சியின் மத்திய குழு பெரியாவுக்கெதிரான நடவடிக்கைகளை உடனே மேற்கொண்டது. கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட பெரியா மீது விசாரணை செய்து மரண தண்டனை விதித்தனர்.

நாட்டின் வளர்ச்சித் திட்டங்களை வகுப்பது, செயல்படுத்து முறைகளை வகுப்பது போன்றவைகள் பொதுவுடமைக் கட்சியின் மத்தியக் குழுவின் பொறுப்பாகும். இம் மத்தியக்குழுவின் செயலாளர் என்ற முறையில் குருச்சேவ் முழு பங்கு ஏற்றார். போருக்குப்பின் விவசாய வளர்ச்சி போதுமானதாக இல்லை. அரசின் கொள்முதல் முறை உரிய முறையில் செயல்படுத்தப்படாததால் கூட்டுப் பண்ணை விவசாயிகளுக்குப் பாதகமான சூழ்நிலை உருவாயிற்று. அதிகமான அளவு உற்பத்திப் பொருளை கொள்முதல் செய்தமையால் விவசாயிகளிடையே பங்கிட போதுமான உணவுப் பொருள் இல்லை. விவசாய இயந்திர சாதன நிறுவனங்களுக்கு அதிக அளவில் பணமும், பொருளும் அரசு கொடுக்க வேண்டியிருந்தது. காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றில் விலைச்சரிவு ஏற்பட்டிருந்ததால் விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் பாதிக்கப்பட்டிருந்தது.

மாலெங்கோவ் காலத்தில் காகஸஸ்தான், சைபீரியா, யூரல், வால்கா, காகசஸ் ஆகிய பகுதிகளில் இருந்த தரிசு நிலங்கள், காடுகள், பயிர்த்தொழிலுக்கு உகந்த நிலங்களாக மாற்றப்பட்டு உணவு உற்பத்தியைப் பெருக்கினர். இத்திட்டம் 1954-இல் தொடங்கி இரண்டாண்டுகளுக்குள் ஏறத்தாழ 450 புதிய பண்ணைகள் அமைக்கப்பட்டன. இத்தகைய காடுகளைக் கழனியாக்கும் திட்டம் பொதுவுடமைக் கட்சியின் மத்தியக் குழு செயலாளரான குருச்சேவ் வகுத்த ஒன்றாகும்.

1955-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் மாலெங்கோவ் பிரதமர் பதவியிலிருந்து விலகினார். அதனால் புல்கானின் என்பவர் புதிய பிரதமரானார். இவர் பிரதமராக இருக்கும்போது 1956-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் பொதுவுடமைக்கட்சியின் இருபதாவது மாநாடு கூடியது. அம்மாநாட்டில் வெவ்வேறு சமுதாய அமைப்புகளையும், அரசியல் ஆட்சி முறைகளையும் கொண்டுள்ள நாடுகள் வேறுபட்ட நிலையிலும் கூடிவாழ முடியும் என்ற லெனினின் கொள்கையை இம்மாநாடு மீண்டும் வலியுறுத்திற்று. அரசியல் வேறுபாடுகளும், கொள்கை மாறுபாடுகளும், சமுதாய வளர்ச்சிக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் போட்டியாக நிற்கக்கூடாது எனவும் அறிவியல் கலாச்சார வளர்ச்சிக்கும் ஊறுவிளைவிக்கக்கூடாது எனவும், விஞ்ஞான வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தால் நாடுகளுக்கிடையேயான போர் தவிர்க்க முடியாதது எனவும் முடிவு செய்தது. இம்மாநாட்டில் ஸ்டாலினின் கொள்கை வன்மையாகக் கண்டிக்கப்பட்டது. தனித்தலைவர் வழிபாட்டுத் துதி என்பது மார்கிசீசிய - லெனினின் கொள்கைகளுக்கு முரண்பட்ட ஒன்று என்று பறைசாற்றினர்.

குருச்சேவ், ஸ்டாலின் காலத்தில் செயல்படுத்தப்பட்ட சட்டவிரோத, சமதர்ம விரோத, சமுதாய விரோதக் கொள்கைகளை சரியான நேரத்தில் மக்கள் மன்றத்தின் முன் வைத்து, தனித்தலைவர் கொள்கையையும் கடுமையாகக் கண்டித்தார். மேலும் லெனினின் கோட்பாடுகளுக்கேற்ப தனித்தலைமை வளர்ச்சியை நீக்கிடவும், கூட்டுத்தலைமையை உருவாக்கிடவும், பெரும்பாலோரின் முடிவே ஆட்சியில் இடம்

பெறவும் உரிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. இப்புதிய கொள்கைகளை 1957-ஆம் ஆண்டு, மாலெங்கோவ், மால்டோவ், சுகனோவிச் ஆகியோர் கண்டனம் செய்ய முற்பட்டனர். இவர்களை மத்தியகுழு கட்சியிலிருந்து விலக்கிற்று. சூகோல் என்ற பாதுகாப்பு அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு மாலினோவிஸ்கி என்பவர் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டார். 1957-ஆம் ஆண்டு மார்ச் மாதம் புல்கானினும் பிரதமர் பதவியிலிருந்து விலகவே குருச்சேவ் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியோடு பிரதமர் பதவியையும் ஏற்றார். பொதுச் செயலாளராக இருந்தபோதும், பிரதமர் ஆனபோதும் தன்னுடைய கொள்கையை வலிமையாக எடுத்துரைப்பார். 1961-ஆம் ஆண்டு கட்சியின் இருபத்தோராவது மாநாடு நடைபெற்றபோது பொதுக்குழுவின் உறுப்பினர்களாகவும், கட்சியின் மேல்மட்டத் தலைவர்களாகவும் ஆனதால் மக்கள் விரோதக் கொள்கை கொண்டிருந்த மாலடோவ், சுகனோவிச் புல்கானின், பெர்வுகின், சபுரோவ், செபிலோவ் ஓரோகிலோவ் ஆகியோர் கடுமையான கண்டனத்துக்குள்ளாயினர். செஞ்சதுக்கத்தில் வைக்கப்பட்டிருந்த ஸ்டாலினின் உடல் அகற்றப்பட்டது. அவருடைய பெயரில் விளங்கிய ஸ்டாலின் கிரேடு நகர் வால்காகிரேடு எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. கட்சியில் புதிய திட்டங்களை வெளியிட்ட அவர் 1970-ஆம் ஆண்டில் சோவியத் ரஷ்யா அமெரிக்காவைவிட அதிகஅளவு உற்பத்தி செய்ய வேண்டும் என்றும், அடுத்த பத்தாண்டுகளில் உண்மையான பொதுவுடைமைச் சமுதாயத்தை அமைத்திடவேண்டும் எனவும் அதன்படி, உற்பத்தித்துறைகள் அனைத்தையும் சமுதாய உடைமையாக்கி, அனைவருக்கும் அனைத்துமே உரியது என்ற நிலையை நிலைநாட்டவேண்டும் எனவும் கூறினார். ரஷ்ய நாட்டை அறிவியல்தொழில்துறை வளர்ச்சியைப் பயன்படுத்தி, அதிக அளவில் உற்பத்தியைப் பெருக்கி, ஒரு சிறந்த நாடாக ஆக்கவேண்டும் எனவும், 'மக்கள் சக்திக்கேற்ற உழைப்பு', 'தேவைக்கேற்ற ஊதியம்' போன்ற கொள்கைகளை அடைந்திடச் செய்தல் வேண்டும் எனவும் திட்டம் தீட்டினார். மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும், நகர்புறத்திற்கும், நாட்டுப்புறத்திற்கும் இடையே நிலவிய வேறுபாடுகள் களையப்படவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சிந்தனையாளர் களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் சமுதாயத்தில் தனிச்சிறப்பு இல்லை. உடல் உழைப்பாளர்களும் அறிவு உழைப்பாளர்களும் சமுதாயத்தில் சம இடத்தையே பெற்றனர். மக்களிடையே சகோதரன், நண்பன், தோழன் என்ற எண்ணங்கொண்டு ஒருவருக் கொருவர் பழகும்படியான சூழ்நிலை உருவாக்கப்பட்டது. இக்காலத்தில் பொருளாதாரம் சிறப்புற்று வளர்ந்தோங்கியது. குருச்சேவ் கனரகத் தொழில் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டார். குருசேவ் காலத்தில் ஏழாண்டுத்திட்டம் துவக்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தைச் செயல்படுத்த சோவியத் ஒன்றியம் 1961-இல் ஏழு பொருளாதார வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டது. 'தேசியத்திட்டக்குழு' மாற்றப்பட்டு, 'தேசிய பொருளாதார சபை' என்ற ஒன்று உருவாக்கப்பட்டது. நாட்டின் பல பகுதிகளிலும், தொழில் - விவசாய வேலைகளைக் கவனிக்க பல கட்சிக் குழுக்கள் அமைக்கப்பட்டன. தொழிற்சாலை இயக்குனர்களும், தொழிலாளர்களும் உற்பத்தித் திட்டத்தில் முழு அளவில் பங்கு பெற்றனர். அதற்கேற்ற வசதிகளைச் செய்து கொடுத்தனர். தொழில்துறை நிர்வாகத்தைச் சீராக்க 1962-இல் 'தேசியப் பொருளாதாரத் தலைமைச்சபை' ஒன்று அமைக்கப்பட்டது.

குருச்சேவ் காலத்தில் ரஷ்யாவின் உற்பத்தி அதிகரித்தது. 1953-இல் அமெரிக்காவின் உற்பத்தியில் 33 சதவீதமே பெற்றிருந்த ரஷ்யா, குருச்சேவ் தலைமையேற்றபின் 65 சதவீதமாக உயர்ந்தது. இக்காலத்தில் நாட்டின் தேசிய வருமானமும் 2.3 மடங்கு அதிகமாயிற்று. தனி நபரின் உற்பத்தித்திறனும் 93 சதவீதம் கூடுதலாயிற்று.

ஏழாண்டுத் திட்டம் நிறைவு பெற்றதன் விளைவாக 1958-ஆம் ஆண்டின் தொழில் உற்பத்தியைவிட 1965-ஆம் ஆண்டின் உற்பத்தி 80 சதவீதமாயிற்று. மின்சார உற்பத்தி முன்பிருந்ததைவிட இரண்டு மடங்கு அதிகமாயிற்று. அணுமின் நிலையங்கள் பல அமைக்கப்பட்டன. விவசாய உற்பத்தி 70 சதவீதம் அதிகரித்தது. தொழில்துறையைச் சார்ந்தோர், அலுவலக ஊழியர், கூட்டுப்பண்ணை விவசாயிகள் ஆகியோர் 40 சதவீதம் கூடுதல் வருமானம் பெற்றனர். ஆனால், அக்காலத்தில் மக்கள் செலுத்தும் வரி மிகவும் குறைக்கப்பட்டது. மக்களுக்குக் கொடுக்கும் ஓய்வூதியத்தொகை அதிகரிக்கப்பட்டது. நகர்ப்புறங்களில் 17 மில்லியன் வீடுகளும், நாட்டுப்புறங்களில் 7 மில்லியன் வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டன.

விவசாய வளர்ச்சிக்கென 1960-ஆம் ஆண்டு அரசு கூட்டுப் பண்ணைகளில் 2.5 லட்சம் இயந்திரக் கலப்பைகளும், 66,000 லாரிகளும், 55,000 அறுவடை இயந்திரங்களும் பயன்படுத்தப்பட்டன. பண்ணைப் பொருள்களுக்குரிய விலையை அரசே நிர்ணயித்தது. பண்ணைகளுக்குத் தேவையான இயந்திரங்கள், கலப்பைகள், எரிப்பொருள்கள், உரங்கள் ஆகியவற்றின் விலையை அரசே நிர்ணயித்தது. 1958-இல் எட்டு ஆண்டுக்கால கட்டாயக் கல்வித்திட்டம் புகுத்தப்பட்டது.

அறிவியல் துறையிலும் ரஷ்யா முன்னேறிய நாடாகத் திகழ்ந்தது. முதன்முதலாக 1957-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் விண்வெளிக்கு ஸ்புட்னிக் என்னும் செயற்கைச் சந்திரன் அனுப்பப்பட்டது. அதேபோன்று 1961-ஆம் ஆண்டு ஏப்ரல் 12-இன் யூரிகாரின் எனும் ரஷ்யர் தான் விண்வெளியில் உலகை வலம் வந்த முதல் மனிதராவார். 1963-ஆம் ஆண்டு ஜூலை 16ஆம் நாள் வாலண்டினா தெரஸ்கோவா என்பவர் விண்வெளிக்குச் சென்று திரும்பிய முதல் ரஷ்யப் பெண்மணியாவார். இது போன்ற முயற்சியில் அமெரிக்காவும் ஈடுபட்டுள்ளது என்றாலும், ரஷ்யாவின் ஆராய்ச்சியே முதலிடம் வகிக்கின்றது என்பதை அனைத்து நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன.

பயிற்சி வினா

குருச்சேவ் காலத்தில் ரஷ்யாவில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சியை விளக்குக.

பாடம் – 29 குருச்சேவின் வெளிநாட்டுக் கொள்கை

லெனினின் கொள்கை வழியிலான கூட்டுத் தலைமை நாட்டில் நிலைநாட்டப் பட்டபின் அயல்நாடுகளுடன் சிறப்பாக அண்டை நாடுகளுடனான உறவுகள் வலுவடைய வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. துருக்கி, ஈரான், ஆப்கானிஸ்தானம் ஆகிய நாடுகளுடன் நட்புறவு ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்பட்டன. ஆப்கானிஸ்தானின் தொழில் துறை வளர்ச்சிக்குத் தேவையான கடனுதவியும், தொழில் நுணுக்க உதவியும் அளிக்கப்பட்டன. 1953-இல் இந்தியாவும், ரஷ்யாவும் முதலாவது நீண்டகால வணிக ஒப்பந்தமொன்றில் கையெழுத்திட்டன. 1955-இல் குருச்சேவும், பிரதமர் புல்கானினும் இந்தியா, பர்மா, ஆப்கானிஸ்தானம் ஆகிய நாடுகளில் அரசு முறையிலான நட்புறவுப் பயணத்தை மேற்கொண்டனர். கொரியாவிலும், இந்தோ - சீனாவிலும் முடிவிலாது நீண்டு கொண்டிருந்த கடும்போரை நிறுத்த வேண்டி ரஷ்யா, இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா ஆகிய வல்லரசுகளின் வெளிநாட்டமைச்சர்கள் மாநாடு 1954-ஆம் ஆண்டு ஜனவரி - பிப்ரவரியில் பெர்லின் நகரில் நடைபெற்றது. அம்மாநாட்டில் செஞ்சீனாவையும் சேர்த்துக்கொண்டு ஐந்து வல்லரசுகளின் மாநாடு ஒன்றைக் கூட்டவேண்டுமென்று சோவியத் ரஷ்யா முன்வைத்த ஆலோசனையை, இந்தோ - சீனப்போரில் பெரும் தோல்வியைச் சந்தித்திருந்த பிரான்சும் ஆதரிக்கவே மற்றநாடுகளும் அதனை ஏற்றன. 1954-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26-ஆம் நாள் ஐந்து வல்லரசுகளின் வெளி விவகார அமைச்சர்கள் மாநாடு ஜெனீவா நகரில் கூடி கொரியா, இந்தோசீனா சிக்கல்களை ஆராய்ந்தது. அம்மாநாட்டில் பங்குகொண்ட மற்ற நாடுகளின் பிரதிநிதிகளில், இந்தியப் பிரதிநிதியாகக் கலந்துகொண்ட வி.கே. கிருஷ்ணமேனன் மாநாட்டின் வெற்றிக்கு அரும்பாடுபட்டார். இந்தோ - சீனப்போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும் ஒப்பந்தமொன்று ஜூலை 21ஆம் நாள் கையெழுத்தாயிற்று.

1954-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23-ஆம் நாள் இங்கிலாந்து, பிரான்சு, இத்தாலி, பெல்ஜியம், ஹாலந்து, லக்சம்பர்க் ஆகிய நாடுகளோடு மேற்கு ஜெர்மனியையும் இணைத்து 'மேற்கு ஐரோப்பிய பாதுகாப்பு ஒப்பந்தம்' ஒன்று 'பாரிசு ஒப்பந்தம்' என்ற பெயரில் உருவாக்கப்பட்டது. சோவியத் நாட்டின் சமாதானக் கண்ணோட்டத்தின் விளைவாக 1955-ஆம் ஆண்டு மே 15-ஆம் நாள் ரஷ்ய, அமெரிக்க, ஆங்கில, பிரெஞ்சுப் பேராளர்கள் வியன்னாவில் கூடிப் போரின் போது நட்பு நாடுகள் கைப்பற்றியிருந்த ஆஸ்திரியப் பகுதிகளை அந்நாட்டிமே திரும்ப அளித்து அதன் ஆட்சியுரிமையை அங்கீகரிக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். 1955-ஆம் ஆண்டு மே மாதம் வட அட்லாண்டிக் இராணுவ கூட்டில் மேற்கு ஜெர்மனி முழு உறுப்பு நாடாக இணைந்ததைத் தொடர்ந்து நிலைமை நெருக்கடிக்குள்ளாயிற்று.

1955-ஆம் ஆண்டு ஜூலை 18-ஆம் நாள் ரஷ்ய, அமெரிக்க, ஆங்கில, பிரெஞ்சு நாடுகளின் ஆட்சித் தலைவர்கள் ஜெனீவாவில் உலக நாடுகளின் மாளிகையில் கூடி ஜெர்மன் சிக்கல், ஐரோப்பிய பாதுகாப்புச் சிக்கல், ஆயுதக் குறைப்பு போன்ற சிக்கல்களை ஆராய்ந்தனர். வட அட்லாண்டிக் இராணுவக் கூட்டணி நாடுகளும், வார்சா ஒப்பந்த

நாடுகளும் ஒன்றை எதிர்த்து ஒன்று படைப்பலத்தைப் பயன்படுத்துவதில்லை என்ற கோட்பாட்டினை ஏற்றுக் கொள்ளலாமென ரஷ்யா கூறியது நாடுகளிடையேயான படைவீரர்களின் எண்ணிக்கையைக் கணிசமாகக் குறைத்திடவும், அணு ஆயுதங்களை அழித்திடவும் அந்நாடு வலியுறுத்தியது. ஜெனீவா உச்சி மாநாடு உயரிய திட்ட மெதனையும், உலக நல்வாழ்வுக்கென உருவாக்கிடாவிடினும் உலகநாடுகளுக் கிடையேயான உறவுநிலையில் சில நல்ல மாற்றங்கள் ஏற்படத் துணை செய்தது.

உச்சி மாநாடு (Summit Conference)

வல்லரசு நாடுகளிடையேயான நல்லுறவினை மேலும் வளர்க்கும் பொருட்டு 1960-ஆம் ஆண்டு மே மாதம் நான்கு வல்லரசுத் தலைவர்களின் உச்சிமாநாடு நடைபெற அனைத்து ஏற்பாடுகளும் செய்து முடிக்கப்பட்டன. மாநாடு கூடவிருந்த சில நாட்களுக்கு முன், ரஷ்யா மே விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கும்போது, அமெரிக்க இராணுவ உளவு விமானமொன்று பாகிஸ்தானின் பெஷாவர் விமானத்தளத்திலிருந்து புறப்பட்டு ரஷ்ய மண்ணின்மீது பறக்கலாயிற்று. ரஷ்யா தனது வலிமைமிக்க ஏவுகணைகளைப் பயன்படுத்தி அவ்விமானத்தை வீழ்த்தியதோடு அதனை இயக்கிய கேரிபவர்ஸ் என்ற விமானியையும் சிறை செய்தது. அமெரிக்காவின் இத்தகைய ஆக்கிர மிப்புச் செயல்கள் நிறுத்தப்படவேண்டுமென குருச்சேவ் வேண்டுகோள் விடுத்தபோது, அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஐசன்ஹோவர் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். அதன் விளைவாகப் பாரிசில் கூடிய வல்லரசுத் தலைவர்களின் உச்சிமாநாடு எதனையும் விவாதிக்கக்கூட இயலாத நிலையில் கூடிக் கலைந்தது. தனது பாதுகாப்பை மேலும் உறுதி செய்து கொள்ள விரும்பிய ரஷ்யா, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுடன் 1964 ஜூன் 12-ஆம் நாள் 'நட்புதவி - கூட்டுறவு ஒப்பந்தம்' ஒன்றினைச் செய்துகொண்டது.

ஹங்கேரிப் புரட்சி

1956-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இம்ரே நாகி (Imre Nagy)யின் தலைமையில் செயல்பட்ட ஹங்கேரியப் பொதுவுடைமைப் புரட்சியாளர்கள் கலகக்கிளர்ச்சியைத் துவக்கினர். ஜானோஸ் காதரின் (Janos Kadar) தலைமையில் அமைந்த ஹங்கேரிய அரசு சோவியத் ரஷ்யாவின் முழு ஆதரவினையும், உதவியையும் பெற்று அக்கலகத்தை இரும்புக்கரம் கொண்டு நசுக்கியது. அதே காலத்தில்தான் சூயஸ்கால்வாய் சிக்கல் காரணமாக ஆங்கிலப் - பிரெஞ்சுப் படைகள் எகிப்தின்மீது முழு அளவிலான தாக்குதலைத் தொடுத்தன. இருபெரும் வல்லரசுகளின் படைகளோடு இஸ்ரேலியப்படையினரும் இணைந்து போரிட்டபோதும் எகிப்து மேலைநாடுகளின் அச்சுறுத்தலுக்கு அடிபணிய மறுத்தது. எகிப்துக்கு ஆதரவாக குருச்சேவ் விடுத்த இறுதி எச்சரிக்கையும், நடுநிலை நாடுகளின் எகிப்து ஆதரவுக் கொள்கையும் அப்போரை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தன. மேலை நாடுகளின் ஆக்கிரமிப்புக்கொள்கை முற்றிலும் முறியடிக்கப்பட்டது.

1956ல் நடைபெற்ற 20-வது கட்சி மாநாட்டிற்குப்பின் ரஷ்யாவுக்கும் செஞ்சீனாவுக்கு மிடையே கருத்து வேறுபாடுகள் முளைத்தன. பொதுவுடமை நாடுகளிடையே

தலைமைப்பீடம் ரஷ்யாவிடம் நீடித்திருப்பதை செஞ்சீனா விரும்பவில்லை. ஏகாதிபத்திய, முதலாளித்துவ நாடுகளோடு போர் தவிர்க்க முடியாதது என்பது மா-சே-துங்கின் உறுதியான கொள்கை. மனித சமுதாயத்தின் நல்வாழ்வை மையமாகக் கொண்ட போரில்லா, சமாதான, சகவாழ்வுக்கொள்கை சாத்தியமானதே என்பது குருச்சேவின் கொள்கையாயிற்று. இக்கொள்கை வேறுபாடுகளோடு இரு நாடுகளுக்குமிடையே எழுந்த எல்லைச் சிக்கலும் வலுக்கவே, அவற்றிற்கிடையே நிலவிய நட்புறவில் பிளவு ஏற்பட்டது. 1960ல் அமெரிக்கக் குடியரசுத் தலைவராக ஜான்கென்னடி தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து உலகநாடுகளின் உறவு நிலையில் மேலும் பல மாற்றங்கள் நிகழ்ந்தன.

கியூபா

அமெரிக்காவின் அண்டை நாடான கியூபாவில் தளபதி ஃபிடல் காஸ்ட்ரோவின் தலைமையில் ஒரு புரட்சி அரசு ஆட்சியை கைப்பற்றியபோது, அதனை அமெரிக்காவின் ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாக்க விரும்பிய ரஷ்யா அந்நாட்டிற்குப் படைக்கருவிகளை அளிக்க முன்வந்தது. கியூபாவில் ஏவுகணைத் தளங்களமைக்கும் பணியும் தொடங்கியது. உடனே கென்னடி கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளலானார். ஏவுகணை தளங்கள் அமைக்கும் வேலை தொடர்ந்து நடைபெற அனுமதிக்கப்படமாட்டாதென்றும் கியூபாவிற்கு வரும் வெளிநாட்டுக் கப்பல்கள் அனைத்தும் அமெரிக்கக் கடற்படையின் சோதனைக்கு உட்பட வேண்டுமெனவும், போர்ச்சாதனங்களற்ற பொருட்கள் மட்டுமே கியூபா நோக்கி பயணப்பட அனுமதிக்கப்படுமென்றும், கியூபாவிற்கு படையுதவியளிக்கும் திட்டத்தை ரஷ்யா கைவிடும்வரை முற்றுகை நிலை நீடிக்கும் என்றும் கென்னடி அறிவித்தார். அவ்வறிவிப்பு கண்டு தனது நாடு அஞ்சாது என்றும், எது நேரினும் கியூபாவிற்குத் தேவையான பாதுகாப்புச் சாதனங்கள் தொடர்ந்து அனுப்பப்படுமென்றும், எந்நிலையையும் எதிர் நோக்கும் நிலையில் தங்கள் நாடு இருப்பதாகவும் குருச்சேவ் அறிவித்தார்.

இந்திய – சீன எல்லைப்போர்

உலகின் இருபெரும் வல்லரசுகளுக்கிடையே பெரும்போர் மூளப்போவது உறுதி எனக் கணித்த சீனத்தலைவர் மா-சே-துங் 1962-ஆம் ஆண்டு அக்டோபர் 20-ஆம் நாள் இந்தியாவின் மீது செஞ்சீனப் படைகளை அனுப்பினார். மக்மோகன் எல்லைக் கோட்டுப்பகுதியிலும், லடாக் பகுதியிலும் கடும்போர் மூண்டது. போர் ஆயத்த நிலையில்லாத பாரதம் எதிர்பாராத தாக்குதல் கண்டு திடுக்கிட்டது. உலகின் இருபெரும் வல்லரசுகள் கியூபா பகுதியிலும், மக்கள் தொகையை மிக அதிகமாகக் கொண்ட உலகின் மிகப்பெரிய இருநாடுகள் இமாலயப் பகுதியிலும் போரைத் தொடங்கி தொடர்ந்து நடத்தினால் அது உலகின் அழிவுக்கே வழிவகுக்கும் எனக் கருதிய குருச்சேவ், கியூபாவில் அமைந்திருந்த ரஷ்ய ஏவுகணைத்தளங்களை எவ்வித நிபந்தனையுமின்றி அகற்றி விடுவதாய் அறிவித்தார். கென்னடியும் தனது கியூபா முற்றுகையை விலக்கிக்கொண்டார். இதனால் செஞ்சீனாவும் தனது இந்தியப் படையெடுப்பைக் கைவிடவேண்டியதாயிற்று.

பொருளாதார உதவி

வளர்ந்துவரும் நாடுகளுக்கு பொருளாதார உதவியளிக்க மேலைநாடுகள் அரசியல், இராணுவ நிபந்தனைகளுடன், 4 முதல் 7 சதவீத வட்டியும் திரட்டின. ஆனால், ரஷ்யா 2.5 சதவீத வட்டியுடனும், வட்டியின்றியும் நீண்ட காலக்கடன் அளிக்கமுன்வந்தது. அதன்படி, 1954-ஆம் ஆண்டிலிருந்து இந்தியா, எகிப்து, இந்தோனேசியா, அல்ஜீரியா, ஈராக், கியூபா, கானா, கினியா, மாலி, ஆப்கானிஸ்தானம் போன்ற நாடுகளுக்கு பெருமளவிலான பொருளாதார தொழில் நுணுக்க உதவிகளையளித்தது. இந்தியத் தொழில் வளர்ச்சிக்கு அடிப்படைத்தேவையை நிறைவேற்றிடும் வகையில் பிலாய் இரும்புத் தொழிற்சாலை, பொகாரோ இரும்புத் தொழிற்சாலை ஆகியவற்றை அமைத்துக்கொடுத்தது ரஷ்யா. இதுபோலவே ஏனைய ஆசிய, ஆப்பிரிக்க இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஐநூறுக்கும் மேற்பட்ட வேறுபட்ட திட்டங்களை நிறைவேற்றிக் கொடுத்து 'ஏழைநாடுகளின் உண்மையான நண்பன் ரஷ்யா' என்ற நற்பெயரைத் தட்டிக்கொண்டது.

ஆயுதக் குறைப்பு

வல்லரசு நாடுகளின் படை வலிமையைக் குறைத்திடவும் ஆயுத அழிப்பு வழிகளைக் கண்டறிந்து கண்காணிக்கவும், நடைமுறை சாத்தியமான வழிகளை 1955-இல் நடைபெற்ற ஜெனீவா உச்சிமாநாட்டின் போதே ரஷ்யா முன்வைத்தது. உலகின் இராணுவ மண்டல கூட்டமைப்புகளைக் கலைத்திடவும் விரும்பியது. 1959 செப்டம்பர் 18-இல் 'முழு அளவிலான படைபலக் குறைப்புத் திட்டம்' ஒன்றினை ஐக்கிய நாடுகளின் சபையில் ரஷ்யா கொணர்ந்தது. அத்திட்டத்தினை அனைத்து நாடுகளும் ஏற்றுக்கொண்டன. 1960 ஜூன் 2-இல் ரஷ்யா கொண்டு வந்த மற்றொரு தீர்மானம் உலகின் அமைதி நிலையைக் கண்காணிக்கவென ஐக்கிய நாடுகள் சபை பாதுகாப்பு சபையின் கீழ் பணியாற்ற வல்லதான உலக நாடுகளின் படை ஒன்றை உருவாக்கவும் வழிவகுத்தது. 1961-ஆம் ஆண்டு ஜூலையில் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் கென்னடியும், சோவியத் பிரதமர் குருச்சேவும் வியன்னாவில் சந்தித்து, விவாதித்தபோதும் தனது ஆயுத அழிப்புக் கொள்கையில் ரஷ்யா உறுதியாக நின்றது. 1962-இல் ஐக்கியநாடுகள் சபை நிறுவிய பதினெட்டு நாடுகளின் படைபலக் குறைப்புக்குழு; பலமுறை ஜெனீவாவில் கூடி விவாதித்தும் விடையெதனையும் காணவியலாது போயிற்று. ஆயினும் ரஷ்யா, அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய மூன்று நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களான ஆண்ட்ரி குரோமிகோ, டீன்ரஸ்க், ஹோம் பிரபு ஆகியோர் 1963-ஆம் ஆண்டு ஆகஸ்டு 5-ஆம் நாள் நீரிலும், நிலத்திலும், விண்வெளியிலும் அணு ஆயுதங்களின் அழிவுச்சக்தியை அளந்திடும் சோதனைகளைத் தடுக்கும் 'மாஸ்கோ அணு ஆயுதச்சோதனைத் தடை ஒப்பந்தம்' ஒன்றில் கையொப்பமிட்டனர். 1964-ஆம் ஆண்டு பிப்ரவரிக்குள்ளாக 105 நாடுகள் அதே ஒப்பந்தத்தை ஏற்றுக் கையெழுத்திட்டன. இவையனைத்தும் உலக அமைதியெனும் உன்னத பணிக்கு ரஷ்யா தன்னை ஆட்படுத்திக் கொண்டுள்ள உயர்நிலையைத் தெள்ளிதின் விளக்குவனவாகும். நிலத்திற்கடியில் அணுசோதனை செய்வதைப்பற்றி இம்மாநாடு எதுவும் கூறவில்லை.

நடுநிலைக் கொள்கை

உலக நாடுகளின் உறவு நிலையில் குருச்சேவின் காலம் மற்றுமொரு திருப்பத்தைச் சந்தித்தது. அமெரிக்கத் தலைமையில் அமைந்த முதலாளித்துவ முகாம் நாடுகளுக்கும், சோவியத் ரஷ்யாவின் தலைமையிலான சோசலிய முகாம் நாடுகளுக்குமிடையே 'கெடுபிடிப் போர்' நடந்து கொண்டிருந்தபோது தான் நாடுகளிடையே நல்லுறவினை வளர்க்கும் நற்பணியை மேற்கொள்ளவும், மூன்றாம் உலகப்போர் ஏற்படாது தடுத்திடவும், போர்ச்சூழலில் சிக்காது நாட்டு வளர்ச்சியில் மட்டுமே நாட்டம் கொள்ளவும், இந்தியப் பிரதமர் நேரு உருவாக்கிய 'நடுநிலைக்கொள்கை' நற்பேற்றின் பயனாக உலகிற்குக் கிடைத்தது. இந்தியா, இலங்கை, இந்தோனேசியா, எகிப்து, யூகோஸ்லோவேகியா போன்ற பல நாடுகள் நடுநிலைக்கொள்கையினை ஏற்று அமைதியான வாழ்வுமுறையை அமைத்துக்கொள்ள முயன்றன. இக்கொள்கையை மேலைநாடுகள் எள்ளி நகையாடிய போதுதான் ரஷ்யப் பிரதமர் குருச்சேவ் நடுநிலைக்கொள்கை நல்லதொரு கொள்கையென அறிவித்ததோடு அந்நாடுகளின் ஆக்கப்பூர்வமான வளர்ச்சிக்கு அனைத்து உதவிகளும் அளித்திட முன்வந்தார். உலக வல்லரசுகளில் நடுநிலைக் கொள்கையை ஓர் உன்னத அரசியல் கொள்கையாக ஏற்றுக்கொண்ட ஒரேயொருநாடு ரஷ்யா என்பது நினைவிற் கொள்ளத்தக்கது. குருச்சேவ் ஒரு மக்கள் தலைவர் மனித சமுதாயத்தின் மாண்புமிகு தலைவர் என்பதை அவரது ஒவ்வொரு செயலும் நிரூபித்தது.

உலக அமைதிப்பணியில் உலகெல்லாம் போற்றிடும் வண்ணம் பணியாற்றிய பெருமை பெற்ற குருச்சேவ் தன் உடல் நலனைக் கருதி 1964-ஆம் ஆண்டு அக்டோபர் 16-ஆம் நாள் பிரதம மந்திரி பொறுப்பிலிருந்து கோசிஜின், பிரஷ்னேவ் போன்ற கட்சித் தலைவர்களால் பதவி நீக்கப்பட்டார்.

பயிற்சி வினா

குருச்சேவின் வெளிநாட்டுக் கொள்கையை குறித்து ஒரு கட்டுரை வரைக.

பாடம் – 30 குருச்சேவிற்குப்பின் ரஷ்யா

குருச்சேவ் 1964-ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் நாள் பிரதமர், பொதுச் செயலாளர் ஆகிய பொறுப்புகளிலிருந்து பதவி நீக்கப்பட்டு, லியோனித் பிரஷ்னேவ் கட்சியின் பொதுச் செயலாளராகவும், அலெக்ஸி கோசிஜின் ரஷ்யப் பிரதமராகவும் பொறுப்பேற்றனர். உள்நாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்கு ஏழாண்டுத் திட்டம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. வெளிநாட்டுக் கொள்கையில் குறிப்பாக ஆசியாவில் தன்னுடைய நட்பு நிலையை வலுப்படுத்திக்கொள்ள ஆசிய நாடுகளுக்கு, பொருளாதார உதவிகள் செய்து வருகின்றது. ஆசியாவில் இந்தியாவுடன் இருந்த நட்புறவினை உறுதிப்படுத்தும் வகையில் பல வேளைகளில் இந்தியாவிற்கு துணைபுரிந்துள்ளது.

1965-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பாகிஸ்தான், காஷ்மீர் பிரச்சனை குறித்து இந்தியாவைத் தாக்கியது. அப்போதைய இந்தியப் ட தமராக இருந்த லால்பகதூர்சாஸ்திரி இப்போரில் பாகிஸ்தானியரைத் தோற்கடித்தபோதும், ஆசியாவில் அமைதினை நிலைநாட்டும் வண்ணம் அமைதி உடன்பாடு செய்ய ரஷ்யப் பிரதமர் கோசிஜின் அழைப்புவிடுத்தபோதும் இந்தியா இசைவு தந்தது. அதன்படி தாஸ்கண்ட் என்னுமிடத்தில் நடைபெற்ற அமைதி மாநாட்டில் பாரதப்பிரதமர் லால்பகதூர்சாஸ்திரியும் பாகிஸ்தான் அதிபர் அயூப்கானும் பங்கேற்று டாஷ்கண்ட் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டு போரை நிறுத்திக் கொண்டனர். இவ்வொப்பந்தப்படி இந்தியா போரில், தான் பெற்ற இடங்களை பாகிஸ்தானுக்கே திருப்பிக் கொடுத்து விட்டது.

இந்தியாவுடன் உள்ள உறவை நெருக்கமாக ஆக்கிக் கொள்ள ரஷ்யாவும் இந்தியாவும் 1971-ஆம் ஆண்டில் "இருபது ஆண்டு கால அமைதி நட்புறவு ஒப்பந்தம்" ஒன்றைச் செய்து கொண்டது. அதன்படி இரு நாடுகளில் ஏதேனும் ஒரு நாடு தாக்கப்படுமானால் இரு நாடுகளும் இணைந்து நடவடிக்கைகளை ஆராய்ந்து செயல்பட வேண்டும். இவ்வுடன்படிக்கைக்குப் பின்னர் மேற்கு பாகிஸ்தானியர் கிழக்கு பாகிஸ்தானியர் மீது இனப் படுகொலை செய்த போது, முஜிபூர்ரகுமான் தலைமையில் விடுதலைப்போர் ஒன்றைத் தொடுத்தனர். பாகிஸ்தான் படைத் தாக்குதலுக்கு அஞ்சிய வங்கதேச மக்கள் இந்தியாவினுள் அகதிகளாக நுழைந்தனர். இவ்வகதிகளுக்கு வாழ்வளிக்கவும் மக்களின் விடுதலைப் போருக்கு ஆதரவளிக்கவும் விரும்பிய இந்தியா, பாகிஸ்தானின் படைக்கு எதிராக வங்கதேசத்தினுள் தம் படையினை அனுப்பியது. அமெரிக்கா பாகிஸ்தானுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் தனது கடற்படையில் 7வது பிரிவினை வங்கக்கடல் பகுதிக்கு அனுப்பியது. இதனை எதிர்க்கும் வண்ணம் ரஷ்யாவும் தன்னுடைய கப்பல் படைப்பிரிவை இந்தியாவிற்கு ஆதரவாக வங்கக் கடலுக்கு அனுப்பவே அமெரிக்கா தம் படைகளை வாபஸ் பெற்றது. வங்கதேசமும் விடுதலை பெற்றது.

அமெரிக்கா நாட்டுடனும் நட்புறவையே வளர்க்க விரும்பிய பிரஸ்னேவ் 1973-இல், அமெரிக்கப் பயணம் மேற்கொண்டார். அதேபோன்று 1973 நவம்பரில் இந்தியாவிற்கும் பயணம் மேற்கொண்டு இந்திய விவசாய, தொழில் வளர்ச்சிக்கு பல ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. இப்பயணத்தின் போதுதான் பிரஷ்னேவ் "ஆசியக் கூட்டுப் பாதுகாப்புத் திட்டம்" என்ற ஒன்றினை வெளியிட்டார்.

1980-ஆம் ஆண்டு ரஷ்யா ஆப்கானிஸ்தானத்தில் உள்நாட்டுக் கலவரத்தை அடக்கி, அமைதி நிலைநாட்டவேண்டும் என்ற காரணம் காட்டி தன்னுடைய படைகளை நிறுத்தியது. இந்தியா உள்ளிட்ட பல நாடுகள், ரஷ்யா படைகளை திரும்ப பெறவேண்டும் என்று வேண்டுகோள்விடுத்தும் இன்னும் ரஷ்யா திருப்பிப் பெறவில்லை.

சோவியத் – இந்திய பொருளாதார உறவுகளில் புதிய நடவடிக்கைகள்

சோவியத் - இந்திய மக்களுக்கிடையே நெடுங்காலமாகவே நட்புறவுகள் நிலவி வருகின்றன. இந்த உறவுகள், பரஸ்பர மரியாதை, பிரதேச ஒருமைப்பாடு, அரசுரிமை, ஒருவருடைய உள் விவகாரத்தில் மற்றவர் தலையிடாமை, சமத்துவம் மற்றும் பரஸ்பர ஆதாயம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டவை. இரு நாட்டு மக்கள் மற்றும் அரசுகளின் ஜீவாதார நலன்களை அவை பிரதிபலிப்பதுடன், அமைதி மற்றும் பாதுகாப்புக்கான போராட்டம், எல்லாவிதமான காலனியாதிக்க முறைகள் மற்றும் ஆக்கிரமிப்புக்கெதிரான கொள்கையில் ஒருமித்த கருத்துக்கள் இருப்பின் வெவ்வேறு சமுதாய அமைப்புகள் கொண்ட நாடுகளிடையே நெருக்கமான பன்முக உறவுகள் நிலவ முடியும் என்பதையும் அவை தெளிவாகக் காட்டுகின்றன. இந்த உறவுகளில் வர்த்தக, பொருளாதார, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப உறவுகள் ஒரு அம்சமாகும்.

இந்திய மக்களின் வெற்றிகளை வரவேற்கும் சோவியத் யூனியன் இரு நாடுகளுக்கிடையே சமமான, பரஸ்பரம் ஆதாயமுள்ள ஒத்துழைப்பை வளர்ப்பதற்குத் தன்னாலியன்ற அனைத்தையும் செய்கின்றது.

பொருளாதார, விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்ப ஒத்துழைப்புக்கான முதலாவது சோவியத் இந்திய - உடன்படிக்கை, 1955-ஆம் ஆண்டில் கையெழுத்தாகியது. அதுமுதல் இந்த ஒத்துழைப்பு வெற்றிகரமாக வளர்ந்து வருகின்றது. ஏராளமான பல பெரும் இரும்பு மற்றும் இரும்பில்லாத் உலோகவியல், கனரக இன்ஜினியரிங், எண்ணெய், நிலக்கரி, மருத்துவத்தொழில், எண்ணெய்ச்சுத்திகரிப்பு, மின்சக்தி இன்ஜினியரிங் மற்றும் பிற திட்டங்கள், சோவியத் ஒத்துழைப்புடன் கட்டப்பட்டுள்ளன. தேசிய நிபுணர்களைப் பயிற்றுவிப்பதிலும், இந்த ஒத்துழைப்பு பெரும் பணியாற்றியுள்ளது. இந்தியாவுக்கு வெளியே மிகவும் பிரபலமான பிலாய் மற்றும் பொகாரோ உருக்காலைகள் ஒவ்வொன்றும் ஆண்டொன்றுக்கு 40 லட்சம் டன் உற்பத்தியை செய்கின்றன. கோர்பாவில் ஒரு அலுமினிய ஆலையும், மதுராவில் உள்ள எண்ணெய்ச் சுத்திகரிப்பாலையும் ரஷ்ய உதவியுடன் தொடங்கப்பட்டன. விசாகபட்டினத்தில் ஒரு உலோகவியல் ஆலை கட்டப்பட்டது.

ரஷ்ய - இந்திய வர்த்தகம் அதன் அளவில் சீராக வளர்ந்து வருகின்றது. ரஷ்யாவுக்கு இந்தியா ஏற்றுமதி செய்யும் பொருட்களில் மரபான பொருட்களுடன், ஆலையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் பங்கும் அதிகரித்து வருகின்றது. ரஷ்ய ஒத்துழைப்புடன் கட்டப்பட்ட ராஞ்சி மற்றும் துர்காபூர் ஆலைகள், உலோகவியல், சுரங்கம், கனரக இயந்திரங்கள் மற்றும் ரஷ்ய தொழில் நுட்ப தஸ்தாவேஜுகளின் அடிப்படையில் வேறு

பல சாதனங்களையும் உற்பத்தி செய்கின்றன. இப்பொருட்கள் மூன்றாம் உலக நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

ரஷ்ய இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான இயந்திரங்கள், தளவாடங்கள், இன்ஜினியரிங் ஆலைகளுக்குத் தேவையான மொத்த சாதனங்கள், உரம், எண்ணெய் மற்றும் எண்ணெய்ப் பொருட்கள், பத்திரிக்கைக் காகிதம் மற்றும் இதர பொருட்களை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்கின்றது.

1975-ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது சோவியத் - இந்திய வர்த்தகம் 1980-ம் ஆண்டில் இரு மடங்கு அதிகரித்தது. சோவியத் - இந்திய தலைவர்களிடையே தனிப்பட்ட சந்திப்புகளும் தொடர்புகளும் இரு நாடுகளுக்கிடையேயுள்ள பன்முக உறவுகளைப் பெரிதும் வளர்க்கின்றன.

பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான ஒரு உடன்படிக்கை 1981-1982ம் ஆண்டுக்கான ஒரு வர்த்தக ஒப்பந்தம், கலாச்சாரத் துறையில் பரிமாற்றங்களுக்கான ஒரு திட்டம், 1981-1982-ம் ஆண்டுக்கான விஞ்ஞானம், கல்வி மற்றும் திரைபடத்துறையில் ஒத்துழைப்புக்கான ஒரு உடன்படிக்கை ஆகியவை இதில் அடங்கும்.

ரஷ்ய இந்தியா ஒத்துழைப்பில் மேலும் ஒரு முக்கிய நிகழ்ச்சி மூலம் இரு நாடுகளுக்குமிடையில் ட்ரோப்போ ஸ்கேட்டர் தகவல் தொடர்பு இணைப்பு ஏற்பட்டுள்ளது. அதன் துவக்க நிகழ்ச்சியாக, லியனித் பிரஸ்னேவும், இந்திராகாந்தியும் நேரடித் தொலைபேசிச் செய்திகளைப் பரிமாறிக்கொண்டனர். "இத்தொடர்பு ரஷ்யாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் உள்ள நெருங்கிய உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கு ஒரு புதிய வழியாக விளங்குவதுடன், நம்மிரு நாட்டு மக்களுடைய அடிப்படை நலன்களுக்கு உகந்த பன்முக ஒத்துழைப்பின் புதிய வெற்றியும் ஆகும்" என்றார் லியனித் பிரஷ்னேவ்.

அமைதி, நட்புறவு மற்றும் ஒத்துழைப்புக்கான ரஷ்ய - இந்திய ஒப்பந்தத்தில் பொதிந்துள்ள நேய மற்றும் அண்டை நாட்டு உறவுகள், இரு நாடுகளுடைய நலன்களுக்காகவும், ஆசியாவிலும், உலகம் முழுமையிலும் அமைதி நிலவுவதற்கும் மேன்மேலும் வெற்றிகரமாக வளரும் என்று சோவியத் மக்கள் உறுதியுடன் நம்புகின்றனர்.

லியனித் இலியிச் பிரஷ்னேவின் வாழ்க்கைச் சித்திரம்

லியனித் பிரஸ்னேவ், 1906, டிசம்பர் 19-ஆம் தேதி, உக்ரேனைச் சேர்ந்த காமென்ஸ்கோயே கிராமத்தில் மண் சுவராலான வீட்டில் பிறந்தார். அந்த கிராமம் இப்பொழுது தீனிப்ரோத் ஜெர்ஷிர்ஸ்கி நகரமாக வளர்ந்துள்ளது.

லியனித் பிரஸ்னேவின் பாட்டனார் தந்தை, சகோதரர், சகோதரி ஆகியவர்கள் அங்கு உள்ள உருக்கு ஆலையில் பல்லாண்டு உழைத்தவர்கள்.

லியனித் பிரஷ்னேவ் உலோக இயல் தொழிலாளியாக முதலில் வேலை ஏற்றபோது, அவருக்குப் பதினைந்து வயதுதான். பிறகு குர்ஸ்க்கில் நில அளவெடுப்பு மற்றும் நில மீட்பு வகுப்பில் சேர்ந்து படித்தார். அங்கு படித்து தேறியபின், பைலோ - ரஷ்யா, குர்ஸ்க் பிரதேசம், யூரஸ் முதலிய பகுதிகளில் பணிபுரிந்தார்.1931-ல் லியனித் பிரஷ்னேவ் கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராகச் சேர்ந்தார். 1939லேயே அவர் தீனிப்ரோ பெத்ரோவ்ஸ்க் பிரதேசக் கட்சிக் கமிட்டியின் செயலாளரானார். உலோக இயல் பட்டதாரி எஞ்சினியராக நல்ல அனுபவம் பெற்றபின், இந்தப்பதவியை ஏற்றார்.

லியனித் பிரஷ்னேவ் இளமையிலேயே ஸ்தாபன அமைப்புத் திறமைக்காகவும், மக்களை ஆக்க பணிகளில் ஈடுபடுத்த உத்வேக மூட்டும் திறமைக்காகவும் கட்சியில் புகழ் பெற்றார்.

1952 அக்டோபரில் நடந்த சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 19-வது காங்கிரசைத் தொடர்ந்து, லியனித் பிரஷ்னேவ் தலைமைக்குழுவின் மாற்று உறுப்பினராகவும், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டிச் செயலாளராகவும் ஆனார். அப்போது அவருக்கு வயது 45 தான். கமிட்டிச் செயலாளர்களுக்குள் மிகவும் குறைந்த வயதினர் அவரே.

1957 ஜூன் மாதத்தில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டித் தலைமைக்குழுவின் உறுப்பினரானார். 1960 அவர் சோவியத் நாடாளுமன்ற தலைமைக் குழுவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1964 ஜூலை வரை அவர் அந்தப் பதவியை வகித்தார். இந்த உயர் பதவிக்கு அவர் 1977 ஜூன் மாதத்தில் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் 1964 அக்டோபர் பிளீனம் கூட்டத்தில், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் முதல் செயலாளராக பிரஷ்னேவ் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1966 ஏப்ரலில் நடந்த சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 23-வது காங்கிரசைத் தொடர்ந்து கட்சி மத்திய கமிட்டி பொதுச் செயலாளராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்தப் பதவியை அவர் இன்னமும் வகித்து, கட்சியின் லெனினிய உள்துறை அயல்துறைக் கொள்கைகளைச் செயல்படுத்தி வருகிறார்.

இந்தியாவின் உண்மை நண்பரான லியனித் பிரஷ்னேவ் இந்தியாவுடன் ஒத்துழைப்புக்கு எப்போதும் விசேஷ முக்கியத்துவம் அளிக்கிறார். இந்தியாவுக்கு அவர் மேற்கொண்ட விஜயங்கள் சோவியத் - இந்திய நட்புறவுக்கும் ஒத்துழைப்புக்கும் புதிய உத்வேகமூட்டின.

உலக மக்களுக்கு லியனித் பிரஷ்னேவ் செய்த தலைசிறந்த சேவைக்காக அவருக்கு சர்வதேச லெனினின் சமாதானப் பரிசும், ஜோலியோ கியூரி தங்கப் பதக்கமும் மற்றும் பலசோவியத் பரிசுகளும் வெளிநாட்டுப் பரிசுகளும் அளிக்கப்பட்டுள்ளன.

பயிற்சி வினா

பிரஷ்னேவ் காலத்தில் உள்ள ரஷ்யாவின் நிலையை விளக்குக.

Model Question Paper

M.A. DEGREE EXAMINATION

Second Year

Branch I (a) - History

Optional - HISTORY OF RUSSIA (1854 - 1964 A.D.)

Time : Three hours Maximum : 100 marks

Answer any **FIVE** questions

All Questions carry equal marks.

1. இரண்டாம் அலெக்ஸாந்தர் ரஷ்யாவில் அடிமை முறையை எவ்வாறு ஒழித்தார்?
   How did Alexander - II abolish the serfdom in Russia?

2. ரஷ்ய - துருக்கிய போர் ஏற்படுவதற்கான காரணங்களையும் விளைவுகளையும் விவரி.
   What led to the outbreak of Russo - Turkish war and explain its results?

3. மூன்றாம் அலெக்ஸாந்தரின் உள்நாட்டு, வெளிநாட்டு கொள்கைகளை விளக்குக.
   Describe the internal and external policies of Alexander - III.

4. "இரண்டாம் நிக்கோலஸ் நல்ல மனிதர், ஆனால் பொறுப்பில்லாத அரசர்" - என்ற கூற்று எந்த அளவிற்கு உண்மை?
   How far was it true that Nicholas II was a good man but a bad ruler?

5. டூமாக்களின் பணிகளை விளக்குக.
   Explain the functions of the Dumas.

6. 1917ஆம் ஆண்டு போல்ஷிவிக் புரட்சிக்கான சமூகப் பொருளாதார காரணங்களை விவாதிக்க.
   Discuss the economic and social causes for the Bolshevik Revolution of 1917.

7. இரண்டு உலகப் போர்களுக்கு இடையில் ரஷ்யாவின் வெளியுறவுக் கொள்கையை குறிப்பிடுக.
   Bring out the foreign policy of Russia between the two World Wars.

8. ரஷ்யாவில் போர்க் காலத்தில் ஏற்பட்ட பொதுவுடமை விளைவுகள் யாவை?
   What were the effects of the war communism of Russia.

9. உலக அளவில் ரஷ்ய சமதர்ம சோவியத் குடியரசு கூட்டாட்சி எவ்வாறு ஒரு சிறந்த நாடாக திகழ்ந்தது?
   How U.S.S.R. became a World Power?

10. குருச்சேவின் வாழ்க்கை, சாதனைகளை மதிப்பிடுக.
    Estimate the career and achievements of Khruschev.

Printed by : STAR SYSTEM, 36, Ayyanar Kovil Main Road, Sellur, Madurai - 2
2008 Copies : 2000